சித்தவைத்திய

பதார்த்தகுண விளக்கம்

தாது - ஜீவ வர்க்கம்

709

MATERIA MEDICA

(Mineral - Animal Kingdom)



இ ஃ து

சிகிச்சாரத்ந தீபம், கண்ணுசாமியம், வைத்திய சிந்தாமணி

பதார்த்தகுண விளக்கம் (மூல வர்க்கம்)

முதலிய நூல்களுக்கு ஆசிரியராகிய

வைத்திய வித்வன்மணி

சி- கண்ணுசாமி பிள்ளை அவர்கள்

இயற்றியது

பதிப்பாளர் :

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

சென்னை

பதிப்புரிமை] [விலை ரூ. 3-8-0

சிறப்புப் பாயிரம்

சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளிக்கூடம்
தமிழ்த்தலைமை ஆசிரியராகிய
வித்துவான்

ருவாளர். கா. மு. சின்னப்பாபிள்ளை யவர்களியற்றிய

அறுசீர் ஆசிரிய விருத்தம்

ண்ணருள்கூர் தமிழகமே தரணியிலே முற்றூன்றித் தாவில் சீர்த்தி
ண்ணிமிகக் கூர்த்தமதி ஆன்றோரை நாட்டிடையே நல்கிற் றன்னூர்
ண்ணரிய கலைவகையை ஆய்ந்துபெரு நூல்களாக இயற்றித் தந்தார்
ண்ணலவர் நூல்களிலே சித்தமருத் துவநூலே அதிக மாமே.

த்தமருத் துவமுறையே முதன்முதலில் ஞானிலத்தில் தெரித்த தென்றும்
த்தமருத் துவத்தின்மேல் மருத்துவமொன் றில்லெனவும் செப்ப, அந்நாள்
மத்தபுகழ் மேவியது பின்னுயுள் யூஞனி மேலுட் டாரும்
த்துமுறை வாகடங்கள் நண்ணினவால் சித்தர்முறை நலியக் கண்டே.

ண்டுற்ற சித்தர்தாம் இன்றுற்றூர் எனச்சொல்லும் பண்பு வாய்ந்த
ண்ணுசாமிப் பேரறிஞன் சித்தர்கள் நூலெல்லாம் கற்றுத் தேர்ந்தும்
ண்ணிலுறு வாகடநூல் பலவகையும் ஆய்ந்தாய்ந்து கண்டு தேர்ந்தும்[தான்.
ண்ணரிய பயன்தருஞ்சீர்ப் "பதார்த்தகுண விளக்கம்" தான் இயற்றித் தந்

ப்பெருநூல் மூலவர்க்கம் தாதுவர்க்கம் சீவவர்க்கம் ஆக மூன்றுரய்ச்
சப்பலோசை குன்றுத நேரிசை வெண்பாக்களினுல் சிறந்து மேவி
ப்புடைய குணம்செய்கை முறைமூன்று விளக்கமுடன் துன்னிற் றேயால்
ப்புவியி லினிச்சித்த மருத்துவமும் சிறந்தோங்கி இலங்கும், மாதோ.

ற்றுமவன் "சிகிச்சாரத் தினதீபம்" நற்"சிந்தா மணி"யும் தன்பேர்
ற்ற"கண்ணு சாமியம்"என் னும்மூன்று மருத்துவநூல் உலகுக் கீந்தான்
ற்றவரும் கல்வியிலே முற்றுணர்ச்சி யற்றவரும் கற்றுத் தேறும்
பற்றியவாய் இந்நான்கு நூல்களைச்செய் கண்ணுசாமி யாரோ என்றால்.

நேரிசை வெண்பா

மன்னியசீர் வன்னிகுலம் வந்துதித்தோன் நற்குணத்தன்
சென்னைச்சிந் தாதிரி சேர்ந்துறைவோன்—தென்தமிழ்ச்
சீர்க்கவிஞன் சோதிடமும் செப்பும் மருத்துவமும்
தேர்கண்ணு சாமி தெளி.

சென்னை முத்தியாலுபேட்டை உயர்தரக் கலாசாலைத்

தமிழ்ப் புலவரும் மருத்துப் புலவருமாகிய

திருவாளர். சி. குமரகுரு செட்டியாரவர்கள் இயற்றிய

நேரிசை வெண்பா

சித்தர்சொல் வைத்திய நூல் செவ்விதிற் கற்றுணர்ந்தான்
மெத்து பதார்த்தத்தின் மேன்மையெலாம்—உத்தியோடே
ஓதி மருந்துசெயு மொண்பாக மோர்ந்துதிறஞ்
சாதிப்பான் தாரணியிற் முன்.

வாய்மை யுடையான் வருவாதத் திற்குடையான்
தூய்மையாச் சோதிடமுஞ் சொற்றிடுவான்—ஆய்மருந்தின்
நுட்பமெலாங் கேட்பவர்க்கு நோன்மை பெறநுவல்வான்
இப்புவியில் யார்க்குமினி யான்.

வைத்தியசிந் தாமணியும் வண்சிகிச்சா ரத்தினமும்
நத்தியதன் போான் நகுநூலும்—புத்தமிர்தின்
செய்துமூல வர்க்கந் தெரித்தான்முன், தாதுஜீவன்
எய்துவர்க்க முந்தோர்ந்தா னீண்டு.

அன்னவன்யா ரென்னில், அறைவல்சிந் தைநகரான்
வன்னி மரபினன் வன்புலவன்—என்குரு
நாதன் குகனடியை நாளுஞ்சும் போற்றுலக
நாதன் தவத்துதித்தா னால்.

கண்ணுசா மிப்பெயரோன் காணும் பொருட்குணங்கள்
விண்ணுலாந் தேவர் வியக்கவே—எண்ணியுரை
நூலுணர்வார் மேலுயர்வார் நூற்பெருமை யென்னெருநா
வாலுரைக்கச் சாலுமோ மற்று.

———

ஆக்கியோன் குறிப்பு

அறிவுப் பெருஞ் செல்வர்காள்!

சித்தர்களுடைய யோக சாதனத்திற்கு ஓர் இருப் பிடமாக விளங்கும் திருப்பொதிகை மலையின் வாய்ப்பி னைத் தழுவி யிரானின்ற தென்னாட்டிலுள்ள தமிழ் மக்கட் குப் பயன்படுமாறு, ஏதேனும் ஒரு நூல் வெளியிடப் பட்டு வருகின்றதாயின், அப்பொழுதே அந்நூலுக்கு ஓர் விசேஷ குணமிருக்க வேண்டும் என்று யாவரும் யூகிக்க வேண்டும். இதனைச் சிலர் அறிந்தும் அறியாமலும் இருக்கக்கூடும். ஆகையால் இந் நூலின் வெளியீட்டுக் குரிய சந்தர்ப்பத்தைச் சுருக்கமாகச் சொல்வது எனது கடமையாகும். நான் ஏறத்தாழ நாற்பது வருட கால மாகச் சித்த வைத்தியத் துறையில் அளவற்ற திரவியத் தைச் செலவிட்டு, எவ்வளவு ஆராய்ச்சி செய்யக் கூடுமோ அவ்வளவிற் பெருகச் செய்து, அனுபவத்தினின்று தேர்ந் தெடுக்கப்பட்ட உயர்தரமான முறைகளை யெல்லாம் அப் போதைக்கப்போது ஒருங்கு திரட்டி ஏழை மக்கட்குப் பயன்படுமாறு பல நூல்களை இயற்றி வெளியிட்டுள்ளேன்.

அந் நூல்கள் எல்லாம் பல பதிப்புகளைப் பெற்றுள்ள இயக்கத்தினாற்றானே அவற்றினுயர்வு நன்கு புலனும். இதுகாறும். பதார்த்த குணங்களைப்பற்றி வெளியிட்ட நூல்கள் பல உண்டு. அந் நூல்களைக் கருத்தூன்றி ஆராயுமிடத்து, ஆங்கிலேய வைத்தியத்தை ஒருவாறு மேன்மைப்படுத்தி, அந்த நிலைக்கு நம் சுதேச வைத்திய யத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற பொது நோக் கத்தைக் கொண்டே வரைந்துள்ளதாக ஏற்படும். ஆனால், அந்த நூலாசிரியர்கள் பெரும்பாலும் ஆங்கில வைத்தி யத்தில் உழைத்தவர்களாதலால், சித்தர் கொள்கையின் படி விரிவாக எழுதுவதற்கு அவர்கள் மனம் இடம் பெரு

மற் போயிற்று. இவற்றைக் கண் ணுற்ற எனக்கு, கூடிய வரையிலும் சித்தர் முறைப்படி பதார்த்த குணங்களைக் குறிப்பிடும் ஓர் நூல் எழுத வேண்டும் என்ற கருத்து உண்டாயிற்று.

இந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு முதல் முதல் மூலிகைகளின் குணங்களைக் குறிப்பிடும் "சித்த வைத்திய பதார்த்த குண விளக்கம் மூலவர்க்கம்" என்னும் பகுதியை வெளியிட்டேன். இந்நூலை அறிஞர்கள் பலர் விரைந்து வாங்கினதுமன்றி அடுத்த பகுதிக்கு விருப்ப முற்றவர்களாகப் பல கடிதங்கள் எழுதலாயினர். இவர்கள் ஆவலுக்கு இசைந்து "தாது ஜீவ வர்க்கம்" என்ற இப் பகுதியை வெளியிடலானேன். இந்நூலில் அளவற்ற அனுபவமுள்ள அரும்பெரும் முறைகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஆங்காங்குச் சரக்குகளின் கீழ் வரையப்பட்டுள்ளன. இவைகள் ஒவ்வொரு வைத்தியருக்கும் பெரும் பயனைத் தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந் நூல் இடையூறின்றி முடிந்தமையை நோக்கி எல்லாம் வல்ல எமதிறைவன் முருகக் கடவுளை மன மொழி மெய்களால், சிந்தித்து வந்தித்து வணங்குவதோடு எனக்கு ஊக்கமளித்த தமிழ் நாட்டின் அன்பர்களுக்கும், இந் நூலின் பதிப்புரிமைப் பெற்று வெளிப்படுத்தியவரும், B. இரத்தின நாயகர் ஸன்ஸ் கம்பெனிச் சொந்தக்காரருமாகிய B. R. அரங்கசாமி நாயகர் அவர்களுக்கும், நன்றியறிவுடன் கூடிய எனது வணக்கத்தையும் செலுத்துகின்றேன்.

இங்ஙனம்:

சி. கண் ணுசாமி.

தாது - ஜீவ வர்க்கத்தின்

அவிழ்தப் பெயர் அகராதி

பெயர்.	பக்கம்.
அக்கினி குமார மாத்திரை	52
அஞ்சனக்கல் பற்பம்	36
அப்பிரகச் செந்தூரம்	41
வேறு	41
அப்பிரகப் பற்பம்	42
அம்பர் எண்ணெய்	189
அம்பர் மாத்திரை	189
அரிதாரச்செந்தூரம்	59
வேறு	59
அரியவீரச் செந்தூரம்	61
அரிசிக்குத் தைலம்	192
அன்னபேதிச் செந்தூரம்	43
வேறு	43
வேறு	43
ஆமையோட்டுப் பற்பம்	193
வேறு	194
இந்திரகோபப் பூச்சிப் பற்பம்	197
இரச செந்தூரம்	53
இராஜகுலாந்தக மெழுகு	110
வேறு	109
இராஜவர்த்திக்கல் பற்பம்	58
இருகாரப் பற்பம்	174
இரும்பு மாத்திரை	174
இலிங்கச் செந்தூரம்	66
வேறு	66
இலிங்க மெழுகு	67
எஃகு செந்தூரம்	70
வேறு	70
ஈமக்கொம்புக் கல்நார் பற்பம்	84
ஈரெண் எண்ணெய்	210
கருணாகர ஷண்முகச் செந்தூரம்	54
கருவங்கச் செந்தூரம்	97
கருவங்கப் பற்பம்	98, 262
கர்ண பிந்து	246

பெயர்.	பக்கம்.
கல்மதப் பற்பம்	85
வேறு	85
கறிஉப்புச் செந்தூரம்	88
வேறு	89
கற்பூரசிலாசத்து பற்பம்	79
வேறு	80
கற்பூர சுண்ணம்	81
கற்பூராதி மாத்திரை	81
கஸ்தூரி மாத்திரை	222
வேறு	222
கஸ்தூரி மெழுகு	223
காந்த செந்தூரம்	95
வேறு	96
காடிக்கார சண்டமாருதம்	84
காடிக்கார செந்தூரம்	93
காடிக்கார லிங்கச் செந்தூரம்	93
காலாமிர்த ரச செந்தூரம்	171
கிருபாகர ஷண்முகச் செந்தூரம்	55
கிருஷ்ண அப்பிரக நவநீதம்	39
குளிர்சுரக் கியாழம்	105
குன்மகுடோரி	156
குன்மகுடோரி சூரணம்	169
குன்மகுடோரி லேகியம்	169
கெந்தகக் களிம்பு	147
கெந்தகச் செந்தூரம்	148
கெந்தகத் தைலம்	145
கெந்தக பற்பம்	145
வேறு	146
கெந்தக மெழுகு	143
வேறு	144
கெம்பு பற்பம்	100
கெம்புச் செந்தூரம்	100
கொம்பரக்குச் சூரணம்	191
கோமேதக பற்பம்	103

பெயர்.	பக்கம்.
கோரோசனை சூரணம்	231
கோரோசனை மாத்திரை	231
சங்க திராவகம்	72
சங்கு பற்பம்	285
வேறு	286
சதுர்முக பற்பம்	174
சத்திச்சார சுண்ணம்	106
சந்தித் தைலம்	263
சப்தலவண சூரணம்	155
சவ்வர்ச்சலவணாதி கிருதம்	108
சார பற்பம்	139
சாரப் பதங்கம்	140
சாரலவண பற்பம்	139
சிங்கி பற்பம்	218
வேறு	218
வேறு	219
சிலை சூதபதங்கம்	160
சிமை கல்நார்பற்பம்	83
சினக்காவிச் செந்தூரம்	116
சினலிங்கச் செந்தூரம்	115
சுராங்கிசம்	157
சூத அண்ட பற்பம்	51
தங்கச் செந்தூரம்	117
வேறு	118
தரா பற்பம்	119
தன்வந்திரி குளிகை	214
தாம்பரக்களங்குச் செந்தூரம்	122
தாம்பர பற்பம்	121
தாம்பர மெழுகு	124
தாளக பற்பம்	128
தாளக மாத்திரை	127
திரிலோகச் செந்தூரம்	61
துரிசு செந்தூரம்	134
துரிசு பற்பம்	133
துவர் எண்ணெய்	163
நண்டுக் கியாழம்	246
நண்டுத் தைலம்	246
நவரச மெழுகு	250
நவ்வுப்பு திராவகம்	45
நாகத்தாம்பர பற்பம்	131
நாக பற்பம்	130
வேறு	131

பெயர்.	பக்கம்
நாட்டுக்கல்நார் பற்பம்	83
நீர்பேதிச் சூரணம்	166
நீலகாச நிவாரணி	105
நீலக்கல் பற்பம்	142
நீலாஞ்சனக்கல்மை	36
நேத்திர பூபதிக்குளிகை	176
நேத்திராஞ்சனம்	178
பஞ்சபாஷாண செந்தூரம்	182
பஞ்சலவண தயிர்சுண்டி சூரணம்	86
பஞ்சலவண பற்பம்	46
பஞ்சலோகச் செந்தூரம்	2
பஞ்சாமிர்தக்குளிகை	24
படிகார பற்பம்	16
படைக் குளிகை	14
பலகறை பற்பம்	26
வேறு	27
பவள பற்பம்	28
வேறு	28
வேறு	28
பாலாமிர்தக் குளிகை	25
பாஷாணக் கட்டு	131
பாஷாண மாத்திரை	135
பிடாலவண சூரணம்	151
பிடாலவண பற்பம்	150
பித்தளை	151
புட்பராக பற்பம்	154
பூங்காவிச் செந்தூரம்	99
வேறு	99
பூநாகக் கறுக்குக் கியாழம்	263
பூர எண்ணெய்	49
பூர செந்தூரம்	48
பூர பற்பம்	47
பூர மாத்திரை	48
பேதிக் கியாழம்	45
மகா சங்கத் திராவகம்	46
மஞ்சள் அப்பிரக நவநீதம்	40
மண்டூரச் செந்தூரம்	63
வேறு	64
மண்டூர மாத்திரை	64
மண்ணெண்ணெய்கலவைத் தைலம்	158
மரகத பற்பம்	159
மஞ்சிலை மாத்திரை	160

பெயர்.	பக்கம்.
வேறு	160
மாதவச் செந்தூரம்	68
மாந்த மாத்திரை	194
வேறு	195
மிருதார்சிங்கிக் களிம்பு	163
மிருதார்சிங்கி பற்பம்	165
மிருதார்சிங்கி மெழுகு	164
முசுமுட்டை எண்ணெய்	270
முத்துச்சிப்பி பற்பம்	273
முத்துச் சுண்ணம்	274
முத்துப் பற்பம்	272
மூல்ரோகத் தூபப்பொடி	193
மெழுகு தைலம்	278
மேகரணக் களிம்பு	57
மேகரண சஞ்சீவிக் களிம்பு	277
மேகராஜாங்க நெய்	135
ரஜிதபாஷாண பற்பம்	177
வச்சிர பற்பம்	168
வண்மீக மாத்திரை	262
வாலரச மெழுகு	52
விரணக் களிம்பு	48
வேறு	278
வீரஅயச் செந்தூரம்	111
வீரரச செந்தூரம்	171
வெங்காரக் கலவைக் களிம்பு	175
வெடியுப்பு அன்னபேதிசிந்தூரம்	78
வெடியுப்பு பற்பம்	78
வெள்வங்க பற்பம்	179
வேறு	180
வெள்ளி பற்பம்	178
வேறு	177
வெள்ளை அப்பிரக நவநீதம்	40
வைரியம்	184
ஸ்யநிவாரணி மாத்திரை	137
ஜீவாமிர்த குளிகை	249

தாது ஜீவவர்க்கம்

அரும்பெயர் பொருள் அடங்கலாகிய

அட்டவணை

சாக்குகள். பக்கம்.

அ

அக்கினித்தீ இதுவே கடல்நுரை
அக்கு இதுவே வெள்ளைச்சங்கு
அஞ்சனக்கல் 35
அடுப்புக்கரி 37
அட்டுப்பு 23, 38
அண்டங் காக்கை 188
அப்பளக்காரம் 24, 37
அப்பிரகம் 39
அமுரி இதுவே சிறுநீர்
அமுரி உப்பு 11
அம்பர் மீன்+பொன் 188, 265
அயச்சிட்டம் இதுவே இரும்புச் சிட்டம்
அயம் இதுவே இரும்பு
அயிரை மீன் 190
அரக்கு 190
அரிதாரம் இதுவே தாளகம்
அரிபிரியம்இதுவே வெள்ளைச்சங்கு
அலைநாறு இதுவே கல்நார்
அன்னபேதி 42

ஆ

ஆதித்தன் சோதி இதுவே முத்து
ஆமை ஓடு 193
ஆமை கறி 195
ஆரம் இதுவே முத்து
ஆவி இதுவே இரசம்
ஆழிவிந்து இதுவே முத்து
ஆள்காட்டிப் பக்ஷி 196
ஆனைப்பால் இதுவே யானைப்பால்
ஆனை மூத்திரம் இதுவே யானை மூத்திரம்

சாக்குகள். பக்கம்.

இ

இங்கிலீகம் இதுவே இலிங்கம்
இங்குளிதரதம் இதுவே இலிங்கம்
இங்குறம் இதுவே இலிங்கம்
இடம்புரி இதுவே வெள்ளைச்சங்கு
இந்திரகோபப்பூச்சி 196
இந்துப்பு 20, 44
இரச கற்பூரம் 46
இரச செந்தூரம் இதுவே வில்லரச செந்தூரம்
இரசகம் இதுவே இலிங்கம்
இரச கற்பகம் இதுவே இலிங்கம்
இரசதம் இதுவே இலிங்கம்
இரசம் 49
இரதம் இதுவே இரசம்
இரத்தினம் இதுவே மாணிக்கம்
இராஜவர்த்திக்கல் 57
இருப்பு 58
இரும்புச்சிட்டம் 62
இலவணம் இதுவே கறியுப்பு
இலிங்கம் 65
இறால் மீன் 197

ஈ

ஈசனென்னும் பச்சை கற்பூரம் 68
ஈசன் இதுவே இரசம்
ஈசெல் 198

உ

உடும்பு இறைச்சி 198
உமிலிச்சாரம் 27, 69
உமுரியுப்பு இதுவே அமுரி உப்பு
உருக்கு 69
உல்வ மீன் 199

சாக்குகள்.	பக்கம்.
உழமண்	71
உழுவை மீன்	200
உள்ளான் கறி	200
ஊ	
ஊர்க்குருவி	201
ஊர் பன்றி	201
எ	
எஃகு இதுவே உருக்கு	
எருமைச் சாணம்	202
எருமைத் தயிர்	203
எருமை நெய்	203
எருமைப் பால்	204
எருமை மூத்திரம்	204
எருமை மோர்	205
எருமை வெண்ணெய்	205
எலி	206
எலிப் பாஷாணம் இதுவே வெள்ளைப் பாஷாணம்	
எவச்சாரம்	7, 72
ஏ	
ஏகம்பச்சாரம்	10, 73
ஒ	
ஒட்டரை இதுவே புகையூரல்	
ஒட்டைத் தயிர்	207
ஒட்டை நெய்	207
ஒட்டைப் பால்	207
ஒட்டை மூத்திரம்	208
ஒட்டை மோர்	209
ஒட்டை வெண்ணெய்	209
ஓ	
ஓணன் நெய்	209
ஓலைவாளைக் கருவாடு	211
க	
கச்சற் கருவாடு	212
கடமான்	212
கட்டுப்பு இதுவே கறியுப்பு	
கடல் நண்டு	213
கடல் நுரை	11, 73
கடற்கனல் இதுவே கடல் நுரை	
கடற் குணங்கன் இதுவே கடல் நுரை	

சாக்குகள்.	பக்கம்.
கடற்குருவி இதுவே கறியுப்பு	
கடை ரசச்செந்தூரம்= வில்லரச செந்தூரம்	
கண்டில் வெண்ணெய்	213
கந்தகம்	74
கந்தம் இதுவே இரசம்	
கந்தியுப்பு	8, 75
கம்பியுப்பு	76
கம்பு இதுவே வெள்ளைச்சங்கு	
கரடி இறைச்சி	214
கரடி நெய்	215
கருங்குருவி	215
கருங்கோழி	216
கருப்புப்பு இதுவே கந்தியுப்பு	
கருப்பூர சிலாசத்து	79
கருப்பூரம்	14, 80
கருவங்கம் இதுவே காரீயம்	
கருவவ்வால்மீன்	216
கலைமான்	217
கலைமான் கொம்பு	217
கல்திட்டு இதுவே கல்மதம்	
கல் நார்	82
கல் மதம்	84
கல்லினீயம் இதுவே அஞ்சனக்கல்	
கல்லுக்குள்ளஞ்சனம் அஞ்சனக்கல்	
கல்லுயிர் இதுவே சகஸ்திரபேதி	
கல்லுப்பு	22, 85
கவடி இதுவே பலகறை	
கவுதாரி	219
கழனிநண்டு இதுவே நண்டு	
கழுதைப்பால்	220
கழுதை மூத்திரம்	220
கறியுப்பு	25, 87
கற்காமி இதுவே கல்மதம்	
கற்குரு இதுவே கற்பூர சிலாசத்து	
கற்சவளை இதுவே கல்நார்	
கற் சுண்ணம்	90
கற்பூர சிலாசத்து இதுவே கருப்பூர சிலாசத்து	
கற்பூரம் இதுவே கருப்பூரம்	14
கனல்பேதி இதுவே சகஸ்திரபேதி	
கஸ்தூரி	221

சரக்குகள்.	பக்கம்.
கா	
காக்கை பித்து	223
காசிச்சாரம்	22, 92
காடிக்காரம்	92
காடை	224
காடைச்சாறு	224
காட்டுப்பன்றி	225
காத்தம்	95
காயசித்தியுப்பு இதுவே அமுரி உப்பு	
காரீயம்	96
கார்முகம் இதுவே இலிங்கம்	98
காவிக்கல்	98
காஞங்கோழி	225
கி	
கிர் இதுவே இரும்புச்சிட்டம் கிருஷ்ண வாசலஞ்சனம் இதுவே அஞ்சனக்கல்	226
கிழங்கான் மீன்	
கிளிஞ்சல்	

சரக்குகள்	பக்கம்.
கே	
கேசரம் இதுவே அப்பிரகம்	
கொ	
கொம்பரக்கு இதுவே அரக்கு	
கொம்புத்தேன்	242
கோ	
கோபிச் சந்தனம்	101
கோமூத்திர சிலாசத்து	101
கோமேதகம்	102
கோரோசனை	230
கோழி	232
கோழி முட்டை	233
கௌ	
கௌரி பாஷாணம்	103
ச	
சகஸ்திரவேதி	104
சங்கம் இதுவே வெள்ளைச்சங்கு	
சங்கார கல்லுப்பு இதுவே	

சரக்குகள்.	பக்கம்.
சல்லீரம்	109
சன்னக்கூனி	235
சன்னக் கெண்டை	235
சா	
சாதிலிங்கம் இதுவே இலிங்கம்	
சி	
சிங்கி இதுவே கலமான் கொம்பு	
சிட்டுக்குருவி	236
சித்துப்பு	21, 112
சிப்பரியனுப்பு இதுவேகந்தியுப்பு	
சிப்பி இதுவே வெள்ளுஞ்சல்	
சிலாசத்து இதுவே கற்பூர சிலாசத்து	
சிலாமதம் இதுவே கல்மதம்	
சிலை இதுவே அஞ்சனக்கல்	
சிலை ஒழுக்கு இதுவே கல்மதம்	
சிலை ரவி இதுவே கல்நார்	
சிவந்த அரிதாரம் இதுவே தாளகம்	
சிவம் இதுவே இரசம்	
சிறுநீர்	236

சரக்குகள்.	பக்கம்.
செம்மறியாட்டுத் தயிர்	239
செம்மறியாட்டுப் பால்	239
செவ்விரஞ்சனம் இதுவே அஞ்சனக்கல்	
சே	
சேல் கண்டை	240
சோ	
சோகி இதுவே பலகறை	
சோற்றுப்பு இதுவே கறியுப்பு	
த	
தங்கம்	117
தம்பலப்பூச்சி இதுவே இந்திரகோபப் பூச்சி	
தரா	119
தா	
தாம்பரம்	120
தாளகம்	123
தி	
திராட்சை உப்பு	26, 129
திருக்கைமீன்	240

சரக்குகள்.	பக்கம்.
கழுநீருப்பு இதுவே அழுநீர் உப்பு	
நவச்சாரம்	6, 138
நவலோகச்சீவன் இதுவேகாந்தம்	
நவலோகத்துறட்டி இதுவே காந்தம்	
நா	
நாகணம்	141
நாகம் இதுவே துத்திநாகம்	
நாதம் இதுவே அஞ்சனக்கல்	
நாமக்கட்டி	141
நாரைக்கறி	248
நீ	
நீர் காக்கைக்கறி	248
நீர்நாய் விதை	248
நீலக்கல்	142
நீலாஞ்சனம் இதுவே அஞ்சனக்கல்	
நெ	
நெருஞ்சுத்தி இதுவே அஞ்சனக்கல்	
நெல்லிக்காய் கெந்தகம்	143
ப	
பாதரசம் இதுவே இரசம்	
பாரதம் இதுவே இரசம்	
பாலேடு	260
பால்துத்தம் இதுவே துத்தம்	
பி	
பிடாலவணம்	23, 150
பித்தளை	151
பு	
புகையூரல்	152
புட்பராகம்	153
புதிய தேன்	244
புழுகுச் சட்டம்	261
புற்ருஞ்சோறு	261
புற்றுத் தேன்	243
புனுகு (சவ்வாது)	261
புனுகுச் சட்டம் இதுவே புழுகுச் சட்டம்	
பூ	
பூங்காவி இதுவே காவிக்கல்	154

சரக்குகள்.	பக்கம்.
மணிராகம் இதுவே இலிங்கம்	
மண்டூரம் இதுவே இரும்புச் சிட்டம்	
மண்ணெண்ணெய்	157
மண் தைலம் இதுவே மண்ணெண்ணெய்	
மதயானை இதுவே இரசம்	
மதிக்கூர்மை இதுவே இந்துப்பு	
மதியுப்பு இதுவே இந்துப்பு	
மயில்கறி	266
மயில்துத்தம் இதுவே துருசு	
மயில் நெய்	267
மரகதம்	158
மரபொந்து தேன்	243
மலைச்சாகரம் இதுவே கடல் நுரை	
மலைத்துடக்கு இதுவேகல்மதம்	
மலைத்தனம் இதுவே கல்மதம்	
மலைத்தேன்	243
மலை நஞ்சு இதுவே கல்மதம்	
மற்றிகம் இதுவே கல்நார்	

சரக்குகள்.	பக்கம்.
முசல்	270
முசறு முட்டை	270
முதலை	271
முத்திலம் இதுவே முத்து	
முத்து	272
முத்துச்சிப்பி	273
முத்துச்சுண்ணம்	274
முரியுப்பு இதுவே அமுரி உப்பு	
முலைநாறு இதுவே கல்நார்	
முலைப்பால்	274
முள்ளம்பன்றி	270
முறிவஞ்சி இதுவே முத்து	
மூனிமூத்திரம் இதுவே கறியுப்பு	
மூ	
மூலவன்னி இதுவே அமுரி உப்பு	
மே	
மெழுகு	27
மே	
மேகவிந்து இதுவே	
"	

சாக்கிதகள்.	பக்கம்.
வளையலுப்பு	7, 168
வன்னிகற்பம் இதுவே இலிங்கம்	
வஸ்து இதுவே அழுரி உப்பு	
வா	
வாணக்கந்தகம்	169
வாத்து	280
வாருதிநஞ்சு இதுவேகடல்நுரை	
வாளை மீன்	280
வான் கோழி	281
வி	
விண்நீர் இதுவே இரசம்	
விந்து இதுவே இரசம்	
விலாங்கு மீன்	281
வில்லரச செந்தூரம்	170
வீ	
வீமனென்னும் பச்சைகற்பூரம்	172
வீரம் இதுவே சவ்வீரம்	
வெ	
வெங்காரம்	9, 173
வெடியுப்பு இதுவேகம்பி உப்பு	17
வெண்கலம்	175
வெண்ணகம் இதுவேவெள்ளீயம்	
வெண்புலி இதுவே சீனக்காரம்	
வெண் புரு	281
வெள்ளாடு	282
வெள்ளாட்டின் மூத்திரம்	282
வெள்ளாட்டுத் தயிர்	283
வெள்ளாட்டு நெய்	283
வெள்ளாட்டுப் பால்	284
வெள்ளாட்டு மோர்	284
வெள்ளாட்டு வெண்ணெய்	285
வெள்ளி	177
வெள்ளிக் காடிக்காரம் இதுவே காடிக்காரம்	
வெள்ளீயம்	179
வெள்ளைச்சங்கு	285
வெள்ளைச்சி இதுவேசீனக்காரம்	
வெள்ளை பாஷாணம்	180
வே	
வேந்தன் இதுவே இரசம்	
வை	
வைடூரியம்	184

தாது - ஜீவவர்க்கம்

அரும்பெயர் பொருள் அடங்கலாகிய

அட்டவணை

சாக்குகள்.	பக்கம்.
அ	
அக்கினித்தீ இதுவே கடல்நுரை	
அக்கு இதுவே வெள்ளைச்சங்கு	
அஞ்சனக்கல்	35
அடுப்புக்கரி	37
அட்டுப்பு	23, 38
அண்டங் காக்கை	188
அப்பளக்காரம்	24, 37
அப்பிரகம்	39
அமுரி இதுவே சிறுநீர்	
அமுரி உப்பு	11
அம்பர் மீன்+பொன்	188, 265
அயச்சிட்டம் இதுவே இரும்புச் சிட்டம்	
அயம் இதுவே இரும்பு	
அயிரை மீன்	190
அரக்கு	190
அரிதாரம் இதுவே தாளகம்	
அரிபிரியம்இதுவே வெள்ளைச்சங்கு	
அலகாறு இதுவே கல்நார்	
அன்னபேதி	42
ஆ	
ஆதித்தன் சோதி இதுவே முத்து	
ஆமை ஓடு	193
ஆமை கறி	195
ஆரம் இதுவே முத்து	
ஆவி இதுவே இரசம்	
ஆழிவிந்து இதுவே முத்து	
ஆள்காட்டிப் பகழி	196
ஆனைப்பால் இதுவே யானைப்பால்	
ஆனை மூத்திரம் இதுவே யானை மூத்திரம்	
இ	
இங்கிலீகம் இதுவே இலிங்கம்	
இங்குளிதரதம் இதுவே இலிங்கம்	
இங்குறம் இதுவே இலிங்கம்	
இடம்புரி இதுவே வெள்ளைச்சங்கு	
இந்திரகோபப்பூச்சி	196
இந்துப்பு	20, 44
இரச கற்பூரம்	46
இரச செந்தூரம் இதுவே வில்லரச செந்தூரம்	
இரசகம் இதுவே இலிங்கம்	
இரச கற்பகம் இதுவே இலிங்கம்	
இரசதம் இதுவே இலிங்கம்	
இரசம்	49
இரதம் இதுவே இரசம்	
இரத்தினம் இதுவே மாணிக்கம்	
இராஜவர்த்திக்கல்	57
இரும்பு	58
இரும்புச்சிட்டம்	62
இலவணம் இதுவே கறியுப்பு	
இலிங்கம்	65
இறால் மீன்	197
ஈ	
ஈசனென்னும் பச்சை கற்பூரம்	68
ஈசன் இதுவே இரசம்	
ஈசெல்	198
உ	
உடும்பு இறைச்சி	198
உமிலிச்சாரம்	27, 69
உமுரியுப்பு இதுவே அமுரி உப்பு	
உருக்கு	69
உல்ல மீன்	199

சாக்கு	பக்கம்.
உழமண்	71
உழுவை மீன்	200
உள்ளான் கறி	200
ஊ	
ஊர்க்குருவி	201
ஊர் பன்றி	201
எ	
எஃகு இதுவே உருக்கு	
எருமைச் சாணம்	202
எருமைத் தயிர்	203
எருமை நெய்	203
எருமைப் பால்	204
எருமை மூத்திரம்	204
எருமை மோர்	205
எருமை வெண்ணெய்	205
எலி	206
எலிப் பாஷாணம் இதுவே வெள்ளைப் பாஷாணம்	
எவச்சாரம்	7, 72
ஏ	
ஏகம்பச்சாரம்	10, 73
ஒ	
ஒட்டகை இதுவே புகையூரல்	
ஒட்டைத் தயிர்	207
ஒட்டை நெய்	207
ஒட்டைப் பால்	207
ஒட்டை மூத்திரம்	208
ஒட்டை மோர்	209
ஒட்டை வெண்ணெய்	209
ஓ	
ஓணான் நெய்	209
ஓலைவாளைக் கருவாடு	211
க	
கச்சற் கருவாடு	212
கடமான்	212
கட்டுப்பு இதுவே கறியுப்பு	
கடல் நண்டு	213
கடல் நுரை	11, 73
கடற்கனல் இதுவே கடல்நுரை	
கடற் குணங்கன் இதுவே கடல்நுரை	

சாக்கு	பக்கம்.
கடற்குருவி இதுவே கறியுப்பு	
கடை ரசச்செந்தூரம்= வில்லரச செந்தூரம்	
கண்டில் வெண்ணெய்	213
கந்தகம்	74
கந்தம் இதுவே இரசம்	
கந்தியுப்பு	8, 75
கம்பியுப்பு	76
கம்பு இதுவே வெள்ளைச்சங்கு	
கரடி இறைச்சி	214
கரடி நெய்	215
கருங்குருவி	215
கருங்கோழி	216
கருப்புப்பு இதுவே கந்தியுப்பு	
கருப்பூர சிலாசத்து	79
கருப்பூரம்	14, 80
கருவங்கம் இதுவே காரீயம்	
கருவவ்வால்மீன்	216
கலைமான்	217
கலைமான் கொம்பு	217
கல்திட்டு இதுவே கல்மதம்	
கல் நார்	82
கல் மதம்	84
கல்லினீயம் இதுவே அஞ்சனக்கல்	
கல்லுக்குள்ளஞ்சனம் அஞ்சனக்கல்	
கல்லுயிர் இதுவே சகஸ்திரபேதி	
கல்லுப்பு	22, 85
கவடி இதுவே பலகறை	
கவுதாரி	219
கழனிநண்டு இதுவே நண்டு	
கழுதைப்பால்	220
கழுதை மூத்திரம்	220
கறியுப்பு	25, 87
கற்காமி இதுவே கல்மதம்	
கற்குரு இதுவே கற்பூர சிலாசத்து	
கற்சவளை இதுவே கல்நார்	
கற் சுண்ணம்	90
கற்பூர சிலாசத்து இதுவே கருப்பூர சிலாசத்து	
கற்பூரம் இதுவே கருப்பூரம்	14
கனல்பேதி இதுவே சகஸ்திரபேதி	
கஸ்தூரி	221

பெயர்.	பக்கம்.
வேறு	160
மாதவச் செந்தூரம்	68
மாந்த மாத்திரை	194
வேறு	195
மிருதார்சிங்கிக் களிம்பு	163
மிருதார்சிங்கி பற்பம்	165
மிருதார்சிங்கி மெழுகு	164
முசுறுமுட்டை எண்ணெய்	270
முத்துச்சிப்பி பற்பம்	273
முத்துச் சுண்ணம்	274
முத்துப் பற்பம்	272
மூலரோகத் தூபப்பொடி	193
மெழுகு தைலம்	278
மேகரணக் களிம்பு	57
மேகரண சஞ்சீவிக் களிம்பு	277
மேகராஜாங்க நெய்	135
ரஜிதபாஷாண பற்பம்	177
வச்சிர பற்பம்	168
வன்மீக மாத்திரை	262
வாலரச மெழுகு	52
விரணக் களிம்பு	48
வேறு	278
வீரஅயச் செந்தூரம்	111
வீரரச செந்தூரம்	171
வெங்காரக் கலவைக் களிம்பு	175
வெடியுப்பு அன்னபேதிசெந்தூரம்	78
வெடியுப்பு பற்பம்	78
வெள்வங்க பற்பம்	179
வேறு	180
வெள்ளி பற்பம்	178
வேறு	177
வெள்ளை அப்பிரக நவநீதம்	40
வைரியம்	184
ஸ்ரீயகிவாரணி மாத்திரை	137
ஜீவாமிர்த குளிகை	249

உ

முருகன் துணை

பதார்த்த குண விளக்கம்

தாது வர்க்கம்

பொதுப்பாயிரம்

விருத்தம்

தேடநம கண்டவோளிப் பிழம்பாய் ஞானு
தீதபூ ரணமாய்த்தற் சேயல்கோண் டேல்லா
முடவிட வல்லதுமாய்த் தனித்த வோன்றுண்
முழ்கிநின்ற முக்குணச்சிற் சத்தி தன்னில்
நாடனந்தம் பிறந்ததிற்கா லுதித்த திற்றீ
நாரமண்ணுண் டாயமண்டா னல்க வந்த
ஓடதியி லனமுமதி லுலகு நிற்கு
முயர்வாய்ந்தவ் வோடதியி னுரிமை சொல்வாம்.

(தேரையர்)

(இதன் பொருள்.) யாவரும் தேடிக் காண்பதற்கரிய அகண்டா காரசோதித்திரட்சியாயும், ஞானதேகமாயுள்ள பூரணமாயும், தன்னுடைய செய்கையினாலே எல்லாவற்றையும் ஒடுக்கவும் தோற்றுவிக்கவும் வல்லதாகியும், தனக்கு மேலொரு கடவுளில்லாமல் தானே யாவருக்குங் கடவுளாயிருக்கும் ஒரு பரசிவத்தினுள் மறைந்து நின்ற முக்குணங்களுந் தோன்றுவதற்குக் காரணமாகிய ஞானசத்தியினிடமாக நாடுகின்ற அனந்தம் என்னும் ஆகாயமும் அவ் வாகாயத்தில் வாயுவும்; அவ் வாயுவில் தேயுவும்; அத் தேயுவில் அப்புவும்; அவ் வப்புவில் பிருதிவியும்; தோன்றி அப் பிருதிவி தோற்றுவிக்க உண்டான ஓஷதி யென்னும் பதார்த்தங்களுண்டாகி அத்தங்

பதார்த்தங்களால் உலகத்திலுள்ள உயிர்க ளனைத்தும் புசித்து நிலை பெற்றிருக்கும்படியான உயர்வை ஆராய்ந்து அந்த ஔஷதியாகிய பதார்த்தங்களைச் சொல்லுகிறோம் என்க.

இதன் கருத்து என்னவென்றால்:—இவ்வுலக சிருட்டிக்கிரமத்தில் பஞ்சபூதங்கள் ஒன்றுக்குள்ளொன்று இயக்கமுற்று முடிவில் பிருதிவியி லொடுங்கிற்றென்றும், அதினிடமாகத் தோற்று மொவ்வொன்றும் பதார்த்தங்கள் என்றும், அதுவே உயிர்க ளனைத்திற்கும் நிலைபெற்றிருப்பதற்கு ஆகாரமாகவும் ஔஷதமாகவும் பயன் படுகின்ற தென்பது மினிது விளங்கும். பின்னும் காருண்யத்தை முன்னிட்டுக் கூறியதாவது:—

வெண்பா

பதார்த்தகுணஞ் சொல்வதேவன் பார்க்கின்ற வெல்லாம்
பதார்த்தமெனி னீக்கிற் பழியாம்—பதார்த்தமெனக்
கூறுகட்குள்ளணுவின் கூற்றினவ்வி யத்தத்தோர்
கூறுரைத்த னம்பாநக் குள்.

(தேரையர்)

(இ - ள்) கண்களாற் பார்க்கப்படுவன வெல்லாம் பதார்த்தங்களாம் என்றால் அப் பதார்த்தங்களின் வகைகளும் குணகுணங்களும் எவ்வாறு தெரிந்து சொல்லப்படும். சொல்லாமல் நீக்கி விட்டாலோ பாவ முண்டாகும். ஆதலால், பதார்த்தமெனச் சொல்லப்படுகிற சமுத்திரத்திற்குள் ஓரணுவளவில் கோடி கோடி கோடி கோடா கோடியில் ஒரு பிரிவு இந்த உலகத்திலிருக்கும் மனிதர்களுக்குத் தெரியும்படிக்குச் சொன்னோம் என்க.

அவ்வியத்தம் என்பது கோடி கோடி கோடி கோடாகோடி எனப் பொருள்படும். நீக்கிற் பழியாம் என்பது பதார்த்தங்களின் குணகுணங்களைத் தெரிந்து நோய்களுக் கேற்றவாறு கிரமப்படி சேர்ப்பாராயின் வியாதி நீங்கும். குணமறியாமல் சேர்த்தால் வியாதி நீங்காமலிருப்பதுடன் பிணியாளன் உயிருக்கே அபாயம் நேரும் எனப் பொருள்படும்.

இப்படிக் கண்களால் பார்க்கக்கூடிய பதார்த்தங்களின் பேதத்தை மூன்று விதமாகக் கூறுவர். இதனிற்றானே உலகத்திலுள்ள சகல பதார்த்தங்களும் அடங்கி நிற்கும்.

அஃதெங்ஙனமெனில்:—மரம், செடி, கொடி, புல் ஆகுமிவற்றில் அடங்கிய வேர்பட்டை-கட்டை-ரஸம்-இலை-புட்பம்-வித்து-முதலியவற்றைக் குறிப்பிடுவது மூல வர்க்கம். மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன முதலியவற்றைக் குறிப்பிடுவது ஜீவ வர்க்கம். இவ் விரண்டு வர்க்கங்களு மல்லாமல் இவற்றுக்கெல்லாம் ஆதாரமாக உள்ள உலோகம், நவரத்தினம், பாஷாணம், காரசார லவணம், உபரஸம் முதலியவற்றைக் குறிப்பிடுவது தாது வர்க்கம். இதன் பயனையே இந்த நூலில் இனிது விளக்கப்படும்.

காரசார லவண வகை

(Secret science of Twenty five Salts)

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வழலைநற் பூநீறு நவசாரம் எவசாரம்
வளையுப்பு கெந்தியுப்பு
வாகான வெங்கார முடனேகம் பச்சாரம்
வாரிநுரை அழுரியுப்பு
தழலுகு கற்பூரம் உயர்பச்சை கற்பூரந்
தங்குபுகழ் சத்திசாரம்
தகைமேவு வெடியுப்பு மீனம்பர் பொன்னம்பர்
தரைமேவு சவுட்டுலவணம்
கழறுநற் றிலலவண மிந்துப்பு சிந்துப்பு
கல்லுப்பு காசிசாரம்
கார்ணும்பி டாலவணம் அட்டுப்பு சீனமிவை
கருதுநற் காரசார
அழகான லவணத்தின் வகையென்று கற்றோர்கள்
அறைவார்க ளவனி ஏத்தும்
அரியதரு நாதனை யடுத்திவற் றின்செயலை
ஆராய்ந்து சொல்லுவாமே.

(இதன் பொருள்) வழலை, பூநீறு, நவச்சாரம், எவச்சாரம், வளையுப்பு, கெந்தியுப்பு, வெங்காரம், ஏகம்பச்சாரம், கடல்நுரை, அழுரியுப்பு, கற்பூரம், பச்சைகற்பூரம், சத்திசாரம், வெடியுப்பு, மீன்அம்பர், பொன்னம்பர், சவுட்டுப்பு, திலாஉப்பு, இந்துப்பு, சிந்துப்பு, கல்லுப்பு, காசிச்சாரம், பிடாலவணம், அட்டுப்பு, சீனம்

ஆக இவற்றைப் பெரியார் காரசார லவண வகைகளென்று கூறியிருக்கின்றனர். இவற்றின் செயலை முற்றும் அறியும்பொருட்டுக் குருநாதனை யடுத்து விரிவாகக் கூறுவேனுக.

வழலையென்னும் சுண்ணக்கல்

(Calcium - carbcnate)

இதனைப் பூநீறு உற்பத்தியாகின்ற இடத்தில் மார்கழி மாதம் பௌர்ணமிக்குப் பின் பள்ளந் தோண்டி அடியில் சோதித்துப் பார்க்க உருண்டை வடிவமான கற்கள் கிடைக்கும். இதனை அண்டக்கல் என்றும் எட்டாம் மாதத்தின் பிண்டம் என்றும் பெரியார் கூறுவர். புதிய கர்ப்பமாகிய கற்கள் உருண்டை வடிவத்தில் சிறிது நீளமாகவும், பருவாகவும், பளிங்கு நிறத்தையுடைய தாகவும் தோற்றும். இதுவே சிறந்த கற்கள். அப்படி இராமல் தட்டையாகவும் ஒழுங்கினமான வடிவத்துடன் துவாரங்கள் விழுந்தும் இருக்குமாயின் அதனை ஓடக்கல் என்று கூறுவர். இதன் சத்து ஒருகாலத்தில் வெளியாகி விட்டது என்று அறியவேண்டும். மேற்கூறியவண்ணம் சுத்தமான கற்களைக் கொண்டுவந்து மாவுபோல் இடித்துச் சீலையில் முடிச்சுக் கட்டி வெடியுப்பையும் பூநீற்றையும் பனிசலத்தில் கரைத்து வடிகட்டி எடுத்த சலத்தில் கிழிகட்டி எரித்தெடுக்கக் காரமிகும். இதைச் சார ஜெயநீர் விட்டு அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து மூசையிலிட்டு கன்னர் உலையில் வைத்து மூசையழுக ஊதி எடுத்து ஆறவிட்டுப் பார்க்கக் கடுங்காரச் சுண்ணமாகும். இந்தச் சுண்ணத்தில் (Fluoride of calcium) (மஞ்சள் புகை யடங்கலாகிய சத்து) பூரணமாக அடங்கியிருக்கும். இதுவே வாதத் தொழிலில் அதிக நன்மையைப் பயக்கும். அப்படி அல்லாத கற்களைச் சுண்ணம் செய்தால் (Oxide of calcium) ஆகிறது. இது மூற்கூறிய சுண்ணத்தைப்போல் குணம் கொடுக்காதென்பதைக் கவனத்தில் வைக்கவேண்டும். கற்சுண்ணத்தில் நான்கு மடங்கு பனிசலம் விட்டுக் கரைத்து 3-நாள் வரையிலும் அடிக்கடி கலக்கிக் கொடுத்து இரண்டு மூன்று நாள் அசையாமல் வைத்துத் தெளிந்த நீரை வடித்து எடுக்கக் (Calcium Hydro Oxide) கடுங்காரச் சுண்ணநீர் ஆகும். இதில் வீரம் கற்பூரம் கூட்டி வைத்துக் கொள்ளச் சரக்குகளுக்குக் காரமேற்ற உயர்தரமான ஜெயநீராகும். கற்சுண்ணம் ஆண்சரக்கு, இதற்குப் பெண் சரக்குக் கல்லுப்பு கற்சுண்ணம் பெண்சரக்கு இதற்கு ஆண்சரக்கு கடல்நுரை. இது

எவ்வாறெனில் சூரியனுக்குச் சந்திரன் மனைவியாக இருக்க அச் சந்திரன் அல்லிப்புஷ்பத்திற்கு நாயகனான வேதாந்த ரகசியத்தைப் பொருந்தும் என்று யூகிக்கக் கடவர்.

பூநீறு

(Soda - carbonate)

உவர்மண் நிலத்தில் வருடந்தோறும் தை, மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் பனி அதிகரித்தபோது பூமியி லிருந்து இரவு காலத்தில் ஒருவிதமான பூமியின்நாதம் ஆங்காங்கு வெளிப்படும். இது சாதாரண தினங்களிலிடப் பௌர்ணமி காலத்தில் அதிகமாகப் பூரித்து வெளியாகும். இதன் பெருமையை அறிந்தவர்கள் நடு இரவில் சர்வ ஜாக்கிரதையாக அந்த நாதத்தைச் சேகரித்துக் குப்பிகளில் அடைத்து வைத்துக்கொள்வர். அப்படிச் செய்வதற்குச் சாத்தியப்படாதவர்கள் சூரியோதயத்திற்கு 2, 3-நாழிகைக்கு முன் அவ்விடம் சென்று முற்றிலும் ஈரம்வற்றாமல் தயிர்போல் இருப்பதைக் கிளிஞ்சல் கொண்டு வாரி அகலக் கோப்பைத் தட்டுகளில் போட்டுக் கடைந்து குழம்பு பதமாகக் குப்பிகளில் அடைத்து வைத்துக் கொள்வர். இந்தக் குப்பிகளை ரவிமுகத்தில் வைக்க உருகும். இரவு காலத்தில் கற்கண்டுபோல உறையும். இதுவே சரியானது. இப்படிச் சேகரம் செய்த பூமி நாதத்தை 3-தினம் கடும் ரவியில் வைத்துப் பிழிந்து எடுக்க வந்த சலம் விந்து ஆகும். அதில் ஏற்பட்ட வண்டல் நாதம் ஆகும். இதனை அறியாமல் சிலர் களர்நிலத்தில் காலை நேரத்தில் சூரியோதயத்திற்குப் பின் சென்று பூத்திருக்கும் பூநீற்றைக் கொண்டு வருவது வழக்கம். இப் பூநீற்றைக் கொண்டுவந்து செய்யும்படியான தொழிலுக்குச் சிவனும் சத்தியு மிருக்க வேண்டும். அப்படியில்லாமல் சிவன் என்று சொல்லப்பட்ட விந்தானது மண்ணில் கலந்துகொண்ட பின்பு சத்தியாகிய நாதமென்ற பூநீறு பெரிதும் பயன்படாது என்பதை உணரக்கடவர். இப்படிப் பக்குவம் அறிந்து சேகரம் செய்த பூநீறு ஒரு எடைக்கு 4-எடை பனிசலம் விட்டுக் கரைத்து 2, 3-மடிப்பு உள்ள சுத்தமான சீலையில் வடிகட்டிப் பீங்கான் தட்டுகளில் $\frac{1}{2}$-அல்லது $\frac{3}{4}$-அங்குலம் ஆழம் இருக்கும்படியாக விட்டுக் காலை 7, 8-மணிக்கு ரவியில் வைத்துவிட மாலை 3, 4-மணிக்குள் ஒவ்வொரு தட்டுகளிலும் உப்பு உறைந்து கட்டியிருக்கும். இவற்றையெல்லாம் மீண்டும் உப்பின் எடைக்கு நான்கு மடங்கு பனிசலம்

விட்டுக் கரைத்து முன்போல் 4, 5-மடிப்பு உள்ள சுத்தமான சீலையில் வடிகட்டித் தட்டுகளில் விட்டு வைக்க உறைந்து உப்பாகும், இப்படி 10-முறை செய்யச் சுத்தமான பூநீறாகும். இதனையே முப்பு செய்யும்போது கூட்டிக் கொள்வது பெரியார் வழக்கம்.

பூநீறு பெண்சரக்கு இதற்கு ஆண்சரக்கு இதிலிருந்து பிரிக்கப் பட்ட சலமேயாகும்.

நவச்சாரம்

(Ammonium Chloride)

சாதாரணமாக நமக்கு உபயோகப்படக் கூடியதும் நாடு நகரங்களில் வளர்க்கக் கூடியதுமான ஒட்டை, குதிரை, யானை, எருமை, மாடு, வெள்ளாடு, செம்மறியாடு, கழுதை, பன்றி முதலியவற்றை அடைத்து வைத்துள்ள கொட்டகையை அப்போதைக்கப்போது சுத்தி செய்து மலசல முட்படக் குப்பைகளைக் கொட்டி வருகின்ற குப்பை மேடுகளிலும், அக்கம் பக்கத்திலுள்ள மண் தரைகளிலும், மழை பெய்த காலத்தில் ஜலம் ஊறி வடிந்து பக்கங்களிலுள்ள சாலகங்களிலும் பள்ளங்களிலும் நிறைந்து வெய்யிற் காலத்தில் படை படையாகவும் கம்பி கம்பிகளாகவும் உப்பு பூத்திருக்கும். இவைகளைச் சேதப்படாமல் சுரண்டி எடுத்து ஜாடிகளில் பத்திரப்படுத்துவதுண்டு. இப்படி மேற் கூறப்பட்ட ஒன்பது மிருகங்களின் மந்தைகளின் சார்பாகத் தனித்தனியெடுத்த உப்புகளையெல்லாம் ஒருமிக்கக் கூட்டி. விசேஷமாகக் கிடைக்கக்கூடிய ஏதேனும் சில மிருகங்களின் மூத்திரத்தை விட்டுக் கரைத்துத் தெளிய வைத்து ஏழு மடிப்புள்ள சீலையில் வடிகட்டிப் பாண்டங்களில் விட்டு அடுப்பிலேற்றி எரித்துச் சுண்டிவரும் தறுவாயில் அதிக ஆழமில்லாத அகன்ற சட்டிகளில் விட்டு இரவியில் வைத்து உலர்த்தி எடுக்கும் சரக்கிற்கே நவச்சாரம் என்றும் சட்டிச்சாரமென்றும் கூறுவர். இது அழுக்குப் படிந்த நிறமாகவும் அல்லது கபில நிறமாகவும் வாயில் போட்டால் புளிப்புச் சுவையுடன் கசப்பாயும் மூத்திர வெகுட்டலுடையதாகவும் இருக்கும்; இதுவே உயர்தரமான சரக்கு. தற்காலத்தில் அரேபியா முதலிய தேசங்களில் ஒட்டை குதிரை மாடு முதலியவற்றின் சாணங்களை உலர்த்திக் குழிகளில் நிரப்பிக் கொளுத்திச் சாம்பராக்கி ஏதேனும் சில மிருகங்களின் மூத்திரத்தை விட்டுக் கரைத்துத் தெளிய விட்டு வடித்தச் சலத்தைப் பாண்டங்களில் விட்டு

எரித்துச் சுண்டிவருந் தருணம் உலர்த்தித் தூண்டு தூண்டாக நறுக்கி அனுப்புவதுண்டு. இந்தச் சரக்கும் ஏறத் தாழச் சிறிது பயன்படும். சுவச்சாரம் ஆண்சரக்கு; இதற்குப் பெண் சரக்கு வெங்காரம்.

எவச்சாரம்

(Potassium Carbonas Impura)

எவம் என்று கூறப்பட்ட கோதுமைத் தாளை உலர்த்தி நன்றாய் எரித்துச் சாம்பலாக்கி அதன் எடைக்கு நான்கு மடங்கு சுத்த சலம் விட்டுக் கலக்கிக் கலக்கி 3 நாட் சென்றபின் கலங்காமல் தெளிவு நீரை வடித்து மண் பாண்டத்திலிட்டுச் சிறு தீயாக எரித்துக் குழம்பு பதமாக வருஞ் சமயம் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவியில்உலர்த்தி எடுத்துக்கொள்வதாகும். இதுவே உயர்தரமானது. தற்காலத்தில் சோளம் கம்பு முதலியவற்றின் தாளை உலர்த்தி எரித்துச் சாம்பலாக்கி முன்போல் சலம் விட்டுக் கரைத்துத் தெளிவு நீரைக் காய்ச்சி உப்பாக்குவதுமுண்டு. இது குணத்தில் சிறிது தாழ்ந்ததென்றே கூறவேண்டும். இதன் குணத்திற்குச் சமத்துவமாக வைப்பு வைத்துப் பாகங்களில் கூட்டுவதுமுண்டு. எங்ஙனமெனில்:—சுத்தமான பூநீறு பலம் 10 இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு 1¼ படி பனி சலம் விட்டுக் கரைத்துக் குளிர்ந்த இடத்தில் 3 நாள் வைத்து நான்காவது நாள் தெளிந்துள்ள நீரைக் கலங்காமல் வடித்துக் கொள்ளவும். அப்பால் ஒரு அடிகனத்தச் சட்டியை அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து முன் சித்தப்படுத்திய பூநீறுத் தெளிவில் படிகாரம் பலம் 2, திருசு பலம் 2, வெடியுப்பு பலம் 2 ஆகப் பொடித்துக் கலக்கிக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் காய்ச்சிக்கொண்டுவர அடுக்கு அடுக்காய் உப்புக்கட்டி உறைந்திருக்கும்—இந்த சரக்கு சகல சரக்குகளையும் கட்டும் கடிய திராவகத்திற்கும் உறுதியைக் கொடுக்கும். (போகர்)

வளையலுப்பு

(Valayaluppu)

தேவையான பூநீற்றைக்கொண்டுவந்து மண்கல் முதலியவைகள் இல்லாமல் சுத்தப்படுத்திச் சலம் தெளித்து இரண்டு மூன்று நாள் மிதியல் கொடுத்தாவது அல்லது கருங்கல்லினல் சந்தில்லாமல்

இணைக்கப்பட்ட உரலைப் போன்ற ஓர் பள்ளத்தில் கொட்டிச் சிறிது சலம் தெளித்து பூணில்லாத இரண்டொரு மர உலக்கைகளைக் கொண்டு ஒரு சாமம் இடித்து ஆறவிட்டு நான்காவது நாள் மெழுகு பதத்தில் திரட்டி ஒரு அடிகனத்த மட்பாண்டத்தில் அரை பாகத்தில் அடங்கும் வண்ணம் போட்டு வட்டமாக உள்ள அடுப்பில் கால்பாகம் மட்பாண்டம் அடுப்பில் புதையும்படியாக அமைத்துச் சந்து வாய்க்கு மண் பூசித் தீயிட்டுக் காடாக்கினியாக எரிக்கச் சில சாமத்திற்குள் பூநீறுனது உருகி நுரையோடு அழுக்குத் தள்ளும். ஒரு இரும்புக் கரண்டி கொண்டு சுத்தமாக வழித்து எவர் கண்களுக்கும் புலப்படாமல் புதைத்துவிடுவதுண்டு. இதனையே வளையல் நஞ்சு என்று கூறுவர். இப்படி உருகியாறவிட்ட உப்பு இரண்டு விதமான வேறுபாடு அடையும். உடைத்துப் பார்க்க உட்புறத்தில் பளிங்கு நிறத்தை யொத்த கறுப்பு நிறமான கல்லாகவும் மேற்புறத்தில் வெண்மை நிறமான உப்பாகவும் இருக்கும். மேற்புறத்திலுள்ள உப்பையே வளையலுப்பு என்று கூறுவர். உள்ளிருக்கப்பட்ட பளிங்குக்கல்லை உருக்கி வளையலாகச் செய்வது வழக்கம். வளையல் செய்வதற்காகக் காய்ச்சும் நிமித்தம் இந்தஉப்பு ஏற்பட்டபடியால் வளையலுப்பு எனப் பெயர் மேவியது.

கெந்தி உப்பு

(Kenthiuppu)

இது வைப்புச் சரக்கில் ஒன்றாகும். இதன் வைப்பைப் பலவிதமாகக் கூறி யிருக்கின்றனர். அதன் விபரம் பின் வருமாறு:— கந்தகம் பலம் 10, வெடியுப்புப் பலம் 10, இந்துப்புப் பலம் 10, சவுட்டுமண் பலம் 10 இவற்றை நன்றாய் பொடித்து உறவாகும்படி நன்றாய்க் கலந்து ஓர் அடிகனத்த சட்டியில் போட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து, கெந்தகத்தின் தைலத்தை உப்பினங்கள் உறிஞ்சுமளவு அயக்கோலால் கிண்டிக் கொடுத்து ஆறவிடவும். ஆறினபின் உப்பை எடுத்து இடித்து மாவுபோலாக்கி ஒரு மட்பாண்டத்திலிட்டு அதன் எடைக்கு 4 எடை சுத்த சலம் விட்டுக் கரைத்து மூன்று நாள் வரையிலும் அசையாமல் வைத்து நான்காவது நாள் தெளிந்துள்ள நீரை வடித்துக் காய்ச்சி குழம்பு பதத்தில் அகலப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவியில் வைத்து உலர்த்திஎடுத்தது உயர்தரமான கெந்தி உப்பாகும். (போகார்)

(வேறு)

கடல் நீரைக் காய்ச்சி உப்பாக எடுத்தது பலம் 20. இதை ஒரு அடிகனத்த குடவான சட்டியில் போட்டு வட்டாகாரமான பெரிய அடுப்பில் வைத்து எரிக்க உப்பு உருகும் அத்தருணம் படிகாரம், வெடியுப்பு, வாணகந்தகம், பூநீலம் வகைக்குப் பலம் ஒன்றுஎத் தூள் செய்து கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக்கிண்டி ஆறவிட்டுப் பாண்டத்தை உடைத்து உப்பை எடுத்துக் கொள்வதுண்டு.

(போகர்)

குறிப்பு:—இராமநாதபுரம் சமீபத்தில் சமுத்திரம் சலம் ஊற்றேட்டம் உள்ள கவ பாஷாணம் திருப்புள்ளாணி முதலிய இடங்களிலுள்ள குளங்களில் சலம் வற்றும்போது கறுப்பு நிறமான உப்பு ஏற்படுவதுண்டு. இதை வெட்டிக் கறுப்புப்பு என்று கடைகளுக்கு அனுப்புவதுண்டு. இதை ரசாயன விதிப்படி சோதிக்கும்போது இதில் கடல் உப்பு அயம் கெந்தி முதலிய சத்துக்கள் அடங்கி இருக்கின்றதெனத் தெரியவருகிறது. இந்த உப்பும் பிலீகம் யகிர்த்த கண்ட வியாதிகளுக்கு அதிக நன்மையைத் தருகின்றதென அனுபவத்தில் கண்டிருக்கிறது.

வெங்காரம்

(Sodi Biboras)

இமாலய மலையிலிருந்து வடிந்த சலமானது திபெத்திலுள்ள ஏரிகளில் நிறைந்து வெய்யிற் காலத்தில் சுண்டி மாவுபோல் படிந்து இறுகிக் கற்களாக மாறுபடும். இவ்வண்ணமே நேப்பால் மலைச் சார்புகளில் உள்ள ஏரிகளிலும் கிடைக்கும். இதை முதலில் பார்க்க அழுக்கு நிறமாக இருக்கும். சுத்தி செய்யச் செய்ய பளிங்கு நிறத்தைப் பெறும். இத்தகைய சரக்கு ஐரோப்பா, பெரு முதலிய தேசங்களிலும் கிடைக்கும். இந்தச் சரக்கு சலத்தில் கரையும். சாராயத்தில் கரையாது. இதை வாயிலிட்டுப் யார்த்தால் இனிப்போடு துவர்ப்பாக இருக்கும், நாவில் குளிர்ச்சி தட்டும் இந்த உப்பு நாட்பட்டக் காற்றுவாடையிலிருப்பின் மேலே வெளுப்புத் தட்டும். இதன் குணத்திற்குச் சமத்துவமாக வைப்பு வைத்துக் கொள்வதுமுண்டு. எங்ஙனமெனில்:—சுத்தமான பூநீறு படி ஒன்றை ஒரு மட்பாண்டத்தில் போட்டு எட்டுப்படி சுத்த சலம் விட்டுக் கரைத்து வடிகட்டி வேறு மட்பாண்டத்தில் விட்டு, அதில் சிறு துண்டுகளாக நறுக்கிய சீனம் பலம்-100 வெடியுப்பு பலம்-6½

போட்டு 15-நாள் வரையில் ரவிமுகத்தில் வைத்துவரக் கறுப்பு நிறமாகச் சுண்டும். இதில் கள்ளிச் சாம்பல் படி-1, குன்றி இலைச் சாறு படி-1, சிற்றாமணக்கெண்ணெய் படி-½ விட்டுக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறு தீயாகப் பொங்காமல் 4-நாழிகை எரித்து மேலழுக்கு நீக்கி வாயகன்ற பாத்திரத்தில் ஊற்றி 15-நாள் ரவிமுகத்தில் வைக்க வெங்காரமாகும். (போகர்)

தற்காலத்தில் சோடாமாவில் போரிக் ஆசிட் கூட்டி வைப்பு வைத்து விசேஷமாக வியாபாரத்திற்கு வருவதுண்டு. இதுவே எங்கும் எளிதில் கிடைக்கக்கூடியது. ஆகையால் பண்டிதர்கள் அவிழ்தங்களில் இனமறிந்து கூட்டிக் கொள்வார்களாக.

ஏகம்பச்சாரம்

(Volcanic Ammonia)

சில எரிமலைகளில் நடு இரவில் ஒருவிதமான அதிர்ச்சியுண்டாகி அதிலிருந்து இந்த உப்பு வெளியாகும். இது கடைகளில் கிடைப்பது அரிது. ஆங்கிலேய ரசாயன தொழிற்சாலைகளில் அதிகம் செலவு செய்து இந்த உப்பைச் சேகரிப்பதுண்டு. இந்த உப்புடன் வெடியுப்புக் கூட்டி நன்கு அரைத்துப் படிகாரத்திற்குக் கவசமிட்டு மண்சீலை செய்து புடமிடக் கட்டும். செம்பில் கொடுக்க ஊறலற்றுப் பொன்னாகும். இதன் குணத்திற்குச் சமத்துவமாக வைப்பு வைத்துக் கொள்வதுமுண்டு எங்ஙனமெனில்:—சுத்திசெய்த பூநீறு சேர்-2, கம்பி உப்பு சேர்-2, வெங்காரம் சேர்-2, படிகாரம் சேர்-2, கல்லுப்பு சேர்-2, சாரம் சேர்-2 இவற்றைக் கல்வத்திலிட்டு மிருதுவாக அரைத்து உறவான பதத்தில் வெடியுப்பு ஜெயநீர் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு 4-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் அகலப் பீங்கான் தட்டில் வில்லை தட்டிக் கடும் வெய்யிலில் 15-நாள் வைக்கவும். அப்பால் சுத்திசெய்த பேரண்டத்தை நன்கு இடித்துத் தூள் செய்து 2-சேர் அளவிற்கு எடுத்து அதனில் பாதித்தூளை ஒரு குடவான சட்டியில் போட்டுப் பரப்பி அதன்மீது முன் உலர வைத்த வில்லையைத் துண்டுத் துண்டாக உடைத்துப்போட்டு மிகுதியுள்ள பேரண்டத்தூளை மேலே கொட்டிப் பரப்பிச் சட்டியின் வாய்க்குப் பொருத்தமான மற்றோர் சட்டியின் உட்புறத்தில் ஊமத்தமிலைச் சாறுவது அல்லது கலியாணமுருக்கனிலைச் சாறுவது சந்தில்லாமல் பூசி உலர்த்திக் கவிழ்த்துச் சந்துக்கு மண்பூசி மண்

சீலை ஏழு செய்து உலாவிட்டு அடுப்பிலேற்றி முத்தியாக 4-சாமம் எரித்து ஆறவிட்டு அசையாமல் சீலையை நீக்கிப் பார்க்க மேல் சட்டியில் பதங்கம் ஏறி நிற்கும். இதனையே ஏகம்பச்சாரம் என்று பாகங்களில் கூட்டுவாயினர். (போகர்)

கடல் நுரை

(Spray)

சமுத்திரத்தின் அலையானது இடையிலுள்ள குன்றுமலைகளின் மீது மோத மோத நுரைக் கிளம்பும் அதனிலுள்ள சில சத்துகளைக் காற்று ஒருங்கு சேர்க்க அது ரவியின் தீட்சணியத்தால் உறைந்து உலர்ந்து கட்டிகளாகின்றன. இதுவே உயர்தரமானது: சமுத்திரக் கரையின் ஓரத்திலாவது அல்லது அதன் இடையிலுள்ள திட்டுகளின் ஓரங்களிலாவது ஒருவிதமான கடற்பூச்சி மணலின் அடியில் வாசம் செய்து கொண்டு, மணலைத் தன் வாய் நீரால் இளகும்படி செய்து, கரையான் என்னும் செல்லானது எப்படி எவர் கண்களுக்கும் புலப்படாமல் உட்புறத்திலிருந்து கொண்டு புற்று என்னும் சிகரங்களைக் கட்டுகின்றதோ அதுபோல் ஜலத்திலிருக்கும் பல ஜீவராசிகளுக்குப் புலப்படாமல் சிகரங்களாகக் கட்டிக்கொண்டு வரும். இவைகள் நாளுக்குநாள் விருத்தியாகிப் பாறைகளைப்போல் தோற்றும். இதனை வெட்டி கடல் நுரை என்று நம் நாட்டிற்கு அனுப்புவதுண்டு. இவ்விரண்டு இனங்களுமன்றிச் சில கடற் பூச்சிகள் கரையோரங்களில் மணலின் இயக்கத்தைக் கொண்டு கொடிக் கொடியாகவும் கொம்பு கொம்புகளாகவும் உற்பத்தி செய்வ துண்டு. இதனைக் கடற்பூண்டு என்பர். கணவாய்மீன் ஓடும் ஏறத் தாழ கடல் நுரையைப்போல் தோற்றும் ஆனால் பெரியதாக இராது. இத்தகைய பேதங்களை நன்குணராது பண்டிதர்கள் உபயோகப் படுத்தக் கடவர்.

கடல் நுரை ஆண் சரக்கு இதற்கு கற்சுண்ணம் பெண் சரக்கு.

அழுரி உப்பு

(Urin - Salt)

சில அவிழ்தங்களில் அழுரி உப்பைக் கூட்டும்படியாகச் சொல் லுங் காலத்தில் சிறுநீரைக் காய்ச்சி, அடியில் நிற்கும் உப்பைக் கூட்டிக் கொள்வது வழக்கம். இதில் சில குற்றங்கள் உண்டு.

ஆகையால் பண்டிதர்கள் கூடியவரையிலும் அழுரி உப்பு எடுத்துத் தச தீட்சை செய்து உபயோகப்படுத்துவது சாலச் சிறந்தது. எங்ஙனமெனில்:—

சடத்தினுட அழரிபடி எட்டு வாங்கி
சரியான கடமீட்டு மொயை முடித்
திடத்துடனே யெரிக்கப்புகை முறிந்து நீராம்
திராமான அழரியது முறிந்த தானுல்
விடத்தினுட பூநீற்றை யெண்ணெய் வாங்கும்
விதமான வாதமது யேவ லாகும்
துடக்கறுத்துத் துருசுசுண்ண மாகும் பாரு
சுகமாக யாக்கோபு சொல்லி னேனே.

வே று

வேலை யழரிதனை விட்டு முறிக்கக்கேள்
ஆலைபோல் வாலை யடுப்பிட்டக்—காலையது
யேரிசுத்த நீராமே மின்ப ரசவாதி
ழரிவேதை யாக முடி.

இச் செய்யுட்களில் கண்டபடி எட்டுப்படி சிறுநீரை ஒரு மட்குடத்தில் அரைபாகத்தில் அடங்கும்படியாக விட்டுப் பொருத்தமான வாலையைச் செருகிப் பொருத்து வாய்க்கு ஈரத்துணியைச் சுற்றி மேலே குளிர்ந்த சலம்விட்டு அடுப்பில் வைத்து சிறு தீயாக எரித்துக் கொண்டுவர ஆவிநீர் துளித்துளியாகச் சொட்டும். அப்பொழுது 20-அல்லது 25-நிமிஷத்திற்குப் பின் சொட்டுகின்ற நீரை மஞ்சள் தூளில் விட்டுப் பார்க்கச் சிவக்கும். அப்படி இல்லாவிடின் மீண்டும் சிறிது எரித்து முன்போல் சொட்டும் நீரைப் பரிட்சிக்கவும். எப்பொழுது மஞ்சள் தூள் சிவக்கின்றதோ அந்தத் தருணம் சொட்டுகின்ற ஆவிநீரைச் சேதப்படாமல் வெண்மை நிறமுடைய குப்பிகளில் அடைத்து வருதல் வேண்டும். இப்படியே அடிக்கடிப் பரிட்சை செய்து எப்பொழுது சிவக்க வில்லையோ அத்தருணம் எரிப்பதை நிறுத்தி விடவும். இன்னும் அதிகமாகத் தேவையாயின் மறுநாள் அதே மட்குடத்தில் பின்னும் தேவையான் சிறுநீரை விட்டு முன்போல் எரித்து ஆவிநீரை வாங்கவும். இப்படிச் சேகரப்படுத்திய் ஆவிநீரானது கலங்களில்லாமல் சுத்த சலம்போலிருக்க வேண்டும். எரிப்பின் பேதத்தினுல் கலங்கலாகவும் அழுக்கு

வர்ணமாகவும் மஞ்சள் வர்ணமாகவும் கிடைக்கப்பெறின் மீண்டும் அதனை மட்குடத்தில் விட்டு மடக்கி ஆவிநீராக வடித்தல் வேண்டும். இதனையே சுத்த கெங்கை யென்றும் விந்து என்றும் பிண்டமுப்பு பாகத்தில் கூறப்படும். இத்தகைய மார்க்கத்தில் தான் பூரீற்றி லுள்ள எண்ணெயை வாங்குவதென்றும் துருசு சுண்ணத்தை முடிப்ப தென்றும் மேற்படி செய்யுளில் கூறப்பட்டுள்ளது. இந்த ஆவிநீரை சேகரித்த பின் அடிக்குடத்தில் பார்க்கச் சிவந்த நிறமாக வண்டல் தோற்றும். இதனை நாதமென்றும் சுரோணித மென்றும் கூறுவர். இதனைப்பற்றி மேற்படி செய்யுளில் ஒன்றும் கூறவில்லை.

மூத்திரம் படியாறு முறிவான குமிரியிடு முனிந்து வாங்கிக்
காத்திரமா யெண்ணெயுப்பு கனிவாக அடியில்நிற்குங் கண்டுபாரு
சூத்திரமாய்ச் சவுக்காரம் சுண்ணமதாய் கடுங்காரஞ் சூதஞ்சாகும்
கோத்திரமேல் லாம்பிழைக்க ஒருவேலை காயசித்தி கோள்கை
[தானே.

மேற்கூறப்பட்டச் செய்யுளின் இரண்டாவது அடியில் மறைத்து வைத்துள்ள இரகசியத்தைத் தெளிவாக வெளிப்படுத்தி யிருக்கின் றனர். அதாவது அடி மட்குடத்தில் நாதம் என்று சொல்லப்பட்ட எண்ணெயோடு உப்புக் கலந்த வண்டலிருக்கும் இதைப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவிமுகத்தில் உலர்த்தப் பழம்புளி போலாகும். இந்தப் புளிக்கு நான்கு எடை மூன் சித்தப்படுத்திய சுத்த கெங்கையை விட்டுக் கரைத்து நான்கு மடிப்பு உள்ள சீலையில் வடிகட்டி அகலப் பீங்கான் தட்டுகளில் ஒரு அங்குலம் ஆழம் இருக்கும்படியாக ஒவ்வொன்றிலும் விட்டுக் காலை 8-மணிக்கு ரவி முகத்தில் வைத்துவிட பகல் 3-அல்லது 4-மணிக்குள் அதிலுள்ள உப்பானது ஆடைகட்டி உறைந்து இருக்கும். அந்த ஆடையின் ஓரத்தில் ஒரு சிறு துவாரம் செய்து மெதுவாக வேறுதட்டில் சாய்க்க அடியில் தங்கியுள்ள சலமானது கறுப்புநிறமாக வடியும். சலம் முற்றிலும் வடிய வடிய உப்பானது கோப்பைத் தட்டோடு சேர்ந்துப் பிடித்துக் கொள்ளும் இந்த உப்பைச் சேதப்படாமல் எடுத்து வைத்துக்கொள்ளவும். மறுபடியும் முன் வடித்த நீரைப் பீங்கான் தட்டுகளில் முன்போல விட்டு ரவியில் வைக்க ஆடை கட்டும். அதையும் முன்போல் ஆடையின் அடிப்பாகத்தில சிறு துவாரம் செய்து வேறு தட்டில் மெதுவாகச் சாய்க்கக் கறுப்பு

நிறமாக நீர்வடியும் அப்போது உப்பானது பீங்கான் தட்டில் பிடித்துக் கொள்ளும். இதையும் முன் உப்புடன் சேர்த்துக் கொள்ளவும். இப்படியே கிடைக்கும் வரையில் உப்பை எடுத்துக் கொண்டு அடியில் இருக்கும் எண்ணெயைத் தள்ளிவிடவும். இப்படிச் சேகரம் செய்த உப்பு ஒரு நீட்சை என்று கூறுவர். இப்படியே இந்த உப்பைப் பத்துமுறை சுத்த கெங்கைவிட்டுக் கரைத்து கரைத்து உப்பாக்கியது பளிங்கு வர்ணமாக இருக்கும். இதுவே சுத்தமானது அமுரி உப்பு. இதனையே அவிழ்த்த பாகங்களில் கூட்டுவது சாலச் சிறந்தது. இந்த உப்பை கட்டிக் காரமேற்றிச் சுண்ணம் செய்து பல தொழிலுக்குப் போவது வழக்கம். இதனைப் பற்றி அறிய வேண்டின் நாயனார் திருவள்ளுவர் இயற்றிய ஞானவெட்டி, நவரத்னசிந்தாமணி-800, பஞ்சரத்தினம்-500, காயகற்பம்-300 முதலிய நூல்களைப் பார்வையிடவும். அமுரி உப்பு பெண்சரக்கு இதற்கு ஆண்சரக்கு சுத்த கெங்கை.

கற்பூரம்

(Camphora Officinarum)

ஜப்பான், சைனு, கொச்சின் சைனு, ஸ்வீடன், போர்னியா முதலிய தேசங்களின் கடற்கரை யோரங்களில் கற்பூர சத்து அடங்கலாகிய ஓர்வித மரமுண்டு. இவைகளின் மரப்பட்டை வேர், கிளை முதலியவற்றைத் துண்டுத் துண்டாக நறுக்கி இடித்து ஒரு பெரிய மட்பாண்டத்தில் போட்டு எண்மடங்கு சலம் விட்டு வாய் மூடி அடுப்பிலேற்றி எரிக்க அதன் சத்தெல்லாம் சலத்தில் வெளியாகிக் குழம்புபோலாகும். இதை வடித்துப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவியில் வைக்க உறைந்து உப்பைப் போலாகும். இது அழுக்கு வர்ணமாகவும் கற்பூர நெடியுடையதாகவு மிருக்கும். இதைப் பொடிசெய்து இரண்டு மடங்கு மணலுடன் கூட்டி ஒரு வாய் குறுகிய மட்பாண்டத்தில் போட்டு அத்தகைய மற்றோர் மட்பாண்டத்தைக் கவிழ்த்துச் சந்து வாய்க்கு மண் பூசிச் சீலைசெய்து உலர வைத்து அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரிக்க மணலோடு கலந்த கற்பூர சத்தானது புகைந்து மேலெழும்பிப் பதங்கிக்கும். இது வெண்மை நிறமாகவும், கரகரப்பாகவும் இருக்கும். இதை வாயிலிட்டால் விறுவிறுப்பாயும் குளிர்ச்சியாயு மிருக்கும். இது சலத்தில மிதக்கும். ஆனல் கரையாது. சாராயம் ஈதர் எண்ணெய் முதலியவற்றில் கரையும். நெருப்பிலிட்டால் அலேமோதி

எரியும். சிறிதும் அடியில் தங்காது. இது தற்காலத்தில் எங்கும் கிடைக்கக்கூடிய கற்பூரமாகும். இந்த மரம் சமுத்திர சலத்தின் உப்புச் சத்தைக்கொண்டு விருத்தியடைந்தபடியால் இந்த மரத்தின் சத்தைக் கார சார லவணத்திலொன்றுக சித்தர்கள் கூறுவராயினர். இன்னும் இதன் குணத்திற்குச் சமத்துவமாக வைப்பு வைத்துக் கொள்ளவும் கூறியிருக்கின்றனர் எங்ஙனமெனின்:—

வாழைக்கட்டைச் சலத்தில் தசதீட்சை செய்த 30 பலம் வெடியுப்புடன் பனி சலத்தில் தசதீட்சை செய்த பூநீறு சமன் கூட்டி அடிகனத்த சட்டியில் போட்டு உப்பின் எடைக்கு நான்கு மடங்கு வாழைக் கிழங்குச் சாறு அல்லது பனி சலம் விட்டுக் கலக்கி அசையாமல் மூன்று நாள் வைத்து நான்காவது நாள் தெளிந்துள்ள நீரை வடித்துக் குழம்புப் பதமாகக் காய்ச்சிப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவியில் வைக்க உப்பாகும். இதனைப் பொடி செய்து பூப்புடத் தைலமாகச் சித்தப்படுத்திய இலவங்கப்பட்டைத் தைலத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுப் பிசரிக் கையால் பிடித்த அளவில் உதிராத பதத்தில் ஒரு ஜாடியில் போட்டு வாய்க்கு மூடியிட்டுச் சீலை செய்து பூமியில் 15 நாள் சமாதி வைத்து 16-ம் நாள் ஒரு கூடை உலர்ந்த குதிரை லத்தியை அதன்மேலே கொட்டித் தீயிடவும், இரண்டு நாள் ஆறவிட்டுப் பின்னர் சமாதியிலுள்ள ஜாடியை எடுத்து மேல் மூடியை நீக்கிப் பார்க்க உப்பு கட்டியாக இருக்கும். கற்பூரம் ஆண்சரக்கு இதற்குப் பெண்சரக்கு பூநீறு. (போகர்)

பச்சைக் கற்பூரம்

(Borneol Or Boro Camphor)

இது தற்காலம் ஜப்பான் முதலிய பிரதேசங்களிலிருந்து சுத்த வெண்மை நிறமாகவும் பழுப்பு நிறமாகவும் வியாபாரத்தினிமித்தம் வருகின்றது. இவைகள் நவீன முறைப்படி செய்து அதிக வாசனையுள்ளதாகக் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. ஆனால் சித்தர்கள் கைமுறையாக வைப்பு வைக்கப்புகின் விலை யதிகரிக்கும். அவற்றுள் சில வைப்பு முறைகளை அடியிற் காண்க.

கற்பூரம் பலம்-$\frac{1}{4}$, படிகாரம் பலம்-$\frac{1}{4}$, உயர்ந்த சாம்பிராணி பலம் $\frac{1}{4}$, இந்துப்பு பலம்-$\frac{1}{4}$, பூநீறு பலம்-$\frac{1}{4}$, தாழையுப்பு பலம்-$\frac{1}{4}$, கோரைக்கிழங்கு பலம்-$\frac{1}{4}$, புனுகு விராகனெடை-1, கஸ்தூரி மஞ்சள் விராகனெடை-1, ஏலக்காய் வித்து விராகனெடை-1,

மலாக்கா சந்தனம் விராகனெடை-1, கிளியூரம்பட்டை விராக னெடை-1, பச்சை கிச்சிலிக்கிழங்கு விராகனெடை-1, இவற்றுள் புனுகு நீங்கலாக மற்ற எல்லாச் சரக்குகளையும் இடித்து மாவுபோல் செய்து சிறிது பசுவின் நெய்விட்டு நான்கு சாமம் மெழுகு பதத்தி லேயே அரைத்து ஓரே வில்லையாகத் தட்டி வைத்துக்கொள்ளவும். அப்பால் வட்டமானதும் வாய் பொருத்தமுடையதுமான இரண்டு கோப்பைகளைத் தயார் செய்து ஒரு கோப்பையினுள் வில்லையை வைத்து மற்றோர் கோப்பையி னுட்பாரிசத்தில் புனுகைத் தடவி மேல் மூடி சந்து வாய்க்கு உளுந்து சீலை ஏழு செய்து நன்றாய் நிழலில் உலர்த்தி ஒரு சட்டியில் இரண்டு மூன்று விரற்கடை பெரு மணல் கொட்டிப் பரப்பி நடுவில் கோப்பையை வைத்து, சுற்றுபுறம் முக்கால் பாகம் அடி கோப்பை மறையும்படியாக மணல் கொட்டிப் பரப்பி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக மூன்று சாமம் எரித்து எடுக்க மேற்கோப்பையில் பதங்கம் ஏறி நிற்கும். இது அதிக பரிமள முடையதாகவும் பளிங்கு வண்ணமாகவும் இருக்கும். இதனையே பச்சைக் கற்பூர மென்பர்.

வேறு முறை

கற்பூரம் பலமொன்றைக் கல்வத்திலிட்டு, அதனுடன் திருநீற் றுப்பத்திரிச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து நிழலில் உலர்த்திய பூநீறு பலம்-½, இந்துப்பு, வெங்காரம், வெடியுப்பு, சன்ன லவங்கப் பட்டை, வால்மிளகு, ஏலக்காய் வித்து, கஸ்தூரி மஞ்சள் வகைக்குப் பலம்-¼ ஆகக் கூட்டி நன்கு அரைத்து மிருதுவான பதத்தில் ஆவின் நெய்விட்டு மெழுகு பதத்திலேயே ஒரு சாமம் அரைத்து ஓரே வில்லையாகத் தட்டி முன்முறையில் செய்தவாறு ஒரு கோப்பையில் வைத்து அத்தகைய மற்றோர் கோப்பையின் உட்பாரிசத்தில் ½-விராகனெடைப் புனுகை அசல் மலாக்கா சந்தன அத்தர் விட்டுக் குழைத்துப் பூசி மேல்மூடி உளுந்து சீலை ஏழு செய்து நிழலில் உலர்த்தி முன்போல் மணலில் வைத்து மூன்று சாமம் சிறு தீயில் எரித்து எடுக்க மேல் கோப்பையில் பதங்கம் ஏறி நிற்கும். இதுவும் ஓர் உயர்தரமான பச்சைக் கற்பூரமாகும். இத்தகைய வைப்புப் பச்சைக் கற்பூரங்களுமின்றி விளவு பச்சைக்கற்பூரமும் உண்டு. சில பிரதேசங்களில் கற்பூரவாழை என்கிற மரமுண்டு. அதன்மேல் மடல்கள் வெய்யிற் காலத்தில் நீர் சுண்டச் சுண்ட மட்டையின் உட் புறத்தில் சாறு உறைந்து பளிங்கு வர்ணமாகவும் அதிக பரிமள

மூடையதாகவும் கிடைக்கும். இத்தகைய விலைவு கற்பூரம் தற் காலத்தில் கிடைப்பது அரிது.

பச்சைக் கற்பூரம் ஆண் சரக்கு. இதற்குப் பெண்சரக்கு இந்துப்பு.

சத்திசாரம்

(Sathicharam)

இது வைப்புச் சரக்குகளில் ஒன்று. இது தற்காலத்தில் சரியான சரக்காகக் கிடைப்பதில்லை. இதன் வைப்பு விபரம் பின் வருமாறு:—

ஒரு குறிப்போன்ற பெரிய பானையின் அடியில் 5, 6-துவார மிட்டு வைக்கோல் செருகி, முக்கோண வடிவத்தைப் போன்ற மூங்கில் கால்களால் இணைக்கப்பட்ட ஒரு பீடத்தின்மேல் வைத்து, அதில் பூநீறு படி-50, சுண்ணநீறு படி-25 ஒருமிக்கக் கலந்து போட்டு பிற்கு சுவர் உளுத்த மண் படி-50 கூட்டி மொத்த எடைக்கு நான்கு மடங்கு சுத்த சலம் விட்டுக் கலக்கி விட்டு வைக்க, வைக்கோல் வாயிலாக சலம் சொட்டும். இதை ஜாடிகளில் பத்திரப் படுத்துக. இவ்வாறு சலமெல்லாம் சொட்டினதாகத் தெரிந்தால் கிடைக்கப்பெற்ற சலத்தை ஒரு பெரிய வாயகன்ற மட்பாண்டத்தி லிட்டு அடுப்பிலேற்றி எரித்துக் குழம்பு பதத்தில் ஆறவிட்டு கொட்டாங்கச்சிகளிலாவது அல்லது வில்லை வில்லையாக ஓலைப் பாய்களின் மீதாவது விட்டு ரவியில் வைத்து உலர்த்துவதுண்டு. இது எக் காரியங்களுக்கும் சிறந்ததாகும். (போகர்)

வெடியுப்பு

(Potassium Nitras)

சில நாடுகளில் மண்சுவர்களால் கட்டப்பட்ட பல குடிசைகள் உண்டு. அவற்றின்மேல் வழலை என்னும் உப்புக் காற்று நாளுக்கு நாள் மோதிக் கொண்டிருக்க சில காலத்திற்குப் பின் அச் சுவற்றின் மண்ணானது உளுத்து மிருதுவாகச் சரிந்து கொண்டுவரும். இவைகளைச் சேதப்படாமல் வாரிச் சேர்ப்பதுண்டு. இதை ஒரு பாண்டத்தி லிட்டு நான்கு மடங்கு சலம் விட்டுக் கரைத்து கரைத்து மூன்று நாள் அசையாமல் விட்டு வைத்துக் கலங்காமல் தெளிந்

துள்ள நீரை வடித்தாவது அல்லது சத்திசாரத்திற்கு கூறிய வண்ணம் குதிர்ப்போன்ற பெரிய பாணையின் அடிபாகத்தில் 5, 6-துவாரமிட்டு வைக்கோல் செருகி அதில் மெழு உளுத்துள்ள மண்ணைக் கொட்டி நான்கு மடங்கு சலம்விட்டுக் கரைத்து முக்கோண பீடத்தின்மேல் வைத்து வைக்கோலின் வாயிலாகச் சொட்டக் கிடைத்த நீரையாவது ஒரு செப்பு பாண்டத்திலிட்டுக் காய்ச்சி ஓலையில் விட்டால் உறையும் பதத்தில் தட்டுகளில் விட்டு வைக்கக் கம்பி கம்பிகளாக உப்பு உறைந்து இருக்கும். இதுவே வெடியுப்பு ஆகும். இதுவுமல்லாமல் சில பிரதேசங்களில் பயிரிடுவதற்கு உதவாத களர்நிலங்களுண்டு. இதில் மழை பெய்து ரவியில் உலரும்போது வெண்மை நிறமான உப்பு தோற்றுவதுண்டு. இந்த உப்பைச் சிறிது நெருப்பில் போட்டுப் பார்க்க சிடுசிடுப்போடு எரிய வேண்டும். அப்படி யிருப்பின் குறிப்பு அறிந்து மேல் பாகத்திலுள்ள மண்ணை யெல்லாம் முன்போல் சேர்த்து 4-மடங்கு சலம் விட்டுக் கரைத்து முன்போல் வடித்துக் காய்ச்ச வெடியுப்பு ஆகும். இத்தகைய நிலங்கள் பஞ்சாப்பில் பல உண்டு. அது ஊரார் இந்த மண்ணைப் பயிரிடும் நிலங்களுக்கு எருவாகச் சேர்ப்பதுண்டு.

வெடியுப்பு ஆண்சரக்கு இதற்குப் பெண்சரக்கு படிக்காரம்.

மீன் அம்பர்

(Ambra Grsea - Fish)

இது மத்திய தரைக் கடலிலும் ஆப்பிரிக்காக் கடலோரங் களிலும் அபூர்வமாக மிதந்து கிடைக்கின்ற கட்டிகளாகும். இது மதங்கொண்ட திமிங்கலத்திலுல் வெளியிடப்பட்ட விந்தாகும் இது கறுப்பு, கருஞ் சிவப்பு நிறமாக இருப்பதுடன் கஸ்தூரிக்குண்டான நறுமணத்தைப் பெற்றிருக்கும். எந்தப் பாரிசத்தில் கத்திகொண்டு துண்டித்துப் பார்த்தாலும் ஊசிமுனைகளை யொத்த சிறுபுள்ளிகள் தோற்றும். இதற்கு உருசி கிடையாது, குளிர்ந்த சலத்தில் கரையாது. இது வெந்நீர் சூடான சாராயம் சில எண்ணெய் முதலியவற்றில் கரையும். இந்தக் கட்டியின் பேரில் இரண்டு விரலை கொண்டு தேய்க்க மின்சார சக்தி யுண்டாகி விரல்களை அப்புறப் படுத்துவது மின்றி சிறிது நேரம் விரல்களில் துடிப்பு இருக்கும். இது அதிக விலையுள்ளது. ஆதலால் பண்டிதர்கள் உண்மைச் சரக்கு இன்னதென்று பகுத்தறிந்து வாங்குவது நலம்.

பொன் அம்பர்
(Ambra Grsea - Bird)

மத்திய தரைக் கடலின் சில பாகங்களில் உள்ள கற்பாறை களில் அண்ட பேரண்ட பட்சி என்ற ஒருவகை பெரிய பறவை சஞ்சரிப்பதுண்டு. ஆணும் பெண்ணும் மதமுற்ற காலத்தில் வெளியாகும் ஒருவித மான எச்சம் பாறைகளின் மீது தெறிபட்டுக் காய்ந்து முடிவில் சமுத்திரத்தி லகப்பட்டுக் கரைகளில் வந்து மிதப்பதுண்டு. இது பொன் வர்ணமாகவும் சுகந்த வாசனையுடைய தாகவும் இருக்கும். இதை விரலால் அழுத்திப் பார்க்க மிருது வாகவும் மின்சார சக்தியுடையதாகவும் இருக்கும். இது சலத்தில் கரையாது. இது அதிகமாகக் கிடைப்பது அரிது. மீன் அம்பரை விட இதற்கு விலையதிகம்.

சவுட்டுப்பு
(Soda earth Impura)

களர்நிலத்தில் மழை பெய்த பொழுது அந்த நிலத்தின் சார மெல்லாம் மழை நீரோடு கலந்து ஆங்காங்கு குட்டை குட்டையாகத் தியங்கி வெய்யில்படக் காய்ந்து உப்பாகப் பூக்கும். இதுவே உயர்தரமான சவுட்டுப்பாகும். இதை பகல் 12-மணிமுதல் 2-மணிக் குள்ளாக ஓலை கொண்டாவது அல்லது கிளிஞ்சல் கொண்டாவது சுரண்டி வாரிப் பத்திரப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யதவறின் மீண்டும் அந்த உப்பானது கசிவு தோன்றி அம்மண்ணிலேயே கலந்து கொள்ளும். அப்படிச் சேகரிப்பது கஷ்ட சாத்தியமாயின் களர்நிலத்தில் எந்த இடத்தில் உப்புச் சாரம் அதிகமாய் இருக்கின் றதோ அதைக் குறிப்பு அறிந்து மண்ணைக் கொண்டுவந்து அந்த எடைக்கு நான்கு எடை சலம் விட்டுக் கரைத்து அசையாமல் 3-தினம் வரையில் வைத்து நான்காவது நாள் கலங்காமல் தெளிவு நீரை வடித்து மீண்டும் அதைப் பிளாட்டிங் பேப்பர் (மை ஒத்தும் கடுதாசி) போட்டு நிதானமாக வடிகட்டிக் காய்ச்சி எடுக்க உப்பாகும். இது சிறிது பழுப்பு வர்ணமாக இருக்கும். ஆனல் குற்றமில்லை. அவிழ்தங்களில் கூட்டிக் கொள்ளலாம்.

திலாலவணம்
(Thela Lavanam)

இந்த உப்பு மருந்து கடைகளில் கிடைக்காது. இதை வைப்பு வைத்துக் கொள்ளவேண்டும். எங்ஙனமெனில்:—எள்ளுச் செடியின்

சமூலத்தை நன்றாய் உலர்த்தித் தீயிட்டு எரித்து எடுத்த சாம்பல் 32-படி அளவிற்கு ஒரு பெரிய மட்பாண்டத்தில் போட்டு அதற்கு நான்கு மடங்கு சுத்த சலம் விட்டுக் கரைத்து அசையாமல் மூன்று நாள் வைத்து நான்காவது நாள் தெளிந்து உள்ள சலத்தை வேறு பாண்டத்தில் வடித்து அடுப்பிலேற்றி அதனில் பூநீறு, கல்லுப்பு, வெடியுப்பு வகைக்கு படி மூன்று வீதம் பொடித்துப் போட்டுக் கலக்கி எரித்துக் குழம்பான பதத்தில் அகலப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவிமுகத்தில் உலர்த்த உப்பாகும். இது அழுக்குப்படிந்த சிவப்பு நிறமாக இருக்கும். இதுவே திலாலவணம். (போகர்.)

இந்துப்பு
(Sodium Chloride Impura)

சாதாரணமாகப் பூமியினடியில் நிலக்கரியை வெட்டி யெடுப்பது போலச் சிந்து தேசத்திலும், பஞ்சாப் வடமேற்கிலும், இன்னும் பல இடங்களிலும் பூமியினடியிலிருந்து இவ்வுப்பை வெட்டி எடுப்ப தண்டு. இது பார்வைக்கு மேற்பாகத்தில் அழுக்கு நிறமாகவும் உள்ளே பளிங்கு வண்ணமாகவும் இருக்கும். வாயிலிட்டால் உப்புச் சுவையோடு இருக்கும். இதுவே தற்காலத்தில் எங்கும் கிடைக்கக் கூடியது. இதன் குணத்திற்குச் சமத்துவமாக வைப்பு வைத்துக் கொள்ளும்படியாகச் சித்தர்களால் கூறப்பட்டுள்ளது. எங்ஙன மெனின்:—

சமுத்திர சலத்திலிருந்து காய்ச்சி எடுக்கப்பட்ட 100-பலம் உப்பை ஒரு அடிகனத்த பெரிய மட்பாண்டத்தில் போட்டு ஆலை அடுப்பின்மேல் ஏற்றிக் காடாக்கினியாக எரிக்க உப்பு உருகும் அத்தருணம் கம்பி உப்பு பலம்-5, படிகாரம் பலம்-5, பூநீறு பலம் 1 ஆக இம் மூன்றையும் இடித்துத் தூவி எல்லாம் கலந்து உறவான சமயம் கீழ் இறக்கி ஆறவிட்டு உடைத்து உப்புக் கட்டிகளை எடுக்கப் பளிங்கு வண்ணமாக இருக்கும். (போகர்)

வேறு

சமுத்திர சலத்தைக் காய்ச்சி எடுத்த 30-பலம் உப்பை ஒரு அடிகனத்த சட்டியில் போட்டு ஆலையடுப்பின்மேல் வைத்துக் காடாக்கினியாக எரிக்க உருகும். அத்தருணம் வெடியுப்பு, படி காரம் கூகைநீர்ப் பலமொன்றை இந்துத் தூள் செய்து போட்டுத்

குழம்பாக இருக்கும் சமயம் கீழிறக்கி ஆறவிட்டு உடைத்து உப்பை எடுக்கப் பளிங்குபோ லிருக்கும்,

இந்துப்பு பெண் சரக்கு. இதற்கு ஆண் சரக்கு பச்சைக் கற்பூரம்.

சிந்துப்பு

(Sodium Chloride Impura Red)

சிந்துப்பு என்றால் சிவந்த உப்பு என்று பெயர். இந்துப்பை வெட்டி எடுக்கும் சுரங்கங்களில் சில பாரிசத்தில் சூரிய வெப்பத்தால் தனக்குத்தானே சிவந்து பக்குவமடைவதுண்டு. இது பார்வைக்கு இளஞ் சிவப்பாக இருக்கும். இதனையே பண்டிதர்கள் சிந்துப்புக் கூறிய இடங்களில் சேர்த்துக் கொள்வதுண்டு. இதன் குணத்திற்குச் சமத்துவமாக வைப்பு வைத்துக் கொள்ளும்படியாக சித்தர்கள் கூறி யிருக்கின்றனர். எங்ஙனமெனில்:—

மலைகளில் உற்பத்தியாகின்ற உப்பைச் சேகரித்து ஒரு பெரிய மட்பாண்டத்தில் போட்டு உப்பின் எடைக்கு நான்கு மடங்கு சலம் விட்டுக் கரைத்து 5-6-மடிப்புள்ள சீலையில் வடிகட்டி அடுப்பில் வைத்துக் காய்ச்சிக் குழம்பு பதத்தில் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவிமுகத்தில் வைக்க உறைந்து உப்பாகும். அப்பால் 100-பலம் மான் கொம்பு சிவலில் அரை பாகம் ஒரு அடிகனத்த சட்டியில் போட்டுப் பரப்பி மூன் சித்தப்படுத்திய உப்பில் 100-பலம் நடுவில் வைத்து அதன்மேல் மிகுதியுள்ள மான் கொம்புச் சிவலைப் போட்டுப் பரப்பி சட்டியின் வாய்க்குப் பொருத்தமான மேல்சட்டி மூடி மண்சீலை ஏழு செய்து காயவிட்டு அடுப்பிலேற்றிக் காடாக்கினியாக நான்கு சாமம் எரித்து ஒரு நாள் ஆறவிட்டு மறுநாள் அதிலுள்ள உப்பைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து ஒரு மண் சட்டியில் போட்டு உப்பின் எடைக்கு நான்கு எடை பனி சலம் விட்டுக் கரைத்து 3-நாள் வரையில் அசையாமல் வைத்துத் தெளிந்து உள்ள நீரை வடித்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பிலேற்றிக் குழம்பு பதமாகக் காய்ச்சிப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவிமுகத்தில் வைக்க உறைந்து உப்பாகும். (போகர்)

சிந்துப்பு பெண் சரக்கு. இதற்கு ஆண் சரக்கு வெங்காரம்.

கல்லுப்பு

(Sodium Chloridum Impura)

சமுத்திரக்கரையைச் சார்ந்த சில பிரதேசங்களில் பூமியின் கீழ் கடல் நீரூற்றுண்டாகி அங்குள்ள மண்ணை நாளுக்கு நாள் உளுக்கும்படி செய்து உப்புச்சாரம் மிகுந்து வரும். இந்த மண் மழை காலத்திலும் பனி காலத்திலும் கசிவுற்று வெய்யிலின் வெப்பத்தால் உப்புக் கற்களாக மாறுதல் அடையும். இதைக் கால மறிந்து பூமியை வெட்டி எடுப்பதுண்டு. இதைப்போலவே சர்க்காரின் உத்திரவின்மேல் சமுத்திர சலத்தை வாய்க்கால் வழியாகக் கொண்டுபோய் உப்பு பயிரிடுவதற்குச் சித்தப்படுத்தியுள்ள பாத்திகளில் பாய்ச்சி நவீன ரசாயன முறைப்படி உப்புப் பயிரிட்டு வரும் இடங்களில் சிறிது காலத்திற்குப்பின் அடியில் வெட்டிச் சோதித்துப் பார்க்க, மேல்பாய்ச்சிய கடல் நீரானது பூமியின் அடிபாகத்தில் நாளுக்கு நாள் ஊறி அடியிலுள்ள மண்ணை உளுக்கும்படி செய்து சில காலத்திற்குப் பின் உப்பாக மாறுதல் அடையும். இந்த உப்பானது சாதாரணமாகச் சாப்பிடும் உப்பின் குணத்திற்குச் சிறிது தாழ்ந்ததேயாகும். இது சாதாரண உப்பைப்போல் அதிக கசிவு இராது. கடலுக்குள் தானுகவே உப்பு உறைத்து பாறைபோல் காணப்படுவதுண்டு. இதனையே போகர் கல்லுப்பென்று கூறியிருக்கின்றனர்.

கல்லுப்பு ஆண் சரக்கு. இதற்குப் பெண் சரக்கு பழைய புளி

காசிசாரம்

(Kasi Saram)

இதனை போகர் பஞ்ச காவிய நிகண்டில் கார சார லவணம் இருபத்தைந்தில் ஒன்றுகக் கூறி யிருக்கின்றனர். இது தற்காலத்தில் கிடைப்பது அரிது. இதன் உபயோகத்தைப்பற்றியாவது வைப்பு முறையைப்பற்றியாவது ஆராய்ச்சியில் கிடைக்கவில்லை. இதைப் பற்றி யோசிக்குமளவில் காய்ச்சுக்கட்டி என்பது காசிக்கட்டி என்று மருவியதைப்போல் காய்ச்சி எடுத்து வந்த ஏதேனும் ஒரு சாரத்தைக் காசிச்சார மென்றுவது அல்லது ஒரு காலத்தில் காசி என்னும் பிரதேசத்தில் வைப்பு வைத்து வந்த ஓர்வித சாரத்தைக் காசிச்சார மென்றுவது வழங்கி வந்திருக்க வேண்டும்.

பிடாலவணம்
(Bida - Lavanam)

நாற்பத்தைந்து பலம் சோற்றுப்புடன் ஒரு பலம் நெல்லிக்காய் வற்றல் சூரணம் கூட்டி நன்றாய்க் கலந்து நான்கு பங்காகச் செய்து வைத்துக் கொள்க. அப்பால் வாய்அகன்ற ஒரு மட்கலத்தில் ஒரு பாகத்தைப் போட்டு அடுப்பிலேற்றிக் காடாக்கினியாக எரித்து உப்பு நெருப்பைப்போல் சிவந்த சமயம் மற்றோர் பாகத்தைப் போட்டு எரிக்கவும். இப்படியே மற்ற இரு பாகத்தையும் போட்டு எரித்து உப்பு உருகின பதத்தில் கீழிறக்கி ஆறவிட்டு மறுநாள் மட்கலத்தை உடைத்து உப்பை எடுக்கக் கருஞ்சிவப்பாக இருக்கும். இதுவே பிடாலவணம். இந்தச் சரக்கே தற்காலத்தில் எங்கும் கிடைக்கக் கூடியது. இதன் குணத்திற்குச் சமத்துவமாக வைப்பும் கூறப்பட்டுள்ளது. எங்ஙனமெனில்:—எருமை மாட்டுக் கொம்புச் சீவல் பலம்-50 தயார் செய்து வைத்துக்கொண்டு ஒரு பெரிய இரும்புக் கடாயில் 100-பலம் வெடியுப்பைப் போட்டு அடுப்பிலேற்றிச் சிறுக எரித்து உருகின சமயம் கொஞ்சங் கொஞ்சமாகக் கிராசம் கொடுக்கவும். அப்போது வெடியுப்பு எருமை மாட்டுக் கொம்புச் சீவலி லுள்ள தைலத்தை யெல்லாம் கிரகித்து எரிந்து சிட்டம்போலாகும். பிறகு இந்த உப்பையும் 15 பலம் படிகாரத்தையும் பொடித்து ஒரு பாண்டத்தில் போட்டு உப்பின் எடைக்கு நான்கு எடை சலம் விட்டுக் கரைத்து வடிகட்டி ஒரு பாண்டத்தில் விட்டு எரித்துக் குழம்பு பதத்தில் ஓலைப் பாய்களில் வில்லை வில்லையாக விட்டு ரவி முகத்தில் வைக்க உப்பு ஆகும். இது கறுப்போடு சிவந்த நிறமாக இருக்கும். (போகர்)

அட்டுப்பு
(Attuppu)

உளுத்த சுவர்மண்ணைச் சலம்விட்டுக் கரைத்து வெடியுப்பிற் காகக் காய்ச்சித் தட்டுகளில் விட்டு வைத்த பின்பு கம்பி கம்பிகளாக வெடியுப்பு உறைந்து விடும். அதில் சலம் தங்கும். இதைச் சிறிது காய்ச்சி வைக்கக் கம்பி கம்பிகளாக உப்பு ஏற்படாவிடின் அந்தச் சலத்தைப் பின்னும் சிறிது சலம் விட்டுக் கலக்கி வடிகட்டி ஓர் மட் பாண்டத்தி லிட்டுக் காய்ச்சி எடுக்கக் கட்டியாக இறுகி விடும். இதுவே அட்டுப்பு, எங்கும் கிடைக்கக் கூடியது. இதுவுமன்றி

கருமணல் குதிரிலிடமாகத் தயார் செய்த 100-படி கடல் சலத்தை ஒரு பெரும் மட்பாண்டத்தில் விட்டு அதில் பூநீறு, வளையலுப்பு, வெடியுப்பு வகைக்குப் படி-3 அன்னபேதி படி-8 பொடி செய்து போட்டுக் கரைத்து நான்காவது நாள் தெளிவெடுத்துக் காய்ச்சி உறையும் பதத்தில் ஓலைப்பாய்களில் விட்டு ரவியில் வைக்க உப்பாகும். இதனை காய்ச்சுலவணம் அல்லது அட்டுப்பு என நூல்களில் கூறப்பட்டுள்ளது. (போகர்)

படிக்காரம்

(Alumen)

இத்தாலியா தேசத்தில், எரிமலைகளினடிவாரத்தில் படிக்காரச் சத்து அடங்கலாகிய கற்கள் கிடைக்கும். இவற்றைக் கொண்டு வந்து இடித்துத் தூள் செய்து ஒரு பெரிய பாண்டத்திலிட்டு சலம் விட்டுக் கரைத்து இரண்டொருநாள் சென்றபின் தெளிந்த நீரை வடித்துக் காய்ச்சிப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவியில் வைக்க உறைந்து உப்பாகக் கட்டும். இது பார்வைக்கு பழுப்பு நிறமாக இருக்கும். இது படிக்கார இனத்தில் சிறந்ததாகும். இன்னும் நேபால், பீஹார், கச்சி முதலிய தேசங்களில் உள்ள மலையடிவாரங்களில் படிக்கார சத்துள்ள கற்கள் விசேஷமாகக் கிடைக்கும். இதிலிருந்து தயார் செய்யப்பட்ட படிக்காரம் வெண்மை நிறமாக இருக்கும். இவ்விதப் படிகாரங்களை வாயிலிட்டுப் பார்க்க துவருடன் புளிப்பாக இருக்கும். இதுவுமன்றி ஹீன ரசாயன விதிப்படி வைப்பு வைத்து விசேஷமாக நமது நாட்டிற்கு வருவதுண்டு.

படிக்காரம் பெண்சாரக்கு இதற்கு ஆண்சாரக்கு வெடியுப்பு.

போகர் மதாந்தரப்படி காரசார லவணம் இருபத்தைந்தின் விபரத்தை இனிது விளக்கினேம். இந்த லவணங்களுமின்றி இன்னுஞ் சில லவணங்களை அவிழ்த பாகங்களில் கூட்டுவது வழக்கம் அவற்றின் விபரத்தை அடியிற் காண்க.

அப்பளக்காரம்

(Soda Earth - Extract)

களர்நிலத்திலிருந்து கொண்டுவந்த உழமண்ணைக் (Fullers Earth) கரைத்து இரண்டொருநாள் தெளிய விட்டுக் காய்ச்சிக் குழம்பு பதமாகத் தட்டுகளில் விட்டு ரவியில் வைக்க உறைந்து

கட்டும். அப்போது கத்திக்கொண்டு குறுக்கு நெடுக்காய்ச் சதுரமாக இருக்கும்படி கீறிக் காய்ந்த பதத்தில் பேர்த்து எடுப்பதுண்டு. இது வெண் பழுப்பு நிறமாகவும் இலேசாகவும் நெருப்பனலில் வெதுப்பி மஞ்சளிலிட சிவக்குங் காரமுடையதாகவும் இருக்கும். இதுவே தற்காலம் நமது நாட்டில் எங்குங் கிடைக்கக் கூடியது.

சில பிரதேசங்களில் சிவந்த நிறமாகவும் சாம்பல் நிறமாகவும் கிடைப்பதுண்டு. இதின் வர்ணபேதம் நிலச்சாயலை யொத்திருக்கும். சாம்பல் வர்ணமுடையது உத்தம மென்றும் சிவப்பு நிறமுடையது மத்திபமென்றும், பழுப்பு நிறமுடையது அதம மென்றும் சில அனுபவவாதிகள் கூறுகின்றனர். இந்த உழமண்ணில் சத்தியினின்று பிரிக்கப்பட்ட சிவம் அடங்கியுள்ளது இதன் பெருமையைக் காணுர். பொதுவாக அப்பளம் என்னும் தின்பண்டத்தில் உருசிக்காக சேர்க்கும் நிமித்தம் அப்பளக்காரமென்று கூறுவது பொது மக்களின் பெயராகும்.

கறியுப்பு

(Sodium Chloridum)

கடலோரங்களிலுள்ள உப்பு மண் வளப்பமுள்ள நிலத்தைச் சீர்படுத்திப் பாத்திகட்டி கடல்நீரைச் சிறு வாய்க்கால் வழியாகக் கொண்டுபோய் ஓர் இடத்தில் இருப்பாக வைத்துக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாக ரசாயன விதிப்படிப் பாய்ச்சுவதுண்டு. அப்போது சூரிய வெப்பத்தினல் பாய்ச்சிய சலம் சுண்டச் சுண்ட நீரிலுள்ள உப்பானது நிலத்தில் உறைந்து உப்பாகும். இவ்வாறு மேலும் மேலும் கடல் நீரைப் பாய்ச்சிக்கொண்டு வரும்போது உப்பின் சத்து மிகுந்து ஒழுங்கான பட்டைகள் மிகுந்து சிறு பளிங்கு கற்களாகத் தோற்றும். இதனைச் சர்க்கார் உத்திரவின்படி ரசாயனத்தில் தேர்ச்சி யடைந்த அதிகாரிகளைக்கொண்டு பரிசோதித்து ஆரோக்கியத்திற்குப் பொருத்தமான உப்பை மக்களுக்குப் பயன்படுமாறு செய்வர். பக்குவமற்ற உப்பை யாருக்கும் உபயோகப்படாமலிருக்கும்படி கடலில் கொட்டிவிடுவர். தென்னுட்டில் பயிரிடும் உப்புகளில் செய்யூர், சூளும்பேடு, மரக்காணம் முதலிய இடங்களில் பயிரிடுவது அதிகம் சிறந்தது. இதில் ரச ஊட்டம் நிறைந்திருக்கும். இத்தகைய உப்புமன்றி வேறு விதமாகக் கிடைப்பதுமுண்டு. எங்ஙனமெனில்:—

தேவையான அளவு கடல் சலத்தை பெரிய மட்பாண்டத்திலா வது செப்புப் பாண்டத்திலாவது விட்டுக் காய்ச்சிக் குழம்பு பதத் தில் தட்டுகளில் விட்டு வைக்க உப்பாக உறையும். இதனை வாதிகள் மண்ணின் சாரம் சிறிதும் பெற்றிலாமையான் சுத்தமானதென்று ஒப்புக்கொள்வர். சில கடற்கரைகளில் சமுத்திர சலமானது தனக் குத்தானே சூரிய வெப்பத்தினால் சுண்டி உப்பாவதுமுண்டு. இத் தகைய உப்புகள் சலத்தில் கரையும் சாராயத்தில் கரையாது. பயி ரிடும் உப்புகள் நிலத்தின் சாயலுக்குத் தக்கவாறு வெண்மை, பழுப்பு, அழுக்கு நிறமுடையதாக இருக்கும். இவைகள் குணத்தில் மாறுபடாது.

திராட்சை உப்பு

(potassae Tartras Acida)

நன்றாய்க் கனிந்த திராட்சைப் பழங்களிலிருந்துப் பிழிந்து எடுத்த ரசத்தைச் சுத்தமாக வடிகட்டி ஜாடிகளிலிட்டு புளிக்க வைப்பதுண்டு. இது சில நாட்களில் காடித்தன்மை யடையும். இதை வாலையிலிட்டுச் சாராயமாகக் காய்ச்சுவதற்குமுன் தெளிவா கத் திராட்சை ரசத்தை எடுப்பதுண்டு. அப்போது அதனடியில் வண்டல் மிகுந்து வெண்மை நிறமான உப்பாகப் படிந்திருக்கும். இதைத் தட்டுகளிலிட்டு ரவிமுகத்தில் வைக்க வெளுப்பாக நறநற வென்றிருக்கும். இதனை வாயிலிட்டுப் பார்க்கப் புளிப்புச் சுவை யாக இருக்கும். இது சலத்தில் எளிதில் கரையாது.

சீமை இந்துப்பு

(Magnesaei Sulphas)

ஆங்கில ரசாயன விதிப்படி சமுத்திர சலத்திலிருந்து கறி யுப்பை யெடுத்துக்கொண்டபிறகு நிற்கின்ற சலத்தைச் சுண்டக் காய்ச்சி இந்த உப்பை எடுப்பர். அல்லது காந்தச் சுண்ணும்போடு கந்தகத் திராவகம் சேர்த்து எடுப்பதும் ஒரு முறை. இந்த உப்பு ஊசிக் கம்பிகளைப்போன்று நீண்டு, வெளுத்து, உவர்ப்பும் கசப்பும் கலந்த சுவையாக இருக்கும். இது சலத்தில் கரையும். சாராயத் தில் கரையாது.

சவ்வர்ச்சல லவணம்

(Sauvarchla Lavana)

சௌராஷ்டிர தேசத்தில் இடைக்கும் ஒரு விதமான மண்ணைச் சலத்தில் கரைத்துத் தெளிவு நீரை எடுத்துக் காய்ச்சி பிங்கான்

தட்டுகளில் விட்டு ரவிமுகத்தில் உலர்த்தி உப்பாக்குவது உண்டு. இந்த உப்பை வடநாட்டிலும் ஆந்திர நாட்டிலும் வைத்தியர்கள் அதிகமாகக் கையாடுவது வழக்கம்.

உமிலிச் சாரம்

(Moomili Charam)

உமிலி என்னும் பூண்டை உலர்த்திச் சாம்பலாக்கிச் சலத்தில் கரைத்துத் தெளிவு நீரை எடுத்துக் குழம்பு பதமாகக் காய்ச்சித் தட்டுகளில் விட்டு உலர்த்த உப்பாகும். இதுவே உமிலிச்சாரம். தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த முத்துப் பட்டணம் கடற்கரையில் இந்தப் பூண்டு விசேஷமாகக் கிடைக்கும். இந்த உப்பு அவிழ்தத் திற்கும் சாயமிடுவதற்கும் பயன்படும்.

தேக சுகத்திற்கு மீறப்பட்டுணர்த்தும் வியாதிகளை நிவர்த்திக்கக்கூடிய பதார்த்தங்கள்

(Drugs According to Therapeutical and Physiological Actions)

வியதாபேதகாரி

அஞ்சனக்கல், அப்பிரகம், இரசம், இரும்பு, இரும்புசிட்டம் இலிங்கம், உருக்கு, எவச்சாரம், கந்தகம், கருவங்கம், சவ்வீரம் தாம்பரம், தாளகம், நவச்சாரம், நெல்லிக்காய் கந்தகம், பச்சைக் கருப்பூரம், மனோசிலை, வில்லரச செந்தூரம், வீமனென்னும் பச்சை கருப்பூரம், வெள்வங்கம்.

விஷநாசகாரி

தாளகம், நஞ்சு முறிச்சான்கல், வெள்ளைப் பாஷாணம்.

உக்கிர ரோக சமனகாரி

அஞ்சனக்கல், இரசம்.

இலகுமலகாரி

கந்தகம், சத்திச்சாரம்.

சங்கோஷனகாரி

அன்னபேதி, இரும்பு, இரும்புச்சிட்டம், உருக்கு, கல்நார், காடிக்காரம், காவிக்கல், சகஸ்திரவேதி, சீனக்காரம், தாம்பரம் துத்தநாகம், துத்தம், துருசு, நெல்லிக்காய் கெந்தகம். வெள்வங்கம்

உதரவாதஹரகாரி

அப்பளக்காரம், அட்டுப்பு, இரசகற்பூரம், கந்தியுப்பு, சந்திச் சாரம், சமுத்திரநீர், சவ்வர்ச்சலவணம், வளையலுப்பு.

விரணகாரி

காடிக்காரம், சவ்வீரம், துருசு, வெள்ளைப்பாஷாணம்.

பித்தகாரி

இரசகருப்பூரம், இரசம், நவச்சாரம், வெங்கலம்.

அந்தர்ஸ்நிக்தகாரி

சவுக்காரக்கட்டி, நஞ்சுமுறிச்சான்கல்.

சுவேதகாரி

அஞ்சனக்கல். கந்தகம், கம்பி உப்பு, கற்பூரம், சவ்வீரம்.

மூத்திரவர்த்தனகாரி

அப்பளக்காரம், அட்டுப்பு. உமிலிச்சாரம், எவச்சாரம், கம்பி உப்பு, சிலாசத்து, கல்நார், கல்மதம், கற்சுண்ணம், கோமூத்திர சிலாசத்து, சத்திச்சாரம், சமுத்திரநீர், சீமை இந்துப்பு, திராட்சை உப்பு, நண்டுக்கல், பூநீறு, யூதக்கல், வளையலுப்பு, வெங்காரம்.

வமனகாரி

அஞ்சனக்கல், கறிஉப்பு, கௌரிபாஷாணம், சவ்வீரம், தாம்பரம், தாளகம், துத்தம், துருசு, வெள்ளைபாஷாணம்.

ருதுவர்த்தனகாரி

அன்னபேதி, கம்பி உப்பு, கருப்பூரம், புகையூறல், வெங்காரம்.

கபஹரகாரி

கெம்பு, கௌரிபாஷாணம், தாளகம், மண்ணெண்ணெய், மனோசிலை, மாணிக்கம், வைடூரியம்.

சுரஹரகாரி

அஞ்சனக்கல், இலிங்கம், கௌரிபாஷாணம், சகஸ்திரவேதி, தாளகம், புகையூறல். மடல்துத்தம், மனோசிலை, வெள்ளைபாஷாணம்.

மலகாரி

இந்துப்பு, இரசகற்பூரம், இரசம், எவச்சாரம், கௌரி பாஷாணம், சமுத்திரநீர் சவ்வீரம், சீமை இந்துப்பு, திராட்சை உப்பு.

பிரசவகாரி

வெங்காரம்.

ஷோனகாரி

உழமண், காடிக்காரம். (வெளி)

சீதளகாரி

கம்பி உப்பு, சிமை இந்துப்பு, திராட்சை உப்பு, பச்சை கருப்பூரம், வீமனென்னும் பச்சைக்கருப்பூரம், வெங்காரம்.

சமனகாரி

அட்டுப்பு, கடல்நுரை, சிலாசத்து, கல்நார், கல்மதம், கற்சுண்ணம், காடிக்காரம், கோமூத்திர சிலாசத்து, சீலைச்சாம்பல், தாம்பரம், நாமக்கட்டி, பச்சைகருப்பூரம், பித்தளை, வீமனென்னும் பச்சைகருப்பூரம், வெள்ளி.

உற்சாககாரி

இராஜவர்த்திக்கல், கற்பூரம், காந்தம், கோமேதகம், சுவச்சாரம், மண்ணெண்ணெய், வில்லோச செந்தூரம்.

ரத்தஸ்தம்பனகாரி

காவிக்கல், கோபிச்சந்தனம், சீலைச்சாம்பல், சீனக்காரம், துத்தநாகம்.

பலகாரி

அப்பிரகம், அன்னபேதி, இரும்பு, இரும்புசிட்டம், உருக்கு, சிலாசத்து, காடிக்காரம், காந்தம், கெம்பு, கோமேதகம், தங்கம், துத்தம், துருசு, நீலக்கல், பித்தளை, புட்பராகம், வெங்கலம், வெள்ளி, வெள்வங்கம்.

அங்காகர்ஷ்ணநாசினி

கருப்பூரம், காடிக்காரம், தாம்பரம், துத்தம், மண்ணெண்ணெய், வெள்ளி.

கிருமிநாசினி

அன்னபேதி, கல்லுப்பு, கறியுப்பு, மண்ணெண்ணெய், வாணகந்தகம்.

ஆம்லநாசினி

அப்பளக்காரம், எலுச்சாரம், கடல்நுரை, பிடாலவுப்பு, பூரீது.

சோபாநாசினி

கல்லுப்பு, கறியுப்பு, கோபிச்சந்தனம், காமக்கட்டி.

பூதிகந்தநாசினி

அடுப்புக்கரி, கந்தகம், சவுக்காரகட்டி.

வேதனுசாந்தினி

கருப்பூரம், மண்ணெண்ணெய்.

முறைவியாதிரோதி

கந்தகம், வெள்ளைப்பாஷாணம்.

தாதுக்ஷிணரோதி

அடுப்புகரி, கம்பி உப்பு, கல்லுப்பு, கறிஉப்பு, கற்சுண்ணம், கருவங்கம், கோபிச்சந்தனம், சவ்வீரம், (சிறு அளவில்) தாம்பரம், மிருதாருசிங்கி, வாணகந்தகம்.

காமவிர்த்தினி

அப்பிரகம், தங்கம், பித்தளை, புட்பராகம், மரகதம், வெள்ளை பாஷாணம், வெள்ளி.

நாசிநீர்வர்த்தனி

இந்துப்பு.

ஜுட்ராக்கினிவர்த்தனி

இந்துப்பு, இரும்பு, இரும்புசிட்டம், உமிலிசாரம், எவச்சாரம், காந்தம், கருவங்கம், சத்திச்சாரம், பிடாலவணம், வைடூரியம்.

விஷமித்த பதார்த்தங்களுக்கு முறிவு

இரசகெந்தி பாஷாண லோக சம்பந்தமான அவிழ்தங்களைப் பிணியாளர்கட்குக் கொடுத்து வருஞ்சமயம் மருந்தின் அபக்குவத் தினாலாவது அல்லது மிஞ்சிய அளவினாலாவது சில சந்தர்ப்பம் துற் குணத்தைக் காட்டுவதுண்டு. அச்சமயம் கால தாமதமின்றி மருந்தை முறித்துவிட வேண்டும். அவற்றுள் சிலவற்றை அடியிற் காண்க.

வீரம்:—இதற்கு முறிவு, 12-கோழி முட்டையின் வெண் கருவை நீரில் கலக்கி வாந்தி நிற்கும் வரையில் கொஞ்சங் கொஞ்ச மாக உள்ளுக்குக் கொடுத்துப் பின்னல் முள்ளங்கிக் கிழங்குச் சாறு கொடுக்கக் குணமாகும்.

பூரம்:—இதற்கு முறிவு, காய்ச்சுக் கட்டியைப் பழச்சாற்றி லரைத்து மோரில் கலந்து பேதி நிற்கும் வரையில் கொடுத்துப் பின்னல் அவுரி வேர்ப்பட்டையை அரைத்துச் சுண்டைக்காய் பிரமாணம் வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும்.

இரசம்:—இதற்கு முறிவு, சங்கனீலை, பாகலிலை, சிறுகுறிஞ்சானிலை, வெற்றிலை, பிரண்டை இவைகளின் கியாழத்தைத் தினம் இரு வேளை மூன்று நாள் கொடுக்கவும். அறுகுமூலம் பலம்-½, மிளகு-25 இவற்றை இடித்துக் குடிநீராக்கி வடித்து ½-பலம் பசுவின் வெண்ணெய் கூட்டிக் கொடுக்கவும். கத்திரிக்காய்க்குள் நீராரைக் கீரையை அரைத்து வைத்துச் சிறிது வெதுப்பி இரண்டு தினம் கொடுக்கவும்.

கந்தகம்:—இதற்கு முறிவு, பசுவின் நெய் தினம் 2-வேளை கொடுக்கவும்.

தாளகம், மனோசிலை:—இவற்றிற்கு முறிவு, சுண்ணும்புத் தெளிவு நீர், ஆவாரம்பூ, சீரகம், காசினி, விதை இவற்றின் கியாழங்களைக் கொடுக்கவும்.

இருவங்கபற்பம்:—இவற்றிற்கு முறிவு, கரும்புச்சாறு அல்லது நீர்பூலாச்சாறு உள்ளுக்குக் கொடுக்கவும்.

வெங்காரம்:—இதற்கு முறிவு, மிளகு, சுக்கு, சோகிவிதை, பச்சைப்பயறு இவற்றின் கியாழங்களைக் கொடுக்கவும்; பின்னல் பசுவின் நெய் இரண்டொரு வேளை கொடுக்கவும்.

வெள்ளைப் பாஷாணம்:—இதற்கு முறிவு, ஆட்டுத்தோலைச்சுட்டெடுத்த சாம்பலை சலத்தில் கலக்கி வடிகட்டிக் கொடுக்கவும். பாகல் இலை, அவுரியிலை, மிளகு இவைகளைக் கியாழமிட்டுக் கொடுக்கவும்.

கருவங்கச் செந்தூரம்:—இதற்கு முறிவு, இஞ்சியையும் உப்பையும் அம்மியிலிட்டுச் சிதைத்து வாயிலடைக்கிக்கொண்டு உமிழ்நீரை விழுங்கிக்கொண்டு வருக. இதனால் வங்க தோஷமாகிய கை கால் மூடக்கு தொண்டைக்கட்டு குணமாகும்.

செம்பு:—இதற்கு முறிவு, எலுமிச்சம் பழச்சாறு, புளித்த மோர்.

துருசு:—இதற்கு முறிவு, எலுமிச்சம் பழச்சாறு, இஞ்சிசாறு, புளித்த மோர், தேன், சர்க்கரை.

வயரம்:—இதற்கு முறிவு, பசுவின் பாலில் நெய் கலந்து அதிக அளவில் சாப்பிட்டு கைவிரலைக் கொடுத்து வாந்தி யெடுக்கச்செய்தல்.

சுண்ணும்பு:—இதற்கு முறிவு, எள்ளெண்ணெய், எருமைத் தயிர், கறிமஞ்சட் குடிநீர்.

உப்பு:—இதற்கு முறிவு, வெங்காயச்சாறு, தாழை விழுதுச் சாறு, சித்திரப்பாலடைச்சாறு முதலியவற்றை உள்ளுக்குக் கொடுத்தல்.

இவைகளன்றி வைத்தியத் தொழிலில் நோயின் வன்மை மென்மைக்கேற்றவாறு ரசகெந்தி பாஷாணங்களைக் கொடுக்கும்போது சில சந்தர்ப்பம் வெப்பத்தினால் சில தோடங்கள் ஏற்படும். அதனைச் சாந்தப்படுத்தக்கூடிய சில முறைகளை அடியிற் காண்க.

இரசகெந்தி பாஷாண வீறுகளைத் தணிக்க

மூதண்டக் கியாழம்

அறுகங்கட்டை வேர் பலம்-10, மிளகு பலம்-½, அதிமதுரம் பலம்-½, கூகைநீறு பலம்-½, காய் முற்றாத மாதுளம்பூ பலம்-½, இவற்றுள் கூகைநீறு நீங்கலாக மற்றவைகளை பஞ்சுபோல் சிதைத்து, ஒரு பழகின மட்கலத்தில் போட்டு ஒரு படி சுத்த சலம் விட்டு அதில் கூகை மாவைப் போட்டுக் கலக்கி ½-படி யளவிற்குச் சுண்டக் காய்ச்சி வைத்துக்கொண்டு அப்போதைக்கப்போது சிறிது சுட வைத்து வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் சிறிது வெண்ணெய் கூட்டித் தினம் 3-வேளை உள்ளுக்குக் கொடுத்துவர நாவின் தடிப்பு பல்லீறுகளின் விரணம், வாய்நீர் சுரப்பு, அன்னதுவேஷம், தேக ஊறல் முதலியவைகள் குணமாகும்.

வேறு முறை அவுரிக் கியாழம்

அவுரிவேர் பலம்-5, சாட்டரணை வேர், மிளகு, அறுகங் கட்டை வகைக்குப் பலம்-1 இவைகளை யிடித்து ஒரு பழகின மண் சட்டியில் போட்டு 1-படி சலம் விட்டு ¼-படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3-வேளை கொடுத்து வர முன் முறையில் கூறப்பட்ட தோஷங்கள் யாவும் குணமாகும்.

வேறு முறை

அவுரிவேர், மிளகு, கத்திரிசெடி வேர், தாமரைக் கிழங்கு வகைக்குப் பலம்-1 இவைகளை நன்கு இடித்து ஒரு பழகின

பாண்டத்திலிட்டு 1-படி சுத்த சலம் விட்டு ¼-படி அளவிற்குக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1, 1½-அவுன்ஸ் வீதம் தினம் 3-வேளை கொடுத்துவர மூன் முறையில் கூறப்பட்டுள்ள தோஷங்கள் யாவும் குணமாகும்.

இரசகெந்தி பச்சைவெட்டுச் சிந்தூரங்களால் உண்டான வீறு தணிய சிகிச்சை

சுரைக் குடுக்கையைச் சுட்டு எடுத்த கரியை அரைத்துப் புளித்த மோரில் கலக்கித் தினம் இருவேளை 3 நாள் கொடுக்க வீறு தணியும்.

இரச தோஷத்தினல் பல்லீறு நாவு முதலியவை புண்பட்டு நீர்வடிந்தால் சிகிச்சை

கருவேலம்பட்டை, வெள்வேலம்பட்டை, துளசி வேர், எருக்கம் வேர் வகைக்குப் பலம்-3 இவைகளை இடித்து ஒரு பழகின மட் பாண்டத்தில் போட்டு 3-படி சுத்த சலம் விட்டு ¾-படி அளவிற்குக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு அப்போதைக்கப்போது சிறிது சூடாக்கித் தினம் ஒன்றுக்கு 4, 5-முறையாக வாய் கொப்பளித்து வரவும். இப்படி 3-நாள் செய்யத் தவறுமல் குணம் ஏற்படும்.

வேறு முறை

படிகாரத்தையாவது கத்தக்காம்பையாவது சலத்தில் கரைத்துத் தினம் ஒன்றுக்கு 3, 4-வேளை மூன்று நாள் வாய் கொப்பளிக்க நன்மை தரும். கருவேலம் பிசின், முருங்கை வேர், எருக்கம் வேர், அழிஞ்சில் வேர், சிவனர் வேம்பு இவற்றைச் சமனெடையாகக் கொண்டு இடித்துத் தூள்செய்து வைத்துக்கொண்டுவேண்டும்போது சிறிது தூளை கரி நெருப்பனலில் தூவி அதிலிருந்து வெளிக்காணும் புகையை வாயில் படும்படியாகப் பிடித்துவரக் குணமாகும்.

இரச முறிவுக்குச் சூரணம்

திரிகடுகு, திரிபலை, சித்திரமூலம், வேப்பம்பட்டை, வாய்விளங்கம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, சணப்பவிதை, ஏலம் வகைக்கும் பலம்-½, சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் பலம்-3 இவைகளை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5 முதல் 10 குன்றியெடை சலத்தில் போட்டுக் கலக்கித் தினம் 3-வேளை 3-நாள் கொடுக்கக் குணமாகும்.

கருவங்கம் இரசம் முதலியவற்றின் பற்ப செந்தூரங்களை உட்கொள்ளும்போது அபத்தியம் நேரிட்டு அதனால் கை கால் முடக்கு முதலியவைகளுண்டாயின் சிகிச்சை.

அஸ்தி பற்பம்

கோழி எலும்பைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு குடுவையில் போட்டு ஓடு மூடி மண்சீலை செய்து 30, 40-வறட்டியில் புடமிட்டெடுக்கப் பற்பமாக இருக்கும். இதில் வேளைக்கு 3-முதல் 7-குன்றி எடை தினம் 3-வேளை இரண்டு நாள் சர்க்கரை தேன் முதலியவற்றில் அனுபாணம் செய்து கொடுக்க குணமாகும்.

நா ல்

அஞ்சனக்கல்

(Antimony Sulphite)

கண்ணி னழலையுடன் காணவொணு கூச்சம்போம்
புண்ணும் புரையும்போம் பொய்யல்ல—மண்ணுலகில்
அஞ்சனக் கல்லதனு லாம்பயனு ஈதென்று
பிஞ்சு மதிநுதலாய் பேசு.

குணம்:—(இதன் - போநள்) அஞ்சனக்கல்லை முறைப்படி உபயோகப்படுத்தக் கண்சிவப்பு, கண்கூச்சம், கண்களில் உண்டாகும் விரணம், கண்மறைப்பு முதலியவைகள் நீங்கும் என்க.

இதுவுமது

சந்நிசுரம் மேகச் சயந்தாகம் நேத்திரநோய்
வன்னிரச வேகம் மறைவதன்றி—மன்னுடலம்
விஞ்சு குளிர்ச்சியோடு வீறழகு காந்தியுமாம்
அஞ்சனக் கல்லுக் கறி.

(இ - ள்) அஞ்சனக்கல்லால் சந்நி, சுரம், மேகம், கூயம், தாகம், நேத்திரநோய், ரசவேகம் இவைகள் நீங்குவதுடன் தேகக் குளிர்ச்சி, தேஜசு இவைகள் மிகும்.

செய்கை:—பற்ப செந்தூரங்களுக்கு வியதாபேதகாரி, சுவேத காரி, சுரஹரகாரி, வமனகாரி, உக்கிரரோக சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை மிருதுவாக அரைக்கக் கறுப்பு நிறமாக இருக்கும். விசேஷமாக ஸ்திரீகள் கண்களுக்கு மைதீட்டிக் கொள்வது வழக்கம். இதனால் அவர்களுக்கு நல்ல வனப்பை யுண்டாக்கும். இதுவுமன்றிச் சூரியனுடைய வெப்பத்தைத் தணித்துக் கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். இந்தத் துகளை இரத்தம் சொரியும்படியான புண்களின்மீது தூவிவர விரண மாறும். இதனைக்கொண்டு செய்யும் சில மருந்துகளாவன;—

அஞ்சனக்கல் பற்பம்

வேப்பமரத்தைக் குடைந்து அதனுள் 1-பலம் அஞ்சனக் கல்லைச் செருகி, குடைந்தெடுத்தத் துகளைக்கொண்டே யடைத்து சாணம் பூசி 21-நாள் விட்டுவைத்துப் பிறகு அக்கல்லை எடுத்துக் கல்வத்திலிட்டு, தானுகப் பயிரானதும் நாட்சென்று கட்டை பாய்ந்ததுமான சிறுகீரைச் சாற்றால் நான்கு சாமம் அரைத்து ஓரே வில்லையாகத் தட்டிக் காயவைத்து வெடி மூலிகைச் சமூலத்தை அரைத்துக் கவசமிட்டு உருண்டையாகச் செய்து அதன்மேல் மண்சீலை ஏழுசெய்து ஈரம் வற்றச் சிறிது சாம்பலில் புரட்டி 50, 60-வறட்டில் புடமிடப் பற்பமாகும். இதைச் செய்யும்போது ஒரு கழஞ்சு * முப்புச்சுண்ணம் கூட்ட அதிக நன்மையைத் தரும் நிறமும் நன்றாயிருக்கும். இந்தப் பற்பத்தில் வேளைக்கு 2, 3-அரிசி யெடை தினம் 2-வேளை தகுந்த அனுபானங்களில் கொடுத்துவரச் சுரம் நாட்பட்ட மேக ரோகங்கள் க்ஷயம் முதலியவைகள் குணமாகும்.

நீலாஞ்சனக்கல் மை

ஒரு தோலா எடை கறுப்பு நிறமுள்ள அஞ்சனக் கல்லை மிருது வாகத் தூளாக்கி ஒரு அகலில் பாதி பரப்பி அதன்மீது சிங்கம் போட்ட ஒரு தாம்பிரக் காலணுவை நன்றாய்ச் சுத்தப்படுத்தி வைத்து அதன்மேல் மிகுதியுள்ள மற்றத் தூளையும் போட்டு மேல் அகல் மூடிச் சீலைசெய்து 20-வறட்டியில் புடமிடவும் புடம் நன்றாய் ஆறினதும் மேல் அகலை நீக்கிப் பார்க்க முன் வைத்த தாம்பிரக் காலணு கனத்து வெட்டையாக இருக்கும். இதைக் கல்வத்தில் போட்டுச் சிதறாமல் இடித்துத் தூள்செய்து பின்னால் 2, 3-சாமம் கையோயாமல் அரைக்கக் கறுப்பு வருணம் வரும். அத்தருணம் சக்திக்கேற்றவாறு அரைக்கால் அல்லது வீசம் ரூபாய் எடை கெட்டி முத்தும் வீசம் ரூபாய் எடை உயர்ந்த பச்சைக் கற்பூரமும் கூட்டி ஒரு சாமம் அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது காரீயக் கம்பியைப் புட்டிக்குள் செருகி எடுத்துக் கண்களில் தீட்டிவரக் கண்களில் உண்டான பலரோகங்கள் நீங்கிக் கூர்மையான பார்வையும் நல்ல வனப்பும் உண்டாகும்.

---

*கண்ணுசாமிகள் பரம்பரை வைத்தியம் ஏண்ணும் தூலில் காண்க.

அப்பளக்காரம்
(Soda Earth)

குடல்வாதஞ் சூலை கோடிதான வாத
மடல்புரியு மைய மறுக்கு—நெடுவயிற்றி
னுப்பிசத்தி னேடே யுயர்குன்ம நோயகற்று
மப்பளக் கார மது.

குணம்:—(இ-ள்.) அப்பளக்காரம் வாதக்குடல் விருத்தி, கீல்வீக்கம், மகாவாதம், கபாதிக்கம், வயிற்றுப்பிசம், வாதகுன்மம் இவற்றை நீக்கும்.

செய்கை:—ஆமலநாசினி, மூத்திரவர்த்தனகாரி, உதரவாத ஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை நன்றாய் அரைத்து வைத்துக் கொண்டு வேளைக்கு ¼, ½-வீராகனெடை 2, 3-அவுன்ஸ் சலத்தில் கலக்கித் தினம் இருவேளை 3-நாள் கொடுக்க மேற்கூறப்பட்ட ரோகங்கள் குணமாகும். பெண்களுக்கு மாதவிலக்கம் வருங் காலத்தி லுண்டான வயிற்று வலிக்கு ஒரு எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக அரிந்து அதிலொன்றை எடுத்து விதைகளைப் போக்கி அரியப்பட்ட பாகத்தை அப்பளக்காரப் பொடியில் கொள்ளும் வரையில் அழுத்தி எடுத்து நன்றாய் மென்று விழுங்கச் செய்க. இப்படி மாத விலக்கம் கண்ட தினம் முதல் 3-நாள் வரையில் காலை நேரத்தில் கொடுத்துவரச் சூதகவாயுவினாலுண்டான வயிற்றுவலி நீங்கும். ஆயினும் இச் சிகிச்சையை மும்முறை வீட்டு விலக்கம் வரும்போதெல்லாம் முன்போல் கொடுத்துவரச் சூதக வாயுவினால் ஏற்பட்ட வயிற்றுவலி நீங்குவதுடன் புத்திரசந்தானப் பெறும் பேற்றை அடைவர்.

இந்த அப்பளக்காரத்தின் விபரத்தை இந்நூலில் வரையப்பட்டுள்ள பொதுப்பாயிரத்தில் காரகார இலவணம் இருபத்தைந்து என்னும் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

அடுப்புக்கரி
(Carbo Ligni - Wood Charcoal)

நாற்றமுறு மேப்பமொடு நண்ணுகின்ற புண்கரப்பான்
தோற்றமுறுங் கட்டி தொலைந்துபோம்—ஆற்றவே
மந்தமதி சாரம் மலநாற்றம் விட்டகலும்
கந்தமலர்க் கூந்தலாய் காண்.

குணம்:—(இ - ள்) அடுப்புக்கரியிஞல் தற்வாசனேயுடைய ஏப்பம், புண், சிரங்கு, கட்டி, அஜீர்ணபேதி இவைகள் போம் என்க.

செய்கை:—தாது கூனிரோதி, பூதிகந்த நாசினி.

உபயோகிக்கும் முறை:—இதை நன்முய்த் தூள் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1, 1½-விராகனெடை தேனில் கொடுக்க அதிசாரம், பேதி, விஷபேதி, துற்நாற்றத்தோடு வருகின்ற ஏப்பம், அபானவாயு முதலியவைகள் குணமாகும். இதனுடன் காடிக்காரச் சுந்தூரம் ரோகத்திற்கேற்றவாறு சிறு அளவாகக் கூட்டிக் கிராணி பேதி முதலியவற்றிற்குக் கொடுப்பதுமுண்டு. இதன் தூளைச் சீழ் கொண்ட புண், சிரங்குகளின்மேல் தூவிப் பூவரசம் பழுப்பு இலேயை வைத்துக் சட்ட விரைவில் ஆறும். அல்லது இதைத் தேங் காய் எண்ணெய் விட்டு நெகிழ அரைத்துக் குழம்பு பதத்தில் சிழ் கொண்ட புண்களுக்கு மேற்றடவக் குணமாகும். இதை அரிசி மாவுடன் சேர்த்து அரைத்துக் களிபோல் கிளரிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்ட விரைவில் உடைத்துக்கொள்ளும். பல்லீற்றிலுண் டான விரணங்களுக்கும் சொத்தைப் பல்லால் வலிகண்டவர்களுக் கும் இந்தக் கரித்தூளுடன் கொட்டைப் பாக்குத்தூள் கூட்டித் தந்த சுத்தி செய்துவர அதிக நன்மையைத் தரும்.

அட்டுப்பு

(Attuppu)

பித்தங் குடிவிலகும் பேராத சூலையறுஞ்
சர்த்தி யருசியிவை சாராவா—மோத்தகச்சிற்
கட்டுப் படாக்கோங்கைக் காரிகையே சங்கையற
வட்டுப்பின் பேரை யறை.

குணம்:—(இ - ள்.) அட்டுப்பிஞல் பயித்தியம், குத்தல் (சூலை) வாந்தி, அரோசகம் முதலியவைகள் போம் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சமனகாரி, உதரவாதஹர காரி.

உபயோகிக்கும் முறை:—இந்த உப்பைத் தனியாக நோய்களுக் குக் கொடுப்பது கிடையாது. சாதாரணமாகச் சோற்றுப்பைவிட இதற்குக் குணம் அதிகமுண்டு. இதனைச் சந்தர்ப்பத்திற் கேற்ற

வாறு குன்மரோகத்திற்குப் பரிகாரமாகச் செய்யக் கூடிய திராவகம் இலவண பற்பம் லேகியம் முதலியவைகளில் கூட்டுவது வழக்கம். இதனால் வயிற்றிலுண்டான பல கஷ்டங்கள் நீங்கும். இந்தப் உப்பின் விபரத்தைப் பொதுப்பாயிரத்தில் காரசார இலவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

அப்பிரகம்

(Mica)

அப்பிரக மென்றறைந்தா லண்ட மகோதரழ
மேப்பிரமி யங்களுழன் னீரிழிவும்—வெப்பூரற்
பேதழம்போ காமேகப் பித்தழங்கண் ணோயும்பல்
வாதழம்போந் தாதுவுமா மால்

குணம்:—(இ - ள்) அப்பிரகத்தினால். குடலண்டம், பெரும் வயிறு, பிரமியம், அதிமூத்திரம், சுரம், நமைகள், மேக பயித்தியம், கண்ணோவு, பாதா கோபக முதலிய வாத ரோகங்கள் ஒழியும். வீரியவிருத்தி யுண்டாம் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி, வியதா பேதகாரி.

விபரம்:—இது பலகை பலகையாகவும், கட்டி கட்டியாகவும் பளபளப்போடு மலைகளிலும் அதை யடுத்த நில் பாகங்களிலுள்ள சுரங்கங்களிலும் கிடைக்கும். இது மஞ்சள் நிறமாகவும், கறுப்பு நிறமாகவும், வெண்ணிறமாகவும் இருக்கும். இவற்றை முறையே சொர்ண அப்பிரகம், கிருஷ்ண அப்பிரகம், வெள்ளை யப்பிரகம் எனக் கூறுவர். இத்தகைய அப்பிரகங்கள் இந்தியாவில் நெல்லூர், அஜ்ஜாரிபாக், இராஜபுதனம், இந்துஸ்தான் முதலிய பிரதேசங்களில் கிடைக்கும். இவைகள் யாவும் அவிழ்த்த பாகங்களில் அதிக நன்மையைத் தரும். இவைகளைப் பற்பமாகவாவது அல்லது செந்தூரமாகவாவது செய்ய உத்தேசித்த அளவில் அரைப்புக் காலத்தில் எளிதில் தூளுக்கு மாறும்படியாகச் சுத்தி செய்து கொள்வது அவசியமாகும். இதையே வயித்தியத் துறையில் நவநீத மென்று கூறுவர். அவற்றுள் சில அனுபவ முறைகளாவன.

கிருஷ்ண அப்பிரக நவநீதம்

ஆவின் நீரும், வெள்ளாட்டின் நீரும் ஒருமிக்கக் கலந்து வைத்துக்கொண்டு அதில் கிருஷ்ண அப்பிரகக் கட்டியைக் கொல்லுலையில்

பழுக்கக் காய்ச்சிக் காய்ச்சிப் பலமுறை தோய்த்துவர நொறுங்கித் தூளாகும். இதை நன்றாய் இடித்துச் சமபாகம் நெல் கூட்டி வல வல வென்ற கம்பளியிலாவது அல்லது கோணியிலாவது வைத்து முடிச்சுக் கட்டிக் காடியில் ஊறவைத்துப் பிசைந்து பிசைந்து நன்றாய் அப்பிரகச் சத்தெல்லாம் வெளியாகும்படி செய்து ஓர் இரவு அசையாமல் வைத்திருந்து மறுநாள் தெளிந்த காடியை வடித்துவிட அடியில் வெண்ணெய்போல் அப்பிரகம் படிந்திருக்கும். மீண்டும் சலம் விட்டுக் கையினால் பிசைந்து பிசைந்து சலத்தைத் தெளிய விட்டு வடித்துவிடவும். இப்படி ஏழு முறை சுத்தப்படுத்தியதே உயர்தரமான நவநீதமாகும்.

வேறு முறை

கிருஷ்ண அப்பிரகத்தைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி அவ் வெடைக்குப் படிக்காரத்தைத் தூள் செய்து பிசரி அரைபாகத்தில் அடங்கக் கூடிய ஓர் குடுவையில் போட்டு வாய்மூடியிட்டு மண்சீலை செய்து குடுவை சிவக்கும்படியான பெரும்புட மிட்டெடுக்கவும். புடம் ஆறியபின் குடுவையிலுள்ள சரக்கை யெல்லாம் ஓர் அகன்ற கோப்பையில் போட்டுத் தண்ணீர் விட்டுப் பிசைந்து தெளியவிட்டுத் தண்ணீரை வடித்து விடவும். இப்படி ஏழுமுறை செய்து எடுக்கப் படிக்காரத்திலுள்ள துவர்ப்பு நீங்கி அடியில் மஞ்சள் நிறமான நவநீதம் படிந்திருக்கும். இதுவும் அவிழ்த்த பாகங்களில் கூட்டு வதற்கு அதிகம் சிறந்தது.

வெள்ளை மஞ்சள் அப்பிரக நவநீதம்:—இத்தகைய அப்பிரகங் களைக் கல்லுலியில் வைத்துப் பழுக்கக் காய்ச்சிக் காய்ச்சிப் பசுவின் பாலில் தோய்த்து ஆறவிட்டு அலம்பி இதழ் இதழாகப் பிரித்து, ஒரு எடைக்கு எட்டு எடை சரக்கொன்றைப் பூவுடன் பிசறி ஒரு மட்கடத்தில் போட்டடைத்து வாய்மூடி மண்சீலை செய்து கடஞ் சிவக்கப் பெரும் புடமிட்டு ஆறவிட்டுக் கடத்தி லுள்ள சரக்கை ஒரு அகன்ற கோப்பையில் கொட்டி சலம் விட்டுப் பிசைந்து பிசைந்து சலத்தைத் தெளியவிட்டு வடித்துவிடுக இபபடி ஏழுமுறை செய்து எடுக்க உயர்தரமான நவநீதமாகும்.

உபயோகிக்கும் முறை:—இங்ஙனம் முடித்த நவநீதங்களை உள்ளுக்குக் கொடுப்பது கிடையாது. இவற்றைச் செந்தூரமாக வாவது பற்பமாகவாவது பல புடங்கள் போட்டு எடுத்து உபயோகப் படுத்துவதுண்டு. அவற்றுள் சில அனுபவ முறைகளாவன:—

அப்பிரகச் செந்தூரம்

ஐந்து பலம் அப்பிரக நவநீதத்தைக் கல்வத்திலிட்டு இலேசடுவே சிவப்புக் கோடு விழுந்திருக்கும் நறுந்தாளிக் கீரையைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு அரைக்கவும். இப்படி 2-சாமம் அரைத்து இலேசான வில்லைகளாகத் தட்டிக் காயவைத்து ஓர் மண்ணோட்டில் பரப்பி மேல் ஓடுமூடிச் சீலைசெய்து 50, 60-வறட்டியில் புடமிடவும். இப்படி ஒவ்வொரு முறையும் வெந்துள்ள அப்பிரகத்துடன் தாளிக் கீரையைப் போட்டு 2-சாமம் அரைத்து இலேசான வில்லைகளாகத் தட்டிக் காயவைத்து முன்போல் ஓட்டிலடக்கிச் சீலைசெய்து புட மிடவும். இப்படி 10-புடம் போட்டெடுத்து, மாம்பட்டை நாவல் பட்டை ஓதியம்பட்டை இவைகளின் சாற்றிலாயினும் கியாழத்தினு லாயினும் தனித்தனி நான்கு சாமம் அரைத்து ஒவ்வொரு புடம் முன்போல் போட்டெடுக்க உயர்தரமான செந்தூரமாகும். இதனை வேளைக்குக் குன்றி எடை நெய் அல்லது மதுமேகத்திற் குரித்தான லேகியம் முதலியவைகளில் சேர்த்துத் தினம் இருவேளை கொடுத்து வரின் மேகத்தினுல் உண்டான நீர் வியாதிகளைக் குணப்படுத்தும். இன்னும் நீரிலுள்ள இனிப்பையும் அதனுலுண்டான இராஜப் பிளவையையும் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். அத்தருணம் தேகஸ்திதிக்குத் தக்கவாறு ஆகாரத்தைக் கொடுத்து வருதல் வேண்டும்.

வேறு முறை

ஐந்து பலம் அப்பிரக நவநீதத்தைக் கல்வத்திலிட்டுச் சகதேவி (நெய்ச்சட்டிக்கீரைச்) சாற்றில் 4-சாமம் அரைத்து அரையணு அகலமும் கனமும் உள்ள வில்லைகளாகச் செய்துலர்த்தி ஒன்றன்மீ தொன்று படாமல் அகலில் பரப்பி மேல் அகல்மூடி ஏழு மண்சீலை செய்து நன்றாய் ரவியில் உலர்த்தி 50, 60-வறட்டியில் புடமிடவும். இவ்வாறு 15-புடம் போடத் தருக்கற்ற செந்தூரமாகும். இதில் வேளைக்கு ஒரு குன்றி எடை தினம் இருவேளை தகுந்த அனுபானங் களில் சேர்த்துக்கொடுத்துவர மதுமேகமும் அதனைப்பலப்படுத்தும் தாகம், நீர்மிகுதி, அழலை, பலஹீனம், தாதுநட்டம் முதலியவைகளும் குணமாகும். வியாதி நீரும் வரையில் இனிப்பு பண்டங்கள் மிகுதி யாகச் சேர்க்காமலும் போகத்திலீடுபடாமலு மிருந்து கத்திரிபிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, துவரம்பருப்பு, நெய், சீரகம், வெங்காயம், வெள்ளாட்டிறைச்சி, காடை இறைச்சி,

கவுதாரி இறைச்சி முதலியவற்றைச் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். இம் முறையைப்போலவே கொத்துமல்லி இலைச்சாற்றில் 15-புட மிட்டு உபயோகப்படுத்துவதுண்டு. இதுவும் அனுபவத்தில் அதிகம் சிறந்தது.

அப்பிரக பற்பம்

ஐந்து பலம் அப்பிரக நவநீதத்தைக் கல்வத்திலிட்டுக் குமிழம் பட்டைச் சாற்றினால் நான்கு சாமமரைத்துக் காலணு அளவுள்ள வில்லைகளாகத் தட்டி உலர்த்தி அகலில் அடக்கிச் சீலைசெய்து ரவியில் உலர்த்தி 50, 60-வறட்டியில் புடம் போட்டெடுத்த பின்னர் முன்போல் ஆலம்பாலில் அரைத்து இரண்டு புடமும் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து ஒரு புடமும் போட்டெடுத்துக் கொள்க. இந்த பற்பத்தில் வேளைக்கு ஒரு குன்றி எடை தினம் இருவேளை தகுந்த அனுபானங்களில் சேர்த்துக் கொடுக்க சூலம், மதுமேகம், கிரிச்சரம், பிரமேகம், மேகவாயு, கிராணி, அஸ்திசுரம், அஸ்தி வெட்டை, கைகாலெரிவு முதலிய பல பிணிகள் குணமாகும்.

அன்னபேதி

(Ferri Sulphas)

மூலவிரணஞ் சூலமந்த முட்டாமைக் கட்டி
விளையறன்ம கோதரநோய் வீட்டும்—வளமலபோற்
காட்டுமன்னந் தன்னைக் கணத்திற் சலமாக்கிக்
காட்டுமன்ன பேதியது காண்.

குணம்:—(இ-ள்.) அன்னத்தை நீராய்க் கரைக்கின்ற அன்ன பேதி, மூலைக்கட்டி, குத்தல், அஜீரணம், பாய்கின்ற ஆமைக்கட்டி, வீறிய சலோதரம் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—பலகாரி, ருதுவர்த்தனகாரி, கிருமி நாசினி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—அன்ன பேதியைக் கல்வத்திலிட்டுச் சிறிது சலம் விட்டுக் குழம்பு பதத்திற்கு அரைத்து ஆசனம் வெளி தள்ளல், கர்ப்ப விரணம், பெண்களின் உறுப்புத் தள்ளல் முதலிய வற்றிற்கு மேலுக்குப் போடச் சுருக்க மடைந்து உள்ளுக்கு இழுத் துக்கொள்ளும். சித்த வைத்தியர்கள் தனி அன்னபேதியை உள் ளுக்குக் கொடுப்பது கிடையாது. இதனைத் தனியாகவாவது அல்

லது இதரச் சரக்குகளைக் கூட்டியாவது செந்தூரம் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

அன்னபேதிச் செந்தூரம்

ஐந்து பலம் அன்னபேதியைக் கல்வத்தில் போட்டுச் சுண்ணநீர்விட்டு இரண்டு சாமம் நன்றாய் அரைத்து மெழுகு பதத்தில் வழித்து ஒரு சிறிய மட்கலயத்தில் போட்டு வாய்க்கு ஓடு மூடி ஏழு மண்சீலை செய்து ரவியில் உலர்த்தி 15, 20-வறட்டியில் புடமிடவும். புடமாறினபின் மேல் ஓட்டை நீக்கிப் பார்க்க இட்ட அன்னபேதியானது சிவந்திருக்கும். இதனை அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்குக் குன்றி எடை தேன், நெய் இவைகளில் தினம் இருவேளை கொடுக்கச் சுரம், சீதபேதி, காமாலை, சோபை, சுரக்கட்டி, பித்தப்பிணி முதலியவை நீங்கும்.

குறிப்பு:—கால்படி சுட்ட சுண்ணாம்புக் கல்லுடன் ஒரு வீசை மேல்தோல் சீவிக் கழித்த சோற்றுக் கற்றாழைச்சோற்றைப் போட்டு மூங்கில் குச்சியினால் கிளரிக்கொடுத்து அதிலிருந்து பிழிந்து வடித்த தெளிவு நீரிற்கே சுண்ணநீர் என்று கூறப்பட்டது.

வேறு முறை

ஐந்து பலம் அன்னபேதியுடன் ஒரு பலம் வெடியுப்புக் கூட்டிக் கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு 2-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் மூன் மாதிரி மட்கலயத்தில் போட்டு வாய்மூடிச் சீலைசெய்து 15, 20-வறட்டியில் புடமிடச் செந்தூரமாகும். இதுவும் முற்கூறப்பட்ட ரோகங்களை நிவர்த்தி செய்யுங் குணத்தையுடையதே யாயினும், இதனிடத்தில் ஒரு விசேஷமான குண மேற்படும். அதாவது இரத்தக் குறைவால் சரீரத்தில் ஏறியுள்ள நீரைச் சிறுநீர் மூலமாக வெளிப்படுத்தும் வீக்கம் வற்றும்.

வேறு முறை

அன்னபேதி பலம்-2, வெடியுப்பு பலம்-2, வெள்ளிக் காடிக் காரம் விராகனெடை-2 இவற்றைக் கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் பனை ஓலையால் வழித்து ஒரு சிறு மட்கலயத்தில் போட்டு வாய்க்கு மண்ணோடு மூடி 2, 3-சீலை செய்து 15, 20-வறட்டியில் புடமிடவும். இது நன்றாய் ஆறினபின் பார்க்கக் கலயத்திலிட்ட அன்னபேதி

சிவந்திருக்கும். அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு ¼, 1-குன்றியெடை தினம் இருவேளை தேனில் கொடுக்கச் சிறுநீர் தாராளமாக இறங்கும். வீக்கம் வாடும். இந்தச் செந்தூரம் பாண்டு, மகோதரம் முதலிய ரோகங்களில் அதிக நன்மையைத் தரும். சுரக்கட்டியினால் தேகம் வெளுத்து அடிவயிறு பெருத்த சந்தர்ப்பத்தில் சில தினம் கொடுக்க ஈரல்களின் வீக்கம் வாடி, வயிற்றின் சுரப்பு அடங்கிக் குணமாகும். சாதாரணமாகக் கடைகளில் விற்கப்படும் சோடா வாட்டரிலாவது அது கிடைக்கப் பெறுத காலத்தில் சீரகக் கியாழத்திலாவது ஒரு குன்றி எடை போட்டுக் கொடுக்க வயிற்றுவலி மார்புவலி முதலியவைகள் நீங்கும். இன்னும் இந்தச் செந்தூரம் எவ்வித பேதிகளையும் கட்டும்.

இந்துப்பு

(Sodium Chloride Impura)

**அட்டகுன்ம மந்த மசிர்க்கரச்சூர் சீதபித்தந்
துட்டவைய நாடிப்புண் டோடங்கள்—கெட்டமலக்
கட்டுவிட விந்துப்பைக் காமியநோய் வன்கரப்பன்
விட்டுவிட விந்துப்பை விள்.**

குணம்:—(இ - ள்) இந்துப்பினால் எண்வித குன்மம் அலசம், அசிர்க்கரம், கப பித்தம், கபாதிக்கம், நரம்புக் கிரந்தி, திரிதோஷம், மலபந்தம், விஷம சுக்கிலம், கரப்பான் நீங்கு மென்க.

இதுவுமது

**சென்னிகண்ணு பற்றூர் செவிகளகண் டம்பகநோய்
சந்நியா சங்காசந் தாகமிரைப்—புன்னீரத்த
மூலஞ் சிலந்திநளி முடிகநஞ் சூதைவலி
சூலஞ் சிதையுமிந்தாற் சோல்.**

(இ - ள்) இந்துப்பு தலை, விழி, நாவு, தந்தமூலம், காது, கழுத்து, கண்டம், யோனி முதலிய விடங்களில் காணுகின்ற நோய்களையும் சந்நியாசம், நேத்திரகாசம், தாகசுரம், சுவாசம், ரத்தமூலம், சிலந்தி, தேள், எலி இவற்றின் விஷங்களையும், வாதக்கடுப்பு குத்தல், முதலிய ரோகங்களையும் நீக்கும் என்க.

செய்கை:—மலகாரி, ஜடராக்கினிவர்த்தினி, நாசிநீர்விர்த்தினி

உபயோகிக்கும் முறை:—இந்துப்பைப் பொடிசெய்து 10, 15-குன்றியெடை சலத்தில் கலக்கிக் கொடுக்கச் சிறுநீரை அதிகப் படுத்தும். 1, 2-வராகனெடை முன்போல் கொடுக்க ஒரு முறை மலம் இளகலாகப் போகும்; 1, 1½-தோலா எடை கொடுக்க 4, 5-முறை நன்றாய் பேதியாகும். இதனால் அக்கினிமந்தம், வயிற்று வலி, சுரம், தாபனம், நீர்க்கோவை முதலியவைகள் நீங்கும். இதனை விரேசனத்திற்குத் தனியாகக் கொடுப்பதைவிட இதரச் சரக்குகளைக் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

பேதிக் கியாழம்

நிலாவாரை, சோம்பு, சுக்கு, தனியா வகைக்கு ½-தோலா வீதம் ஒன்றிரண்டாக இடித்துக் கால்படி சலத்தில் போட்டு ½-படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி அதனில் தேக திடத்திற் கேற்றவாறு ½, 1-தோலா எடையுள்ள இந்துப்பைப் போட்டுக் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும். அல்லது நிலாவாரையின் தலையங்கத்தின் கீழ் வரையப்பட்டுள்ள கியாழத்திலேனும் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும். இதனால் 4, 5-முறை பேதியாகும். பல பிணிகள் நீங்கும்.

நவ உப்புத் திராவகம்

இந்துப்பு, சோற்றுப்பு, நவச்சாரம், வெங்காரம் வகைக்குப் பலம்-4, படிக்காரம் பலம்-6, வெடியுப்பு பலம்-10, அன்னபேதி பலம்-½, பூரம், வீரம் வகைக்குப் பலம் வீசம், இவைகளை நன்றாய் இடித்துத் தூளாக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு அதற்கெனச் செய்து வைத்துள்ள மண் வாலையைச் செருகி மண்சீலை ஏழு செய்து காய்ந்தபின் அடுப்பிலேற்றித் திராவகம் வாங்கிக் கல் கார்க்கிட்ட சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது 3, 5-துளி ஒரு அவுன்ஸ் சலத்தில் விளாவித் தினம் இருவேளை 5, 7-நாட் கொடுக்க பக்கசூலை, மாரடைப்பு, மார்பு நோய், வயிற்று நோய், புளியேப்பம், இடுப்புவலி, வாந்தி, அஜீரணம், குடலிரைச்சல் முதலிய பல பிணிகள் நிவர்த்தியாகும். இத்திராவகத்தை யுட்கொள்ளுங் காலத்தில் புளிதள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும். அவிழ்தம் சூடு செய்யாவண்ணம் நெய், பால் முதலியவற்றை ஜீரண சக்திக்கு ஏற்றவாறு அதிகப்படுத்திக் கொள்க.

மகா சங்க திராவகம்

இந்தப்புப் பலம்-12, படிக்காரம் பலம்-12, அன்னபேதி பலம்-24, வெடியுப்பு பலம்-24, துருசு பலம்-8, சாரம், வெங்காரம், பூரீறு வகைக்குப் பலம்-4 இவற்றுள் அன்னபேதியைச் சிவக்க வறுத்தும் துருசியை வெளுக்க வறுத்தும் இதர உப்புகளுடன் கூட்டி இடித்துத் தூளாக்கிக் கலந்து ஒரு மட்கடத்தில் போட்டு அதற்குப் பொருத்தமான மண்வாலையைச் செருகி மண்சீலை ஏழு செய்து அடுப்பிலேற்றி முறைபோல் திராவகம் வாங்கிக் கல்கார்க் கிட்ட சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்தத் திராவகத்தில் வேளைக்கு, மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகட்கு ஒரு துளியாகவும், அதற்குமேல் ஐந்து வயது வரையில் இரண்டு மூன்று துளியாகவும், அதற்குமேல் பத்தொன்பது வயது வரையில் 5, 6-துளியாகவும், இருபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 10-துளியாகவும் ஒரு அவுன்ஸ் சலத்தில் கலந்து தினம் இருவேளை கொடுக்கவும். இப்படி 7, 14-நாட்கொடுக்க அஜீரணம், ஜுரக்கட்டி, சூதகவாயு, குடலிரைச்சல், குன்மம் முதலியவைகள் குணமாகும்.

இந்த உப்பின் விபரத்தை இந்நூலின்கண் வரையப்பட்டுள்ள பொதுப்பாயிரத்தில் காரசார லவணம் இருபத்தைந்து என்னும் தலையங்கத்தில் காண்க.

இரச கற்பூரம்

(Hydrargyri sub Chloridum)

இடைவாத சூல யேரிசூல குன்மந்
தொடைவாலை வாதமாஞ் சோணி—யிடையாதே
வோக்கும்ரச கற்பூர மொன்றே யளவோடுநல்
லிக்குவெல்லத் தேழுநா ளீ.

குணம்:—(இ-ள்) சுத்திசெய்த ரசகருப்பூரத்தைப் பிணிகளின் வன்மைக் கேற்ப நல்ல வெல்லத்தில் பிரமாணமாக வைத்துப் பத்தியத்தோடு ஏழு நாள் கொடுக்க, சகஜுவர்த்த வாதப் பிடிப்பு, பித்தசூல வயிற்றுநோய், சிலேஷ்மஜுரஸ்தம்ப வாதம், வாதாதிக்க சோணிதவாதம் இவைகள் போம் என்க.

செய்கை:—மலகாரி, உதரவாதஹரகாரி, பித்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இரச கற்பூரம் என்று கூறப்பட்ட பூரத்திற்குப் பாதரசத்திற்குள்ள குணங்களே மிகுந்துள்ளது. இதனைக் கிரமப்படி சுத்தி செய்து பற்ப செந்தூரமாகவும் இதரச் சரக்குகளுடன் கூட்டி மாத்திரை, செந்தூரம், எண்ணெய், களிம்பு முதலியவைகளாகவும் செய்வதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

பூர பற்பம்

ஒரு பலம் பூரத்தைக் கல்வத்திலிட்டுச் சுத்த சலம் விட்டு ½-மணி நேரம் அரைத்துத் தெளிய விட்டுச் சலத்தை வடித்து விடுக. இப்படி மூன்று முறை செய்ய உயர்தரமான சுத்தியாகும். இதை ரவியில் உலர்த்தி மீண்டுங் கல்வத்தில் போட்டு வெள்ளைக் காட்டாமணக்குப் பால் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு 4-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் ஒரு வில்லையாகச் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும். பிறகு இரண்டு பலம் வெங்காரத்தைப் பொடிசெய்து ஒரு சிறு குடுவையில் பாதிபோட்டு அதன்மேல் வில்லையை வைத்து அதன்மேல் பாதி வெங்காரப் பொடியைப் போட்டு வாய்க்கு ஓடு மூடிச் சீலைசெய்து ரவியில் உலர்த்தவும் அப்பால் ஒரு ஆப்பச் சட்டியின் (அதிக உயரமில்லாததும் அகண்டதுமான சட்டி) நடுபாகத்தில் முன்சித்தப் படுத்திய குடுவை அரை பாகம் நுழையும்படியாகத் துவாரம் செய்து குடுவையைச் செருகிச் சுற்றுக்கு மண் தடவி அடுப்பின்மேல் வைத்து அடிப்பாகத்தில் விளக்கெண்ணெய் தீபம் அரை சுண்டுவிரல் கனத்திற்குத் திரி போட்டுக் குடுவையின் அடியில் கமலம்போல் தீ பரவும்படியாக வைத்து நான்கு சாமம் எரித்து ஆறவிடவும். மறுநாள் குடுவையை யுடைத்து வெங்காரத்தைப் பெயர்த்தெடுக்கப் பூரவில்லை நடுவில் இருக்கும். வெங்காரத்தைத் தனியாக அரைத்துச் சீசாவில் வைத்துக் கொண்டு நீர்க்கட்டு நீரோடைப்பு முதலியவைகளுக்குக் கொடுப்பதுண்டு. பூரத்தைத் தனியாக அரைத்து வைத்துக் கொண்டு வேளைக்கு 1, 2-அரிசிப் பிரமாணம் அந்தி சந்தி நேரத்தில் வெல்லத்தில் வைத்து 3-நாள் கொடுக்க வெள்ளை, கொறுக்கு, கிரந்தி, கைகால் பிடிப்பு முதலிய பல பிணிகள் நீங்கும். குணம் தெரியாவிடின் மீண்டும் 5-நாள் கழித்து ஒரு முறை முன்போல் கொடுக்கவும். இத்தருணம் ரோகிக்குப் பால் சாதம் சேர்ப்பது அவசியமாகும்.

பூரச் செந்தூரம்

அரை பலம் சுத்தி செய்த பூரத்தைக் கல்வத்தில் போட்டுச் சிறு செருப்படைச்சாறு கொஞ்சங் கொஞ்சமாக விட்டு நான்கு சாமம் கையோயாமல் அரைத்து ஒரே வில்லையாகத் தட்டிக் காய வைத்து அதன்மேல் சிறு செருப்படை சமூலத்தை அரைத்துச் சுமார் சிறிய வில்வப்பழம் அளவு கவசமிட்டு அதன்மேல் மண்சீலை ஏழுசெய்து ஈரம் வற்றச் சாம்பலில் புரட்டி உடனே 4,5-வறட்டியில் புடமிடவும். ஆறினபின் கவசத்தை நீக்கிப் பார்க்கப் பூரவில்லை சிவந்திருக்கும். இதை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்கு 1, 2-அரிசிப் பிரமாணம் வெல்லத்தில் வைத்துத் தினம் இருவேளை 3-நாள் கொடுக்க முன்முறையில் கூறப்பட்டுள்ள நோய்கள் நீங்கும். இது அனுபவசித்தியாக இருப்பினும் சிறிது கைபாகம் புடதிட்டம் தவறின் மருந்து கெடும் என்பதை அறியக் கடவர்.

பூர மாத்திரை

பூரம் விராகனெடை-2, மிளகு விராகனெடை3, திப்பிலி விராகனெடை-1, ஆமையோட்டுப் பற்பம் விராகனெடை-4 இவைகளைக் கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு ஒருசாமம் அரைத்து மெழுகுபதத்தில் பயறு அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலி லுலர்த்திப் பத்திரப்படுத்துக. குழந்தைகளின் பருவத்திற்கு ஏற்றவாறு 1, 2-மாத்திரையைத் தேனில் கொடுக்கச் சர்வ சுரம், மாந்தம் முதலியவைகள் தீரும்.

விரணக் களிம்பு

பூரம், லிங்கம் வகைக்கு விராகனெடை-2 வீதங் கல்வத்தில் போட்டு அரைத்து எடுத்து வைத்துக் கொள்க. அப்பால் ஒரு சுத்தமான கல்வத்தில் ஒரு பலம் வெள்ளைக் குங்கிலியத்தையும் ஒரு பலம் மனிதர் எலும்பு சுட்ட சாம்பலையும் போட்டுப் பசுவின் வெண்ணெய் ஒரு பலங் கூட்டி நன்றாய் அரைத்து அதில் முன் சித்தப்படுத்தியத் தூளைப் போட்டுப் பின்னும் ஒரு சாமம் அரைத்துச் செம்பு அல்லது ஈயச் சிமிழில் வைத்துக் கொள்க. இந்தக் களிம்பை மெல்லிய துணியில் தடவி ரணத்தின்மேற் போட எலும்பைப்பற்றியதாக இருப்பினும் ஆறும்.

பூர எண்ணெய்

பூரம் பலம்-¼, கலங்காத கோழி முட்டையின் மஞ்சட்கரு-6, 20-கழற்சிக்காயின் பருப்புச் சூரணம், சிற்றாமணக்கெண்ணெய் வீசை-1. இவற்றுள் சிற்றாமணக்கெண்ணெயை ஒரு ஈயம் பூசிய பித்தளைக் குண்டானில் விட்டு அடுப்பிலேற்றி எரித்து நுரை யுண்டானபோது கோழி முட்டையின் மஞ்சட் கரு ஒன்றைத் தள்ளவும். அது வேகும்போது எண்ணெய் சிதறும். சிறிது தூரமாய் இருக்க வேண்டும். அதன் வேகம் அடங்கிய பின் மற்றும் வேறு கருவைத் தள்ளவும். இப்படி எண்ணெய்த் தெறிப்பு அடங்க அடங்க ஒன்றன்பின்னொன்றாக 6-கருவுகளையும் தள்ளிக் கவனித்துக்கொண்டிருக்க ஒவ்வொன்றும் வெந்து பெருகும். இவைகள் தீயாமல் வெந்த பதமாக இருக்கும்போது ஒவ்வொன்றையும் தட்டில் எடுத்து வைத்துக் கொள்ளவும். எண்ணெயை ஆறவிட்டுப் பத்திரப்படுத்துக. பிறகு ஒரு சுத்தமான கல்வத்தில் பூரத்தைப் போட்டு நன்றாய் அரைக்கவும். பிறகு கழற்சிப் பருப்புச் சூரணத்தைப் போட்டு அரைக்கவும். அதற்குமேல் வெந்துள்ள கோழிமுட்டை மஞ்சட் கருக்களை போட்டுச் சிறிது முன் காய்ச்சி வைத்துள்ள எண்ணெய் கூட்டி நன்றாய் அரைத்து மிகுதியுள்ள எண்ணெயில் கலக்கிச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது நன்றாய்க் கலக்கி ½, ¾-அவுன்ஸ் அளவு காலையில் ஒரு வேளை கொடுக்க 4, 5-முறை பேதியாகும். இப்படி 3-நாள் கொடுக்க விரைவாதம், ஆணிக்கால் சுரம், மேகம், மூலம், வெள்ளை, வாயு சம்பந்தமான ரோகங்கள் தீரும். இதைக் கொள்ளும்போது ரோகி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

இரசம்

(Hydrargyrum)

விழிநோய் கிரந்திதன்ம மெய்ச்சூலை புண்குட்
டழிகாலில் விந்துவிஷ லத்தை—வழியாப்
புரியும்விதி யாதும் புரியினே யெல்லா
மிரியும்விதி யாது மிலை.

குணம்:—(இ-ள்.) சிவ வீரிய மென்கிற ரசத்தைக் கிரமப்படி அவிழ்தம் முடித்துக் கொடுக்க நேத்திர நோய், கிரந்தி, அஷ்ட குன்

மம், கீல் பிடிப்பு, மகா விரணங்கள், பெரு வியாதி, க்ஷீணவாதம் முதலிய பிணிகளை நீக்கும். இதனைப்பற்றிக் கூறுத நூல்களும் கிடையாது.

இரசத்திற்குச் சில தோஷங்களுண்டு. அவைகளைக் கூறுமிடத்து:—சர்ப்பம், வங்கம், கந்தி, வன்னி, சாஞ்சலம், மலம், காளம், மந்தம் என விளங்கும். இவற்றை நீக்காமல் அவிழ்தம் செய்யின் உண்பவர்களுக்கு அவ்வக் குற்றத்திற்கு ஏற்றவாறு முறையே விரணம், பெரும் வியாதி, தீச்சுவாலை, தபித்தல், உதிரப் பசையற்ற தேக நிறம், வீரிய நாசம், மரணம், சோபம், முதலிய பிணிகள் சம்பவிக்கும். இன்னும் சில சந்தர்ப்பங்களில் மூளையின் தன்மையைக் கெடுத்துவிடும். எங்ஙனமெனின்:—

கலையைக் கிழிக்கு மவிழ்த் தெறியுங்
கல்லைத்தேடி யெடுத் தெறியு
மலையிற் குதிக்கும் புனன் முழ்கு
மருள்சேர் பித்தந் தணிக்கோடுக்கு
முலையி னனல்போ லுடல் வெதுப்பு
மோயா வுழலை வியர்வாக்கும்
பல காலமுமே வாய்பிதற்றும்
பாத ரசதோ ஷமமிஃதே.

(இ-ள்.) பாதாசத்தைச் சுத்தி செய்யாமல் அவிழ்த பாகங்களில் கூட்டினால் துணியைக் கிழித்தல், அதனை அவிழ்த்தெறிதல், கல்லால் அடித்தல், மலையினின்றுங் குதித்தல், தண்ணீரில் முழ்கி முழ்கிக் கிளம்பல், மயங்கிப் பித்துக் கொள்ளல், தேகத்தில் அழலை யுண்டாக்குதல், மாறாது வாயில் சலமூறல். அதிக வியர்வை பெரு கல், எப்பொழுதும் பிரலாபித்தல் முதலிய தீர்க்குணங்களை உண்டாக்கு மென்க.

செய்கை:—வியதாபேதகாரி, மலகாரி, பித்தகாரி, உக்கிர ரோக சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனிபற்ப செந்தூரமாகவும் அல்லது இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டிச் செந்தூரம், மாத்திரை, களிம்பு முதலியவைகளாகவும் செய்து உபயோகிப்பதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

சூத அண்ட பற்பம்



அரைப் பலம் வாலை ரசத்தை ஒரு எனமில்ட் கோப்பையி லாவது அல்லது சீனி கோப்பையிலாவது விட்டுச் சுத்தமான வெடி யுப்புத் திராவகம் (மெடிகல் நைடிரிக் ஆசிட்) அல்லது வெடியுப்புப் பலம்-10, படிகாரம் பலம்-25 கூட்டி வாலையிலிட்டு இறக்கிய கடுங் கார வெடியுப்புத் திராவகம் மூழ்க விட்டு கரி நெருப்பனலில் வைத்து விசிறிக்கொண்டு வர திராவகம் சுண்டும். உடனே ஆறவிட்டு ஒரு சூச்சியால் கிளறிப் பார்க்க ரசம் இருந்தால் மீண்டும் முன்போல் கொஞ்சம் திராவகம் விட்டுக் கரி நெருப்பனலில வைத்துப் பூக் கடிக்கவும். இப்படி ரசத்தினுருவு மாறுபட்டுப் பற்பமாகும் வரையில் செய்து ஜலம் விட்டு சுப்பலால் கலக்கிக் கலக்கித் தெளியவிட்டு நீரை வடித்துவிடவும். இப்படி ஏழு முறை செய்யத் திராவகத்தி லுள்ள உப்பெல்லாம் வெளிப்பட்டுச் சுத்த ரசம் பற்பமாயிருக்கும். இதனை உலர்த்திப் பத்திரப்படுத்துக.

இதற்குமேல் ஒரு கோழி முட்டையைக் கொண்டுவந்து சிறு துவாரம் செய்து கருவை யெல்லாம் வெளிப்படுத்தி அதனுள் முன் சித்தப்படுத்திய ரச பற்பம் 1-விராகனெடை போட்டு முருங்கை இலைச் சாறுவது அல்லது வெள்ளைப்பூக் காக்கட்டான் இலைச் சாறு வது ஒரு தேக்கரண்டி அளவு விட்டு மற்றொரு காலி முட்டையின் ஓட்டை மேலே செருகி ஒரு சுத்தமான சீலையை ஒரு சுற்று சுற்றி அதன்மேல் ஐந்து மண்சீலை செய்து 5, 6-வறட்டியில் புடமிடவும். புடம் நன்றாய் ஆறியபின் மண்சீலையை நீக்கி உள்ளிருக்கும் முட்டையை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாய் அரைக்கவும். அத் தருணம் மீண்டும் முன் சித்தப்படுத்தியுள்ள ரச பற்பத்தில் ஒரு விராகனெடை கூட்டிக் கலந்து முன்போல் ஒரு முட்டைக்குள் செலுத்தி முன் இட்டதுபோல் மூலிகைச்சாறு விட்டு மேல்முட்டை ஓடு செருகி சீலைச்செய்து முன்போல் புடமிடவும். இப்படி 3, 5-முறை செய்து எடுக்க உயர்தரமான ரச பற்பமாகும். இது வாய் பிடிக்காது. வேண்டும்போது வேளைக்கு 1, 1½-துவரம் பருப்புப் பிரமாணம் தினம் இருவேளை வெல்லத்தில வைத்து 5-நாள் கொடுக் கப் பாரிசவாதம், முகவாதம், கை கால பிடிப்பு, கணுச்சூலை, சுரம், சன்னி, மேகரணம், முழங்காலுக்குக் கீழ்க் குதிரை முகத்தில் காணு கின்ற குழி ரணங்கள், குன்மம் முதலியவைகள் தீரும்.

அக்கினி குமார மாத்திரை

வாலேரசம், கெந்தகம், பொரித்த வெங்காரம், சங்கு பற்பம், பலகறை பற்பம் வகைக்கு விராகனெடை-1, சுத்தி செய்த நாபி விராகனெடை-3, வெண்மிளகு விராகனெடை-8 இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச் சாறுவிட்டு அரைத்து மிளகு அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப் படுத்துக. வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இருவேளை தகுந்த அனுபானங்களில் கொடுக்கச் சுரம், சன்னி, அஜீரணம், குன்மம், வாந்திபேதி, காமாலை, பாண்டு, சோபை, சூலை, வாத ரோகங்கள் தீரும். இது டைபாயிட் (ஜன்னிபாத) சுரத்திற்கு அதிகம் சிறந்தது.

வாலேரச மெழுகு

இருபது படி சலம் கொள்ளத்தக்க நான்கு பெரிய மட்கலங்களைக் கொண்டுவந்து சலம் விட்டுக் கரைத்த மண்ணை மேற்பாகத்தில் பூசி உட்புறத்தில் சலம்விட்டு ½-மணி நேரம் எரிக்கவும். இப்படி 2, 3-தடவை மண்ணைக் கரைத்து மேல் பூசிச் சலம் விட்டு எரிக்க நீர் கசிவு நீங்கி மட்கலங்கள் வன்மை பெறும். இத்தகைய கலங்களை சுத்தமாக அலம்பி அடுப்புகளின்மீது வைத்து ஒவ்வொன்றிலும் 5-வீசை வேப்பிலைகளை ஒன்றிரண்டாய் அரிந்துபோட்டு நிறையச் சலம் விட்டு எரிக்கவும். சலமானது அரைபாகத்திற்கு சுண்டி வரும்போது மீண்டும் ஒவ்வொன்றிலும் நிறையச் சலம் விட்டு எரிக்கவும். இப்படி மூன்று முறை சலம் விட்டு எரித்து ஒவ்வொரு மட்கலத்திலும் சுமார் 4, 5-படி சலமிருக்கும் சமயம் ஆறவிட்டு அவற்றிலுள்ள வேப்பிலைகளையெல்லாம் ஒரு உரப்பான சீலையில் கொஞ்சங் கொஞ்சமாக வைத்து முடிந்துக் கிட்டிக் கட்டிப் பிழிந்து சாறு வாங்கிக் கொள்ளவும். அப்பால் எல்லா மட்கலங்களில் அடியில் தங்கியுள்ளக் கியாழத்தையும் வண்டலையும் சேதப்படாமல் ஒரு மட்கலத்தில் சேர்த்து அதனில பிழிந்து வைத்துள்ள சாற்றை விட்டு அடுப்பிலேற்றி ½-பலம் வாலை சத்தை விட்டு எரிக்கவும். அந்தக் கியாழம் சுண்டி வரவரச் சேறுபோல கறுப்புநிறமாக இருக்கும். இதில் வேப்பிலையின் சத்துடன் வாலேரசம் உறவு பட்டிருக்கும். அத்தருணம் சிறு தீயாக எரித்து மரத்துடுப்பால் கொத்தமல்லி வெகு ஜாக்கிரதையாகக் கிளரிக் கொடுத்துக் களிபதத்தில்

கல்வத்திலிட்டு அரைக்கவும் அல்லது ஒரு சுத்தமான தட்டை அம்மியில் வைத்துச் சேதப்படாமல் அரைக்கவும். எப்பொழுது கைகளில் ஒட்டாமல் மெழுகுபதம் வருகின்றதோ அச்சமயம் எடைபோட்டு மெத்த எடைக்குப் பத்தில் ஒரு பாகம் சுத்தி செய்த வாளம், பொரித்த பெருங்காயம், சுத்தி செய்த சிவதை வேர்ச் சூரணம், சுக்குத் தூள், மிளகுத் தூள், ஒவ்வொன்றுமிருக் கும்படி எடை போட்டுக் கூட்டிக் கலவத்திலிட்டு நான்கு சாமம் கையோயாமல் இருவர் கை மாற்றி மாற்றி அரைத்துக் கொண்டுவர நல்ல மெழுகாகும். இதை உருண்டை உருண்டையாகத் திரட்டி ஜாடியில் போட்டுச் சில தினம் ரவியில் வைத்துச் சிறிதும் ஈர மில்லாமல் இருக்கும்படி கவனித்து மேல் மூடியிட்டுச் சீலைகட்டிப் பத்திரப்படுத்தவும். வேண்டும்போது இந்த மெழுகில் குன்றிமணி யளவு பனை வெல்லத்தில்வைத்துத் தினம் காலையில் ஒருவேளை மூன்று நாள் கொடுக்க 4, 5-முறை பேதியாகும். கொடுத்த அளவில் பேதி அதிகமானால் மறுநாள் அளவைக் குறைத்துக் கொள்ளவும். பேதி சரிவர ஆகாவிட்டால் மறுநாள் அளவை அதிகப்படுத்திக் கொள்ள வும். இதில் குணந் தெரியாவிடின் மீண்டும் ஒரு வாரம்விட்டு மறுபடியும் முன்போல் ஒருமுறை 3-நாள் கொடுக்கவும். இப்படி 2, 3-முறைக்குள் எத்தகைய கடுமையான நோய்களாயினும் குணமாவது திண்ணம். இந்த மெழுகு விசேஷமாகப் பாரிச வாயு, சர்ச்சுவாயு, முகவாதம், கீல்வாதம், கணுச்சூலை, பிடிப்பு முதலியவற் றிற்கு அதிகம் சிறந்தது. இந்த மெழுகை யுட்கொள்ளும் போகிக் குக் கபம் அதிகரித்திருந்தால் அக்கோழை சிறிது சிறிதாக காருதலி னால் வெளியாகுமேயன்றி வாந்தியாகாது. பத்தியம் போகத்திற் கேற்றவாறு புளிநீக்கி இச்சாபத்தியமாக இருக்க வேண்டும்.

இரச செந்தூரம்

அரை பலம் நெல்லிக்காய் கெந்தகத்தைக் கல்வத்தில் போட்டு சித்திரமூலம் வேர்பட்டைச் சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்து விளாங்காய்ப் பிரமாணமுள்ள குடுவையின் உட்புறத்திலும் மூடியி னுட்புறத்திலும் நன்றாய்த் தடவி நிழலில் உலர்த்தவும். அப்பால் அக் குடுவையில் ஒரு பலம் இரசத்தைவிட்டு மேல் மூடியாலடைத்து சந்து வாய்க்கு மண் பூசி ஏழு சீலை மண் செய்து உலர்த்தி, 1½ படி-

யளவு கொள்ளத் தக்க சட்டியில் இரண்டு விரற்கடை உயரம் பெரும் மணல் கொட்டி நடுவில் குடுவையை வைத்து நிறைய மணல் கொட்டி நிரப்பி அடுப்பிலேற்றி முத்தீயாக 4, 5-சாமம் எரித்து ஆறவிட்டு எடுக்கவும். குடுவையின் உட்புறத்தில் பார்க்க ரசம் உருகிக் கருத் திருக்கும். இதை அரைக்கச் சிவக்கும். புட்டியில் பத்திரப் படுத்துக. வேண்டும்போது ¼; ½-குன்றி எடை தேனில் இரு வேளை கொடுக்க மேகசுரம், சந்நி, வாதரோகங்கள், மேகரணம் முதலிய பல பிணிகள் நீங்கும். இந்தச் செந்தூரத்துடன் 5-எடைக்கு ஒரு எடை தங்கச் சுருள் ரேக் (குந்தனத்தங்கம்) கூட்டி நன்கு அரைத்துத் தாது விருத்திக்குரிய லேகியங்களில் வைத்துக் கொடுக்கத் தாது பலம் அதிகரிக்கும்.

கருணாகர ஷண்முகச் செந்தூரம்

வாலை ரசம் பலம்-2, தாளகம் பலம்-¼, லிங்கம் பலம்-¼, ரச கற்பூரம் பலம்-¼, கெந்தி பலம்-½, வீரம் பலம்-¼. இவைகளில் முதலில் மேற்படி கெந்தியில் பலல்-¼ கல்வத்தில் போட்டுக் கம்மாறு வெற்றிலைச்சாறு விட்டு நன்றாய் அரைத்து ஓர் விளாங்காய்ப் பிர மாணமுள்ள குடுவையின் உட்புறத்திற்கும் மேல் மூடியின் அடிப் புறத்திற்கும் நன்றாய்ப் பூசி காயவிடுக. அதன்பின் மேற்படி சரக்குகளில் வாலை ரசம் நீங்கலாக மற்றவைகளை நன்றாய் அரைத்து முன் சித்தப்படுத்திய குடுவையில் முக்கால் பாகம் போட்டுப் பள்ளம் செய்து வாலை ரசத்தை விட்டு அதன்மேல் மிகுதியுள்ள கால்பாகத் தூளைப்போட்டு மெதுவாக அழுத்தி வாய்க்கு மூடியிட்டு மண்சீலை ஏழு செய்து அசையாமல்வைத்துக்கொள்ளவும். 2½-படி அளவு கொள்ளத் தக்க ஒரு மட்பாண்டத்தில் 2-படி வறுத்த உப் புடன் 15-பலம் பிரண்டைக் கூட்டி இடித்துப் பிசரி 2-விரற்கடை உயரம் போட்டு அழுத்தி நடுவில் முன் சித்தப்படுத்திய குடுவையை வைத்து மேலும் உப்புத் தூளைப் போட்டழுத்தி மட்பாண்டத்தின் வாய்க்கு ஓடு கொண்டு மூடி மண்சீலை செய்து அடுப்பிலேற்றி முத் தீயாக ஐந்து சாமம் எரித்து ஆறவிட்டு மறுநாள் குடுவையைப் பார்க்க உருகிக் கட்டியாக இருக்கும். இதனைக் கல்வத்திலிட்டு அரைக்கச் சிவந்திருக்கும். இதில் வேளைக்கு ¼, 1-குன்றி யெடை தேனிலாவது நெய்யிலாவது அனுபானம் செய்து தினம் இருவேளை 5-நாள் கொடுக்கவும். ஸ்நானம், சூஷ்மம் முதலியவற்றிற்கு 2, 3-நாள் விட்டு மறுபடியும் முன்போல 5-நாள் கொடுக்கவும்.

இப்படி ஒரு மண்டலம் கொடுக்க அதிக தீபனத்தை யுண்டாக்கும். மேக சம்பந்தமான பல அழுகிய ரணங்கள் ஆறும். இன்னும் திமிர், குட்டம், குன்மம், மார்பு நோய், சூலை, கப ரோகங்கள், கணுச்சூலை சுரம், சன்னி, வாத ரோகங்கள், காக்கை வலி, குமரகண்டவலி, முயல்வலி, உட்குத்து, புறங்குத்து மூர்ச்சாரோகம் முதலியவைகள் குணமாகும். மருந்து சூடு செய்வதாக உணர்ந்தால் தினந்தோறும் சிரசில் நெய் தடவிக் குளிர்ந்த சலத்தில் ஸ்நானம் செய்யவும். மருந்துண்ணும்போது இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

இம்முறையை வேறு விதமாகச் செய்வாருமுண்டு. அதனைக் கிருபாகர ஷண்முகச் செந்தூரமென்று கூறுவர். அதனை அடியிற் காண்க.

கிருபாகர ஷண்முகச் செந்தூரம்

வாலை ரசம், லிங்கம், வீரம், பூரம், தாளகம், கெந்தகம் வகைக்குப் பலம்-1, மனோசிலை பலம்-$\frac{1}{4}$ இவற்றுள் வாலைரசம் கெந்தகம் நீங்கலாக மற்றச் சரக்குகளைக் கல்வத்திலிட்டு அரைத்து வைத்துக் கொள்க. அரைக்கும்போது புகை யுண்டானால் கம்மாறு வெற்றிலைச் சாறு தெளித்து அரைக்க அடங்கும் என்பதை கவனத்தில் வைக்கக் கடவர். கெந்தகத்தைத் தனியாகக் கல்வத்திலிட்டு கம்மாறு வெற்றிலைச்சாறு கொஞ்சங் கொஞ்சமாக விட்டு குழம்பு பதமாக அரைத்து ஒரு சிறு குடுவையின் உட்புறத்திலும் வாய் மூடி அகலின் உட்புறத்திலும் சந்தில்லாமல் பூசி நிழலில் உலர்த்தி அதனில் முன் அரைத்து வைத்துள்ள தூளில் முக்கால் பாகமிட்டு அழுத்தி நடுவே பள்ளம் செய்து அதனில் வாலை ரசத்தை விட்டு மிகுதியுள்ள தூளைப் போட்டு மிருதுவாக அழுத்தி மேல் அகல்மூடி மண்சீலை ஏழு செய்து நிழலில் உலர்த்தவும்.

அப்பால் இரண்டு படி சோற்றுப்பை வெடியடங்க வறுத்து அதனுடன் 10-பலம் பிரண்டையைக் கூட்டி இடித்துப் பிசரி இவை கொள்ளத்தக்க ஒரு மட்குடுவையில் மூன்று விரற்கடை உயரம் போட்டழுத்திச் சீலைசெய்து வைத்துள்ளச் சிறு குடுவையை நடுவில் வைத்து மிகுதியுள்ள உப்பை மேலே கொட்டிப் பரப்பி அழுத்தி வாய்க்கு ஓடு மூடி மண்சீலை செய்து உலர்த்தி அடுப்பிலேற்றி ஒரு சாமம் தீபாக்கினியாகவும் ஒரு சாமம் கமலாக்கினியாகவும் இரண்டு சாமம் காடாக்கினியாகவும் எரித்து ஆறவிட்டுப் பார்க்கக் குடுவையில் சிவந்து உருகி இருக்கும். இதை அரைத்துச் சீசாவில் பத்திரப்

படுத்துக. இந்தச் செந்தூரத்தில் வேளைக்குத் துவரம் பருப்புப் பிரமாணம் தினம் இருவேளை தகுந்த அனுபானங்களில் 20-நாள் கொடுக்கத் தடிப்பு, குஷ்டம், மேகரணம், குன்மம், காசம், சன்னி, சுரம், உட்குத்து புறக்குத்து, பலவிதமான வலிகள், மூர்ச்சை, வாதப் பிணிகள் தீரும். இந்தச் செந்தூரத்திற்குப் பொது விதியாகத் தேனை அனுபானமாக பண்டிதர்கள் வழங்கி வந்திடினும் அடியில் கூறிய அனுபவத்தைக் கவனிப்பார்களாக.

கப சம்பந்தமான காசம், இருமல், எலிக்கடியினால் ஏற்படும் இரைப்பு இருமல், மூர்ச்சை முதலியவற்றிற்குத் தூதுவளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை இம் மூன்றையும் புட்டவியலாக அவித்துப் பிழிந்தெடுத்த சாறு ஒரு அவுன்ஸ் அளவில் திரிகடுகுச் சூரணம் பனவெடையும் இந்தச் செந்தூரம் ½-குன்றி எடையும் கூட்டிச் சிறிது தேன் விட்டுக் கொடுக்கவும். இப்படி தினம் இருவேளை 7-அல்லது 14-நாள் கொடுக்கக் குணமாகும்.

குன்மம், சூலை, மார்புவலி முதலியவற்றிற்கு, திப்பிலியை வறுத்து இடித்துச் சூரணம் செய்து வேளைக்கு ஒரு திரிகடிப் பிரமாணம் ½-குன்றிச் செந்தூரத்துடன் தேன்விட்டு மத்தித்துத் தினம் இருவேளை கொடுத்து வரச் சில தினத்தில் குணமாகும்.

பலவித வாதரோகம், ஜன்னி, உட்குத்து, புறவீச்சு, உதிரக் கட்டி முதலியவற்றிற்கு, ஓமம், சுக்கு, மிளகு இடித்துச் சூரணம், செய்த கலவையில் திரிகடிப் பிரமாணம், முருங்கைப்பட்டைச் சாறு கூட்டிக் கலந்து அதனில் ½, 1-குன்றி எடை செந்தூரம் கூட்டித் தினம் இருவேளை கொடுத்துவரக் குணமாகும்.

கருப்பவிப்புருதி, உளமாந்தை, விலாவிப்புருதி, பக்கவாதம் அண்டவாதம், தொடைவாதம், யோனிச் சூலை, நாபிச்சூலை, சிருமி ரோகம் முதலியவற்றிற்கு, பச்சை நிலாவாரைச் சாற்றில் 1-குன்றி எடைச் செந்தூரம் கூட்டித் தினம் ஒரு வேளை ஒன்றைவிட்டு ஒரு நாள் கொடுத்துவர குணமாகும். இந்த அனுபானத்தில் மலம் குறைந்தது 2-முறையாவது வெளியாக வேண்டும். இன்றேல் மறு நாள் இந்தச் சாற்றைச் சிறிது அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மூலவாயுவுக்கு, மிளகுத் தூளுடன் சமன் வெல்லம் கூட்டி அரைத்துத் தேற்றாங் கொட்டைப் பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1-மாத்திரையாக ½-குன்றி செந்தூரம் கூட்டித் தினம் 2-வேளை கொடுக்கவும்.

வாந்திக்கு, ஏலம், நெற்பொரி, திப்பிலி, பருத்தி விதை கியாழ மிட்டு வடித்துச் சர்க்கரையிட்டு அதில் ½-குன்றி எடை செந்தூரம் கூட்டிக் கலக்கித் தினம் 2-வேளை கொடுக்கவும்.

கை கால் சோர்வுக்கு, மிளகுத் தூளைத் தேன் விட்டு மெழுகு பதமாக அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு தேற்றங் கொட்டைப் பிரமாணம் உருட்டி அதில் ½-குன்றி எடை செந்தூரம் கூட்டித் தினம் 2-வேளை கொடுக்கவும்.

பசியின்மை, நெஞ்செரிவு, வயிற்றுப்பொருமல், மார்புவலி முதலியவற்றிற்கு, சுக்கு, மிளகு சமனெடையாகத் தேன் விட்டு நன்கு அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்குத் தேற்றங்கொட்டைப் பிரமாணம் காலை மாலை ½-குன்றி செந்தூரம் வைத்துக் கொடுக்கவும்.

மேகரணக் களிம்பு

இரசம் பலம்-2, கெந்தகம் பலம்-2, தேன் மெழுகு பலம்-3, வேப்பெண்ணெய் பலம்-5 இவற்றுள் முதலில் ரசத்தைக் கல்வத்தில் போட்டுக் கெந்தகம் கூட்டி இரண்டு மணி நேரம் அரைக்கக் கறுப்பு நிறமான தூளாகும். அப் பதத்தில் தேன் மெழுகை வேப்பெண் ணெயுடன் கூட்டி உருக்கிக் கல்வத்தில் விட்டு அரைத்துச் சேதப் படாமல் வழித்து வாயகன்ற கோப்பையில் பத்திரப்படுத்துக. இந்தக் களிம்பை ஆறுத மேகரணங்களுக்குச் சீலையில் தடவி மேற் போட ஆறும்.

இராஜவர்த்திக்கல்

(Lapis Lazuli)

வண்ண மிதுராஜ வர்த்தந் தணீநீற்றி
உண்ண விருதயத்தி னூழலறும்—திண்ணமே
மற்றுழ லம்பாண்டு வாதம் பிரமேகம்
பற்றுங் கபமொழியும் பார்.

குணம்,—(இ - ள்) அழகு மிகுந்த ராஜவர்த்திக்கல்லைப் பற்ப மாக்கி உட்கொள்ள இருதய சம்பந்தமான பல பிணிகளும் மூலம், பாண்டு, வாதம், பிரமேகம், கபம் முதலிய ரோகங்கள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இக் கல்லானது பார்வைக்கு நீல நிறத்தில் சிறிது சிகப்பு கலந்திருக்கும். கையில் பரிட்சித்துப் பார்க்க ஊட்டமும் வழுவழுப்பு முள்ளதாக இருக்கும் இதுவே உயர்தரமானது. இதனைக் கிரமப்படி சுத்தம் செய்து பற்பமாக முடித்து உள்ளுக்குக் கொடுக்க வாதம், பிரமேகம், மூலம், பாண்டு, கபரோகங்கள் குணமாகும். இன்னும் இந்தப் பற்பம் இருதய சம்பந்தமான பல நோய்களைக் கண்டிக்கும், நல்ல உதிரத்தை யுண்டாக்கித் தேகத்தைப் போஷிக்கும். இந்தக் கல்லைக் கெம்பு நீலமெனச் சிலர் கூறுவர்.

இராஜவர்த்திக்கல் பற்பம்

இந்தக் கல்லை நன்றாய்ப் பொடி செய்து ஒரு சிறு மட்கலயத்தில் போட்டு அதனில் பழச்சாறு பசுவின் மூத்திரம் விட்டு அனலில் வெதுப்பி மறுநாள் காலையில் சலம் விட்டு அலம்பி வடித்து விடவும். இப்படி மூன்று தினம் செய்து எடுக்கச் சுத்தியாகும். இப்படிச் சுத்தப்படுத்திய கல்லைக் கல்வத்திலிட்டு இரண்டிலொரு பங்கு கெந்தகம் கூட்டிக் கொடிமாதுளம் பழச்சாற்றால் நான்கு சாமம் அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து அகலில் அடக்கி மேல் அகல் மூடிச் சீலைசெய்து பத்துப் பதினைந்து வறட்டியில் புடமிடவும். இப்படி ஒவ்வொரு முறையும் கெந்தகம் கூட்டி மேற்படி சாற்றால் நன்கு அரைத்துப் பற்பமாகிற வரையில் எழெட்டுப் புடமிட்டு எடுத்து மிருதுவான பதத்தில் அரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்துக. இதனை வேளைக்கு ¼, ½-அரிசிப் பிரமாணம் தகுந்த அனுபானங்களில் கொடுக்க மேற்கூறப்பட்ட நோய்கள் குணமாகும்.

இரும்பு

(Ferrum)

பாண்டுவெண் குட்டம் பநந்தூல நோய்சோபை
மாண்டிடச்செய் மந்தங்கா மாலைகுன்மம்—பூண்ட
பெநந்தாது நட்டமும்போம் பேதிபசி யுண்டாங்
கநந்தாது நட்டமிடுங் கால்.

குணம்:—(இ-ள்) இரும்பிலுலாகின்ற மருந்தானது பித்தப் பாண்டு, சிலேஷ்ம வெள்ளைக்குட்டம், அதிதூலரோகம், வீக்கம் விஷாலஜகம், காமிலம், வயிற்று நோய், சுக்கில நட்டம் ஆகிய இவைகளை நீக்கும். மலவிருத்தியும் தீபனமும் உண்டாக்கும்.

செய்கை:—செந்தூரத்திற்குப் பலகாரி, ஜடராக்கினி வர்த்தனி, சங்கோசனகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி பக்குவப்படுத்திக் கொடுக்கத் தாதுவின் துர்ப்பலம், இரத்தக் குறைவு, குடலிலுள்ள புண்கள், அதிசார பேதி, அஜீரணபேதி, கிராணிபேதி, காமாலை, சோபை, பாண்டு முதலிய ரோகங்களை நீக்கும். இம் மருந்தானது உள்ளுக்குச் சென்றவுடன் இரத்தத்தில் கலந்து அதிலுள்ள சிவந்த அணுக்களை அதிகப்படுத்தி கல்ல தேககாந்தியை யுண்டாக்கும். இம் மருந்தைக் கொடுக்குங் காலத்தில் ரோகிக்குப் பசியை அதிகப் படுத்தும் நாடியும் தீவிரமாக நடக்கும். தேகம் கொழுமை பெறும். சிலருக்கு இரும்பு சம்பந்தமான மருந்து கொண்டவுடன் வயிற்றி லெரிச்ச லுண்டாகும். அத்தகையோருக்கு ஏதேனும் ஆகாரம் கொடுத்து ½-மணிநேரம் சென்றபின் மருந்தைக் கொடுத்தல் சாலச் சிறந்தது. இரும்பு சம்பந்தமான மருந்தைக் கொள்ளும்போது, புளியையும், புளிப்பு சம்பந்தமுள்ள பழ வர்க்கங்களையும் சேர்க்கக் கூடாது. இதனால் மருந்தின் குணம் கெடும். இம் மருந்தை நீடித்தும் கொடுக்கக்கூடாது. ஒருமுறை 10, 12-நாள் கொடுத்து விட்டு மருந்தை நிறுத்திவிட வேண்டும். அதன்பின் 2, 3-நாள் கழித்து ஏதேனும் ஒரு விரேசனத்தைக் கொடுத்து 2, 3-முறை பேதியாகும்படி கவனித்தல் வேண்டும். இதனால் மருந்தின் குணம் மிகுதிப்பட்டுக் காணும். தனி இரும்புச் செந்தூரத்தை அதிதூல ரோகத்திலும், அதிக இரத்த புஷ்டியுள்ள தேகிகளுக்கும் கொடுக்கக் கூடாது. மலமும் அயஞ்சுண்ணம் வெளுக்கும்.

அயத்தைத் தனியாகச் செந்தூரமாகவாவது அல்லது இதர சரக்குகளுடன் கூட்டிச் செந்தூரமாகவாவது செய்வதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

அயச் செந்தூரம்

சன்னமாக இராவிய அயப்பொடி பலம்-3, கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய் இவைகளின் விதையைப் போக்கி இடித்து எடுத்த சூரணம் வகைக்குப் பலம்-3, சீந்தில் கொடிச் சூரணம் பலம்-3 இவைகளை ஒரு வாயகன்ற மட்பாண்டத்தில் போட்டு ½-படி நாவற்பழத்தின் ரசத்தை விட்டு வாய்க்குச் சீலைகட்டி மூன்றுமாதம் வரையிலும் அசையாமல் வைத்து விடுக. அதன் பின் அப் பாண்டத்

தில் மீண்டும் நாவற்பட்டையில் இளநீர் தெளித்து இடித்துப் பிழிந்து எடுத்த ரசத்தைவிட்டு வாய்மூடி மூன்றுமாதம் வரையிலும் வைத்து விடுக. இப்படி ஆறு மாதம் வரையிலும் ஊறப்போட்டு வைத்துள்ள சரக்குகளை யெல்லாம் சுத்தமாகச் சுரண்டி எடுத்து இடித்துத் தூளாக்கி ஒரு இரும்புக் கடாயில் போட்டு அடுப்பில் வைத்துக் காடாக்கினியாக எரிக்கவும். இந்தச் சரக்கு செந்தனலாக இருக்கும் பொழுது கால் படி பசுவின் நெய்யைவிடப் பற்றி எரியும். அத்தருணம் ஆறவிட்டுப் பார்க்க அயமானது சிறிது சிவந்திருக்கும் இதனைக் கல்வத்தில் போட்டு நாவற்பட்டைச் சாற்றினாலாவது அல்லது நாவற்பழத்தின் சாற்றிலாவது நான்கு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலிலடக்கிச் சீலை செய்து 20, 30-வறட்டியில் புடமிடவும். இப்படி 5-புட மிட்டெடுக்க உயர்தரமான செந்தூரமாகும். இதனை வேளைக்கு ½, 1-குன்றி யெடை தேன் நெய் முதலிய அனுபானங்களில் கொடுத்துவர மதுமேகம், உட்சூடு, இரத்தக் குறைவினாலுண்டாகும் பல பிணிகள் நீங்கும்.

வேறு முறை

மூன்று பலம் சுத்தமான அயப்பொடியை ஒரு சீனுக்கோப் பையிலாவது அல்லது எனாமில்ட் கோப்பையிலாவது போட்டு மூழ்க அஷ்டலவணத் திராவகம் விட்டு ஏழுநாள் சென்ற பின் கை படாமல் கத்தியால் வழித்துக் கல்வத்தில் போட்டு இரண்டு நாள் நன்கு அரைத்துக் காலணு அகலமும் கனமும் உள்ள வில்லைகளாகச் செய்து உலர்த்தி ஒரு குடவான மண்ணகலில் பரப்பி மேல் அகல் மூடிச் சீலைசெய்து 20, 25-வறட்டியில் புடம் போட்டெடுக்கச் சிந்தூரமாகும். இதை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்கு ¼, ½-குன்றி எடை கரிசலாங்கண்ணி கற்கத்தில் வைத்துத் தினம் இருவேளை கொடுத்துவர 5-நாளில் வெளுத்த சரீரம் இரத்தப் பெருக்கடையும். நல்ல தேஜசும் பலமும் உண்டாகும்.

குறிப்பு:—அஷ்டலவண திராவகம் என்பது படிகாரம் பலம்10, வெடியுப்பு பலம்-2½, அன்னபேதி பலம்-½, இந்துப்பு பலம்-½, துருசு பலம்-½, பூநீறு பலம்-1, நாயுருவி உப்பு பலம்-½, சித்திர மூலம் உப்பு பலம்-½ இவற்றை இடித்து மட்கடத்தி லிட்டுப்

பொருத்தமான வாலை செருகிச் சீலைசெய்து முறைப்படி திராவகம் வாங்குவதாம்.

அயவீரச் செந்தூரம்

சன்னமாக இராவிய அயம் பலம்-1, இலிங்கம் பலம்-2, பூரம் பலம்-1, வாலைரசம் பலம்-1, வீரம் பலம்-½ இவைகளைக் கல்வத்தில் போட்டு வெடியுப்புத் திராவகம் விட்டு இரண்டு சாமம் அரைத்துக் குழம்பு பதமாக இருக்கும்பொழுது ஓலையால் வழித்து ஒரு புதிய ஆப்பச் சட்டியில் விட்டு அதன்மேல் அத்தகைய மற்றோர் சட்டியை மூடிச் சந்துக்கு மண்பூசி ஏழு மண்சீலை செய்து அடுப்பில் வைத்து ஒரு சாமம் கமலாக்கினியாக எரிக்கவும். ஆறினபின் சீலையைப் பிரித்து உள்ளிட்ட மருந்தைப் பார்க்கச் சிவந்திருக்கும். மேல் சட்டியில் பதங்கம் ஏறி நிற்கும். இவைகளை யெல்லாம் சேதப் படாமல் சுரண்டிக் கல்வத்தில் போட்டு வெடியுப்புத் திராவகம் விட்டு ஒரு சாமம் அரைத்து முன்போல் சட்டியில் வழித்துவிட்டு மேல்மூடிச் சீலைசெய்து ஒரு சாமம் எரிக்கவும். இப்படி அப்போதைக்கப்போது மேல் ஏறும் பதங்கத்தையும் அடியிலுள்ள செந்தூரத்தையும் கூட்டி 6, 7-முறை அரைத்து எரித்து எடுக்க மேல் பதங்கம் ஏறுது. இந்தச் செந்தூரம் ஏறத்தாழ அயத்தினுடைய எடைக்கு இரண்டு பங்கு இதரச் சரக்குகள் கெருப்புக்குப் பலப்பட்டு நிற்கும். இதைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனை வேளைக்கு 2, 3-அரிசி எடை ரோகத்திற்கு ஏற்றவாறு அனுபானங்களில் கொடுக்க முறை சுரம், சந்நி, பாரிசவாயு, மேகவாயு பிடிப்பு, கைகால் குடைச்சல், சுவாசகாசல் கபக்கட்டு முதலிய பிணிகள் போம்.

குறிப்பு:—வெடியுப்புத் திராவகம் என்று இங்கு கூறப்பட்டது வெடியுப்பு பலம்-10, படிக்காரம் பலம்-10 சோற்றுப்பு பலம்-10 கூட்டி திராவகம் வாங்கிக்கொள்வதேயாகும்,

திரிலோகச் செந்தூரம்

சன்னமாக இராவிய அயம் பலம்-1, கெந்தகம் பலம்-2, தங்கப் பொடி அல்லது குந்தன சுருள் ரேக் விராகனெடை-½, வெள்ளி பொடி விராகனெடை-1 இவைகளைக் கல்வத்தில் போட்டு கற்சுண்ணும்பு நீர் விட்டுத் தினம் ஒன்றுக்கு இரண்டு சாமம் வீதம் 3-நாள் அரைத்துக் காயவைத்துப் பொடித்து ஒரு சட்டியில் போட்டு அடுப்

பில் வைத்துப் புகையடங்க வறுத்து எடுக்கச் செந்தூரமாகும். ஆறின பின்னர்க் கல்வத்திலிட்டு மிருதுவாக அரைத்துக் கல் கார்க் கிட்ட சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்கு ¼, ½-குன்றியெடை நெய் தேன் முதலிய அனுபானங்களில் உள்ளுக் குக் கொடுக்கப் பாண்டு, சோபை, காமாலை, பசியின்மை முதலிய ரோகங்கள் நீங்கும். இரத்த விருத்தியும் தாது பலமும் உண்டாம்.

குறிப்பு:—கற்சுண்ணும்பு நீர் என்பது சுட்ட கற்சுண்ணம் படி-¼, நவாச்சாரத்தூள் பலம்-2 கூட்டி நான்கு மடங்கு சலம் விட்டுக் கரைத்து மூன்றாவது நாள் வடித்தெடுத்த தெளிவு நீரேயாகும்.

பஞ்சலோகச் செந்தூரம்

அயத்தூள் பலம்-1, வெண்கலத்தூள் விராகனெடை-1, காந்தம் விராகனெடை-1, தங்கச்சுருள் ரேக் விராகனெடை-1, வீரம் விராகனெடை-1 ஆக இவ்வைந்து சரக்குகளையும் கல்வத்தி லிட்டுக் கரிசலாங்கண்ணிச்சாறு விட்டு நான்கு சாமம் அரைத்து ஒரே வில்லையாகத் தட்டி ரவியிலுலர்த்தி ஓர் குண்டு சட்டியின் உட் புறத்தில் வைத்து மேல் சட்டி மூடி உளுந்து சீலை செய்து உலர்த்தி அடுப்பிலேற்றி நான்கு சாமம் கமலாக்கினியாக எரித்து மேல் சட்டி யில் இருக்கும் பதங்கத்தைச் சுரண்டி அடி சட்டியில் உள்ள வில்லை யுடன் கூட்டிக் கல்வத்திலிட்டு முன்போல் கரிசலாங்கண்ணிச்சாறு விட்டுச் சிறிது நேரம் அரைத்து வில்லை தட்டிச் சட்டியிலிட்டு முன்போல் எரிக்கவும். இப்படி 3-முறை எரித்தெடுக்க நல்ல செந் தூரமாகும். அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதில் வேளைக்கு 2, 3-அரிசி எடை பனை வெல்லத்தில் வைத்துத் தினம் இருவேளை 7-நாள் கொடுக்க யானைக்கால் சுரம் அது சம்பந்தமான கால் வீக்கம் குணமாகும். பெருத்த சரீரம் இளைக்கக்கோரின் இச் செந்தூரத்தை சில தினம் விட்டு விட்டு கொடுத்துக்கொண்டு வர 40-நாளில் சரீரத்தின் பருமன் குறையும்.

இரும்புச் சிட்டம்

(Ferro - Ferric Oxide)

கிட்டமொன்றுற் சோபை கிளைவீக்க மத்திசுரந்
துட்டவிட பாகஞ் சுவாசமையங்—கெட்டகொடும்
பாண்டிநம னீராமை பாழும் பிரமியழந்
தாண்டிவிடு முண்டிரத்த தாது.

குணம்:—(இ-ள்.) இரும்புச் சிட்டத்தினால் வாத சோபை முதலிய வீக்கங்கள், அஸ்திசுரம், கொடிய விஷப்பாண்டு, இரைப்பு, கபகோபம், தேக வெளுப்பு, காசம், நீராமைக்கட்டி, அசிர்க்கரம் முதலியவைகள் நீங்கும். உதிர விருத்தியுண்டாகும் என்க.

இதுவுமது

பாண்டுவுடன் சோபை பகருங்கா மாலைகுன்மம்
பூண்டவேண் மேகமொடு பூவையரே—நீண்டளவி
லோங்குங் கபமிரைப்பு முறுநீர்க் கட்டிவகை
நீங்குமண்டூ ரத்தால் நிசை.

(இ-ள்.) மண்டூரத்தால் பாண்டு, சோபை, காமாலை, குன்மம், வெண்குட்டம், சுவாசகாசம், ஈரல்களிலுண்டாகும் நீர்க்கோவை ஆகிய பிணிகள் நீங்கும் என்க.

செய்கை:—செந்தூரத்திற்குப் பலகாரி, ஜடராக்கினி வர்த்தனி, சங்கோசனகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை அவிழ்தமாக முடிக்கும்முன் கிரமப்படி சுத்தி செய்ய வேண்டும். எங்ஙனமெனில்:—5-பலம் நாட்சென்ற இரும்புச் சிட்டத்தை சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு ஒரு படி வெள்ளாட்டுநீர் விட்டு 5-நாள் ஊறவிட்டு 6-வது நாள் அடுப்பிலேற்றிச் சுண்டக் காய்க்கிப் பசுவின் நீரில் தோய்க்கவும், அதன்பின் அலம்பி உலர வைத்து இடித்துத் தூள் செய்து வைத்துக்கொள்க. இப்படிச் சுத்தி செய்த மண்டூரத்தைக் கொண்டு செய்யும் சில முறைகளாவன:—

மண்டூரச் செந்தூரம்

ஐந்து பலம் சுத்தி செய்த மண்டூரத் தூளைக் கல்வத்தில் போட்டு, குமரிச்சாறு விட்டு நான்கு சாமம் நன்றாய் அரைத்து அரையணு அகலமும் கனமும் உள்ள வில்லைகளாகத் தட்டிக் காய வைத்து அகலில் ஒன்றன்மீது ஒன்று படாமல் பரப்பி மேல் அகல் மூடிச் சீலை செய்து 40, 50-வறட்டியில் புடமிடவும். இப்படி 5, 6-புடமிட்டு பொற்றூலைக் கையாந்தகரைச் சாற்றிலும் நாவல் பட்டைச் சாற்றிலும் வகைக்கு 5-புடமிட நல்ல செந்தூரமாகும். இதனை வேளைக்கு ஒரு குன்றியெடை கரிசலாங்கண்ணிச் சாற்றில்

கொடுக்க மகோதரம், விஷநீர்க்கோவை, பாண்டு, சோபை, குன்மம், கிராணி முதலிய பிணிகள் போம். இச் செந்தூரத்தை யுட்கொள் ளும்போது புளி தள்ளி இச்சா பத்தியமாக இருத்தல் வேண்டும்.

வேறு முறை

சுத்தி செய்த ஐந்து பலம் மண்டூரத் தூளைக் கல்வத்திலிட்டுக் குமரிச்சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்து மெழுகுபதத்தில் அரையணு அகலமும் கனமும் உள்ள வில்லைகளாகச் செய்து ரவியில் உலர்த்தி அகலில் பரப்பி மேல் அகல்மூடிச் சீலைசெய்து 50-வறட்டி யில் புடமிடவும். இப்படி 5-புடமிட்ட பின் கரிசாலை, நீர்முள்ளி, வேலிப்பருத்தி, வீழி, புளிப்பு மாதுளம் பழச்சாறு முதலியவற்றுல் ஒவ்வொன்றிலும் மும்மூன்று புடமிட்டு எடுக்க உயர்தரமான செந்தூரமாகும். இந்தச் செந்தூரத்தில் வேளைக்குக் குன்றி எடை தினம் இருவேளை நெய் தேன் முதலிய அனுபானங்களில் கொடுத்து வரச் சோபை, பாண்டு, மகோதரம், காமாலை, சீர வீக்கம் முதலிய வைகள் குணமாகும். இரத்தம் அதிகரிக்கும்.

மண்டூர மாத்திரை

மண்டூரச் செந்தூரம் பலம்-7½, புங்கம்பட்டை, தேவதாரு பட்டை, கறிமஞ்சள், மரமஞ்சள், இலவங்கப்பட்டை, வால்மிளகு, சித்திரமூலம் வேர்ப்பட்டை, கோரைக்கிழங்கு, செவ்வியம், கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி இவ்வைகளின் சூரணம் வகைக்குப் பலம்-½ ஆகச் சேகரம் செய்து வைத்துக் கொள்க. அப்பால் ஒரு பழகிய பெரிய மட்பாண்டத்தில் 3-படி கோவின்நீர் விட்டு அடுப்பிலேற்றி எரித்துக் குழம்பு பதமாக வரும்போது முன்சித்தப்படுத்தி வைத்துள்ள சூரணங்களைப் போட்டுக் கிளறி இரண்டு மூன்று நிமிஷம் வைத்திருந்து கீழ்இறக்கி ஆறினபின் கல்வத்தில் வழித்து விட்டு நான்கு சாமம் அரைத்து மெழுகுபதம் வரும்போது குன்றி அளவு மாத்திரைகளாகச் செய்து ரவியில் உலர்த்திப் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இம் மாத்திரையைத் தினம் காலை மாலை ஒவ்வொன்றுகக் கொடுத்து இரண்டு மணி நேரத்திற்குப் பின் மோர்சாதம் கொடுக்கவும். பிறகு வேண்டியவற்றைச் சாப்பிடலாம். இதனுல் மண்ணீரல் வீக்கம், காமாலை, பாண்டு, வயிற்றிலுண்டாகும் கட்டிகள், ஊருஸ்தம்ப வாதம், மூலரோகம், சுரம் முதலிய பிணிகள் குணப்படும். இம்

மாத்திரையை ரோகத்தின் வன்மை மென்மைக் கேற்றவாறு ¼, ½-மண்டலம் உட்கொள்ளத் தவறுமல் நற்குணத்தைப் பெறுவர். மருந்துண்ணும்போது புளி தள்ளி இச்சா பத்தியமாக இருத்தல் வேண்டும்.

இலிங்கம்

(Cinnabaris Factitia Chinensis)

பேதிசுரஞ் சந்நி பெருவிரண நீரோடுத
காதகடி காசங் கரப்பான்புண்—ணோத
வுருவிலிங்க சங்கதமா யூறுகட்டி யும்போங்
குருவிலிங்க சங்கமதைக் கொள்.

இதுவுமது

ஆதி மிரதவுருக் காதலாற் சாதிலிங்க
மோதி விரதகுண முற்றுடலிற்—றீதுபுரி
குட்டங் கிரந்தி கொடுஞ்சூல வாதமுத
லுட்டங்கு நோய்களையோட் டும்.

குணம்:—(இ-ள்) சிவந்த சாதிலிங்கம் முதலில் பாதரச உருக்காகையால் அந்த ரசகுணத்தைக் கொண்டு, அதிசாரம், ரூட்சை, சந்நிபாதம், அற்புதப்புண், அதிமூத்திரம், காணவிஷம் இருமல், கரப்பான், சிரங்கு, நுணக்காய்க்கிரந்தி, மண்டல குஷ்டம், பாமை, சரீரக்குத்தல், வாதரோய், அந்தர்முகரோகங்கள் ஆகிய இவைகளை விலக்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை விசேஷமாகச் சித்த வைத்தியத்தில் சுரம், சந்நி, வலி, வாயு இவைகளுக்கு அதிகம் சிறந்ததாகக் கருதப்படும். இதனை முஸிப்பாலில் 3-நாள் ஊறப்போட்டு எடுத்து, காசசார ஜெயநீர், மூலிகைச்சாறு இவைகளில் ஏதேனுமொன்றில் சுறுக்கிட்டாவது அல்லது அங்கியிட்டுச் சீலைசெய்து புடம் போட்டாவது அல்லது இதரச் சரக்குகளுடன் கூட்டிச் செந்தூரம், மெழுகு, மாத்திரைகளாகவாவது செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

இலிங்கச் செந்தூரம்

ஒரு பலம் இலிங்கக் கட்டிக்குத் தினந்தோறும் பிரமத்தண்டுப் பால் சுமார் பழைய அரைக்கால் ரூபாய் கனத்திற் கேறும் வண்ணம் அடித்து நிழலில் காயவிடுக. அப்பால் கால் ரூபாய் எடை கருவங் கத்தை யுருக்கிக் கால் ரூபாய் எடை வாலைரசத்தை தொந்தித்துப் பழச்சாறு விட்டு மெழுகுப் பதமாக அரைத்து முன் சித்தப்படுத்திய இலிங்கத்திற்குச் சம கனமாகப் பூசி நிழலில் வெடிக்காமல் காய வைத்து, அதன்மேல் கெந்தகம், மஞ்சிலை, பால்துத்தம், தாளகம், கவுரிபாஷாணம், சோற்றுப்பு வகைக்கு இரண்டு விராகனெடை வீதம் கல்வத்திலிட்டு வெண்கருவால் மெழுகுபதம் அரைத்துக் கவசமிட்டு வெடிக்காமல் நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. இதற்குமேல் ஒரு இரும்பு ஆழாக்கில் இரும்புமணல் அல்லது இரும்புப் பொடி பாதியளவு கொட்டி முன் உலரவைத்துள்ள லிங்கக் கட்டியை நடுவில் வைத்து நிறைய அரப்பொடியைப் போட்டு அழுத்தி வாய்க்குப் பொருத்தமானதும் வட்டம் பொருந்தியது மான இரும்புத் தகட்டால் மூடிச் சீலைசெய்து சிறிது உலரப் பின்னும் ஏழு மண் சீலை ஆழாக்கு முழுவதும் சூழச் செய்து ரவியில் நன்றாய் உலர்த்தி வைத்துக் கொள்க. பின்பு தரையில் முழ அகலம் ஆழமுள்ள குழித் தோண்டிச் சுத்தப்படுத்தி அரைக்குழி வரையில் பச்சை கெல் குத்தியெடுத்த உமியைக் கொட்டிப் பரப்பி நடுவில் சீலைசெய்து வைத்துள்ள ஆழாக்கை வைத்து மேலும் தரைமட்டம் உமியைக் கொட்டி மேல் 2, 3-வறட்டித் தண்டுகளை வைத்துத் தீ மூட்டவும் மூன்றுவது நாள் ஆழாக்கை எடுத்து உள்ளிட்ட இலிங்கத்தைப் பார்க்கச் சிறிதும் எடை குறையாது. இதனை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு ¼, ½-குன்றியெடை தினம் இருவேளைத் தேனில் கொடுக்கச் சுரம், சன்னி, வலி, வாயு முதலிய பல பிணிகள் நீங்கும்.

வேறு முறை

ஒரு பலம் இலிங்கக் கட்டியை ஒரு மண்ணோட்டில் வைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரிக்கும்பொழுது மூங்கில் குருத்தை யிடித்துப் பிழிந்து ½-படி சாறு எடுத்து அதனில் ஒரு கழஞ்சு துருசு வெள்ளை கூட்டிக் கலக்கிச் சுறுக்குக் கொடுத்துக் கொண்டு வருக. சாறு முற்றிலும் சுண்டின சமயம் இலிங்கக் கட்டியை எடுத்து அதன்மேல் பச்சைச் சித்திரமூலம் வேர்ப்பட்டையை நன்கு

அரைத்து விளாங்காய்ப் பிரமாணம் கவசம் செய்து சிறிது காய்ந்த பின் மண்சீலை ஏழுசெய்து ஈரம் வற்றச் சாம்பலில் புரட்டி 6, 7-வறட்டியில் புடமிடவும். ஆறினபின் இலிங்கக் கட்டியைக் கல்வத்திலிட்டு அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்துக. வேண்டும் போது வேளைக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$-குன்றி எடை தினம் இருவேளை தேன் இஞ்சிச்சாறு முதலிய அனுபானங்களில் கொடுத்துவரச் சுரம், சந்நி, வலி, கபசுரம், பிரசவத்தில் தங்கப்பட்ட அழுக்காலுண்டான பல தோடங்கள் தீரும். இன்னும் இந்தச் செந்தூரம் வாதசீதளத்தினால் காணும் பல பிணிகளுக்கு அதிகம் சிறந்தது.

குறிப்பு:—துருசு வெள்ளை என்று கூறியதின் விபரம்:—மூங்கில் குருத்தையும் இஞ்சியையும் சமனாகக் கூட்டி அரைத்து ஒரு பலம் துருசுக் கட்டிக்கு விளாங்காயளவு கவசமிட்டு மண்சீலை செய்து 5, 6-வறட்டியில் புடமிட்டு எடுக்கச் சிறிது வெளுத்திருக்கும்; வெளுப்பு குறைந்திருந்தால் மீண்டும் மண்ணேட்டில் வைத்து வறுத்து எடுத்துக்கொள்ளவும். அல்லது கருவங்கம் பலம்-1, வாலைரசம் பலம்-1 இவை யிரண்டையும் உருக்கித் தொந்தித்துக் கல்வத்திலிட்டு அதனுடன் 2-பலம் வெடியுப்புக் கூட்டி உத்தாமணிச் சாற்றால் அரைத்துப் புடமிட கருவங்கம் பற்பமாகும். இதை வெண்கரு விட்டு அரைத்து ஒரு பலம் துருசு கட்டிக்குக் கவசமிட்டு மண்சீலை செய்து 10-வறட்டியில் புடமிட வெளுத்திருக்கும்; வெளுப்புக் குறைந்திருந்தால் முன்போல் சிறிது வெளுக்க வறுத்துக் கொள்ளவும். இத்தகைய துருசு வெள்ளையே இம்முறையில் போதுமானது.

இலிங்க மெழுகு

இலிங்கம் பலம்-1, கஸ்தூரி குன்றியெடை-1, கற்பூரம் தோலா-$\frac{1}{2}$, இரச கற்பூரம் தோலா-$\frac{1}{8}$, பச்சைக் கற்பூரம் தோலா-$\frac{1}{8}$, குங்குமப்பூ தோலா-$\frac{1}{8}$, ஜாதிக்காய் (நீர் நாய் சவ்வாது) குன்றியெடை-4, ஓட்டைக் கோரோசனை குன்றியெடை-4, ஆவின் கோரோசனை தோலா-$\frac{1}{8}$, பளிங்கு சாம்பிராணி பலம்-$\frac{1}{2}$, வில்லரச செந்தூரம் தோலா-$\frac{1}{8}$, மிளகுச் சூரணம் பலம்-$\frac{1}{2}$, பறங்கிச்சக்கை சூரணம் பலம்-1, சுத்தி செய்த வாளம் பலம்-$\frac{1}{8}$ இவைகளை யெல்லாம் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து நன்றாய் உறவான பதத்தில் விதை நீக்கிய திராட்சைப்பழம் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு அரைக்கவும். எப்பொழுது மெழுகு பதமாகவும் சாக்குகள் நன்றாய்

உறவான பதமாகவும் காணப்படுகின்றதோ அத்தருணம் சேதப்படாமல் வழித்து வாயகன்ற சீசாவில் பத்திரப்படுத்துக. இந்த மெழுகில் பெரியவர்களுக்கு வேளைக்குக் குன்றியளவாகவும் குழந்தைகளுக்குப் பயறு அளவாகவும் தினம் ஒரு வேளை காலை நேரத்தில் கொடுக்க 2, 3-முறை பேதியாகும். இதனால் சல தோஷம், சுரம், சன்னி, இருமல், வயிற்றுவலி, வாத சம்பந்தமான பல பிணிகள் குணமாகும். இன்னும் இந்த மெழுகு ஸ்திரிகளுக்குப் பிரசவத்திற்குப் பின் அழுக்கு சரிவர வெளியாகாமல் தடைபட்டு அதனாலுண்டாகின்ற கை கால் எரிச்சல், குத்தல், வீக்கம் முதலிய வற்றை அறிகுறியாகக் காட்டும், கரபாத ஜன்னியை விரைவில் குணப்படுத்தும். மேற்கூறப்பட்ட முறையில் வாளத்தை நீக்கி மெழுகாக அரைத்து வைத்துக்கொண்டு அதே அளவு மாலைப் பொழுதிலும் கொடுத்துவர அதிக நன்மையைப் பயக்கும்.

மாதவச் செந்தூரம்

சுத்தி செய்த இலிங்கம் விராகனெடை-8, வில்லை இரச செந்தூரம் விராகனெடை-1, சுத்தி செய்த வீரம் விராகனெடை-2 இவற்றைக் கல்வத்தில் போட்டுக் கொஞ்சங் கொஞ்சமாய் முலைப்பால் விட்டு இரண்டு மூன்று மணிநேரம் அரைத்து இரவியில் நன்றாய் உலர்த்தி மீண்டும் 2, 3-மணிநேரம் அரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்துக. இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு ¼-குன்றி எடை (துவரம் பருப்பளவு) தினம் 2-அல்லது 3-வேளை தேனில் கொடுத்து வர, எத்தகைய கடின சுரமும் விரைவில் குறையும். ஆறு வேளைக்கு மேல் கொடுக்க வேண்டியது அவசியம் இல்லை. வேண்டுமானால் வேறு மருந்தை உபயோகப்படுத்திக் கொள்ளவும். இன்னும் இந்தச் செந்தூரத்தைச் சன்னி, சயித்தியம், தேகவலி, காசம், தேக உலைச்சல் முதலியவற்றிற்குக் கொடுக்க அதிக நன்மையைத் தரும்.

ஈசனென்னும் பச்சைக் கற்பூரம்

(Boro Camphora Genuine)

ஈசனெனும் பூரமியல்வெண்மைக் காரமாம்
பேசரிய சீதமுஷ்ணம் பித்தமயல்—வீசுகின்ற
பீநசழட் டாகமிவை போர்த்துவிடுங் காந்தியுண்
டான ததுவசிய மாம்.

குணம்:—(இ-ள்.) வெளுப்பும், காரமும், தளதளப்பும் உள்ள சசன் என்னும் பச்சைக் கற்பூரம் வசியத்திற்காகும். சிலேஷ்ம சுரம், பைத்தியம், மயக்கம், ஈசி நோய், தாகரோகம் ஆகிய இவைக ளைப் போக்கும் என்க.

இது பச்சைக் கற்பூர இனத்திலொன்று. அதிக குணம் கொடுக்கக் கூடியதாதலால் பச்சைக் கற்பூரத்தின் தலையங்கத்தின் கீழ்க் கூறியவண்ணம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

உமிலிச்சாரம்

(Salt-Salicornia Indica)

குடல்வாதஞ் சூல கொடுங்குன்ம மோடும்
விடலருநீர்க் கட்டும் விலகு—மடவார்
கமல வதனக் கனங்குழலே நாளு
முமிலிசா ரத்தை யுரை.

குணம்:—(இ-ள்.) உமிலி சாரத்தினால் வாதக்குடல் விருத்தி, குத்தல், வாதகுன்மம், வாத மூத்திரக் கிரிச்சரம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—மூத்திர வர்த்தனகாரி, ஜடராக்கினி வர்த்தனி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சாரத்தை விசேஷமாகப் பருத்தி நூலுக்குச் சாயம் இடுவதற்குக் கூட்டுவதுண்டு. இதனால் சாயம் கெட்டிப்படும். அவிழ்த்த பாகங்களில் தனியாக உபயோகப் படுத்துவது கிடையாது. பெரும்பாலும் இதர உப்புகளுடன் கூட்டித் திராவகமாகவும் பற்பமாகவும் முடித்து உபயோகப்படுத்துவ துண்டு. இந்தச் சரக்கின் விபரத்தை இந் நூலில் வரையப்பட்ட பொதுப்பாயிரத்தின்கண் இனிது விளக்கப்பட்டுள்ளது.

உருக்கு

(Steel)

தந்தமந்த முலவுரு தாதுநட்டஞ் சோபைகண்ஹோய்
வந்தமந்தம் பாண்டுவிண வன்மைகுன்றன்—முந்தப்
பெருக்கிடையாய் நீட்டுகப பேத மிவைகட்
* குருக்கிடையா தோட்டு முரை.

* உருக்கு - எஃகு.

குணம்:—(இ-ள்.) எஃகு, தந்தரோகம், தந்தமூலரோகம் கூரீண சுக்கிலம், வீக்கம், நேத்திரரோகம், அலஜம், உடல்வெளுப்பு துர்ப்பலம், படுக்கையே கதியாக வீழ்த்தாநின்ற கூயகாச ரோகம் முதலியவற்றை யொழிக்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, சங்கோசனகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது கிடையாது. இதனைத் தனியாகவும் இதரச் சரக்குக ளுடன் கூட்டியும் செந்தூரங்களாகச் செய்து உபயோகப்படுத்துவ துண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

எஃகு செந்தூரம்

கோமூத்திரம், வெள்ளாட்டு மூத்திரம் இவை இரண்டையும் சமனெடையாகக் கலந்து வைத்துக் கொண்டு, அதனில் 5, 6-உருக் குத் தகடுகளை கன்னுன் உலையில் வைத்துப் பழுக்கக் காய்ச்சிக் காய்ச்சி ஒவ்வொன்றையும் தோய்க்கத் தகடுதகடாக மேற்சிட்டம் உதிரும். இப்படிப் பலமுறைக் காய்ச்சித் தோய்த்துச் சேதப்பட்டா மல் 5-பலம் சிட்டத்திற்குக் குறையாமல் கல்வத்தில் போட்டுப் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் கையோயாமல் நான்கு சாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓர் அகலில் வைத்து மேல் அகல்மூடி ஏழு மண்சீலை செய்து 100-வறட்டியில் புடமிடவும். புடம் நன்றாய் ஆறினபின் அகலில் வைத்துள்ள மருந்தை மீண்டும் கல்வத்திலிட்டு முன்போல் ஆகாசத் தாமரைச் சாற்றிலும் குமரிச் சாற்றிலும் நன்னன்கு சாமத்திற்குக் குறையாமல் ஒவ்வொன்றிலும் அரைத்து முன்போல் புடமிடவும் இப்படி 3-புடம் முடித்தவுடன் மீண்டும் ஒவ்வொருமுறை அம் மூலிகைகளின் சாற்றினால் வரிசைக் கிரமமாக அரைத்து அரைத்து மூன்று புடமிடவும். நல்ல செந்தூர மாகும். இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு ¼, ½-குன்றி எடை தினம் இருவேளை தகுந்த அனுபானங்களில் கொடுத்து வர மேற்கூறப் பட்ட செய்யுளில் குறிப்பிட்டுள்ள ரோகங்கள் குணமாகும்.

வேறு முறை

முன்போல் சித்தப்படுத்திய உருக்குத்தூளைக் கல்வத்தில் போட்டு எக மூலிகையாக எட்டி இலையின் சாறுவிட்டுச் சரியாக நான்கு சாமம் கையோயாமல் அரைத்து அரைத்து அரையுரு கனமும் அகலமும் உள்ள வில்லைகளாகச் செய்து உலர்த்தி ஒன்றன்

மீது ஒன்று படாமல் அகலில் பாப்பி மேல் அகல்மூடி ஏழு மண் சீலை செய்து உலர்த்தி 100-வறட்டியில் வைத்துப் புடமிடவும். இப்படியே குறைந்தது 11-புடமிட நல்ல செந்தூரமாகும். இதனை வேளைக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$-குன்றி எடை தினம் இருவேளை வாத சரீரத்திற்குத் தேனிலும் பித்த சரீரத்திற்கு ஆவின் நெய்யிலும் கொடுத்து வரத் தேகம் வன்மை பெறும் நரை திரை மாறும்.

உழமண்

(Sodae Carbonas Impura)

சாநங் கணுச்சூல சந்துவலி வீக்கம்போம்
சேநமேண்ணெய்ச் சிக்குப்போம் சீலதனில்—சீர்கெடவே
பாய்ந்த வழக்கும்போம் பாஷாண வீறுபோம்
காய்ந்தவுழ மண்குணத்தைக் காண்.

குணம்:—(இ-ள்) உழமண்ணுல் மேகவாயுவின் பிடிப்பு, இடுப்பு வாதம், வீக்கம், எண்ணெய் வழுவழுப்பு, தணிகளிலுண்டான அழுக்கு, பாஷாணத்திலுள்ள குற்றம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—ஷோனகாரி.

உபயோகிக்கும் முறை:—பூநீறு உண்டாகும்படியான உவர் நிலத்தை, மாசி, பங்குனி, சித்திரை முதலிய மாதங்களில் பார்வை யிடச் சிற்சில பாகங்களில் படைபடையாக மண்ணோடு உப்புங் கூடி இருக்கும் இவைகளை வண்ணான் வாரிச் சேகரப்படுத்துவதுண்டு. இந்த மண்ணுடன் சிறிது சுண்ணும்பும் ஆட்டுப் புழுக்கையும் சேர்த்து சலம் விட்டுக் கரைத்து வடிகட்டி அதில் ஆடைகளைத் தோய்த்துத் தோய்த்துச் சிறிது ஈரமிருக்கப் பிழிந்து வைத்துக் கொண்டு இவற்றை நீராவிப் பாண்டத்தின்பேரில் வரிசைக் கிரமமாக நடுவே சந்துவிட்டு அடுக்கிப் போர்வையிட்டு எரித்து ஆறினபின் ஆடைகளைச் சலத்தில் தோய்த்துக் கற்பாறையின்மீது முறைபோல் திருப்பி திருப்பி அடிக்க எவ்வித எண்ணெய்ச் சிக்கு அழுக்கு முதலியவைகள் இருப்பினும் போம்.

உழமண்ணும் சுண்ணும்பும் கூட்டிச் சலம் விட்டுக் குழம்பு பதமாகக் கரைத்து நடுவில் பாஷாணம் தாளகம் முதலியவற்றைக் கிழிகட்டித் தொங்கவிட்டு எரித்து எடுக்க நல்ல சுத்தியாகும். இந்த மண்ணைச் சலம் விட்டுக் கரைத்து வடிகட்டிக் குழம்புபதமாக்கி

காய்ச்சிப் பிடிப்பு, வீக்கம், நோய் உள்ள இடத்தில் தடவிக் காய விடக் குணமாகும்.

எவச்சாரம்

(Potassium Carbonas Impura)

குய்யங் களநா கோடிறுவா யிவ்விடநோ
யைய மிரைப்பிநம லாசனப்புண்—பையவுறு
கீடவிடஞ் சோபை கிராணியையும் பம்பரம்போ
லோடவிடு மெய்யவசா ரம்.

இதுவுமது

அட்டகுன்மத் தூலை யதிதூலை முட்டினத்தா
லோட்டிவரு வாத முதரநோய்—துட்டமந்த
நீடுகப நீரடைப்பு நீங்காப்பி லீகமிவை
யோடுமவா சாரத்தா லுண்.

குணம்:—(இ-ள்) எவச்சாரம்: விரணப் பிரமேகம், களோகம், ஜிக்வாலஜகம், தாளுகளசுண்டிகம், ஊர்த்வகுதம், கபவிருத்தி, சுவாசம், காசம், பகந்தரவிரணம், செந்துவிஷம், வீக்கம், வாத இரகணி, எட்டுவித வயிற்றுவலி, குத்தல், அதிதூலம், சுவாவித வாதம், சலோதரம், விஷாலஜகம், கபநோய், மூத்திரோச்சங்கம், வாதபிலீகம் இவைகளை யொழிக்கும் என்க.

செய்கை:—ஜடாக்கினி வர்த்தினி, மலகாரி, மூத்திரவர்த்தன காரி, ஆம்லநாசினி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த எவச்சாரத்தைத் தேக திடத்திற்கு ஏற்றவாறு 2, 3-குன்றியெடை ஒரு அவுன்ஸ் சுத்த சலத்தில் கலந்து தினம் இரண்டு வேளை கொடுப்பதுண்டு. இதனால் சிறுநீர் அதிகமாகப் போகும். வியர்வையும் அதிகமாக விடும். இவ்வாறு சில தினங்கள் கொடுக்க மேற்படி செய்யுளின்கண் கூறப்பட்ட நோய்கள் யாவும் குணமாகும். இதைத் தனியாக உபயோகிப்பதை விட இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகிப்பதே சாலச் சிறந்தது. எங்ஙனமெனின்:—

சங்க திராவகம்

சங்குச் சுண்ணம், எவச்சாரம், சர்ஜ்ஜசாரம், உழமண், நவச்சாரம், வெங்காரம் வகைக்குத் தோலா-4, இந்துப்பு, வளையலுப்பு,

சோற்றுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு வகைக்குத் தோலா-8 ஆக இவைகளை இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டுப் பொருத்தமான மண்வாலையைச் செருகிச் சீலைசெய்து, முறைப்படித் திராவகம் வாங்கிச் சீசாவில் அடைத்து வைத்துக்கொண்டு, 5, 7-துளி வீதம் ஒரு அவுன்ஸ் சலத்தில் விளாவி ஆகாரத்திற்குப் பின் கொடுத்துக் கொண்டுவர, மூத்திரக்கிரிச்சரம், சூதகவாயு, குன்மம், பிலீகம், அஜீரணம், கிராணி முதலிய நோய்கள் நீங்கும்.

இந்த உப்பின் விபரம் பொதுப்பாயிரத்தில் காரசார லவணம் இருபத்தைந்து என்னும் தலையங்கத்தின் கீழ் வரையப்பட்டுள்ளது.

ஏகம்பச்சாரம்

(Volcanic Ammonia)

இந்தச் சரக்கை விசேடமாக அவிழ்த்த பாகங்களில் கூட்டி உபயோகப்படுத்துவது அனுபவத்தில் இல்லை. இதனைப் பெரும் பாலும் முன்னோர்கள் வாதத் தொழிலில் உபயோகப் படுத்தியதாகச் சில நூல்களில் வரையப்பட்டுள்ளது. இதன் விபரத்தைப் பொதுப் பாயிரத்தில் வரையப்பட்டுள்ள காரசாரலவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின் கீழ்க் காண்க.

கடல்நுரை

(Spray)

காதுவலி சீழ்கோட்டல் கண்ணி லுறும்நோயும்
தீதாஞ் சொறிசிரங்குந் தீர்க்குங்காண்—ஓதும்
உடலெரிச்ச லுட்சூடு மோடிவிடும் மாதே
கடல்நுரையால் கண்டகுணங் காண்.

குணம்:—(இ-ள்.) கடலில் கிடைக்கும்படியான கடல்நுரைக்கட்டி களால் காதுவலி, சீழ்வடிதல், நேத்திர நோய், சொறி, சிரங்கு, உடலெரிச்சல், உட்சூடு முதலியவைகள் குணமாகும் என்க.

சேய்கை:—ஆம்லநாசினி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—கடல்நுரையைப் பொடிசெய்துவைத் துக்கொண்டு காதில் சீழ்வடிதல், காது வலி முதலியவற்றிற்கு 1, 1½-குன்றியளவு போட்டுப் பஞ்சி கொண்டு அடைத்து வைக்க இரண்டொரு நாளில் குணமாகும். இதைச் சிறு துண்டுகளாக நறுக்கி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டித் தினம்

இருவேளை காதில் விட்டுக்கொண்டு வரக் காதுவலி, சீழ்வடிதல் குணமாகும். இதைப் பாதாசம் கூட்டிச் சலம் விட்டு அரைத்துச் சிரங்குகளுக்குத் தடவிவர ஆறும். இதைப் பன்னீர் விட்டு அரைத்து வெய்யிற் காலத்தில் உதிரக் கொதிப்பினால் வரும் கொப்பளங்களுக்குப் போடக் குணமாகும். இதைப் பற்பொடியில் கூட்டிப் பல் துலக்கிவரப் பற்கள் பிரகாசம் அடையும். கடல்நுரையுடன் சிறிது கல்லுப்பு சேர்த்துப் பன்னீர் விட்டு நெகிழ அரைத்துக் கண்கட்டி, கண் அமரம் இவைகளுக்குப் போடக் குணமாகும். கடல் நுரையைக் கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து அகலிலடக்கிச் சீலை செய்து கோழிப் புடமிடவும். இப்படி மூன்று புடமிடப் பற்பமாகும். இதை வேளைக்குக் குன்றியெடை தேனில் தினம் இருவேளை கொடுக்க இருமல் குணமாகும். இன்றும் சிலர் இதனுடன் பவழமாவது தாளகமாவது கூட்டி அரைத்துப் புடம்போட்டு உபயோகப்படுத்துவதுண்டு. கடல் நுரையைப் பிரண்டைச்சாறு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் வைத்துச் சீலை செய்து கோழி புடமிடவும். இப்படி மூன்று புடமிடப் பற்பமாகும். இதை வேளைக்குக் குன்றியெடை திரிகடுகு சூரணத்துடன் கூட்டிக் கொடுக்க வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், செரியாமை இவைகள் குணமாகும்.

இந்தக் கடல்நுரையின் விபரத்தை பொதுப்பாயிரத்தில் காரசார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

கந்தகம்

(Sulphur)

கட்டிச் சொறிசிரங்கு காணுங் கிரந்திவகை
குட்டங் குறைநோய் குழிரணமும்—வட்டமிட்டே
வந்த புரைபுண்கள் வாய்கருமி யோட்டமிடும்
கெந்தகத்தின் பண்பிதுவே கேள்.

குணம்:—(இ-ள்.) பொது விதியாகக் கந்தகத்தினால் கட்டி, சொறி, சிரங்கு, கிரந்தி, குட்டம், குழிவிழும் ரணங்கள், வட்டமிட்டு வருகின்ற செம்படை, கரும்படை முதலியவைகள் தீரும் என்க.

செய்கை:—சிறு அளவில் வியதாபேதகாரி, சுவேதகாரி, பூதி கந்த நாசினி, முறைவியாதிரோதி, அதிக அளவில் இலகுமலகாரி.

இந்த இனத்தில் வாண கந்தகம் என்னும் குழா கந்தகம், வாண வெடி மருந்துகளுக்கும்; நெல்லிக்காய் கந்தகம் அவிழ்தப் பிரயோகங்களுக்கும்; பச்சைக் கந்தகம் என்கிற கறட்டு கந்தகம் சிறு பான்மை அவிழ்தங்களுக்கும்; பருப்பு கந்தகம் களிம்பு வகைகளுக்கும் உபயோகப்படும். பெரும்பாலும் நெல்லிக்காய் கந்தகமே உள்ளுக்குக் கொடுக்கும்படியான இனம் என்று ஒவ்வொருவரும் அறியக் கடவர். இதனை அமரிசிலை கந்தகம் என்று கூறுவதுமுண்டு. இந்துஸ்தான் பாஷையில் நெல்லிக்காய்க்கு அமிலசார் என்று கூறுவதுண்டு. இதனால் அமிலசார் கந்தகம் என்பதே அமிரிசிலை கந்தகமென மருவியது. இந்த கந்தகம் நன்றாய்ப் பழுத்த நெல்லிக்கனியின் நிறத்தை யொத்திருப்பதால் இதற்கு நெல்லிக்காய் கந்தகம் என ஆன்றோர்களால் கூறப்பட்டது. இன்னும் இதன் குண விசேடங்களை நெல்லிக்காய் கந்தகத்தின் தலையங்கத்தின் கீழ்க் கண்டறிக.

கந்தியுப்பு

(Bit Loban

உடல்கரையச் செய்துவிடு முட்டினமாம் போல்லாக்
குடல்வாதந் தன்னைவேட்டிக் கோல்லு—மடலாநந்
தந்திமத்த கத்தையடத் தாவுகோங்கை மாதரசே
கந்தியுப்பை நன்றாய்க் கழறு.

குணம்:—(இ-ள்.) கந்தி யுப்பானது அதிதூல ரோகத்தையும் குடலண்ட வாதத்தையும் போக்கும். ஆனால் வெப்பத்தை யுண்டாக்கும் என்க.

செய்கை:—உதரவாதஹரகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை உள்ளுக்குத் தனியாகக் கொடுப்பது. கிடையாது இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்:—

ஒரு பலம் கந்தி உப்புடன் மூன்று பலம் சோம்பு சேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½-தோலா வீதம் தினம் இருவேளை கொடுத்துவர ஈரல்களின் வீக்

கத்தைக் கரைத்துவிடும். சிறுநீரும் மலமும் சரியாகக் கழியும். சரீரம் பெருத்திருந்தால் இச் சூரணத்தை நாள் விட்டு, விட்டுக் கொடுத்துவர 40-நாளில் சுபாவ திட்டத்திற்குக் கொண்டுவரும். இன்னும் 10-பலம் கடுக்காய்த் தோலை ஒன்றிரண்டாக இடித்து வாயகன்ற கோப்பையில் போட்டு மூழ்க கோவையிலைச்சாறு விட்டுத் தினந்தோறும் ரவியில் வைத்துக்கொண்டு வருக. இது நன்றாய் உலர்ந்த பதத்தில் ஒரு பலம் கெந்தி உப்பைக் கூட்டி இடித்துச் சூரணம் செய்து ஒரு கோப்பை தட்டில் போட்டு 4, 5-எலுமிச்சம் பழச்சாறு விட்டுப் பிசறி நன்கு உலர்த்தி இடித்து சலித்து வைத்துக்கொள்க. வேண்டும்போது வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் வாயிலிட்டுச் சிறிது சலம் விட்டு விழுங்கவும். இப்படித் தினம் 2-வேளை ஆக ஒரு வாரம் சாப்பிட சுரக்கட்டி குன்மம் மூதலியவைகள் நீங்கும். இந்தச் சரக்கை வாங்கும்போது உயர்தரமாக இருத்தல் வேண்டும். கடைகளில் கிடைப்பதில் சில ஆபாசமான சரக்குகளும் உண்டு.

இந்த உப்பின் விபரத்தைப் பொதுப்பாயிரத்தில் கார சார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின் கீழ் இனிது விளக்கப் பட்டுள்ளது.

கம்பியுப்பு

(Nitras Potassae)

மல்லார்ந மட்டகுன்ம மாதநத ரக்கட்டி
கல்லா மதைப்புநீர்க் கட்டநக—லெல்லாமே
கம்பிகம்பி யென்றுங் கருவுண்டா மங்கிநின்ற
கம்பிகம்பி யென்றுரைக்குங் கால்.

இதுவுமது

சூதக வாயுவோடு சோணிதத்தின் வாதமும்போம்
வாதவலி குன்மமிவை மாறுங்காண்—மீதாங்
கொடிய வயிறிழியுங் கோழைகப மேகும்
வெடியுப்புத் தன்னை விளம்பு.

குணம்:—(இ-ள்) பஞ்சபூத உப்பில் தேயுவின் கூறுகிய கம்பி உப்பினுல் 8-வித குன்மம். கருப்பாசயக்கட்டி, சோபை, மூத்திரக்கிரிச்சாரம், நீர்சுறுக்கு, சூதிகாவாதம், வாதசோணிதம்,

சாமானிய வாத பித்த கப குன்மங்கள் பெருவயிறு, சிலேஷ்ம தோஷம் இவை யொழியும். பேரிளம் பெண் பருவங்கடந்த மாதர் கட்குங் கருப்பம் உண்டாகும் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி, சுவேதகாரி, ருதுவர்த்தனகாரி, தாது க்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதைக் கல்வத்திலிட்டு அரைத்து வேளைக்கு $\frac{1}{8}$, $\frac{1}{4}$-விராகனெடை தினம் 2, 3-வேளை அன்னம் வடித்த கஞ்சியிலாவது அல்லது வெண்டைக்காயை அரிந்து வேகப் போட்டு வடித்த நீரிலாவது போட்டுக் கலக்கிக் கொடுக்கவும். நாவிற்கு ருசி தேவையாயின் தேனாவது அல்லது சர்க்கரையையாவது சிறிது சேர்த்துக் கொள்ளலாம். இது சுரக் கொதிப்பையும் தாகத்தையும் சாந்தப்படுத்தும். இன்னும் சுரத்தின் வேகத்திஞல் சிவந்து மஞ்சளித்த சிறுநீர் தெளிவு பெற்று வெளுக்கும். இதனைச் சாதாரணமாக அம்மை சுரம், தேகத்தில் கண்டவீக்கம், கபக்கட்டு, வெள்ளை, கணுச்சூலை, சுரத்தின் வேகத்தால் மேலாவது அடியாவது நோக்கி வருகின்ற இரத்தப் போக்கு முதலியவற்றிற்குக் கொடுப்பதுண்டு. வெடியுப்பு, ஏலக்காய், வால்மிளகு, பலப்பக்கல், சாம்பிராணி, மஞ்சள் இவைகள் சமனெடையாகக் கல்வத்திலிட்டு அரைத்து வேளைக்கு 10, 15-குன்றியெடை நெய், சர்க்கரை முதலிய அனுபானங்களில் கலந்து கொடுத்துக் கொண்டுவர நீர்க்கட்டு, நீர்ச் சுறுக்கு, வெள்ளை முதலியவைகள் குணமாகும்.

இரண்டு பலம் வெடியுப்பை நன்றாய்ப் பொடி செய்து ஒரு பாத்திரத்தில் போட்டு $\frac{1}{2}$-படி சுத்த சலம் விட்டு நன்றாய் கலக்கி அதில் 4, 5-மடிப்புள்ள சுத்தமானத் துணியைத் தோய்த்துக் கீல்களில் கண்ட நோய், வீக்கம் முதலிய விடங்களில் போட்டு வைக்கவும். இந்தத் துணி வறட்சிக் கொள்ளாம லிருக்கும் பொருட்டு அப்போதைக்கப்போது அந்தச் சலத்தை விட்டுக் கொண்டு வருக. இப்படி சில மணி நேரம் செய்துவரக் குணமாகும்.

இதைப் போலவே 5-தோலா வெடியுப்புடன் 5-தோலா நவச்சாரம் கூட்டிக் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து ஒரு பாத்திரத்தில் போட்டு $\frac{1}{2}$-படி சுத்த சலம் விட்டுக் கலக்கி 4, 5-மடிப்புள்ள துணியிற் றோய்த்து தலைவலி, சன்னி முதலியவற்றிற்கு நெற்றியிற் போட்டு வரக் குணமாகும். துணி வறட்சி கொள்ளக் கொள்ள வெவ்வேறு புதியத் துணியைத் தோய்த்துத் தோய்த்துப் போட்டுக் கொண்டு

வர நற்குணத்தை யளிக்கும். இன்னும் இதை அடி, வெட்டுக்காயம் முதலியவற்றிற்குப் போட கோலைச் சாந்தப்படுத்தி வீக்கத்தை அதிகப்படுத்தாமல் குணப்படுத்தும். இந்த வெடியுப்பைக்கொண்டு செய்யும் சில அனுபவ முறைகளாவன:—

வெடியுப்பு பற்பம்

ஐந்து பலம் புலி மலத்தையாவது, நாய் வெண்மலத்தையாவது அல்லது இரண்டும் கிடைக்கப் பெறுத சமயம் ஆமையோட்டுத் தூளையாவது ஒரு குடுவையில் பாதி போட்டு அதன்மேல் 2-பலம் வெடியுப்புக் கம்பிகளைப் பரப்பி மிகுதியுள்ளத் தூளைப்போட்டு அழுத்தி வாய்மூடிச் சீலைசெய்து உலர்த்தி 10-வறட்டியில் புட மிடவும் ஆறினபின் சோதிக்க வெடியுப்பு வெளுத்துப் பற்பமாக இருக்கும். சாம்பலைத் தள்ளி வெடியுப்பை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதில் குன்றியெடை இளநீர், நீர்பேதிக்கியாழம் முதலியவற்றில் அனுபானம் செய்து கொடுக்கச் சிறுநீர் அதிகமாக வெளிப்படும். இதை நிறுத்த வேண்டின் இரச செந்தூரத்தை குன்றியெடை தேனில் கொடுக்க உடனே நீரைக் கட்டிவிடும்.

வெடியுப்பு அன்னபேதி செந்தூரம்

ஒரு பலம் வெடியுப்பு ஒரு பலம் அன்னபேதி இவை யிரண்டையும் பொடி செய்து ஒரு இரும்புக் கடாயில் போட்டு அடுப்பிலேற்றி எரிக்க முதலில் உருகி உறையும். பின்னும் சிறிது தீயை அதிகப்படுத்தி எரிக்க உருகும் அத்தருணம் 5, 6-சேங்கொட்டைகளின் குமிழை நீக்கித் துண்டுத் துண்டாக நறுக்கி அதில் போட்டு அயக் குச்சியால் கிளறிக் கொடுத்துக் கொண்டு வரக் கொட்டைத் துண்டுகள் தீயும். உப்பு உறைந்து சிவந்து வரும். அப்போது கீழிறக்கி ஆறவிட்டுக் கொட்டைகளின் கரியை நீக்கிக் கல்வத்திலிட்டு அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக. வேளைக்குப் பெரியவர்களுக்கு 1-குன்றி யளவாகவும் குழந்தைகள் வயதுக்குத் தக்கவாறு $\frac{1}{4}$, $\frac{1}{2}$-குன்றியளவாகவும் தேனில் தினம் 2-வேளைக் கொடுத்து வரச் சிறு நீரை அதிகப்படுத்தும். தேகத்தில் எப்பாரிசத்திலேனும் வீக்கம் இருப்பின் குணப்படுத்தும். சுரக்கட்டி உள்ளவர்களுக்கு 10-நாள் கொடுக்கக் கட்டி கரைந்து விடும். சுரக்கட்டிக்கு இதைவிடச் சிறந்த மருந்தில்லை யென்றே அனுபவத்தில் கண்டது இவ்விரு முறைகளும் சொற்ப அனுபவத்தின் பேரில் செய்யு

வேண்டும். ஒருமுறை கெட்டாலும் கெடும் இரண்டாவது முறை செய்யும்போது அனுகூலமாகும்.

இந்தக் கம்பியுப்பின் விபரத்தைப் பொதுப்பாயிரத்தில் கார சார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

கருப்பூர சிலாசத்து
(Silajit or Alum Earth of Nepal)

சொல்லுஞ் சிலாசத்தாற் சோணிதமும் நீர்ச்சுநக்கும்
கல்லடைப்பு மேகங் கழிந்துபோம்—மெல்லிடையார்க்
கின்பந் தணிக்கொடுக்கு மில்லகத்தில் நாட்டமுறும்
துன்பஞ் சிறிதிலையாஞ் சொல்.

குணம்:—(இ-ள்) சிலாசத்தினுல் சோணிதவாதம், கிரிச்சரம், அஸ்மரி, கீழ்ப்பிரமேகம், விந்து நஷ்டம் இவைகள் போம் என்க.

செய்கை:—சமனகாரி, பலகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சரக்கானது நேப்பால் ராஜ்யத்தில் துவர் பூமியிலிருந்து வில்லை, வில்லையாக வெட்டி எடுக்கப்பட்டதாகும். இது கனத்த வெள்ளை அப்ரேக்கைப் போலும் ஜப்பான் பலகைக் கற்பூரத்தைப் போலும் மேனியில் ஒத்திருக்கும். இதன் காரணத்தை முன்னிட்டே கற்பூர சிலாசத்து எனக் கூறுவர். இது கோபிச்சந்தனம், காவிக்கல், ஈமக் கட்டி முதலிய இனங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்தக் கற்பூர சிலாசத்தைத் தனியாக உள்ளுக்கு கொடுப்பது கிடையாது. இதனைப் பற்பம் செய்து உபயோகப்படுத்துவது உண்டு. அவற்றுள் சில அனுபவ முறைகளாவன:—

கற்பூர சிலாசத்துப் பற்பம்

ஒரு பலம் கற்பூர சிலாசத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாள் ஊறப்போட்டு அலம்பி மீண்டும் பசுவின் பாலில் மூன்றுநாள் ஊறப்போட்டு எடுத்து அதின்பேரில் ஒரு சிறிய தேங்காய்ப் பிரமாணம் கீழ்க்காய் நெல்லி சமூலத்தை அரைத்துக் கவசம் செய்து சீலை செய்து 30, 35-வறட்டியில் புடமிட நல்ல பற்பமாகும். வேளைக்கு 1-அல்லது ½-குன்றி எடை நெய், வெண்ணெய்

முதலிய அனுபானங்களில் அந்தி சந்தி கொடுத்து வரச் சீதபேதி, தேகவெப்பம், நீர்ச்சுறுக்கு, நீர்க்கட்டு முதலியவை குணமாகும்.

வேறு முறை

இரண்டு பலம் கற்பூர சிலாசத்தை எலுமிச்சம் பழம் சாற்றி லும், கற்சுண்ணும்புத் தெளிவு நீரிலும், மும்மூன்று நாள் ஊறப் போட்டு எடுத்து அலம்பி வைத்துக் கொள்க. அதன்பின் கீழ்க்காய் நெல்லிச் சமூலம், கரசனங்கண்ணி சமூலம், பொன்னங்கண்ணி சமூலம், முடக்கத்தான் சமூலம், நல்லவேளை சமூலம், அம்மாம் பச்சரிசிச் சமூலம், சோற்றுக் கற்றுழை, கோவையிலை இவைகள் வகைக்கு இரண்டு பலம் வீதம் உரலில் போட்டு இடித்து உறவாக்கி அதனை அம்மியில் வைத்து அரைத்து முன் சித்தப்படுத்தி வைத் துள்ள கற்பூர சிலாசத்து கட்டிக்குக் கவசம் செய்து அதன்பேரில் மண்சீலை ஏழுசெய்து ஒருநாள் காயவைத்து, மறுநாள் 35, 40-வறட் டியில் புடமிட்டு ஆறினபின் உள்ளிட்ட மருந்தைப் பார்க்கப் பூத்திருக்கும். இதனை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது அரை அல்லது ஒரு குன்றி எடை நெய், வெண் ணெய் முதலிய அனுபானங்களில் கொடுக்க, வெள்ளை, நீர்ச்சுறுக்கு, நீரடைப்பு, உட்காங்கை முதலியவை குணமாகும். தாது பலப்படும்.

கருப்பூரம்

(Camphora Oficinarum)

கிருமிசல தோஷம் கிளைவலிப்புச் சந்நி
போநமழம்ந்த மங்கிபட்ட புண்ணே—டோரிசுரங்கள்
வாந்திபித்தஞ் சீதமுறு வாதஞ் செவிழகநோய்
சாந்திகநப் பூமொன்றுற் சாற்று.

குணம்:—(இ - ள்) கருப்பூரத்தினால் கிருமி, நீரேற்றம், இசிவு சந்நிபாதம், வாதாலசகம், தீப்புண், கோர சுரம், சர்த்தி, பைத்தி யம், சிலேத்துமவாதம், கர்ணசூலை, சிலேத்தும முகபாக ரோகம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை;—உற்சாககாரி, சுவேதகாரி, வேதனசாந்தினி, அங்காகர்ஷண நாசினி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை அவிழ்தங்களில் கூட்டிக் கொடுக்க ஐம்புலன்களின் சக்தியை அதிகரிக்கச் செய்யும். மூளைக்கு

உஷ்ணத்தைத் தாக்கி நித்திரையை உண்டாக்கும். அளவு அதிகப் படின் நித்திரை பங்கப்படும். இன்னும் இது உதிரபீநசம், உதிரக் கக்கல், உஷ்ணத்தைப்பற்றிய பேதி, வியர்வை, தாகம். ஈரல்களி லுண்டான புண்கள், இருமல், அஸ்திசுரம், நீர்க்கடுப்பு முதலியவற் றைச் சாந்தப்படுத்தும். இத்துடன் அம்பர், கஸ்தூரி முதலியவற் றைச்சேர்த்துக் கொடுக்க ஆத்மசக்தியை அதிகப்படுத்தும். இதனைச் சீலையில் முடிந்து வைத்துக்கொண்டு அரைமணி நேரத்திற்கு ஒரு முறை மோந்துகொண்டுவரச் சுரதோஷமும் விஷக் காற்றினு லுண் டான தோஷமும் நீங்கும். இதனைப் பற்பொடியுடன் சேர்த்துப் பல் தூலக்கிவரப் பல் கூச்சம், பல்லீறு அழுகல் குணமாகும். விஷ பேதிக்காகச் சிகிச்சை செய்யும்போது இதனை வேளைக்கு 2, 5-குன்றி எடை அனுபானமாகச் சேர்த்துக் கொடுக்க விரைவில் குணப்படும். இதனுடன் கறிமஞ்சள், ஓமம் கூட்டி யரைத்துத் தேக முழுவதும் போட்டுத் தேய்க்க எவ்வளவு சீதளம் மிகுந்திருப்பினும் தேகத்தில் உஷ்ணத்தைப் பிறப்பிக்கும். இதனைக் கொண்டு செய்யும் சில அவிழ்தங்களாவன:—

கற்பூராதி மாத்திரை

கற்பூரம் விராகனெடை-1, அபினி விராகனெடை-1, பொரித்த பெருங்காயம் விராகனெடை-1 இவைகளைக் கல்வத்தில் போட்டுத் தூளித் தூளியாகச் சலம் விட்டு அரைத்து நன்றாய் உறவாகி மெழுகு பதம் வரும்போது பச்சைப்பயறுபோல் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் மூன்று வேளை வெற்றிலையில் வைத்து மென்று தின்னும்படி கொடுத்துவர எவ்வித சலதோஷமும் அதனு லுண்டான கபக்கட்டும் நீங்கும். இன்னும் இரண்டு மாத்திரை வீதம் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு 3-மணி நேரத்திற்கு ஒரு முறை தேனில் அனுபானம் செய்து கொடுத்துக்கொண்டுவர அஜீரணம், பேதி, விஷபேதி முதலியவைகள் குணமாகும்.

கற்பூர சுண்ணம்

ஒரு பலம் கற்பூரத்தைக் கல்வத்தில் போட்டுக் கற்பூரவள்ளிச் சாறு விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து நிழலில் உலர்த்தி அகலில் அடக்கிச் சீலை செய்து மணல் மறைவில் வைத்து ஒரு வறட்டியைப் பிட்டு வைத்து புடமிடவும். இப்படி 2, 3-முறை

அரைத்து அரைத்துப் புடம் போடக் கற்பூரம் புகையாமல் ஜெயப் படும். இதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டுப் புடம் போட்டு எடுத்த மருந்தில் குன்றியளவுள்ள துண்டைத் தரையின்மேல் வைத் துக் கொளுத்திவிடச் சிறிது எரிந்து அடங்கிவிடும். அப்போது கீழே காரமுடையதாகச் சத்து சுண்ணம்போலிருக்கும். இன்றேல் மீண்டும் முன்போல் 2, 3-முறை அரைத்து அரைத்து வில்லை தட்டி இப் பரிட்சைக்கு வரும் வரையில் மணல் மறைவில் புடமிட்டு எடுக்க வும். முடிவில் இந்த வில்லையை ஒரு சுத்தமான கல் தரையில் வைத்துக் கொளுத்திவிடச் சிறிது எரிந்து அடங்கிப் பற்பமாகும். எடை யதிகமாகக் குறையாது. இதை அரைத்துச் சீசாவில் பத் திரப்படுத்துக. சரியாய் அடைத்து வைக்காவிடின் நாளுக்கு நாள் கற்பூரமானது காற்றில் கரைந்து போய்விடும். இதற்குக் கல் கார்க்கிட்ட சீசாவே அதிகம் சிறந்தது. இதை வேளைக்கு 1, 2-அரிசி எடை தேனில் கொடுக்கச் சீதளத்தைக் கண்டிக்கும். சூதகத்தை யுடைக்கும். சந்நி சுரதோஷங்களை நிவர்த்திக்கும்.

குறிப்பு:—கற்பூரவள்ளிக்கும் ஓமவள்ளிக்கும் உள்ள வித்தியா சத்தை சித்த வைத்திய பதார்த்தகுண விளக்கம் மூலவர்க்கத்தில் காண்க.

இந்தக் கற்பூரத்தின் விபரத்தைப் பொதுப்பாயிரத்தில் கார சார லவணம் இருபத்தைந்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

கல்நார்

(Asbestos)

காசபித்தம் வாதங் கடுப்பீறு நோயேரிவு
வீசுசர்த்தி நீரடைப்பு விந்துநட்டம்—பேசுமசை
தின்னுரைக் கூவுமந்தந் தீக்குடர்க்கால் தாகமிவை
கன்னுரைக் கூவவிடுங் காண்.

குணம்,—(இ - ள்) கல்நாரினால் பித்தகாசம், வாதரோகம், பற்குடைச்சல், பல்லரணை, நீர்க்குறி யெரிச்சல், பித்த வாந்தி, மூத்திராசீதம், கூணை சுக்கிலம், அஜீரணம், பித்தக் குடல் வாதம், பித்த தாகம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சங்கோசனகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இக் கல்நார் களிப்பு மண் பூமிகளில் கிடைக்கும். இது பார்வைக்குக் கற்களைப் போலவும் பிளந்தால்

நார்த்தன்மையைப் பெற்றுமிருப்பதால் இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இதில் நாட்டுக் கல்நார், சீமைக் கல்நார், எருமைக் கொம்பு கல்நார் என மூன்று இனங்களுண்டு. இவைகள் தேச வளத்திற்கு ஏற்றவாறு நிறபேத முதலியவற்றால் ஒன்றுக்கொன்று குணத்தில் சிறிது மாறுதல் அடையும். ஆனாலும் ஏறத்தாழ குணம் ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும். இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது கிடையாது. புடமிட்டு பற்ப செந்தூரங்களாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

நாட்டுக் கல்நார் பற்பம்

மூன்று பலம் நாட்டுக் கல்நாரைச் சுத்த சலத்தில் நன்றாய் அலம்பி வெய்யிலிற் காயவைத்துச் சிறு துண்டுகளாக நறுக்கி ஓர் இரவு இளநீரில் ஊறப்போட்டு எடுத்தலம்பிக் காயவைத்து கல்வத்திலிட்டுச் சிறு செருப்படைச் சாற்றால் நான்கு சாமம் அரைத்துச் சிறு வில்லைகளாகத் தட்டி நன்கு உலர்த்தி ஒரு அகலில் ஒன்றன்மீது ஒன்று படியாமற் பரப்பி, மேல் அகல் மூடிச் சீலைசெய்து, 20-வறட்டியிற் புடமிடவும். இப்படியே மூன்று முறைகையில் அரைத்தரைத்து முன்போல் வில்லை செய்து அகலில் அடக்கி மேல் அகல் மூடிச் சீலை செய்து 10-புடமிட்டுக்கொண்டு வர உயர்தரமான பற்பமாகும். இதனில் சீவனுக்கு 1, 1½-குன்றியெடை நெய், வெண்ணெய் இவைகளில் தினம் இருவேளை கொடுத்துவர நீர் எரிச்சல், வெள்ளை, தேககாங்கை, எலும்புருக்கி முதலியவற்றை நீக்கி நரம்புகளுக்கு முறுக்கையேற்றும். பெண்களுக்குப் பாலளித்ததனாலாய ஸ்தனத்தின் தளர்ச்சியை நீக்கும்.

சீமைக் கல்நார் பற்பம்

இரண்டு பலம் சீமைக் கல்நாரைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கற்சுண்ணாம்பு தெளிவு நீரில் ஒரு நாள் ஊறப்போட்டு, மறுநாள் எடுத்துலர்த்தி வைத்துக்கொள்க. பிறகுப் பொடுதலையை யரைத்துச் சுமார் சிறு தேங்காய்ப் பிரமாணம் திரட்டி, அதனிடையில் முன் சித்தப்படுத்தியுள்ள துண்டுகளைச் செருகி, மண்சீலை செய்து 30-வறட்டியிற் புடம் போடக் கல்நார் நீற்றிருக்கும். இதனை யரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்தப் பற்பத்தில் 1, 1½-குன்றியெடை நெய், வெண்ணெய் முதலியவைகளில் தினம் இருவேளை அனுபானஞ் செய்து கொடுத்துவர

வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், நீர்க்கட்டு, தேககாங்கை, கப ரோகங்கள் முதலியவைகள் குணமாகும். இதனைக்கொண்டு பல் துலக்கி வரப் பல்லாட்டம் நீங்கி யுறுதிபெறும்.

எருமைக் கொம்புக் கல்நார் பற்பம்

இரண்டு பலம் எருமைக்கொம்புக் கல்நாரைச் சிறுத் துண்டுக ளாகப் பிளந்து ஒரு பழகின சட்டியில் போட்டு ½-படி பசுவின் பால் விட்டு அடுப்பிலேற்றிப் பால் சுண்ட எரித்து, சலம் விட்டு அலம்பிக் காயவைத்துக் கல்லுரலில் போட்டுக் கடப்பாறையால் நன்கு இடித்து மாவாக்கிக் கல்வத்தில் போட்டுக் கடுக்காய்க் கியாழம் விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் அடக்கிச் சீலை செய்து உலர்த்தி 40, 50-வறட்டியில் புடமிடவும். வெளுத்த சிவப்பாக இருக்கும். இன்றேல் முன்போல் ஷை கியா முத்தி லரைத்துப் பின்னும் ஒரு புடம் போட்டு எடுக்க நல்ல பற்ப மாகும். வேண்டும்போது குன்றி எடை தினம் இருவேளை நெய், வெண்ணெய் முதலிய அனுபானங்களில் கொடுத்து வரச் சில நாளில் பெருத்த சரீரம் இளைக்கும். வெள்ளை, நீர்க்கட்டு, நீர்ச்சுருக்கு நீரெரிச்சல், தேகவெப்பம் முதலியவை குணமாகும்.

கல்மதம்

(Rock Alum)

கண்ட பிணிமேகங் கல்லோடுநீ ணடைப்பு
வண்டற் கிரிச்சரநோய் மாபிரமி—யுண்டலினுற்
பன்மதஞ்சேர் தாதுநட்டம் பன்னுமிந்நோய்க் கூட்டத்துட்
கன்மதஞ்சே ரக்கரக்குங் காண்.

குணம்:—(இ-ள்.) கல்மதம்; மேகத்தைச் சார்ந்த பல மூத் திர ரோகங்களையும், கல்லடைப்பு, நீரடைப்பு, சதையடைப்பு, தடித்த மூத்திர கிரிச்சரம், வாதப் பிரமியம் அதிகக் கொழுமையி னால் உண்டாகும் தாதுவின் நஷ்டம் முதலியவைகளையும் நீக்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இது நேப்பாளம் முதலிய மலைப் பிர தேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட கல். இதில் படிக்காரச் சத்து மிகுந்திருக்கும். சலத்தில் கரையாது. மாவுக்கல்லைப்போல்

வழுவழுப்பாக இருக்கும். இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது கிடையாது. இதனைப் பெரும்பாலும் பற்பமாகச் செய்து கொடுப்பது வழக்கம். அவற்றுள் சில முறைகளாவன:—

கல்மத பற்பம்

கல்மதம் பலம்-1, படிக்காரம் பலம்-1 இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுச் சோற்றுக் கற்றுழைச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் வைத்து மேல் அகல் மூடிச் சீலைசெய்து 25-வறட்டியில் புடமிட நல்ல பற்பமாகும். இதனைக் குன்றியெடை அந்தி சந்தி நெய், வெண்ணெய் முதலியவற்றில் கொடுக்கச் சீதபேதி, இரத்தபேதி, உஷ்ணபேதி, நீர்க்கட்டு, நீர் எரிச்சல் இவைகள் போம்.

வேறு முறை

இரண்டரைப் பலம் வெங்காரத்தையும், இரண்டரைப் பலம் வெடியுப்பையும் பொடிசெய்து ஓர் அகன்ற மட்பாண்டத்தில் போட்டுக் கரி நெருப்பனலில் வைத்து உருகாமலும் பொங்காமலும் இருக்கும்படி சிறிது வெதுப்பி ஆறவிட்டு உப்புகளை ஓர் வாயகன்ற தட்டைக் கோப்பையில் போட்டுத் தினந்தோறும் பனியில் வைத்துக்கொண்டுவர நீர்க்கசிவு உண்டாகிச் சலமாகும். அப்போதைக்கப்போது தட்டிலுள்ள நீரை வடித்து வைத்துக்கொள்க. இது ஒரு விதமான ஜெயநீர் ஆகும். அப்பால் கல்மதம், நாட்டுக் கல்நார், கருப்பூர சிலாசத்து, பலகறை, காந்தம் வகைக்குப் பலம்-½ வீதம் கல்வத்திலிட்டு முன் சித்தப்படுத்திய ஜெயநீரால் இரண்டு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் வில்லை தட்டி உலர்த்தி அகலில் அடக்கிச் சீலைசெய்து 20-வறட்டியில் புடமிடப் பற்பமாகும். இதனை வேளைக்கு 1-குன்றியெடை தினம் இருவேளை நெய், வெண்ணெய் இவைகளில் அனுபானம் செய்து கொடுத்துவர நீர்ச்சுருக்கு, வெள்ளை, நீரடைப்பு, மேகசுரம் முதலியவைகள் குணமாகும்.

கல்லுப்பு

(Rock Salt)

ஐயமறுஞ் சூல யரோசிபித்தஞ் சர்த்தியோடு
வேய்யபிணி யட்டகுன்மம் விட்டேகும்—பெய்வளையே
வாதமதி தாக மலக்கட்டும் போழலகிற்
கோதறுகல் லுப்பைக் கொடு.

குணம்:—(இ - ள்) கல்லுப்பினுல் கபம், குத்தல், அருசி பித்தம், வாந்தி, உஷ்ணவாயு, எட்டுவித குன்மம், வாதரோய், நாவறட்சி, மலபந்தம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—தாது கூஷ்ணரோதி, கிருமிநாசினி, சோபா நாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சரக்கானது சாதாரணமாகச் சோற்றுப்பைப்போலவே இருக்கும். ஆனல் ஒவ்வொரு கற்களும் உருவத்தில் சற்றேறத் தாழ இரண்டு மூன்று மடங்கு பெருத்திருக் கும். ஆதலால் இதற்குக் கல்லுப்பென்று பெயருண்டாயிற்று. இதைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பதில்லை. இதனுடன் இதர லவணங்களைக் கூட்டிப் பற்பம், சூரணம் முதலியவைகளாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சிலவற்றை அடியில் காண்க.

பஞ்சலவண பற்பம்

கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, சோற்றுப்பு, வெடியுப்பு ஆகப் பஞ்ச லவணத்தை வகைக்கு ஒரு பலம் வீதம் கல்வத்திலிட்டு குமரி, நொச்சி, பிரண்டை, முருங்கைப்பட்டை, குப்பைமேனி இவற்றின் சாற்றுல் ஒவ்வொரு சாமம் தனித்தனி அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் அடக்கிச் சீலைசெய்து 20-வறட்டியில் புடமிடப் பற்பமாகும். அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேளைக்கு 2, 3-குன்றியெடை புளித்த மோரிலாயினும் நீராகாரத்தி லாயினும் போட்டுக் கொடுக்கக் குன்மம், வயிற்றுவலி, அண்டவாயு, கிராணி, செரியாமை, மகோதரம், தேகக்குடைச்சல் தீரும்.

பஞ்சலவண தயிர்சுண்டி சூரணம்

முற்கூறப்பட்ட பஞ்ச லவணம் வகைக்குப் பலம்-1, சுக்குத் தூள் பலம்-5 இவற்றை ஒரு அகன்ற கோப்பையில் போட்டு ½-படி புளிப்பு எருமைத் தயிர் விட்டுக் கலக்கிக் கலக்கி ரவியில் வைத்து நன்றுய் உலர்ந்தபின் இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் புளித்த மோரில் போட்டுக் கொடுக்க முன் முறையில் குறிப்பிட்டுள்ள நோய்கள் தீரும். இந்த உப்பின் விபரம் பொதுப்பாயிரத்தில் கார சார லவணம் இரு பத்தைந்தில் காண்க.

கறியுப்பு

(Sodium Chloridum)

மந்தம் பொருமலறும் வாயுவும்போந் தீபனமாந்
தொந்தித்த வையந் தோடருமோ—சந்ததழ
மக்கினியின் புட்டி யடருங் கறியுப்பாற்
சிக்குகின்ற நீரிறங்குஞ் செப்பு.

குணம்:—(இ - ள்.) கறியுப்பினால், அசீரணம், வயிற்றுப்பிசம், வாதாதிக்கம், வாதகபம், நீரடைப்பு இவைகள்போம். பசியும், சமாக்கினியும் விருத்தியாகும்.

செய்கை:—தாதுகூணசோதி, சோபாநாசினி, கிருமி நாசினி, மலகாரி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாகக் கறியுப்பானது இயற்கையில் பிணி தீர்க்கும் மருந்தாகும். இரத்தத்திற்கும் உப்பிற்கும் சம்பந்தம் அதிகமுளதென்று அறிதல் வேண்டும். எங்ஙனமெனில், அநேக வியாதிகள் இச் சரீரத்தில் உப்பின் குறைவால் ஏற்படுகிறது. அதிகமாக உபயோகப்படுத்தலும்கூடாது. இந்த உப்பை அசீரணம், குன்மம், பாலபேதி, முறைக் காய்ச்சல், இரத்தவாந்தி, கூஷயம், நீரடைப்பு முதலிய பிணிகளுக்குச் சிறந்ததென்று கூறப்பட்டுள்ளது. சாதாரணமாக உப்பை வறுத்துச் சீலையில் முடிச்சுக் கட்டி, வீக்கம், சந்துவாதம், கில்வாதம் முதலியவைகளுக்குத் தாளக்கூடிய சூட்டில் ஒற்றடம் கொடுக்கக் குணமாகும். ஆணி, முள் முதலியவைகள் காலில் தைத்துப் பிடுங்கி விட்டபோது அவ்விடத்தில் உண்டான வலியை நீக்குவதற்குச் சிறிது உப்பைச் சீலையில் முடிந்து நல்லெண்ணெயை நெருப்பனலில் காய்ச்சி, அதில் தோய்த்துத் தாளக்கூடிய சூட்டில் ஒற்றடம் கொடுக்க வலி நீங்குவதுடன் சீழ் பிடிக்காமல் ஆறிவிடும். உப்பையும் புளியையும் சமபாகமாக ஜலம் விட்டு அரைத்துக் குழம்பு பதத்தில் கொதிக்க வைத்து அடிபட்ட வீக்கங்களின் மேல் தடவி வர இரத்தத்தைக் கரைத்து வீக்கத்தைக் குறைக்கும். வெள்ளிக் காடிக்காரத்தை விஷமிக்கத் தின்றவர்களுக்குச் சிறிது கறியுப்பை ஜலத்தில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்க அதன் நஞ்சை முறித்து விடும். சிறிது கறியுப்புடன் அடுப்புக்கரி கூட்டிப் பல் தேய்த்து வர ஈறு வீக்கம், ஈறு சுரப்பு, பல்வலி முதலியவைகள் குணமாகும். சாதாரணமாக ஒரு அவுன்ஸ்

வாஸ்லினில் 20-குன்றி எடை கறியுப்பை நன்றாய்த் தூள் செய்து கூட்டி அரைத்துச் சொறி, சிரங்கு, விரணம் முதலியவற்றிற்குத் தடவி வர விரைவில் ஆறும். இன்னும் இதனை வெட்டுக் காயம், வெந்த கொப்பளம் முதலியவற்றிற்கு மேலுக்கு உபயோகிக்கச் சிறந்த களிம்பு ஆகும். சிறிது கறியுப்புத் தூளுடன் புளிகூட்டி மத்தித்துத் தேள் கொட்டிய இடத்தில் தேய்க்க விஷ மிறங்கும். இன்னும் காதின் துவாரத்தின் வழியாய் ஈ, எறும்பு, வண்டு, ஏதேனும் கிருமிகள் சென்று உபத்திரவம் செய்யும்போது சிறிது உப்புடன் ஜலம் விட்டுக் கரைத்துக் காதின் வழியாகச் செலுத்த அவைகள் மரித்துப்போம். பின்னர் காது குரும்பியைக்கொண்டு அக் கிருமிகளை வெளிப்படுத்த வேண்டும். இரத்தக் குறைவினால் முகம் வெளுத்துக் கண்கள் ஆழ்ந்து போவதும் பால்ய பிராயமுடையவர்கள் விருத்தாப்பியர் அல்லது நோயாளிகள் போலத் தோற்றுவதும், முகத்தில் மினுமினுப்புற்று எண்ணெய் முகமாகத் தோற்றுவதும் சிறுகுடலும், பெருகுடலும், ஈரலும், குண்டிக் காய்களும் தங்கள் வேலைகளைத் தாமதமாகச் செய்வதினாலேயேயாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் சிறிது உப்பைக் காய்கறி பதார்த்தங்களின் உருசி கெடாமல் சிறிது அதிகமாகக் கூட்டி உண்ணுவது சாலச் சிறந்தது. அகத்து உறுப்புக்கள் வேலைநிறுத்தம் செய்யும் காலத்து இரத்த ஓட்டம் தடைப்பட்டு அழுக்குகள், உடலில் தங்கும். அத்தருணம் ஒரு தேக்கரண்டி உப்பை $1\frac{1}{2}$-பைன்ட் நீராகாரத்தில் போட்டுத் தினந்தோறும் அதிகாலையில் சாப்பிட்டு வரத் தேகத்தில் உற்சாகமும் வாலிபத்தன்மையும் உண்டாக்கும். இந்தக் கறியுப்பைச் சாதாரணமாக 5-முதல் 10-குன்றி எடை கொடுக்கத் தீபனகாரியாகும். 4-முதல் 6-விராகனெடை கொடுக்கப் பேதியாகும். 1-அல்லது $1\frac{1}{4}$-பலம் உப்பை வெந்நீரில் கலந்து கொடுக்க வாந்தியாகும். உப்பு கரைத்த ஜலத்தை ஆசன வழியில் செலுத்த வயிற்றிலுள்ள கிருமிகள் வெளிப்படும். இந்தக் கறியுப்பைப் பாகப்படி பற்பமாகவும் செந்தூரமாகவும் செய்து உபயோகப்படுத்துவது முண்டு. அவற்றுள் சில அனுபவ முறைகளாவன:—

கறியுப்புச் செந்தூரம்

$\frac{1}{2}$-படி கறியுப்பைக் கல்வத்தில் போட்டுப் புளியாரை இலைச் சாற்றால் நான்கு சாமம் அரைத்துக் காலணு அகலம் கனம் உள்ள

வில்லைகளாகச் செய்து ரவியில் உலர்த்தி ஒரு அகலமான அகலில் பரப்பி அதன்மீது மற்றோர் அகலை மூடிச் சீலை செய்துலர்த்தி வைத்துக் கொள்க. அப்பால் 10, 15-வறட்டிகளைப் பிட்டுத் தரையில் புடம்போல் அடுக்கித் தீ மூட்டி விடவும். இது நன்றாய் மேல்வறட்டி முதல் அடி வறட்டி வரையிலும் தீப்பற்றி யெரிந்து அனல் வீசும் போது ஒரு குறடு கொண்டு அரைப்பாகம் மேலிருக்கப்பட்ட வறட்டிகளை அப்புறப்படுத்தி முன் சித்தப்படுத்தியுள்ள அகலை வைத்து மீண்டும் அவ்வறட்டிகளை அதன்மேல் அடுக்கிவிடவும். புடமானது சாங்க சீதளமாக ஆறியபின் அகலை எடுத்துச் சீலையைப் பிரித்து உள்ளிட்ட வில்லைகளை மறுபடியும் கல்வத்திலிட்டுப் புளியாரைச் சாறு விட்டு அரைத்து முன்போல் வில்லை தட்டிப் புடமிடவும். இப்படி 10-புடமிட நல்ல செந்தூரமாகும். இதனில் வேளைக்கு 1½-குன்றி எடை திரிகடுகுச் சூரணத்துடன் கலந்து கொடுக்கக் குன்மம், வயிற்று வலி, வாந்தி, அசீரணம், மார்பு எரிச்சல், பித்த எரிச்சல், குழந்தைகட் குண்டான மந்தம் முதலியவைகள் குணமாகும். இதைப் போலவே ஆகாசத் தாமரைச் சாற்றில் 10-புடமிட நற்குணங் கொடுக்கும்.

கறியுப்புச் செந்தூரம்

முற்கூறியபடி ¼-படி உப்பைக் கல்வத்திலிட்டுப் பிரண்டைச் சாறுவிட்டு 4-சாமம் அரைத்து வில்லை தட்டி முன்போல் நெருப்பனலில் புடம் போட்டவும். இப்படி இந்த உப்பை அரைத்து அரைத்துப் புடம்போட முதலில் வெளுத்துப் பின்னர் செந்தூரமாகும். எப்படியாயினும் 10-புடத்திற்குமேல் உபயோகத்திற்குப் பயன்படும். இதனை முன்போல் உபயோகப்படுத்த வயிற்றிலுள்ள வாயுவை நன்றாய்க் கண்டிக்கும். பசி தீபனத்தை யுண்டாக்கும். குன்ம ரோகம் யாவும் இருந்த இடம் தெரியாமல் ஓடும். இத்தகைய உப்பு சம்பந்தமான அவிழ்தங்களை உட்கொள்ளும்போது புளி தள்ளிப் பத்தியமாக இருக்க வேண்டும். இன்றேல் அதன் குணம் கெடும்.

குறிப்பு:—உப்பானது உருகும் தன்மையை உடையதாதலால் அதன் சத்துக் கெடாமல் அனல் புடத்திலேயே முடிப்பது எவ்விதத்திலும் விசேஷ நற்குணத்தைப் பெற்றிருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

12 கறியுப்பைக் கிழிக்கவும்.

இந்தக் கறியுப்பின் விபரத்தைப் பொதுப்பாயிரத்தில் காரச்சார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின்கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

கற்சுண்ணம்

(Clax - Burnt)

உண்டவனஞ் சீரணமா நெய்ச்சிக்கேகு
முறில்விந்து விற்கூக்க முறுங்காண் வாயில்
விண்டவெயி றிறுகுமறற் பேதிவற்றும்
வேந்தளித்த நீர்ச்சுறுக்கும் விலகுமேய்யை
யண்டுபல விடமொழியுங் கறையோநிற்கு
மழலுறுபுண் சிரங்குநமை யழபுண்ணுறுங்
கண்டவுரு வன்மீகஞ் சிரநோய் சந்நி
களுங்கரக்குங் கற்சுண்ணங் காணுங்காலே.

குணம்:—(இ - ள்) கற்சுண்ணத்தால் அன்னஞ் சீரணமாவதுந் தவிர, குடலிற் பிடித்த நெய்ச்சிக்கு, பேதி, வாதகிரிச்சாரம், பூரான் கடி முதலிய பலவிஷம், காயங்களாலொழுகுகின்ற ரத்தம், நெருப்புச் சுட்ட புண், சிரங்கு, தினவு, அளிந்தவிரணம், களநோய், மண்டைப் புற்று, தலைநோய், சந்நி இவை நீங்கும். சுக்கிலத்திற்கு பலமும், தந்தங்களுக்குறுதியும் உண்டாகும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சமனகாரி, தாதுகூணிரோதி

உபயோகிக்கும் முறை:—கற்சுண்ணத்தை வெற்றிலையில் தடவிப்பாக்குடன் தாம்பூலமாக உபயோகிக்க உண்டவன்னம் விரைவில் சீரணமாகும். இதைத் தேன்விட்டுக் குழைத்தாவது அல்லது முருங்கையிலைச் சாறுவிட்டுக் குழைத்தாவது தொண்டைக் குழியில் தடவிவரப் புகைந்து புகைந்து வரும் இருமலையும், தொண்டைக் கம்மலையும் குணப்படுத்தும். கற்சுண்ணத்தைக் குழைத்து உந்தியைச் சுற்றிப் புறவேலையாகத் தடவி வருவதினாலும் காற்பெரும் விரலின் நகத்தின்மேல் தடவி வருவதினாலும் நீர்ச்சுருக்கு, நீர் அடைப்பு முதலியவை குணமாகும். இதனுடன் சிறிது குப்பை மேனி இலைச்சாறு விட்டு மத்தித்துப் பூரான், வண்டு, குளவி முதலிய கடி அல்லது கொட்டு விஷங்களுக்கு மேற்றடவி வர விரைவில் குணமாகும். கற்சுண்ணத்துடன் மண் சம்பந்தமில்லாத பசுவின் சாணத்தை உருண்டை பிடித்துக் காயவைத்துப் புடமிட்டு எடுத்த

சாம்பலைச் சமனளவாகக் கூட்டி மத்தித்துச் சிறிது சிற்றாமணக் கெண்ணெய் விட்டு உறவாக்கிச் சிரங்கு, புண் முதலியவைகளுக்குத் தடவி வர ஆறும். கற்சுண்ணத்துடன் உத்தாமணி இலைச்சாறு கூட்டி மத்தித்து வீக்கங்களுக்குத் தடவி வரக் குணமாவதுடன் நோயையும் போக்கும். கற்சுண்ணத்துடன் சிறிது நவச்சாரங் கூட்டித் துணியில் வைத்து நாசியின் வழியாக முகர மூர்ச்சை, மயக்கம், தலைவலி, நாசியடைப்பு இவைகள் போம். இதைத் தேள் கொட்டிற்கு மேற்றடவ விஷமிறங்கும். கற்சுண்ணத்துடன் சிறிது வெல்லம் கூட்டி மத்தித்து அடிபட்ட இடத்தில் வைத்துக் கட்ட இரத்தம் பெருகாமல் ஆறும். இரண்டு அவுன்ஸ் கற்சுண்ணத் தெளிவு நீருடன் தேவையான அளவு வெள்ளைச் சர்க்கரை கூட்டித் தினம் ஒருவேளை சாப்பிட்டு வர நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், உஷ்ணத்தினு லுண்டாகும் வறட்சி, இருமல் முதலியவை குணமாகும். ஒரு அவுன்ஸ் கற்சுண்ணும்புத் தெளிவு நீருடன் அப்பட்டமான கால் அவுன்ஸ் எள்ளெண்ணெய்யும் ஒரு கோழி முட்டையின் வெண்கருவுங் கூட்டி நன்றாய் விரலால் மத்தித்துக் காலை நேரத்தில் ஒரு வேளை வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர, வெள்ளை, இரத்தவெள்ளை முதலியவை குணப்படும். இன்னும் இது வயிற்றிலுள்ள விரணத்தை யாற்றும். ஒரு அவுன்ஸ் சுண்ணும்பு நீருடன் இரண்டு அவுன்ஸ் முள் இலவம்பட்டைச் சாறு கூட்டிச் சாப்பிட வெள்ளை, இரத்தவெள்ளை, பெரும்பாடு முதலியவை குணமாகும். சுண்ணும்பு நீருடன் சமனளவு தேங்காயின் நெய் கூட்டி விரலால் மத்தித்து வெண்ணெய்போல் ஆனசமயம் நெருப்புப் பட்ட விரணங்களுக்குத் தடவி வாழைமரத்தின் மிருதுவான வெண்குருத்து இலையை வைத்துக் கட்டிவர விரைவில் ஆறும். ஒரு அவுன்ஸ் சுண்ணும்பு நீருடன் அரை அவுன்ஸ் நல்லெண்ணெய், 6-அவுன்ஸ் நீராகாரம் அல்லது பசுவின் மோர் கூட்டிக் கலக்கி உட்கொள்ள நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், நீரடைப்பு முதலியவை குணமாகும். சுண்ணும்பு நீருடன் சிறிது சிற்றாமணக்கெண்ணெய் கூட்டி நன்றாய் மத்தித்து முகப்பருவு, கோடைக்காலத்தில் உண்டா தும் கொப்புளங்கள் முதலியவைகளுக்குத் தடவி வரக் குணமாகும்.

கவனிப்பு:—ஒரு படி கற்சுண்ணத்திற்கு 4-படி சுத்த சலம் விட்டு கலக்கிக் கலக்கி 3-நாள் வைத்து நான்காவது நாள் தெளிந் திருக்கும் நீரை அசையாமல் வடித்துச் சீசாவில் அடைத்து

வைக்கவும். இதுவே சுண்ணநீர் அல்லது சுண்ணும்பு நீர் என்று கூறப்பட்டது. அடியில் இருக்கும் சுண்ணும்பில் கற்கள் முதலியவை நீக்கிச் சுத்தப்படுத்திக் காரங் கெடாமல் எப்பொழுதும் ஈரம்காத்து வரும்படி அப்போதைக்கப்போது நீர்விட்டு வைத்து வருவதே கற்சுண்ணம். இதுவே மேற்கூறப்பட்ட பலபாகங்களில் சேர்க்க வல்லது.

இந்த கற்சுண்ணத்தின் விபரம் பொதுப்பாயிரத்தில் காரசார லவணம் இருபத்தைந்தில் காண்க.

காசிச்சாரம்

(Kasi Saram)

இந்த சாரத்தைப்பற்றி போகர் நிகண்டில் காரசார லவணம் இருபத்தைந்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதன் உபயோக மாவது, அல்லது வைப்பு விபரமாவது என்னுடைய ஆராய்ச்சியில் கிடைக்க வில்லை.

காடிக்காரம்

(Argenti Nitras)

மூர்க்க முறும்பேதி மூர்ச்சை யுடன்வலியும்
பார்க்குங்கண் ணோயோடு பல்விடமும்—நீர்க்கசிந்து
நாறுங் கரப்பானும் நற்காடிக் காரமதால்
வீறுகெட்டுத் தானேழியு மே.

குணம்:—(இ - ள்) காடிக் காரத்தினால் கடுமையான பேதி, பற்கிட்டல், இசிவு, கண்ணோய், பலவிதமான விஷக்கடி, கரப்பான் முதலிய ரோகங்கள் நீங்கும் என்க.

செய்கை;—உள்ளுக்குக் கொடுக்கப் பலகாரி, சமனகாரி, அங்காகர்ஷ்ணகாரினி, வெளிக்கு உபயோகிக்க விரணகாரி, சோணகாரி.

உபயோகிக்கும் முறை:—ஐந்து குன்றியெடை வெள்ளிக்காடிக் காரத்தை 5-அவுன்ஸ் வாலையில் இறக்கிய சுத்த சலத்தில் போட்டு நன்றாய்க் கரைத்து 2, 3-முறை வடிகட்டி நீலவர்ணமான புட்டியில் பத்திரப்படுத்துக. இந்தக் காடிக்கார நீரைத் துத்திரோகம், தோல் சம்பந்தமான வியாதிகள் தொண்டைக் கம்மல், வாய்விரணம்,

கண்ணெய், கருப்பமேகம் முதலியவற்றிற்கு மேலுக்கு உபயோகப் படுத்தலாம். வெறிநாய் கடி, பாம்பு, தேள், நட்டுவக்காலி, எலி முதலியவைகள் கடித்த இடங்களில் காடிக்காரத்தைத் தேய்த்துப் புண்ணுக்கி விட விஷமானது இரத்தத்தில் பிரபலிக்காமலும் அந்தந்த விஷங்களுக்குடைய துர்க்குணத்தைக் காட்டாமலும் ஒழிந்துவிடும்.

இந்தக் காடிக்காரத்துடன் இதரச் சரக்குகளைக் கூட்டிச் சித்த வைத்தியத்தில் பல அவிழ்தங்கள் செய்வது வழக்கம். அவற்றுள் சில அடியிற் காண்க.

காடிக்காரலிங்கச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த லிங்கத்துடன் ஒரு விராகனெடை வெள்ளிக் காடிக்காரம் கூட்டிக் கல்வத்தில் போட்டுச் சிறு செருப் படைச் சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்துச் சுத்தமான கத்தியால் சுரண்டி எடுத்துக் கைபடாமல் அகலில் வில்லைதட்டி நிழலில் காய வைத்து மேல் அகல்மூடிச் சீலைசெய்து ¼-படி மணலிற் கிடையில் வைத்து அதன்மேல் 4, 5-பலம் எடையுள்ள வறட்டித் துண்டைப் பரப்பிப் புடமிடவும். புடம் நன்றாய்க் குளிர்ந்தபின் மேலிருக்கும் வறட்டித் துண்டுகளை எடுத்துவிட்டு உள்ளிட்ட அகலைக்கீழ் மேலாகத் திருப்பி மணலில் வைத்து மீண்டும் முன்போல் புட மிடவும். இப்படியே பின்னும் இரண்டு முறை அரைத்து அரைத்து வில்லை தட்டி அகலில் அடக்கி மேல்அகல் மூடிச் சீலைசெய்து மணல் மறைவில் மொத்தம் 6-புடமிடவும். இது உயர்தரமான செந்தூர மாகும் அரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்துக. இந்த செந்தூரத் தைக் குழந்தைகளின் வயதுக்குத் தக்கவாறு 1, 2-அரிசி யெடை தருந்த அனுபானங்களில் கொடுக்கச் சுரம், சந்நி, தோஷம், மாந்தம், பேதி, இருமல் முதலியவைகள் குணமாகும். பெரியவர்களுக்கு ½, ½-குன்றி யெடை தேனில் கொடுக்கச் சுரம், இருமல், சந்நி தோஷம் நீங்கும்.

காடிக்காரச் செந்தூரம்

வெள்ளிக் காடிக்காரம் விராகனெடை-2, வாலை ரசம் பலம்-2, நெல்லிக்காய்க் கந்தகம் பலம்-1, வீரம் பலம்-½ இவைகளைக் கல்வத்தி லிட்டுக் குட்டிவிளா இலையைச் சலம் தெளித்து இடித்துப் பிழிந்து

வடிகட்டி யெடுத்தத் தெளிவு சாற்றைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு ஒரு சாமம் அரைத்து ரவியில் காயவைத்துப் பொடி செய்து ஏழு மண்சீலை செய்த குப்பியில் போட்டு பலப்பக் கல்லால் வாயை அடைத்து, சீலைசெய்து காயவைத்து, வாலுகா இயந்திரத்தில் (மணல் மறைவில்) வைத்து முத்தீயாக நான்கு சாமம் எரித்து ஆற விட்டு எடுக்கச் செந்தூரமாகும். இதை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு 2, 3-அரிசி யெடை தேனில் அனுபானம் செய்து கொடுக்கச் சர்வ சுரம், சந்நி, வாயு, விஷபேதி, குன்மம் முதலியவைகள் போம்.

காடிக்காரச் சண்டமாருதம்

இலிங்கம் விராகனெடை-8, ரச செந்தூரம் விராகனெடை-5, பூரம் விராகனெடை-3, வீரம் விராகனெடை-2, வெள்ளிக் காடிக் காரம் விராகனெடை-1, எண்ணெய் வெங்காரம் விராகனெடை-4 இவற்றை வரிசைக் கிரமமாக அரைமணி நேரத்திற்கு ஒரு தடவை யாக கல்வத்தில் ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்து அரைத்துக் கொண்டு வருக. இப்படி 3-மணி நேரம் கையோயாமல் அரைத்து வர நல்ல செந்தூர நிறத்தை யடையும். சுரண்டிச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு 2, 3-அரிசியெடை தேனில் அனுபானம் செய்து தினம் இருவேளை 2, 3-நாள் கொடுக்கச் சுரம், சந்நி, சுவாசகாசம், ஸ்திரிகளுக்குக் காணும் மாத விலக்கின் தடை இவைகள் குணமாகும். விஷ பேதிக்கு ½, 1-குன்றி யெடை தேனில் அனுபானம் செய்து கொடுக்கச் சீதளமும் அடுத்து அடுத்துக் காணும் பேதியும் குணமாகும். மருந்தைக் கொடுத்து ½-மணி நேரத்திற்குள் படிப்படியாகச் சீதளம் நீங்கிப் பேதியும் கட்டவில்லை என்று உணரின் மீண்டும் ஒருமுறை முன்போல் கொடுக்கவும். அவசியம் குணமாகும்.

குறிப்பு:—எண்ணெய் வெங்காரத்தில் சில சந்தர்ப்பம் நடுவில் கற்கள் இருக்கும். இதை மெதுவாக இடித்துத் தூள் ஆகும்போது கற்கள் இருந்தால் எடுத்துவிட்டு மாவுபோல் மிருதுவாக இருப்ப தைச் சேர்த்துக் கொள்க.

இத்தகைய மற்றும் சில முறைகள் வில்லை ரச செந்தூரத்தின் தலையங்கத்தின் கீழ்க் காண்க.

காந்தம்

(Load Stone)

காந்தத்தாற் சோபைகுன்மங் காமிலமே கம்பாண்டு
சேர்ந்ததிரி தோடவெட்டை சீதங்கா—லோய்ந்தபசி
பேருதரங் கண்ணோய் பிரமியநீ ராமையும்போம்
மோரினிறை யாயுளுறு முன்.

குணம்:—(இ-ள்) காந்தத்தால் வீக்கம், குன்மம், காமாலை, பிரமேகம், பாண்டு, முத்தோஷம், வெள்ளை வீழல், சீதளம், வாத நோய், மந்தம், மகோதரம், விழிநோய், சலமேகம், நீராமைக்கட்டி இவைகள் போம். பூரணாயு ளுண்டாம் என்க.

செய்கை:—செந்தூரத்திற்குப் பலகாரி, உற்சாககாரி, ஜடராக்கினி வர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாகவாவது இதரச் சரக்குகளுடன் கூட்டியாவது செந்தூரம் செய்து கொடுப்பதுண்டு. இதனால் ஈரலுக்கும் மண்ணீரலுக்கும் பலமுண்டாகும். இது சரீரத்திலுள்ள துர்நீரை வறட்டுவதுடன் பாரிச வாயு, கைகால் பிடிப்பு, நரம்புகளின் இசிவு, பாண்டு, சோபை, காமாலை முதலிய ரோகங்களை நிவர்த்தி செய்யும். இன்னும் இரத்தத்திலுள்ள குற்றங்களை நீக்கிப் பித்த சம்பந்தமான பல பிணிகளைக் குணப்படுத்தும். அவற்றுள் சில அனுபவ முறைகளைக் கீழ்க் காண்க.

காந்தச் செந்தூரம்

மூன்று பலம் காந்தத்தை கன்னன் உலையில் வைத்து ஊதி நெருப்பைப்போல் சிவந்தத் தருணம் பசுவின் நீரில் தோய்க்கவும். இப்படி ஏழுமுறை செய்து எடுக்க நல்ல சுத்தியாகும். இதை இடித்துத் தூள் செய்து கல்வத்திலிட்டுத் தாழம் விழுதின்சாறு விட்டு 4-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் அரையணு கனமும் அகலமும் உள்ள வில்லைகளாகச் செய்து உலர்த்தி அகலில் பரப்பி மேல் அகல் மூடிச் சீலைசெய்து 30, 40-வறட்டியில் புடமிடவும். இப்படியே அரைத்து அரைத்து வில்லை தட்டி ஐந்து புடமிட்ட செந்தூரத்தை மீண்டும் முன்போல் பழச்சாறு விட்டு அரைத்து மூன்று புடமிடவும். இப்படி எட்டுப் புடம் தீர்ந்த காந்தமானது குணத்தில் பெரிதும் உயர்ந்ததாகும். இந்தச் செந்தூரத்தில்

வேளைக்குக் குன்றியெடை தினம் இருவேளை தேனில் கொடுத்துவர இரத்தக் குறைவினு லேற்பட்ட உடல் வீக்கம், சோபை, காமாலை, பாண்டு, மகோதரம் முதலியவைகள் குணமாகும். இன்னும் மது மேகத்தையும் தாது பலகீனத்தையும் குணப்படுத்தும்.

வேறு முறை

காடிநீர், மோர், பழரசம், இம் மூன்றையும் சமனளவாகக் கலந்து ஒரு குடுவையில் விட்டு அதனில் 3-பலம் காந்தத்தை ஒன்றிரண்டாகப் பொடிசெய்து போட்டு வாய்மூடி 3-நாள் வைத்து 4-வது நாள் அலம்பி யெடுத்துக் கல்வத்திலிட்டு ஆவாரமிலையில் அரிசிக் கழுவி எடுத்த நீரைத் தெளித்துத் தெளித்து இடித்துப் பிழிந்து வடிகட்டி எடுத்துச் சாற்றைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு 4-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் வில்லை தட்டி உலர வைத்து அகலில் அடக்கிச் சீலைசெய்து 30, 40-வறட்டியில் புடமிட வும். இவ்வாறு மூன்று புடமிட்ட பின் மாம்பட்டையும் கண்டங் கத்திரியும் சமனெடையாகக் கூட்டி இடித்து அதற்கு எண்மடங்கு சலம் விட்டுக் காய்ச்சி ஒரு பங்கான சமயம் வடிகட்டி எடுத்த சாற் றில் மூன்போ லரைத்து மூன்று புடமிடவும். அதன்பின் இவ் வாறே செம்பருத்தி இலைச் சாற்றிலும் பழச் சாற்றிலும் மும்மூன்று புடமிட்டு எடுக்க உயர்தரமான காந்தச் செந்தூரமாகும். வேளைக் குக் குன்றியெடை தினம் இருவேளை தேன், நெய் முதலிய அனுபானங்களில் கொடுத்துவரப் பாண்டு, சோபை, வீக்கம், காமாலை, மகோதரம் முதலியவைகள் குணமாகும். ஆயுளை விருத்தி செய்யும்.

காரீயம்

(Plumbum Or Black Lead)

பன்மரநஞ் சக்கிநோய் பாகர்த் தபிவீரணங்
குன்மங்கால் சூலங் குதவிரணஞ்—சன்மப்
பெருநாக மேகப் பிணிசுரமி வற்றைக்
கருநாக மேநீக்குங் காண்.

குணம்:—(இ - ள்.) காரீயம் காவீர முதலிய பற்பல தாவர விஷம், கண்ணோய், கர்த்தபிரோகம், வலிவாத குன்மம், பகந்தர விரணம், கஜ சருமக் குஷ்டம், சுரம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—செந்தூர பற்பத்திற்கு ஜடாக்கினி வர்த்தினி, தாது கூணிரோதி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—கருவங்கத்தை அவிழ்த்த பாகங்களில் கூட்டும் முன் எலுமிச்சம் பழச்சாறு, நல்லெண்ணெய், கோமயம், கொள்ளுக்காடி இவைகள் ஒவ்வொன்றிலும் மும்மூன்று முறை உருக்கிச் சாய்த்து எடுத்துப் பற்ப செந்தூரங்களாகச் செய்வதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

கருவங்கச் செந்தூரம்

மூன்று பலம் கருவங்கத்தை, இருப்புக் கடாயிற் போட்டு, அடுப்பிலேற்றி எரித்து, உருகின பதத்தில், பச்சை முருங்கைப் பட்டையைப் பஞ்சுபோல் இடித்து அதனுடன் 1½-பலம் வெடியுப்புத் தூளைக் கூட்டிப் பிசரிக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு அயக்கரண்டி கொண்டு தேய்க்கவும். இப்படி நான்கு அல்லது ஆறுசாமம் தேய்த்து எடுக்கப் பற்பமாகும். இதனைச் சீலையில் அரித்துத் திப்பியை நீக்கி அடியில் உள்ள பற்பத்தில் இரண்டு பலம் அளவிற்குக் கல்வத்தில் போட்டு சோற்றுக் கற்றழையின் பால் விட்டு, இரண்டு சாமம் நன்று யரைத்துச் சிறு வில்லைகளாகத் தட்டிக் காயவைத்து, அகலில் பரப்பி மேலகல் மூடிச் சீலைசெய்து காய்ந்த பின் 20-வறட்டியில் புடமிடவும். இப்படியே ஒவ்வொரு முறையும் சோற்றுக் கற்றழையின் பாலால் இரண்டிரண்டு சாமம் நன்கு அரைத்து முன்போல் வில்லை தட்டிப் புடமிட்டுக்கொண்டு வர 10-புடத்தில் நல்ல செந்தூரமாகும். இச் செந்தூரத்தில் 4, 5-குன்றியெடை ஒரு அயக்கரண்டியில் போட்டுச் சிறுது நல் லெண்ணெய் விட்டு அடுப்பில் வைத்து எரித்து எண்ணெய் பற்றி எரிந்தபின் ஆறவிட்டுக் கரண்டியிற் பார்க்கச் செந்தூரமானது உருகி மணிகளாக இருக்கப் பெறின் உபயோகிப்பதற்குத் தகுதியான தல்ல. மீண்டும் அதனை இரண்டு மூன்று புடம் சத்தில்லாமலிருக் கும் பொருட்டுப் போட்டு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்கு 2, 3-அரிசியெடை தினம் 2-வேளை தேனில் அனுபானம் செய்து 5-நாள் கொடுக்க மதுமேகம், ஆறாத விரணம், குழிவிழும் புண்கள், புற்று, புரையோடும் ரணங்கள், கரு மேகம், செம்மேகம், தடிப்பு முதலியவைகள் குணமாகும். இம் மருந்து, சரீரத்தில் வியாபித்துக் குணத்தைக் காட்ட ஏறத் தாழப்

பத்து நாட்கள் செல்லும், சரிவரக் குணமில்லை யென்று ஏற்படின், மீண்டும் முன்போல் 5-நாட்கள் கொடுக்கவும். இம் மருந்தைக் கொடுக்குங் காலத்தில் புளி தள்ளி இச்சா பத்தியமாக விருத்தல் நன்று.

கருவங்கப் பற்பம்

சுத்தி செய்த மூன்று பலம் கருவங்கத்தை ஒரு இரும்புக் கடாயில் போட்டு அடுப்பில் வைத்து எரித்து உருகின சமயம் 15-பலம் எடையுள்ள உலர்ந்த புற்றஞ்சோற்றைச் சிறிது சிறிதாகப் போட்டு நான்கு சாமம் வரையில் அயக்கரண்டிக்கொண்டு நன்கு தேய்த்துச் சத்தில்லாமல் எடுக்கப் பற்பமாகும். இதன் நிறம் பார்வைக்கு அரைத்து உலர்த்திய சந்தன வில்லையைப் போலிருக்கும். இதனைப் பத்திரப்படுத்துக. இந்தப் பற்பத்தில் வேளைக்கு ¼, ½-குன்றி எடை தகுந்த அனுபானங்களில் தினம் இருவேளை கொடுத்துவர மதுமேகம் குணமாகும். இதனுடன் சிறிது அப்ரேகச் சிந்தூரம் கூட்டிக் கொடுக்க இன்னும் விசேஷ நன்மையைத் தரும்.

காவிக்கல்

(Silicate Ot Aluminia)

ஆய்ந்தகா விக்கல்லா லட்சிநோய் தாழ்ந்தோடும்
பாய்ந்தவெடி யக்கிப் பறந்திடுங்கேள்—தோய்ந்ததோரு
செங்குருதிப் போக்கோடு சீறுகின்ற வெப்பமறும்
இங்கிதன் சீரை யிசை.

குணம்:—(இ - ள்.) காவிக்கல்லால் கண்ணோய், அக்கிப்புண் பெரும்பாடு, தேகக் கொதிப்பு முதலியவை நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, ரத்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—மிருதுவாக இருக்கின்ற சீமை பூங் காவிக்கல்லை நன்றாய் அரைத்துச் சலம் விட்டுக் கலக்கி வடிகட்டி இரண்டு மூன்று நாள் அசையாமல் வைத்துத் தெளிந்துள்ள நீரை வடித்துவிட்டு ரவியில் உலர்த்தி மீண்டும் கல்வத்தில் போட்டு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இதனில் 3, 5-குன்றியெடை நெய், வெண்ணெய் முதலிய அனுபானங்களில் கொடுக்கலாம். இதனால் இரத்தப்போக்கு, நீர் எரிச்சல், உஷ்ண இருமல், பேதி, உதிர பீநசம், வயிற்றிலுள்ள ரணம் முதலியவை

குணமாகும். இதனை வெட்டுக் காயங்களுக்குத் தூவ உடனே இரத்தம் நிற்கும். உதிர பீநசத்திற்கு நசியம் செய்ய உடனே இரத்தம் நிற்கும். இத்துடன் சமனெடை பூ மாதுளம்பூ சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு 4, 5-குன்றியெடை நெய்யில் கொடுக்க உள்ளுறுப்புகளில் கண்டுள்ள ரணங்களை யாற்றி பேதியையும் நிறுத்தும். இன்னும் இது மேல்பாகத்தையாவது கீழ் பாகத்தையாவது நோக்கி வெளிப்படும் உதிரப் பெருக்கை நிறுத்தும். இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டி உபயோகப்படுத்துவ துண்டு. எங்ஙனமெனில்:—

பூங்காவிச் செந்தூரம்

சுத்தி செய்த பூங்காவி பலம்-1, பொரித்த படிக்காரம் பலம்-1 இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து வைத்துக் கொண்டு வேளைக்கு 5, 6-குன்றியெடை வெண்ணெயில் தினம் இரண்டு வேளை கொடுத்துவரப் பெரும்பாடு, உதிர மூத்திரம், நீர் எரிச்சல், நீர்க்குத்தல் முதலியவை குணமாகும்.

வேறு முறை

சுத்தி செய்த பூங்காவி பலம்-2, பொரித்த படிக்காரம் பலம்-1, காய்ச்சுக்கட்டி பலம்-½ இவற்றை அரைத்து வைத்துக்கொண்டு மூன் போல் கொடுப்பதும் உண்டு. இது மேற்கூறப்பட்ட நோயை யகற்றுவதுடன் பேதி இருந்தாலும் கட்டும்.

கெம்புக்கல்

(Ruby)

காக்கை வலிபோம் கனத்த கிலேசம்போம்
ஏக்க முறுமீளா யெட்டிப்போம்—ஊக்கமிலா
மந்தறிவு மாறிப்போம் மக்கட்குக் கண்டபய
னந்தழள கெம்பிற்கே யாம்.

குணம்:—(இ - ள்.) கெம்புக் கல்லினால் காக்கைவலி, மனத் துயரம், கப சம்பந்தமான பல ரோகங்கள், அறிவு மந்தம், ஆக இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி பற்பம் செய்து கொடுத்துக்கொண்டுவர, காக்கை வலி, பயம், வீண் சிந்தனை, இருதய

நடுக்கம், நரம்பைப்பற்றிய இசிவு ரோகங்கள் போம் இன்னும் இந்தப் பற்பமானது நீற்றுப்போன இரத்தத்தைச் சுத்தி செய்து தடிப்பாக்கும். இரத்த வாந்தியையும், விஷக்கடி தோஷங்களையும் போக்கும். ஜீவ சக்தியை அதிகரிக்கச் செய்யும். தோஷமில்லாத பொறுப்பான பெரிய கெம்புக்கல்லை மோதிரமாகவாவது அல்லது பதக்கமாகவாவது தங்கத்தோடு சேர்த்து அணிந்து கொள்ள இஷ்ட காரியசித்தி யுண்டாகும். இதனைக் கொண்டு பற்பம் செய்யும் சில முறைகளை அடியிற் காண்க.

கெம்பு பற்பம்

அரைப்பலம் உயர்ந்த கெம்புக்கல்லை ஒரு குவிந்த மண்ணோட்டில் வைத்து உலையில் வைத்து ஊதி நன்றாய்ச் சூடேறிய சமயம் வெள்ளாட்டுப் பாலில் கொட்டவும். இப்படி 5, 6-முறை செய்ய நல்ல சுத்தியாகும். இதை அலம்பி எடுத்து ஈரமில்லாமல் உலர்த்தி இரும்பு உரலில் போட்டு இடித்து மாவுபோல் செய்து கல்வத்தில் போட்டு வெள்ளெருக்கம் பால்விட்டு இரண்டு சாமம் நன்கரைத்து வில்லையாகத் தட்டிக் காயவைத்து அகலிலடக்கிச் சீலைசெய்து 25-வறட்டியில் புடமிடவும். இப்படி அரைத்து அரைத்து வில்லை தட்டி 7, 8-புடமிடப் பற்பமாகும். இந்தப் பற்பத்தில் வேளைக்கு துவரம் பருப்புப் பிரமாணம் அதாவது 2, 3-அரிசியெடை முலைப் பால், வெள்ளாட்டுப்பால், கழுதைப்பால் முதலியவற்றில் அனுபானம் செய்து தினம் இருவேளை கொடுத்துக்கொண்டுவரக் காசம், வாதம், மார்புவலி இவைகள் நீங்கும்.

வேறு முறை செந்தூரம்

வெள்ளாட்டுப்பாலில் சுத்தி செய்து பொடித்தெடுத்த ½-பலம் கெம்புத்தூளைக் கல்வத்தில் போட்டு முன்னரைத்தவாறு முசுமுசுக்கை இலைச்சாறு, பிரண்டைச்சாறு, பொற்றலைக் கையாந்தகரை யிலைச்சாறு இவற்றில் இரண்டிரண்டு சாமம், அரைத்து வில்லைத் தட்டி ஒவ்வொன்றிலும் மூன்று புடமிட்டெடுக்கச் சிவந்திருக்கும். அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனை வேளைக்கு 2, 3-அரிசியெடை முன்போல் ஏதேனும் ஒரு பாலில் அனுபானம் செய்து தினம் இருவேளை 5-நாள் கொடுக்க காசம், க்ஷயம், ஈளை, இருமல் குணமாகும்..

கோபிச்சந்தனம்

(Gopi Chandan or Multan clay)

வெட்டுகா யத்தோடு வெய்யதலை நோயகலும்
கட்டுபடாப் புண்களுமே காய்ந்துபோம்—வெட்டையினல்
போங்கியெழுங் கட்டிகளும் போங்கோபிச் சந்தனத்தா
லிங்கிதணைப் பூவி லியம்பு.

குணம்:—(இ-ள்.) கோபிச்சந்தனத்தினல் வெட்டுக் காயம், தலைவலி, ஆறுத ரணங்கள், கோடைக்காலத்துக் கட்டி இவைகள் போம் என்க.

செய்கை:—ரத்தஸ்தம்பனகாரி, சோபாநாசினி, தாதுகூணி நாதி.

உபயோகிக்கும் முறை:—இது துவாரகா பட்டினத்திற்குச் சமீபத்திலுள்ள கோபி என்னும் ஏரியிலிருந்து எடுக்கப்பட்ட மண் ணுதலால் இதனைக் கோபிச் சந்தனம் எனக் கூறப்பட்டது. இதைச் சுத்தமாகச் சலம் விட்டுக் கரைத்து, வடிகட்டி உலரவைத்து அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்தத் தூளை வெட்டுக் காயங்களுக்கு மேலெத் தூவிச் சீலையால் வரிந்து கட்ட இரத்தம் உடனே நின்றுவிடும். காயமும் சீழ் பிடிக்காமல் ஆறும். இந்தத் தூளைப் பன்னீர் விட்டுக் குழைத்துத் தலைவலிக்கு நெற்றியில் பற்றும் போட நீங்கும். இன்னும் இதனை கோடைக் காலத்தில் உண்டாகின்ற கட்டிகளுக்கு மேற்பூச அடங்கிவிடும்.

கோமூத்திர சிலாசத்து

(Asphaltum)

கோழத் திரசிலா சத்தாற் குறுகியே
போழத் திரமெரிவுட் புண்மேகம்—நாமேவு
வெப்புதிர வெப்புமறும் வீழி முனிவிம்பந்
துப்புமஞ்சு மெல்லிதழாய் சொல்.

குணம்:—(இ-ள்.) கோமூத்திர சிலாசத்தால் - மூத்திரக் கிரிச்சரம், நாளத்தெரிவு, உள்விரணம், பிரமேகம், நாபியிற்சூடு, ரத்தக் கொதிப்பு இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சமனகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இது அதிக வெய்யிற் காலத்தில் மலைகளின் இடுக்குகளிலிருந்து உருகி வெளியாகும் சத்து. இதை எடுக்கும்போது மண் கலந்திருக்கும். ஆதலால் 3, 5-பலம் கோமூத்திர சிலாசத்தை வெந்நீரில் நன்றாகக் கலக்கி ஒரு வாயகன்ற பீங்கான் கோப்பையில் விட்டு ரவிமுகத்தில் வைத்து வைத்து அப்போதைக்கப்போது மேல்கட்டுகின்ற ஆடையை வழித்து ஒருங்கு சேர்த்துக் காயவைத்துப் பத்திரப்படுத்துக. இதுவே உயர்தரமானதாகும். அதிலுள்ள மண் மாவும் அடியில் நின்று விடும். இதைப்போலவே திரிபலாதிக் கியாழத்தில் கரைத்து ரவியில் வைத்து மேல்கட்டுகின்ற ஆடையை சேகரிப்பதுமுண்டு. இதில் வேளைக்கு 3-குன்றியெடை சிறிது நெய்யுடன் சேர்த்து அனலில் காட்டி மத்தித்து உட்கொள்ளலாம் அல்லது ஆட்டு எலும்பு சூப்பிலாவது கௌஸ்பான் அரக்கிலாவது விட்டுக் கலக்கிச் சாப்பிடலாம். ஆரம்பிக்கும்போது வேளைக்கு ½-குன்றி யெடை போதுமானது. இப்படித் தினம் இருவேளை சிலநாட்கொண்டு குணந் தெரியாவிடின் படிப்படியாகச் சிறிது அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். இதனால் பிரமேகம், கல்லடைப்பு, மஞ்சட்காமாலை, ஈரல்களின் வீக்கம், குன்மம், மூலம், காக்கைவலி, சித்தப்பிரமை, ஸ்திரீகளுக்குக் காணும் ரத்தக் குன்மம், சூதகவயிற்றுவலி, பெரும் பாடு, கண்டமாலை, கூஷ்யம், குட்டம், படை, சோபை, மதுமேகம் விரைவில் குணமாகும். இதைச் சலம் விட்டு அரைத்து எலும்பு முறிவுபட்ட இடத்தில் தழும்பப் பூசிச் சீலையைச் சுற்றி அசையாமலிருக்கும் பொருட்டு மூங்கில் பத்தை வைத்துக் கட்ட முறிவு கூடி விடும். கணுச்சூலைக்கு இதைப்பற்றுப் போட நன்மை தரும்.

கோமேதகம்

(Onyx)

வாதபித்த கோபத்தை மாற்றுமலக் கட்டறுக்கு
மோதுமந் தாக்கினியை யோட்டுங்காண்—மீதி
லழறருவி கார மகற்றுமோளி செய்யுங்
கழறுகின்ற கோமேத கம்.

குணம்:—(இ-ள்.) கோமேதகம் - வாதபித்த மிஸ்ரம், மல பந்தம், பசியின்மை, சுரத்தால் பிறந்த தூர்க்குணம் இவைகளை நீக்கும். மினுமினுப்பைத் தரும் என்க.

செய்கை:—உற்சாககாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தங்கத்தில் வைத்து மோதிரமாகவாவது அல்லது குளிசமாகவாவது செய்து அணிந்து கொள்ள அச்சம், துயரம் இவைகள் போம். இதனைக் கறுப்புப் பெண் குதிரை நீரிலும் தும்மைப்பூச்சாற்றிலும் தனித்தனி மூன்று நாள் ஊறப்போட்டு எடுக்கச் சுத்தியாகும். இப்படிச் சுத்தி செய்து எடுத்த கோமேதகத்தைப் பாகப்படி பற்பம் செய்து உள்ளுக்குக் கொடுக்க வாத பித்த சம்பந்தமான ரோகங்கள், மலபந்தம், சூன்மம், சுரத்தால் பிறந்த துர்க்குணங்கள் எல்லாம் போம். இதனைப் பற்பம் செய்யும் விதம் எங்ஙனமெனில்:—

கோமேதக பற்பம்

முன் சுத்தி செய்துள்ள கோமேதகத்தில் அரைப்பலம் அளவிற்கு ஒரு கோப்பையில் போட்டு மூழ்கக் கருஊமத்தங்காய்ச் சாறுவிட்டு மூன்று நாள் ஊறவைத்து அப்படியே வழித்து ஒரு வச்சிர மூசையில் அடைத்து மேலோடு மூடிச் சீலைசெய்து கன்னன் உலையில் வைத்து நிறையக் கரிக்கொட்டி மூசை பழுக்க ஊதி எடுக்கவும். இப்படி மூன்று முறை ஊதி எடுக்கக் காகரப்பில்லாமல் மிருதுவான பற்பமாகும். அப்படி மிருதுவான தன்மை யடையாவிடின் மீண்டும் இரண்டொரு முறை முன்போல் ஊதி எடுத்துக் கொள்ள வேண்டியது. ஜலத்தில் சிறிதுப் போட்டுப் பார்க்க மிதக்க வேண்டும். இன்றேல் கொடுக்கக் கூடாது. இப்படிச் சரிவர மூடித்த பற்பத்தில் வேளைக்கு ½, 1-அரிசி எடை தினம் இருவேளை தகுந்த அனுபானங்களில் கொடுத்துவர முற்கூறப்பட்ட ரோகங்கள் யாவும் தீரும்.

குறிப்பு:—ஊதி எடுப்பது கஷ்ட சாத்தியமென்றுணர்ந்தால் கறுப்பு ஊமத்தம்சாற்றில் நன்கு அரைத்து வில்லைதட்டி அகலிலடக்கிச் சீலைசெய்து 50, 60-வறட்டியில் புடமிடவும் இப்படி 6, 7-புடமிட நல்ல பற்பமாகும்.

கௌரி பாஷாணம்

(Gowri Pashanam)

அவுரியோடு பாகலிவை யாற்சுத்தி செய்த
கவுரிபா டாணத்தைக் கண்டாற்—சவுரியஞ்செய்
வாதநோய் மந்தமோடு வந்த சுரங்களெலாங்
காதிவிழந் தோடுமெனக் காண்.

குணம்:—(இ - ள்.) அவுரி பாகல் இவ்விலைகளின் சாற்றால் சுத்தி செய்த கௌரி பாஷாணத்தினால் மகாவாதமும், அலசமும், வாத கப சுரங்களும் போம் என்க.

செய்கை:—கபஹரகாரி, மலகாரி, வமனகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சரக்கானது எல்லாப்பாஷாண வர்க்கங்களிலும் கொடியது. இதனைக் கையாட்டாமல் இருப்பதே உத்தமம். இதனைச் சிறந்த பண்டிதர்கள் சமயம் அறிந்து ரோகத்தின் சுபாவமறிந்து கொடுப்பது வழக்கம். எங்ஙனமெனில் கௌரி பாஷாணத்தை அவுரி இலைச்சாறு பாகற்காய்ச்சாறு இவைகள் ஒவ்வொன்றிலும் 3-நாள் ஊறப்போட்டு எடுத்து அதற்குச் சமனெடை சீமைப்பூங்காவி கூட்டிக் கல்வத்தில் போட்டுச் சிறு குழந்தைகளின் அமுரிவிட்டு 2, 3-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் கடுகுப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொண்டு சுரம், சந்நி முதலிய ரோகங்கள் எந்த மருந்திற்கும் வசப்படாதிருக்கும்போது இதனைக் கொடுப்பதுண்டு. இதனால் விரைவில் குணமாகும். இன்னும் மலம் சலம் கட்டித் தொண்டையில் கபம் நிறைந்து விண்ணுலகை எதிர்பார்க்கும் சமயத்தில் 2, 3-மாத்திரையை உள்ளுக்குச் செலுத்த இரண்டொரு தடவை வாந்தியும் பேதியுமாகி நல்ல ஸ்திதியை அடைவர். நாடியும் ஒழுங்குபடும். ஆகையால் எல்லா நம்பிக்கையும் கைவிடப்பட்ட சமயம் இதனைப் பிரயோகிக்கலாம்.

சகஸ்திரவேதி

(Sagasthira vaydi)

அத்திசுரந் தாகசுர மாசனவி ரத்தமோடு
குத்திவரு வாந்திகபங் கூறுசந்நி—மெத்த
நிகழ்த்துகண்ணோய் தாதுநட்ட நீங்காமே கப்போஞ்
சகத்திரவே திக்குத் தளர்ந்து.

குணம்:—(இ - ள்.) சகஸ்திரவேதிக்கு - அஸ்திசுரம், தாக பூர்வகசந்நி, ரத்தபேதி, வமனம், கபாதிக்கம், சந்நி, கண்ணோய், வீரியக் குறைவு, பிரமேகம் இவைகள் போம் என்க.

செய்கை:—சுரஹரகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இது சாதாரணமாகப் பிறவிச் சரக்கி லொன்றாகும். இது பார்வைக்குக் காவிக்கல்லைப் போலச் சிவந்தும்

கரகரப்புடன் ஊட்டம் பொருந்தியு மிருக்கும். தற்காலத்தில் சுத்தமான சரக்கு கிடைப்பது அரிது. ஆகையால் இனமறிந்து அவிழ்த்த பாகங்களில் கூட்டுவது நன்று. இதனைக் கொண்டு செய்யும் சில அவிழ்தங்களாவன:—

குளிர்சுரக் கியாழம்

சகஸ்திரவேதி, சண்பகப்பூ, வெட்டிவேர், விலாமிச்சம் வேர் தக்கோலம், நெற்பொரி, சுக்கு, வகைக்கு விராகனெடை-1 இவை களை இடித்துச் சூரணம் செய்து ஒரு மட்கலயத்தில் போட்டு ½-படி சுத்த ஜலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3-வேளை கொடுத்து வரக் குளிர்சுரம் போம்.

நீலகாச நிவாரணி

சகஸ்திரவேதி, வெங்காரம், பால்துத்தம், துருசு, சாரடை வேர், பவழம், பீங்காஞ்சோடு, பச்சைக்கற்பூரம் இவைகளைச் சம னெடையாகக் கல்வத்தில் போட்டு மாதுளம்பூச் சாற்றினால் 4-சாமம் அரைத்துப் பலப்பக் குச்சுகளைப்போல திரட்டி உலர்த்திப் பத்திரப்படுத்துக. இதனைக் கண்மணியை அடுத்துப் பாசிபோல் நீர்படர்ந்து வெளுத்துக் காணுகின்ற நீலகாச ரோகத்திற்கு சுத்த சலத்தில் உரைத்துக் கண்களுக்குத் தீட்டிவரக் குணமாகும்.

சத்திச்சாரம்

(SathiCharam)

மந்தமோடு தங்கு மலசலம்பி லீகமடி
யுந்திவரு கின்ற வோலியிருமல்—குந்தவைக்கும்
வாதவலி குன்ம மகோதரங்கி ராணியுட்போ
மோதுசத்தி சாரத்தை யுண்.

குணம்:—(இ - ள்.) சத்திசாரத்தினால் - மந்தாக்கினி, சிரண மலமூத்திரம், சிலேத்தும பீலிகம், கோழை விழும்படி சந்திப்புடன் வராநின்ற கூஷய ரோகம், ஊருஸ்தம்பவாதம், வயிற்றுவலி, பெரு வயிறு, கிராணி இவைகள் போம் என்க.

செய்கை:—ஜடராக்கினி வர்த்தனி, இலகுமலகாரி, உதரவாத ஹரகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சரக்கை விசேஷமாக உபயோகப்படுத்துவதில்லை. சில சந்தர்ப்பங்களில் திராவகம், சூரணம் முதலியவற்றில் பாகத்திற் கேற்றவாறு கூட்டிச் செய்வதுண்டு. இந்தச் சரக்கு சில காலத்திற்கு முன் பனவெட்டைப்போல் கொட்டாங்கச்சிகளில் விட்டு உலரவைத்து வந்து கொண்டிருந்தது. தற்காலம் அத்தகைய சரக்கு கிடைப்பது இல்லை. உண்மைச் சரக்கை யறிந்து பாகங்களில் சேர்ப்பது பண்டிதர்களின் கடமையாகும்.

சத்திச்சார சுண்ணம்

அரை வீசை ஏரிக் கிளிஞ்சல் ஒடுகளை நன்கு இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு நடுவில் 3-பலம் சத்திசாரக் கட்டியை வைத்து மேல் ஓடு மூடிச் சீலைசெய்து 100-வறட்டியில் புடமிடச் சுண்ணமாகும். இந்தக் கட்டியைச் சுண்ணம்பி லிருந்து தனியாக எடுத்து அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதில் வேளைக்கு ¼, ½-குன்றி யெடை நெய், வெண்ணெய் முதலிய அனுபானங்களில் கொடுத்துவரச் செய்யுளிற் கூறப்பட்ட பிணிகள் நீங்கும்.

இந்தச் சரக்கின் விபரத்தைப் பொதுப் பாயிரத்தில் காரசார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின்கீழ்க் காண்க.

சமுத்திர நீர்

(Sea Water)

கடலின் புனலாற் கவிகை பெருநோய்
உடலின் கடுப்போ டுதிர—மடர்சூலை
வாதகுன்மம் வெப்புரத்த வாதநீ ராமைம
கோதரும்பி லீகமறுங் கூறு.

குணம்:—(இ-ள்.) கடற் சலத்தினுல் கவிகை யென்னும் ஒரு வித உதர ரோகம், சரீரக் குடைச்சல், ரத்த குன்மம், வாத குன்மம், வெப்பத்தாலெழுந்த உதிரவாதம், நீராமைக்கட்டி, பெரு வயிறு, பிலீக வியாதி ஆகிய இவைகள் விலகும் என்க.

இதுவுமது

குன்ம வாயு குடற்கரி யென்பதும்
வன்ம மான மலசல பந்தமுங்
கன்ம மாகும் வன்னெய்களுங் காணுமோ
நுண்மை வாரிநீர் காய்ச்சி நுகரினே.

இதுவுமது

உடற் கடுப்புட னுற்றெழ சோணிதம்
நடுக்கு வாதழ நாப்பிடிப் போடுபல்
இடுக்கி ரத்தழ னீற்று விழவதுந்
துடுக்க தாஞ்சந்நி தோஷழ மோடுமே.

(இ-ள்.) சமுத்திர நீரைக் காய்ச்சி யுண்டால் வாதகுன்மம், குடற்கரி ரோகம், மலசலபந்தம், மிக வுழைப்பினல் வந்த வியாதிகள், தேகக் கடுப்பு, சோணித வாதம், கம்பவாதம், நாக்குப் பிடிப்பு, சிதாஹித ரோகம், தந்த புப்புடரோகம், சந்நிதோஷம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—மலகாரி, மூத்திரவர்த்தனகாரி, உதரவாதஹராகாரி.

உபயோகிக்கும் முறை:—மேற் கூறப்பட்டுள்ள செய்யுட்களி லேயே நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது.

சவுக்காரக்கட்டி

(Sapo Mollis)

கார்மேகத் துர்ப்படையும் கட்டிக் கரப்பனுடன்
சார்மேக வூறற் றழம்பலறும்—சேர்மேகத்
தோட்டி வருநகத்தி னூழ லகற்றிவிடும்
கட்டிச் சவுக்காரங் காண்.

குணம்:—(இ-ள்) சவுக்காரக் கட்டியினல் - கரும்படை, கட்டி, சிரங்குகள், கரப்பான், மேகவூறல், நகச்சுற்று முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, பூதிகந்தநாசினி.

உபயோகிக்கும் முறை:—இது பூரீறு, சுண்ணும்பு எண்ணெய் முதலியவற்றின் கூட்டுறவாலானது. இதை மருதோன்றி இலையுடன் கூட்டி அரைத்து மேற்போடக் கரும்படை, மேகவூறல் படை, நகக் கண்களில் காணுகின்ற மேகநீர்ச் சுரப்பும் அதனல் உண்டாகும் நகச் சொத்தையும் குணமாகும். நல்லெண்ணெயில் ரோஜாப்பூவை ஊறப்போட்டு வாசனையூட்டிய தைலத்தில் சிறிது சவுக்காரத்தை யிட்டு அரைத்துக் குழந்தைகளுக்குத் தலையில் காணும் சிரங்குக ளுக்குத் தடவி வர ஆறும். புருவின் மலத்துடன் சவுக்காரத்தைக் கூட்டி அரைத்துக் கட்டிகளுக்கு வைத்துக்கட்ட உடைத்துக்

கொள்ளும். இதைக் கனத்த பலப்பக் குச்சிபோல் சீவி ஆசனத்தில் செருகி வைக்கச் சிறிது நேரத்திற்குள் ஆசனங்கடுத்து மலம் வெளியாகும். இது குழந்தைகளுக்கு வெகு உபயோகமானது. இதனை முன்போல் செய்து பெண்குறியின் வழியாகக் கருப்பையை எதிர்நோக்கும் பொருட்டுச் செலுத்தி வைக்கப் பிண்டத்தை வெளியாக்குமட். உதிரப் பெருக்கையும் உண்டாக்கும். சிரசிற்குத் தேய்த்து ஸ்நானம் செய்ய எண்ணெய்ச் சிக்குப் போம். இதனால் தலையில் உள்ள பேன், ஈர்கள் சாகும். சவுக்காரத்தைச் சலம் விட்டுக் கரைத்து அதில் இஸ்போகல் விதையை ஊறப்போட்டுப் பிசைந்து சொறி, சிரங்கு இவைகளுக்கு மேற்பூச ஆறும். இதனைச் சலத்தில் கரைத்து ஆசனத்தின் வழியாகப் பீச்சுங்குழை மூலமாய் உள்ளுக்குச் செலுத்த கெட்ட மலங்களை யெல்லாம் வெளியாக்கி குடலைச் சுத்தப் படுத்தும். இதனை உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது. பொதுவாக ¼, ½-பலம் உள்ளுக்குச் சென்றால் மரணத்தை யுண்டாக்கும். இன்னும் சிலருக்குக் குறைந்த அளவிலேயே கெடுதலை யுண்டாக்கும்.

சவ்வர்ச்சல லவணம்

(Sauvarchala Or Crude Soda)

சவ்வர்ச்ச மென்னுந் தனிலவணத் தாலுலகில்
வெவ்வச் சுரஞ்சூல வெப்பமறுங்—கவ்வுகின்ற
நாடி விரணழுட னுட்பட்ட குன்மமும்போம்
தேடியன மேயிதனைச் செப்பு.

குணம்:—(இ-ள்.) சவ்வர்ச்ச லவணத்தினால் பித்தசுரம், உஷ்ணத்தினு லுண்டாகும் கில்பிடிப்பு, நரம்புக் கிரந்தி, நீடித்த வயிற்று நோய் இவைகள் போம் என்க.

செய்கை.—உதாவர்த ஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பெரும்பாலும் இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙன மெனில்:—

சவ்வர்ச்ச லவணாதி கிருதம்

சவ்வர்ச்ச லவணம், சுக்கு, மிளகு, திப்பிலி, சோற்றுப்பு, மாதுளை, சீரகம், தாமரைக் கிழங்கு, ஓமம், தனியா, புளிவஞ்சி, ஏவச்சாரம், சித்திரமூலம், சடாமாஞ்சில், வசம்பு, வெண்துளசி,

கருந்துளசி, பெருங்காயம், ஏலக்காய் வித்து இவைகளைச் சமனெடை யாக அம்மிக் கல்லில் வைத்துத் தயிர் விட்டு நன்கு அரைத்து மொத்த எடைக்கு இருமடங்கு ஆவின் நெய் விட்டுக் கலக்கிப் பத முறக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு தினம் காலை மாலை 1, 1½-தேக்கரண்டி வீதம் கொடுத்துவர வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல் முதலிய குறிகளையுடைய வாத குன்மம் குணமாகும்.

இந்த இலவணத்தின் விபரம் பொதுப்பாயிரத்தில் கார சார லவணம் இருபத்தைந்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

சவ்வீரம்

(Hydrargyri Perchloridum)

குன்மமொடு குட்டங் கோடியவனி லத்திரட்சி
துன்மாங் கிசப்பெருக்கஞ் சூலைநோய்—வன்மையுறு
காமியப்புண் ணுதியநோய் கண்டாற்சவ் வீரனேலுஞ்
சாமியினு மத்தையுச் சரி.

குணம்:—(இ-ள்.) சவ்வீரத்தினால் குன்மம், குறைநோய், மகாவாதம், வளருகின்ற தூர் மாமிசங்கள், கீல் பிடிப்பு, புண், புரை, கிரந்தி முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும் என்க.

செய்கை:—சிறிய அளவில் வியதாபேதகாரி, தாது கூீண ரோதி, சுவேதகாரி, அதிக அளவில் விரணகாரி, மலகாரி, வமன காரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக வீரத்தை முப்பு அல்லது கார சார ஜெயநீர் முதலியவற்றைக் கொண்டு அக்கினிக்கு ஜெயப்படுத்திப் பற்பம், சுண்ணம், செந்தூரம் முதலியவைகளாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. இதனைப்பற்றி இந்நூலில் எழுதப்புகின் விரியும். ஆதலால் இதரச் சரக்குகளுடன் கூட்டிச் செய்யும் சில மருந்துகளை அடியிற் குறிப்பிட்டதாகும்.

இராஜ குலாந்தக மெழுகு

(பேதி)

வீரம் பலம்-¼, பாதரசம் பலம்-¼, பூரம் பலம்-¼, இலிங்கம் பலம்-¼, பளிங்குச் சாம்பிராணி பலம்-½, வெடியுப்புப் பலம்-½,

கற்பூரம் பலம்-½, பொரித்த வெங்காரம் பலம்-½, நவச்சாரம் பலம்-½, சுத்தி செய்த வாளம் பலம்-3½ இவைகளைக் கல்வத்தி லிட்டுத் தேன் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு மெழுகு பதத்திலேயே இரண்டு மூன்று நாள் அரைத்து வாயகன்ற கல்கார்க்கிட்ட சீசா வில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்த மெழுகில் மிளகுப் பிரமாணம் பனை வெல்லத்தில் வைத்துத் தினம் ஒருவேளை காலையில் உள்ளுக்குக் கொடுக்க 4, 5-முறை பேதியாகும். கொடுத்த அளவில் பேதி சரீவர ஆகாவிடின் மறுநாள் சிறிது மெழுகை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். பேதி யதிகப்பட்டிருப்பின் அளவைச் சிறிது குறைத்துக்கொள்ள வேண்டும். இதனால் மேகவாயு, கை கால் குடைச்சல், கணுக்களிலுண்டான பிடிப்பு, பாரிசவாதம், முழங்கால் வாதம், அண்டவாதம், சர்வாங்க வாதம், நரித்தலை வாதம், குடல் வாதம், ஸ்திரீகளுக்கு உண்டாகின்ற சூதகவாயு முதலியவைகள் குணமாகும்.

இராஜ குலாந்தக மெழுகு

(சாதா)

வீரம், பாதரசம், லிங்கம் வகைக்கு விராளனைடை-1, பளிங்குச் சாம்பிராணி, வெடியுப்பு, கற்பூரம், பொரித்த வெங்காரம், நவச் சாரம் வகைக்கு விராகனெடை-2, பச்சைக் கற்பூரம், கோரோசனை வகைக்கு விராகனெடை-1½, குங்குமப்பூ தோலா-1½. குரோசாணி ஓமம் தோலா-3, தாளிசபத்திரி சூரணம் தோலா-4¼ இவைகளைக் கல்வத்தில் போட்டுச் சிறிது சிறிதாக முலைப்பால் விட்டு 4, 5-மணி நேரம் அரைத்து மெழுகு பதத்தில் சிறிது தேன்விட்டு அரைத்து முன்போல் பத்திரப்படுத்துக. இதனை வேளைக்குக் குன்றிப் பிர மாணம் தினம் இருவேளை 5, 7-நாள் பனை வெல்லத்தில் வைத்துக் கொடுக்கவும். இதனால் முன்முறையில் கூறப்பட்ட ரோகங்கள் எல்லாம் குணமாகும்.

வாத ரோகங்களுக்குச் சிகிச்சை செய்ய ஆரம்பிக்கும்போது முற்கூறப்பட்ட பேதியாகக்கூடிய வீர மெழுகை 3-நாள் தொடர்ச்சி யாகக் கொடுக்க வேண்டும். அதன்பின் இரண்டாவது கூறப்பட்ட வீர மெழுகைக் கொடுக்க வேண்டும். பாரிசவாயு, குன்மம், சூலை முதலிய ரோகங்களில் மலப்போக்குத் தடைப்படும் பொழுதெல்

லாம் பேதி மெழுகைக் கொடுத்துப் பழைய மலத்தை வெளியாக்கிய பின்பு சாதாரண மெழுகைக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாவிடின் வாதரோகம் குணப்படாது.

வீர அயச் செந்தூரம்

வீரம் பலம்-2, அயத்தூள் பலம்-2, நவச்சாரம் பலம்-2, சூதம் பலம்-2 இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்துப் பிறகு வெடியுப்புத் திராவகம் விட்டு இரண்டு சாமம் அரைத்து கைபடாமல் ஓலையால் வழித்து அகன்ற சட்டியில் வில்லை தட்டி நிழலில் உலர்த்தி மேல் சட்டி மூடிச் சீலைசெய்து காய்ந்தபின் அடுப்பிலேற்றி 4-சாமம் முத்தீயாக எரித்து ஓர் இரவு ஆறவிட்டு மறுநாள் சீலையை நீக்கிப் பார்க்க அடிச் சட்டியிலிட்ட வில்லை சிவந்து இருப்பதுடன் மேல் சட்டியில் பதங்கம் ஏறி இருக்கும். இவ்வில்லையையும் மேலேறியுள்ள பதங்கத்தையும் சேதப்படாமல் சுரண்டிக் கல்வத்தில் போட்டுக் கறுப்பு வெற்றிலை (கம்மாறு வெற்றிலை) பிரண்டை இவை பிரண்டையும் இடித்துப் பிழிந்தெடுத்த சாற்றால் 2-சாமம் அரைத்து வில்லை தட்டி நிழலில் உலர்த்தி முன்போல் சட்டியிலிட்டு மேல் சட்டி மூடிச் சீலைசெய்து எரிக்கவும். இப்படி ஒவ்வொரு எரிப்பின் முடிவிலும் அடிச் சட்டியிலுள்ள வில்லையையும் மேல் சட்டியிலுள்ள பதங்கத்தையும் சேதப்படாமல் சுரண்டிக் கல்வத்தில் போட்டு மேற்படி மூலிகைச் சாற்றிலேயே அரைத்து அரைத்து 5, 6-முறை எரித்துப் பதங்கம் ஏறுத சமயம் அடிச் சட்டியிலுள்ள மருந்தை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு ¼, ½-குன்றி எடை தேன், பனை வெட்டு முதலிய அனுபானங்களில் தினம் இருவேளை கொடுக்கப் பாரிசவாதம், முகவாதம், சந்நி, சுரம், குடைச்சல், மேகவாயுவினுண்டான பிடிப்பு முதலிய ரோகங்கள் குணமாகும். பிணிக்கு ஏற்றபடி புளித்தள்ளி இச்சா பத்தியமாக இருத்தல் நன்று.

குறிப்பு:—வெடியுப்புத் திராவகம் என்பது:—வெடியுப்பு பலம்-10, படிகாரம் பலம்-10, பூநீறு பலம்-10 இவைகளை இடித்து மட்கடத்தில் போட்டுப் பொருத்தமான வாலை செருகி எரித்து வாங்கும் காரமுள்ள கடைசி நீராகும்.

சிந்துப்பு

(Sodium Chloride Impura-Red)

குணம், செய்கை, உபயோகம் முதலியவைகள் சாதாரணமாக இந்துப்பிற்குக் கூறியதேயாகும். இதன் விபரத்தைப் பொதுப் பாயிரத்தில் கார சார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

சீமை இந்துப்பு

(Magnesaei Sulphas)

வீக்கம் பெருவயிறும் வேப்புமிகும் நீரடைப்பும்
ஏக்க மலக்கட்டும் ஏந்திழையே—ஆக்கமதில்
தீமையுறுங் காலத்தே சீராக்கி நன்மைதரும்
சீமையிந் துப்பின் சிறப்பு.

குணம்:—(இ-ள்.) சீமை இந்துப்பால் வீக்கம், மகோதரம், உஷ்ணத்தினு லுண்டான நீர்க்கட்டு, மலபந்தம் முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—மலகாரி, மூத்திரவர்த்தனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தஉப்புச் சிறுதுண்டுக்கம்பிகளாகவும், வெண்மை நிறமாகவும், பளபளப்பாகவும், கசப்புச் சுவையுடன் கலந்த உவர்ப்புச் சுவையை யுடையதாகவும் இருக்கும். சாதாரணமாக இந்த உப்புக் கடைகளில் பேரி உப்பென்றும், எப்சம் சால்ட் என்றும் விற்கப்படுகிறது. இது பேதி உப்புகளில் அதிகம் சிறந்தது. நில ஆவாரை தலையங்கத்தின் கீழ்க் கூறியுள்ள கியாழங்களில் இந்த உப்பைச் சேர்த்துக் கொடுப்பது சாலச் சிறந்தது.

இவ்வுப்பை தேகத்திடத்திற்கு ஏற்றவாறு வேளைக்கு 2-முதல் 6-விராகனெடை வரையில் கொடுக்கலாம். இந்த உப்பைத் தனியாக நீரில் கரைத்துக் கொடுப்பதைவிட ரோஜாப்பூக் கியாழத்திலாவது, நில ஆவாரைக் கியாழத்திலாவது கூட்டிக்கொடுத்தல் அதிக நன்மையைத் தரும். இதனால் உஷ்ண மலபந்தம், சுரம், துர்மலக் கட்டு, வாதபித்த உபரி முதலியவைகள் குணமாகும். சாதாரணமாக 4-அவுன்ஸ் கொள்ளத்தக்க புட்டியில் 4-விராகனெடை சீமை இந்துப்பைப் போட்டு அதனுடன் 20-குன்றியெடை பொரித்த

வெங்காரத்தையும் 20-குன்றியெடை வெடியுப்பையும் பொடிசெய்துப் போட்டு 4-அவுன்ஸ் ரோஜாப்பூக் கியாழம் விட்டுக் குலுக்கி 4-மணி நேரத்திற்கு ஒரு அவுன்ஸ் வீதம் கொடுத்துவரப் பேதியாகும். நீர்க் கட்டும் வெளியாகும். இந்த சிகிச்சை பெரு வயிறு என்று சொல் லப்பட்ட மகோதரத்திற்கு அதிகம் சிறந்தது. ஒரு முறை பேதி யானவுடன் மருந்து கொடுப்பதை நிறுத்திவிட வேண்டும். ஏனென் றால் இதன் வேகம் பின்னும் சில முறை பேதியாகும்படி செய்யும், வேண்டுமானால் இந்த சிகிட்சையை மறு நாளும் செய்யலாம். இப்படி வீக்கம் குறைந்து வயிறு சுபாவ திட்டத்திற்கு வருகிற வரையில் 2, 3-நாள் கொடுக்கலாம். இந்த உப்பின் விபரம் பொதுப்பாயிரத் தில் கார சார லவணம் இருபத்தைந்தின் கீழ் இனிது விளக்கப்பட் டுள்ளது.

சீலைச்சாம்பல்

(Clothe - Ashes)

அத்திபீர மேக மல்றீ மனம்நோகத்
தோத்திவரு ரத்தந் தோலந்துப்போம்—சத்தியமே
நூலைப் பழித்திட்ட நுண்ணிடையாய் இப்புவியில்
சீலைச்சாம் பற்குணத்தைத் தேர்.

குணம்:—(இ-ள்.) சீலைச் சாம்பலினால் அஸ்திபிரமேகம் என் கிற எலும்புருக்கி நோயும், ரத்த வாந்தியும் நீங்கும் என்க.

செய்கை:—சமனகாரி, ரத்த ஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—சுத்தமான பருத்திச் சீலையைச் சுட்டுச் சாம்பலாக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு 4, 8-குன்றியெடை நெய்யில் மத்தித்துத் தினம் 2, 3-வேளை 3-நாள் கொடுக்க ரத்த வாந்தி குணமாகும். இதனைத் தனியாகக் கொடுப்பதைவிட ஏரு மைச் சாணத்தின் தலையங்கத்தின் கீழ் ரத்த வாந்திக்குக் கூறப் பட்டுள்ள கியாழத்தில் கூட்டிக் கொடுப்பது சாலச் சிறந்தது. இதனை 2-குன்றியெடையாக தினம் 2-வேளை வெண்ணெய், நெய் முதலிய அனுபானங்களில் சில தினம் விட்டு விட்டுக் கொடுத்துக் கொண்டுவர அஸ்திப் பிரமேகம் குணமாகும்.

சீனக்காரம்

(Alumen)

சீனமெனுங் காரமது சீறிவரு பல்லரணை
யாணைக்கால் கண்ணே யனிலமொடு—மாநிலத்திற்
றுன்மாங் கிசம்வாய்வு தோலாத வுள்ளழலை
குன்மமிவை போக்குங் குறி.

குணம்:—(இ-ள்.) சீனக்காரம் தந்தபிரளானம், சிலிபதம், க்ஷத சுக்கிலம், வாததிமிரம், அதிமாமிசார்மம், வாதப்பிணி, உட்சூடு, குன்மம் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, ரத்த ஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை ஒரு மண்ணேட்டிலிட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரிக்க உருகி நீர் சுண்டி அடங்கும். இதை அரைத்து வைத்துக் கொள்க. இந்தப் படிக்காரத் தூளில் வேளைக்கு 2, 5-குன்றியெடை ஒரு அவுன்ஸ் சலத்தில் கலக்கிக் கொடுக்கலாம். இது உதிரப் பெருக்கம், வாந்தி, ஓக்காளம், பேதி, நீர்ச்சுறுக்கு, உள்ளுறுப்புகளின் ரணம் முதலிய வற்றைக் குணப்படுத்தும்.

படிக்காரம் குன்றியெடை-5, காய்ச்சுக்கட்டி குன்றியெடை-5, இலவங்கப்பட்டைச் சூரணம் குன்றியெடை-5 இவைகளைச் சேர்த்தரைத்து வேளைக்கு 5-குன்றியெடை வீதம் தினம் 3-வேளைக் கொடுக்க ரத்தபேதி, சீதபேதி, அதிசாரபேதி இவைகள் குணமாகும். ஒரு சமயம் குணம் தாமதப்பட்டால் மறு நாளும் விடாமல் இதனைக் கொடுக்க அவசியம் நற்குணத்தை யளிக்கும். தனிப் படிக்காரச் சூரணத்தை வேளைக்கு 2, 2½-குன்றியெடை தினம் 2-வேளை ½-அவுன்ஸ் பன்னீரில் கலக்கிக் கொடுக்கச் சுவாசகாசம் குணமாகும். பாம்பு கடித்தவர்களுக்குச் சலத்திலாவது மோரிலாவது 1½-விராகனெடை படிக்காரத் தூளைப் போட்டுக் கலக்கிக் கொடுக்க வாந்தியாகி விஷமிறங்கும். இரண்டு மூன்று மணி நேரத்தில் குணம் தெரியாவிடின் மீண்டும் முன்போல் கொடுக்க விஷமிறங்கும். படிக்காரத் தூளை 2½-குன்றியெடை வீதம் தினம் 3-வேளை ஆடாதோடை இலைச் சாற்றில் கொடுக்க ஸ்திரீகளுக்குக் காணுகின்ற வெள்ளை குணமாகும். கால் விராகனெடை படிக்காரத் தூளை ½-படி பசுவின் பாலில் போட்டுக் கலக்கி

சிறிது காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3-வேளை கொடுக்கப் பெரும்பாடு மூலரத்தம் நிற்கும். குணம் சரிவர ஏற்படாவிடின் சிறிது அளவை அதிகப் படுத்திக் கொள்வது வைத்தியர்களின் கடமையாகும்.

படிக்காரத்தைப் பொடித்து நசியமிட மூக்கில் ரத்தம் வடிதல் குணமாகும். படிகாரத் தூளைச் சீலையில் முடிந்து பெண் குறியி னுள் செலுத்தி வைக்கப் பெரும்பாடு நிற்கும். படிக்காரத்தைக் கொட்டைப் பாக்குக் கரியுடன் கூட்டி அரைத்துப் பல் துலக்கிவரப் பல்லரணை, ஈறுகளில் இரத்தம் சொரிதல், ஈறு வீக்கம், வலி இவை கள் குணமாகும். மாசிக்காய் அல்லது வேலம்பட்டையைப் போட்டுக் காய்ச்சிய கியாழத்தில் சிறிது படிக்காரத் தூளையிட்டுக் கலக்கி வாய் கொப்பளிக்க மருந்துகளின் வீரினால் உண்டான வாய் வேக்காட்டைக் குணப்படுத்தும். இந்தப் படிக்காரதிற்குள்ள கெட்ட குணம் என்னவென்றால் நீரை வறட்டும் அப்போது வாய் நெஞ்சு இவைகள் வறண்டு தாகமெடுக்கும். சில சமயம் அளவு மிஞ்சினால் குமட்டல், வாந்தி, வயிற்றுக் கடுப்பு, பேதி யிவைகளை யுண்டாக்கும். இதற்குப் பரிகாரம் கறந்த பசுவின் பாலைக் காலை மாலை சூடாறும் முன் சாப்பிட்டு வருவதேயாம். வேண்டுமாயின் சிறிது கற்கண்டுச் சூரணம் கூட்டிக் கொள்ளலாம். இவைகளு மல்லாமல் இது சம்பந்தமாகப் பண்டிதர்கள் கையாளும் சில முக்கிய முறைகளாவன:—

சீனலிங்கச் செந்தூரம்

ஐந்து பலம் படிக்காரத்தைக் கல்வத்தில் போட்டு அரைத்துத் தூள் செய்து அதிக உயரமில்லாத வாயகன்ற மண் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரிக்க உருகி நீர் சுண்டிச் சுற்றுப் புறங்களில் படிப்படியாக வெளுத்து வரும். அத்தருணம் நடுவில் படிக்காரம் ஆடை கட்டி எழுந்து எழுந்து அடங்கும். அப்போது கத்தியால் கீறி ஆடையைச் சிறிது விலக்கிப் பெருந் துண்டுகளாக நறுக்கிய ½-பலம் லிங்கத்தைப் போட்டு மேலாடை யைத் தள்ளிவிடவும். பின்னும் சிறிது நேரம் எரிக்க நடுவிலுள்ள நீரும் சுண்டி வெளுத்து வரும் சமயம் மண் சட்டியைக் கீழிறக்கி ஈர மணலில் வைத்துச் சூடாற்றிவிடவும். பின்னர் ஓட்டிலிருக்கும் மருந்தை நன்றாய்ச் சுரண்டிச் சேதப்படாமல் கல்வத்திலிட்டு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு ½, 1-குன்றியெடை தினம் 2, 3-வேளை ரோகத்திற் கேற்றவாறு தேன், நெய், சுத்த சலம் இவை களில் கலந்து கொடுக்க உஷ்ணபேதி, சீதபேதி, ரத்தபேதி, சுரம், உஷ்ணத்தினால் நேர்ந்த வயிற்றுவலி, உள்ளுறுப்புகளின் விரணம் முதலியவைகள் குணமாகும். இன்னும் நேர்வாள சம்பந்தமான பேதி மருந்துகளை உட்கொண்டு அளவு கடந்து பேதியாகி வயிற்று வலி மிகுந்த காலத்தில் இந்தச் செந்தூரத்தைச் சுத்த சலத்தில் அனுபானம் செய்து கொடுக்க அரைமணி நேரத்திற்குள் வயிற்று வலியும் பேதியும் நிற்கும். இன்றேல் மீண்டும் ஒருமுறை முன் போல் கொடுக்கவும். இப்படி 2, 3-வேளைக்குள் குணம் ஏற்படுவது நிண்ணம்.

சீனக்காவிச் செந்தூரம்

மூன்று பலம் சீமை பூங்காவிக்கல்லைக் கல்வத்திலிட்டு அரைத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு நான்கு எடை சுத்த சலம் விட்டுக் கரைத்துச் சீலையில் வடிகட்டி 4, 5-மணி நேரம் அசையாமல் வைத்துவிடச் சலம் தெளியும். இதை வடித்துவிட்டு ரவியில் வைக்கக் கல், மண் இவைகள் நீங்கிச் சுத்தியாகும். இத் தகைய சுத்தியான 3-பலம் பூங்காவியுடன் 3-பலம் பொரித்த படிக் காரமிட்டு நன்கு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்தச் செந்தூரத்தில் 4, 5-குன்றியெடை நெய், வெண்ணெய் முதலிய அனுபானங்களில் தினம் 3-வேளை கொடுத்து வர நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், வெள்ளை, பெரும்பாடு, ரத்தப் பிர மேகம், உஷ்ணத்தினால் நேர்ந்த வயிற்றுவலி, உள்ளுறுப்புகளி லுண் டான விரணம் முதலியவைகள் குணமாகும்.

படிக்கார பற்பம்

இரண்டு பலம் படிக்காரத்தைக் கல்வத்தில் போட்டு நன்றாய்த் துகளாகும்படி அரைத்தபின் மருதம் பட்டைச்சாறு விட்டு 4-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் வில்லை தட்டி உலர வைத்து அகலில் அடக்கிச் சீலைசெய்து 15, 20-வறட்டியில் புடமிடவும். மீண்டும் புடத்திலிருந்து எடுத்த மருந்தைக் கல்வத்தில் போட்டு முன்போல் மருதம் பட்டைச்சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டிப் புடமிட உயர்தரமான பற்பமாகும். அரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்துக. இந்தப் பற்பத்தில் வேண்டும்போது வேளைக்கு ஒரு

குன்றியெடை தினம் இருவேளை நெய், வெண்ணெய் முதலியவற்றில் அனுபானம் செய்து கொடுக்க நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், உள் ளுறுப்புகளின் ரணம், பேதி, வெள்ளை, வெட்டை முதலியவை குண மாகும்.

இந்தச் சினம் என்னும் படிக்காரத்தின் விபரம் பொதுப்பாயி ரத்தில் கார சார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

தங்கம்

(Aurum)

அடற்று வரவிடங்க ளங்கவோளி மங்கல்
கடத்தாழத் தோடகயங் காச—முடற்றுபஞ்
சேகையிருந் தாதுநட்டந் திட்டிநோ யீளையிவை
***யீகையிருந் தாலேகு மேன்.**

குணப்:—(இ-ள்.) பொன்னுல் தாவர விஷங்கள், தேஜசு மழுங்கல், அபினியாச சந்நிபாதம், பித்த கூபயம், பித்த காசம், தேக வெப்பு, முதிர்ந்த கபதோஷம், க்ஷீண சுக்கிலம், விழிநோய், கோழைக்கட்டு இவைகள் போம் என்க.

சேய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—மாசற்ற தங்கத்தைக்கொண்டு உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் அதிக சன்னமான இதழ்களாகத் தகட்டித்து காகிதத்தினிடையில் வைத்துக் கற்றைக் கற்றையாகக் கட்டிச் சித்தப்படுத்துவதுண்டு. இதனையே தங்க ரேக்கென்று கூறுவது வழக்கம். இத்தகைய தங்க ரேக்கை யூனானி வைத்தி யர்கள் லேகியங்களில் கூட்டியும், இந்துக்கள் சிற்றுண்டிகளில் கூட்டி யும் உபயோகப்படுத்துவதுண்டு. இதனுல் நல்ல தேஜசும் அறிவும் உண்டாகும். இதனை வைத்தியர்கள் செந்தூரமாகச் செய்து உப யொகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்:—

தங்கச் செந்தூரம்

ஒரு விராகனெடை தங்கச் சுருள் ரேக்கைப் பொடிப்பொடி யாகக் கத்தரித்துக் கல்வத்தில் போட்டு அதனுடன் மூன்று விராக

* ஈகை = பொன்.

னெடை வாலரசம் விட்டு இரண்டும் ஒன்றுக உறவாகுப்படி கை விரலால் புரட்டிப் புரட்டிக்கொடுத்து அத்துடன் 10, 12-திருநீற்றுப் பத்திரி இலையைப் போட்டு அரைக்க மெழுகாகும். அப்பொழுது ஏழு இலையுள்ள வெள்ளைப்பூக் காக்கட்டான் இலைச்சாறுவிட்டு இரண்டு மணி நேரத்திற்குக் குறையாமல் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து அகலிலடக்கிச் சீலைசெய்து உலரவைத்து 10, 12-வறட்டியில் புடமிடவும். இது நன்றாய் ஆறினபின் மீண்டும் மருந்தைக் கல்வத்திலிட்டு முன்போல் வெள்ளைக்காக்கட்டான் இலைச் சாறு மாத்திரம் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டி முன்போல் புடமிடவும். இப்படி 5-புட மிடத் தங்கம் பளபளப்பின்றி நல்ல செந்தூரமாகும். அரைத்துப் பத்திரப்படுத்துக, இந்தச் செந்தூரத்தில் 1, 2-அரிசிப் பிரமாணம் நெய், தேன் அல்லது தாது புஷ்டிக்குரிய லேகியம் முதலியவற்றில் அனுபானம் செய்து தினம் இருவேளை கொடுத்துக் கொண்டு வரப் பத்து நாளில் தாது பலப்படும். தேஜசு மிகும். இன்னும் மது மேகம், உட்சூடு போம். எந்த ரோகத்தினாலாவது சரீரம் இளைத்து நடைகுன்றிய பொழுது முன்போல் 10-நாள் கொடுக்கப் பூர்ண வலுவுண்டாகும்.

குறிப்பு:—தங்க சுருள் ரேக் என்பது தட்டார்கள் குந்தண வேலைக்கு உபயோகப்படுத்தப்பட்ட தங்கத் தகடாகும்.

வேறு முறை

ஒரு விராகனெடை தங்கச் சுருள் ரேக்கைச் சிறு துண்டுகளாகக் கத்தரித்துக் கல்வத்தில் போட்டுப் புதியன்மூலி என்று சொல்லப்பட்ட புதியனு இலைச்சாறு விட்டு 4-சாமம் அரைத்து மெழுகுபதத்தில் கால் ரூபாய் அகலமுள்ள வில்லையாகச் செய்து நன்றாய் நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக. அதன்பின் சுத்தி செய்த ஒரு விராகனெடை சங்கு பாஷாணத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி மூலிகைச் சாற்றால் 2-சாமம் அரைத்து மெழுகுபதத்தில் இரண்டு பாகமாகப் பங்கிட்டு முன் சித்தப்படுத்தி வைத்துள்ள தங்க வில்லையை விடச் சிறிது அகலமாக இருக்கும்படி வில்லைகள் செய்து இவைகளுக்கிடையில் தங்க வில்லையை வைத்து நன்றாய் அழுத்திச் சந்தில்லாமல் சுற்றுப் புறங்களைச் சேர வழுத்தி நிழலில் காயவைத்து மறுநாள் அகலில் அடக்கி மண்சீலை செய்து 5-வறட்டியில் புடமிடவும். புடம் நன்றாய் ஆறினபின் சீலையை நீக்கிப் பார்க்கப்

பாஷாணம் புகைந்து போம். தங்க வில்லை மாத்திரம் செந்தூரமா யிருக்கும். சில சந்தர்ப்பம் கருஞ் சிவப்பாக இருந்தாலும் குற்ற மில்லை. இதனை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும் போது இச் செந்தூரத்தில் 1, 1½-அரிசிப் பிரமாணம் தினம் இரு வேளை 10-நாள் தாதுவிருத்திக்குரிய ஏதேனும் ஒரு லேகியத்தில் கூட்டிக் கொடுத்துக் கொண்டுவர நரம்புகளை யனுசரித்த வாத ரோகங்கள் குணமாவதுடன் நல்ல பசியை யுண்டாக்கும். சாதாரண மாக இச் செந்தூரம் 40-வயதுக்குமேல் ஏற்பட்ட தூர்ப்பலத்திற்கு அதிக நன்மையைத் தரத்தக்கது.

தரா

(Thara)

சூலையோடு மேகத்தைத் தோன்றும லோட்டிவிடு
மேலைவந காலை விலக்குங்கா—னுல
வராமே வியவல்து லாரணங்கே வெட்டைத்
தராவெனுழ லோகமது தான்

குணம்:—(இ-ள்.) வெட்டையாகிய தராவென்னும் உலோக மானது. கீல் பிடிப்பு, வெள்ளை வீழ்தல், கபவாத தொந்தம் ஆகிய இவைகளைப் போக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த உலோகமானது தாம்பரமும் நாகமும் சேர்ந்த ஓர் கூட்டுறவாகும். இதைப் பற்பமாகச் செய்து உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்:—

தரா பற்பம்

ஒரு பலம் தாராவை இலுப்பை எண்ணெயில் சுத்தி செய்து கூடுமானவரையில் இலேசாகத் தகடு அடித்துத் துண்டுத் துண்டுக ளாக நறுக்கி வைத்துக் கொள்க. அப்பால் ¼-பலம் சுத்தி செய்த மனோசிலை, ¼-பலம் சுத்தி செய்த கெந்தகம், இவ்விரண்டையும் ஒரு கல்வத்தில் போட்டு எருக்கம்பால் விட்டு நன்றாய் மூன்று சாமம் அரைத்து, முன் சித்தப்படுத்தி வைத்துள்ள தாராத் துண்டுகளின் மேல் தழும்பப்பூசி ரவியில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல் மூடிச் சீலைசெய்து பெரும் புடமாகப் போடவேண்டியது. இப்படிப் பூக்கும் வரையில் சில புடம் போட்டு எடுக்கப் பற்பமாகும். அல்லது ¼-பலம் சூதம், ¼-பலம் கெந்தகம், இவ்விரண்டையும்

கல்வத்திலிட்டுக் குமரிச்சாறு, பழச்சாறு முதலியவற்றால் ஒவ்வொரு சாமம் அரைத்து முன் சித்தப்படுத்தியுள்ள தாராத்துண்டுகளுக்குத் தழும்பப் பூசி ரவியில் உலர்த்தி அகலில் அடக்கிச் சீலைசெய்து கெஜப்புடமிடப் பற்பமாகும். பொதுவாக நாகம் வங்கம் முதலிய வற்றைப் பற்பஞ் செய்யும் முறைப்படி முடித்துக் கொள்ளலாம். எங்ஙனமாயினும் சத்து இருக்கக்கூடாது. இந்தப் பற்பத்தில் வேளைக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$-குன்றி யெடை தினம் இருவேளை கொடுக்கத் திரிதோஷம், பிரமேகம், அக்கினி மந்தம், நேத்திர நோய், அதி சாரம், பித்த சுரம், காசம், சீதபேதி, வாந்தி, சூலை ரத்தபேதி முதலியவைகள் குணமாகும்.

தாம்பரம்

(Cuprum)

தாம்பரத்தாற் சோரிபித்தஞ் சந்நி வழுவைகபம்
வீம்பார்பி லீகமந்தம் வெண்மேகந்—தேம்பழலை
சூதகநோய் புண்கிரந்தி தோடசுவா சங்கிருமி
தாதுநட்டங் கண்ணோய்போஞ் சாற்று.

குணம்:—(இ - ள்.) தாம்பரத்தினால் ரத்தபித்தம், சந்நிபாதம் வழுவைமகோதரம், கபாதிக்கம், பீலிகம், அஜீரணம், வெண்குட்டம், பித்த கபம், ரத்தகுன்மம், விரணம், திரிதோஷகாசம், கிருமி, தாது நட்டம், விழிநோய் இவைகள் போம் என்க.

செய்கை:—சிறிய அளவில் சங்கோசனகாரி, சமனகாரி, அங்கா கர்ஷ்ணநாசினி.

சிறிது அதிக அளவில்-வியதாபேதகாரி, தாதுக்ஷீணரோதி.

மிஞ்சிய அளவில்-வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை வைத்திய ஆராய்ச்சி முறைப் படி கவனிக்கும் பொழுது இதில் சில தூர்க்குணங்கள் உண்டு. இக்காரணத்தை முன்னிட்டே இதனை அவிழ்த்த பாகங்களில் கூட்டு முன் ஏதேனும் ஒரு முறைப்படி சுத்திசெய்து கொள்வது அவசிய மாகும்.

உதாரணமாக:—தேவையான அளவு தாம்பாத்தை உருக்கிப் புளியாரைக் கீரைச் சாற்றிலும், புளிநாளைச் சமூலச்சாற்றிலும், 10, 10-முறை சாய்த்துத் தகடடித்து வைத்துக் கொள்க. இதற்கு

மேல் பூநீரின் காரத்துக்குச் சமத்துவமான கறுப்புப் புட்டிகளை இடித்துத் தூளாக்கி, ஒரு ஓட்டில் விரற்கடை கனம் பரப்பி, மேலே முன் சித்தப்படுத்திய தாம்பரத் தகட்டை வைத்து, மேலும் ஒரு விரற்கடை கனம் தூளைப் போட்டு அழுத்திப் பொருத்தமான மேலோடு மூடிச் சீலைசெய்து, 50, 60-வறட்டியிற் புடமிடவும். இப்படி மூன்று புடமிட்டு எடுக்கத் தாம்பரத்திலுள்ள குற்றங்கள் யாவும் நீங்கி ஒருவிதமான சுத்தியாகும் இப்படிச் சுத்தி செய்த தாம்பரத்தைப் பற்பமாகவும், செந்தூரமாகவும், மெழுகாகவும் செய்து உபயோகப்படுத்துவதுண்டு, அவற்றுள் சில முறைகளாவன:—

தாம்பர பற்பம்

ஒரு விராகன் எடையுள்ள 5, 6-தாம்பரத் துண்டுகளைத் தனித் தனியுருக்கி ஆறவிட்டு, வட்டமாகவும், தம்படி (ஒரு காசு) கன முள்ளதாகவும் இருக்கும்படி தகடடித்து வைத்துக் கொள்க. இதற்குமேல் அரைவீசை வெள்ளை அலரி வேர்ப்பட்டைக் கொண்டு வந்து, வெண்ணெய்போல் அரைத்து, ½, ¾-படி ஜலத்தில் கரைத்துப் பிசைந்து வடிகட்டி ஒரு கோப்பையில் விட்டு, அதனில் ஒரு பலம் கந்தகத்தை மிருதுவாக அரைத்துப் போட்டுக் கலக்கி வைத்துக் கொள்ளவும். இந்தச் சாற்றை அப்போதைக்கப்போது கலக்கிக் கலக்கி, ஒரு மண் கட்ருவில் கொஞ்சம் விட்டு வைத்துக்கொண்டு, தாம்பரத் தகடுகளைப் பழுக்கக் காய்ச்சிக் காய்ச்சித் தோய்த்து வரவும். இப்படி ஒவ்வொரு தகடும், 5, 6-முறை தோய்க்கப்பட்ட பின், மண் கட்ருவிலுள்ள சாற்றை நீக்கி விட்டு, மீண்டும் புதியதாக முன் வைத்துள்ள சாற்றைக் கலக்கி விட்டு, முன்போல் காய்ச்சித் தோய்க்கவும்.

இப்படியே 50, 60-முறை தோய்த்து வர இந்தத் தகடுகள் வெட்டையாவதுடன் கனத்தில் மூன்று பங்கு அதிகரிக்கும். இவற்றைப் பத்திரப்படுத்திக் கொள்க. பிறகு, சுமார் துடைபருமனும், முழ நீளமும் இருக்கும்படியாக ஒரு எட்டி மரக் கட்டையைக் கொண்டுவந்து, அதன் வெட்டு வாயின் நடுவில், திருப்புளியால் ஜான் ஆழமும் காலணு அகலமும்உள்ள துவாரம் ஒன்றுகுடைந்து, அதிலிருந்து வெளிப்படும் சக்கைகளை நீக்கிப் பத்திரமாக வைத்துக்

கொள்ளவும். இந்தச் சக்கையில் அணுத்துவமானத் தூளைக் கொஞ்சம் போட்டுக் குடைந்த துவாரத்தைச் சிறிதளவு நிரப்பி, மட்டமாக அழுந்தப் பார்த்து, முன் சித்தப்படுத்திய தகடுகளிலொன்றை உட் செலுத்தி மட்டமாகப் படியும்படியாகப் பார்க்கவும். இதன்மேல் 2, 3-விரற்கடை குடைந்தெடுத்த தூளைத் தகடு கொருங்காமல் மிருதுவாகப் போட்டு அழுத்தி, மீண்டும் மற்றோர் தகட்டை வைத்து மீதியுள்ள தூளைப்போட்டு அழுத்தவும். வெட்டுவாய்க்குச் சமீபித்தவுடன் எட்டிக்கட்டையைக் கொண்டு ஆப்பிட்டு மட்ட மாகச் செதுக்கி விடவும். இந்தக் கட்டைக்கு நல்ல உரப்பான துணியில் களிப்பு மண்ணைப் பூசிச் சுண்டு விரல் கனத்திற்குச் சீலை செய்து, 2-நாள் நன்கு உலர்த்தவும்.

பின்னர் கெஜ அகலமும், கெஜ ஆழமும் உள்ள ஒரு வட்ட மான குழிதோண்டி யதிற் கால்பாகம் வறட்டியை நிரப்பி, ½-மூட்டை புளியம்புறணியைக் கொட்டி, நடுவில் கட்டையை நிற்கும்படியாக வைத்து, மேலும் அரைமூட்டை புளியம்புறணியைக் கொட்டிக் குழி நிறையத் தரைமட்டத்திற்கு வறட்டிகளைப் பரப்பி யழுத்திக் குருநாதனைத் தியானித்துத் தீயிடவும், புடமாறிய பின், உள்ளிட்ட கவசத்தைச் சோதித்துப் பார்க்க, அதிர்ஷ்ட வசத்திற்கு ஏற்றவாறு, இரண்டு தகடுகளும் பூத்திருக்கும்; அல்லது மேற்படி தகடுகளின் சிலபாகமாவது வெளுத்துப் பூத்திருக்கும். கிடைத்த வரையில் சேதப்படாமல் எடுத்து அரைத்து வைத்துக் கொள்க. 5-பலம் காய்ச்சிய பசுவின் நெய்யில் 2-அரிசி எடை பற்பத்தைப் போட்டுக் கலக்கி, வேளைக்குத் தேக்கரண்டி யளவு அந்தி சந்தி 20-நாள் கொடுத்துவர, இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள நோய்கள் யாவும் குணமாகும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா என்றிராமல், உள்ளபடி கஷ்டப்பட்டவர்களுக்கே மருந்து சித்தி யாகும். பேராசை கொண்டு ஒன்று அல்லது இரண்டு தகடுகளுக்கு மேல் வைக்கக்கூடாதென்பதைக் கவனத்தில் வைக்க வேண்டியது.

தாம்பரக்களங்குச் செந்தூரம்

தாம்பரக்களங்கு அல்லது செப்புத் தொட்டிப் பாஷாணம்-18, கெந்தகம்-12, சூதம்-9, இலிங்கம்-7, வீரம்-4 ஆக இச்சரக்குகளை வீராகனெடையாகக் கல்வத்தில் போட்டு அடியில் கூறப்பட்ட

ஏதேனும் ஒரு திராவகத்தால் 4-சாமம் அரைத்து உலர்த்திப் பொடிசெய்து அரைபாகத்தில் அடங்கக் கூடிய விசாலமுள்ளதும் ஏழுசீலை செய்ததுமான ஒரு குப்பியில் போட்டு வாய்க்குப் பலப்பக் கல்லால் அடைத்துச் சீலைசெய்து ரவியில் உலர்த்தி வாலுகாயந்திரத்தில் வைத்து 60-நாழிகை மூத்தியாக எரித்தெடுக்கச் செந்தூரமாகும். நிறம் சரிவர இல்லையாயின் மீண்டும் ஒருமுறை மேற்படி திராவகத்தால் 3-சாமம் அரைத்து உலர்த்திப் பொடித்து முன்போல் குப்பியிலடைத்து 4-சாமம் எரித்து எடுக்க நல்ல செந்தூரமாகும். இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$-குன்றியெடை தினம் இருவேளை கொடுத்து வர வாதம் 80, கபம்-20, பித்தம்-40, சூலை, சந்நி, குன்மம், மூர்ச்சை, வீக்கம், திமிர், குட்டம் முதலிய பிணிகள் குணமாகும்.

இதனை முடிப்பதற்குச் சிறந்த திராவகங்கள்: பஞ்சலண திராவகம் அதாவது உம்பர் விந்து என்று ஆன்றோர்களினால் கூறப்பட்ட பஞ்சபூத உப்புகளைச் சமனெடையாக ஒரு கோப்பையில் போட்டு நாதவிந்து நீரிலாவது அல்லது கழுதை மூத்திரத்திலாவது குழம்பு பதமாகக் கரைத்துப் புட்டிவாலியிலிட்டு திராவகம் இறக்கிக் கொள்ளவும். அல்லது சப்தலவண திராவகம்: சோற்றுப்பு பலம்-1, வெடியுப்பு பலம்-1, படிக்காரம் பலம்-1, வெங்காரம் பலம்-1, கடல் நுரை பலம்-1, இந்துப்புப் பலம்-1, பூநீறு பலம்-2 இவற்றைக் கல்வத்திலிட்டுக் குளம்பு சாராயம் விட்டுக் குழம்பு பதமாக அரைத்துப் புட்டி வாலியிலிட்டு திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

குறிப்பு:—புட்டிவாலி யென்பது:—24-அவுன்ஸ் கொள்ளத்தக்க கறுப்பு புட்டி அடிமட்டமுள்ளதாகக் கொண்டுவந்து சுத்தப் படுத்தி மண்சீலை ஏழுசெய்து உலர்த்தி அதனில் குழம்பு பதமாக அரைத்து வைத்துள்ள உப்பை புட்செலுத்திய பின், உட்புறத்தில் குவிந்ததாகவும் துவாரமிட்டதுமான ஓர் புட்டியை மேலே செருகிச் சந்துக்கு மண்சீலை அடைத்து காய்ந்தபின் அடிப்புட்டியை 2-விரற்கடை மணலிற்குமேல் இருக்கும்படி ஒரு சட்டியில் அமர்த்தி மணல் நிறப்பி மேல் புட்டியின் வாய்க்குக் கார்க்கிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக 3-மணி நேரம் எரிக்கவும். அத்தருணம் மேல்புட்டிக்கு சூடு ஏறுமளிருக்கும் பொருட்டு அப்போதைக்

க்கப்போது குளிர்ந்த சலத்தில் சீலையை நனைத்துப் பிழிந்துவிட்டு மேலே சுற்றி வரவும். அப்போது உப்பின் சாரமெல்லாம் திராவக மாக மேலேறித் தூளியிட்ட புட்டியின் அடிப்பாகத்திலுள்ள இடுக்கில் நிறைந்திருக்கும் கார்க்கை எடுத்துவிட்டுத் திராவகத்தை வடித்துக் கொள்ளவும்.

தாம்பர மெழுகு

அதிக சன்னமாக அராவப்பட்ட 4-தோலா எடை தாம்பரப் பொடியுடன், 4-தோலா எடை சுத்தி செய்த கெந்தகத்தை நன்றாய்ப் பொடி செய்து கூட்டி ஒரு கோப்பையில் போட்டுச் சரக்குகள் மூழ்க எலுமிச்சம்பழச் சாறுவிட்டு. ரவிமுகத்தில் கிளறிக் கிளறிக் கொடுத்து உலர்த்தவும். பின்பு மேற்படி கோப்பையில், கருந்துளசி என்கிற கிருஷ்ண துளசிச் சாற்றைச் சரக்கு மூழ்கும்படி விட்டு முன்போல் ரவிமுகத்தில் உலர்த்தவும். இப்படி நீர் சுண்டி வரும் சமயத்தில், கோப்பையிலிருக்கும் சரக்குகளைக் கீழ்மேலாகப் புரட்டிப் புரட்டிக் கொடுத்து வருக. இவைகள் யாவும் நீர்சுண்டி உலர்ந்தபின் குப்பைமேனியின் சாற்றை மேற்படி சரக்குகள் மூழ்கும் வண்ணம் விட்டு, ரவியில் வைத்துக் கிளறிக் கிளறிக் கொடுத்துக் கொண்டு வருக.

இதுவும் நன்றாய்க் காய்ந்தபின் கோப்பையிலுள்ள சரக்குகள் யாவற்றையும் சேதப்படாமல் சுரண்டிக் கல்வத்தில் போட்டு, அதனுடன் ½-தோலா எடை பச்சைக் கற்பூரத்தைக் கூட்டித் தேன் விட்டு, நான்கு ஜாமத்திற்குக் குறைவில்லாமல் அரைக்கவும். சரக்குகள் யாவும் நன்றாய் மெழுகு பதம் வரும் சமயம் வழித்து, வாயகன்ற சீசாவில் பத்திரப்படுத்துக. இந்த மெழுகை வேளைக்குத் துவரைப் பிரமாணம், தினம் இரண்டுவேளை பசுவெல்லத்தில் வைத்துக் கொடுக்கவும். இப்படிக் குறைந்த பட்சம் 5, 7-நாட்கள் கொடுக்கச் சுரம், சூலை, பாண்டு, கீல்வாயு, குட்டம், பக்கவாதம் ஆரம்ப ஆணிக்கால், மேகப்படை, திமிர்படை முதலிய ரோகங்கள் தீரும். இந்த மெழுகை உட்கொள்ளும்போது புளி, நல்லெண்ணெய், கடுகு, மீன், கருவாடு, புகையிலை சம்பந்தமான பழக்கம், முதலியவை கூடாது. உணவில் நெய், சீரகம், வெங்காரம், துவரம் பருப்பு, வெள்ளாட்டிறைச்சி, இனிப்புள்ள பசுவின் மோர், குளிர்ச்சியான காய்கறிகள் கூட்டிக்கொள்க.

தாளகம்

(Trisulphuret Of Arsenic)

தாளகத்தின் பேருரைக்கத் தாலுகவு ணேய்குட்ட
நீளக் குளிர்காய்ச்ச னீர்க்கபங்க—ணுளகங்கோள்
துட்டப் பறங்கிப்புண் சூழழகண் மண்டைநோய்
கிட்டப் படுமோ கிளத்து.

குணம் :—(இ - ள்.) தாளகத்தினுல் அதிஜிக்வாரோகம், தாளு கச் சபநோய், குஷ்டரோகம், நடுக்கற்சுரம், க்ஷயகாச சுவாசம், துஷ்ட விரணம், ஜலஸ்ராவம், சிரஸ்தாபரோகம் ஆகிய இவைகள் விலகும் என்க.

இதுவுமது

மந்தாரத் தாலே வளருஞ் சுவாசநோ
யுந்திவரு தீச்சுரநோ யோடுங்காண்—முந்து
தோனிக்கயஞ்செய் யான்கடியுந் தோற்குட்டு மேகுந்
தனிப்போன் னீரிதாரத் தால்.

குணம் .—(இ - ள்.) பொன்னரிதாரத்தினுல் மந்தார சுவாசம், வாதசுரம், சத்திக்கிற க்ஷயம், செய்யான் விஷம், சருமதல குஷ்டம் முதலியவைகள் போம் என்க.

இதுவுமது

காச முடனே கயநோய் கபவாதம்
பேசரிய குன்மமெட்டும் பேருங்காண்—மாசகன்ற
கீற்று மதிநுதலே கேளாயுள் வேதமது
சாற்று மரிதாத் தரால்.

குணம் :—(இ - ள்.) அரிதாரத்தினுல் க்ஷயகாசம். சிலேத்தும வாதம், அட்டகுன்மம் முதலிவைகள் போம்.

இதுவுமது

ஈளை யுடனே யிருமல் குடிவிலகுங்
கோழை மலமகலுங் கோம்பனையாய்—நாளு
மடலுறுக யங்காப்பா ணுறப்புண் ணும்போ
மடலரிதா ரத்தை மதி.

குணம் :—(இ - ள்.) மடலரிதாரத்திலுல் தமக சுவாசம் காசம், சிலேஷ்ம மலாவர்த்தம், யகூஷ்மரோகம், கரப்பான், துஷ்ட விரணம் இவைகள் விலகும் என்க.

இதுவுமது

மடலரிதா ரத்தில் வருங்கரடி ரண்டு
முடல்விடங்க ளாக்களையு முண்மை—கடல்சூழும்
வையகத்தி லிச்சரக்கை வன்றீயில் வைத்தேடுக்க
ஐயமிலை யென்றே யறி.

குணம் :—(இ - ள்.) மடலரிதாரத்திலுல் பலகை கட்டி என் கிற இரண்டுவித கரடுகளாலும் உடலிலுறிய விஷங்கள் நீங்கும். இதனைப் பாகப்படி தீயிலிட்டெடுத்த மருந்திற்கே பெருத்த பயனுள தெனக் கூறி யிருக்கின்றனர்.

இதுவுமது

சிவந்தவரி தாரமது செஞ்சிலைபோற் காட்டு
முவந்ததனை யுண்முறையோ டுண்டா—லிவர்ந்தாழ்
சுரங்குளிர்மா வாதமுடற் சூலநமை குட்ட
மிரங்குமென நாளு மிசை.

குணம் :—(இ - ள்.) சிவந்த கல்லைப்போலிருக்கிற அரிதாரத் தைச் சுத்திசெய்து திரமாக உண்டால் குளிர்சுரம், மகாவாத ரோகம், சரீரக் குத்தல், தினவு, கிடிப குஷ்டரோகம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை :—கபஹரகாரி. சுரஹரகாரி, வமனகாரி, விஷநாச காரி, வியதாபேதகாரி.

விபரம் :—மேற்கூறப்பட்ட சரக்குகள் யாவும் ஏறத் தாழ ஓரே குணத்தை யுடையதென அறிதல் வேண்டும். இதனை ரசாயன விதிப்படி ஆராய்ச்சி செய்யும்போது பாஷாணமும் கெந்தகமும் சேர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது. இவ்விரண்டு சரக்குகளும் ஏற்றக் குறைச்சலாக இயக்கத்திலுல் மேற் கூறப்பட்ட பல இனங்க ளாகின்றன.

உபயோகிக்கும் முறை:—இதை அவிழ்த்த பாகங்களில் கூட் டும் முன் ஏதேனும் ஓர் முறைப்படி சுத்திசெய்து கொள்வது அவ சியமாகும். எங்ஙனமெனில் :—

காற்படி சுண்ணும்புக் கற்களினிடையில் ஒரு பலம் தாளகத்தை வைத்துப் பனங்கள் விட்டுத் தாளித்து 6-மணி நேரம் சென்றபின் கழுவி எடுத்துக் கொள்க. இப்படி மூன்று முறை செய்ய நல்ல சுத்தியாகும். அல்லது எருமைச் சாணத்தைச் சலம் விட்டுக் கரைத்து ஒரு மட்கடத்தில் விட்டு அதனில் ஒரு பலம் தாளகத் தைக் கிழிகட்டிக் கடத்தின் அடியில் படாமல் ஒரு விரற்கடைக்கு மேல் இருக்கும்படியாகக் கட்டித் தொங்கவிட்டு ஒரு சாமம் எரித்து எடுக்கவும். இப்படி மூன்று முறை செய்ய நல்ல சுத்தியாகும். இத்தகைய சுத்தி பெற்றத் தாளகத்தைக் கொண்டுச் செய்யும் சில முறைகளாவன:—

தாளக மாத்திரை

சுத்தி செய்த ½-பலம் தாளகத்தை ஒரு மண்ணேட்டில் வைத்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து வரும்போது இஞ்சிச் சாறு, முலைப்பால், தும்பை யிலைச்சாறு ஆக ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மணிநேரம் சுறுக்குக் கொடுத்து எடுத்துக்கொள்ள ஒரு விதமான வீரியம் அடையும். இப்படிச் சித்தப்படுத்திய தாளகம், மொட்டு நீக்கிய கிராம்பு, உயர்ந்த பால் பெருங்காயம் ஆக ஒவ் வொன்றும் சமனெடையாகக் கல்வத்தில் போட்டு இஞ்சிச்சாறு விட்டு 2, 3-மணி நேரம் அரைத்து சிறு பயறு பிரமாணம் மாத் திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப் படுத்துக.

குழந்தைகட்கு மார்பில் கோழை மிகுதிப்பட்டுள்ளபோது வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் கம்மாறு வெற்றிலைச் சாற்றில் அனுபானம் செய்து தினம் 2-வேளை கொடுக்கக் கபத்தைத் கரைத்து விடும். இருமல் இருப்பினும் சாந்தப்படும். பெரியவர்களுக்கு வேளைக்கு 2, 3-மாத்திரை வீதம் தினம் இரண்டு மூன்று வேளை கம்மாறு வெற்றிலையில் வைத்து மடித்து மென்று தின்னும்படி கொடுக்க 5-நாளிற்குள் மார்பிலுள்ள கோழை முற்றிலும் நீங்கும். சலதோஷத்தினாலாவது அதிக சீதளத்தினாலாவது கபமுண்டாகி வருகின்ற சுரத்திற்குச் சாதிலிங்கத்தின் தலையங்கத்தின் கீழ்க் குறிப் பிட்டுள்ள இலிங்கச் செந்தூரம் அல்லது மாதவச் செந்தூரம் முத லியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொடுத்து ½, 1-மணி நேரம் சென்ற

பின் இம்மாத்திரையைக் கொடுக்க அதிக நன்மையைத் தரும். அத்தருணம் புளி தள்ளி இச்சா பத்தியமாக ரோகி இருத்தல் வேண்டும்.

தாளக பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த தாளகத்தைக் கல்வத்தில் போட்டு 20, 25-வயல் நண்டுகளின் மேலோட்டில் பற்றி இருக்கும் மஞ்சள் நிறமான கொழுப்புகளைச் சேதப்படாமல் சுரண்டிப் போட்டு ஒரு சாமம் வரையில் நன்கரைத்து ஒரே வில்லையாகத் தட்டி நிழலில் 2, 3-நாள் காயவைக்கவும். பிறகு 5-பலம் எடையுள்ள சிறுகாஞ் சொறி இலையை அரைத்துக் கவசமிட்டு 4, 5-மண் சீலை செய்து ஒரு நாள் உலர்த்தி மறுநாள் 20-பலம் எடை கொண்ட வறட்டியின் மத்தியில் வைத்துப் புடமிடவும். புடம் எரிந்து அடங்கும் வரையில் நன்கு கவனித்து தாளகம் புகைந்து வாசனை கிளம்புமாயின் காலதாமதம் செய்யாமல் புடத்தின்மேல் மண்ணைக்கொட்டி மூடி விடவும். அப்படி வாசனை யொன்றும் கிளம்பாத சந்தர்ப்பத்தில் செய்யவேண்டுவது ஒன்றுமில்லை. இவ்விதமாகப் புடத்திலிருந்து எடுத்த தாளகவில்லையை மறுபடியும் கல்வத்திலிட்டு முன்போல் நண்டின் கொழுப்புக் கூட்டி அரைத்து உலர்த்தி மூலிகைக் கவசமிட்டு முன்போல் புடமிடவும். இப்படி 5, 6-புடம்போடுவதற்குள் தாளகம் கட்டுப்பட்டுப் புடத்திற்கு புடம் வெளுத்து வரும் அதை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்தப் பற்பத்தில் வேளைக்கு 2, 3-அரிசி யெடை தினம் இருவேளை வெள்ளாட்டுப் பாலிலாவது அல்லது கழுதைப் பாலிலாவது இவ்விரண்டும் கிடைக்கப்பெறுத காலத்தில் முலைப்பாலிலாவது அனுபானம் செய்து 5-நாள் கொடுக்கச் சுவாசகாசம் தீரும். இம்மருந்தைக் கொடுக்கும்போது ரோகி புளி தள்ளி இச்சாபத்தியமாக இருக்க வேண்டும்.

குறிப்பு:—தாளகத்தைப் புகையவிடின் எடைகுறைந்து போம். ஜாக்கிரதையாகக் கவனித்து சாக்கு புகையுமாயின் மண்ணைக்கொட்டி ஆற்றிவிடவும். இப்படி 4, 5-முறை செய்வதற்குள் தாளகம் கட்டி விடும். தீ அதிகப்படாதும் புகையாது.

திராட்சை உப்பு

(Potassae Tartra Acida)

சேப்புந் திராட்சை திரட்பழத்தா லானதோர்
உப்பையுட் கொள்வார்கட் கோண்டொடியே—தப்பறவே
தூண்டுமலப் போக்கதனுற் றேந்தசுரந் தாகமுதல்
பாண்டுநீர்க் கோவையறும் பார்.

குணம்:—(இ - ள்.) திராட்சையுப்பை யுட்கொள்ளக் கெட்ட மலத்தை வெளியாக்கும். இதனுல் சுரம், தாகம், பாண்டு, நீர்க் கோவை முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—மலகாரி, மூத்திரவர்த்தனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—திராட்சை உப்பானது வெளுத்து நறநறவென்று புளிப்புச் சுவையுடனிருக்கும். இந்த உப்பை வேளைக்கு 10, 20-குன்றியெடை நீரில் கரைத்துக் கொடுக்கச் சிறுநீர் நன்றாய் இறங்கும். 1-முதல் இரண்டு விராகனெடை சலத்திலிட்டு உள்ளுக்குக் கொடுக்க மலம் இளகலாகப் போகும். 3-முதல் 4-விராக னெடை கொடுக்க நீர்மயமான பேதியாவதுடன் பாண்டு, உடல் வீக்கம், பெரு வயிறு, நீர் கட்டு முதலியவை குணமாகும். இன்னும் 24-அவுன்ஸ் கொள்ளத்தக்க புட்டியில் 1, 1½-விராகனெடை உப்பைப் போட்டு சலம் விட்டு போதிய அளவு சர்க்கரை போட்டு இனிப்பாக்கி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் இரண்டுமணி நேரத்திற்கு ஒரு முறை கொடுத்துக்கொண்டு வரச் சுரம் தாகம் முதலியவற்றை யடக்கும். இந்த உப்பின் விபரம் பொதுப்பாயிரத்தில் காரசாரலவணம் இருபத்தைந்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

துத்த நாகம்

(Zincum)

மேகங் கிளர்பேதி வெட்டையழ லுத்தணிக்கும்
வேகங்கி ராணி விலக்குங்காண்—போகாப்
பரியழலைப் புண்ணைப் பமித்தியத்தைப் போக்கு
மரியதுத்தி நாக மது.

குணம்:—(இ - ள்.) துத்தநாகம் விரணப்பிரமேகம், அதிசாரம், வெள்ளை, உட்சூடு, சீதரத்தக் கழிச்சல், முளைவிரணம், பித்தம் இவைகளை நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, மத்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—நாகத்தை அவிழ்த்த பாகங்களில் கூட்டும்முன் சுத்தி செய்து கொள்ளவேண்டும். எங்ஙனமெனில்:—தேவையான அளவு நாகத்தை ஒரு இரும்புக் கரண்டியில் போட்டுச் சிறிது இலுப்பை எண்ணெய் விட்டு அடுப்பில் வைக்க விரைவில் உருகும். இதை இலுப்பை எண்ணெயில் சாய்க்கவும். இது நன்றாய் ஆறினபின் மீண்டும் கரண்டியில் போட்டு முன்போல் உருக்கி வேறு புதிய இலுப்பை எண்ணெயில் சாய்க்கவும், இப்படிக் குறைந்தது ஏழு முறை செய்யச் சுத்தியாகும். இத்தகைய நாகத்தையே எப் பொழுதும் அவிழ்த்த பாகங்களில் கூட்டிக் கொள்வது பண்டிதர் களின் கடமை யாகும்.

நாக பற்பம்

சுத்தி செய்த ஒரு பலம் நாகத்தை ஒரு அகலக் கரண்டியில் போட்டு அடுப்பில் வைக்க உருகும். அத்தருணம் ஒரு ரூபாய் எடைச் சூதத்தைத் தொந்தித்து அதில் ஒரு ரூபாய் எடை பொடித்து வைத்துள்ள நெல்லிக்காய் கெந்தகத்தைப் போட்டு அடுப்பில் வைத்துக்கிளறிக் கொடுக்க எரியும். அச்சமயம் கரண்டி யைக் கீழிறக்கி ஆறவிட்டுக் கல்வத்தில் போட்டு அரைத்து மறு படியும் கரண்டியில் போட்டு அடுப்பில் வைத்து உருக்கவும். இது உருகினவுடன் முன்போல் ஒரு ரூபாய் எடை சூதத்தைத் தொந் தித்து ஒரு ரூபாய் எடை கெந்தகப் பொடியைப் போட்டு அடுப் பில் வைத்துக் கிளறிக் கொடுக்கவும், இதுவும் எரிந்தடங்கின சமயம் கீழிறக்கி ஆறவிட்டு முன்போல் கல்வத்தில் போட்டு அரைத் துக் கரண்டியில் செலுத்தி அடுப்பிலிட்டு உருக்கவும். உருகும் பட்சத்தில் ஒரு ரூபாய் எடை சூதத்தைத் தொந்தித்து ஒரு ரூபாய் எடை கெந்தகப்பொடியைப் போட்டுக் கிளறிக் கொடுக்கவும்.

ஏற்கெனவே நாகசத்து மடிந்து உருகும் தன்மை இல்லாவிடின் கரண்டியிலுள்ள நாகப் பொடியுடன் முற் கூறப்பட்ட அளவின்படி சூதத்தையும் கெந்தகத்தையும் கூட்டி நன்கு அரைக்கக் கறுப்பு நிறமாக இருக்கும். சேதப்படாமல் நன்றாய்ச் சுரண்டி எடுத்துக் கொள்க. அப்பால் ஒரு சுத்தமான இரும்புக் கடாயைக் கண்ணுன் உலையில் வைத்து அதில் முன் சித்தப்படுத்திய நாகப்பொடியைப் போட்டுக் கடாய் சிவக்கும்படி ஊதிவர நாகம் தீ பற்றி எரிந்து பூக்க

ஆரம்பிக்கும். அத்தருணம் இரும்புக் குச்சியைக்கொண்டு கீழ் மேலாக நாகப்பொடியைக் கிளறிக் கொடுக்க இன்னும் நன்றாய்ப் பூத்து வெளுக்கும். பின்பு கடாயை கீழிறக்கி ஆறவிட்டுப் பூத்துள்ள பற்பத்தைச் சீலையில் அரித்து திப்பியைத் தள்ளிவிட்டு அடியி லிறங்கிய பற்பத்தைச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தப்பற்பத்தில் வேளைக்கு $\frac{1}{4}$, 1 குன்றியெடை தினம் இருவேளை தகுந்த அனு பானங்களில் கொடுத்துவர மூலம், சீதபேதி, உஷ்ணபேதி, கிராணி, காசம், கூஷ்யம், கூஷய சுரம் முதலியவைகள் போம். பிரசவத்திற்கு முன்னும் பின்னும் காணுகின்ற கிராணிகளுக்கு இது அதிகம் சிறந்தது.

வேறு முறை

ஒரு பலம் சுத்தி செய்த நாகத்தை இரும்புக் கடாயில் போட்டுக் கன்னன் உலையில் வைத்து ஊதி உருகின சமயம் இரண்டு அல்லது மூன்று பிடி அளவிற்கு அரிவாள் மூக்குப் பச்சிலையைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு அதன் வேரைக்கொண்டே துழாவிவரப் பற்பமாகும். சத்திலலாமல் நன்றாய்ப் பூக்கும் வரையில் அவ்வேரைக்கொண்டு கிளறிக் கீழிறக்கி ஆறவிட்டுச் சீலையில் அரித்து திப்பியைத்தள்ளி அடியிலுள்ள பற்பத்தை எடுத்துக்கொள்க. இதனையே உள்ளுக்குக் கொடுக்கலாம். இன்னும் இதனைக் கல்வத்தி லிட்டு ஷே மூலிகைச் சாற்றில் 2, 3-சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி அகலிலடக்கிச் சீலைச் செய்து 10, 15-வறட்டியில் புட மிட, இன்னும் சிறிது விசேஷ குணத்தைக் கொடுக்கும். இந்தப் பற்பத்தில் வேளைக்கு $\frac{1}{2}$, 1-குன்றியெடை நெய் வெண்ணெய் முதலிய அனுபானங்களில் தினம் இருவேளை கொடுத்துவர இரத்த மூலம், சீதபேதி, உஷ்ண பேதி, கிராணி முதலியவைகள் குண மாகும்.

நாகத்தாம்பர பற்பம்

ஒரு பலம் சுத்திசெய்த நாகத்தை இரும்புக்கடாயில் போட்டுக் கன்னன் உலையில் வைத்து ஊதி உருக்கிச் சேறு பதமாக இருக்கும் போது இரண்டு விராகனெடை சுத்தமான தாம்பரப் பொடியைப் போட்டு அயக் கோலால் கிளறிக் கொடுக்க இவை யிரண்டும் சேர்ந்து மத்தாப்பு வெளிச்சம்போலுண்டாகி தீ பற்றி எரியும். அப் போது $\frac{1}{4}$-ரூபாய் எடை அபினியை உளுந்துப் பிரமாணம் சிறு துண்டுகளாக நறுக்கி வைத்துக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகத்

தூவி நாகத்தைக் கீழ்மேலாக் கிளறிக் கொடுக்கப் பூக்கும். நாகம் சத்தில்லாமல் மடிந்து பற்பமான சமயம் கீழிறக்கி ஆறவிட்டுச் சீலையில் அரித்துத் திப்பியைத் தள்ளிவிட்டு அடியிலுள்ள பற்பத்தைச் சீசாவில் பத்திரப்படுத்துக இதனை வேளைக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$-குன்றி யெடை நெய்யிலாவது வெண்ணெயிலாவது தினம் இருவேளை 5-நாள் கொடுக்க மூலம், செம்படை, மேகரணம் குணமாகும்.

துத்தம்

(Sulphas zinci)

முற்றியகு றிப்புண் முளைவிரணஞ் சென்னிதனைப்
பற்றிநின்ற வாதம் படர்கப்பான்—சுத்தவிழிக்
காசங் கணம்பில்லங் கண்ணோய்குந் தந்தோலும்
வாசமிகு துத்தத்தால் வாழ்த்து.

குணம்:—(இ - ள்.) துத்தத்தினால் - அரிசோரோகம் (பறங்கிப்புண் அதாவது கொறுக்கு) முளைகளுள்ள புண்கள், வாத கிரஸ்தாபம், கரப்பான், கருவிழிமந்தாரகாசம், சுழிகணம், இமைப்பில்ல நோய், கண்ணோவு, குந்தரோகம் ஆகிய இவை ஒழியும் என்க.

செய்கை:—பலகாரி, சங்கோசனகாரி, அங்காகர்ஷ்ணநாசினி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை அதிக அளவில் உள்ளுக்குக் கொடுத்தால் விஷமிக்கும். 5-குன்றி யெடைக்குமேல் கொடுத்தால் வாந்தியையும் பேதியையும் உண்டாக்கும். இதன் அளவை அதிக ஜாக்கிரதையாக அதிகப்படுத்த வேண்டும். இதனை உள்ளுக்குக் கொடுப்பதாக இருந்தால் நன்றாய் அரைத்து வேளைக்கு $\frac{1}{4}$, 1-குன்றி யெடை நெய் வெண்ணெய் முதலிய அனுபானங்களில் தினம் இரு வேளை கொடுக்கலாம் இதனால் காக்கை வலி, சுவாசகாசம், கக்கிருமல், சீதசுரம். நாட்பட்ட பேதி, சீதபேதி, பெரும்பாடு முதலியவைகள் போம். இதனை விசேடமாகக் கண் ரோகங்களுக்கே மேற்படி சூத்திரத்தில குறிக்கப்பட்டுள்ளது. எங்ஙனமெனில்:—பால்துத்தம், துருசு வகைக்கு விராகனடை-1, சிறுகீரை வேர், பொன்னாங்காணி வேர், ஓரிலைத்தாமரை வேர் வகைக்கு ஒரு பாக்களவு ஆக இவற்றை ஒரு சுத்தமான கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் மைபோலரைத்துக் காசுபோல் வில்லைகள் தட்டிக் காயவைத்து ஒரு அகலமான புது மட்பாண்டத்தில் பரப்பி

மற்றொரு மட்பாண்டத்தைக் கொண்டு மூடி இரண்டேகால் மணி நேரம் எரித்து ஆறவிட்டுப் பார்க்கப் பற்பமாக இருக்கும். இந்தப் பற்பத்தில் எள்ளுப்பிரமாணம் கண்களில் தினம் ஒருவேளை யிடவும். இப்படிச் சிலதினம் செய்யக் கண்ணின் கருவிழியைச் சுற்றி வரை யுண்டாக்கி அரிப்பெடுத்துக் கண்சிவந்து உபத்திரவம் செய்து விழியைச் சிறுக்கும்படி செய்கின்ற மந்தாரகாச ரோகத்தைக் குணப்படுத்தும்.

துரிசு

(Cupri sulphas)

புண்ணுற்றுங் காமியத்தின் புண்ணுற்றுங் கண்ணேயை
விண்ணேற்று முத்தோட வீறடக்குஞ்—சண்ணுகின்ற
வாந்தியோடு பேதிதரும் வாய்நோய் சுரந்தணிக்குங்
காந்தி தருந்துரிசு காண்

குணம்:— (இ - ள்.) துரிசு - வாதாதி தோஷ விரணம், அவ மந்த குய்ய விரணம், கண்ணேவு, திரிதோஷம், சிலேஷ்மமுகபாகம், வாதசீத சுரம் இவைகளை நீங்கும். வமனம், விரேசனம், தேஜசு இவைகளை யுண்டாக்கும் என்க.

செய்கை:—சிறிய அளவில் பலகாரி, சங்கோசனகாரி, அதிக அளவில் வமனகாரி, விரணகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சரக்கைச் சுண்ணமாகவும் செந்தூரமாகவும் இதர சரக்குகளுடன் கூட்டிப் பல அவிழ்தங்க ளாகவும் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

துரிசு பற்பம்

மாசி, பங்குனி மாதங்களில் பௌர்ணமி அன்றையதினம் சூரியோதயத்திற்கு 5, 6-நாழிகைக்கு முன் எடுத்த பூநீற்றைத் தக தீட்சை செய்து அதிலுள்ள எண்ணெயை வாங்கிச் சுத்தப்படுத்தி ஒரு குடுவையில் ½-படி போட்டு அதன்மீது ஒரு பலம் துரிசுக் கட்டியை வைத்து அதன்மேலும் முன் சுத்தப்படுத்தியுள்ள பூநீற்றில் ½-படி போட்டு வாயடைத்துச் சீலைசெய்து பூமியில் 3-அடி ஆழத் தின்கீழ்ப் புதைத்து ஒரு மண்டலம் வைக்கவும், அப்பால் இந்தக் குடுவையை எடுத்துச் சீலையை, நீக்கி உள்வைத்த துரிசுக்கட்டியை

எடுத்து அதற்கு அடுக்குப்பூவை விடுகின்ற நந்தியாவட்டைப்பாலை ஒரு நூல் கனத்திற்கு அடித்துக் காயவைத்து அதன்பின் நந்தியாவட்டை இலையை மெழுகுபோல் அரைத்து ஒரு விளாங்காய்ப் பிரமாணம் கவசமிட்டு மண்சீலை ஏழுசெய்து கவுதாரி புடம் போடவும். துரிசு வெளுக்கும் சில சமயம் சலம் பட்டால் பச்சை நிறம் வராமலும் சில சமயம் உபாயமான பச்சை நிறத்தையும் காட்டும். ஆயினும் குணத்திலும் காரத்திலும் குறைவு படாது. வேளைக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$-அரிசிப் பிரமாணம் தேன், நெய் இவைகளில் கொடுக்கச் சுவாசகாசம், கூஷயம், குன்மம். மேகரணம் முதலிய பிணிகள் போம்.

துரிசு செந்தூரம்

அரைப் பலம் துரிசுக் கட்டிக்கு வெள்ளறுகுச் சமூலம் அரைத்து 6-பலம் எடை இருக்கும்படியாக மேல் கவசம் செய்து 10, 15-நாள் வரையிலும் நிழலில் உலர்த்துக. இதனைத் தினந்தோறும் 2-கைகளால் துரிசு கட்டிக்கும் மேல் கவசத்திற்கும் இடையே சந்து விழாதபடி அழுத்தி அழுத்திப் பிடித்துக்கொண்டு வருக. இதனால் கவசமானது இறுகித் துரிசின் சத்து வெளிப் போகாமல் பாதுகாக்கும். அப்பால் 5, 6-மண் சீலைசெய்து 2, 3-மணி நேரம் நிழலில் ஆறப்போட்டு 16-வறட்டியில் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும். முற்றிலும் சிவக்காவிட்டாலும் அதிர்ஷ்டவசமாகச் சிவந்த பாகம் வரையில் சுரண்டிக் கல்வத்திலிட்டு அரைத்துப் பத்திரப்படுத்துக.

இதனில் $\frac{1}{2}$, 1-அரிசிப் பிரமாணம் தேனில் கொடுத்து $\frac{1}{4}$-மணி நேரத்திற்குள் ஒரு பிடி தயிரன்னம் கொடுக்கவும். இப்படி 3-வேளை கொடுப்பதற்குள் சுவாசகாசம் போம். இப்படி விட்டு விட்டுச் சில தினம் கொடுத்து வர கூஷயம் போம். கபவாத சுரத்தினால் இரண்டு நுரையீரல்களிலும் கோழை மிகுந்து பிழைப்பதற்கரிது எனக் கைவிடப்பட்ட காலத்தில் இந்தச் செந்தூரத்தைத் தனியாகவாவது அல்லது ஒரு பணவெடை மான்கொம்பு பற்பத்திலாவது சேர்த்துக் கொடுத்துக் கொண்டு வர 2, 3-வேளையில் குணமாக்குவது திண்ணம். இம் மருந்தை உட்கொண்டபோது பித்த சரீரமாக இருந்து வாந்தியாகிவிடினும் குற்றமில்லை. அடுத்த முறை கொடுக்கும்போது வாந்தியாகாது. இப்படி முடிந்த செந்தூ

ரத்தை 2-மாதத்திற்குமேல் உபயோகப்படுத்துவதற்குத் தகுதி யில்லை. ஆகையால் வேண்டும்போது அப்போதைக்கப்போது புதிதாகச் செய்து கொள்வது சாலச் சிறந்தது.

மேகராஜாங்க நெய்

துரிசு பலம்-2½, கெந்தகம் பலம்-5 இவ்விரண்டையும் கல்வத் தில் போட்டுப் புங்கம்பால் தினம் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு அரைத்துக் கொண்டு வருக. இப்படி ஒரு படி புங்கம்பால் சேரும்படி அரைத்துக் குழம்பு பதமாக இருக்கும்போது அப்பட்டமான ஒரு படித் தேங்காய்ப் பாலை விட்டுக் கலக்கி ஒரு பெரிய இரும்புக் கடாயில் விட்டுச் சிறு தீயாக எரித்து வரும்போது எண்ணெய் வேறு வண்டல் வேறுகப் பிரிந்து எண்ணெய் தேன் வருண மாக இருப்பின் சரியென்றும், சாதாரண தேங்காய் எண்ணெய் போலிருப்பின் சரியல்லவென்றும், சிறிது எரித்துக் கரண்டியால் கடாயில் உறையும்படி தேய்த்துச் சிறிது சிவந்த வர்ணமாக வரும் போது வடிகட்டிப் பத்திரப்படுத்துக.

வேண்டும்போது இந்த நெய்யில் தினம் ஒருவேளை காலை நேரத்தில் 5, 6-துளி வெற்றிலையில் விட்டுச் சிறிது சர்க்கரை கூட்டிக் கலக்கிச் சாப்பிடுக. இப்படி 5-நாள் சாப்பிட்டு ஆறுவது நாள் மருந்தில்லாமல் விட்டுவைத்து ஏழாவது நாள் சாம்பிராணி சிறிது போட்டுக் காய்ச்சிய நல்லெண்ணெய் தேய்த்து ஆரோக்கிய ஸ்நானம் செய்க. மருந்து சாப்பிடும்போது இச்சாபத்தியமாகவும் ஸ்நானம் செய்த பின்பு பத்தியமில்லாமலும் ஆகாரம் கொள்ளலாம். இதனால் மேகரணம், குட்டம், படை முதலிய தோல் சம்பந்தமான பல ரோகங்கள் குணமாகும். சரிவரக் குணம் ஏற்படாவிடின் மீண்டும் 10-நாள் கழித்து முன்போல ஒருமுறை 5-நாள் சாப்பிட எவ்விதத்திலும் குணம் காண்பர்.

நஞ்சுமுறிச்சான் கல்

(Nunchu Murichan Kal)

நஞ்சுமுறிச் சான்கல்லால் நற்ற வரவிடமும்
நெஞ்சி லெழுந்துடிப்பும் நீங்கிடுமே—மிஞ்சிவரும்
வாந்தி யுடன்வீக்கம் மாசடைந்த வுள்ளிரணம்
சாந்த முறுமென்றே சாற்று.

குணம்:—(இ - ள்.) நஞ்சுமுறிச்சான் கல்லால் தாவரவிடம் மார்பு துடிப்பு, வாந்தி, வீக்கம், தேகத்தினுள் அடங்கலாகிய எல்லா உறுப்புகளின் விரணம் குணமாகும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—தினந்தோறும் உண்ணும் பதார்த்தங்களினுலாவது அல்லது தேகத்தின் அசௌக்கியத்தின் நிமித்தம் கொண்ட அவிழ்தங்களினுலாவது படிப்படியாகத் தேகத்தில் சேர்ந்துள்ள தாவர விஷங்களையும், ஜீவராசிகளின் பற்கடியால் நேர்ந்த விஷங்களையும் முறிக்கும்படியான ஓர் சக்தி இந்தக் கல்லிற் குண்டாதலால் இதனை நஞ்சுமுறிச்சான் கல் என்று கூறியிருக்கின்றனர். இதன் உபயோகம் பெரும்பாலும் சித்த வைத்தியர்களுக்குத் தெரியாது. இந்தச் சரக்கு யுனானி மருந்துக் கடைகளில் "ஜகர்மொகரே யேகத்தாயி" என்ற இந்துஸ்தானிப் பெயரால் விற்கப்படுகின்றது. இது பார்வைக்குச் சலவைக் கல்லைப்போலும் இடையில் பச்சைச் சாறுடன் மஞ்சள் புள்ளி விழுந்திருக்கும். இதனுடன் வேப்பிலை கூட்டி அரைத்துச் சிறிது நேரம் சென்றபின் வாயிலிட்டுச் சுவை பார்க்கக் கசப்பு மாறியிருக்கும். இத்தகைய கல்லே சரியானது என்றுணர்க.

இந்தக் கல்லை இடித்துத் தூள்செய்து கல்வத்தில் போட்டுட பன்னீர், தாழம்பூ கியாழம் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை விட்டு ஒரு வாரம் அரைத்து வருக. அல்லது பன்னீரில் 4-நாளும் தாழம்பூ கியாழத்தில் 3-நாளுமாக அரைத்து அரைத்து மெழுகு பதத்தில் 2, 3-குன்றி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக. ஏவேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் 2-வேளை பொடித்துச் சர்க்கரை, பால், சர்பத் முதலியவைகளில் கலந்து கொடுக்க எல்லாத் தேகிகளுக்கும் பொருந்தும். இன்னும் விஷங்களினுல் உண்டான பல பிணிகளையும் குணமாக்கும். ஆத்ம சக்தியை அதிகப்படுத்தும். இருதயம், ஈரல், நுரை ஈரல், இரைப்பை, குண்டிக்காய் முதலிய உறுப்புக்களைப் பலப்படுத்துவதுமன்றி அங்குள்ள விரணங்களையு மாற்றும். பித்த வாந்தி, மார்பு எரிச்சல், நெஞ்சுத் துடிப்பு முதலியவற்றையும் குணப்படுத்தும். கால பேதங்களால் விஷக்காற்று அக்கிரமித்து உண்டாக்கும் பல தொத்து வியாதிகள் பரவுங் காலங்களில் இந்த மாத்திரையை உட்

கொண்டுவர முற்றிலும் அத்தகைய நோய்கள் அணுகாவண்ணம் தடுக்கும். குழந்தைகள் பச்சை நிறமாகக் கழியும் பேதிகளுக்கு இந்த மாத்திரை அதிக நன்மையைத் தரும். இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்:—

கூஷய நிவாரண மாத்திரை

நஞ்சு முறிச்சான் கல் தோலா-$\frac{3}{4}$, (காரூபா) கற்பூரமணி தோலா-1, முத்துச்சிப்பி தோலா-$\frac{3}{4}$, நற்பவளம் தோலா-$\frac{3}{4}$, மூங்கிலுப்பு தோலா-$1\frac{1}{2}$, அசல் சீந்தில் சர்க்கரை தோலா-1 இவைகளைக் கல்வத்தில் போட்டு 10-பலம் அப்பட்டமான பன்னீரைச் சிறுகச் சிறுக விட்டரைத்து மெழுகு பதத்தில் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக.

வேண்டும்போது வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இரு வேளை பொடித்து $\frac{1}{2}$-ஆழாக்குக் காய்ச்சிய பசுவின் பாலில் போட்டுக் கலக்கிக் கொடுத்துவர, கூஷய ரோகத்தில் காணுகின்ற சுரம், இருமல், உள்ளுறுப்பு விரணம், மூளை பலவீனம் முதலியவைகள் போம்.

நண்டுக்கல்

(Nandukkal)

நீரருக னீரடைப்பு நீங்காப் பெருவயிறு
நீரோழுது மேகவெட்டை நீக்குங்கா—ணுரமிர்தே
யைய மறுக்கு மரியதொரு நண்டுக்கல்
செய்யுங் குணமிதுவாந் தேர்.

குணம்:—(இ-ள்.) நண்டுக்கல் கூஷண மூத்திரம், அஸ்மரி, மகோதரம், சலப்பிரமேகம், வெள்ளை வீழல், கபாதிக்கம் ஆகிய இவைகளை விலக்கும் என்க.

செய்கை:—மூத்திர வர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சுத்த சலத்தில் உரைத்துக் கண்களுக்குத் தீட்டிவரப் பற்பல நேத்திர ரோகங்கள் போம். கண்களில் வடியும் நீரை வறட்டும். இதை அதிகச் சன்னமாக அரைத்து அடிபட்ட காயம், இரத்தம் சொரியும் புண்கள் முதலிய வற்றிற்குத் தூவ இரத்தத்தை வறட்டிவிடும். இதைச் சலம் விட்டு உரைத்து எடுத்த விழுதைப் படைகளுக்குப் பூச நீங்கும். இதைப்

பாலில் உரைத்துக் கடலை அல்லது பட்டாணிப் பிரமாணம் தினம் இருவேளை பாலில் கலக்கிக் கொடுக்க வெள்ளை, வெட்டை, நீரொழுக்கு முதலியவைகள் போம். அல்லது நண்டுக்கல்லைச் சுத்த சலம் விட்டு உரைத்துக் குன்றிமணி யளவு 1½-அவுன்ஸ் சலத்தில் கலக்கி அதனுடன் பொரித்த வெங்காரம் 1½-குன்றியெடை போட்டுக் கலக்கித் தினம் இருவேளை மூன்று நாள் கொடுக்க நீர்க் கட்டை யுடைக்கும். நீர்ச்சுருக்கை யகற்றும்.

மூக்கரட்டை வேர்க் கியாழத்தில் குன்றியெடை நண்டுக்கல்லை உரைத்துக் கொடுக்க வாத ரோகம் குணமாகும். அதேவண்ணம் சீரகக் கியாழத்தில் கொடுக்க உட்சுரம் நீங்கும். பன்னீர் விட்டு அரைத்து உலர்த்திய நண்டுக்கல் பற்பம் குன்றியெடை 1, 1½-ஜாதிக் காய் சூரணம் 2-குன்றிக் கூட்டித் தினம் இருவேளை யுட்கொள்ளத் தாதுபுஷ்டி யுண்டாகும்.

நவச்சாரம்

(Ammonium Chloride)

குன்மங் குடற்குலை கோல்லு மகோதரத்தை
வன்மையுறு கல்லடைப்பை மாற்றுங்காண்—சன்மக்
கவிச்சுழத் தோடங் கனவாத நீக்கு
நவச்சார மாதே நவில்.

குணம்:—(இ - ள்.) நவச்சாரம் - வயிற்றுவலி, குடலிற் குத்தல், பெரு வயிறு, அஸ்மரி, சருமத்தில், புலால்வாசம், திரி தோஷம், வாத நோய் இவைகளை விலக்கும் என்க.

செய்கை:—சிறிய அளவில் வியதா பேதகாரி அதிக அளவில் பித்தகாரி உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதை நன்றுப்பொடி செய்து கொதிக்கின்ற சலத்தில் போட்டு மூங்கிற் கொம்பால் கிளறி ஆறும் முன் சீலையில் வடிகட்டிப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவி முகத்தில் வைக்க நீர் சுண்டி உறைந்து உப்பாகும். ஈரமில்லாத பதத்தில் அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்துக. இதனைச் சுத்தி நவச்சார மென்பர். இதனில் வேளைக்கு 2½, 5-குன்றியெடை தினம் இரு வேளை சுத்த சலத்தில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க நாட்பட்ட வாதரோகங்கள் குணமாகும். அத்தகையே நெருஞ்சில் அல்லது நீர் முள்ளிக் கியாழத்தில் போட்டுக் கலக்கிக் கொடுக்க நீர்க்கட்டு குணமாகும்.

நவச்சாரத்துடன் சிறிது சுண்ணும்புக் கூட்டி மத்தித்து நெடி கிளம்பும் சமயம் சிறிது மோந்து தேள் கொட்டிய இடத்தில் சிறிது தேய்க்க விஷ மிறங்கும்.

நவச்சாரத்தைக் கோழி முட்டையின் வெண்கருவிட்டு அரைத்துத் தொண்டை வலிக்கு மேற் பூசக் குணமாகும். இதனைப் படைகளுக்குப் பூச விரைவில் ஆறும். இதைத் தேன் விட்டரைத்து ரோமங்கள் உதிருகின்ற இடத்தில் பூசிவர, விழ வொட்டாமல் தடுக்கும். மூலைப்பாலில் சிறிது கலக்கி வடிகட்டிக் கண்களில் இரண்டொரு துளி விட்டுக் கொண்டுவர கண்களிலுள்ள மாசுக்களை வெளியாக்கும். இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப் படுத்துவதுண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன:—

சார பற்பம்

நவாச்சாரம் பலம்-2, வெடியுப்பு பலம்-2 இவை யிரண்டையும் கல்வத்தில் போட்டுச் சிறு நீர் அல்லது ஆடாதோடைச் சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஒரு மட் குடுவையில் வைத்துச் சுண்டு விரல் நுழையும்படியாகத் துவார மிட்ட மற்றோர் மட் குடுவையைக் கவிழ்த்துச் சீலை செய்து அடுப்பி லேற்றிச் சிறு தீயாக எரிக்கவும்

அத்தருணம் மேல் சட்டியின் துவாரத்தின் மேல் ஒரு வட்டமான ஓட்டை வைத்துச் சாணத்தை அப்பி வைக்கவும். எந்தச் சந்தர்ப்பத்தில் நெடியாகவும் வேகமாகவும் புகை துவாரத்தின் வழியாகக் கிளம்புகின்றதோ அந்தச் சமயம் வேகம் அடங்க மேல் ஓட்டைச் சிறிது திறந்து மூடி விடவும். இப்படி ஒரு சாமம் எரித்தெடுக்கச் சரக்குகள் யாவும் கலந்து பூத்திருக்கும். அப்பால் அதை எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்துக. வேளைக்கு 2, 3-குன்றியெடை சீரகக் கியாழத்தில் கொடுக்க வயிற்று வலியைக் குணப்படுத்தும். இன்னும் குடல் வாதம், கல்லடைப்பு, சதை யடைப்பு, ஈரல்களின் வீக்கம், மகோதாம், கற்குழை நாற்றம் இவைகளைப் போக்கும்.

"சார லவண பற்பம்"

ஒரு பலம் நாட்டு நவச்சாரத்தைக் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து ஒரு சிறு கலயத்தின் உட்புறத்தின் அடிபாகத்தில் 3-அங்குலம் வட்டமாக இருக்கும்படி பரப்பி வைத்துக்கொள்க.

அதன்பின் 1-பலம் வெடியுப்பை முன்போல் கல்வத்திலிட்டு அரைத்து நவச்சாரத்தின் வரம்புக்கு உட்பட்டிருக்க 2½-அங்குல அகலம் இருக்கும்படியாகப் பரப்பி மெதுவாகக் கையால் அழுத்தி விடவும். அதன்பின் 1-பலம் வெங்காரத்தைக் கல்வத்திலிட்டு அரைத்து முன் பரப்பியுள்ள 2-சரக்குகளையும் மறைக்கும்வண்ணம் சம கனமாகத் தூவிக் கையால் சிறிது அழுத்திவிடுக. இப்படிச் சித்தப்படுத்திய கலயத்திற்கு வாய் மூடிச் சீலைசெய்து 10-வறட்டியில் புடமிடவும். ஆறின பின்னர்ச் சீலையை நீக்கி உட்புறத்தில் பார்க்க 3-சரக்குகளும் உருகிப் பூத்திருக்கும். இதனைச் சேதப்படாமல் சுரண்டி எடுத்துக் கல்வத்திலிட்டரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

வேண்டும்போது 1, 1½-குன்றியெடை பற்பத்தைச் சீரகக் கியாழம், கடையில் விற்கின்ற சோடா வாட்டர், இளநீர், அன்னக் கொதிசலம் இவைகள் ஏதேனும் ஒன்றில் போட்டுக் கலக்கிக் கொடுக்க வயிற்றுவலி, பக்கசூலை, மார்பு வலி, நீர் அடைப்பு, நீர்க் கட்டு இவைகள் குணமாகும்

சாரப் பதங்கம்

இரண்டு பலம் நாட்டு நவச்சாரத்தைக் கல்வத்தில் போட்டுக் குப்பைமேனிச் சாறுவிட்டு 8-சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஒரு குவிந்த மட்பாண்டத்தில் வைத்து அத்தகைய மற்றோர் பாண்டத்திற்குக் குப்பைமேனி இலைச்சாற்றை உட்பூசி உலர வைத்துக் கவிழ்த்துச் சீலைசெய்து காய்ந்தபின் அடுப்பிலேற்றி 3-சாமம் எரிக்க மேற்பாண்டத்தில் பதங்கம் ஏறி நிற்கும். இதைப் பத்திரமாகச் சுரண்டி எடுத்து வைத்துக்கொள்க. வேண்டும்போது ஒரு எடை நவச்சாரப் பதங்கத்திற்கு 5-எடை அசல் தேன் கூட்டி அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்துக. ஒரு குச்சியின் முனையிலாவது அல்லது ஒரு கம்பியின் முனையிலாவது பஞ்சை இறுகச் சுற்றி ஷே தேனில் தோய்த்து உள் நாவிற்குத் தடவ உள் நாவின் வளர்ச்சி குறையும். தொண்டை இடுக்குகளில் வளரும் மாமிச வளர்ச்சிக்குத் தடவிவரக் கரைத்துவிடும். இதனால் உண்டான இருமலையும் குணப்படுத்தும்.

இந்த நவச்சாரத்தின் விபரம் பொதுப்பாயிரத்தின்கண் கார சார லவணம் இருபத்தைந்தின் கீழ் நன்கு விளப்பட்டுள்ளது.

நாகணம்

(Naganam)

தலைவலிநீ ரேற்றந் தலையிடிப்பு குத்தற்
றலையா மலட்டுநோய் சோபை—நிலைவிழிநோய்
பாகணச்சொன் மின்னே பருமுதர ரோகமும்போ
நாகணத்தி னுலே நவில்.

குணம்:—(இ - ள்.) நாகணத்தினுல் சிரஸ்தாபம், சலதோஷம், தலையிற் குத்தலுடன் இடிப்பு, மலட்டு நோய், விக்கம், நீங்காத கண்ணேய், பெருவயிறு இவைகள் ஏகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இது பார்வைக்கு நத்தையினது மேலோட்டின் வாய் மூடித் துண்டைப்போலிருக்கும். இதனே மண லுடன் கூட்டிப் பொன் மேனியாக வறுத்து எடுக்க ஒரு விதமான வாசனே கிளம்பும். இதனைப் பெரும்பாலும் உள்ளுக்கு உபயோ கிப்பதில்லே. இது உஷ்ண வீரிய குணமுடையதாதலால் சீதள சம்பந்தத்தை நீக்கும் பொருட்டு காய்ச்சும்படியான முடித் தைலத் தில் சேரும். பொதுவாகச் சாம்பிராணி, கஸ்தூரி மஞ்சள், பச்சை கிச்சிலிக் கிழங்கு, புனுகு சட்டம் வாசனேக் கிளம்ப வறுத்தெடுத்த நாகணம் இவற்றை இடித்துத் தூளாக்கி முடித் தைலங்களேக் காய்ச்சி இறக்குந் தறுவாயில் போட்டு ஆறவிட்டு வடித்து எடுப்பதுண்டு. இதனுல் தைலத்திற்கு நல்ல வாசனேயும் உஷ்ண வீரியமும் உண் டாகும்.

நாமக்கட்டி

(Aluminii Silicas)

ஆடுஞ் சரக்கதனி லாரணங்கே வெண்ணுமம்
சாடுங் குணமதனேச் சாற்றக்கேள்—நீடுலகில்
போல்லாத கண்ணேயும் போராடு முந்தியழ
லெல்லா மொழிக்கு மிது

குணம்:—(இ - ள்.) நாமக்கட்டியால் கண்ணேய், அடி வயிற்றி லுண்டான கொதிப்பு ஆறுமென்க.

செய்கை:—சமனகாரி, சோபாநாசினி.

உபயோகிக்கும்முறை:—நாமக்கட்டியைச் சலம்விட்டுக் குழைத் துக் கண் இறப்பைகளின் மேற்பாங்கில் புற வலேயமாகப் பற்றுப்

போடக் கண்ணேயால் ஏற்பட்ட சிவப்பு நிறம் மாறி நோயகலும். இதைப் பன்னீர் விட்டுக் குழைத்து அடிவயிற்றுக்குப் பற்றுப்போட உஷ்ணத்தினால் உண்டான வயிற்றுவலி, நீர்க்கட்டு முதலியவைகள் குணமாகும்.

நீலக்கல்

(Amethyst)

குதிவலிமே கம்பித்தங் கூறரிய பாண்டு
மதிமயக்க மெல்லா மகலு—மதிநுதலே
புத்தியோடு மென்மேலும் போகசுக முண்டாகுஞ்
சுத்தநறு நீலத்தாற் சொல்.

குணம்:—(இ - ள்.) குதிக்கால் நோய், மேகநீர், அதிபித்தம், பாண்டு, மனச் சோர்வு இவைகள் போம். நல்லறிவும், மிகு சுக்கில மும் உண்டாகும் என்க.

செய்கை.—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் ஜலநீலம், இந்திர நீலம் என இருவகைப்படும். அவற்றுள் இந்திர நீலமே சிறந்தது. ஜலநீலமானது பார்வைக்கு வெளுப்பான நீரோட்டத்தையும், எடையில் இலேசானத் தன்மையையும் பெற்றிருக்கும். இந்திர நீலமானது நல்ல நீல நிறத்தையும். எடையில் அதிக பளுவையும் பெற்றிருக்கும். இதனைத் தங்க மோதிரங்களில் அமைத்தாவது அல்லது ஸ்திரிகளுக்கு உரித்தான ஆபரணங்களில் அமைத்தாவது அணிந்து கொள்வதுண்டு. இது பார்வைக்கு வனப்பையும் வசி கரத்தையும் உண்டாக்கும். இன்னும் இதனை அவிழ்த்த பாகங்களில் சுத்தி செய்து பற்பமாக முடித்து உட்கொள்ள ஷை செய்யுளிற் கூறப்பட்ட குணங்க ளுண்டாகும். எங்ஙனமெனில்:—

தேவையான அளவு நீல மணியைப் பொடி செய்து ஒரு பாத் திரத்திலிட்டுக் கழுதை நீரை விட்டுக் கடும் ரவியில் ஒரு நாள் வைத்து எடுக்கச் சுத்தியாகும். இதனை அலம்பிக் கல்வத்திலிட்டு பாலை இலைச்சாற்றால் நான்கு சாமம் அரைத்துச் சிறு வில்லைக ளாகச் செய்து உலர்த்தி ஒரு வஜ்ஜிர மூசையில் போட்டு ஓடு மூடிச் சீலைசெய்து கன்னுன் உலையில் வைத்து ஊதி எடுக்கப் பற்பமாகும். ஒரு சமயம் சரிவரப் பற்பமாகாவிட்டால் மீண்டும் கல்வத்திலிட்டுப் பாலை இலைச்சாறு விட்டு நன்கு அரைத்து முன்போல் வில்லை செய்து

உலர்த்தி மூசையிலிட்டு ஊதி எடுக்க வெளுக்கும். சலத்தில் சிறிது போட்டுப் பார்க்க மிதக்கும். இதுவே உபயோகப்படுத்துவதற்குச் சிறந்தது. இன்றேல் முன்போல் மற்றொரு புடம் போட்டு எடுக்க வேண்டியது அவசியமாகும். இந்தப் பற்பத்தில் வேளைக்கு ½, ¼-அரிசி அளவு தகுந்த அனுபானங்களில் கொடுத்தல் மிகுந்த நன்மையைத் தரும். குணம் சிறிதும் தெரியாவிடின் சிறிது அளவை அதிகப்படுத்திக் கொள்வது பண்டிதர்களின் கடமை யாகும்.

நெல்லிக்காய்க் கெந்தகம்

(Sulphur)

நெல்லிக்காய்க் கந்திக்கு நீள்பதினெண் தட்டுமந்தம்
வல்லகவீ கைதன்ம வாயுகண்ணோய்—போல்லா
விடக்கடிவன் மேகநோய் வீறுசுரம் பேதி
திடக்கிரக ணீகபம்போந் தேர்.

குணம்:—(அ-ள்.) நெல்லிக்காய்க் கந்தகத்திற்கு 18-குட்டம் அலஜம், வல்லிக்கட்டி, கவிகை, மகோதரம் குன்மம், குந்தநோய், மகாவிஷம், மேகவியாதி, வாதசுரம், வாதாதிசாரம், கபகிரகணி, கபாதிக்கம் இவைகள் போம்.

செய்கை:—சங்கோசனகாரி, வியதாபேதகாரி, அதிக அளவில் இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைத் தனியாகக் கொடுப்பது கிடை யாது. இதனைச் சுத்திசெய்து மெழுகு, பற்பம், செந்தூரம், தைலம் களிம்பு முதலியவைகளாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு எங்ஙனமெனில்:—

கெந்தக மெழுகு

சுத்தி செய்த ஒரு பலம் கெந்தகத்தைப் பொடிசெய்து ஒரு பழுத்த வாயகன்ற மட்பாண்டத்தில் போட்டுப் பேயன் வாழைப் பழம் அல்லது ரசத்தாளி வாழைப்பழம், அல்லது செவ்வாழைப் பழம் இவைகளில் ஏதேனும் ஒன்றிலிருந்து எடுத்த சாற்றைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கால் படி யளவிற்குச் சுறுக்குக் கொடுத்து மூங்கில் குச்சியால் கிளறிக் கொடுத்துக் கொண்டுவர மெழுகு ஆகும். இதை வழித்து வாயகன்ற சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்த மெழுகில் வேளைக்குத் துவரை, கடலைப்

பிரமாணம் பனைவெல்லத்தில் வைத்துத் தினம் இருவேளை 7-நாள் கொடுக்கக் கருமேகம், செம்மேகம், தோல் சம்பந்தமான பல பிணிகள் நீங்கும்.

குறிப்பு:—வாழைப் பழத்திலிருந்து சாறு எடுப்பது எளிதல்ல. ஆகையால் 25-வாழைப் பழங்களின்மேற் றேலை உரித்து ஒரு பெரிய கோப்பையில் போட்டு 1, ½-பலம் அத்திப்பட்டைத் தூளையாவது அல்லது 2-பலம் பச்சை நெல்லின் உமியையாவது போட்டு நன்றாய்ப் பிசைந்து 2, 3-மணி நேரத்திற்குப் பின் பிழிந்து எடுக்க அதன் சாறு தாராளமாக வரும். இதை வடிகட்டி எடுத்துக்கொள்க.

வேறு முறை

மூன்று பலம் நெல்லிக்காய்க் கெந்தகத்தைச் சிற்றாமணக்கெண்ணெய், சோற்றுக் கற்றாழைச்சாறு, வெள்ளருகுச் சாறு, கரிசலாங் கண்ணிச் சாறு, புளித்த மோர், காடிநீர், மணித்தக்காளி இலைச் சாறு, பசுவின் நெய், பசுவின் பால், கரும்புச்சாறு, இளநீர் முதலிய வற்றில் வரிசைக் கிரமமாக ஒவ்வொன்றிலும் 5-முறை உருக்கிச் சாய்த்து எடுக்கச் சுத்தியாகும். இப்படிச் சுத்தி செய்த ஒரு பலம் கெந்தகத்தைக் கல்வத்தில் போட்டு வெள்ளை வெங்காயச்சாறு விட்டு நான்கு ஜாமம் மெழுகுபதத்திலேயே அரைத்து வழித்து ஒரு பழகிய வாயகன்ற மட்சட்டியிலிட்டுக் கரி நெருப்பனலில் வைத்து இரண்டு படி வெள்ளை வெங்காயச் சாற்றைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் கிளறிக் கொடுத்துக் கொண்டு வருக. மெழுகு பதத்திற்குச் சுண்டி வரும் சமயம் ஆறவிட்டு வழித்து வாயகன்ற கோப்பையில் பத்திரப்படுத்துக. இந்த மெழுகை வேளைக்குக் குன்றி அளவு சர்க்கரையில் கூட்டித் தினம் இருவேளை கொடுத்து வரச் சர்வ படை, மேகவூறல், வெள்ளை, வெட்டை, பித்தம், மூலம், நீரிழிவு முதலிய ரோகங்கள் குணமாகும்.

இதனைச் சாப்பிடுங் காலத்தில் கடுகு, நல்லெண்ணெய், புளி, மீன், கருவாடு முதலியவற்றை நீக்கி இச்சாபத்தியமாக இருக்க வேண்டும். இன்னும் ஆகாரத்தில் நெய், பால், தயிர் முதலியவற்றைத் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஒரு முறை 5-நாள் பத்துவேளை சாப்பிட்ட பின்னர் மருந்தை நிறுத்தி விடவும். இரண்டொரு நாள் பொறுத்து எண்ணெய் ஸ்நானம் செய்து பிறகு வேண்டுமான ஆகாரத்தை யுட்கொள்ளவும். இந்தப் பாகத்தைக்

குழம்பு பதமாகக் கிளறி வைத்துக்கொண்டு வேளைக்கு 2, 3-துளி வீதம் சர்க்கரையில் கூட்டிக் கொடுப்பாரு முளர்.

கெந்தகத் தைலம்

கெந்தகம் பலம்-5 சாரம் பலம்-1, வீரம் விராகனெடை-2, இரசம் பலம்-1, வெடியுப்பு பலம்-1, அரிதாரம் விராகனெடை-3, இலிங்கம் பலம்-½, பூரம் பலம்½ இவை தம்மைக் கல்வத்தில், போட்டு, 10-பலம். பசுவின் நெய்யில் குமிழ் நீக்கிய 10-சேங் கொட்டைகளைப் போட்டு மிதக்கக் காய்ச்சி வடித்த நெய்யைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு ஒரு சாமம் அரைத்து மிருதுவான பக்குவத்தில் மிகுதியுள்ள நெய்யை விட்டு ஒரு மணி நேரம் அரைத்து உறைய விடவும். மறுநாள் உரப்பான ஓர் முழச் சீலையில் தடவித் திரிபோல் திரட்டி இரு முனையையும் சேர்த்து வளையம்போல் இரும்புக் கம்பி கொண்டு கட்டித் தொங்கவிட்டுக் கொளுத்திச் சுடர்த் தைலம் வாங்கவும். இதை வடிகட்டி வேளைக்கு 5, 6-துளி சர்க்கரையில் கூட்டித் தினம் 2-வேளை 5-நாள் கொடுக்க குட்டம், காசம், குன்மம், விரணம், பாரிசவாயு, கைகால் பிடிப்பு, திமிர், செம்படை யாவும் போம்.

கெந்தக பற்பம்

ஆவாரம் இலையைக் கொண்டுவந்து பால் தெளித்து இடித்துச் சுமார் கால் படிக்கு எடுத்து ஒரு மட்பாண்டத்தில் விட்டு அதில் 3-பலம் கெந்தகத்தைச் சிறிது நெய் விட்டு நெருப்பனலில் உருக்கிச் சாய்க்கவும். இப்படி ஏழுமுறை சாய்க்க நல்ல சுத்தியாகும். இதை எட்டாவது முறை உருக்கி ஏறக்குறைய ஒவ்வொரு பலம் இருக்கும் படி 2-வில்லைகளாக வார்த்துக் கொள்க. அப்பால் ஒரு சிறிய தேங்காய்ப் பிரமாணம் உள்ள மட்குடுவையில் புளியம்புறணியைச் சுட்டு வெளுக்க எடுத்த சாம்பலும், மருதம் பட்டையைச் சுட்டு வெளுக்க எடுத்த சாம்பலும் சமனெடையாகக் கலந்து பாதி போட்டு அழுத்தி அதின்மேல் முன் சித்தப்படுத்தி வைத்த கெந்தக வில்லையில் ஒன்று வைத்து அதன்மேல் மேற்படி கலவைச் சாம்பலைப் போட்டு அழுத்தி வாய்க்கு ஓடுமூடிச் சீலைசெய்து சுற்றிலும் நான்கு அங்குலம் கனம் இருக்க எருவடுக்கித் தீ வைக்கவும்.

எருவு தீப்பிடித்து அடங்கும் தருணம் குடுவையை மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் தொட்டுப் பார்க்கவும். கைத்தாளக் கூடாத சூடேறி இருப்பின் புடத்திலிருந்து குடுவையை அப்புறப் படுத்தி ஆறவைக்கவும். அல்லது புடத்திலிருக்கும் போது கெந்தகத்தின் வாசனை ஒருகால் வெளிக்கு வரும்பட்சத்தில் உடனே புடத்திலிருந்து மேற்படி குடுவையை எடுத்துத் தரையில் பள்ளம் தோண்டி நன்றாய்ச் சூடாறும் வரையில் புதைத்து வைத்து விடவும். இப்படிச் சூடாறின குடுவையின்மேல் ஒட்டை நீக்கி மெதுவாகச் சாம்பலை யெல்லாம் ஒரு மெல்லிய குடைக் கம்பியிலாவது அல்லது மூங்கில் குச்சியிலாவது கிளறிக் கிளறிக் கெந்தக வில்லை உடையாமல் எடுக்கவும். மீண்டும் அதிலிருந்து எடுத்த சாம்பலைப் பிசரி மிருதுவாக்கி முன்போல் மேற்படி குடுவையில் போட்டு முன் எடுத்த கெந்தகத்தை வைத்து மேலும் சாம்பல் போட்டு மிருதுவாக அழுத்திச் சீலைசெய்து முன்போல் புடமிட்டு எடுக்கவும்.

இப்படி 3-முறை செய்யக் கெந்தகமானது புகையும் தன்மை யற்று விடும். அதன்பின் குப்பைமேனியை அரைத்து ஒரு பெரிய விளாம்பழ மளவு மேற்படி கெந்தகத்திற்குக் கவசம் செய்து, எழு மண்சீலை செய்து ஒரு நாள் ஆறவிட்டு மறுநாள் 20, 25-வறட்டியில் புடமிடவும். சாங்க சீதளமான பின் கவசத்திற்குள் இருக்கும் கெந்தகத்தைப் பார்க்க வெளுத்துப் பற்பமாக இருக்கும். இத்தகைய முறை அனுபவத்திற்கு வந்தது. கைபாகங்களில் தவறுதல் நேரிட்டால் பற்பம் சரிவர ஆகாது. அப்படி அரைகுறையாகச் செய்தாலும் அதன் முழு குணத்தைக் காண்பதரிது. ஆகையால், கெந்தகத்தைப் புகையவிடாமலும் உருகிச் சாம்பலோடு அதிகமாக உறவாகாமலும் சர்வ ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டியது. பண்டிதர்களின் கடமையாகும். இந்தப் பற்பத்தில் வேளைக்கு $\frac{1}{2}$, $\frac{3}{4}$-குன்றியெடை நெய், தேன் முதலிய அனுபானங்களில் தினம் இருவேளை 3, 5-நாள் கொடுக்கவும். இதனால், குட்டம் சொறி, சிரங்கு, கீல்பிடிப்பு, இரத்தக் கெடுதலினால் உண்டான பலவிதமான ரணங்கள், பழய சுரம், இருமல், கண்டமாலை முதலிய ரோகங்கள் தீரும்.

வேறு முறை

இரண்டு மூன்று படி அளவுள்ள மருதம் பட்டைச் சாம்பலை நன்றாய்ச் சலித்து வைத்துக் கொள்க. அப்பால் அரைப்படி அள

விற்குக் கொள்ளத் தக்கதாகவும், கிண்ணத்தைப் போன்றதாகவும், உள்ள ஒரு மட்பாண்டத்தினுள் முன் சித்தப்படுத்திய சாம்பலில் சிறிது ஜலம் தெளித்துக் கைப்பிடிக்கு உதிராப் பதமாக சிறிது ஈரம் இருக்கும் பொருட்டுப் பிசரி முக்கால் பாகமிட்டு அடைத்து 2, 3-பலம் சுத்தி செய்த கெந்தகத்தை நடுவில் வைத்து நிறையச் சாம்பலைக் கொட்டி அழுத்தி வைத்துக் கொள்ளவும். இதற்குமேல் மற்றொரு சட்டி வாயகன்றதாகவும், முன் சித்தப்படுத்திய கிண்ணத்திற்கு இரண்டு மடங்கு விசால முள்ளதாகவும், கொண்டுவந்து உட்புறத்தினடியில் ஒரு விரற்கடை உயரம் சாம்பலைப் போட்டுப் பரப்பி சர்வஜாக்கிரதையாக முன் சித்தப்படுத்திய கிண்ணத்தைக் கவிழ்த்து அடிசட்டியோடு வாய் பொருந்த அழுத்தி விடவும்.

இப்படிக் கவிழ்த்த சட்டிக்கும் அடிசட்டிக்கும் ஏற்பட்ட பொருத்த வாய்க்குச் சந்தில்லாமல் மண்பூசி 5, 6-மண் சீலைசெய்து ஒரு நாள் ரவியில் காயவைத்து மறுநாள் அடுப்பிலேற்றி கிண்ணம் மறைய ஈரச் சாம்பலைப் போட்டழுத்திச் சிறு தீயாக எரிக்கவும். அத்தருணம் சாம்பல் வெடிப்புக் கொள்ளுமாயின் பின்னும் ஈரச் சாம்பலையிட்டு அடைத்து எரிக்கவும். இப்படி 3-மணிநேரம் எரிக்கும்போது கெந்தக வாசனை உண்டானால் உடனே கீழ் இறக்கி ஈரக் கோணிப்பையின் மேலாவது அல்லது ஈர மண்ணின் மேலாவது வைத்துச் சூட்டை ஆற்றிவிடவும். பிறகுச் சீலையை நீக்கிப் பார்க்க கந்தகம் உருகிக் கட்டியாக இருக்கும். இதன்மேல் பற்றியுள்ள சாம்பலைச் சுத்தப்படுத்திக் கல்வத்திலிட்டுக் குப்பைமேனி இலைச் சாறு விட்டு 2-சாமம் நன்கரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அதன்மேல் அரைத்த குப்பைமேனி இலையைக் கவசமிட்டு மண்சீலை ஏழு செய்து 20, 25-வறட்டியில் புடமிடவும். கல்ல பற்பமாகும் அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. முற்கூறிய பற்பத்தைப் போல் கொடுத்துவரச் செய்யுளில் கூறப்பட்டுள்ள ரோகங்களெல்லாம் குணமாகும்.

கெந்தகக் களிம்பு

நெல்லிக்காய்க் கந்தகம், மிருதார்சிங்கி, வெள்ளைக் குங்கிலியம் வகைக்குப் பலம்-$\frac{1}{4}$, பூரம் விராகனெடை வீசம் இவைகளைக் கல்வத்தில் போட்டு மெழுகு பதத்திற்குப் போதிய அளவு தேங்காய் நெய் விட்டு இரண்டு சாமம் நன்கு அரைத்து வழித்துக் கோப்பையில்

பத்திரப்படுத்துக. இதைச் சொறி, சிரங்கு, ஆறாத விரணம் இவை கட்குத் தடவிவர ஆறும்.

கெந்தகச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த கெந்தகத்தைக் கல்வத்தில் போட்டு நல்ல வேளைச்சாறு விட்டு 2, 3-மணிநேரம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஒரு அகலில் வைத்து மேல் அகல் மூடிச் சீலைசெய்து தரையில் பள்ளம் செய்து மணல் கொஞ்சம் போட்டு அதன்மீது சீலை செய்த அகலை வைத்து மேலே நான்கு விரற்கடை மணல் போட்டு 1, 1½-வறட்டியைப் பிட்டு மேல் குவித்துப் புடமிடவும். புடம் ஆறினபின் அகலை எடுத்துச் சீலையை நீக்கிக் கெந்தகத்தை மீண்டும் கல்வத்தில் போட்டு முன்போல் நல்ல வேளைச்சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி முன்போல் அகலில் அடக்கி மணல் மறை வில் வைத்து 2-வறட்டியில் புடம் போடவும். இப்படி புடத்திற் குப் புடம் ½-வறட்டி உயர்த்தி 5, 6-புடமிடக் கெந்தகம் சிவந்து காட்டும். அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும் போது வேளைக்கு ¼, ½-குன்றியெடை நெய், தேன் முதலிய அனு பானங்களில் கொடுத்துவர இரத்தக் கெடுதலினாலுண்டான தோல் சம்பந்தமான பல ரணங்கள் குணமாகும்.

பச்சைக் கருப்பூரம்

(Boro Camphor)

அட்டகுன்மஞ் சூலை யணுகாது வாதமோடு
துட்டமே கப்பிணியுந் தோற்றுவே—மட்டலருங்
கூந்தன் முடிமாதே கோட்டுங் கபம்போகுஞ்
சார்ந்தபச்சைக் கற்பூரத் தால்.

குணம்:—(இ-ள்.) பச்சைக் கருப்பூரத்தினால் எட்டுவித குன்மங்கள், கீல்களில் குத்தல், வாதநோய், சீழ்ப்பிரமேகம், சிலேஷ்மகோபம் இவைகள் நீங்கும் என்க.

இந்த இனத்தில் ஈசன், வீமன், பூதாச்சிறையன் என மூன்று வகைப்படும். அதனதன் குண பேதங்களை அவைகளின் தலையங்கத் தின் கீழ்க் கண்டுணர்க.

செய்கை:—சீதளகாரி, சமனகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை வேளைக்கு $\frac{1}{8}$, $\frac{1}{4}$-குன்றி எடை இதரச் சரக்குகளுடன் கூட்டிக் கொடுக்கலாம். தனியாக உபயோகப்படுத்துவது கிடையாது. சிறிது கஸ்தூரியுடன் சேர்த்துத் தேன் விட்டு மத்தித்துக் கொடுக்கக் கபத்தையும் சுரரோகத்தையும் கண்டிக்கும். இரண்டு தோலா அரைத்த சந்தனத்துடன் ஒரு குன்றி எடை பச்சைக் கற்பூரமும் குங்குமப்பூவும் கூட்டிச் சரீரத்திற்குப் பூச தேகவெப்பமும் எரிச்சலும் அடங்கும்.

பச்சைக் கற்பூரம் கழஞ்சி-2, ஜாதிக்காய் கழஞ்சி-2, இலவங்கப் பட்டை கழஞ்சி-2, சுத்தி செய்த வாளம் கழஞ்சி-6 இவைகளைக் கல்வத்தில் போட்டுக் குமரிச்சாற்றால் 2-சாமம் அரைத்து உளுந்தளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக குழந்தைகளின் வயதுக்குத் தக்கபடி 1, 2-மாத்திரை சாலியில் தேனில் கொடுக்க மூன்றேமுக்கால் நாழிகைக்குள் பேதியாகிச் சுரம் விடும்.

பாக்குடன் சேரும் வாசனைக் கலவைகளில் இதைச் சேர்த்து உபயோகப்படுத்துவதுண்டு. இதனால் வாயின் துர்நாற்றம் கோழைக் கட்டு முதலியவைகள் குணமாகும்.

இந்தப் பச்சைக் கருப்பூரத்தின் விபரம் பொதுப்பாயிரத்தில் கார சார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

பனி நீர்

(Dew Water)

பனிச்சலத்தை யேல்லுதயம் பானஞ்செய் வாரைத்
தனிச்சோறீசி ரங்குகுட்டந் தாபந்—தோனிகயங்கால்
முத்தோஷ நீரிழிவு முடழல்கி ராணியிவை
கோத்தோடு தாழ்ந்தகலுங் கூறு.

குணம்:—(இ - ள்.) பனி நீரைச் சூரியோதய காலத்தில் அருந்துபவர்களுக்குச் சொறி, கிரந்தி, குட்டம், தாபம், காசம், கிரகணி, தனிவாத கோபம், திரிதோஷம், தேகவறட்சி, வெகு மூத்திரம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—பனிக் காலத்தில் நெற்பயிரின்மேல் சுத்தமான வெள்ளைச் சீலையைக் கஞ்சி முதலியவைகள் இல்லாமல்

சலத்தில் தோய்த்து அலசிக் காய வைத்திருப்பதை விரித்துப் போட்டு மறுநாள் சூரியோதயத்திற்கு 2, 3-நாழிகைக்கு முன்னதாக அந்தச் சீலையை முறுக்கிப் பிழியச் சலம் சொட்டும். அதைப் பிங்கான் தட்டுகளில் பிடித்து மீண்டும் வடிகட்டிச் சீசாவில் பத்திரப் படுத்துக. அல்லது வாழை மரத்தின் ஒவ்வொரு இலையையும் தொன்னைபோல் துடைப்பச் சுப்பலால் தைத்து விட்டுவைக்க இரவு காலத்தில் பனிநீர் தங்கி இருக்கும். வடித்து எடுத்துக் கொள்க. இதில் பிரதி தினமும் சூரியோதயத்திற்கு முன் ஒரு உள்ளங் கைச் சலம் சாப்பிட்டு வரப் பல ரோகங்கள் போம்.

பிடா லவணம்

(Vit Lavana Or Black Salt)

பிடாலவண மென்றேநுகாற் பேசி லுலகில்
விடாநீ ரிழிவகலு மெய்யே—விடலரிய
மந்த மகலும் வளரு மதிகபசி
கந்த மலர்க்குழலே காண்.

குணம்:—(இ - ள்.) பிடா லவணத்தால் அதிக நீரும், மந்தமும் போம். பசியுண்டாம் என்க.

சேய்கை:—ஜடராக்கினி வர்த்தனி, ஆம்ல நாசினி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பதில்லை. இதரச் சரக்குகளுடன் கூட்டிப் பற்பமாகச் செய்து வழங்குவதுண்டு. இன்னும் சூரணங்களில் பெரும்பாலும் சேரும். அவற்றுள் சில முறைகள் பின் வருமாறு.

பிடாலவண பற்பம்

3-பலம் பிடாலவணத்தைக் கல்வத்திலிட்டு அரைத்து நன்றாய்த் தூளானபின் வெள்ளாறுகுச் சாறுவிட்டுத் தினம் ஒன்றுக்கு 4-சாமம் வீதம் 5, 7-நாள் அரைத்து ஒரே வில்லையாகத் தட்டி ரவியில் நன்குலர்த்தி வைத்துக்கொள்க, அதன்பின் வெள்ளாறுகுச் சமூலத்தை அரைத்து ஒரு தேங்காய்ப் பிரமாணம் முன் சித்தப் படுத்தியுள்ள வில்லைக்குக் கவசமிட்டு மண்சீலை ஏழுசெய்து உடனே குழிதோண்டி 50-வறட்டியில் புடமிடவும். புடம் நன்றாய் ஆறின பின் கவசத்திலிட்ட உப்பைப் பார்க்கச் சிவந்து உருகி இருக்கும். அரைத்துப் பத்திரப்படுத்துக. வேளைக்கு 1, 1½-குன்றி எடை

சீரகக் கியாழத்திலாவது, அன்னக் கொதி நீரிலாவது, சோடா வாட்டரிலாவது போட்டுக் கொடுக்க வயிற்றுவலி, பேதி, விஷபேதி, அஜீரணம், பழமையான குன்மரோகம், வாந்தி, வயிற்றுப்பொருமல், குடல் அல்லது இரைப்பை முதலியவற்றின் ரோகம் முதலியவைகள் தவர்மல் குணமாகும்.

பிடாலவண சூரணம்

பிடாலவணம் பலம்-10, சுக்குத்தூள் பலம்-5, பொரித்த பெருங்காயம் பலம்-1. இவைகளை நன்றாய் இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்க. இதனில் வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் தினம் இருவேளை வாயில் போட்டுக் கொண்டு ஒரு அவுன்ஸ் சலம் சாப்பிடவும். இதனால் அஜீரணம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, தமரகவாயு, பேதி முதலியவை குணமாகும்.

வேறு முறை

பிடாலவணம் வெடியுப்பு, மிளகு, சமனெடையாக இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு இரண்டு பனவெடை பழச்சாற்றில் மத்தித்து உள்ளுக்குச் சாப்பிட வயிற்றுவலி நீங்கும்.

இந்த பிடாலவணத்தின் விபரம் பொதுப்பாயிரத்தில் காரசார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின்கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

பித்தளை

(Brass)

தாதுவிர்த்தி யுண்டாகுந் தாபச் சுரம்போகுஞ்
சீதளமாம் வாதஞ் சிதையுங்காண்—பூதலத்துள்
மாட்டியதோர் பித்தகுன்ம மாறு மலர்த்திருவே
நாட்டியதோர் பித்தளையி னுல்.

குணம்:—(இ-ள்.) பித்தளையினுல் சுக்கிலப் பெருக்கமும் குளிர்ச்சியும் உண்டாகும். தீச்சுரம், வாதாதிக்கம். பித்தகுன்மம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பற்பமாகச் செய்வதாக இருந்தால் உருக்கித் தகடு அடித்துக் காய்ச்சி மஞ்சளுடன் கரு கொச்சி இலையைக் கூட்டி இடித்துப் பிழிந்த சாற்றில் தோய்த்துத்

தோய்த்து ஐந்துமுறை எடுக்க நல்ல சுத்தியாகும். அல்லது சன்ன மாக இராவி எடுத்த தூளை கொழுமை பெற்றதாகவும் கறுப்பு நிறமுடையதாகவும் உள்ள ஆட்டுக் குட்டிக்குத் தினந்தோறும் தீனி யுடன் கலந்து கொடுத்துக் கொண்டுவந்து, அப்போதைக்கப்போது இடுஞ் சாணங்களை எல்லாம் ஒருமிக்கச் சேர்த்துச் சாம்பலாக்கி வாயகன்ற மட்சட்டியில் போட்டுச் சலம் விட்டுப் பலமுறை கலக்கி மெதுவாகச் சலத்தை வடித்து விடவும். அப்போது அடியில் பளுவுள்ள பித்தளைப் பொடிகள் நிற்கும். இதை உருக்கித் தகடு அடிக்கத் தங்கம்போல் ஒளி வீசும். இப்படிச் சுத்தி செய்த ஏதேனும் ஒரு தகட்டிற்குக் கந்தகத்தையும் மனோசிலையையும் சம பாகமாகப் பழச்சாறு விட்டு அரைத்துச் சமனமாக இருபுறமும் பூசி அகலில் அடக்கிச் சீலைசெய்து உருகாமல் திட்டமாகப் புடம் போட்டு எடுக்கவும். இப்படி ஒவ்வொரு முறையும் கந்தகம் மனோ சிலை இவைகளைப் பழச்சாறு விட்டரைத்து மேற்பூசிப் புடமிட்டுக் கொண்டுவர ஏறத்தாழ 7, 8-புடத்தில் பற்பமாகும். இதனைச் சலத்தில் போட்டுப் பார்க்க மிதக்கும் பக்குவம் அடைந்திருப்பின் உள்ளுக்குக் கொடுக்கச் சிறந்த தென்றுணர்க. இதனைக் கிரமப்படி கொடுத்துவர இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் ஏற்படும்.

புகையூறல்

(Soot)

புக்கும் புகையூறல் பூவுலகில் மங்கையர்க்குச்
சிக்கும் நதுகட்டைச் சீராக்கும்—தக்கமிகும்
வாதசுரம் கால்வீக்கம் வந்த நகச்சுற்றும்
காதவழி யோடுங் கடந்து.

குணம்:—(இ - ள்.) புகையூறலால் ஸ்திரீகளுக்கு மாத விலக்கக் காலத்தில் சரிவரக் காணுமல் சிக்குப்பட்டுள்ள உதிரக்கட்டு நீங்கும். இன்னும் வாதசுரம், ஆனைக்கால்சுரம். நகச்சுற்று முதலியவை நீங்கும் என்க.

இதுவுமது

குட்டங் களநோய் குநதிழ லம்பேதி
யுட்டங் கசீரணமுள் ளுறுகுன்மங்—கெட்டசிரா
வற்புதம்புண் சீதசுர மர்ப்பவகி நஞ்சிவைகள்
புற்புதம்போ லோட்டறையாற் போம்.

(இ - ள்.) ஒட்டறையால்-சிலேஷ்ம களகண்டரோகம், ரத்த மூலம், அதிசாரம், மந்தம், சிலேஷ்ம குன்மம், நரம்புச் சிலந்தி, குளிர்சுரம், சிறுபாம்பு விஷம், ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—ருதுவர்த்தனகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—புகையூறலுடன் சிறிது வெல்லம், சுண்ணும்பு கூட்டி அரைத்து இளகிய பதத்தில் நெஞ்சுக் குழியில் தடவத் தொண்டைக் கம்மல், தொண்டைக்குத்து, ஒக்காளம் முதலியவை நீங்கும். இன்னும் இதனை நகச் சுற்றுக்குத் தடவ சீழ்பிடித்திருப்பின் உடைத்துக் கொள்ளும் இன்றேல் அழுந்திவிடும்.

கருஞ்சீரகம், பேரிச்சங்காய், இலவங்கப்பட்டை வகைக்குப் பலம்-¼ இவைகளை இடித்து ஒரு மட்கலத்தில் போட்டு அத்துடன் ½-விராகனெடை புகையூறலைக் கூட்டி கால்படி சலம் விட்டுச் சிறு தீயில் எரித்து வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1, 2-அவுன்ஸ் வீதம் 3-வேளை கொடுத்துவர ஸ்திரீகளுக்குத் தடைபட்ட உதிரச் சிக்கலை மாற்றும்.

மஞ்சள், ஓமம், ஜாதிபத்திரி, பொரித்தப் பெருங்காயம், முட்டைத்தோல், வசம்பு, வெள்ளைப்பூண்டு, கரியபோளம், புகையூறல் வகைக்கு விராகனெடை இரண்டாக இடித்து ஒரு மட்கடத்தில் போட்டு ½-படி சலம்விட்டு அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-அவுன்ஸ் வீதம் சமனளவு வெந்நீர் கூட்டி தினம் 3-வேளை கொடுத்துவரப் பிரசவ காலத்திலுண்டான உதிரச் சிக்கல் வெளியாகும்.

புட்பராகம்

(Topaz)

வீரிய வீர்த்தியது மேன்மேலு முண்டாகுங்
கூரியநற் புத்தியுண்டாங் கூறுங்காற்—பாரிற்
பிணிவருக்க மேகும் பெரும்புட்ப ராக
மணியாற் புகழுமுண்டாம் வாழ்த்து.

குணம்:—(இ - ள்.) புட்பராகத்தினால் விருத்தி சுக்கிலமும், நல்லறிவும், கீர்த்தியும் உண்டாகும். மேக முதலிய நோய்க் கூட்டம் நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இது நவரத்தினங்களில் ஒன்றாகும். சாணைபிடித்துச் சுத்தப்படுத்திய கல்லை ஆபரணங்களில் அமைத்துத் தரித்துக்கொள்ள இலட்சுமி கடாக்ஷமுண்டாகும். இத்தகைய மாசிலாத உயர்தரமான கல்லை அவிழ்த்தங்களில் கூட்டும் முன் சுத்தி செய்து கொள்வது அவசியமாகும். எங்ஙனமெனில்:—வேண்டிய அளவு புட்பராகத்தை ஒரு மூசையிலிட்டு ஊதிச் சூடேற்றி வெள்ளாட்டு மூத்திரத்தில் கொட்டி விடவும். மீண்டும் மேற்படி கற்களை ஒருமிக்கச் சேர்த்து மூசையிலிட்டு முன்போல் ஊதிச் சூடேற்றி வேறு புதிய வெள்ளாட்டு மூத்திரத்தில் கொட்டவும். இப்படி ஏழுமுறை செய்து அலம்பி ஒரு கோப்பையிலிட்டு வெள்ளாட்டு மூத்திரத்தை மூழ்கவிட்டு 8-சாமம் வைத்து எடுக்கச் சிறந்த சுத்தியாகும். இதனில் 1, 1½-வராகனெடை ஒரு கோப்பையில் போட்டு மூழ்க வழுதலை வேர்ச் சாறுவிட்டு 2-சாமம் வெய்யிலில் வைக்கவும். பின்னர் ஒரு மூசையில் முன் ரவியில் வைத்த கற்களையும் வழுதலை வேர்ச் சாற்றையும் வழித்து விட்டு ஓடுமூடிச் சீலைசெய்து கன்னுன் உலையில் வைத்து மூசையழுக ஊதி எடுக்கப் பற்பமாகும். ஒருகால் சரிவர ஆகாவிட்டால் அம்மருந்தைக் கல்வத்திலிட்டு மேற்படி மூலிகைச் சாறுவிட்டு அரைத்து வில்லைதட்டி நன்றாய்க் காயவைத்துச் சிறுசிறு துண்டுகளாக பிட்டு மூசையில் போட்டு மேல் ஓடு மூடிச் சீலைசெய்து உலையிலிட்டுப் பழுக்க ஊதி எடுத்து ஆறவிட்டுப் பார்க்க நன்றாய்ப் பூத்திருக்கும். இதனில் சிறிது சலத்தில் போட்டுப் பார்க்க மிதக்குமாயின் உள்ளுக்குக் கொடுக்கப் பக்குவம் அடைந்ததென்றும் அங்ஙனமில்லையாயின் பின்னும் இரண்டொரு முறை முன்போலரைத்து ஊதியெடுக்க வேண்டியது அவசியமென்றும் அறிவார்களாக. இதனை அரைத்துப் பத்திரப்படுத்துக. வேளைக்கு அரிசியெடை தினம் 2-வேளை தேன், நெய் இவைகளில் அனுபானம் செய்து கொடுக்க இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் ஏற்படும்.

பூதாச் சிறையன்

(Boro Camphor yellow)

பூதாச் சிறையனெனும் பூரமஞ்சள் கைப்பாகுங்
கோதையர்க்காங் காசங் கோடிமேகம்—வாதாதி
யென்னுந் தனித்தோட மேறுழுத்தோ டஞ்சோறியுந்
துன்னிரண மும்போக்குஞ் சொல்.

குணம் :—(இ - ள்.) மஞ்சள் நிறமும் கசப்புமுள்ள பூதாச் சிறையன் என்னும் பச்சைக் கருப்பூரம் இருமல், அரித்திராமேகம், வாத பித்த கபம் என்கிற தனித்தனி தோஷங்கள், திரிதோஷம், நமை நெருங்கிய புண்கள் இவைகளை நீக்கும். ஸ்திரீகளுக்கு உப யோகிக்கிற ஔஷதங்களுக்கும் ஆகும் என்க.

செய்கை:—கபஹரகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் பொதுவாகப் பச் சைக் கருப்பூரத்திற்குக் கூறப்பட்டதேயாகும்.

பூநீறு

(Corbonate of Soda)

கரப்பானைச் சீதத்தைக் கண்டிக்கும் பேதி
யுரப்பாக்கும் வாயுதனை யோட்டும்—சுரப்பாக்கும்
உந்திவலி குன்மம் ஒழிக்கும்பூ நீறெனவே
சேந்தா மரைமுகத்தாய் செப்பு.

குணம்:—(இ -ள்.) பூநீற்றுல் கடுவன், சீதளம், வாயு, வலி குன்மம் முதலிய ரோகங்கள் நீங்கும். இன்னும் இதனுல் பேதி யாகும் என்க.

செய்கை:—ஆம்ல நாசினி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது கிடையாது. இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

சப்த லவண சூரணம்

சுத்தி செய்த பூநீறு, எவச்சாரம், பஞ்ச லவணம் ஆக ஏழு சரக்குகளையும் சமனெடையாகப் பொடிசெய்து ஒரு வாயகன்ற கோப்பையில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு ரவியில் வைத்து உலர்த்திக் கல்வத்திலிட்டு அரைத்து வைத்துக் கொள்க. ஆகாரம் சாப்பிட்டபின் ஜீரணம் ஆகும் சமயத்தில் வயிற்று வலி காண்பவர்களுக்கு ஏறக்குறைய மூன்று குன்றியெடை ஒரு அவுன்ஸ் சலத்தில் போட்டுக் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க வயிற்று வலி நீங்கும்.

குன்மகுடோரி

கால் படி சுத்தமான பூநீற்றை ஒரு கோப்பையில் போட்டு ஒரு படி சுண்ணும்புத் தெளிவு நீர் விட்டுக் கலக்கிக் கலக்கி 3-நாள் அசையாமல் வைத்துத் தெளிந்த சலத்தைக் கலங்காமல் வடித்துக் கொள்ளவும். இந்தச் சலத்தைக் கோப்பைத் தட்டுகளில் விட்டு ரவியில் வைக்க உறைந்து உப்பாகும் இதனை ஒரு கோப்பையில் போட்டுப் புளிப்பு மாதுளம் பழச்சாறு விட்டுச் சில தினம் ரவியில் வைக்க உறைந்து உப்பாகும். இதை அரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்துக. இந்த உப்பை வேளைக்குக் குன்றி எடை பகல் போஜனத்திற்கு முன் ஒரு அவுன்ஸ் சுத்த சலத்தில் கலக்கிச் சாப்பிட வயிற்றில் ஒருவிதமான எரிச்சல் உண்டாகும். அப்போது ஆகாரத்தை யுட்கொள்ளவும். இப்படிச் சில தினம் உண்டுவர வயிற்று வலி, அஜீரணம் வாந்தி, ஓக்காளம், சூதகவாயு, குன்மம் முதலிய வைகள் குணமாகும்.

இந்தப் பூநீற்றின் விபரம் பொதுப்பாயிரத்தில் கார சார லவணம் இருபத்தைந்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

மடல் துத்தம்

(Carbonas Zinci Impurus)

போங்குஞ் சுரமுடனே போராடுங் கண்வலியும்
தங்குப் பலவிதமாஞ் சன்னிகளும்—கங்குற்
பகலிடர்செய் மேகப் படையணமும் மாதே
புகலுமடத் துத்தத்தாற் போம்.

குணம்:—(இ-ள்.) மடல்துத்தத்தால் சுரம், கண்வலி, சன்னி, மேகப்படை முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—மடல் துத்தத்தைப் பால் துத்தம் என்று கூறுவாருமுளர். பால் துத்தமானது முட்டை ஓட்டுத் துண்டுகளைப்போல் சன்னமாக இருக்கும். மடல் துத்தமோ ஏழெட்டு மடங்கு கனமுள்ளதாகவும் சிறுது அழுக்குவர்ண முடையதாகவும் இருக்கும். இனமறிந்து பாகங்களில் கூட்டுவது நன்று.

சுராங்கிசம்

மடல்துத்தம், வாலாரசம், இலிங்கம் வகைக்குப் பலம்-½ இவைகளைக் கல்வத்திலிட்டு ஊமத்தம் இலைச்சாறு விட்டு 2-சாமம் அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக. வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் 2-வேளை 3-நாள் அனுபானங்களில் கொடுக்கச் சுரம், சந்நி, குளிர்சுரம் முதலியவை போம்.

மண்ணெண்ணெய்

(Petroleum or Rock Oil)

நீர்கொண்ட மண்டையிடி நீங்காத மேய்க்குளிர்ச்சி
பேர்கொண்ட வீக்கம் பெருஞ்சோறியும்—ஊர்கண்டிங்
கோடி யோளிக்கு முயர்ந்தமண் ணெண்ணெயால்
நாடுமிதன் நன்மை நவில்.

குணம்:—(இ-ள்.) மண்ணெண்ணெயால் மண்டைக் குடைச்சல், தேகக் குளிர்ச்சி, வீக்கம், சொறி முதலியவை போம்.

செய்கை:—கபஹரகாரி, அங்கா கர்ஷ்ண நாசினி, கிருமிநாசினி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தத் தைலத்தில் 10, 15-துளி வெந் நீரில் விட்டுக் கொடுக்க வாந்தி நிற்கும். 20, 40-துளி இலவங்கப் பட்டைக் கியாழத்தில் கொடுக்க வியர்வை விட்டு கபமறும். இதைத் தலைவலிக்கும், மண்டைக் குடைச்சலுக்கும் தேய்க்கக் குணமாகும். சொறி, சிரங்குகளுக்கு மேற்பூச ஆறும். தேகம் வாழைத் தண்டைப்போல் குளிர்ச்சி யடைந்திருக்கும் காலத்தில் இந்த எண்ணெயுடன் சிறிது கற்பூரம் கூட்டி மத்தித்து மேற்றேய்க்கத் தேகத்தில் சூடுண்டாகும். இந்த எண்ணெயுடன் சமபாகம் நல்லெண்ணெய் கூட்டி மிருதுவான துணியில் தோய்த்து ஆறாத விரணங்களின் மேல் போட்டு வைக்க விரைவில் ஆறும். இன்னும் இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டித் தைல ரூபமாகச் செய்து வைத்துக்கொண்டு உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙன மெனில்:—

மண்ணெண்ணெய்க் கலவைத் தைலம்

மண்ணெண்ணெய் பலம்-20, மயில் இறகு பலம்-10, தேன் மெழுகு பலம்-10, கற்பூரம் பலம்-2, வேப்பெண்ணெய் பலம்-20, இவற்றுள் முதலில் வேப்பெண்ணெயை ஒரு இரும்புக் கடாயில் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து எண்ணெய் சூடேறி நுரை கிளம்பும் சமயம் ஈரம்புகள் நீக்கிய மயிலிறகைக் கொஞ்சங் கொஞ்சமாக எண்ணெயில் போட்டுக் கிண்டிவர உருகிவிடும். அச் சமயம் தேன் மெழுகைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுவர இதுவும் வேப்பெண்ணெயுடன் கலந்து உருகி நிற்கும். அப்போது இரும்புக் கடாயைக் கீழிறக்கிச் சிறிது ஆறவிட்டு மண்ணெண்ணெயையும் கற்பூரத் தூளையும் போட்டு நன்றாய்க் கிண்டிப் பத்திரப்படுத்துக. இதை நடுக்கல்வாதம், பாரிச வாதம், கீல்வாதம் முதலியவற்றிற்கு மேற்றேய்க்க குணமாகும்.

குறிப்பு:—இந்த எண்ணெயை அடுப்பிலேற்றிக் காய்ச்சும்போது புகை கிளம்பாமல் இருக்கும்படியாகக் கவனித்து வரவேண்டும். தீ மிகுதிப்படின் எண்ணெயில் புகைக் கிளம்பிப் பற்றி எரியும். ஆதலால் கவனித்துச் செய்யக் கடவர்.

மரகதம்

(Emerald)

தாதுதரும் பூதபை சாசந் தமையோட்டு
மீதுவரு புண்ணை விலக்குங்காண்—டீதுபுரி
நச்சை யகற்று நலிமதுமே கம்போக்கும்
பச்சை யதுமதுரம் பார்.

குணம்:—(இ-ள்.) இனிப்புள்ள மரகதம், விந்துவை விளைக்கும்; 18-விதப் பூதபைசாசங்கள், விரணம், பலவிஷங்கள், மதுமேகம் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பற்பமாகச் செய்துகொடுக்கத் தலைமூளை, இருதயம், இரைப்பை முதலிய ராஜகருவிகளுக்குப் பலத்தைக் கொடுக்கும், காக்கைவலி, பயித்தியம், பக்கசூலை, மார்பு வலி, இரத்தவாந்தி, இரத்தபேதி, காமாலை, வீக்கம், விஷக்கடி, நீரடைப்பு, கல்லடைப்பு, ஈரல், குண்டிக்காய் முதலியவற்றின்

பலவீனம், முதிர்ந்த பெரும் வியாதி முதலியவைகள் நீங்கும். பாம்பு கடித்து உயிர் அடங்கி இருப்பின் உச்சியைக்கீறி மரகதத்தை அரைத்துத் தூள் செய்து அந்த இடத்தில் வைத்து அழுத்த விஷ மிறங்கி உயிர் வரும். இதின் பற்பத்தைக் கடுகளவு கண்களில் தீட்ட நேத்திர ரோகங்கள் போம். இதைத் தங்க மோதிரத்தில் பதிய வைத்துக் கைவிரலில் அணிந்துகொள்ளக் காக்கைவலி வாதம். கன்னியாராசியில் சூரியன் உச்சனும் இருக்கும்போது 2-கழஞ்சி பொன், 2-கழஞ்சி வெள்ளி கூட்டி உருக்கி மோதிரம் செய்து அதில் மரகதத்தை வைத்து அணிந்து கொள்ளச் சகலரும் வசியமாவர். இஷ்டகாரியம் சித்தியாகும். செல்வம் அதிகரிக்கும். பேய் முதலிய கிரக சேஷ்டை நாடாது. இந்த மோதிரத்தைத் தரித்தவரிடம் ஈ நெருங்காது இதுவே திருஷ்டாந்தம்.

மரகத பற்பம்

தேவையான அளவு மரகதத்தைக் கொண்டுவந்து ஒரு வஜ்ஜிர மூசையில் போட்டுக் கரி நெருப்பனலில் வைத்துச் சூடேறின சமயம் குதிரை மூத்திரத்தில் கொட்டவும். இப்படி ஏழு முறை செய்ய நல்ல சுத்தியாகும். இக் கற்களை ஈரமில்லாமல் துடைத்து இரும்பு உரலிலிட்டு இடித்துத் தூளாக்கிக் கல்வத்திலிட்டுக் கல்லுருவி இலைச்சாறு விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை, தட்டிக் காயவைத்து அகலிலடக்கிச் சீலை செய்து 50-வறட்டியில் புடமிடவும். இப்படி 4, 5-புடமிட உயர்தரமான பற்பமாகும். இதைச் சிறிது சலத்தில் போட மிதக்கவேண்டும். இன்றேல் இரண்டொரு புடம் முன்போல் போட்டு எடுக்கவும். இன்னும் இதனை வைடூரியத்தின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்ட பொது விதிபோலும் செய்து கொள்ளலாம்.

மனோசிலை

(Arsenicum Rubrum)

குட்டங் கொடியரணங் கூறுந் திமிர்படையும்
வட்ட மிடுங்கிரந்தி வன்மையெலாம்—விட்டுப்போம்
காய்ச்சல் நடுக்கலஜ கள்ளியிரைப் புச்சிலந்தி
பேச்சறும மனோசிலையைப் பேண்.

குணம்:—(இ - ள்.) மனோசிலையால் குட்டம், அழுகல் உற்ற விரணங்கள், திமிருடன் உள்ள படைகள், கிரந்திப் புண்கள், சுரம்,

குளிர், அஜகள்ளிகாரோகம் (குழந்தைகளுக்குக் காணும் கள்ளிப் பூவைப் போன்ற நீண்ட கொப்பளங்கள்) சுவாசகாசம், சிலந்தி விஷம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை.—சுரஹரகாரி, கபஹரகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது கிடையாது. இதனை இஞ்சிச்சாறு விட்டு அரைத்து வில்லைகள் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ளச் சுத்தியாகும் இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி மாத்திரைகளாகச் செய்து உபயோகப் படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

மஞ்சிலை மாத்திரை

சுத்தி செய்த மஞ்சிலை, சுக்கு, மிளகு, திப்பிலி, மோடி இவைகளைச் சமனெடையாகக் கொண்டு கல்வத்தில் போட்டுத் துளசிச்சாறு, ஆண் வெள்ளாட்டு நீர் இவைகளினால் ஒவ்வொரு சாமம் அரைத்து மிளகுபோல் மாத்திரைகள் செய்து உலர்த்திப் பத்திரப்படுத்துக. இதனில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இரு வேளை சுரத்திற்கு வெந்நீரிலும் சந்நிக்குக் குப்பை மேனிச் சாற்றிலும் வாயுகளுக்குக் குளிர்ந்த சலத்திலும் அனுபானம் செய்து கொடுக்கத் தீரும்.

வேறு முறை

மஞ்சிலை, ரசம், இலிங்கம், கெந்தகம், நாபி, காந்தம். அரிதாரம் வகைக்குக் கழஞ்சு ஒன்றாகக் கல்வத்தில் போட்டுப் பழச்சாறு விட்டு 3-சாமம் அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக. இந்த மாத்திரையை வேளைக்கு ஒன்றாகத் தேன், திரிகடுகுக் கியாழம் இஞ்சிச்சாறு முதலியவைகளில் அனுபானம் செய்து கொடுக்கப் பக்கசூலை, வாத ரோகங்கள், சந்நி சுரங்கள் தீரும்.

சிலாசூதபதங்கம்

நல்லெண்ணெயில் ஏழுமுறை உருக்கிச் சாய்த்த கருவங்கத்தை எண்ணெயில்லாமல் சுத்தமாகத் துடைத்து ஐந்து பலம் அளவிற்கு ஒரு இரும்புக் கடாயில் போட்டு அடுப்பிலேற்றி எரிக்க வங்கம் உருகும். அச்சமயம் ஒற்றை யிதழாகப் பூக்கின்ற செவ்வலரி வேரைக் கத்தையாகக் கட்டிக்கொண்டு 2, 3-சாமம் தேய்த்து

வறுத்துவர வங்கமானது மஞ்சள் நிறமான பற்பமாகும். இந்தப் பற்பத்தை ஒரு குண்டுச் சட்டியில் சமகனமாகப் பரப்பி அதன் மேல் ஐந்து பலம் மஞ்சிலைப் பொடியைத் தூவி, உட்புறத்தில் ஊமத்தம் இலைச்சாறு பூசிய மற்றொரு சட்டியைக் கவிழ்த்து இரண்டு சட்டிகளின் வாய் பொருத்தத்திற்கு மண்பூசி சீலை செய்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக 4-சாமம் எரித்து ஆறவிட்டுப் பார்க்க மேற்சட்டியில் ஏறத்தாழ 1¼-பலத்திற்கு மேற்பட்ட அளவாகப் பதங்கம் ஏறி இருக்கும். இதைச் சுத்தமாகச் சுரண்டி வைத்துக் கொள்க. அப்பால் வெடியுப்பு, படிகாரம், கருங்காஞ்சொறி இலை, கருஊமத்தம் இலை வகைக்குப் பலம் 10 வீதம் ஒரு உரலில் போட்டு இடித்து ஒரு மட்கடத்தில் போட்டு அதற்குப் பொருத்தமான மண் வாலையைச் செருகி மண்சீலை செய்து முறைப்படி திராவகம் இறக்கி வைத்துக்கொள்க. இதற்குமேல் இலிங்கத்திலிருந்து எடுத்த சூதம் பலம் இரண்டரையை ஒரு கல்வத்தில் போட்டு முன் சித்தப்படுத்திய மஞ்சிலைப் பதங்கத்தைக் கூட்டிப் பின் சித்தப்படுத்தி வைத்துள்ள திராவகத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் கையோயாமல் 2-சாமம் அரைத்து வில்லை செய்து காயவைத்து ஒரு சட்டியில் வைத்து மேல் சட்டி மூடிச் சீலைசெய்து காயவைத்துச் சிறு தீயாக இரண்டு சாமம் எரிக்கவும். மறுநாள் உள்ளிட்ட மருந்தைச் சேதப்படாமல் மேலும் கீழுமாக உள்ளதைச் சுரண்டி கல்வத்திலிட்டு மீண்டும் முன்போல் திராவகம் விட்டு 2-சாமம் அரைத்து வில்லைசெய்து முன்போல் எரிக்கவும். இப்படி 3-முறை எரித்து எடுத்த மருந்தை யெல்லாம் சேதப்படாமல் சுரண்டிக் கல்வத்திலிட்டு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

இந்தப் பதங்கத்தில் வேளைக்கு ¼, ½-அரிசிப் பிரமாணம் பனை வெல்லத்தில் வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். 2, 3-வேளைக்கு மேல் கொடுக்கக்கூடாது. இதனால் எத்தகைய கொடிய சுவாச காச ரோகமாயினும் குணமாவது உண்மை. ஒருகால் எதிர்பாராதபடி குணமில்லை யென உணரின் 5, 6-நாள் சென்றபின் மீண்டும் ஒரு முறை முன்போல் 3-வேளை கொடுக்கவும். இப்படி விட்டு விட்டு மூன்று முறை கொடுப்பதற்குள் பூரண குணமடைவர். இம் மருந்தைச் சாப்பிடுங் காலத்தில் பால் அன்னம், பால் கஞ்சி தவிர வேறு ஆகாரம் ஆகாது.

மாங்கிச பேதி

(Mangisha Baythi)

துன்மாங்கி சங்கரைக்குஞ் சோபை யழலையோடு
வன்மைமித சூலைகப மாற்றுங்கா—ணன்மயிலே
யோப்பறுபி லீகமென வோதுகட்டி யைக்கெடுக்குஞ்
செப்பரிய மாங்கிசபே தி.

குணம்:—(இ - ள்.) மாங்கிச பேதியினுல் விரணுதிகளின் துர் மாமிசம், வீக்கம், உள் வெப்பம், கீல் பிடிப்பு, கப தோஷம், பிலீகம் இவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—தற்காலத்தில் அசல் சரக்குக் கிடைப் பது அரிது. திருச்சினுப்பள்ளியி லிருந்து புதுக்கோட்டைக்குப் போகும் மார்க்கத்தில் மேற்கே கார்த்தம்மாமலை யென்றொன்றுண்டு. அங்கே வாசம் செய்யும் வில்லியர்களைக் கேட்டால் சேகரித்துக் கொடுப்பார்கள். சுமார் 50, 60-வருஷத்திற்கு முன்னிருந்த ஆரான் என்பவனின் பரம்பரையார்க்கு நன்கு தெரியும். இதைக்கொண்டு செய்யும் மருந்துகளில் திருஷ்டாந்தமாக ஒன்று இங்குரைப்போம்.

மாங்கிசபேதி பலம்-5, ஆமணக்கு இலைச்சாறு படி-½, சிற்று மணக்கெண்ணெய் படி-½ இவற்றை முறைப்படி தைலங் காய்ச்சி வைத்துக்கொண்டு யானைக்கால், அண்டவாத வீக்கம், கீல் வீக்கம், துர்மாமிச வளர்ச்சி இவைகளுக்குப் பூசிவர ரோமத் துவாரங்கள் வழியாய் நீர் வெளியாகிச் சுபாவ அளவிற்குக் கொண்டுவரும்.

மாணிக்கம்

(Ruby Superior)

சுரரோகஞ் சந்நிகளின் தோடமதி தாக
முரமான மேக மொழியுந்—திரமாக
வூணிக்கோ ணேத்திரநோ யோடுமர வீன்றவோளி
மாணிக்கத் தால்வசிய மாம்.

குணம்:—(இ - ள்.) சர்ப்பங் கக்கிய மாணிக்கத்தினுல் சாரீ ராதி சுரங்கள், சந்நிபாதமே தாஷங்கள், திரிதோஷ தாகரோகம், வாதப்பிரமேகம், கண்ணோய் ஆகிய இவைகள் ஒழியும். வசீகரம் உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இது நவரத்தினங்களில் அதிகம் சிறந்தது. தற்காலத்தில் இது கிடைப்பது அரிது. இதை அணிந்துக் கொண்டவர்களுக்கு உலக வசியமும் நல்ல தேஜசும் உண்டாகும் இதனைப் பற்பம் செய்ய உத்தேசமிருப்பின் சாதாரணமாகக் கெம்புக் கல்லிற்குக் கூறிய விதமேயாகும்.

மிருதார்சிங்கி

(Plumbi Oxidum)

மிருதார சிங்கெனவே மேல்லவுரைத் தாலு
முருவார் புடைகரப்பா னோடு—மோருவிதமோ
சாலச் சிரங்குபுண்ணுந் தப்பாம லாறிவிடும்
வேலோத்த கண்மயிலே விள்.

குணம்:—(இ-ள்.) மிருதார் சிங்கியினால் உடம்பு எங்கும் பரவுகின்ற பித்த விரணம், கரப்பான், கிரந்திக் கூட்டம், மகா விரணம் இவைகள் விலகும் என்க.

செய்கை —தாது கூஷ்ணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதனை விசேஷமாக இதரச் சரக்குகளுடன் கூட்டிக் களிம்பாகச் செய்து மேலுக்கு உபயோகப்படுத்துவதுண்டு. சில சந்தர்ப்பங்களில் உள்ளுக்கும் உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

மிருதார்சிங்கிக் களிம்பு

மிருதுவாக அரைத்து வைத்துள்ள மிருதார்சிங்கி தோலா-5, நல்லெண்ணெய் அவுன்ஸ்-4, சுத்த சலம் அவுன்ஸ்-2 இவைகளை ஒரு தாம்பிரக் கிண்ணத்தில் போட்டு வெந்நீர் ஆவியில் இருக்க அமர்த்தி, 4, 5-மணி நேரம் மெதுவாகக் கொதிக்கவைத்து, விட்ட சலம் சுண்டி மிருதார்சிங்கி எண்ணெயுடன் உறவாகிக் களிம்புபோல் வருகிற வரையில் கிளரிக் கொடுக்கவும், தேவையானால் சிறிது சலம் கூட்டிக் கொள்ளவும். இந்தக் களிம்பைக் கத்திவெட்டு காயங்களுக்குத் துணியில் தடவி மேற்போடக் காயங்கள் ஆறும். கட்டிகளுக்குப்போடக் கரையும்.

துவர் எண்ணெய்

மிருதார்சிங்கி, பூரம், துரிசு, கத்தக்காம்பு வகைக்கு விராகனெடை ஒன்றாகக் கல்வத்தில் போட்டு 3-பலம் தெங்கின் நெய்யைக்

கொஞ்சங் கொஞ்சமாக விட்டு நன்கரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்துக. வேண்டும்போது புண், சொறி, சிரங்கு, கரப்பான் முதலியவற்றிற்குப் பூசிவர ஆறும்.

படைக் குளிகை

மிருதார்சிங்கி, ரசம், கெந்தகம், பூரம், துரிசு, துத்தம் வகைக்குக் கழஞ்சு வீதம் கல்வத்தில் போட்டு கம்மாறு வெற்றிலைச்சாறு விட்டு நன்கு அரைக்கவும். இது மெழுகுவண்ணம் வரும்போது 3-குன்றியெடை பச்சைக் கற்பூரம் கூட்டி அரைத்து பலப்பக் குச்சிகளைப் போலாவது அத்தர் வில்லைகளைப் போலாவது செய்து உலர்த்தி வைத்துக்கொள்க. வேண்டும்போது பழச்சாற்றில் சிறிது உரைத்து ஊறல் எடுத்துப் பரவுகின்ற படைகளுக்கு மேற்றடவ விரைவில் குணமாகும். ஆண்குறியின் முனையில் தோல் வெடிப்புக் கொண்டு பாதை யிருக்கும்போது இதைத் தடவ ஆறும்.

மிருதார்சிங்கி மெழுகு

சுத்தி செய்த மிருதார்சிங்கி, இலிங்கம், தாளகம், இரசச் செந்தூரம், இரச கற்பூரம் வகைக்குப் பலம்-½ ஆகக் கல்வத்திலிட்டு நான்கு சாமம் நன்றாய் அரைத்து வைத்துக்கொள்க. அப்பால் ஒரு வீசை வெள்ளைப்பூண்டைத் தோலுரித்து உலலிலிட்டு நன்றாய் இடித்து ஒரு வாயகன்ற கோப்பையில் போட்டு அழுத்தி 4, 5-மணி நேரம் சென்ற பின் மீண்டும் சிறிது இடித்துச் சீலையில் வைத்துக் கசக்கிப் பிழியச் சாறு வரும், இவ்வாறு பூண்டிலிருக்கும் சாறு கிடைக்கும் வரையில் சேகரித்து வடிகட்டி வைத்துக்கொள்க.

ஆப்பஞ் சுடுவதற்காகச் செய்து விற்கப்படும் ஒரு சட்டியை அடுப்பிலேற்றி அதனில் முதல் சித்தப்படுத்தி வைத்துள்ள 5-சரக்குகளின் தூளைப் போட்டு அடுப்பிலேற்றி அதன் கீழ் 60-இழையுள்ள மிருதுவான பருத்தி நூல் சேர்ந்த திரியை அகண்டத்திலிட்டு நெய் விட்டுக் கொளுத்தி சட்டியின் கீழிருக்கவும், தீயானது கமலம்போல் பரவி எரியவும், திட்டம் பார்த்து வைக்கவும். அத்தருணம் பிழிந்து வைத்துள்ள வெள்ளைப் பூண்டின் சாற்றைச் சிறிது சிறிதாக விட்டுச் சிறு மூங்கில் குச்சியால் கிளறிக் கிளறிக் கொடுத்துக் கொண்டு வருக.

இப்படிச் சாறு முழுவதும் சுண்டிப் பாகு பதம்வரும் சமயம் காலதாமதமின்றிச் சட்டியைக் கீழிறக்கி ஆறவிட்டுப் பார்க்க

மெழுகு பதமாகவும் கத்திகொண்டு கிளரித் தூக்கிப் பார்க்கத் தாறு போல் வருதல் வேண்டும். இதுவே சரியான பதம். அப்படி வரா விட்டால் மீண்டும் சிறிது சூடேற்றிப் பதமாகச் செய்து கொள்ள வும். இதனைக் கத்திகொண்டு சுரண்டிக் கொம்பு டப்பியிலாவது அல்லது மூடியுள்ள கோப்பை டப்பியிலாவது பத்திரப்படுத்துக. இந்த மெழுகை வேளைக்கு மிளகு, குன்றிப் பிரமாணம் வெல்லத்தில் வைத்துத் தினம் 2-வேளை 3, 5-நாள் கொடுக்கக் கணுக்களில் உண்டாகின்ற சூலை, பிடிப்பு, சூதக வாயு, சூதக சந்நி, முறை சுரம், யானைக்கால் சுரம் முதலியவைகள் குணமாகும்.

பத்தியம்:—கடுகு, நல்லெண்ணெய், மீன், கருவாடு, மோர் தவிர மற்றவைகள் ஆகும்.

இரண்டு நாள் மருந்தில்லாமல் விட்டு வைத்து எண்ணெய் காய்ச்சி ஸ்நானம் செய்து பத்தியம் இல்லாமல் எல்லாம் சாப்பிட லாம். நோய் பூரணமாகக் குணமாகாவிடின் இரண்டு மூன்று ஸ்நானம் செய்தபின் மீண்டும் ஒருமுறை முன்போல் கொடுக்கவும். இப்படி 3-முறை கொடுக்க எவ்வளவு கஷ்ட சாத்தியமான ரோக மெனினும் குணமாகும்.

மிருதார்சிங்கி பற்பம்

1-பலம் சுத்தி செய்த மிருதார்சிங்கியுடன் 2-பலம் படிகாரம் கூட்டி இளம்பனமட்டைச்சாறு விட்டு 4-சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலில் அடக்கிச் சீலை செய்து 10-வறட்டி யில் புடமிடப் பற்பமாகும் இந்த எடைக்குச் சமன் படிகாரம் கூட்டிப் பனமட்டைச்சாறு விட்டு 4-சாமம் அரைத்து இரண்டு பாகமாகப் பங்கிட்டு ஒரு பாகத்தை ஒரு சிறு கலயத்திற்குள் வைத்து நடுவில் பள்ளம் செய்து ஒரு பலம் ரசத்தை விட்டு அதன் மேல் அரைத்து வைத்துள்ள மிகுதியான மருந்தை குடவாகச் செய்து முன்னிட்ட மருந்தை மூடிச் சந்தில்லாமல் கைவிரலால் அழுந்தப் பார்த்துக் கலயத்தின் வாய்க்கு ஓடு மூடிச் சீலை செய்து 10-வறட்டியில் புடமிடவும். இது நன்றாய் ஆறின பின் கலயத்தி லிட்ட மருந்தை எடுத்தரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்தப் பற்பத்தில் வேளைக்கு 1, 1½-குன்றியெடை வீதம் தினம் இருவேளை 5-நாள் வால் மிளகும் கற்கண்டும் சேர்ந்த சூரணத்தில் கொடுக்க வெள்ளை தீரும். நெய்யில் கொடுக்க மூலம்,

சூலை முதலியவைகள் போம். தேனில் கொடுக்கச் சுரத்தினு லுண்டான விக்கல் தீரும். அரிசி கழுவின சலத்தில் கொடுக்கப் பெரும்பாடு நீங்கும்.

யூதக்கல்
(Uthakall)

யூதரம்போ லோங்கிவளர் போற்சுணங்கின் மென்முலையாய்
யூதக்கல் லின்தணத்தை யுண்மையுட—னேதக்கேள்
போல்லாத நீர்ச்சுருக்கு போராடும் நீரடைப்பும்
செல்லா தினந்திடுமோ செப்பு.

குணம்:—(இ-ள்.) யூதக்கல்லால் நீர்ச்சுருக்கு, நீர்க்கட்டு, நீங்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கல்லைத் தேயாத சந்தனக் கல்லின்மேல் சிறிது பசுவின் பால் விட்டு உரைத்துச் சுமார் புளியங்கொட்டைப் பிரமாணம் சந்தனம்போல் வழித்து எடுத்து வீசம் படி காய்ச்சிய பசுவின் பாலில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க, மூன்றுமணி நேரத்திற்குள் நீர்ச்சுருக்கு, நீரடைப்பு முதலியவைகள் குணமாகும். அப்படிக் குறித்த காலத்தில் குணமில்லை யென்றுண ரின் மூன்றுமணி நேரத்திற்கொரு முறையாகக் கொடுத்துவர இரண் டொரு முறைக்குள் குண மேற்படுவது திண்ணம். இந்தக் கற்களைக் கல்வத்தில் போட்டுப் பன்னீர் விட்டு ஏழு நாள் அரைத்து மெழுகு பதத்தில் அரைக்கால் ரூபாய் எடையுள்ள மாத்திரைகளாகத்திரட்டி உலர வைத்துப் பத்திரப்படுத்துக. இந்த மாத்திரையை வேளைக்கு ஒன்றாக ரோகத்தின் வன்மை மென்மைக் கேற்றவாறு மூன்று அல்லது இரண்டுவேளை வீசம் படி காய்ச்சிய பசுவின் பாலிலாவது அல்லது 2-அவுன்ஸ் முள்ளங்கிக் கிழங்குச் சாற்றிலாவது கரைத்துக் கொடுக்க விசேஷ நன்மையைத் தரும். இந்தக் கல்லை இதரச் சரக்குகளுடன் கூட்டி நீர் பேதிக்காக உபயோகப் படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்:—

நீர் பேதிச் சூரணம்

சேவல் சின்னிக்கிழங்கு தோலா-1, சிறுநாகப்பூ தோலா-1 இலவங்கப்பட்டை தோலா-1, பறங்கிப்பட்டை தோலா-1, ஏலக் காய் வித்து தோலா-1, சீரகம் தோலா-1, வெடியுப்பு தோலா-1,

படிகாரம் தோலா-1, சிலாசற்கண்டு தோலா-1, யூதக்கல் தோலா-1 ஆக இவற்றுள் இடித்துச் சூரணிக்கத் தக்கவற்றைச் சூரணித்தும் கல்வத்திலிட்டு அரைக்கத் தக்கவற்றை அரைத்தும் ஒருமிக்கக் கலந்து வைத்துக்கொள்க. வேண்டும்போது இந்தச் சூரணத்தில் காலை நேரத்தில் ஒரு தோலா எடைச் சூரணத்தைப் பசுவின் பாலிற் கலக்கிச் சாப்பிட்ட பின்னர் ½-படி பசுவின் பாலுடன் ½-படி சலம் கூட்டிச் சிறிது சிறிதாகப் பருகிவர நீர் அதிகமாக இறங்கும். இங்ஙனம் மூன்று நாட்கள் காலை நேரத்தில் பருகிவர நீர்ப்பையிலுண்டான கொதிப்பையும் அங்குத் தங்கியுள்ள வண்டல்களையும் நீக்கும். இதைப் பிரமேகத்திற்கு முன்னதாகக் கொடுத்துப் பின்னர் எம்மருந்தைக் கொடுப்பினும் விரைவில் குணமாகும். இந்த பேதிச் சூரணத்தை கொள்ளும்போது பாலன்னம் கொள்வது அதிக நன்று.

குறிப்பு:—இந்தக் கல்லானது முதல் முதல் இந்தியாவுக்கு யூதர்களுடைய நாட்டிலிருந்து வந்தமையால் சித்த வைத்தியர்கள் யூதக்கல்லென்று வழங்கி வந்தனர். ஆனால் இதை யூனானி வைத்தியர்கள் இஜரல்-எ-யூத் என்று கூறுவார். இது யூனானி மருந்துக் கடைகளில் ஏராளமாகக் கிடைக்கும்.

வச்சிரம்

(Diamond)

ஆறுவித மாம்வயிர மவ்வவற்றுண் மாரசங்கள்
வீறி நிலத்திருக்கு மேன்மையினுற்—கூறுமவைக்
கேப்பிணியு நீங்கு மீணையில் வனப்புமுண்டாஞ்
சேப்பிணையின் மாழலையாய் செப்பு.

குணம்:—(இ-ள்.) தேவ, பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, சங்கர என்கிற ஆறுவகை வயிரங்களிலும் மகா ரசங்கள் தங்கியிருப்பதால் அவைகளினால் நேத்திர ரோக முதலிய பற்பல ரோகங்கள் விலகும். சரீர அழகுண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—வயிரமானது நவரத்தினங்களில் ஒன்றாகும் இதைக் குளிசமாகக் கட்டிக்கொள்ள அச்சம், துயரம் முதலியவற்றை நீக்கி இருதயத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். பிரசவவேதனைப் படுகிறவர்களுக்குக் கட்ட விரைவில் பிரசவமாகும். ஆறு கோணமுள்ள வயிரத்தைப் பொன்னுடன் கூட்டி மோதிரமாகச்

செய்து விரலில் அணிந்து கொள்ளக் காக்கைவலி போம். வயிரத்தில் அணுவளவாவது உட்கொள்ளக் குடல் முதலிய உறுப்புகளைக் கெடுத்து இம்சிக்கும். இதற்கு உடனே கால தாமதம் செய்யாமல் பசுவின் பாலில் நெய் சேர்த்துக் குடல் கொள்ளும் வரையில் குடித்துத் தொண்டை வரையில் கை விரலை விட்டு வாந்தி யெடுக்கும்படி செய்ய வேண்டும். வயிரக் கற்களை எலுமிச்சம் பழத்திற்குள் செலுத்தி நூலால் வரிந்து கட்டி அதனை ஒரு மட்கடத்தில் வைத்து ஒரு படி அகத்தியிலைச்சாறு விட்டுச் சுண்ட எரித்து எடுக்கவும். இப்படி மூன்று முறை செய்ய நல்ல சுத்தியாகும். இப்படிச் சுத்தியானபின் மூன்று வருஷத்திய பருத்திச் செடியின் வேரை மூன்று வருஷத்திய வெற்றிலைக் கொடியின் இலைச்சாற்றில் அரைத்து மெழுகுபோலெடுத்து ஒரு சிறு மட்கலயத்தில் பாதி போட்டு அதன்மேல் வயிரக் கற்களைப் பரப்பி மேலும் அரைத்து வைத்துள்ள மற்ற மிகுதியைப் போட்டு அழுத்தி வாய் மூடிச் சீலை செய்து காய்ந்த பின் மூடி மட்கலயம் முழுவதும் சூழ ஏழு மண்சீலை செய்து கெஜப்புட மிடவும். புடம் நன்றாய் ஆறின பின் கற்களை மெதுவாக எடுத்து முன் போல் ஏழு முறை புடமிடப் பற்பமாகும். இப்படிச் செய்தது துய்ய வெள்ளை நிறமாகவும், சலத்தில் சிறிது போட மிதக்கும் பக்குவத்தைப் பெற்றதாகவும் இருக்க வேண்டும். இன்றேல் பின்னும் இரண்டொரு புடம் போட்டு எடுக்க வேண்டியது என்பதைக் கவனத்தில் வைக்கக்கடவர். இந்தப் பற்பத்தில் வேளைக்கு $\frac{1}{8}$, $\frac{1}{4}$-அரிசியெடை ஏதேனும் ஒரு லேகியத்துடன் கூட்டிக் கொடுக்கவும். இப்படிச் சிலதினம் கொடுக்கச் செய்யுளிற் கூறப்பட்ட குணங்களேற்படும்.

வலையல் உப்பு
(Valaiyal Uppu)

துலையார் குடல்வாதந் தொந்தவா தத்தோ
டிலையாச் சுவாசமறு மின்னும்—வலையலுப்பாற்
குன்மவலி சூலைவெப்பங் கூறுப் பிலீகமிவை
சென்மம் விடுத்தோடுந் தேர்.

குணம்:—(இ - ள்.) வலையலுப்பு - ஆந்திர பித்தவாதம், வாத பித்தம், இரைப்பு, வயிற்று நோய், கீல் பிடிப்பு, சுரம், பீலிகம் இவைகளை நீக்கும் என்க:—

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி உதரவாத ஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த உப்பைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது கிடையாது. இதனைச் சில லேகியங்களிலும் திராவகங்களிலும் சூரணங்களிலும் கூட்டுவதுண்டு; அவற்றுள் சில அநுபவ முறைகளாவன.

குன்மகுடோரி லேகியம்

வளையலுப்பு, நவச்சாரம், வெங்காரம், வெடியுப்பு இந்துப்பு, சோற்றுப்பு, சுத்திப்பூநீறு, கற்பூரம் வகைக்குப் பலம்-1 இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. அப்பால் 10-பலம் பனை வெல்லத்தில் ½-படி வெள்ளாட்டு நீர் விட்டுக் கரைத்து வடிகட்டி அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்துப் பாகுபதம் வரும்போது முன் சித்தப்படுத்திய சூரணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக் கிளறி ஆறவிட்டுச் சுரண்டி எடுத்துப் போதிய அளவு தேன், நெய் கூட்டிப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். இந்த லேகியத்தில் வேளைக்கு சுண்டக்காய்ப் பிரமாணம் அந்தி சந்தி கொடுத்து வர, வலி குன்மம், சத்திக்குன்மம், அஜீரணம், வயிற்றுப் பொருமல் முதலியவைகள் போம்.

குன்மகுடோரி சூரணம்

வளையலுப்பு, கறியுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, திப்பிலி, கிராம்பு, ஓமம், ஏலக்காய் அரிசி வகைக்குத் தோலா-1, சுத்திசெய்த நிலாவாரை தோலா-2 இவைகளை யிடித்துச் சூரணம் செய்து அதனுடன் சர்க்கரை தோலா 6-கூட்டி இரவு அன்னம் புசித்து ½-மணி நேரத்திற்குப் பின் ஒரு விராகனெடை வீதம் உட்கொள்ள அஜீரணம், வயிற்றுப்பிசம், பித்தவாயு, தேகநாற்றம், பித்தகுன்மம் முதலியவைகள் போம்.

வளையலுப்பின் விபரம் பொதுப்பாயிரத்தில் காரசார லவணம் இருபத்தைந்தின்கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

வாணகந்தகம்

(Sulphur stick)

வாணக் குழாய்க்கந்தி வாசனையைக் கண்டவுடன்
காணக் கிருமிசோறி காணுவாந்—தோணும்
பெருவியா திக்கூட்டம் பேருமத னூலின்
மருவியா ழுங்கோடியே வாழ்த்து.

குணம்:—(இ - ள்.) வாண மருந்துக்கான குமாய்க் கந்தகத்தால் ரசரத்த தாதுக்களிற் பிறந்த சிறு கிருமி, நமை, குஷ்டம் இவை போம் என்க.

செய்கை:—கிருமிநாசினி, தாதுகூணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதனை உள்ளுக்கு உபயோகப்படுத்துவது கிடையாது. வேண்டுமாயின் களிம்புகளுக்குக் கூறப்பட்டுள்ள இடங்களில் இதைச் சேர்த்துக் கொள்ளலாம். இது நெல்லிக்காய்க் கெந்தகத்தைவிட அதிகம் தாழ்ந்த குணமுடையது மன்றி நாற்றமும் அருவருப்பான சுவையும் உடையது. ஆதலால் மேல்பூசும் மருந்துகளில் கூட்டிக் கொள்ளலாம். இது பெரும்பாலும் வாணவேடிக்கைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது.

வில்லரசச் செந்தூரம்

(Mercury red Oxide)

சென்னிவலி நீரேற்றஞ் சிந்தைகெடுந் தோடசுரம்
மன்னுங் கிராணி மதிமயக்கஞ்—சன்னியோடு
சந்துவலி யோடிவிடும் தாழ்குழலே வில்லரசச்
செந்தூரத் தாலெனவே செப்பு.

குணம்:—(இ-ள்.) வில்லரசச் செந்தூரத்தால் - தலைவலி, நீர்க்கோவை, தோஷங்களையுடைய சுரங்கள், கிராணி, மயக்கம், சந்நி, கணுச்சூலை முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சரக்கு சாதாரணமாக ரசத்துடன் கெந்தகம் கூட்டி வைப்பு வைத்து விற்பனைக்கு வருவதுண்டு. இதனைப் பண்டிதர்கள் தனிச்சரக்காக மண்ணேட்டில் வைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து இஞ்சிச்சாற்றை ஒரு சாமம் சுருக்குக் கொடுத்து இறக்கி ஆறவிட்டு அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$-குன்றியெடை தேனில் அனுபானம் செய்து தினம் 2, 3-வேளையாகக் கொடுத்து வருவதுண்டு. இதனால் சீதள சம்பந்தமான சுரம், சந்நி, ஜலதோஷம் முதலியவைகள் குணமாகும். இன்னும் வாத சீதள சம்மந்தமான பல பிணிகளுக்கும் அதிகம் பயன்படும். இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டிப் பலவிதமான மருந்துகளைச் செய்வதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

வீரரசச் செந்தூரம்

வில்லரசச் செந்தூரம் பலம்-½, இலிங்கம் பலம்-1, வீரம் பலம்-½ இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து அதில் சுத்தமான குளிர்ந்த சலத்தை விட்டுச் சுப்பலால் கலக்கி ½-மணி நேரம் அசையாமல் வைத்து விடவும். கலங்கல் இல்லாமல் நன்றாய்த் தெளிந்த பின்னர்ச் சலத்தை மெதுவாகச் சரக்குகள் சேதப்படாமல் வடித்து விடவும். இப்படி ஏழுமுறை குளிர்ந்த சலம் விட்டுக் கலக்கிக் கலக்கித் தெளிவுற்ற நீரை வடித்த பின்னர் கல்வத்தை ரவியில் வைத்து மருந்து உலர்ந்த சமயம் மீண்டும் அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தச் செந்தூரத்தில் வேளைக்கு 2, 3-அரிசி யெடை தகுந்த அனுபானங் களில் கொடுக்கச் சுரம், சந்நி, விஷபேதி, காசம், வயிற்றுவலி, உடம்புவலி, அஜீரணம் முதலியவைகள் குணமாகும்.

கலாமிர்த ரசச்செந்தூரம்

ஒரு பலம் வில்லி ரசச் செந்தூரத்தைக் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்துத் துகளாக்கி அதனுடன் ஒரு விராகனெடை வெள்ளிக் காடிக்காரத்தைக் கூட்டிக் கையோயாமல் ஒரு மணி நேரம் அரைத்து மருந்தைக் கத்தி கொண்டு கீழ்மேலாகும்படி கிளறி ஒரு மணி நேரம் ஆறவிடுக. மீண்டும் ஒரு மணிநேரம் நன்றாய் அரைத்து முன் போல் கத்தி கொண்டு மருந்து கீழ்மேலாகும்படி கிளறிக் கொடுத்து ஒரு மணிநேரம் ஆறவிடுக, இப்படி ஏழுமுறை அரைத்து ஆற விட்டு எடுத்த செந்தூரத்தைச் சேதப்படாமல் சுரண்டி கல்கார்க்ஸ் சீசாவில் அரை பாகத்தில் அடங்கும்படியாகப் போட்டு வாயை அடைத்து வைத்து விடுக. இந்தச் செந்தூரம் கருஞ்சாயலாக இருக்கும்.

இந்தப் புட்டியை வாரத்திற்கு ஒருமுறை வாயடைப்பை எடுத்து உள்ளாவி வெளியே போகும்படி 2, 3-நிமிஷம் வைத்துப் பின்னர் வாயை அடைத்து மருந்து கீழ்மேலாகும்படி நன்றாய்க் குலுக்கி வைத்து விடுக. இப்படி ஒரு மாதம் சென்றபின் இரண் டாவது மாதத்தில் 10-நாளிற்கு ஒரு முறையாகவும், மூன்றாவது மாதத்தில் 15-நாளிற்கு ஒரு முறையாகவும் புட்டியின் வாயடைப்பை எடுத்து உள்ளாவி வெளிச் செல்லவும் மருந்து கீழ்மேலாக மாறலடையவும் செய்து வர முன்னிலும் அதிகமாகச் சிவப்பு

நிறமடையும், இந்தச் செந்தூரம் வருடக்கணக்காயின் உயர்தரமான நிறத்தைப் பெறும். இச் செந்தூரத்தைச் செய்தவுடன் உபயோகிக்கக் கூடாது. குறைந்தபட்சம் 6-மாதத்திற்குப் பின் கொடுக்கலாம்.

இந்தச் செந்தூரத்தில் வேண்டும்போது $\frac{1}{4}$, $\frac{1}{2}$-குன்றி யெடை தேனில் அனுபானம் செய்து தினம் 2-வேளை கொடுக்க எவ்விதசுரஞ் சந்நியாயினும் குணமாகும். ஸ்திரீகளுக்கு மாதாந்தரக் காலத்தில் வருகின்ற வயிற்று வலிக்குத் தேனில் கொடுக்க வலி நீங்குவதுடன் சூதகக் கட்டையும் வெளியாக்கும். எக்காரணத்தினாலாவது தேகத்தில் சீதளம் அதிகரித்துக் குளிர்ச்சிப் பெற்றிருப்பினும் சரி, அல்லது வீக்கமுற்றிருப்பினும் சரி, இச் செந்தூரத்தை ஒரு குன்றி எடை தேனில் அனுபானம் செய்து கொடுக்க இரண்டு மூன்று வேளைக்குள் குணமாகும்.

விஷபேதியினால் தேகம் வாழைத் தண்டைப்போலக் குளிர்ச்சி பெற்றிருக்கும்போது இச் செந்தூரத்தில் 1, $1\frac{1}{2}$-குன்றி யெடை ஒரு சந்தனக் கல்லின்மேல் வைத்து அதனுடன் $\frac{1}{8}$-வீராகனெடை அடுப்புக் கரித்தூளையும், 1-குன்றி எடை கற்பூரத்தையும் கூட்டித் தேன் விட்டு மத்தித்துச் சந்தர்ப்பப்படுமேயானால் இம் மருந்தை நாவில் தடவியாவது அல்லது மூலிப்பாலில் கலக்கி உள்ளுக்குச் செலுத்தியாவது விடுக. இத்தகைய பிரயோகத்தால் 1, $1\frac{1}{2}$-மணி நேரத்திற்குள் தேகத்தில் சூடு எழுப்பிப் பேதியை குணப்படுத்தும். ஒருகால் சீதளத்தைக் கண்டிப்பதற்கு முதல் கொடுத்த அளவில் சக்தி குன்றி இருக்குமேயாயின் மீண்டும் ஒருமுறை முன்போல் கொடுக்கவும். இந்த இரண்டு முறைக்குள் எத்தகைய கடுமையான ஸ்திதியில் இருந்தபோதிலும் குணமாவது திண்ணம்.

வீமனென்னும் பச்சைக் கற்பூரம்

(Boro - camphor Dirty)

வீமனெனுங் கர்ப்பூர மேசவெண்மை யாயிருக்குஞ்
சேம முறுங்குளிர்ச்சி தின்றக்கா—னுமருவு
நோயகலுந் தாகமறு நுண்பே தியுமாகுந்
தூய மதிமுகத்தாய் சொல்.

குணம்:—(இ - ள்.) அழுக்கு வெண்மை கலந்த மேகநிறம் உள்ளவீமன் என்னும் பச்சைக் கர்ப்பூரத்தினால், கந்தகாளி

நோயும், தாகரோகமும் போம். சரீர சௌக்கியமும் குளிர்ச்சியும் அற்ப விரேசனமும் உண்டாம் என்க.

செய்கை:—சீதளகாரி, சமனகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இது பச்சைக் கர்ப்பூரத்திலோரின மாகையால் சாதாரணமாகப் பச்சைக் கர்ப்பூரத்தின் தலியங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதேயாகும். இந்தச் சரக்கு தற்காலத்தில் சுயமாகக் கிடைப்பதில்லை.

வெங்காரம்

(Sodii Biboras)

சோறிபுடையெண் குன்மநமை சோரி யரசம்
பறிகிரணி கல்லூனம் பன்னேய்—நெறியைத்
தடங்கணங்க பங்கிநமி சர்ப்பவிடஞ் சந்நி
* யிடங்கணங்க லக்கிற்போ மெண்ண.

குணம்:—(இ-ள்.) வெங்காரத்தினுல் தவளைச்சொரி புடை, அஷ்ட குன்மம், தினவு, ரத்தமூலம், ஒழுக்குக் கிரகணி, அஸ்மரி, பங்குவாதம், தந்தநோய், நாள வழியைத் தடுக்கின்ற மூத்திர கிரிச் சரங்கள், கபாதிக்கம், புழு, பாம்பு விஷம், சந்நிபாதம் ஆகிய இவைகள் விலகும் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி, பிரசவகாரி, ருது வர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இரண்டு விராகனெடை பொரித்த வெங்காரத்தைத் தூள் செய்து ஆழாக்குச் சலத்தில் போட்டுக் கரைத்து வாய் கொப்பளித்து வரத் தொண்டை, வாய் முதலிய இடங்களிலுள்ள ரணம் ஆறும். பொரித்த வெங்காரத்தை வேளைக்கு 5, 10-குன்றி எடை இளநீரில் போட்டுக் கொடுக்க நீர்க் கட்டு குணமாகும். இதைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பதை விட இதரச் சரக்குகளுடன் கூட்டிக் கொடுப்பதே சிறந்த வழக்கம். பொரித்த வெங்காரம் குன்றி எடை-5, இலவங்கப்பட்டைச் சூர ணம் குன்றி எடை-5 ஒருமிக்கக் கலந்து சிறிது சூடான கஞ்சியில் போட்டுக் கலக்கி 1, 2-மணி நேரத்திற்கு ஒரு முறையாக மூன்று முறை கொடுப்பதற்குள் ஸ்திரீகளுக்கு நேர்ந்த கஷ்டப் பிரசவம்

* டங்கணம் - வெங்காரம்.

நீங்கி சுகப் பிரசவமாவதுடன் உதிரச் சிக்கல் நீங்கும். ஒரு விராக னெடை பொரித்த வெங்காரத்தைக் காய்ச்சி முறித்த ஒரு பலம் தேனில் போட்டுக் கலக்கி வாய், நாவு முதலிய இடங்களில் காணும் ரணங்களுக்குத் தடவிவர ஆறும். இவைகளுமல்லாமல் இந்த வெங்காரத்தை மாத்திரை, பற்பம், களிம்பு முதலியவைகளிலும் சேர்த்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைக ளாவன.

இருமல் மாத்திரை

பொரித்த எண்ணெய் வெங்காரம், மிளகு, அதிமதுரம் வகைக்குப் பலம்-½ இவைகளை இடித்துக் கல்வத்தில் போட்டு இத னுடன் மேற்றோலைச் சீவிய சோற்றுக் கற்றாழைச் சோறு பலம்-½ கூட்டி நன்றாய் மெழுகு பதத்திற்கு அரைத்துப் பட்டாணி பிர மாணமுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் 3-வேளை வாயிலிட்டு அடக்கி வைத்துக்கொண்டு அப்போதைக் கப்போது கரைந்து வரும் நீரை விழுங்கிக்கொண்டு வரக் கபத்தை எளிதில் கரைத்து இருமலைக் குணப்படுத்தும்.

இருகார பற்பம்

ஒரு பலம் வெங்காரம், ஒரு பலம் படிக்காரம் இவை யிரண்டை யும் கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் 3-மணி நேரம் அரைத்து ரவியில் வைத்துச் சுண்டி வரும் சமயம் வில்லை தட்டி அகலில் வைத்து மேல் அகல்மூடிச் சீலைசெய்து 4, 5-வறட்டியில் புடமிடப் பற்பமாகும். வேளைக்கு 1, 1½-குன்றி எடை தேன் நெய் முதலியவற்றில் அனுபானம் செய்து கொடுக்க நீரடைப்பு, பிர, மேகம், மகோதரம், கல்லடைப்பு, சதையடைப்பு முதலியவைகள் போம்.

சதுர்முக பற்பம்

வெங்காரம், படிக்காரம், வெடியுப்பு, பூநீறு வகைக்குப் பலம்-1 இவைகளைக் கல்வத்தில் போட்டு வாழைக்கிழங்கு சலம் விட்டு 2-சாமம் அரைத்து ரவியில் வைத்து நீர்சுண்டி மெழுகு பதம் வரும் போது வில்லை தட்டிக் காயவைத்து அகலில் அடக்கிச் சீலை செய்து 10-வறட்டியில் புடம்போடப் பற்பமாகும். இதை முன்போல் 1, 2-குன்றி எடை கொடுக்கக் கல்லடைப்பு, நீரடைப்பு, சதை யடைப்பு, பிரமேகம் எல்லாம் போம்.

வெங்காரக் கலவைக் களிம்பு

பொரித்த வெங்காரம், கெந்தகம், காய்ச்சுக்கட்டி வகைக்கு, விராகனெடை-1 கல்வத்தில் போட்டு இரண்டரை ரூபாய் எடை நெய் விட்டுக் களிம்பு பதமாக அரைத்து வைத்துக்கொண்டு சிரங்கு, சொறி, புண் இவைகட்குத் தடவிவர ஆறும்.

இந்த வெங்காரத்தின் விபரம் பொதுப்பாயிரத்தில் கார சார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின் கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

வெண்கலம்

(Bell Metal)

நேத்திரநோய் சோமவினை நீர்பெருக்கி ரத்தபித்தம்
வீழ்த்துசுவா சம்மந்த மேகமோ—டாழ்த்துகப
வாதவலி சூல மகோதரம்போம் பித்தமொடு
தாதுவுமாம் வெண்கலத்தாற் றுன்.

குணம்:—(இ - ள்.) வெண்கலத்தினால் விழிநோய், சோம ரோகம், வெகுமூத்திரம், உதிரபித்தம், இரைப்பு, அஜீரணம், கப வாதப் பிரமேகம், குத்தல், பெருவயிறு இவைகள் போம். சுக்கில மும் பித்தமும் விருத்தியாம் என்க.

செய்கை:—பலகாரி, பித்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை இரத்தத்திலுள்ள கிருமிகளை நாசப்படுத்துவதற்கும், வாதப் பித்தப் பிரமேகத்தைத் தணிக்கவும், குஷ்ட ரோகங்களைப் பரிகரிக்கவும் பற்பமாகச் செய்து உபயோகப் படுத்துவதுமல்லாமல் நேத்திர ரோகத்திற்கு விசேடமாகச் சேர்ப்ப துண்டு. வெண்கலத் தகட்டைக் காய்ச்சிப் பசுவின்நீரில் மூன்று முறை தோய்த்து எடுக்கச் சுத்தியாகும். இதற்குக் கெந்தகத்தை யும் தாளகத்தையும் சமனளவாகக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாய் அரைத்து இருபுறமும் நன்றாய்ப் பூசி அகலில் அடக்கிச் சீலைசெய்து புடமிட வெண்கலம் கடும் வெட்டையாகும். இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து அதனுடன் கெந்தகத்தையும் தாளகத்தையும் கூட்டிப் பழச்சாறு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலிலடக்கிச் சீலைசெய்து மூன்போல் புடமிடவும். இப்படி 5-புடமிட உயர்தரமான பற்பமாகும். ரோகத்தின்

வன்மை மென்மைக் கேற்றவாறு 1, 2-அரிசியெடை தகுந்த அனுபானங்களில் கொடுத்துவர முற்கூறப்பட்ட பிணிகள் குணமாகும்.

நேத்திர பூபதிக் குளிகை

வெண்கலம், தங்கம், வெள்ளி, தாம்பரம் இவற்றின் அரப் பொடிகள் முத்து, சங்கு, துருசு, துத்தம், தலையோடு, பீதரோகணி புங்கம் விதை ஆக இவற்றை வகைக்கு விராகனெடை-½ வீதம் பொடித்து ஒரு சுத்தமான கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச் சாற்றில் இரண்டு மூன்று நாள் வரையில் நன்றாய் அரைத்துச் சிறிதும் கரகரப்பில்லாமல் மெழுகு பதத்தில் கயிறுபோல் துண்டுத் துண்டாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்க. இதை வேண்டும்போது மூலிப்பாலிலாவது நந்தியாவட்டை பூச்சாற்றி லாவது உரைத்துக் கண்களுக்குத் தீட்டிவர நீர்காசம், பித்தகாசம், மந்தாரகாசம், படலம், பில்லம் மயிர் குத்தல், நேத்திராவாயு, புழு வெட்டு, மாலைக்கண், நீர் வடிதல் குந்தம் முதலிய ரோகங்கள் குணமாகும்.

வெள்ளி

(Argentum)

பாய்க்கூட்டங் காட்டாப் பழையசுரந் தாநவிடம்
வாய்க்கூட்டச் செய்மேக வாதழுத—னேய்க்கூட்ட
மண்டாது காணிகொளு மத்திமே கக்கசிவும்
வெண்டாது காணிமெய்யை மேல்

குணம்:—(இ-ள்.) வெள்ளி பாயலுக்குப் பலுவு காட்டாது. தர்ப்பலம் செய்கின்ற புராண சுரம், மாவிஷம், ஒருவரால் உணவை ஊட்டச் செய்கிற மேகவாதப் பிடிப்பு, வெள்ளை ஒழுக்கு முதலியவை குணமாகும்.

இதுவுமது

இரத்தங் கயம்பித்த மீளகண்ணோய் காச
முரத்தைய மட்டதன்ம முதை—வருத்தும்
விரணஞ்சி லேட்டுமநோய் மெய்ப்புளிப்புண்ணூரன்
மரணமுறும் வெள்ளியினல் வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) வெள்ளியினல்-உதிரபேதி, கூஷயம், பைத்தியம், கோழை, விழிநோய், இருமல், மார்புச்சளி, அட்டகுன்மம், வாதகோபம், கிரந்தி, நீர்க்கோவை, லாஞ்சனம், சிரங்கு, சொறி இவைகள் குணமாகும் என்க.

செய்கை:—பலகாரி, சமனகாரி, அங்காகர்ஷணாகினி.

உபயோகிக்கும் முறை:—வெள்ளியை ஈசல் இறகினும் அதிக சன்னமாகத் தகடடித்துக் கடிதங்களினிடையில் வைத்துக் கட்டுக் கட்டாகக் கடைகளில் விற்பதுண்டு. இதனை வெள்ளி ரேக்கெனக் கூறுவர். இதை லேகியங்களிலும் இளிப்புள்ள பிட்டாய் வர்க்கங் களிலும் கூட்டி உண்பதுண்டு. இது சரீரத்திற்குப் பலத்தைக் கொடுப்பது மன்றி தாது விருத்தியையும் செய்யும். சுத்தமான வெள்ளியைத் தனியாகவாவது அல்லது இதரச் சரக்குகளுடன் கூட்டியாவது பற்பம் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

வெள்ளி பற்பம்

சுத்தி செய்த ஒரு பலம் வெள்ளி சரிகையை ஒரு அகலில் வைத்து அழுத்தி உலையில் வைத்து ஊதிச் சிவந்த சமயம் சிகப்புக் காசறைக் கீரைச்சாற்றில் கொட்டவும். மறுபடியும் ஆறினபின் வடிகட்டிச் சரிகையை எடுத்து முன்போல் அகலில் அழுத்தி உலையில் வைத்து ஊதி ஷை மூலிகைச் சாற்றில் கொட்டவும். இப்படி 10, 12-முறை செய்யச் சரிகையெல்லாம் சாம்பலைப்போல ஆகும். இதைக் கல்வத்திலிட்டு ஷை மூலிகைச் சாற்றால் நான்கு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலிலிட்டுச் சீலைசெய்து 10, 15-வறட்டியில் புடமிடவும். இப்படி 5, 6-புடமிடச் சிவந்த நிறமுடைய பற்பமாகும். வேண்டும்போது வேளைக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$-குன்றி யெடை தினம் இருவேளை நெய்யில் கொடுத்து வரத் தாது விருத்தி யுண்டாகும். வெள்ளை, நீரொரிச்சல் முதலிய ரோகங்கள் குண மாகும்.

குறிப்பு:—இப்படியே சதாப்பு இலைச்சாற்றில் செய்த வெள்ளி பற்பம் கப சம்பந்தமான ரோகங்களையும், மருள் சமூலச்சாற்றில் செய்தது, வெள்ளை, வெட்டை, தாதுபலஹீனம் முதலியவற்றையும் குணப்படுத்தும்.

ரஜதபாஷாண பற்பம்

வெள்ளிச் சரிகை அல்லது வெள்ளி அரப்பொடி தோலா-1, சங்கு பாஷாணம் தோலா-1 இவை யிரண்டையும் கல்வத்தில் போட்டு முள்ளிக்கீரைச் சமூலச் சாற்றில் நான்கு சாமம் அரைத்து

வில்லைத்தட்டிக் காயவைத்து ஓட்டிலடக்கிச் சீலைசெய்து 5-வறட்டியில் புடமிடவும். மறுபடியும் உள்ளிட்ட மருந்தைக் கல்வத்தில் போட்டு முன்போல் மூலிகைச் சாறுவிட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்து அகலில் அடக்கிச் சீலைசெய்து புடமிடவும். இப்படி வெள்ளித்தளுக்கு மாறும் வரையில் 4. 5-புடமிட நல்ல பற்பமாகும் அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்கு 1, 2-அரிசிப் பிரமாணம் தினம் இருவேளை தேனில் கொடுத்துவர முகவாதம், பாரிசவாதம், சர்வாங்கவாதம், நரம்புத்தளர்ச்சி முதலியவை போம்.

வெள்ளி பற்பம்

ஒரு பலம் சுத்த வெள்ளியைச் சன்னமாக இராவிக் கல்வத்திலிட்டுப் புதியன்மூலி என்கிற புதியனு இலைச்சாறு விட்டு நான்கு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் ஒரே வில்லையாகத் தட்டி ரவியில் உலர்த்தி அகலிலடக்கிச் சீலைசெய்து 20-வறட்டியில் புடமிடவும். இப்படியே மூலிகைச் சாற்றில் 7, 8-முறை அரைத்து அரைத்துப் புடமிட்டுக் கொண்டுவர நல்ல பற்பமாகும். இந்த பற்பத்தை வேளைக்கு $\frac{1}{2}$, 1-குன்றி யெடை தினம் இருவேளை தகுந்த அனுபானங்களில் கொடுத்துவரப் பித்த கிருகிருப்பு, வாய்நீர் சுரப்பு, குமட்டல், அஜீரணம், வாதபித்த உபரியினு லுண்டான பல ரோகங்கள் நீங்கி ஆண்தன்மை மிகும்.

நேத்திராஞ்சனம்

வெள்ளிரேக், பீதரோகணி, கடுக்காய்த்தோல், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ இவைகள் வகைக்கு விராகனெடை ஒன்றுகக் கல்வத்தில் போட்டுச் செவ்விளநீர்ச் சலம் விட்டு 10, 12-நாள் அரைக்கவும். தினந்தோறும் புதிய இளநீர்ச் சலத்தையே விட்டு அரைத்து வருதல் வேண்டும் இப்படி வெள்ளியின் பளபளப்பு மாறி மைபோலான சமயம் உலர்த்தி அப்பால் உயர்ந்த தேன்விட்டுக் குழம்பு பதமாக அரைத்து வழித்து வாயகன்ற சீசாவில் பத்திரப் படுத்துக. இதைத் தினந்தோறும் ஒருவேளை கண்களுக்குத் தீட்டி வரக் கண்ணருகல், நீர்முட்டல், கண்கூச்சம், மாசுபடர்தல், பார்வை மந்தம், சதை வளர்ச்சி ஆரம்பமான கண்பூ முதலியவைகள் குணமாகும்.

வெள்ளீயம்

(Stannum)

தாகங் கரப்பான் சலமேகம் பித்தகப
மேக மொளிமங்கல் வெப்பபல—மாகிரந்தி
துள்ளியமந் தார சுவாசமுமந் தாக்கினியும்
வெள்ளீயம் போக்கும் விதி.

குணம்:—(இ - ள்.) வெள்ளீயம் இரசகூய தாகரோகம், கடு வன், சலப்பிரமேகம், பித்த கபதொந்தம், மேகமூத்திரம், தேஜசு குன்றல், சுரம், துர்ப்பலம், விரணம், மந்தார சுவாசம், கபஞ் சேர்ந்த மந்தாக்கினி இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—பலகாரி, சங்கோசனகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—வெள்வங்கத்தை அவிழ்தமாக முடிக் கும் முன்னர் சுத்தி செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும். எங்ஙனமெனில்;

தேவையான அளவு வெள்வங்கத்தைக் காண்டியிலிட்டு உருக்கி நல்லெண்ணெயில் சாய்க்கவும். இப்படி ஒவ்வொரு முறையும் உருக்கி உருக்கிப் புதிய நல்லெண்ணெயில் 7-முறை சாய்த்து எடுக்கவும். இதைப்போலவே இலுப்பை எண்ணெய், கோமூத்திரம் ஒவ்வொன்றிலும் எவ்வேழு முறை உருக்கிச் சாய்த்தெடுக்க நல்ல சுத்தியாகும். இதனைப் பற்பமாகச் செய்து உபயோகப்படுத்துவ தண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

வெள்வங்க பற்பம்

சுத்தி செய்த வெள்வங்கத்தை மடித்து மடித்து தகடடித்துப் புளியம் இலை கனத்திற்கு வரும்போது இதழ் இதழாகப் பிரித்துப் புளியம் இலைபோல் சிறு துண்டுகளாகக் கத்தரித்து வைத்துக் கொள்க. அப்பால் கருவேலம் பட்டையை இடித்துச் சுமார் 1, 1½-வீசை அளவிற்கு ஒரு கோணித் துண்டில் பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்திய வெள்வங்கத் துண்டுகளில் ஒரு பலம் அள விற்கு மேற்றாவி அதன்மேல் கருவேலம் பட்டைத் தூளைப் பரப்பிச் சுருட்டி இரண்டு மூன்று இடங்களில் கயிறுகொண்டு கட்டி மண்சீலை 5, 6-செய்து உலர்த்தி 50, 60-வறட்டியின் மத்தியில் வைத்துப் புடம் போடவும். இது நன்றாய் ஆறினபின் மேலிட்ட

வறட்டிகளை நீக்கி நடுவிலிட்ட கவசத்தைச் சோதித்துப் பார்க்க வெள்வங்கத் தகடுகள் பொரிந்திருக்கும். இவற்றைச் சேதப் படாமல் எடுத்துக் கல்வத்திலிட்டு மிருதுவாக அரைத்துச் சீலையில் அரித்துத் திப்பியை நீக்கி அடியில் இறங்கியுள்ள பற்பத்தைச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனை வேளைக்கு ½, 1-குன்றியெடை தினம் இருவேளை நெய், வெண்ணெய் இவைகளில் கொடுக்க வெள்ளை, வெட்டை, மூலம், தாது தூர்ப்பலம் முதலியவைகள் போம் இதைப்போலவே மகிழம்பட்டையில் வைத்துப் பூக்கடித்த வங்கம் சிறந்த குணத்தைக் கொடுக்கும் என்பதை அறியக்கடவர்.

வேறு முறை

பூவரச மரத்தின் இலை, பூ, பட்டை, காய் முதலியவற்றை மெழுகு வண்ணமாய் இடித்து விரல் கனமும் சாண் அகலமும் இருக்கும்படியாக சிறு வில்லைகள் செய்து வைத்துக்கொண்டு ஒன்றின்மேல் முன்முறையில் சித்தப்படுத்தியவாறு ஒரு பலம் வெள்வங்கத்தகடு துண்டுகளைப் பரப்பி அதன்மேல் மற்றொரு மூலிகை வில்லையை வைத்து அதன்மேலும் கொஞ்சம் வெள்வங்கத் துண்டுகளைப் பரப்பி வரவேண்டும். இப்படி ஒரு பலம் வங்கத் துண்டுகளனைத்தும் வில்லைகளுக் கிடையிலிருக்கும்படி செய்து அழுத்தி 5, 6-மண்சீலை வலுவாகச் செய்து 40, 50-வறட்டியின் மத்தியில் வைத்துப் புடமிடவும். புடம் ஆறினபின் கவசத்திற்குள் சோதித்துப் பார்க்க வெள்வங்கத்துண்டுகள் பொரிந்து பற்பமாக இருக்கும். இதை ஜாக்கிரதையாகப் பொருக்கிக் கல்வத்திலிட்டு மிருதுவாக அரைத்துச் சீலையில் அரித்துத் திப்பியைத் தள்ளி அடியிலுள்ள பற்பத்தைப் பத்திரப்படுத்துக. இந்த பற்பத்தை வேளைக்கு ½, 1-குன்றியெடை நெய், வெண்ணெய் முதலிய அனுபானங்களில் தினம் இருவேளையாகச் சில தினம் கொடுத்துவர வெள்ளை, அரையாப்பு, கொருக்கு, கை கால் பிடிப்பு, மூலம், பவுத்திரம் முதலியவைகள் குணமாகும்.

வெள்ளைப் பாஷாணம்

(Arsenious Acid)

வெள்ளைப்பா டாணம் விடங்கடிதீ நும்பூசக்
கொள்ளைச் சுரந்தோடங் கோரசந்நி—தொள்ளையுறு
நாசிப்புண் வாய்ப்புண் ணைகிரந்தி போழண்ண
வாசிக்குங் கும்பழலை யாய்.

குணம்:—(இ - ள்.) வெள்ளைப் பாஷாணத்தை நீர்விட்டு அரைத்துக் கடிவாயில் பூசச் சர்ப்ப விஷம் இறங்கும். கிரமமாக உண்ணில் கபசுரம், திரிதோஷ சந்நிபாதம், துஷ்ட பீநசம், வாய்ப் புண், சிழ்ப்புண் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—விஷ நாசகாரி, விரணகாரி, சுரஹரகாரி, காம விர்த்தினி, முறை வியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—வெள்ளைப் பாஷாணம் என்பது சீமைச் சுண்ணும்பைப் போலிருக்கும். சலம் பட்டால் உள்ளுக்கு இழுத்துக் கொள்ளும். நெருப்பிலிட்டால் புகைந்து போகும். இது தற்காலம் கிடைப்பது அரிது. சங்கு பாஷாணம் வெண்மை நிறத்துடன் சங்குபோல் பளபளப்பு பெற்றிருக்கும். நெருப்பி லிடப் புகையும். உடைத்து பார்க்க உள்ளே கண்ணுடிபோல் அதா வது படிகாரம்போல் நீரிருக்கும். இதை அவிழ்தமாக முடிக்கும் முன் சுத்தி செய்ய வேண்டும். எங்ஙனமெனில்:—

3-படி சுத்த ஜலத்தில் 15-பலம் அப்பளகாரத்தையும், ½-படி கற்சுண்ணும்பையும் கரைத்து வடிகட்டி ஒரு மட்கடத்தில் விட்டு வாய்க்குச் சீலைகட்டி அதன் நடுவில் ஒரு பலம் பாஷாணக் கட்டியை வைத்து அதன் வாய்க்குப் பொருத்தமான மற்றோர் சட்டியைக் கவிழ்த்து மேற்பாகத்தில் சிறு துளையிட்டுப் பொருத்து வாய்க்கு மண்சீலை செய்து அடுப்பில் வைத்து 2, 3-மணிநேரம் எரிக்கவும். அப்போது உள்ளிருக்கும் சலத்தின் ஆவி மேல் சட்டியிலுள்ள துவாரம் வழியாக வெளியாகும். அந்த ஆவி தன்மேல் தாக்கா வண்ணம் தூரமிருந்து எரிப்பது நலம். பிறகு எரிப்பதை நீக்கி ஆறவிட்டு மேல் சட்டியை விலக்கிப் பார்க்க சங்கு பாஷாணம் வெளுத்துச் சீமை சுண்ணும்புபோலிருக்கும். உட்புறமும் நீர் இராது. எடை சிறிது குறையும். இதனையே இவ்வித பாகங்களில் சேர்க்கத் தக்கது.

பாஷாணக் கட்டு

ஐந்து பலம் கருவங்கத்தை ஒரு இரும்புக் கடாயில் போட்டு அடுப்பிலேற்றி உருகின சமயம் கொஞ்சங் கொஞ்சமாக 5-பலம் வெடியுப்புப் பொடியைப் போட்டு வெள்ளெருக்கம் கட்டையை யாவது அல்லது கரண்டியைக் கொண்டாவது தேய்த்து வங்கச் சத்து இல்லாமல் பற்பமாகச் செய்ய வேண்டும். பிறகு இதைக் கல்வத்தில் போட்டு உத்தாமணி யிலைச்சாறு விட்டு 4-சாமம்

அரைத்து இரண்டு பலம் சுத்தி செய்த பாஷாணக் கட்டிக்குச் சம கன்மாகக் கவசம் செய்து நிழலில் உலர்த்தவும். ஒரு சமயம் வெடிப்புக் கொடுத்தால் மை வங்க பற்பத்தைக் குழைத்து வெடிப்புக்குப் பூசி உலரவிடவும். மறுநாள் இதன்மேல் 5, 6-சுண்ணும்புச் சீலை செய்து உலர்த்தி வைத்துக்கொள்க. அப்பால் ஒரு மண் தோண்டியில் 1-படி வெந்து நீறிய கற்சுண்ணும்புப் பொடியைப் போட்டு நடுவில் முன் சித்தப்படுத்திய கட்டியை வைத்து அதன் மேல் ஒரு படி கற்சுண்ணும்புப் பொடியைப் போட்டு அழுத்தி அடுப்பிலேற்றி 3-சாமம் முத்தீயாக எரித்து எடுக்கவும். இப்படி இருமுறை கவசமிட்டு எரித்து எடுக்க நல்ல கட்டு ஆகும். தேன், நெய், முலைப்பால் இவற்றி லேதேனும் ஒன்றில் மூன்றுமுறை ஒரு தாம்பிர காசு வட்டம் உரைத்துக் கொடுக்க எத்தகைய சுரம், சந்நி, கபமாயினும் நீங்கும். இந்தச் சிகிச்சை 2, 3-வேளைக்கு மேல் செய்ய வேண்டியது அவசியமிராது.

பஞ்ச பாஷாண செந்தூரம்

சங்கு பாஷாணம், லிங்கம், மனோசிலை, காந்தம், அரிதாரம், கந்தகம், ரசம், பூரம், வீரம் இவைகள் வகைக்குப் பலம்-½ இவற்றுள் முதலில் ரசத்தையும், கந்தகத்தையும் கல்வத்தில் போட்டு அரைத்துக் கறுப்பு நிறமாக மாறுதலடைந்தபின் மற்றச் சரக்குகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கூட்டி அரைத்து எல்லாம் சரியாக உறவான பதத்தில் குப்பைமேனி இலைச்சாறு, கம்மாறு வெற்றிலைச்சாறு, செம்பருத்தி யிலைச்சாறு, வெள்ளறுகு இலைச்சாறு, துளசிச்சாறு, வழுதுளைச்சாறு அல்லது கண்டங்கத்திரி யிலைச்சாறு ஆக ஒவ்வொன்றிலும் நான்கு சாமம் அரைத்து 5, 6 வில்லைகளாகத் தட்டிக் காயவைத்து எடுத்துக்கொள்க.

அப்பால் ஒரு வாயகன்ற சட்டியில் வெற்றிலையைப் பரப்பி அதன்மேல் முன்சித்தப்படுத்திய வில்லைகளைப் பரப்பி, மற்றொரு பொருத்தமான சட்டியின் உட்புறத்தில் குப்பைமேனிச் சாறுவது அல்லது கம்மாறு வெற்றிலைச் சாறுவது பூசிக் கவிழ்த்து வாய்ப் பொருத்தத்திற்கு சந்தில்லாமல் மண்பூசி ஏழு மண்சீலை செய்து காயவைத்து அடுப்பிலேற்றி முத்தீயாக 4-சாமம் எரித்து எடுக்கச் செந்தூரமாகும். இதுதான் நூலில் கூறப்பட்ட முறையாகும். அனுபவத்தில் அப்படியில்லை எரித்த சட்டியின் சீலையை நீக்கிப் பார்க்க மேல் சட்டியில் பதங்கம் ஏறி இருக்கும். இதைச் சேதப்

படாமல் சுரண்டிக் கல்வத்தில் போட்டு அடிச் சட்டியிலுள்ள வில்லை களைக் கூட்டிக் குப்பைமேனி இலைச்சாறு கொஞ்சங் கொஞ்சமாக விட்டு 4-சாமம் அரைத்து முன்போல் 5, 6-வில்லைகளாகத் தட்டி உலர்த்தி முன்போல் அடிச் சட்டியில் வெற்றிலையை பரப்பி அதன் மேல் வில்லைகளையிட்டு மேல்சட்டி மூடிச் சீலைசெய்து முன்போல் முத்தீயாக 4-சாமம் எரிக்கவும் இப்படியே 5, 6-முறை அப்போதைக் கப்போது மேல் ஏறும் பதங்கத்தை அடியிலிருக்கும் வில்லையுடன் கூட்டி அரைத்து எரித்துக் கொண்டுவர மேலே பதங்கம் ஏறாமல் குங்குமம்போல் சிவந்து இருக்கும். இதை அரைத்துப் பத்திரப் படுத்துக. மொத்த செந்தூரத்தை எடைபோட்டுப் பார்க்க மூன்றில் இரண்டு பாகம் சுத்தமாகத் தேறும். வேளைக்கு 2-அரிசிபிரமாணம் தினம் இருவேளை 5-நாள் தகுந்த அனுபானங்களில் கொடுத்துவரச் சூலை, சந்நி, மேகம், வெண்குட்டம், சுரம், வாதப்பிணி, கிராணி, குன்மம், பிளவை, கண்டமாலை, அண்டவாதம், பவுத்திரம், சுவாச காசம், கிரந்தி, புற்று, குட்டம், கரப்பான், சொறிகரப்பான், கஜசர்மரோகம், புழுவெட்டு முதலிய பல ரோகங்கள் குணமாகும்.

பாஷாண மாத்திரை

ஒரு பலம் சுத்தி செய்த சங்கு பாஷாணத்தைக் கல்வத்தி லிட்டுப் பிரமதண்டு இலைச்சாறு விட்டு 4, 6-சாமம் அரைத்துச் சிறு வில்லைகளாகத் தட்டி உலரவைத்து எடுத்துக்கொள்க. வாயகன்றதாகவும் குவிந்ததாகவும் உள்ள இரண்டு சட்டிகளுக்கு உட்புறமும் வெளிப்புறமும் தழும்ப பிரமதண்டு இலைச்சாற்றைப் பூசிக் காயவைத்து ஒன்றில் முன்சித்தப்படுத்திய வில்லைகளைப் பரப்பி மற்றோர் சட்டியைக் கவிழ்த்துப் பொருத்து வாயிக்கு மண்சீலை செய்து காயவைத்து அடுப்பிலேற்றி முத்தீயாக 3-சாமம் எரித்து ஆறவிட்டு எடுக்க மேலே பதங்கம் ஏறி இருக்கும். இதைச் சுரண் டிப் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்த பதங்கம் ஒரு எடைக்கு 5-எடை சாம்பிராணிப்பூ பதங்கம் கூட்டி அன்னக்கொதி நீர் விட்டு நன்கு அரைத்துப் பெருங்கடுகு அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்துக. இந்த மாத்திரையை வேளைக்கு ஒன்றுகத் தகுந்த அனுபானத்தில் கொடுக்க 1, 2-வேளைக் குள் எத்தகைய சுரமாயினும் குணமாகும். இன்னுமிதை 3-வேளைக்கு மேல் கொடுக்க வேண்டிய அவசியம் உண்டாகாது. இதைப் பாலேட் டில் தினம் 1-வேளை 3-நாள் கொடுக்கத் தாது விருத்தி யடையும்.

வைடூரியம்

(Vaiduriam)

சீதவா தத்தோடுசி லேஷ்மம் புளியேப்பங்
காதது லைப்பிணிக னத்தகுன்ம—மோதுபித்த
மென்றுரைக்கு நோய்களறு மெப்போதுந் தோடமிலை
நன்றுவை டூரியத்தி னுல்.

குணம்:— (இ - ள்.) வைடூரியத்தினுல் -சிலேஷ்மவாததோஷம், கபம், புளியேப்பம், வருத்துகின்ற கீல்பிடிப்பு, வாதகுன்மம், பயித்தியம், அபத்திய முதலிய சப்த தோஷங்கள் ஆகிய இவை நிவர்த்தியாகும் என்க.

செய்கை:—கபஹரகாரி, ஜடராக்கினிவர்த்தனி.

உபயோகிக்கும் முறை:—வைடூரியத்தைத் தங்க மோதிரத்தில் அமைத்து விரல்களில் அணிந்துகொள்ளத் தெய்வ கடாக்ஷமும் உலக வசியமும் உண்டாகும். இது பார்வைக்குக் கறுப்புக் கலந்த வெண்மை நிறமும் பிரகாசமும் எடையில் ஊட்டமும் உட்புறத்தில் வெண்மைநிறமான மேகம் போன்ற சாயலும் பெற்றுள்ளது இதுவே சிறந்த வைடூரியம். இதனைப் பற்பம் செய்வ தெங்ஙன மெனில்:—முதலில் சிறு துண்டுகளாக நறுக்கிக் குதிரையின் நீரிலாவது அல்லது சாம்பற் பூசிணிக்காய்ச் சாற்றிலாவது 3-நாள் ஊறப்போட்டு எடுக்கச் சுத்தியாகும். இதனை இரும்பு உரலில் போட்டு இடித்துத் தூளாக்கிக் கல்வத்தில் போட்டு நீர் மேல் நெருப்பு என்றும் மூலிகையிலைச் சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்துச் சிறு வில்லைகளாகத் தட்டி உலர்த்தி ஒரு வஜ்ஜிர மூசையில் அடைத்து வாய்க்குத் தகுந்த ஓடு மூடிச் சீலைசெய்து கெஜபுட மிட்டெடுக்கப் பற்பமாகும். ஒரு சமயம் போதுமான வெளுப்பு நிறமேற்படாமலிருப்பின் மீண்டும் மேற்படி மூலிகைச் சாற்றுல் நான்கு சாமம் அரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து உலர்த்தி முன்போல் மூசையில் அடக்கிப் புடமிட நல்ல பற்பமாகும். இதனை வேளைக்கு ¼, ½-அரிசிப் பிரமாணம் தகுந்த அனுபானங்களில் கொடுக்கச் செய்யுளில் கூறப்பட்ட ரோகங்கள் எல்லாம் குணமாகும்.

தாது வர்க்கம்

முற்றியது.

முருகன் துணை

பதார்த்த குண விளக்கம்

ஜீவ வர்க்கம்

பொதுப்பாயிரம்

இவ்வுலக சிருட்டியில் மனிதர்களுக்கு ஆகாரத்தின் நிமித்தம் பயன்படும்படியாகச் சிருட்டிக்கப்பெற்ற ஜீவ ஜெந்துக்கள் பலவுண்டு அவற்றை ஆன்றோர்கள் முக்கியமாக ஜலப் பிராணி என்றும் நிலப் பிராணி என்றும் இருவகைப்படுத்தி யிருக்கின்றனர். இவற்றுள் பொதுவாக ஜலப் பிராணியின் இறைச்சியானது விருப்பத்திற்கு இசைந்ததாகவும் மிருதுவாகவும் இனிப்புக் கலந்த சுவையுடையதாகவும் இருக்கும் இது பசிதீபனத்தையும் கொழுமையையும் கொடுப்பதுடன் கபத்தையும், வாயுவையும் கண்டிக்கும். சாதாரணமாய்ச் சதுப்பு நிலத்திலும் ஜலத்திலும் சஞ்சரிக்கின்ற இந்த ஜலப் பிராணியை நான்கு இனமாகக்கூறலாம். எங்ஙனமெனில்:—

1. சீதப்பிராணி:—என்று சொல்லப்பட்டது சதுப்பு நிலத்தில் மேயும்படியான எருமை, நீர்யானை, கவரிமான் முதலியவற்றைக் குறிப்பிடும். இவற்றின் இறைச்சியை யுண்ண வாத பித்த உபரி சாந்தப்படும். ஆனல் கபத்தை விருத்தி செய்யும் சிறுநீரைப் பெருகச் செய்யும்.

2. புனல்பறவை:—என்று சொல்லப்பட்டது ஜலத்தில் சஞ்சரிக்கும்படியான வாத்து, கொக்கு, நாரை, அன்னப்பக்ஷி முதலியவற்றைக் குறிப்பிடும். இவற்றின் இறைச்சியை யுண்ண வாத கபத்தையுண்டாக்கும். பித்தத்தைக் கண்டிக்கும். தேகத்திற்குப் பலத்தையும், கொழுமையையும் கொடுப்பதுடன் தேகத்தைக் குளிரச் செய்யும்.

3. **மறைபிராணி:**—என்று சொல்லப்பட்டது நத்தை, கிளிஞ் சல், சங்கு, ஊமச்சி முதலியவற்றைப்போல் ஓடு மூடிக்குள் மறைந் திருப்பதையும், ஆமை, முதலை முதலியவற்றைப்போல் ஓடு மூடிக் குள்ளிருந்து கால்சித்தல் உடையதையும் குறிப்பிடும்.

இவற்றின் இறைச்சியை யுண்ண வாதத்தையும் பித்தத்தையும் கண்டிக்கும். கபத்தை விருத்தி செய்யும். தேகத்திற்குக் கொழுமை யையும் விந்துப் பெருக்கையும் உண்டாக்கும்

4. **மீன்:**—என்று சொல்லப்பட்டது குட்டை, குளம், ஏரி. ஆறு, சமுத்திரம் முதலியவற்றில் வாசம் செய்வதைக் குறிப்பிடும், இதன் இறைச்சியை யுண்ணச் சீரணத்திற்குப் பின் சிறிது உஷ்ணத்தை யுண்டாக்கும் வாயுவைக் கண்டிக்கும். ஆனால் பித்த கபத்தை விருத்தி செய்வதுடன் தேகத்தைக் கொழுமை பெற வளர்க்கும்.

இதற்கு மேல் நிலப்பிராணியைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது எட்டு இனமாகக் கூறியிருக்கின்றனர். எங்ஙனமெனில்:—

1. **வனப்பிராணி:**—என்று சொல்லப்பட்டது மான், கிளை மான் முதலியவற்றைப் போன்றது. இவற்றின் இறைச்சியை யுண்ண இனிப்போடு கூடிய துவர்ப்புச் சுவையைக் கொண்டிருக்கும். இது தீபனத்தை யுண்டாக்கும். இன்னும் முத்தோஷத்தைக் கண்டிப்ப துடன் மலச் சிக்கலை யுண்டாக்கும். நல்ல பலத்தைக் கொடுக்கும்.

2. **பாதாளப்பிராணி:**—என்று சொல்லப்பட்டது பாம்பு, உடும்பு, மூள்ளம்பன்றி, வறப்பு எலி முதலியவற்றைக் குறிப்பிடும். இவற்றின் இறைச்சியை யுண்ண இனிப்புச் சுவையைப் பெற் றிருக்கும். சூட்டை உண்டாக்கி வாயுவைக் கண்டிக்கும். இது மல சலத்தைக் கட்டும். பித்தத்தை உபரி செய்யும். பலத்தைக் கொடுக்கும்.

3. **குகைப்பிராணி:**—என்று சொல்லப்பட்டது புலி, சிங்கம், முதலியவற்றைக் குறிப்பிடும். இதனிறைச்சியை யுண்ண எளிதில் சீரணமாகாது. கண் வியாதிகளுக்கு அதிகம் சிறந்தது. தேகத் திடத்தைக் கொடுக்கும். வாதத்தைக் கண்டிக்கும்.

4. **மஞ்சகப்பிராணி:**—என்று சொல்லப்பட்டது குரங்கு அணில், மரநாய் முதலியவற்றைக் குறிப்பிடும். இதனிறைச்சியை யுண்ணச் சிறுநீர் பெருகி மலத்தைக் கழிக்கும். மூலத்துக்கும்

சுவாசகாச ரோகத்துக்கும் பத்தியக் கறியாகும். இது காமத்தை விருத்தி செய்து கண்களுக்கு நல்ல ஒளியைக் கொடுக்கும்.

5. **சீத்தல்பிராணி:**—என்று சொல்லப்பட்டது கால்களால் தேய்த்துத் தேய்த்துத் தள்ளி ஆகாரத்தைப் பொறுக்கிச் சாப்பிடும், படியான கோழி, மயில், காடை, கௌதாரி முதலியவற்றைக் குறிப்பிடும். இதனிறைச்சியை யுண்ண இனிப்போடு துவர்ப்புக் கலந்த சுவையுடையதா யிருக்கும். இது எளிதில் சீரணமாவதுடன் திரிதோடத்தைக் கண்டித்துப் பலத்தைக் கொடுக்கும். தேக வெப்பத்தைத் தணிக்கும்.

6. **வலுழக்குப்பிராணி:**—என்று சொல்லப்பட்டது புறு, கருங்குருவி, குக்கிரபக்ஷி முதலியவற்றைக் குறிப்பிடும் இவற்றின் இறைச்சியை யுண்ணப் பித்த கபத்தைக் கண்டிப்பதுடன் வாயுவை உபரி செய்யும். இதன் குணங்கள் முற்றிலும் சீத்தல் பிராணி இறைச்சியின் குணத்தை ஒத்திருக்கும்.

7. **பாயும்பக்ஷி:**—என்று சொல்லப்பட்டது கழுகு, இராஜாளி, கருடன் முதலியவற்றைக் குறிப்பிடும் இவற்றின் இறைச்சியை யுண்ணத் தேகம் அதிக சூடாகும். பித்தத்தை உபரி செய்யும், சொறி, சிரங்கு, பயித்தியம், தூர்ப்பலம் முதலியவற்றை உண்டாக்கும்.

8. **மஹிஷப்பிராணி:**—என்று சொல்லப்பட்டது மாடு, வெள்ளாடு, குதிரை, செம்மறியாடு முதலியவற்றைக் குறிப்பிடும் இவற்றின் இறைச்சியை யுண்ண இனிப்புச் சுவை பெற்றிருக்கும். இது வாயுவைக் கண்டிப்பதுடன் கப பித்தத்தை அதிகப்படுத்தும்.

இவ்விதமாக ஜீவ வர்க்கங்களின் இறைச்சிக் குணத்தைப் பொது விதியாகக் கூறப்பட்டிருப்பினும் தனித்தனியாக ஆராயும் போது மேற்கொண்டிருக்கும் விசேஷ குணங்களை இந்நூலில் இனிது விளக்கப்படும்.

நூல்

அண்டங் காக்கை

(Black Crow)

பித்தவேட்டை சோபையறும் பேதித் தெழந்துடலி
லொத்தபெரும் பாண்டுவகை யோடுங்கா—ணித்தியமோர்
கண்டஞ்செய் காமிலம்போங் காக்கைக்கு ளோர்பிரிவா
மண்டங்காக் கைக்கறியா லாய்.

குணம்:—(இ-ள்.) காக்கையில் ஒரு பிரிவான அண்டங் காக்கைக் கறியால் பித்தமேகம், வீக்கம், பாண்டு, காமாலை இவை போம்.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ணப் பித்தம் பாண்டு, சோபை, காமாலை முதலிய ரோகங்கள் குணமாகும். இன்னும் இதன் மாமிசத்தைத் துண்டு துண்டாக அரிந்து நல்லெண்ணெயில் போட்டு மிதக்கும் வரையில் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு ரோமங்கள் உதிர்ந்த விடத்தில் தடவப் புதிதாக முளைக்கும். இதன் நாவை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு சிட்டிகை சலத்தில் போட்டு உள்ளுக்குக் கொடுக்க எத்தகைய கொடிய தாகமும் அதனு ஷ்ணமும் நாவறட்சியும் நீங்கும். இதன் குண்டிக்காயை உலர்த்திப் பொடி செய்து முன்போல ஒரு சிட்டிகை சலத்தில் போட்டுக் கொடுக்க எவ்வளவு தூரம் வழிப்பிரயாணம் செய்தாலும் தாக உணர்ச்சியே ஏற்படாது. காக்கையினுடைய பித்த நீருடன் சாவல் பித்த நீரையும் கூட்டிக் கண்களுக்கு மை தீட்டப் பார்வை அதிகப்படும். இன்னும் வெளுத்து வரும் உரோமங்களுக்குத் தடவிவரக் கறுப்பு நிறமாக மாறும்.

அம்பர் (மீன்)

(Amber Grise)

அளகழள வாரமிர்தே யாண்மையையுண் டாக்கும்
பளபளென மேய்யையுரப் பாக்கும்—குளகுளத்த
புண்ணுற்று மம்பர் பொரிகரப்ப கீனப்போக்கும்
விண்ணுர்க்கும் வாசனையாம் விள்.

குணம்:—(இ - ள்.) பரிமளமுள்ள அம்பர் சுக்கில விருத்தியையும், தேஜசையும், பலத்தையும் தரும். அளி விரணத்தையும், கரப்பானையும் நீக்கும் என்க.

செய்கை:—காம விர்த்தினி, உற்சாககாரி, அங்காகர்ஷ்ண நாசினி.

உபயோகிக்கும் முறை:—அம்பரும் மணலும் சமனெடையாகச் சேர்த்து எரித்துத் தைலத்தை வடித்து 3-துளி வீதம் அனுபானத்திலிட 5-விதமான வலிகள் தீரும். தவிர இதனை வேளைக்கு ¼-அல்லது ½-குன்றி எடை தேனில் தினம் 2-வேளை 3-நாள் கொடுக்கக் குன்மவலி, தேகவலி, கணுச்சூலை இவைகள் நீங்குவதுடன் தாதுவிருத்தி யுண்டாகும். இதில் சிறிது கரி நெருப்பனலில் போட்டுத் தூபமிட இருதயத்திற்கு உற்சாகத்தையும் பலத்தையும் தரும். மற்றும் வெளிக் காற்றிலுள்ள குற்றங்களை நீக்கும். இதை நல்லெண்ணெயில் போட்டுக் கரைத்துச் சிறிது நெருப்பனலில் வெதுப்பி வடிகட்டி இரண்டு துளி மூக்கில்விடக் கபாலத்தைப் பற்றிய சந்நி சயித்தியம் தீரும். இதை விரணம், கரப்பான் இவைகளுக்குப் பூச ஆறும், இத்தகைய சிகிச்சைகளுமன்றி இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டி உபயோகிக்கும் சில முறைகளாவன:—

அம்பர் எண்ணெய்

இரண்டு பலம் நல்லெண்ணெயை ஒரு அகலக் காண்டியிலிட்டு அதனில் அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, ஆற்றுமணல் வகைக்கு விராகனெடை ½-யாகப் போட்டுக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு வேளைக்கு 5-துளி வீதம் சர்க்கரையில் கலந்து கொடுத்து வர நரம்புகளின் இசிவு, பாரிசவாதம், முகவாதம் முதலியவைகள் தீரும். ஆண்குறியின் தளர்ச்சிக்குத் தடவச் சோர்வு நீங்கும்.

அம்பர் மாத்திரை

அம்பர், கஸ்தூரி, ஓட்டை கோரோசனை, நீர்நாய், சவ்வாது, அபினி, பூனைக்கண் குங்கிலியம் வகைக்கு விராகனெடை-¼ வீதம் கல்வத்தில் போட்டுத் தேனைத் துளித்துளியாக விட்டு மெழுகு பதமாக அரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து வாசனை போகாமல் கல்கார்க்கிட்ட சீசாவில் போட்டுப் பத்திரப் படுத்துக. வேண்டும்போது இம் மாத்திரையில் ஒன்றை இரவு

7-மணிக்கு வாயிலிட்டு விழுங்கி வீசம்படி காய்ச்சிய பசுவின் பாலில் கற்கண்டுத்தூள் கூட்டி உட்கொள்ளவும். இரவு போஜனத்தில் புளி சேர்க்காமல் சிறிது சாப்பிட்டு பின்னர் மிட்டாய், இனிப்பு பழம் முதலியவற்றைத் தேவையான அளவு சாப்பிட்டு ஸ்திரி சங்க மம் செய்ய அதிக இன்பத்தை யுண்டாக்கிப் பெண்களை உற்சாகப் படுத்தும். இதனால் தேகம் கெடாது. ஆயாசம் இளைப்பு முதலிய வற்றை யுண்டாக்காது. இதன் விபரத்தை பொதுப்பாயிரத்தில் காரசார லவணம் இருபத்தைந்தின்கீழ் காண்க. இது கடலினில் கிடைக்கும் பொருள் ஆதலால் இலவணத்தில் சேர்த்துள்ளார்.

அயிரை மீன்

(Ayirai Meen)

உயிரை வளர்க்கு முடற்பிணியை நீக்கு
மயிரைவளர்க் கும்மநசி மாற்றும்—வயிரச்
செயிரையுறச் சற்குணநற் றெள்ளமிர்தே நாளு
மயிரை யெனுமீ னது.

குணம்:—(இ - ள்.) அயிரை மீன் உயிருக்கு ஆதாரமாகிய சரீரத்தையும் ரோமத்தையும் வளர்க்கும். தேக சாட்டியத்தையும் அருசியையும் நீக்கும் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ணத் தேகத்தைப் போஷிக்கும். இச் செய்யுளின்கண் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும்.

அரக்கு

(Coccus Lacca)

தட்ட மசிர்க்குபித்தங் குன்மமிரைப் பென்புருக்கி
பட்டிடுபுண் ணுகச்சூர் பங்கநோய்—தோட்டோ
ரரக்கரக்குஞ் சந்நிசுர மையமிவைக் கெல்லா
மரக்கரக்கு நூலை யறி.

குணம்:—(இ - ள்.) அரக்கு, குறைநோய், அசிர்க்கரம், சிலேஷ்ம பயித்தியம், வயிற்று நோவு, சுவாசம், அஸ்தி சிராவம், சத்தியோவிரணம், இருதாஷிருதவாதம், முடம், சந்திக சந்நிபாதம், கபாதிக்கம் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, உற்சாககாரி:—

உபயோகிக்கும் முறை:—இலக்சதரு என்னும் மரத்தின் இலைகளில் இலக்கென்னும் சிறு பூச்சிகள் மழை பனிக்காலங்களில் குடியிருக்கும் பொருட்டுத் தன் உடலின் பேரிலுண்டாகும் ஒரு விதமான சிவப்பு நிறம் பொருந்திய தூளைக்கொண்டு இலைகளில் கூடுபோலமைத்துக் கொள்வதுண்டு. இத்தகைய அரக்குடன் கூடிய குச்சிகள் கடைகளில் கிடைக்கும். இதிலிருந்து தட்டி எடுத்த சுயமான அரக்கைச் சுத்திசெய்து நன்றாய் அரைத்துப் பொடிசெய்து குப்பியில் வைத்துக்கொண்டு வேளைக்கு 2½, 5 குன்றியெடை காடி சர்ப்பத்துடன் கலக்கிக் கொடுத்துக் கொண்டுவர 40-நாளில் மலையைப் போலுள்ள சரீரம் தும்பைப்போல் இளைக்கும் என்று கூறுவதுண்டு. அதன் அபிப்பிராயம் நாளுக்கு நாள் சரீரம் பலங் குன்றுமல் சிறுத்துவிடு மென்பதாம். சிலேத்து மாதிக்கத்தால் பெருத்த சரீரத்தைக் குறைப்பதற்கு இதனைவிடச் சிறந்த பொருள் இல்லை யென்றே கூறலாம். இன்னும் இந்த சூரணத்தை ரத்தபித்தம், பெரும்பாடு, இரத்தமூலம், வீக்கம், காமாலை, பிசாசு இரக முதலிய பாதை, அபஸ்மாரம், நாள்பட்ட சுரம், நாள்பட்ட பேதி, சீதள இருமல் முதலியவற்றிற்கு நெய், தேன், சர்க்கரை முதலிய அனுபானங்களில் கொடுத்துவரப் பெரும் நன்மையைத் தரும். இதனை முதன்மையாகக் கொண்டு செய்யும் சில முறைகளாவன:—

கொம்பரக்குச் சூரணம்

சுத்தமான கொம்பரக்கை உருக்கி ஒரு கட்டியாக எடுத்துக் கொண்டு ஒரு வாயகன்ற மட்பாண்டத்தில் கொதிக்கின்ற சலத்தை விட்டு அதற்கு மேலே விளக்கெண்ணெய் தீபத்தில் மேற்படி கொம்பரக்குக் கட்டியைக் காட்டி உருக்கி யுருக்கி அடிச்சட்டியிலுள்ள சலத்தில் விழும்படியாகக் கவனித்தல் வேண்டும். அப்படி விழுந்த அரக்குத் துண்டுகளை மீண்டும் உருக்கி ஒரு கட்டியாக எடுத்துக் கொண்டு மூன்போல் எரிகின்ற சுடரில் உருக்கி யுருக்கிப் புதிதாகக் கொதிக்கும் வேறு சலத்தில் விழும்படிச் செய்க. இப்படி மூன்று முறை செய்ய நல்ல சுத்தியாகும்.

இந்தச் சுத்தமான கொம்பரக்கில் பலம்-4, இரேவல் சின்னி, காசினி விதை பருப்பு, முலாம்பழத்தின் விதைப்பருப்பு, வெள்ளரிப் பழத்தின் விதைப்பருப்பு, கக்கரிக்காய் விதை, மஞ்சிஷ்டி,

சோம்பு, மணித்தக்காளி வற்றல், ஓமம், சடாமாஞ்சில் வகைக்குப் பலம்-2, காய்ச்சுக்கட்டி பலம்-1 இவைகளை நன்றாய் இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு விராகனெடை வீதம் வெள்ளரிக்காய்ச் சாறு, வெள்ளரிப்பழம் விதையை அரைத்துப் பிழிந்தெடுத்தப் பால், காசினி சர்பத் முதலியவற்றிலேதேனும் ஒன்றில் அனுபானம் செய்து கொடுக்க எல்லாவிதமான பாண்டு ரோகங்களும் அவைகளின் சம்பந்தமாக ஏற்பட்ட பற்பல ரோகங்களும் நீங்கும். இதைக் கொடுக்குங் காலத்தில் இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

அரக்குத் தைலம்

எட்டுப் பலம் கொம்பரக்குத் தூளை ஒரு சீலையில் தளர்ச்சியாக முடிந்து வைத்துக் கொள்க. அப்பால் தைலம் காய்ச்சும்படியான ஒரு பழகின மட்பாண்டத்தில் முன் சித்தப்படுத்தி வைத்துள்ள கொம்பரக்கை 3, 4-விரற்கடைக்கு மேலிருக்கும்படியாகத் தோலாந்தர விதிப்படி கட்டித் தொங்கவிட்டு 8-படி சுத்த சலம் விட்டு அடுப்பிலேற்றிச் சிற்றமுட்டி விறகாலாவது அல்லது உஷ்ண வீரிய முள்ள வேறு எந்த விறகாலாவது எரித்து ஒருபடி யளவிற்குச் சுண்டக் காய்ச்சி, ஆறவிட்டு முடிச்சியைப் பிசைந்து கியாழத்தில் சத்திறங்கும்படி வாங்கிக்கொண்டு மேற்படி துணியிலுள்ள அரக்கைத் தள்ளிவிடவும் அதன் பிறகு இந்தக் கியாழத்தை அடுப்பிலேற்றி அதில் நல்லெண்ணெய், பசுவின்பால் வகைக்குப் படி-1, புளித்த அன்னக்காடி, தயிர் முடிச்சுகட்டி வடியவிட்டு எடுத்த தெளிவுநீர் வகைக்குப் படி-¼ விட்டுச் சிறு தீயாக எரிக்குந் தருவாயில் சந்தனம், அகில்கட்டை, சாதி கோஷ்டம், இலவங்கப் பத்திரி, பச்சிலை, அதிமதுரம், சடாமாஞ்சில், மிளகு, சோம்பு, சுக்கு, ஜாதிபத்திரி, கிச்சிலிக்கிழங்கு, கடுகுரோகணி, ஏலம், சதகுப்பை, கிளியூரம்பட்டை, சிரகம் வகைக்குப் பலம்-¼ வீதம் இடித்துச் சூரணம் செய்து பசுவின் பால்விட்டு நெகிழ அரைத்துப் போட்டுக் கலக்கி வண்டல் மெழுகு பதம் வரும்போது அடுப்பை விட்டுக் கீழ் இறக்கி வடித்து ஆறவிட்டுச் சீசாவில் பத்திரப்படுத்துக. இத் தைலத்தால் வாரம் இருமுறை அல்லது ஒருமுறை ஸ்நானம் செய்து கொண்டு வாப் புராதன சுரங்கள், குளிர்சுரம், தேகக்கடுப்பு, தலைவலி, கற்றுழை நாற்றம், சுவாசகாசம், பாண்டு முதலிய ரோகங்கள் குணமாகும்.

ஆமை ஓடு
(Tortoise Shell)

வல்லை கவுசையுடன் மாந்த சுரம்பேதி
தொல்லையுறும் மூலந் தொலைந்துபோம்—எல்லையிலாத்
தீமைதரு முட்சூடுந் தீவிரமா யோடிவிடும்
ஆமைமது கோட்டா லறி.

குணம்:—(இ - ள்.) ஆமையோட்டினால் வல்லை, கவுசை என்னும் கட்டிகள் பாலருக்குக் காணுகின்ற மாந்தம், சுரம், பேதி, மூல ரோகம், தேகவெப்பம் முதலியவைகள் தீரும் என்க.

செய்கை:—உதரவாதஹரகாரி, கபஹரகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை மூலரோகத்திற்குத் தூபப் பொடியாகவும், குழந்தைகளுக்குக் காணும் மாந்தம், சுரம், பேதி முதலியவற்றிற்குப் பற்பமாகவும் மாத்திரையாகவும் செய்து கொடுப்பதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

மூலரோகத் தூபப் பொடி

ஆமையோடு, சந்தனக்கட்டை, வெள்ளைக்குங்கிலியம், சிறுகக் கத்தரித்த தலைமயிர் இவைகளை இடித்துச் சூரணம் செய்து கரி நெருப்பின்மேல் தூவி ஆசனத்திற்குப் புகை பிடிக்க மூல சுருங்கி இரத்த மூலம் குணமாகும். ஆசனம் வெளித்தள்ளியவர்களுக்கும் தினந்தோறும் இருவேளை பத்துப் பதினைந்து நாள் புகை பிடிக்க நாளுக்குநாள் சுருங்கி உள்ளுக்கு இழுத்துக் கொள்ளும்.

ஆமையோட்டுப் பற்பம்

மூன்று பலம் ஆமையோட்டைச் சிறுதுண்டுகளாக நறுக்கி ஒரு மட்பாண்டத்தில் போட்டு அதில் சுண்ணும்பும் அப்பளக்காரமும் சலத்தில் கரைத்து வடிகட்டிய நீரைவிட்டு ஒரு மணி நேரம் எரித்து அலம்பி ரவியில் காயவைத்து இடித்துச் சூரணம் செய்து கல்வத்திலிட்டுக் கோவைக்கிழங்குச் சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்து மெழுகுபதத்தில் ஓர் வில்லையாகத் தட்டி அகலில் வைத்து உலர்த்தி மேல் அகல்மூடிச் சீலை செய்து 30, 40-வறட்டியில் புடமிடவும். ஆறினபின் பற்பம் போதிய-வெளுப்பு இல்லாவிடின் மீண்டும் முன்போல் கோவைக் கிழங்குச் சாறுவிட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டி முன்போல் போட நல்ல பற்பமாகும் அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக.

இந்தப் பற்பத்தில் வேளைக்கு குன்றியெடை தினம் இரு வேளை வெண்ணெயுடன் சிறிது சர்க்கரையிட்டுக் குழைத்து அதனில் அனுபானம் செய்து 10-நாள் கொடுக்க உள்மூலம், வெளிமூலம், ரத்தமூலம், சிழ்மூலம், பவுத்திரம், உஷ்ணபேதி, அதிசார பேதி, நாட்சென்ற பேதி இவைகள் குணமாகும். அப்போது பால் சாதம், நெய் சாதம் அல்லது அதிகக் காரமில்லாத அன்னபதார்த்தங்கள் பத்தியமாகக் கூட்டின் அதிகச் சிறந்தது. குழந்தைகட்கு துவரம்பருப்புப் பிரமாணம் தினம் இருவேளை தேன், நெய் முதலிய அனுபானங்களில் கொடுக்க அஜீரணம் மாந்தம், வயிற்றுப் பொருமல், உள்சுரம் இவைகள் போம். பொடுதலை கியாழத்தில் கொடுக்க பேதி கட்டும்.

வேறு முறை

மூன்று பலம் ஆமையோட்டை முன்போல் சுத்திசெய்து சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டுச் சிற்றாமணக்கெண்ணெய் விட்டு ஒரு வாரம் ஊறவிடவும். அப்பால் இத் துண்டுகளை இரண்டு மூன்று மடிப்புள்ள சீலையின் மேல் பரப்பிச் சீலையை மடித்து இரண்டு வறட்டிகளைப் பிட்டுப் புடம்போல் அடுக்கி அதனிடையில் வைத்துப் புடமிடவும். இந்த ஓடுகள் வெந்து ஆறின சமயம் கல்வத்தில் போட்டு உத்தாமணி இலைச் சாறுவிட்டு 4-சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் பரப்பி மேல்அகல் மூடிச் சீலைசெய்து 30, 40-வறட்டியில் புடமிடப் பற்பமாகும். ஒருகால் நன்றாய் வெளுத்திராவிடின் வெள்ளாட்டுப்பால் விட்டு ஒரு சாமம் அரைத்து முன்போல் வில்லை தட்டி அகலில் அடக்கிப் புடம்போட நல்ல பற்பமாகும். இந்தப் பற்பத்தை மூன்முறையில் கூறியபடி அனுபானங்களில் கொடுத்து வர இதுவும் அதிக நன்மையைத் தரும்.

மாந்த மாத்திரை

மிளகுத்தூள் பலம்-5, சுக்குத்தூள், திப்பிலித்தூள், ஓமத்தூள், கடுகுரோகணித்தூள், கோஷ்டத்தூள், ஆமையோட்டு பற்பம் வகைக்குப் பலம்-1, சுத்திசெய்த வாளம் பலம்-5 இவைகளைக் கல்வத்தில் போட்டுப் பழச்சாறு விட்டு 3-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் பயறு, உளுந்துப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக.

ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்குத் தினம் ஒரு வேளை காலையில் ஒரு மாத்திரை பயறளவு உள்ளதை மூலிப்பாலில் கொடுக்கப் பேதியாகும். இதனால் சந்நி, சுரம், சீதளம், வலி, மாந்தம் இவைகள் போம். இப்படியே இரண்டு வயது குழந்தைகட்கு-1½-5-வயது குழந்தைகட்கு-2 வீதம் கொடுக்கலாம். பேதி அதிகமானால் வசம்பு சுட்ட கரியைத் தேனில் குழைத்துக் கொடுக்கப் பேதி நிற்கும். அல்லது சீனக்காரத்தின் அடியில் கூறப்பட்ட சீனலிங்கச் செந்தூரத்தில் துவரம் பருப்பு அளவு பாலில் கலக்கிக் கொடுக்கப் பேதிகட்டும்.

வேறு முறை

ஆமையோட்டுப் பற்பம் பலம்-¼, சுத்தி செய்த பூரம் பலம்-¼, மாவு சுக்குத்தூள் பலம்-¼, பொரித்த வெங்காரம் பலம்-¼, சுத்தி செய்த வாளம் பலம்-1 இவைகளைக் கல்வத்தில் போட்டு சுக்குங் கியாழத்திலாவது அல்லது உத்தாமணியிலைச் சாற்றிலாவது 2-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் பயறு, உளுந்து அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக. குழந்தைகளின் பருவத்திற்கேற்றவாறு 1, 2-மாத்திரை வீதம் சுக்குங் கியாழம், மூலிப்பால் இவற்றிலேதேனும் ஒன்றில் அனுபானம் செய்து காலை நேரத்தில் கொடுக்கப் பேதியாகும். இதனால் மாந்தம், சுரம், இருமல் முதலிய பல பிணிகள் குணமாகும்.

ஆமைக்கறி

(Tortoise - meat)

ஆமைக் கறியநசி யையம்பித் துண்ழலஞ்
சேமக் கனல்சூதி காமேக—நாமத்தப்
பேதி கிறுணிமலப் பேதியகற் றும்பசியுந்
தாதுவுமே லுங்கொடுக்குந் தான்.

குணம்:—(இ-ள்.) ஆமைக்கறியால் அரோசிகம், பித்தம், உள்மூலம், உட்சூடு, கர்ப்பமேகம், இரத்தாதிசாரம், சீதகிரகணி மலபேதி இவைகள் நீங்கும். பசி, வீரியம், அழகு உண்டாகும் என்க.

செய்கை:—சமனகாரி, காம வீர்த்தினி

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண மூல ரோகங்கள் குணமாகும். ஆமையின் பித்தநீரை நசியமிட

வலிகள் குணமாகும். இன்னும் இதனை விஷக்கடி வாயிலும், தொண்டை வலியிலும் மேற்பூச அதிக நன்மையைத் தரும். ஆமை யின் முட்டையைச் சிறு குழந்தைகளுக்குப் பொரித்துக் கொடுக்க இருமல், வலி முதலியவைகள் நீங்கும். இதன் கொழுப்பை உருக்கி அன்னத்திலிட்டுச் சாப்பிட மூலம் தீரும்.

ஆள்காட்டிப்பக்ஷி

(Allkatti - Bird)

ஆட்காட்டிப் பக்ஷிக் கடன்மேகம் போயோளிக்குந்
தோட்காட்டு வாதந் தோடாவே—வாட்கண்
ணிரிவையே பத்தியத்திற் காகும் புவியிற்
றெரியமறைப் பில்லாமற் சேப்பு.

குணம்:—(இ-ள்.) பத்திய பதார்த்தமான ஆட்காட்டிப் பக்ஷிக் கறிக்கு வாதப்பிரமேகமும், அம்ச சரவாத ரோகமும் ஒழி யும் என்க.

உபயோகிக்கும் முறை:—பத்தியக் கறியாகப் பெரியோர்கள் கூறியுள்ள ஆள்காட்டிப் பக்ஷியின் இறைச்சியைப் பாகப்படி சமைத் துப் பகலன்னத்தில் சேர்த்துண்ண வாதப்பிரமேகம், வாதரோகம் முதலியவைகள் குணமாகும்.

இந்திரகோபப்பூச்சி

(Mutella Occidentalis)

கருமேகந் தாதுநட்டங் கக்குக்பம் போக்குந்
தருமேநற் காயசித்தி தன்னை—வருமேக
சாலமுறை வாரளகத் தையலே நன்மாரிக்
காலமுறை * யீயலது காண்.

குணம்:—(இ-ள்.) இந்திரகோபப்பூச்சி கருமேகத்தையும், சுக்கில நஷ்டத்தையும், சிலேஷ்ம ரோகத்தையும் நீக்கும். இன்னும் காயசித்தியைச் செய்யும் என்க.

செய்கை:—காம வீர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்திரகோபப் பூச்சியைப் பொடி செய்து புற்றரையில் தூவி வைக்கோல் பரப்பி ஜலம் தெளித்துக்

* ஈயல் - இந்திரகோபம்.

கொண்டுவர ஒவ்வொரு அணுக்களும் இந்திரகோபப் பூச்சிகளாக உற்பத்தியாகும். ஆதலால் வயிற்றில் சென்று ஈரம் தாக்கி யிருக்கும் சமயம் அவ்வணுக்கள் மீண்டும் உயிர்ப்பிக்கும் என்ற அபிப் பிராயத்தைக்கொண்டு உள்ளுக்குத் தனியாகக் கொடுப்பது கிடை யாது. இதனைப் புடத்திலிட்டுப் பற்பமாகச் செய்து உபயோகப் படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்:—

இந்திரகோபப்பூச்சி பற்பம்

இந்திரகோபப் பூச்சியை வேண்டுமான அளவு கொண்டுவந்து கொதிக்கிற சலத்தில் போட்டு 2, 3-நிமிஷம் மூடிவைத்து அப்பால் மண் தூசி முதலியவைகள் போக அலம்பிச் சுத்தப்படுத்தி ரவியில் உலர்த்தி வைத்துக்கொள்க. இதில் 2½-பலம் அளவுக்குக் கல்வத் தில் போட்டு தண்ணீர்விட்டான் கிழங்கைச் சலத்தில் ஊறப் போட்டு மேல்தோலை உரித்து இடித்துப் பிழிந்த சாற்றை வடிகட் டிக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் அடக்கிச் சீலைசெய்து கவசத்தின் எடைக்கு 10-எடை வறட்டியில் புடமிடப் பற்பமாகும். இதனில் வேளைக்கு 1, 1½-குன்றியெடை வெண்ணெய், நெய், பால், தேன், தாது விருத்திக்குரிய லேகியம் முதலியவற்றில் அனுபானம் செய்து தினம் இருவேளை கொடுத்துவர மூலைக்குப் பலத்தைக் கொடுக்கும். ஈரம்புகளுக்கு முறுக்கேற்றிப் புருஷத் தன்மையை யுண்டாக்கும். இதுவுமன்றி வெறுந் தேனில் கொடுத்துவரச் சுவாசகாசம், சுரத்தி னால் நரை ஈரலைப்பற்றிய கப சம்பந்தமான பல பிணிகள் நீங்கும்.

இறால் மீன்

(Prawns or Sobster)

வாதமோடு மந்தழறு மாறுப் போருமன்மிகுஞ்
சீதம் விளையுந் தினவுண்டா—மாதே
யுதிர மிகப்பெருகு மோங்குமிற லுண்டா
லெதிரிலங்க ராங்கிசமா மேண்ண.

குணம்:—(இ-ள்.) இறால் கறியை உண்ணில் வாய்வு, அக்கினி மந்தம், வயிற்றுப்பிசம், சீதளம், தினவு, ரத்த மாமிசதாது இவை கள் விர்த்தியாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் ஏற்படும். தினசரி

உணவுகளில் பெரிய இறால் மீன்களை உபயோகித்தால் நன்றன்று. ஏதேனுமோர் சந்தர்ப்பங்களில் கூட்டிக்கொள்ளலாம். பொடி இறால் மீன்களை உபயோகப்படுத்திக் கொள்வது அதிகமாகக் கெடுதியை யுண்டாக்காது. மருந்துண்ணுங் காலங்களில் சேர்க்கக் கூடாது.

ஈசல்

(Easal or Winged White Ants)

நாறுங் கிராணியோடு நாடிவரு முட்காய்ச்சல்
கூறுமது மேகங் குடிபுகின்கேள்—மீறுமதன்
மாசெல்லாந் தானெழிக்கும் மாதரசே போகமுறும்
ஈசலதை யுண்டவர்க்கிங் கே.

குணம்:—(இ - ள்.) ஈசல்லை உண்பதினால் கிராணி, தேக வெப்பம், மதுமேகம் இவைகள் போம். போக சக்தி அதிகப்படும் என்க.

உபயோகிக்கும் முறை:—ஈசல்லின் இறகுகளை நீக்கித் தீயாத பக்குவத்தில் வறுத்து இடித்து அதனுடன் சிறிது வறுத்துச் சூரணித்த சீரகப் பொடியைக் கூட்டி வேளைக்கு ¼, ½-தோலா வீதம் தினம் 2, 3-வேளை யுட்கொண்டுவர வெகுமூத்திரம், கிராணி, பவுத்திரம் முதலிய ரோகங்கள் போம். தாது பலம் உண்டாகும்.

உடும்பு இறைச்சி

(Lacerta Igwana)

சொலும்வாத பித்தமோடு தோல்வறட்சி யும்போம்
பலமிலாத் துர்ப்பலர்க்கும் பாரில்—பலம்வந்
திடுந்துவர்ப்பி னீப்பும் இயற்கையிலே யுள்ள
உடும்பின் இறைச்சிதனை யுண்.

இதுவுமது

கிட்டு முடும்பிறைச்சி கேள்விநோய் மூலமுளை
வெட்டைசிர நோய்சோபை மேகம்புண்—குட்டகய
சீதமிரத் தக்கடுப்புத் தீராக் குடல்வாதம்
பேதியிவை போக்குமெனப் பேசு,

குணம்:—(இ - ள்.) இயல்பாகத் துவர்ப்பும் இனிப்பும் உள்ள உடும்பு இறைச்சியினால் வாதபித்தம், சருமச்சூடு, துர்ப்பலம் காது

நோய், மூலம், வெட்டை, தலை நோய், சோபை, பிரமேகம், விரணம், குஷ்டம், கூஷயம், சீதபேதி, இரத்தபேதி, குடல்வாதம், பேதி இவைகள் விலகும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இருதயத்தைப் பாகப்படி சமைத்துண்ண மார்புத்துடிப்புப்போம் இரத்தத்தைப் பொரித்த வெங்காரத்துடன் கூட்டி மத்தித்து முகத்திலுள்ள கறுப்புப் படைகளுக்குத் தடவிவர அந் நிறம் மாறுதலடையும். இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்தாவது அல்லது லேகிய பாகங்களில் கூட்டியாவது தினம் உண்டுவர நெடு நாள் வியாதியால் துர்பல மடைந்தவர்களுக்கு அதிக சக்தியைக் கொடுக்கும். இன்னும் இச் செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள ரோகங்கள் யாவும் குணமாகும். கண் பார்வையைத் தெளிவாக்கும். இதன் கொழுப்பை யுருக்கி வைத்துக் கொண்டு தினந்தோறும் இரவு காலத்தில் ஆண் குறியின் பேரில் தடவிக் கொண்டுவர ஆண்மை மிகும். இதன் தோலை உறைபோல் தைத்து அதில் தேனை விட்டு எறும்பு நுழையாவண்ணம் வாயைச் சேரக் கட்டி வைத்துக்கொண்டு வேண்டும்போது இந்தத் தேனில் மருந்துகளை அனுபானம் செய்து கொடுக்க விரைவில் நோய்கள் குணமாகும். இதன் புழுக்கையைச் சலம் விட்டு உரைத்து முகக் கறுப்பு, வெண் குட்டம் முதலிய படைகளுக்குத் தடவிவரக் குணமாகும்.

உல்ல மீன்

(Clupea llisha)

உல்லமெல்லாஞ் சன்னவெலும் போவியமே யிக்கறிதா
னல்லகறி யாமதனை நாளுமுண்டால்—மெல்லக்
கழிச்சல் பிளவையோடு காணுக் கடியும்
விழிச்சுக்கொண் டாடுமென விள்.

குணம்:—(இ - ள்.) மெல்லிய முட்களுள்ள நல்ல பதார்த்தமாகிய உல்ல மீனை யுண்ணில் பேதியும் விரணமும், காணுக்கடி விஷமும் அதிகரிக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ணக் குடலில் அதிக உஷ்ணத்தை யுண்டாக்கி விரணத்தையும் பேதியை

யும் உண்டாக்கும், இதுவுமல்லாமல் தேகத்தில் பூச்சிக் கடியினால் உண்டான இரத்தக் கெடுதலை அதிகப்படுத்தி உபத்திரவத்திற்கு ஆளாக்கும்.

உழுவை மீன்

(Fish White Caboose)

முழுதும் புசிக்கலா முள்ளுமில்லை யந்த
வுழுவைக் குடற்பிணிவிட் டோடும்—வழுவான
முன்மலமுஞ் சாறு முதிர்கரப்பா னுண்டாகும்
வன்முலையாய் நீயறிந்து வை.

குணம்:—(இ - ள்.) முள்ளில்லாப் பதார்த்தமாகிய உழுவை மீனுக்குச் சரீரத்திலுள்ள பலவித நோய்களும் பழைய மலமும்போம். கரப்பான் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ணப் பழைய மலத்தை வெளியாக்கும் தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரும. இக் காரணத்தைக் கொண்டே ஆண்ரோர்கள் சில மருந்துகளைக் கொடுக்கும்போது பத்திய பதார்த்தமாகச் சேர்த்துக் கொள்ளும்படி கூறியிருக்கின்றனர்.

உள்ளான் கறி

(Scolopax Meat)

உத்தமமாம் பத்தியத்திற் கோவ்வுமுள் ளான்கறிதான்
சத்தியங்காற் பித்தத்தைச் சாந்திசெய்யு—முத்த
நகையீர்மே கம்போக்கு நற்பசியுண் டாக்குந்
தகைமைந்தந் தீர்க்குமிது தான்.

குணம்:—(இ - ள்.) பத்தியத்திற்கு உத்தமமாகிய உள்ளான் கறி வாத பித்த தொந்தம், பிரமேகம், அஜீரணம் இவைகளை நீக்கும் நற் பசியைத் தரும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ணத் தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரும். வாத பித்த ரோகங்களைக் கண்டிக்கும். தீபனத்தை அதிகப்படுத்தும். மருந்துண்ணும் காலத்தில் இதைப் பத்தியப் பதார்த்தமாக உபயோகப் படுத்திக் கொள்ளலாம்.

ஊர்க்குருவி

(Sparrow)

மருவிய திரிதோஷம்போம் மறப்புறுப் புணர்ச்சியுண்டாம்
பெருகிய சுரமேகம்போம் பிறந்திடு மிளமைமெய்யிற்
கருகிய வன்னநீங்கிக் கனகம்போ லொளிவுஞ்சேரு
முருவமுந் திரமாநாளு மூர்க்குரு வியின்றசைக்கே.

குணம்:—(இ - ள்.) ஊர்க்குருவிக் கறியால் வாத பித்தம் கபட் பிரமேகம் சுரவெட்டை, கருமை நிறம் இவை நீங்கும். இடை விடாத போகம், வாலிபத்தன்மை சுவர்ண்ணச்சாயல், தேக புஷ்டி இவைகள் உண்டாம்.

செய்கை:—காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள குணங்கள் சித்திக்கும். இதன் இரத்தத்தைக் கடலைப்பருப்பு மாவுடன் கலந்து ஆண் குறிக்குத் தடவிப் பூமியில் கால் படாமல் கட்டிலில் இருந்துகொண்டு அன்றிரவு ஸ்திரீ சுகத்தை விரும்ப ஆனந்தத்தை விளைவிக்கும். இதன் முட்டையைக் குடிக்கத் தாது அளவு கடந்து மீறும். இதன் மலத்தைப் பொடி செய்து சீலையில் அரித்து வைத்துக்கொண்டு வேளைக்கு ¼-அரிசிப் பிரமாணம் தொட்டுக் கண்ணுக்கு மை தீட்ட நல்ல ஒளியுண்டாகும்.

ஊர்ப்பன்றி

(Pig)

வாதபித் தங்கள்சேரு மருவிய புண்ணுமுண்டாந்
தாதுவுங் கபழம்போங்குந் தாங்கொணு வசதியாகும்
வாதுற வனந்தநோய்கள் வளர்ந்தெழந் துன்பமெய்து
மோதியுண் மருந்துநாச மூர்ப்பன்றிக் கறியுண்பார்க்கே.

குணம்:—(இ - ள்.) ஊர் பன்றி யிறைச்சியை யுண்பவர்க்கு வாத பித்த தொந்தம், விரணம், சுக்கிலம், சிலேஷ்ம கோபம், விலவிலப்பு முதலிய பலவித ரோகங்கள், மனு துக்கம் ஔஷதக் கெடுதி ஆகிய இவைகள் உண்டாகும்.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்களெல்லாம் சித்திக்கும்.

இதை மூலரோகிகள் விசேஷமாக உட்கொண்டு சிறிது பயன் படுத்திக் கொண்டாலும் முடிவில் பல பிணிக்கு ஆள் ஆவர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதன் கோரைப் பல்லாகிய எலும்பைக் குளிசமாக கட்டிக் கொள்கிறவர்களுக்குக் கண் திருஷ்டி யுண்டாகாது. இவர்களிடம் மற்றவர்களுக்கு வெறுப்புண்டாகும். இதன் தந்தத்தைத் துண்டுத் துண்டுகளாக நறுக்கி நல்லெண்ணெயில் போட்டு ஒரு வாரம் ஊறவைத்து வடித்த எண்ணெயைக் கூந்த லுக்குத் தடவி வாரிக் கொண்டுவர நிகளமாக வளரும். பாலிய நரையும் நீங்கும். இதன் பித்தை யுலர்த்தி இடித்துத் தூள் செய்து மூல முளையிற் றடவ முளையற்றுப்போம்.

எருமைச் சாணம்

(Buffalo's Dung)

வயிற்றுப் பிசமிரத்த வாந்திகா மாலை
நியத்தபெநம் பாடுபுண் ணீங்கும்—வியத்த
கருமைச்சா ரங்கவிழிக் காரிகையே நாளும்
எருமைச்சா ணுத்தி னியல்பு.

குணம்:—(இ-ள்.) எருமைச் சாணத்தால் வயிற்றுப் பொரு மல், ரத்தபித்த ரோகம், ஆமிலபித்தம், அசிர்க்காம், விரணம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சாணத்தைத் தேகத்திலுண் டான சொறி, சிரங்கு, புண்களுக்கு மேற்றடவிச் சிறிதுநேரம் ஊற விட்டு ஸ்நானம் செய்து வர விரைவில் குணப்படும். எருமைச் சாணத்தை ஒரு மெல்லிய சீலையில் முடிச்சுக் கட்டித் தொங்கவிட்டு அதிலிருந்து வடிந்த சலத்தைச் சேகரப்படுத்திச் சமனெடை, உயர்ந்த பன்னீர் கூட்டி வைத்துக் கொள்க. அப்பால் கடுக்காய், காட்டாத்திப்பூ, விரைதிராட்சைப் பழம், மாசிக்காய் வகைக்குக் கழஞ்சி வீதம் ஒருங்கு சேர்த்து ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட் கலயத்தில் போட்டுக் கால்படி சலம்விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து மூன்றில் ஒரு பாகமாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்க. வேண்டும்போது வேளைக்கு முற்கூறப்பட்ட எருமைச் சாணநீரில் ஒரு தேக்கரண்டி யளவும் பின் சித்தப்படுத் திய கியாழத்தில் ஏழு தேக்கரண்டி யளவும் ஒருமிக்கக் கூட்டிக் கொடுக்கவும். இப்படித் தினம் 3-வேளை மூன்று நாள் கொடுத்து

வர எத்தகைய கஷ்ட சாத்தியமான இரத்தவாந்தி ஆயினும் சரி அல்லது காசத்தினுலேற்பட்டதாயினும் சரி குணமாவது திண்ணம். இந்தக் கியாழங்களைத் தினந்தோறும் புதியதாகச் செய்து உபயோகப்படுத்துவது பண்டிதர்களின் கடமையாகும்.

எருமைத் தயிர்

(Buffalo's Curd)

எருமைத் தயிருக் கேரிவுபித்தம் போகும்
வருமைக் கரப்பனெடு வாதம்—பெருமிதஞ்சேர்
தூல வுடலழமாந் தூயறிவு மந்தழறுங்
கோல விழிகுளிருங் கூறு.

குணம்:—(இ - ள்.) எருமைத் தயிருக்கு எரிச்சலும், பித்த நோயும் போகும். கபத்தைப்பற்றிய கரப்பான், வாதரோகம், அதிதூல ரோகம், புத்திமந்தம், கண்களுக்குக் குளிர்ச்சி ஆகிய இவைகள் உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் போஜனத்தின் முடிவில் அன்னத்துடன் கூட்டி உண்பதினுல் இச் செய்யுளில் கூறப்பட்டுள்ள குணங்கள் ஏற்படும். இதற்குச் சீதளகுணமுண்டு, ஆதலால் பாகப் படித் தாளிதம் செய்து உட்கொள்ளல் நன்று.

எருமை நெய்

(Buffalo's Ghee)

புத்திகேடு மெய்யழகு போதக் கேடுநயனம்
மெத்தவொளி மாறிவிடு மேதினியிற்—சத்தியமாம்
வாதமொடு பித்தழறு மாறுக் கரப்பானுங்
கோதெநமை நெய்யநந்திற் கூறு.

குணம்:—(இ - ள்.) எருமை நெய்யால்: அறிவு, அழகு, கண் ணொளி இவைகள் மத்திபமாம். வாத பித்த தோஷம், கரப்பான் இவைகள் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த நெய்யை வேண்டும்போது அனலில் உருக்கி அன்னத்துடன் கூட்டியாவது பலகாரங்களில் சேர்த்தாவது உண்ண உருசிகரமாக இருக்கும். ஆனல் இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள துர்க்குணங்களைச் செய்யும்.

எருமைப் பால்

(Buffalo's Milk)

வாதத் திமிரை வரவழைக்கும் புத்தியினற்
போதத் தெளிவைநனீ போக்குங்காண்—சோதற்றே
யங்கத் துறுமநந்தை யன்றே முறீத்துவிடும்
பங்கத் துறுமேதிப் பால்.

குணம்:—(இ - ள்.) எருமைப் பால் திமிர் வாயுவைத் தருவிக்கும். தெளிந்த புத்தியின் கூர்மையையும், நல்ல மருந்தின் குணத்தையும் கெடுக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைக் காய்ச்சிக் கஞ்சியிலாவது காப்பி, தேயிலைப் பானங்களிலாவது சேர்த்து உட்கொள்ள நல்லவுணவாகும். ஆனல் பழக்கத்திற்குக் கொண்டுவர இச்செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள சில துர்க்குணங்களைச் செய்யும். இன்னும் வியாதியஸ்தர்களுக்கு முக்கியமாக ஆகாது.

எருமை மூத்திரம்

(Buffalo's Urine)

உதரநோய் பாண்டோ டுரத்தகா மாலை
விதிர வருசோபை மேகம்—முதிர்கிருமி
யாதியநோ யேது மடரேநமை மூத்திரத்தால்
மீதிலன லுண்டாகு மே.

குணம்:—(இ - ள்.) எருமை மூத்திரத்தால் பெரு வயிறு, பாண்டு, காமாலை, வீக்கம், பிரமேகம், கிருமி முதலிய நோய்கள் போம், இதிற் சூடுண்டாம்.

உபயோகிக்கும் முறை:—எருமை மூத்திரத்தைச் சிறிது காய்ச்சி நான்கு ஐந்து மடிப்புள்ள சீலையில் வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தனியாகவாவது அல்லது சிறுநீரை வெளியாக்கக் கூடிய ஏதேனுமொரு கியாழத்திலாவது சேர்த்துத் தினம் இரு வேளை கொடுக்கப் பெருவயிறு, பாண்டு, காமாலை, வீக்கம் முதலிய நோகங்கள் போம்.

எருமை மோர்

(Buffalo's butter milk)

தாகங் கிராணீ சலக்கழிச்சல் காமாலை
ஆகங் குடைபுழுவு மற்றுப்போ—மோகமுறுந்
தேவா மிருதழமாஞ் சீர்மானி டர்தமக்கு
ழுவா மருந்தெருமை மோர்.

குணம்:—(இ - ள்.) எருமை மோரினால் தாகம், கிரகணி ரோகம், சலக்கழிச்சல், காமாலை, கிருமி ஆகிய இவைகள் நீங்கும். போக விருப்பமாம்.

உபயோகிக்கும் முறை:—இதற்குச்சீதளகுணமுண்டு. அடுப்பில் இரும்புக் கடாயை வைத்துச் சூடாக்கி அதில் மோரைவிட்டு முறித் தாவது அல்லது பாகப்படி தாளிதம் செய்தாவது உபயோகப் படுத்தல் சாலச் சிறந்தது. இதைத் தனியாகக் குடிக்கத் தாகம் அடங்கும். அன்னத்துடன் கூட்டி யுண்ண இச்செய்யுளின்கண் கூறப்பட்ட குணங்கள் ஏற்படும்.

எருமை வெண்ணெய்

(Buffalo's Butter)

எருமைவெண் ணெய்க்கில் லேரிநீ ரிழிவு
பருவமயி லேகேளிப் பாரிற்—கிருமியுறும்
மந்தமாம் வாதமிகு மாறுக் கபங்கரப்பான்
றெந்தமா நோயடநஞ் சோல்.

குணம்:—(இ - ள்.) எருமை வெண்ணெயினால் பித்த மூத்திர கிரிச்சரம் நீங்கும். மலாசயக்கிருமி, அக்கினிமந்தம், வாதரோகம், கபாதிக்கம், கரப்பான் தொந்தரோகம் ஆகிய இவைகள் உண் டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனுடன் வெள்ளைச் சர்க்கரை கூட்டித் தனியாகவாவது, அல்லது அப்பங்களில் சேர்த்தாவது உண்பதுண்டு. இதனால் சூடு தணிவதுடன் நீர்ச்சுருக்கு நீங்கும். இதனைப் பழக்கமாக உண்பவர்க்கு இச்செய்யுளின்கண் கூறப்பட் டுள்ள சில துர்க்குணங்களைச் செய்யும்.

எலி

(Rat)

எலியிரைச்சி குன்மம் பிலீக முரநோய்
நலிவித்தி ரப்புண் ணமைச்சன்—மெலிவோடு
மீதுமட்டி டாப்புளக மேவச்செய் யும்புணரத்
தாதுவுக்கும் புட்டிதருந் தான்.

குணம்:—(இ - ள்.) எலியிரைச்சி, குன்மம். பிலீகம், மார்பு வலி, பிளவை, தினவு இவைகளை நீக்கும். பூரிப்பு - வீரிய விருத்திக்கு வீரியம் இவைகளைத் தரும்.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளின் கண் கூறப்பட்ட குணங்களெல்லாம் ஏற்படும். இதன் தலையையும் வாலையையும் தறித்து விட்டு வயிற்றைப் பிளந்து குடலை நீக்கி சிதைத்து அம்பு முள் தைத்த இடத்தில் வைத்துக் கட்ட வெளியாகும். இதன் இறைச்சியைத் துண்டுகளாக நறுக்கி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி மயிர் உதிர்ந்த இடங்களில் தடவிவர வளரும். இதன் கண்களை ஓர் சீலையில் முடிந்து முறைக் காய்ச்சலுக்கு கையில் காப்புக் கட்டச் சுரம் நீங்கும். இதன் கொழுப்பை யுருக்கி ரோஜாப்பூ அத்தருடன் கலந்து முகத்தில் படருகின்ற கறுப்பு படைகளுக்குத் தடவிவர நிறம் மாறுதலடையும். இதன் பீஜத்தை யுலர்த்திக் குளிசத்திற்குள் அடைத்து ஸ்திரிகள் இடுப்பில் கட்டிக்கொள்ளக் கருஜனிக்க வொட்டாமல் செய்யும். இதன் புழுக்கையை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சித் தலையில் தடவிவர மயிர் உதிராது. இதன் புழுக்கை, வரித்தும்மட்டிக்காய் சதை, பொரித்த வெங்காரம், நாட்டுச் சர்க்கரை சமனெடையாகச் சேர்த்து அரைத்து வேளைக்கு 2-பணவெடை சாப்பிட்டுவரக் குன்மவலி நீங்கும். இதன் புழுக்கையைத் தேன் விட்டு உரைத்துக் குழந்தை கட்குக் கொடுக்க நீர்கட்டை உடைக்கும். புழுக்கையை முலைப்பால் விட்டு அரைத்துக் குழந்தைகளின் வயிற்றுக்குத் தடவிவர வயிற்றுப் பொறுமல், மலக்கட்டு, நீர்கட்டு முதலியவைகள் நீங்கும்.

ஒட்டைத் தயிர்

(Camel's Curd)

தீபனமு முண்டாஞ் சிறுகரப்பான் புண்ணுமாம்
பூபதிபோன் மேனீ புளகிக்குந்—தாபதமாம்
ஒட்டைத் தயிர்நிதமு முண்ணவதி தாகம்போந்
துட்டக் கிருமியறுஞ் சோல்.

குணம்:—(இ - ள்.) ஒட்டைத் தயிரைக் குடிக்கில் ஜடராக்கினி, சிறுகரப்பான், விரணம், அதிதூலரோகம் ஆகிய இவை உண்டாகும். தாகமும் மலக்கிருமிரோகமும் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—நமது நாட்டில் பசு, எருமை, ஆடு முதலியவற்றின் தயிரை உபயோகப் படுத்துவதைப்போலவே அரேபியா முதலிய பிரதேசங்களில் ஒட்டைத் தயிரை அன்னத்துடனும் வெரும்பானமாகவும் உபயோகப் படுத்துவதுண்டு. இனிப்பும் துவர்ப்புமுள்ள புதிய தயிருக்கு உஷ்ணவீரிய முண்டு ஆனல் புளித்த தயிருக்குத் தாகத்தை யடக்கவும் மலத்திலுள்ள கிருமியை யகற்றவும் சக்தியுண்டு.

ஒட்டை நெய்

(Camel's Ghee)

நேட்டி நடைநடக்கும் நேர்மையுறு மோட்டையதன்
கிட்டுமோந நெய்ப்பேநமை கேட்பீரேல்—நேட்டுலகின்
மந்தஞ்சேய் தாலும் வலிவிந்து வைப்பேநக்கு
மந்தஞ்சேர் கண்ணு யறி.

குணம்:—(இ - ள்.) ஒட்டை நெய்யானது அக்கினிமந்தஞ் செய்வதாயிருந்தாலும் சுக்கில தாதுவை விருத்தி செய்யும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் நெய்யை அன்னத்துடனும், பல கார பட்சணத்துடனும் சேர்த்துண்பது வழக்கம். இது மந்தப்பசியை யுண்டாக்கும் என்றாலும் தாது வலுவை அதிகரிக்கச்செய்யும்.

ஒட்டைப் பால்

(Camel's Milk)

ஒட்டைப்பா லுக்குமந்த ழர்வாத சூலையோ
டட்ட குணக்கரப்பா னர்வதன்றி—மட்டிடாக்
காதிரைச்சன் மந்தமதி காசஞ்சு வாசமுமா
மாதரைக்கு ணுளும் வழத்து :

குணம்:—(இ - ள்.) ஒட்டைப் பாலினால் அக்கினிமந்தம், வாத சூலை, எண்விதக் கரப்பான், கர்ணவாதம், செவிடு, அதியிருமல், இரைப்பு இவை யுண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனை உட்கொள்ள இச் செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள தீர்க்குணங்கள் உண்டாகும். ஆனால் தேகத்தி லுள்ள விஷக்கடியின் தீங்கை நீக்கும். இன்னும் இதனை வாயிலிட்டுக் கொப்பளிக்கச் சொத்தைப்பல் குணமாகும். சோபை, பாண்டு முதலிய ரோகங்களுக்கு நல்ல உணவாகும்.

ஒட்டை மூத்திரம்

(Camel's Urine)

ஒட்டகத்தி னீரை யுயரா தனல்வெதுப்பி
இட்டமுறுங் காதி லிருதுளியே—விட்டுவர
வாச மலர்க்குழலே வந்தசெவிமந்தம்
நாசமுற் றோடும் நவில்.

குணம்:—(இ - ள்) ஒட்டகத்தின் மூத்திரத்தை இளஞ் சூடாகக் காய்ச்சி வடிகட்டித் தாளக்கூடிய சூட்டில் காதில் இரு துளி வீதம் விட்டுக்கொண்டுவரச் செவி மந்தம் நீங்கும் என்க.

இதுவுமது

மேலெயு நுந்தடிப்பு வீசி யெழுஞ்சந்நி
சூலையுதா வர்த்தந் தொடர்குன்மஞ்—சீலநகீ
மண்டலகுஷ் டேதும் வருமொட்டை மூத்திரத்தா
லுண்டனல் மாதே யுரை.

குணம்:—(இ - ள்.) வெப்பத்தையுடைய ஒட்டை மூத்திரத்தால் சரீரத்திலோடிப் புடைக்கின்ற தடிப்பு, சந்நிபாதம், கீல்பிடிப்பு, உதரவர்த்த வாதம், வயிற்று வலி, மண்டல குஷ்டம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும்முறை:—ஒட்டைமூத்திரத்தைத்தினந்தோறும் ¼, ½-அவுன்ஸ் வீதம் உட்கொள்ள இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள நோய்கள் குணமாகும். நீரைச் சுண்டக் குழம்பு பதமாகக் காய்ச்சி வீக்கம், கணுச்சூலை, பிடிப்பு, பவுத்திரம் முதலிய இடங்களில் தடவக் குணமாகும். இன்னும் இதனைக் காமாலை ரோகத்திற்குக் கொடுக்கக் குணமாகும்.

ஒட்டை மோர்

(Camel's Butter Milk)

ஒதவநம் மெத்தவன லோங்கியவா தந்தணிக்கும்
காதலுறும் நாவறட்சி காணுதே—சோதனியில்
வண்டார் குழலணங்கே வன்மையுறும் ஒட்டகத்தே
கொண்டநந்து மோரின் குணம்.

குணம்:—(இ-ள்.) ஒட்டகத்தின் மோரைப் பருகுவதினால் பித்தவாதத் தொந்தமும், அதிக தாகமும் சாந்தி பெறும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் மோரைத் தனியாகத் தாகத் திற்காவது அல்லது அன்னத்தில் கூட்டி பகல் போஜனமாகக் கொள் வதினாலாவது பித்தவாத தொந்தமும், தாகமும் அடங்கும்.

ஒட்டை வெண்ணெய்

(Camel's Butter)

கட்டழகு செய்யுநற் காரிகையீர் கேண்மின்கள்
ஒட்டைவெண்ணெய் மந்த மொடுவாதம்—கிட்டவைக்கும்
நீரிழிவுக் கேற்கு நிறைபித்தம் போக்கிவிடும்
பாரறியச் சொன்னேம் பகுத்து

குணம்:—(இ-ள்.) ஒட்டை வெண்ணெயானது நல்ல அழகை யும், மந்தத்தையும், வாதரோகத்தையும் உண்டாக்கும். வெகு மூத் திரத்தையும், மிகுந்த பித்தத்தையும் நீக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—ஒட்டை வெண்ணெயுடன் சிறிது சர்க் கரை கூட்டிப் பலகாரங்களுடன் உண்டுவர நல்ல வனப்பை யுண் டாக்கும். பித்தம், வெகுமூத்திரம் குணப்படும் என்றாலும் அக் கினி மந்தத்தையும் வாத ரோகத்தையும் பிறப்பிக்கும். ஆதலால் அடுத்து உபயோகப்படுத்தாம லிருப்பதே சாலச் சிறந்தது.

ஒணான் நெய்

(Blood Sucker Fat)

ஒணான்நெய் யுட்கொள்ள ஓங்கும் பிறவலிநோய்
காணுமற் றுலோடுங் காரிகையே—வீணுக
மக்க டமைவதைக்கும் மாவலியுஞ் சந்நிசுரம்
திக்கற்றே யோடுந் திகைத்து.

குணம்:—(இ - ள்.) ஓணன் நெய்யை யுட்கொள்ளப் பின்னிசிவு ரோகங்கள், கடுமையான நரம்புகளின் வலி, சந்நி, தோஷம் முதலிய வைகள் குணமாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—ஓணன் கழுத்தை அறுத்து அதிலிருந்து சொட்டும் உதிரத்தை 4, 5-துளி அளவிற்கு முலைப்பாலில் கலந்து வடிகட்டிப் பிரசவமான குழந்தைகட்குக் காணுகின்ற கருஞ் செவ்வாப்பு என்னும் கொடிய சீதளப் பிணிக்குக் கொடுக்க இரண்டு மூன்று வேளைக்குள் குணமாகும். ஒரு பெரிய ஓணானைக் கொண்டு வந்து துண்டு துண்டாக நறுக்கி ஒரு இரும்புக் கடாயில் போட்டு 10-பலம் வேப்பெண்ணெய் விட்டு அதனுடன் இரண்டு பலம் கற்பூரத் தூளைக் கூட்டிக் கலக்கிச் சிறு தீயில் எரித்து நீர் சுண்டி ஓணன் இறைச்சி பிதக்கும் தறுவாயில் கீழிறக்கி ஆறவிட்டு வடித்து ஆறுத விரணங்களுக்குத் தடவிவர விரைவில் ஆறும். இன்னும் இந்த ஓணானைக் கொண்டு சுடர் தைலமாக எரித்து வைத்துக் கொண்டு உபயோகிப்பதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

ஓணன் எண்ணெய்

வீரம், பூரம், கெந்தகம், இலிங்கம், தாளகம், மனோசிலை, பால் துத்தம், துருசு, வெள்ளை அல்லது சங்குப் பாஷாணம், பொரித்த வெங்காரம், நவச்சாரம், படிகாரம் வகைக்கு விராகனெடை-1 இவற்றைக் கல்வத்தில் போட்டு நன்றாய் அரைத்து, 5-பலம் உரித்த வெள்ளுள்ளியைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு மெழுகு வண்ண மரைத்துச் சுத்தமான வெள்ளைச் சீலையிற்றடவி, இரண்டு மூன்று பெரிய ஓணன்களைக் கொண்டுவந்து நாக்கு, கால், வால், குடல் முதலியவற்றைப் போக்கி அவைகளை ஒருங்கு சேர்த்துத் தந்திக் கம்பியால் இரண்டொரு இடங்களில் கட்டி அதன்பேரில் சுற்றி மீண்டும் சீலை யகலாமலிருக்கும் பொருட்டுத் தந்திக் கம்பியால் இரண்டொரு கட்டிட்டுத் தொங்கவிட்டு 15-பலம் வேப்பெண்ணெயைச் சிறுக விட்டுச் சுடர் தைலம் வாங்கவும். இப்படி வாங்கியெடுத்த தைலத்தை யதன்பேரில் மீண்டும் விட்டு எரித்து மடக்கித் தைலம் வாங்கவும். இந்தத் தைலம் ஏறக்குறைய $7\frac{1}{2}$-பலம் அளவிற்கு வந்த சமயம் வடிகட்டி வைத்துக்கொள்க.

அப்பால் ஒரு சுத்தமானக் கல்வத்தில் மூன்று விராகனெடை சுத்தி செய்த நேர்வாளப் பருப்பைப் போட்டு முன்முடித்து வைத்

துள்ள சுடர் தைலத்தில் கொஞ்சம் விட்டு நன்றாய் அரைத்து மைபோலான சமயம் வழித்து மொத்தச் சுடர் தைலத்தில் கலக்கி உறவாக்கி வைத்துக் கொள்க. வேண்டும்போது தினம் ஒருவேளை காலையில் குழந்தைகளுக்கு வயதுக்குத் தக்கபடி புட்டியைக் குலுக்கி 3, 6-துளி வரையில் முலைப்பாலில் விட்டுச் சேர்த்துக் குலுக்கிக் கொடுக்கவும். ஒரு மாதம் முதல் இரண்டு மாதக் குழந்தைகட்கு 2, 3-துளி போதுமானது. இரண்டு மூன்றுமுறை பேதியாக வேண்டும். அப்படி பேதியாகாவிடின் மறுநாள் அளவை அதிகப் படுத்திக் கொள்ளவும். பேதி அதிகமாயின் கொடுத்த அளவைக் குறைத்துக் கொள்ளவும். பெரியவர்களுக்கு 10, 12-துளி போதுமானது இந்தச் சுடர் தைலத்தை குறைந்தது இடைவிடாமல் மூன்று நாள் கொடுக்கவும். மீண்டும் தேவையானால் 5, 6-நாள் விட்டு மீண்டும் முன்போல் மூன்று நாள் கொடுக்கவும். இதனால் காக்கைவலி, முயல்வலி, குமரகண்டவலி. பாரிசவாதம், குழந்தை கட்கு உண்டாகும் இசிவு (வலி) இளம்பிள்ளை வாதம், மாந்தம் முத லியவைகள் தீரும்.

பாலுண்ணுங் குழந்தைகட்குக் கொடுக்கும்போது, தாய் சுட்ட புளி, வறுத்த உப்பு, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அத்திக்காய், வெள்ளாட்டு உப்புக் கண்டம் முதலியவற்றுடன் இச்சா பத்தியமாக இருத்தல் வேண்டும். சாதாரணமாக குழந்தைகளுக்கு வலி காணும் போது கொடுத்துச் சுகமுண்டானாலும் இந்த நெய்யை கவனமாக மாதத்திற்கு இருமுறை அல்லது மூன்றுமுறை விரேசனத்திற்குக் கொடுத்துக் கொண்டுவர அந்நோய் நெருங்காது.

ஓலைவாலைக்கருவாடு

(Wolay walai - Salt fish)

ஆலைவாய்ப் பித்த மணுகாதா மம்புவியி
லோலைவா லைக்கருவா டுண்டக்காற்—சாலப்
பசியாரும் பஞ்சாய்ப் பறக்குமே வாதம்
புசியார்க் கிதணைப் புகல்.

குணம்:—(இ - ள்.) ஓலைவாலைக் கருவாடுண்ணில் விஷத்தை நிகர்த்த கப பயித்தியமும், வாதப்பிணியும் நீங்கும். விரைவில் தீபனமுண்டாம்.

செய்கை:—ஜடாக்கினிவர்த்தனி.

உபயோகிக்கும் முறை:—இதன்மே லிருக்கும்படியான பள பளப்புள்ள வெண்மை நிறத்தை முற்றிலும் போகும்படி சலம் விட்டுத் தேய்த்துக் கழுவிச் சுத்தப்படுத்திச் சிறு துண்டுகளாக நறுக்கி நெருப்பனலில் சுட்டாவது அல்லது சிறிது உப்புக்காரங் கூட்டித் தடவி எண்ணெயில் பதமாக வறுத்தாவது அன்னத்துடன் உபயோகப்படுத்த அதிக ருசியாக இருக்கும். இதனால் இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் ஏற்படும்.

கச்சற்கருவாடு
(Kachar Karuvadu)

வாதமறு மப்போழதே வன்பித்த முண்டாகுங்
சீத மகலுந் தினவும்போங்—கோதாய்கேள்
கண்டாற் பசியேழப் புங் கச்சற் கருவாடு
கொண்டாற் சுரமும்விடுங் கூறு.

குணம்:—(இ-ள்.) கச்சற்கருவாட்டை யுண்ணில் வாதப் பிணி, கபநோய், நமைச்சல், சுரரோகம் இவைகள் போம். கப பித்தமும் தீபனமும் உண்டாகும் என்க.

செய்கை—சுரஹரகாரி, உற்சாககாரி, ஜடராக்கினி வர்த்தனி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி குழம்பிட்டு அன்னத்துடன் கூட்டி யுண்ண இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் ஏற்படும். உஷ்ண தேகிகளுக்கு ஆகாது. சில சந்தர்ப்பம் சீதபேதி உஷ்ணபேதி முதலியவற்றை யுண்டாக்கும். தேக சுபாவ மறிந்து சேர்த்துக் கொள்ளவேண்டும்.

கடமான்
(Kadamon)

உடலம் வலுவாகி யோங்கிப் பருக்குங்
குடலிலதி வாதங் குதிக்கும்—வடமார்
கடமா மெனுங் கோங்கைக் காரிகையே கானக்
கடமா னிறைச்சியுனுங் கால்.

குணம்:—(இ-ள்.) காட்டிலுள்ள கடமானிறைச்சியை யுண்ணில் சரீரம் வண்மையோடு செழித்துத் தூலிக்கும். குடல் விருத்தி ரோகம் உண்டாம் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ணத் தேகம் கொழுமை பெறும்.

கடல் நண்டு

(Sea Crab)

குன்மவலி வாதங் கோடுங்கரப்பா னுண்டாக்குஞ்
சன்மச் சொறியைத் தருவிக்கும்—பின்னு
முதிரக் கழிச்சறனை யோங்குவிக்கு மாதே
யதிரக் கடனண் டது.

குணம்:—(இ-ள்.) கடல் நண்டுக்கறி - வயிற்றுநோய், வாத கோபம், கடுவன், சருமச்சொறி, ரத்தகிரகணி இவைகளை யுண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண நாவிற்கு ருசியாக இருக்கும். ஆனல் பழக்கமாகச் சாப்பிடுகிறவர்களுக்குப் பல நோய்கள் உண்டாகும்.

கண்டில் வெண்ணெய்

(First Excrement of New born Elephant)

கண்டில்வெண்ணெய் மாதேகேள் காந்திப்பிர தாபமமாந்
தொண்டையினுண் ணீர்க்கட்டு தூரிநமன்—மிண்டிவரு
நீர்க்கடுப்பு ழலத்து ணீர்க்குத்த லும்போக்கும்
பார்க்கு ளறியப் பார்.

குணம்:—(இ-ள்.) கண்டில்வெண்ணெய் - சரீரத்தில் தேஜசைத் தரும். நெஞ்சிற் கபக்கட்டு, காசம், மூத்திரகிரிச்சரம், குதச் சூலை இவைகளை நீக்கும்.

செய்கை:—கபஹரகாரி, மூத்திரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சரக்குக் கடைகளில் கிடைப்பது அரிது. கன்றில்†வெண்ணெய் என்பது கண்டில் வெண்ணெய் என மருவியது. யானையானது குட்டி போட்டவுடன் முதன்முதலாகக் கழியும்படியான மலத்தை உலர்த்தி வைத்திருப்பதிற்கே கண்டில் வெண்ணெய் என்று பெயர். இதனைச் சிலர் அறியாமல் கூகைநீரைப் பாகங்களில் சேர்த்துக் கொள்வதுண்டு. இந்தச் சரக்கு மலையாளப் பிரதேசங்களில் கிடைக்கும். அஷ்டாங்க ஹிருதயத்

தைக் கொண்டு வைத்தியத் தொழிலை நடத்திவரும் பண்டிதர்கள் செய்து வரும் பிரயோகங்கள் பல இருப்பினும் ஒருமுறையை அடியிற் காண்க.

தன்வந்திரிக் குளிகை

கண்டில் வெண்ணெய், சுக்கு, கடுக்காய்த்தோல், சிறு ஆளி வித்து, நிலவேம்பு, ஏலம், தூதுளைவேர்ப்பட்டை, சிரகம், கண்டங் கத்திரி வேர், வால்மிளகு, உருத்திராட்சம், தேவதாரு இவைகள் வகைக்குப் பலம்-1, ஆக இடித்துச் சூரணம் செய்து கல்வத்தில் போட்டுப் பச்சைக் கற்பூரம், புனுகு வகைக்கு விராகனெடை-1 ஆகக் கூட்டி சிரகக் கியாழம் விட்டு 4-சாமம் அரைத்து மெழுகு பதத்தில் குன்றியளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனை வேளைக்கு ஒரு மாத்திரை யாகத் தினம் இருவேளை கொடுத்துவரச் சுவாசகாசம், விகாரம், தாகம், கூஷயம், வாயு, மேகம், காமாலை, மகோதரம், அரோசகம், விக்கல், வாய்நீர் ஊறல், வாந்தி முதலியவைகள் குணமாகும்.

கரடி இறைச்சி

(Bear's Meat)

காணு முடல்தளர்ச்சி கக்கிருமல் மூர்ச்சையுடன்
தோணுங்கீல் வாதந் தோலுந்துபோம்—கோணுகின்ற
மாவலியுங் காசம்போம் வன்கரடி யின்கறியை
ஆவலுற் றுண்ணு மவர்க்கு.

குணம்:—(இ-ள்.) கரடியின் இறைச்சியினால் தேகத்தூர்ப் பலம், கக்குவான், மூர்ச்சாரோகம், கணுச்சூலை, நரம்புகளின் இசிவு, காசரோகம் முதலியவை நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ண வாயு சம்பந்தமான ரோகங்கள், கூஷயம், மூர்ச்சா ரோகம் முதலியவைகள் குணமாகும். இந்த இறைச்சித் துண்டு களுடன் போதிய அளவு மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், உப்புத் தூள் இவைகளைக் கூட்டிப் பிசரி உலரப்போட்டு எடுத்துக் கொள்வதுண்டு. இதனை உப்புக் கண்டமென்று கூறுவர். வேண்டும்போது சில துண்டுகளை நெய்யிலாவது எண்ணெயிலாவது பொரித்துப் பஞ்சு போல் தட்டி கூஷயம், கக்குவாய், இருமல் முதலியவற்றால் கஷ்டப் படும் ரோகிகளுக்குக் கொடுப்பதுண்டு. இதன் பித்தநீரைக்

கண்களில் தீட்ட ஒளிதரும். இதன் பல்லைப் பாலில் போட்டு ஊற வைத்துக் குழந்தைகளுக்குக் கொடுத்துக் கொண்டுவரப் பற்கள் விரைவில் முளைக்கும். இதன் இரத்தத்துடன் கொத்துமல்லி இலைச் சாறு விட்டுக் கூட்டி மயிர் முளைக்க விருப்பமில்லாத இடங்களில் தடவி வர மயிர் முளைக்காது.

கரடி நெய்

(Bear's Fat)

வாதப் பிடிப்போடு வந்தகக்கு வானகலும்
ஓதக்கா லின்வெடிப்பும் ஓட்டமிடும்—பூதலத்தில்
காட்டுக் கரடியுடற் காண்கொழுப்பைத் தானுருக்கி
ஊட்டிற் குணமாக்கு முன்.

குணம்:—(இ - ள்.) கரடி நெய்யால் கீல் பிடிப்பு கக்குவாய் இருமல், காலின் வெடிப்பு முதலியவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—கரடியின் கொழுப்பை நெருப்பனலில் உருக்கி வடிகட்டி வாயகன்ற கோப்பையில் விட்டு மேல்மூடி வைத்துக்கொள்க. இதனைச் சீரகக் கியாழத்தில் இரண்டு மூன்று துளி விட்டுக் கலக்கிக் குழந்தைகளுக்குக் கொடுத்துக்கொண்டுவரக் கக்குவாய் இருமல் நிவர்த்தியாகும். இந்த நெய்யைக் கீல்களில் உண்டான வீக்கம், பிடிப்பு முதலியவற்றிற்கு நன்றாய்த் தேய்த்துத் தாளக்கூடிய வெந்நீரைத் தாரையாக விட்டுக்கொண்டுவர, நோய் நீங்கும். இன்னும் இதனை எக்காரணத்தைக் கொண்டாவது கீல் சம்பந்தமான ஜ்வ்வு, மாமிசம் முதலியவைகள் காடு கட்டியிருக்கும் பாகங்களில் தேய்த்துவர எளிதில் நீட்டவும் மடக்கவும் செய்யும். குளிர்ச்சியினாலுண்டான வெடிப்புகளுக்கு இதனை தடவிவர விரைவில் ஆறும். இன்னும் இதனை வெண்குட்டமுள்ள படைகளுக்குத் தடவிவர மாறும்.

கருங்குருவி

(Karunkuruvi)

வாதகா மாலையறு மாதே கபழம்போ
ழுதுகா மாலைவிழுந் தோடுங்காண்—வாதுசெய
வந்தகரப் பானுடனே மாறுச் சொறியும்போங்
குந்து கருங்குருவி கொள்.

குணம்:—(இ - ள்.) கருங்குருவிக் கறியை யுண்ணில் வாதக் காமாலை, விஷம சிலேஷ்மம், ஊது காமாலை, கரப்பான், தீராச் சொறி இவைகள் போம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைக் கிரமப்படி சமைத்து உண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் யாவும் ஏற்படும்.

கருங்கோழி

(Black Hen)

குட்டங் கடிகிருமி கோரவா தக்கூட்ட
மட்டிடாச் சூலையறு மாதரசே—துட்ட
கிரந்தியோடு புண்வலிபோங் கேளுடலு றக்கு
மருந்துகருங் கோழியூன் வை.

குணம்:—(இ - ள்.) மருந்தாகிய கருங்கோழியால் குஷ்டம் காணக்கடி, புழு, மகா வாதங்கள், சூலை, சிறு சிரங்கு, விரணம், வலிப்பு இவை போம். உடல் வலுக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் சித்திக்கும். சிலர் இதன் இறைச்சியைப் பொதுவாகத் தினசரி பதார்த்தங்களில் ஒன்றுகச் சேர்த்துவரினும் இது மேற்கூறப்பட்ட ரோகங்களுக்கு ஒரு பெரிய மருந்தாகும்.

கருவெளவால் மீன்

(Stromateus Argenteus)

சேங்கரப்பான் மேகஞ் சிறுசிரங்கு முண்டாகும்
வெங்கோடிய நீரிழிவும் வீர்த்தியாங்—கோங்கைகளிற்
பாலூறு மெத்தப் பருகிற் கருவெளவான்
மேலூறும் போகம் விதி.

குணம்:—(இ - ள்.) கருவெளவால் மீனைத் தின்னில் செங் கரப்பான், பிரமேகம், சிறு சிரங்கு, வெகுமூத்திரம், வீரிய விருத்தி, முலைப்பால் இவைகள் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி வறுத்தாவது குழம்பிட்டாவது அடுத்துப் புசித்துவரத் தாதுபுஷ்டி அதிகரிக்கும் பிரசவித்த ஸ்திரிகளுக்கு முலைப்பால் சுரப்பு அதிகரிக்கும். ஆனால் தோல் சம்பந்தமான சில ரோகங்கள் வரும் என்பதைக் கவனிக்கத் தக்கது.

கலைமான்

(Stag)

மேகப் பிடிப்பகலும் வெட்டை யனலுமறும்
போக முறும்பலனும் பூவையரே—தேகத்திற்
பித்தவா தங்களறும் பேரா வழலையும்போந்
தத்துகலை மான்கறிக்குத் தான்.

குணம்:—(இ - ள்.) கலைமான் இறைச்சிக்கு மேகவாதப் பிடிப்பு, வெள்ளை, சுரம், பயித்தியவாதம், உள்ளழலை இவைகள் போம். விந்துவும், சரீர பலமும் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைச் சமைத்துண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்ட குணங்கள் ஏற்படும். இன்னும் இதன் பித்தநீரைக் காது வலிக்குவிட நிவர்த்தியாகும். இதன் கஸ்தூரியைச் சிறு அளவாக அவிழ்தங்களில் கூட்டிக்கொடுக்கச் சலதோஷத்தை நீக்கும். மூளைக்குப் பலம் கொடுக்கும். நெஞ்சுத் துடிப்பை மாற்றும். விஷங்களை முறிக்கும். ஆனல் சிறிது பித்தஞ் செய்யும்.

கலைமான் கொம்பு

(Stag's Horn)

அவயவத்தின் வெப்ப மதியத்தி மேகங்
கவிழ்தீரீதோ டம்பெருந்தா கங்க—ளிவைதா
னிலைக்குமோ மார்புநோய் நேத்திரநோய் நீங்கும்
கலைக்கோம்பாற் பேயுமிலை காண்.

குணம்:—(இ - ள்.) கலைமான் கொம்பினுல் கை கால்களில் எரிவு, அஸ்திமேகம், முத்தோஷம், விதாகங்கள், மருமவலி, கண்ணோவு, பிசாசம் இவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனை இடித்துத் தூள்செய்து நெருப்பனலில் போட்டுப் புகையுண்டாக்க அவ்விடத்தில் சஞ்சரிக்கின்ற சிறு பூச்சிப் புழுக்கள் ஒழியும். இந்தக் கொம்பைச் சந்தனக் கல்லில் நன்ருய் உரைத்தெடுத்து நெஞ்சுக்குழி, மார்பு முதலிய விடங்களில் பூச மார்புவலி நீங்கும். இதனுடன் சிறிது பிராந்தியும், சலமும் கூட்டிக் கலக்கி உள்ளுக்குச் சாப்பிட மார்பு நோயைக் குணப்படுத்தும். இதனைப் பெரும்பாலும் பற்பமாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

சிங்கி பற்பம்

ஐந்து பலம் கலிமான் கொம்பைச் சிறு துண்டுகளாக நறுக்கி யாவது அல்லது பிளந்தாவது ஒரு மட்கலயத்தில் போட்டு அதில் அகத்திக் கீரையை மெழுகு பதமாக அரைத்துச் சுமார் ஒரு பெரிய தேங்காய்ப் பிரமாணம் போட்டு ஒருபடி சுத்த சலம் விட்டுக் கலக்கி அடுப்பில் வைத்து நீரெல்லாம் முற்றிலும் சுண்டும்படியாக எரித்து ஆறவிட்டுக்கொம்புத் துண்டுகளை யெல்லாம் சுத்தமாகத் துடைத்து வைத்துக்கொள்க. அப்பால் உத்தாமணி யிலையைச் சாந்துபோ லரைத்துச் சுமார் ஒரு தேங்காய்ப் பிரமாணம் திரட்டி அதன் நடுவில் முன் சித்தப்படுத்திய கொம்புகளைச் செருகி மண்சீலை 7, 8-செய்து ஒரு நாள் ரவியில் உலர்த்தி மறுநாள் 100-வறட்டியில் புடமிடவும். புடம் நன்றாய் ஆறினபின் சோதித்துப் பார்க்க கொம்புத் துண்டுகள் யாவும் நீற்றிருக்கும். அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

ஒரு சந்தர்ப்பம் நிறமானது சுத்த வெள்ளையாக இராவிடின் சிறிதும் கால தாமதம் செய்யாமல் கல்வத்திலிட்டு வெள்ளாட்டு பால் விட்டு ஒரு சாமம் அரைத்து அரையணு கனமும் அகலமும் உள்ள வில்லைகளாகத் தட்டி உலர்த்தி அகலில் பரப்பி மேல் அகல் மூடிச் சீலைசெய்து 60, 70-வறட்டியில் புடம்போட நல்ல பற்ப மாகும். வேண்டும்போது இந்தப் பற்பத்தில் வேளைக்கு 1, 2-குன்றி யெடை உஷ்ண தேகிகளுக்கு நெய்யிலும், சீதள தேகிகளுக்கு தேனிலும் அனுபானம் செய்து தினம் இருவேளை கொடுத்துவர மார்புவலி, கோழைக்கட்டு, உதிரவாந்தி, உதிரக்கடுப்பு, பேதி, காமாலை, வெள்ளை இவைகள் நீங்கும்.

வேறு முறை

ஐந்து பலம் மான் கொம்பைக் கொண்டுவந்து சிறு துண்டுக ளாகப் பிளந்து ஒரு குடுவையில் போட்டு மூழ்கக் குப்பைமேனி இலைச்சாறு விட்டு வெய்யிலில் வைத்துச் சுண்டிவரும் தறுவாயில் வழித்து எடுத்து அதற்குமேல் குப்பைமேனி யிலையையே மெழுகு வண்ணம் அரைத்துக் கவசமிட்டு மண்சீலை செய்து உலர்த்தி 100-வறட்டியில் புடமிடவும். இதுவும் ஒரு சமயம் போதுமான வெளுப்பில்லாவிடின் வெள்ளாட்டுப் பால் விட்டு அரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி உலர்த்தி அகலில் பரப்பி மேல் அகல் மூடிச்

சீலைசெய்து 60, 70-வறட்டியில் புடமிட நல்ல பற்பமாகும். அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்குக் குன்றியெடை தினம் இருவேளை தேனில் கொடுக்க இருமல், சூலை, வாயு சம்பந்தமான மார்புவலி, வயிற்றில் சஞ்சரிக்கும்படியான வாயு, தேகக்கடுப்பு முதலியவைகள் குணமாகும்.

வேறு முறை

முன் முடித்த சிங்கி பற்பம்-1 தோலாவடையைக் கல்வத்திலிட்டு இதற்குச் சமனெடை அதிகச் சன்னமாகத் தகடடித்து கடிதங்களின் இடையில் வைத்து வருகின்ற வெள்ளி ரேக்கைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கூட்டிக் கற்சுண்ணும்பு நீர்விட்டு அரைத்து வருக. வெள்ளியின் பளபளப்பு மாறின சமயம் வில்லை தட்டி அகலில் வைத்து மேல் அகல்மூடிச் சீலைசெய்து 10-வறட்டியில் புடமிடவும். இப்படி 2, 3-புடம் போட்டு எடுக்க நல்ல பற்பமாகும். இதனில் ¼, ½-குன்றியெடை தினம் இருவேளை தகுந்த அனுபானங்களில் கொடுத்துவர மார்பு நோய், தேகத்திலுண்டான நரம்புகளின் வலி, தேகத் தர்ப்பலம், மார்புதடிப்பு முதலியவைகள் குணமாகும்.

கவுதாரி

(Francolinus Pondicerianns)

சிவலிறைச்சி பித்தஞ் சிலேஷ்மமந்தம் வாதக்
கவலையற வோட்டியுடல் காக்கும்—புவனமதின்
மெய்க்குப் பலஞ்செய்யும் வீரியமு முண்டாக்குஞ்
சிக்கியம லங்கழிக்குஞ் செப்பு.

குணம்:—(இ - ள்.) கவுதாரிக்கறி - பயித்தியம், ஜலமந்தம், வாதவலி, மலக்கட்டு இவைகளை நீக்கும். வன்மை, வீரியம் இவைகளை விருத்தி செய்யும். உடலை இரட்சிக்கும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும். இதனை அடிக்கடி உபயோகப்படுத்தத் தாது புஷ்டியும் அறிவு விளக்கமும் உண்டாகும்.

கழுதைப் பால்

(Ass - milk)

கழுதைப்பால் வாதங் கரப்பான் விரணந்
தழலையுள் வித்திரதி தானே—யெழுகின்ற
ஓட்டியபுண் சீழ்மேக மோடு சோறீசிரங்கு
கட்டியிவை போக்குங் கழறு.

இதுவுமது

கர்த்தவத்தின் பாற்குக் கரிய கிரந்தியறுஞ்
சித்தப் பிரமைபித்தந் தீருங்காண்—தத்திவரும்
ஐய மொழியு மதிக மதுரமுமாஞ்
செய்ய மடமயிலே செப்பு.

குணம்:—(இ - ள்.) கழுதைப்பால் மிகு மதுரமுடையது. இது வாதநோய், கரப்பான், புண், தழுதளை ரோகம், உள்வித்திரிதிக் கட்டி, ஓட்டுக்கிரந்தி, சீழ்ப்பிரமேகம், சொறி, சிரங்கு, அற்புத விரணம், கருங்கிரந்தி, சித்தப்பிரமை, பித்ததோஷம், கபநோய் இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாகவும், அவிழ்தங்களுக்கு அனுபானமாகவும் கொடுக்க இச் செய்யுளிற் கண்ட குணங்கள் உண்டாகும். இன்னும் இதனை அதிகமாக அழுகின்ற குழந்தைகட்குக் கொடுக்க அழுகை நிற்கும்.

கழுதை மூத்திரம்

(Ass - Urine)

வேசரிநீ ரால்வெப்பம் வீரியநஷ் டங்குஷ்டங்
காச மிரைப்புவிஷங் காற்கிருமி—வீசிடுபுண்
மேகமபஸ் மாரம் வெடியக்க ரங்கிரந்தி
போகுமின்னுஞ் சேய்ப்பிணியும் போம்.

குணம்:—(இ - ள்.) கழுதை மூத்திரத்தால் உஷ்ணம், தாதுநஷ்டம், அவதும்பரகுஷ்டம், இருமல், க்ஷயம், சில்விஷம், கால்களுள்ள கிருமி, விரணம், தந்திமேகம், அபஸ்மாரம், ஜிக்வாகண்டக ரோகம், கிரந்தி, பாலரோகங்கள் ஆகிய இவைபோம் என்க.

செய்கை:—சமனகாரி, கபஹரகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைத் தனியாகக் கொடுப்பது கிடையாது. இதை இளஞ்சூடாகக் காய்ச்சி வடிகட்டி 1, 2-துளி வீதம் காதில் விட்டுக்கொண்டு வரக் காதுநோய், காதுரணம், காதில் கிருமி உற்பத்தி முதலியவைகள் குணமாகும். இதைத் கழுதைச் சாணத்துடன் கூட்டிக் கரைத்து வடிகட்டிச் சில தைல பாகங்களில் கூட்டிச் செய்வதுண்டு. அந்தத் தைலத்தைக் கிரமப் படி உட்கொள்கிறவர்களுக்கு இச்செய்யுளின்கண் கூறியுள்ள நோய் கள் யாவும் குணமாகும்.

கஸ்தூரி

(Moschus Moschiferus)

சொல்லநும் வசியங்காந்தி சுகழுத லணுகும்பின்னு
மெல்லியார் தமக்குநாத விருத்தியாந் தலைநோயேகும்
பல்லுறு கபழந்தீநும் பகரோணப் பலழுண்டா
மல்லடர் சந்நிநட்சை மாறுங்கத் தூரிக்காயே.

குணம்:—(இ - ள்.) கஸ்தூரிக்குத் தலைநோய், கபதந்தமூலம், சந்நி சுரம் போம்; வசியம், தேஜசு, சவுக்கியம், மாதர்க்கு நாத விருத்தி, வன்மை இவைகள் உண்டாம் என்க.

இந்தக் கஸ்தூரியானது ஐந்து விதமாகப் பேதப்படும் அதாவது:—

கத்தூரி யைந்தாங் கரிகைதில கைதளுந்தை
கைத்தபிண்ட கைநாய கைழறையே—மோய்த்தசிவப்
பேள்ளுகோளு கட்டி சிறிதுபரு மங்களென
விள்ளுமிவைக் கேகும் விதி.

(இ - ள்.) கஸ்தூரியானது கரிகை, திலகை, குளுந்தை, பிண்டகை, நாயகை எனவும் அதில் கரிகை சிவப்பு நிறமாகவும், திலகை எள்ளின் உருவமும், குளுந்தை கொள்ளினது வடிவமும், பிண்டகை கட்டிகட்டியாகவும், நாயகை சிறிய பெரிய உருண்டைக ளாகவும் இருக்கும். இவைகளெல்லாம் சந்நிபாதம், அசீரணம், பிரசவ ஆயாசம் முதலிய நோய்களை விலக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, பலகாரி, காமவிர்த்தினி, அங்கா கர்ஷணாகினி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக உயர்ந்த கஸ்தூரியை வேளைக்கு ½, 1-குன்றி எடை முலைப்பால், தேன், பச்சை வெற்றிலைச் சாறு இவைகளில் ஏதேனும் ஒன்றில் அனுபானம் செய்து கொடுக்கலாம். இது இருதயத்தின் நடையைக் கிரமம் தப்பிப் போகாமல் காக்கும். இன்னும் கப சம்பந்தமான சுரம், அளவு கடந்து திடீரென்று அதிகரிக்கும் சுரம், விஷபேதி முதலியவற்றில் நாடி தவறும் சமயம் இத்தகைய சிகிச்சை அதிகம் சிறந்தது.

பிரசவித்த ஸ்திரீகளுக்குண்டாகும் சிரமத்தினால் இருதயத்தின் நடைகுறைந்து அடங்க ஆரம்பிக்கும். அத்தருணம் ½, 1-குன்றி எடை கஸ்தூரியை வெற்றிலையில்2வைத்து மென்று தின்னும்படியாகச் செய்வது அதிக அவசியமானது. இன்னும் இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டிச் செய்வதுண்டு. அவற்றுள் சில அனுபவ முறைகளாவன:—

கஸ்தூரி மாத்திரை

கஸ்தூரி விராகனெடை-2, குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக் கற்பூரம், கிராம்பு, வால்மிளகு, ஏலம், கற்பூரம், ஜாதிக்காய், ஜாதிப் பத்திரி, மிளகு, திப்பிலி வகைக்கு விராகனெடை-1 ஆக இவற்றைக் கல்வத்திலிட்டு, கிராம்புக் கியாழம் விட்டு 3, 4-மணி நேரம் நன்றாய் அரைத்து மெழுகு பதத்தில் பயறு, உளுந்து பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் புட்டியில் பத்திரப் படுத்துக. இதனைக் குழந்தைகட்கும் பெரியவர்களுக்கும் வயதுக்குத் தக்கபடி அனுபானங்களில் கொடுக்கச் சுரம், சந்நிதோஷம், காவறட்சி, ஜலதோஷம், தலைபாரம் முதலியவைகள் போம். குழந்தைகட்கு 1, 1½-மாத்திரையாகவும் பெரியவர்களுக்கு 3, 4-ஆகவும் கொடுக்கலாம்.

வேறு முறை

கஸ்தூரி குன்றி எடை-4, கோரோசனை குன்றி எடை-8, குங்குமப்பூ, பச்சைகற்பூரம், அதிமதுரம், அக்காரகாரம், கிராம்பு, பொரித்த வெங்காரம் வகைக்கு விராகனெடை-½, சுத்தி செய்த லிங்கம் விராகனெடை-1 இவைகளைக் கல்வத்திலிட்டு முலைப்பாலினாலும் இஞ்சிச்சாற்றினாலும் தனித்தனி இரண்டு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் உளுந்தளவு மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்துக. இதனைக் குழந்தைகட்கு

உண்டாகும் எத்தகைய சுரங்களுக்கும் துளசிச் சாற்றிலேனும் நாய்துளசிச் சாற்றிலேனும் அல்லது இவைகள் கிடைக்கப்பெறுத காலத்தில் தேன், முலைப்பால் முதலியவற்றிலேனும் கொடுக்கத் தீரும்.

கஸ்தூரி மெழுகு

கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், இரச செந்தூரம் வகைக்கு விராகனிடை-¼, திப்பிலி, மிளகு, கிராம்பு, சிற்றரத்தை, கண்டுபாரங்கி, தாளிசபத்திரி, அதிமதுரம், அக்கர காரம் வகைக்குத் தனித்தனி சூரணம் பலம்-¼. இவைகளுள் முதலில் திப்பிலி முதல் அக்கரகாரம் ஈறுகவுள்ள சரக்குகளைக் கல்வத்தில் போட்டுத் தேன் விட்டு 2, 3-மணி நேரம் அரைத்து அப்பால் மற்றச் சரக்குகளைக் கூட்டி மீண்டும் துளித்துளியாகத் தேன்விட்டு ஒருமணி நேரம் நன்றாய்க் கலக்க அரைத்து, வழித்துக் காற்று நுழையாத வாய் அகன்ற கொம்பு டப்பியிலாவது அல்லது காற்று நுழையாத கல்கார்க்கிட்ட புட்டியிலாவது போட்டுப் பத்திரப்படுத்துக. குழந்தை கட்குப் பயறு உளுந்தளவாகவும் பெரியவர்களுக்கு 1, ½-குன்றி அளவாகவும் தகுந்த அநுபானங்களில் கொடுக்க ஜலதோஷம், சுரம், வாயு, தொண்டைக்கட்டு முதலிய பல வாத சீதள சம்பந்தமான பிணிகள் போம்.

காக்கைப்பித்து

(Crow's Bile)

கண்ணுக் கொளிவுதரும் கண்ணரிப்பு நீர்முட்டல்
புண்ணும் புழுவெட்டும் போக்கிவிடும்—மண்ணுலகில்
சுத்தழறும் பூங்குழலே சொல்லரிய காக்கையதன்
பித்தின் பேருமையெனப் பேசு.

குணம்:—(இ-ள்.) காக்கைப்பித்தால் கண்ணூறல், கண்ணில் நீர்வடிதல், கண்ணிறப்பையில் உண்டான விரணம், கண் மயிர் உதிர்தல் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—காக்கையின் பித்தில் இருக்கும்படியான நீரை எடுத்து அதற்குச் சமன் சுத்தமான அசல் தேன் கூட்டிக் கலந்து வடிகட்டிச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இதனைக் கைவிரலில் தொட்டுக்கொண்டு கண்களுக்குத் தீட்டி வருக. இப்படிக் காலை, மாலை, சில தினம் தீட்டிவர இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள ரோகங்கள் குணமாகும்.

காடை

(Tetrao coturnix)

கட்டிற் கிடப்பார்க்குக் காட்டிற் படுங்காடை
மட்டலிழங் கோதாய் மருந்தன்றே—விட்டமுறச்
சோறுபுகுஞ் சோபையறுந் துன்னோயே லாமேகும்
வேறுமருந் தேற்றுவதேன் வீள்.

குணம்:—(இ-ள்.) படுக்கையி லிருப்பவர்களைத் தேற்றுகின்ற காடைக்கறிக்கு அசனஞ்செல்லும். வீக்கமும், மெலிவினால் கிளைத்த சகல நோய்களும் போம் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்களுமன்றி வாந்தி, நெஞ்சடைப்பு, குத்தல் முதலியவைகள் போம். நெடுநாள் வியாதியி லிருந்து தேறி வருகிறவர்களுக்கு நல்ல ஆகாரமாகும். இதன் இரத்தத்தை மயிர் உதிரும்படியான இடங்களில் தடவிவர உதிராமல் செழிப்பாக வளரும். இதன் எலும்பைச் சுட்டுக் கரியாக்கி நல்லெண்ணெயில் மத்தித்து மயிர்முளைக்க வேண்டிய இடங்களில் தடவிவரச் செழிப்பாய் முளைக்கும். எலும்பிலுள்ள பசையை எடுத்துக் கீல் விலக்கத்திற்குத் தடவிவரக் கூடிவிடும். பித்துநீரைக் கண்களுக்குத் தீட்ட மாசை யகற்றும்.

காடைச்சாறு

(Tetrao Coturnix - soup)

போற்றுடி மாதேகண்ணின் புண்ணோடு பிணியேலாம்போம்
வற்றிய உடல்பருக்கும் வாதபித் தையுமேதுஞ்
சுற்றிய கிராணிகுன்மஞ் சுரம்பல சுவாசகாச
மற்றிடுங் காடைச்சாற்று லாவியும் வளருங்காணே.

குணம்:—(இ-ள்.) காடைச் சாற்றினால் போதகி வர்த்தம் முதலிய சில நேத்திர நோய்கள், சந்நிபாத தோஷங்கள், கிரகணி, வயிற்று நோய், சுரம், சுவாசம், காசம் இவைகள் போகும். இளைத்த உடம்பு பருக்கும். ஆயுள் வளரும்.

செய்கை—பலகாரி, சுரஹரகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—தேவையான காடைகளின் சிரசுகளை அறுத்து மேலுள்ள இறகுகளை யெல்லாம் கழித்து முழங்கால் வரையில் தரித்துவிட்டு வயிற்றையும்கீறி உள்ளுறுப்புகளை வெளியாக்கிச் சுத்த சலத்தில் அலம்பி நெருப்பனலில் வாட்டி உரலிலிட்டு இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டுத் தேவையான அளவு சலம் விட்டு இறைச்சிக்குத் திட்டமாக உப்பு, மிளகுத்தூள், தனியா, இஞ்சி, இலவங்கப்பட்டை முதலியவற்றைக் கூட்டி இறைச்சி வேக, அடுப்பில் வைத்து எரித்து முறைப்படி தாளித்து வடிகட்டிச் சாப்பிட இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் ஏற்படும்.

காட்டுப்பன்றி
(Wild Pig)

ஏறிய வாதம்போகு மெழம்பிடுங் காசநோய்கள்
வீறிடும் விழிநோய்சீதம் விஷக்கடி கிரந்தியுண்டாங்
கூறிடு முலங்கீலங் குதங்குடல் வாதநாசம்
மாறிடு காட்டுப்பன்றி மாங்கிசந் தன்னியுண்பார்க்கே.

குணம்:—(இ - ள்.) காட்டுப்பன்றி யிறைச்சியைத் தின்ப வர்க்கு அதிகரித்த வாயுமூலம், சருமகீலம், குதப்பிரம்ஸ ரோகம், குடல் விருத்தி இவை நீங்கும். இருமல், நேத்திர நோய், கபம், விஷக்கடி விரணம் இவை யுண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:— இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ணப் பல நன்மைகளிருப்பினும், அடுத்தப்படியாக சில தூர்க்குணங்களிருப்பதினால் சந்தர்ப்பமறிந்து உபயோகப்படுத்தல் வேண்டும். இதனை வழக்கத்தின்கீழ் வைத்துக்கொள்வது நன்றன்று.

காளுங்கோழி
(Amaurornis Phoenicurus)

உத்தமமா நோயகத்து மோடு மிருமலறும்
பத்திய மாங்கரப்பான் பாறுமே—முத்தவோளி
தாளுங் கனிமொழியே சார்ந்த மறுவகலுங்
காளுங்கோ ழிக்கறியைக் காண்.

குணம்:—(இ - ள்.) காளுங்கோழிக்கறியால் வாதகப நோயினங்கள், காசம், காப்பான், வியங்கலாஞ்சனம் இவைகள்போம். பத்தியத்திற்குதவும் என்க.

செய்கை:—காம வர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளிற் கூறப்பட்டுள்ள குணங்கள் யாவும் ஏற்படும்.

கிழங்கான் மீன்

(Sillago Sihama)

பத்தியத்திற் கேற்ற பருங்கிழங்கான் மீனருந்த
வுற்றபிணியகன்று மோடுங்காண்—மெத்தப்
பசியெழும்புஞ் சேர்ந்த பழமலமுஞ் சாறு
முசியா துடல்வளரு முன்.

குணம்:—(இ - ள்.) பத்தியத்திற்கான கிழங்கான் மீனைத் தின்றால் சகல பிணிகளும் பழய மலச்சிக்கலும் போம். தீபாக்கினியும் தேகச் செழுமையும் உண்டாம் என்க.

செய்கை:—ஜடராக்கினி வர்த்தினி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்களெல்லாம் உண்டாகும்.

கிளிஞ்சல்

(Ostrea Edulis)

ஏரிக் கிளிஞ்சலதை ஏந்திழையே நீகண்டு
கோரித் துகளாக்கிக் கொண்டேபன்—னீரில்
அரைத்தேநீர்க் கட்டுக் கடிவயிற்றில் பூசக்
கரைத்தே விடும்நீரைக் காண்.

குணம்:—(இ - ள்.) ஏரிக்கிளிஞ்சலின் சிப்பியைத் தூள்செய்து பன்னீர் விட்டு நன்றாய் அரைத்து அடிவயிற்றுக்குப் பூச நீர்க்கட்டை உடைத்துவிடும் என்க.

செய்கை:—மூத்திர வர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இச் செய்யுளின்கண் இனிது விளங்கும்.

கீரிப்பிள்ளை

(Mungoose)

கீரி யிறைச்சிக்குக் கெம்பீர முண்டாகு
நீரிழிவு மேகுமென்பார் நிச்சயமே—வீரியமாஞ்
சில்விஷம்விட் டேகுஞ் சிரங்கு சொறியகலும்
பல்லரிணை போகும் பறந்து.

குணம்:—(இ - ள்.) கிரி யிறைச்சியினுல் தைரியமும் சுக்கில விருத்தியும் உண்டாம். வெகு மூத்திரம், அற்பவிஷம், கிரந்தி, நமை, பல்லரணை இவைகள் போம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் உண்டாகும். இதனுடைய தலை மூளையைக் கண்களில் மைதீட்டக் கண்ணொளி அதிகப்படும். இதன் மாமிசத்தைக் கீல் வாதங்களுக்கு வைத்துக் கட்டக் குண மாகும். இதன் கொழுப்பைப் பல்வலி, பல்லரணை முதலியவற் றிற்கு மேற்றடவக் குணமாகும். இதன் பிடரி ரத்தத்தைக் கண்டமாலைக்குப் பூச குணமாகும்,

குதிரைப்பால்

(Horse's Milk)

வீரிய விருத்தி வீளைக்குமழ குண்டாக்குங்
காரியத்திற் காமங் கதிப்பிக்கும்—வாரார்
கரகமெனச் சேப்புழலைக் காரிகையே கேளாய்
துரகதப்பால் செய்யுந் தொழில்.

குணம்:—(இ - ள்.) குதிரைப்பால் சுக்கிலப் பெருக்கத்தையும் சரீர வனப்பையும், புணர்ச்சியில் நிருவாகத்தையும் உண்டாக்கும் என்க.

செய்கை:—காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் பாலை அருந்துவதினுல் இச் செய்யுளிற் கூறப்பட்டுள்ள குணங்கள் உண்டாகும்.

குதிரை மூத்திரம்

(Horse's Urine)

பாதவன் மீகம் படர்தடிப்பு நீள்கிருமி
வாத மோடுகபழ மாறுங்கா—ணுேதரிய
போற்குவட்டை யோத்தழலைப் பூவையரே சூடுழண்டா
நற்குதிரை மூத்திரத்தி னுல்.

குணம்:—(இ - ள்.) சூடுள்ள குதிரை மூத்திரத்தினுல் பாதப் புற்று, கண்டு கண்டாகத் தடித்தல், கிருமிரோகம், வாதரோய், கப தோஷம் இவைகள் போம் என்க.

உபயோகிக்கும் முறை:—குதிரை மூத்திரத்தைக் குழம்பாகக் காய்ச்சி மேல் தடவி வருவதினால் இச் செய்யுளிற் கூறப்பட்ட ரோகங்கள் குணமாகும். இதற்கு அதிக கசப்புச் சுவையுண்டு, இது வயிற்றுவலியைக் குணப்படுத்தும். ஆனால் அளவு கடந்த உஷ்ணத்தை யுண்டாக்கும். இது கபரோகத்திற்கு அனுகூலமாக இருப்பினும் பித்தத்தை விருத்தி செய்யும். இன்னும் மலப் போக்கை யுண்டாக்கிக் கிருமிகளை யகற்றுவதுடன் வாயுவையும் கண்டிக்கும்.

குயில்

(Eudynamis Honorata)

நல்லதோ ரபத்தியமா நாடாது வாதபித்தஞ்
சொல்லரிது தானே சொறியேகும்—வல்ல
குயிலநந்த மேகமிப்போங் குன்மவலி தீநந்
துயிலிமதி போகமறுஞ் சோல்.

குணம்:—(இ - ள்.) பத்தியத்திற்கான குயில்கறி யுண்டால் வாதப் பயித்தியம், புடை, பிரமேகம், வயிற்றுவலி இவைகள் போம். வீரிய விருத்தி யுண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும்.

குறவை மீன்

(Ophiocephalus Gachua)

முட்டு குடல்வலிபோ முடிநம லேகுமலக்
கட்டுரக்கும் வாயருசி காணுங்காண்—முட்டத்
துறவைப்பெற் றேநந் துதிக்குமெழின் மாதே
குறவைமீ னின்குணத்தைக் கூறு.

குணம்:—(இ - ள்.) குறவை மீனால் - குடலுக்குள் ஒடிக்குத்து கின்ற நோயும் :காசமும் போம். மலபந்தமும் அரோசகமும் உண் டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சமைத்துண்ண நல்ல ருசி யாக இருக்கும். இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்களும் ஏற்படும்.

குறும்பாடு
(Kurumbadu)

குறும்பாட் டிறைச்சிதனைக் கொண்டார்கட் கெல்லா
மெறும்பார் சோறீசிரங்கு மெய்து—மிறங்குங்
குடல்வாதஞ் சூலை கொடுமனீலக் கூட்ட
முடனே யடருமென வோர்.

குணம்:—(இ - ள்.) குறும்பாட்டு இறைச்சியை யுண்பவர்க்கு எறும்பு மொய்க்கின்ற நமைக்கிரந்தியும், பீசவாயுவும், சூலைநோயும், வாதவருக்கமும் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைச் சமைத்துண்பது நன்றன்று. ஒருகால் ருசியின் பொருட்டு உட்கொண்டாலும் அடுத்து உண்பது எவ்விதத்திலும் தீமையை உண்டாக்கும்.

கெண்டைமீன்
((Cyprinus Fimbriatus)

அண்டையினிற் பார்களுக்கு மாரோசி கங்காணும்
பண்டையுள நோய்முதிர்ந்து பாரிக்குங்-கெண்டையுண்டால்
வாயுவுமுண் டாகும் வயிற்றுவலி யுஞ்சேரு
நீயு மறிவாய் நிசம்.

குணம்:—(இ - ள்.) கெண்டை மீனைத் தின்றல் மிகுந்த அருசி, பழமையாயடங்கியுள்ள ரோகங்கள், வாதப்பிணி, சூன்மம் இவைகள் அதிகரிக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைக் காதலித்து உண்பார்க்குப் பல பிணிகள் சம்பவிக்கும். ஆதலால் விசேடமாக உபயோகப்படுத்தாமலிருப்பதே அதிக நலம்.

கெளிற்றுமீன்
(Silurus Vittales)

நெய்த்திருக்கு நோய்த்திருக்கு நீங்காத சுக்கிலமா
மொத்திருக்கும் வன்கெளிற்றை யுண்டாற்காண்—மெத்தக்
கரப்பானும் புண்ணுங் கபமும் பெருகுந்
தரைக்கு ளேவருக்குஞ் சாற்று.

குணம்:—(இ-ள்.) நெய்ப்பசையும் மிருதுவும் உள்ள கெளிற்று மீனை உண்ணில் மாருத வீரியமும், அரைக்கடுவணும், விரணமும், சிலேஷ்மமும் பெருகும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ணில் இச் செய்யுளிற் கூறியவண்ணம் தாது விருத்தியாகும். தேகம் கொழுமை பெரும். அடுத்து உண்பதில் பல தீங்குகள் நேரும்.

கோரோசனை

(Bezoar)

நீரிழிவு மேகசுர நீங்காக் கனல்வேகங்
கூரியவுன் மாதங் குழந்தைகணோய்—பாரகபம்
வீறு மசூரியும்போம் வேதந் தனிலிரண்டாய்க்
கூறுங்கோ ரோசணைகட் கு.

குணம்:—(இ - ள்.) மரன் வயிற்றிலும், பசுவின் வயிற்றிலும் பிறக்கும்படியான இருவகைக் கோரோசனைக்கும் மேகநீர், மேக வெட்டை, பித்தகோபம், உன்மாதம், சிசுக்களுக்குண்டாகின்ற கணமாந்தம் முதலிய ரோகங்கள், சிலேஷ்மாதிக்கம், மசூரியைப் புண் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை வேளைக்கு கால் அல்லது காலேயரைக்கால் குன்றியெடை வீதம் பெரியவர்களுக்குக் கொடுக்கலாம். குழந்தைகட்கு மேற்படி எடையில் நாலில் ஒருபாகம் வயதுக்குத் தக்கபடி கொடுக்கலாம். இதைத் தேன் அல்லது முலைப்பால் இவைகளில் அனுபானம் செய்து கொடுக்கத் தேகத்தின் வெப்பத்தைத் தணிக்கும். அம்மையினுடைய கொதிப்பை யகற்றும். கம்மாறு வெற்றிலைச் சாற்றில் அனுபானம் செய்து கொடுக்கக் குழந்தைகட்கு உண்டாகும் கக்கிருமல் முதலாகிய பல கப சம்பந்தமான இருமலை நீக்குவதுடன் சலரூபமாகக் கழிவதையும், பச்சை நிறமாகக் கழிவதையும், ரசம்புகளில் ஏற்பட்ட வலியையும் நீக்கும். இன்னும் இந்தக் கோரோசனை பித்த விகற்பத்தினுண்டான காமாலை, வாயு, சயித்தியம், கல்லடைப்பு, நீரடைப்பு, ஸ்திரீகளுக்குக் காணும் உதிரச் சிக்கல் முதலியவற்றிற்குச் சிறந்ததாகும்.

முலைப்பாலில் உரைத்துக் கண்களுக்குத் தீட்ட பிரகாசம் அதிகரிக்கும். கண்களிலுள்ள மாசுக்களை வெளிப்படுத்தும், இன்னும் உமிழ்நீரில் உரைத்து மேலுக்குப்பூச வெண்குட்டம், கருங்குட்டம், படை இவைகள் போம். கொத்துமல்லி இலைச்சாற்றில் அரைத்துப் புண்களுக்குப் பூச விரைவில் ஆறும். சிவப்பு முள்ளங்கிச் சாற்றில் உரைத்துக் கண்களுக்குத் தீட்டக் கண்ணீர் முட்டல் நீங்கும். இதைச் சிறிய அளவாக தீடித்துச் சாப்பிட்டுக்கொண்டு வருவதுடன் பட்சிகளின் இறைச்சியை உபயோகித்துக் கொண்டுவரச் சரீரம் இரும்புபோலாகும். தேகம் பெருக்கும். இத்துடன் இதரச் சரக்குகளைக் கூட்டி அவிழ்தமாக முடித்தலுமுண்டு. அவற்றில் சில முறைகளாவன:—

கோரோசனை மாத்திரை

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், சாம்பிராணிப் பதங்கம் வகைக்கு விராகனெடை-½, கஸ்தூரி விராகனெடை-¼, சுக்கு, அதிமதுரம், அக்கராகாரம், கோஷ்டம், ஏலம், வகைக்குக் கழஞ்சு-1 இவைகளைக் கல்வத்திலிட்டு மாசிப்பத்திரிச்சாறு, சந்தனம் வெட்டிவேர் முதலியவற்றின் தியாழம் விட்டு ஒவ்வொன்றிலும் 2-மணி நேரம் அரைத்து மெழுகுபதத்தில் பச்சைப்பயறு அளவாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது குழந்தைகட்கு வயதுக்குத் தக்கபடி ½, 1-மாத்திரை தேன், முலைப்பால்,- இஞ்சிசுரசம் இவைகளில் கொடுக்கத் தோஷம், சுரம், சந்நி, தொண்டைக்கட்டு, முதலியவைகள் போம். பெரியவர்களுக்கு 2, 3-மாத்திரை வீதம் கொடுக்கச் சுரம் ஜலுப்பு, சயித்தியம் முதலியவைகள் போம்.

கோரோசனைச் சூரணம்

அரிசித்திப்பிலி, வெந்தயம், சீரகம், ஏலரிசி, சதுரச்சாட்டரணை வேர் வகைக்கு விராகனெடை-8, கோரோசனை விராகனெடை-2, சுத்தி செய்த வாளம் விராகனெடை-3 இவைகளைக் கல்வத்தில் போட்டு நன்றாக அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும் போது இச்சூரணத்தில் குழந்தைகளின் வயதுக்கு ஏற்றவாறு ½, 1-கிட்டிகை வீதம் முலைப்பாலில் கலக்கிக் கொடுக்க வாந்தியாகி சபம் வெளியாகும். பின்னர் பேதி நன்றாய் ஆகும். இதனால் சுரம், வீக்கம், மாந்தம், வயிற்றுப் பொருமல், பெருவயிறு இவைகள்

நீங்கும். கொடுத்த மருந்தில் பேதி அதிகமாயின் மறுமுறை மருந்தை குறைத்துக் கொள்க. பேதி சரிவர ஆகாவிட்டால் மறு நாள் அதிகப்படுத்திக் கொள்க. பேதியைக் கட்டவேண்டுமாயின் சினைத்தின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்ட சினலிங்கச் செந்தூரம் பெரிதும் உபயோகப்படும்.

கோழி

(Hen)

கோழிக் கறிநெநப்பாங் கொள்ளின் மநந்துரம்வங்
கூழைக் கடுப்புமந்தங் கூறாச—மாழ்கிப்போ
நீளுற்ற போக நிணக்கிரந்தி பித்தமண்டாந்
தூளித்த மெய்யிளைக்குஞ் சோல்.

குணம்:—(இ-ள்.) சூடுள்ள கோழிக்கறியை யுண்ணில் ஒளஷத வேகம், மகாவாதம், சுவாசம், தேகக்கடுப்பு, மந்தாக்கினி மூலம் இவை போம். சுக்கிலம், கொழுப்புள்ள விரணம், பித்தம் இவைகள் விளையும். உடம்பு இளைக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சாதாரணமாகச் சமைத்துண்ண இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் ஏற்படும். இதன் இறைச்சியை அடியிற் கூறப்பட்ட வண்ணம் செய்துண்ணத் தாது பலமுண்டாகும். எங்ஙனமெனில்:—வெண்மை நிறமாகத் தேய்த்துப் புடைத்து எடுத்த எள்ளுக் கைப்பிடி-1, மண்ணில்லாமல் அலம்பிச் சுத்தப்படுத்திய கசகசா பிடி-1, தேங்காய் மூடி-½, பச்சை மிளகாய்-8, 9, இஞ்சி, கொத்துமல்லி இலை போதிய சிறு அளவு இவைகளைச் சுத்த சலம் விட்டு நெகிழ அரைத்து ஒரு ஈயம் பூசிய பாண்டத்தில் போட்டு கால் அல்லது காலேயரைக்கால் படி சலம் விட்டுக் கலக்கிப் போதிய அளவு உப்பிட்டு வைத்துக் கொள்க. அப்பால் ஒரு நடுத்தரமான கோழியின் இறைச்சியைத் துண்டுத் துண்டாக அரிந்து சுத்த சலம் விட்டு அலம்பி வைத்துக்கொள்க. பிறகு ஒரு ஈயம் பூசிய பாண்டத்தில் 7½-பலம் சுத்தமான நெய்யைவிட்டு 10, 12-பெரிய வெள்ளை வெங்காயத்தை அரிந்து போட்டு, அதனுடன் சிறிது இலவங்கப்பட்டை, கிராம்பு, ஏலக்காய் கூட்டி அடுப்பிலேற்றி வெங்காயம் சிவந்து வரும் பதத்தில் முன்சித்தப்படுத்தி வைத்துள்ள இறைச்சியைக் கொட்டி அடிபிடிக்காமல் துழாவி வருக. இறைச்சி

வெந்து சிவந்து வரும்போது முன்னரே கூட்டி வைத்துள்ள குழம்பை விட்டு நன்றாய்த் துழாவி மேல்மூடி சிறுதீயில் வேகும்படி விட்டு வைக்கவும். இறைச்சி நன்றாய் வெந்து வாசனை கிளம்பும் சமயம் இறக்கி ஆறவிட்டு அன்னத்துடன் உபயோகிக்கவும். இது போக சக்தியை அதிகப்படுத்தும். எக்காரணத்தை முன்னிட்டும் எலுமிச்சம்பழச்சாறு கூட்டிக்கொள்ளக்கூடாது. இது குணத்தை முற்றிலும் மாற்றிவிடும்.

கோழி முட்டை

(Gallus Bankiva Egg)

வாதபித்தஞ் சேர்ப்பிக்கும் வன்றோடம் புண்போக்கும்
தாதுவை மேத்தத் தழைப்பிக்கு—மோது
கபத்தை யடக்குங் காப்பானுண் டாக்கு
மீபத்தையுறுங் கோழிமுட்டை யேண்.

குணம்:—(இ - ள்.) கோழிமுட்டை வாததோஷம், விரணம், கபப்பிணி இவைகளை நீக்கும். வாதபித்தியம், சுக்கில தாது, காப்பான் இவைகளை யுண்டாக்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை வேகவைத்து மேலோட்டை நீக்கி உண்பதினுலாவது அல்லது பொரியல் வடை முதலியவைகளாகப் பாகப்படுத்தி உண்பதினுலாவது மேற்கூறப்பட்ட குணங்கள் உண்டாகும். அரை வேக்காடுள்ள முட்டையை யுண்ண இந்திரியம் பலப்படும். தேகம் புஷ்டி அடையும்.

சாதாரணமாக ஒரு முட்டையிலுள்ள வெள்ளைக் கருவை ஒரு புட்டியில் விட்டு 20-அவுன்ஸ் காய்ந்து ஆறிய சலத்தை விட்டு நன்றாய்க் குலுக்கிச் சலமும் வெண்கருவும் உறவான பதத்தில் கொஞ்சங் கொஞ்சமாகப் 12-மணி நேரத்திற்குள் எல்லாவற்றையும் உள்ளுக்குக் கொடுத்துக்கொண்டுவர வயிற்றிலுள்ள விரணம் ஆறும். அதனல் ஏற்பட்ட வாந்தியையும் குணப்படுத்தும். மேற்கூறியவண்ணம் ஒரு புட்டி சலமும் வெண்கருவும் கூட்டியதில் ஒரு ரூபாய் எடை படிகாரத்தூள் போட்டுக் கலக்கி வாய் கொப்பளித்துக் கொண்டுவர இரச தோஷத்தினு லேற்பட்ட வாய் வேக்காடு ஆறும். மயில்துத்தம், சவ்வீரம் முதலியவற்றை விஷமிக்கத் தின்றவர்களுக்கு முட்டையின் வெண்கருவை அடிக்கடி உள்ளுக்குக் கொடுத்

துக்கொண்டுவர அம்மருந்துகளின் வீறுத் தணியும். இன்னும் இதன் வீரூகிய் வாந்தி, பேதி, தேக எரிச்சல் சாந்தப்படும். வெண் கருவைச் சிரசிலிட்டுத் தேய்த்து ஸ்நானம் செய்யக் கண்களுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

சவ்வாது

(Viverra Civetta-odorous Secretion)

சுரமுந் தலைவலியுந் துண்டத் தடைப்பு
முரமுந்து நோயோடடற்குட்—பரவிமிகக்
குத்துகின்ற வாயுவும்போங் கோதிற்சவ் வாதினுக்கு
மெத்த வசியமுமாம் விள்.

குணம்:—(இ - ள்.) குற்றமற்ற சவ்வாது - வாதகப மிவைக ளின் உபரியால் வந்த சுரம், தலைவலி, சலபீநசம் இன்னும் தேகத் தில் குடைச்சல், குத்தல் முதலியவைகளால் கஷ்டப்படுத்துகின்ற இருத்வாதம், அங்கசலனவாதம் ஆகிய இவைகளைப் போக்கும். வசீ கரமுண்டாம் என்க.

செய்கை:—உற்சாககாரி, சுர ஹரகாரி, சோபா நாசினி.

உபயோகிக்கும் முறை:—இது வாசனைக்காக உபயோகப்படுத்து கின்ற திரவியங்களில் அதிகம் சிறந்தது. இதற்கு உஷ்ண வீரிய குணம் உண்டு. முகத்திலுண்டாகும் பருவுகளுக்கு இரண்டொரு வேளை மேற்றடவக் கரைந்துவிடும். ஒரு சமயம் அதில் சீழ்கொண் டிருந்தால் வீக்கத்தை அதிகரிக்க விடாமல் உடைத்துவிடும். அதன் பின் யாதொரு உபத்திரவமும் செய்யாமல் ஆறிவிடும். இதனை மாத்திரையில் கூட்டி அரைப்பதுண்டு. எங்ஙனமெனின்:—

பஞ்சாமிர்தக் குளிகை

கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், சவ்வாது இவைகளை யெல்லாம் சமனெடையாகக் கல்வத்தில் போட்டுக் கருந்துளசிச் சாற்றிலாவது அல்லது கம்மாறு வெற்றிலைச் சாற்றிலாவது நன்கு அரைத்து மெழுகு பதத்தில் பயறு அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப் படுத்துக. வேண்டும்போது இம்மாத்திரையைக் குழந்தைகளின் பருவத்திற்கு ஏற்றவாறு ½, 1-மாத்திரை தகுந்த அனுபானங்களில் கொடுக்கச் சுரம், சந்நி, வலி முதலிய பல குழந்தை பிணிகள் குண

மாகும். இந்த மாத்திரையைப் பொடிசெய்து சீலையில் பரப்பித் திரியாகத் திரட்டிக் கொளுத்தி நாசியில் புகை பிடிக்கச் சந்நி, மயக்கம், மூர்ச்சை நீரும். இம் மாத்திரையை முலைப்பாலில் உரைத்துக் கண்களுக்குக் கலிக்கம் தீட்ட மூர்ச்சை நீங்கி அறிவு தெளிவுபடும்.

பாலாமிர்தக் குளிகை

புனுகு குன்றி எடை-2, கஸ்தூரி குன்றி எடை-2, பச்சைக் கற்பூரம் குன்றி எடை-2, மிளகுத்தூள் குன்றி எடை-2 இவை தம்மைக் கல்வத்தில் போட்டு இஞ்சிச்சாறு, முலைப்பால் இவற்றுல் ஒவ்வொரு மணிநேரம் அரைத்துப் பெருங்கடுகு அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக. இதனைக் குழந்தைகள் வயதுக்கு ஏற்றவாறு 1, 2-மாத்திரை தகுந்த அனுபானங்களில் கொடுத்துவரச் சுரம், சந்நி, வலி, சலதோடம் முதலிய பல பிணிகள் நிவர்த்தியாகும்.

சன்னக்கூனி

(Herrings)

சன்னக்கூ னிக்கறியைத் தானருந்தி லக்கணமே
தின்னப் படுமன்னஞ் சீரணமாம்—பின்னும்
பசிக்கு மதிநெருப்பாம் பாரினே யெல்லா
நசிக்கு மெனவே நவில்.

குணம்:—(இ - ள்.) மிகு சூடுள்ள சன்னக்கூனியைத் தின்னில் விரைவில் அசன ஜீரணமாவதுடன் உடனே பசியையும் உண்டாக்கும். வாத மந்தநோய் நீங்கும் என்க

செய்கை:—ஜடராக்கினி வர்த்தனி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண மேற்படி செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்தியாகும்.

சன்னக்கெண்டை

(Cyprinus small)

மின்னை நிகருமிடை மெல்லியலே மேனியது
சன்னமீ னுண்டாற் றளராவா—முன்னைக்
கரப்பானும் புண்ணுங் கடியகப மும்போ
முரப்பாக நாளு முரை.

குணம்:—(இ - ள்.) சன்னக்கெண்டை மீனை யுண்ணில் தேகத் தளர்ச்சி நீங்குவது மன்றிக் கரப்பானும், விரணமும், சிலேஷ்மாதிக் கமும் விலகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி குழம்பிட்டு உண்ண இச் செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் எல்லா மூண்டாகும்.

சிட்டுக்குருவி
(Small Sparrow)

பூவிரணம் போக்கிவிடும் பொல்லாக் கிருமிகளைப்
பாவுமலத் தோடிறங்கப் பண்ணுங்காண்—பூவலையிற்
கட்டுற்ற மாதர்களைக் கைக்குவித்துக் கொஞ்சுவிக்குஞ்
சிட்டுக் குருவித் திறம்.

குணம்:—(இ-ள்.) சிட்டுக் குருவிக்கறி ஆண்குறி மலரின் புண் ணையும், மலக் கிருமிகளையும் நீக்கும். புணர்ச்சியில் நிர்வாகத்தை யுண்டாக்கும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் யாவும் உண்டாகும். தாது விருத்திக்கு இதனைவிட வேறு இல்லை என்றே கூறலாம்.

சிறுநீர்
(Urine)

காணுக் கடிபோங் கதித்தெழுந்த வீக்கமது
காணாது காயசித்தி கைக்குளாம்—பூணே
பதித்த கொங்கை மாதே பகர்மாந்த நுக்கு
ளுதித்தசிறு நீருக்கென் றோர்

இதுவுமது

அங்கியுவ நுறை சிறுநீர் வாதம் போக்கு
மதைப்பருகி லிருமலிரைப் பரத்தநோயும்
போங்கிவரு மேகவிகா ரங்கிரந்திப்
புண்களுப்போ மதைநசியம் புரியிற்சூடுந்
தங்கியதோ ரபஸ்மாரஞ் சந்நியாசஞ்
சருவவிடம் விடசுரமுந் தவநண்டோடும்
மிங்கதனைத் தொட்டலம்பிற் கண்முகங்கா
தில்விடத்து ளெழும்விரண மிரியுங்காணே.

குணம்:—(இ-ள்)மாந்தர்களின் ஜடராக்கினி யுவர்ச் சுவையை யுடைய சிறுநீரினுல் காணுக்கடிவிஷமும், சோபையும், வாததோஷ மும் நீரும். அதை முறைப்படி பருகில் இருமல், சுவாசம், அசிர்க் கரம், மேகமூத்திரம், கிரந்தி, விரணம் ஆகிய இவைகள் போகும். நசியம் செய்தால் சுரம், அபஸ்மாரம், சந்நியாசம், சருவவிஷம், விஷ சுரம் முதலியவைகள் நீங்கும். அந்த நீராற்கழுவினுல் விழி, முகம், செவி இவ்விடங்களில் பிறக்கின்ற கட்டிகள் விலகும். அன்றியும் காயசித்திக்கு உதவும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனை இச் செய்யுளின்கண் கூறிய வாறு பிரயோகிக்க மேற்கண்ட குணங்கள் சித்திக்கும்.

குறிப்பு:—இந்த நீரிலிருந்து எடுக்கப்பட்ட உப்பிற்கே அமுரி உப்பு என்று கூறப்படும். இந்த உப்பின் விபரத்தை பொதுப்பாயி ரத்தில் காரசாரலவணம் இருபத்தைந்தின் கீழ்க் காண்க.

சிற்றூரால் மீன்

(Rhynchobdella Aculeata)

சிற்றூரான் மீனநந்தச் சிக்கு மலசலம்போ
முற்ற கபங்கரப்பா னுண்டாகுஞ்—சற்றேதான்
மந்தமறுந் தீபனம்போம் வாயிற் சலழறுங்
கந்தமலர்ப் பூங்குழலே காண்.

குணம்:—(இ ள்.) சிற்றூரால் மீனையுண்ணில் மலசல பந்தமும் பசியும் நீங்கும். சிலேஷ்மம், கரப்பான், அக்கினிமந்தம், வாய்நீ ரூறல் ஆகிய இவைகள் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி குழம்பிட்டு அன் னத்துடன் உபயோகிக்க இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும்.

சுறுக்கருவாடு

(Shark Salted Fish)

சூலை கிராணீகுன்மந் துட்டவதி சாரமீவை
வேலை யுலகை விடுத்தோடுஞ்—சால
வறுப்பசியுண் டாகு மபத்தியமல் லாத
சுறுக்கருவா டுண்பார்க்குச் சொல்.

குணம்:—(இ - ள்.) பத்தியக் கறியாகிய சுறுக்கருவாட்டை யுண்பவர்க்குக் குத்தல், கிரகணி, வயிற்று நோய், வாதாதிசாரம் இவை நீங்கும் மிகுதீபனமாம்.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தனி, கூரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி குழம்பிலிட்டுச் சமைத்து உண்பவர்களுக்கு இச் செய்யுளில் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும்.

சுறுமீன்

(Shark)

வாத கபமறுக்கு மன்னுகீ டம்போக்கு
ழது குடல்வாத மோடுங்கா—ஞதரவா
யெல்லாப் பிணிக்கு மிதமாகு நல்லசுற
நல்லா ரறிய நவில்.

குணம்:—(இ - ள்.) நல்ல சுறுமீன் கறி வாதகப தொந்தம், கிருமி நோய், குடல் விருத்தி இவைகளை நீக்கும். சகல பிணிகளையுஞ் சாந்தப்படுத்தும்.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, கூரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பாகப்படி குழம்பிலிட்டுச் சமைத்துண்பதுண்டு. இதுவுமல்லாமல் இதனை வேகவைத்து மேற்றோல், நடு முதுகு, முள் முதலியவற்றை நீக்கிப் பிசைந்து போதிய அளவு பச்சைமிளகாய், வெள்ளைப்பூண்டு. இஞ்சி, கொத்தமல்லிக் கீரை, உப்பு, மஞ்சள்தூள் இவைகளைக் கூட்டி உறவாக்கித் தாளிதம் செய்து பிட்டுப்போல் கிளறி உபயோகப்படுத்துவதுமுண்டு.. இத்தகைய உணவினால் இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் யாவும் சித்திக்கும்.

செம்மறியாட்டிறைச்சி

(Ram's Mutton)

அம்புவியிற் செங்கரப்பா ணண்டுவது மாத்திரமோ
செம்மறியாட் டுக்கறியைத் தின்றக்காற்—கோம்பி
லிருந்து மதித்தாற்போ லெப்பிணியு முண்டா
மநந்துயர நீங்கா தறி.

குணம்:—(இ - ள்.) செம்மறியாட்டிறைச்சியை உண்ணில் செங் கரப்பானும் முன்பில்லாத பலவித ரோகங்களும் சகல துன்பமு முண்டாம்.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத் துண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்ட துர்க்குணங்கள் யாவும் உண்டாகும்.

செம்மறியாட்டுத் தயிர்

(Ram's Curd)

செம்மறியாட் டின்றயிரைத் தின்ன மதுரமிகும்
கோம்மைழலை மாதரசே கூறக்கேள்—அம்ம
கரப்பான் சோரியுங் கடுப்பிரத்த வாய்வு
முரப்பா முடல்கெடுமென் றோர்.

குணம்:—(இ - ள்.)மதுரமுள்ள செம்மறியாட்டின் தயிரை உண்டால் கரப்பான், புடை, மூலக்கடுப்பு, ரத்தமூலம் வாதரோகம் ஆகிய இவைகள் பலப்படுவதுமன்றிச் சரீரத்திற்குத் துன்பம் உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகமும், குணமும் இச் செய்யுளின்கண் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

செம்மறியாட்டுப் பால்

(Ram's Milk)

செம்மறிப்பால் பித்தஞ் சிலேஷ்மத்தை யுண்டாக்கும்
விம்மும் வயிறுமிக மேன்மூச்சாங்—கோம்மை
வருமுலையாய் பத்தியத்தில் வாராது வாய்வாம்
பருநவர்க்கு நாளும் பகர்.

குணம்:—(இ - ள்.) வாதரூபமான செம்மறியாட்டுப் பால் பித்த சிலேஷ்ம தொந்தம், வயிற்றுப்பிசம், மேற்சுவாசம் இவைகளை யுண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பசுவின் பாலைப்போலத் தின சரி பானங்களில் உபயோகப்படுத்த வாத சம்பந்தமான பல பிணிகள் தொலைந்துபோகும். ஆதலால் உபயோகப்படுத்தாதிருத்தலே மிகச் சிறந்தது.

சேல்கெண்டை

(Cyprinus)

குடல்வாத சூலை கொடுக்குஞ்சேற் கெண்டை
யுடல்வாத மேகமுண் டாக்குஞ்—சடமீது
புண்ணுஞ் சிரங்கும் பொருந்திநிற்கச் செய்துவிடு
முண்ண மிகுசுவையா மோர்.

குணம்:—(இ - ள்.) அதிக உருசியுள்ள சேல்கெண்டை மீன் குடல்வாதக்குத்தல், வாதப்பிரமேகம், விரணம், சிரங்கு இவைகளை யுண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதைப் பாகப்படுத்தி யுண்ண நாவிற்கு அதிக உருசியைத் தந்திடினும் அசுத்த உணவென்றே எண்ண வேண்டும். இதனால் பல பிணிகள் வந்து சேரும்.

திருக்கை மீன்

(Hypolophus Sephen)

வாதமோடு தாதுவும்வ ளர்ந்துள்ளே சேருமென்று
மோதுபித்தஞ் சோபமிவை யோடுமென்றுங்—கீதச்
சேருக்கையடை வாரைத் தீருத்துமோழி மாதே
தீருக்கைமீ னுண்பவர்க்குச் செப்பு.

குணம்:—(இ - ள்.) திருக்கை மீனைத் தின்பவர்க்கு வாத தாதுவும், சுக்கில தாதுவும் அதிகரிக்கும். இன்னும் பயித்தியமும், விக்கமும் நீங்கும் என்க.

செய்கை:—சோபாநாசினி, காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் யாவும் உண்டாம்.

தூக்கணங்குருவி

(Thoockananguruvi)

ஐயமருசி யகட்டின்மல மும்போக்குந்
துய்ய பசியைமெல்லத் தூண்டிவிடு—மெய்யின்
மீனுத்த வழகுண்டா மென்பத் தியமாந்
தனித்தூக்கணங்குருவி தான்.

குணம்:—(இ - ள்.) பத்தியத்திற்கான தூக்கணங் குருவிக்கறி கபம், அரோசகம், மலக்கட்டு இவைகளை நீக்கும். இன்னும் பசியையும், *வனப்பையும் உண்டாக்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினி வர்த்தனி.

உபயோகிக்கும் முறை—இதைச் சாதாரணமாகச் சமைத்து உண்பதினால் சில நன்மைகள் உண்டு. சில அவிழ்தங்களைக் கொடுக்கும்போது பத்தியத்தில் சேர்த்துக் கொள்ளப் பண்டிதர்கள் அனுமதிப்பதுண்டு.

தேன்

(Mel)

பித்தமுடன் வாந்தி பிரியாத தோந்தகபம்
எத்திவரும் வாய்வு மிறங்கிப்போ—மெத்தவுமே
ஊனிலுறும் ரத்தமதை யுற்றபடி சுத்திசெய்யும்
தேனின் போதுக்குணமே செப்பு.

குணம்:—(இ - ள்.) நல்ல தேனால் - பித்தம், வாந்தி, கபசம்பந்தமான ரோகங்கள், வாயு, இரத்தத்திலுள்ள குற்றங்கள் முதலியவை நீங்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, மலகாரி. (அதிக அளவில்)

உபயோகிக்கும் முறை:—வேளைக்கு 1, 3-தேக்கரண்டி அளவு சலத்துடன் கலந்து தினம் 2-வேளை கொடுப்பதுண்டு. இது இரத்தத்தைச் சுத்தி செய்வதுடன் ஜீவாக்கினியை விருத்தி செய்யும். சாதாரணமாக மருந்துகளைத் தேனில் அனுபானம் செய்து கொடுக்க இரத்தத் தாரைகள் வழியாக விரைவில் சென்று நோயைக் குணப்படுத்தும். இக்காரணத்தைக் கொண்டே தேன் அனுபானங்களில் சிறந்ததென ஆன்றோர் கூறியிருக்கின்றனர். தேனைத் தேக திடத்திற்கு ஏற்றவாறு 1, 1½-தேக்கரண்டி அளவு சலத்தில் விளாவித் தினம் இருவேளையாகச் சிலநாள் தொடர்ச்சியாகக் கொடுத்துவர வீக்கம், காமாலை, கல்லடைப்பு, நீரடைப்பு, பக்கவாதம், சூலை முதலிய ரோகங்கள் குணமாகும்.

தேனைச் சலத்தில் விளாவிக் கொடுக்கச் சிறுநீர் பெருகும், நீர்த் தாரையில் கண்டுள்ள புண்களை ஆற்றும், வயிற்று நோயையும்,

தாகத்தையும் அடக்கும், தாதுபலத்தை விசேஷிக்கச் செய்யும். இன்னும் இதைக் குடித்து வாந்தி யெடுக்க அபினியின் விஷம் மாறும். தேனைக் கருஞ்சீரகக் கியாழத்தில் சேர்த்துக் கொடுக்கக் கீல்வாதம் போம். சீரகக் கியாழத்தில் கொடுக்க வெறிநாய்க்கடி, விஷக்கடி முதலியவைகள் போம். வெள்ளை வெங்காயச் சாற்றில் சேர்த்துக் கண்களில் இரண்டொரு துளி விட்டுக்கொண்டுவரக் கண் திரை மாறும். வெள்ளைக் குங்கிலியம், கல்லுப்பு இவ்விரண்டையும் தேன் விட்டுக் குழம்பு பதமாக அரைத்துக் காதுகளில் 1, 2-துளி விட்டுப் பஞ்சு அடைத்து வைக்கக் காதுவலி, சீழ் வருதல் முதலியவை குணமாகும். தேன்விட்டு நவச்சாரத்தை உரைத்துப் படைகளின்மீது போடத் தினவு அடங்கிக் குணப்படும். தேனுடன் காடி உப்புக் கூட்டி அரைத்துக் கட்டிகளுக்குப் போட உடைத்துக் கொள்ளும். பிரசவித்த ஸ்திரீகளுக்கு அடிவயிற்றில் தேனைத் தழும்பத் தடவிவரக் கருப்பவலி நீங்கும். இத்தகைய குணங்கள் எல்லாம் சுத்தமான நல்ல தேனுக்குக் கூறப்பட்டது.

சாதாரணமாகத் தேன் இனத்தில் பலவிதங்கள் இருப்பினும் முக்கியமாக ஏழு இனமே நூலில் கூறப்பட்டுள்ளது. இவைகள் யாவும் ஒன்றுக்கொன்று தாழ்ந்ததாகக் கூறுவதற்கில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விசேஷ சக்தி பெற்றிருக்கின்றன. ஆகையால் நோயினர் அவரவர் தேகக் கூறுக்கேற்றவாறு இனமறிந்து முற்கூறிய பொது விதியின்படி உபயோகித்துக்கொள்ள அதிக நன்மையைத் தரும் என்று கூறுவது மிகையாகாது. அவ்வவற்றின் பெயரும் குணமும் பின்வருமாறு:—

கொம்புத் தேன்

வாதபித்த வையத்தை மாற்றுமுள மாந்தைதணீக்
காதமென வோடக் கடியுங்காண்—பூதமாம்
வம்புழில மாதே வருமருசி நீக்கிவிடுங்
கொம்புத்தே னன்றுகுங் கூறு.

(இ-ள்.) மாமரம் முதலிய மரக்கொம்புகளில் கட்டுகின்ற தேன் திரிதோஷங்களையும், உளமாந்தையையும், அரோசகத்தையும் நீக்கும் என்க.

மலைத் தேன்

ஐயிரும லீளவிக்க லக்கிப்புண் வேப்புடல்நோய்
பைய வோழியும் பசியுழறும்—வையகத்தி
லெண்ணுமிசை யாமநந்திற் கேற்ற வனுபான
நண்ணுமலைத் தேனென்றி னுல்.

(இ - ள்.) மலையிலிருக்கும் குறிஞ்சித் தேனுல் சிலேஷ்ம காசம், சுவாசம், விக்கல், கண்விரணம், சுரம், தேகக்கடுப்பு இவைகள் நீங்கும். தீபனமும், நல்ல தொனியும் உண்டாம். இது அவிழ்த்த அனுபானங்களுக்குதவும் என்க.

மரப்பொந்துத் தேன்

பசிவேப்பாம் வாந்திமந்தம் பல்விக்கல் வெய்ய
நுசிழக் கபந்தூல ரோகங்—கசிவகலாக்
கோந்துத்தேன் பாடுங் குழலணங்கே காவின்மரப்
போந்துத்தே னுண்டாயிற் போம்.

(இ - ள்.) மரப்பொந்துத் தேனினுல், ஜடாக்கினியும் உஷ்ணமும் உண்டாம். வமனம், மந்தாக்கினி, பலவித விக்கல் ரோகம், அரோசகம், இருமல், சுவாசம், கூயம், அதிதூலரோகம் ஆகிய இவைகள் போம் என்க.

மனைத் தேன்

புண்ணும் புரையும்போம் போகாக் கரப்பனறு
மெண்ணரிய தீபனமா மேந்திழையே—கண்ணுகளிற்
பூச்சிபுழு வெட்டுகபம் போல்லா விருமலறும்
பேச்சின்மகீனத் தேனுக்குப் பேசு.

(இ - ள்.) வீடுகளிற் கட்டுகின்ற தேனுக்கு, விரணம், சிலேஷ்மோங் கரப்பான், நேத்திரவிரணக்கிருமி, புழுவெட்டு, சிலேஷ்ம கோபம், காசம் ஆகிய இவை நீங்கும். ஜடாக்கினி யுண்டாம் என்க.

புற்றுத் தேன்

கோப்பணியு மாதே குவலயத்து ளெல்லார்க்கு
மோப்பநின்ற வையமொழிக்குங்காண்—கோப்பளிக்குங்
காசசுவா சம்வாந்தி கண்ணிலேழ நோய்களறும்
வீசுபுற்றுத் தேனுக்கு மேய்.

(இ - ள்.) புற்றில் கட்டுகின்ற தேனுக்குக் கப தோஷம், இருமல், சூலை, சர்த்தி, நேத்திரரோகம் ஆகிய இவைகள் போம்.

புதிய தேன்

ஆயுளுட னுட்டினமு ரோசி யகக்கபழ
மேய வழகும்வளர்ந் தேறுங்காண்—தூய
மதிய மெனும்வதன மாதரசே நாளும்
புதியநறுந் தேனுற் புகல்.

(இ - ள்.) புதிய தேனினால் நிறை ஆயுளும் சரீர வெப்பமும் தேஜசும் உண்டாகும். இது மிகவுஞ் சேர்ந்தால் அருசியும், நெஞ் சிற் கபமும் விளையும் என்க.

பழைய தேன்

வாதப் பெருக்கை வயிற்றெரிவைத் தந்துறையைச்
சேதப் படுத்துமின்னுஞ் செப்பவே—மாதரசே
சத்திப் புறுமரசந் தன்னைத்தூண் டும்புளிப்புத்
தித்திப் புறும்பழைய தேன்.

(இ - ள்.) புளிப்பும், இனிப்புங் கலந்த சுவையுடைய பழைய தேனானது, வாதரோகக் கூட்டத்தையும், வயிற்றெரிச்சலையும் வாத மூல ரோகத்தையும் விளைவிக்கும். மருந்தின் நற்குணங்களைக் கெடுக்கும்.

தேன் கற்கண்டு

(Mel sugar candy)

தேனிற் பிறந்த செழுங்கண்டாற் கண்விழிக்கு
ளூனிற் படர்படல மோடிடுங்காண்—கானகத்திற்
காகுஞ் சுரமாகு மண்டும் பசிகபங்கா
லேகுஞ் சுரமேகு மேண்.

குணம்:—(இ - ள்.) தேனினுண்டாகுங் கற்கண்டினால் கண்ணிற் படருகின்ற தூர்மாமிச படலம், உதராக்கினி, சிலேஷ்மதோஷம், வாதநோய், சுரரோகம் இவைகள் நீங்கும்; இசைப்பாட்டுக்குரிய குரற்றொனியுண்டாம் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, மல்காரி.

உபயோகிக்கும் முறை:—தேனுனது உறைந்து கற்கண்டாக மாறினபோது அதுவும் தேனின் நற்குணத்தையே பெற்றிருக்கும். இதனுல் பெரிதும் குணம் பேதப்படாது. இந்தக் கற்கண்டுச் சூரணத்தைச் சிறிது கண்களில் போட அது கரைந்து துர்மாமிசத்தைக் கரைக்கும், அல்லது ஒரு கோழிமுட்டையைக் கொண்டு வந்து அவித்துத் தோல் போக்கி இரண்டு துண்டாக அரிந்து உள்ளிருக்கும் படியான மஞ்சள் கருவை வெளிப்படுத்தி இரண்டு துண்டுகளிலும் உள்ள பள்ளங்களில் மேற்படி கற்கண்டுப் பொடியைப் போட்டு மட்டமாக நிரப்பிப் பனியில் வைக்க, மீண்டும் தேன்போல் மாறுதலடையும். மறுநாள் காலையில் வெடி முட்டைத் துண்டுகளை அசையாமல் குறடுகொண்டு பிடித்துக் கொண்டு கரி நெருப்பனலில் சிறிது சூடேற வெதுப்பி உடனே அதிலுள்ள திரவத்தைச் சுத்தமான சீலையில் வடித்துப் பத்திரப்படுத்துக. இதில் கண்களுக்கு 1, 2-துளி விட்டுக்கொண்டு வரக் கண் வியாதி 96-ம் குணமாகும். இதை வாயிலிட்டுச் சுவைத்துக் கொண்டிருக்கக் கபத்தை கரைக்கும், பாடுகின்றவர்களுக்குக் குரலோசையை இனிமையாக உண்டாக்கும்.

நண்டு

(Crab)

வயலிலுறு நண்டநந்த வாதக் குடைச்ச
லயலினுமி நக்கா தணங்கே—துயில்வோட்டா
வன்சயித்தி யங்கரப்பன் மன்குடலி ரைச்சலும்போம்
முன்பயித்தி யங்கதிக்கு முன்.

குணம்:—(இ - ள்.) வயல் நண்டுக் கறியை யுண்ணில் வாதக் கடுப்பு, தூங்கவொட்டாத கபநோய், குடலிரைச்சல் இவை போம். பித்தம் பெருகும் என்க.

செய்கை:—பித்தகாரி, உற்சாககாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—நண்டு இனத்தில் சமுத்திர நண்டு, கழி நண்டு, வரப்பு அல்லது கழனி நண்டு, பால் நண்டு எனப் பல விதமுண்டு. இவைகளில் சமுத்திரத்திலும், கழிகளின் ஓரத்திலும் இருக்கும்படியானவைகள் அதிகப் பெரிதாக இருக்கும். அவைகளைச் சமைத்து உள்ளிருக்கும் மிருதுவான இறைச்சியை உண்பதுண்டு. சாதாரணமாகக் கழனியை யடுத்த வரப்புகளில் கிடைக்கும்படியான நண்டுகள் அதிகமாகப் பெருத்திராது. இதற்கே இச்

செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் உண்டு. இவைகளைக் கொண்டுவந்து சிறு கால்களை நீக்கிக் காரக்குழம்பிட்டு உண்பதுண்டு. இது சர்வ சீதள சம்பந்த ரோகங்களைக் கண்டிக்கும். இதனைத் தைலமாகவும், கியாழமாகவும் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

நண்டுத் தைலம்

கழினி நண்டை இடித்துப் பிழிந்து வடிகட்டிய சாறு படி-½, நல்லெண்ணெய் படி-½ இவை யிரண்டையும் ஒரு தைல பாண்டத்தில் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து வண்டல் மெழுகு பதமாக வருஞ் சமயம் கஸ்தூரிமஞ்சள், சாம்பிராணி, கிச்சிலிக் கிழங்கு, பச்சிலை, கார்போக அரிசி வகைக்குப் பலம்-¼ வீதம் இடித்துச் சூரணம் செய்து போட்டுக் கீழிறக்கி ஆறவிட்டு வடித்துப் பத்திரப்படுத்துக. இந்தத் தைலத்தைக் கொண்டு ஸ்நானம் செய்துவர, எத்தகைய தலைவலி, தலைக்குடைச்சல், தலைபாரம் முதலிய வைகள் போம். அன்று பகல் நித்திரை கூடாது.

நண்டுக் கியாழம்

கழனி நண்டு-25 கொண்டுவந்து உரலிலிட்டு நன்றாய் இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு அதில் சுக்கு, மிளகு, கொத்துமல்லி வித்து, அதிமதுரம், சிற்றரத்தை, கறிமஞ்சள் வகைக்குப் பலம்-¼ வீதம் இடித்துச் சூரணம் செய்து போட்டுப் பிசரி 2½-படி சலம் விட்டு அடுப்பிலேற்றி ½, ¼-படி அளவிற்குச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 2, 3-அவுன்ஸ் வீதம் தினம் 3, 4-வேளை கொடுத்துவர எத்தகைய மருந்தாலும் நிவர்த்தியாகாத சுரம், சந்நி, சீதசுரம், தேகக்குடைச்சல், சயித்தியம் முதலியவைகள் தீரும்.

கர்ணபிந்து

நண்டிறைச்சி, கோழி முட்டையின் மஞ்சள்கரு, பூநாகம், வசம்பு, குக்கில், வெள்ளைப்பூண்டு இவைகள் வகைக்கு விராகனெடை-1 வீதம் சுத்தமான அம்மிக்கல்லில் இட்டு அரைத்து வைத்துக்கொள்க. அதன்பின் இவைகளை ஒரு சுத்தமான இரும்புக் கடாயிலிட்டு 5-பலம் வேப்பெண்ணெய் விட்டு, அடுப்பிலேற்றி, வண்டல் சிவந்து மிதக்கும் சமயம் கடாயைக் கீழிறக்கி ஆறவிட்டு

வடித்து ஒரு புட்டியில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்கு 1, 2-துளி காதில் விட்டுப் பஞ்சினால் அடைத்து வைக்கக் காதுவலி, காதுகுத்தல், சீழ்வடிதல் முதலியவைகள் குணமாகும்.

நண்டுக் குழிநீர்

வாந்தியறுந் தாகமறு மாறாத விக்கலறுங்
காந்த லெரிவுங் கடிந்தேகுந்—தோய்ந்துவருங்
கண்டுக் குபர்ந்த கனிமொழிமே பன்னளு
நண்டுக் குழிநீரை நாடு.

குணம்:—(இ - ள்.) வயல்களி லிருக்கின்ற நண்டுக் குழிநீரால் வமனம், விதாகம், நீங்காத விக்கல், தேக வெப்பம், எரிவு ஆகிய இவைகள் போகும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—வயல்களில் நண்டுகள் இருக்கும்படியான குழிகளில் நிறைந்துள்ள சலத்தில் வேளைக்கு 2, 3-அவுன்ஸ் வீதம் தினம் 3-வேளை வடிகட்டி உள்ளுக்குச் சாப்பிட விக்கல், வாந்தி முதலியவைகள் போம். குழந்தைகட்குக் காணுகின்ற கக்கு வாய் இருமலுக்குத் தேக்கரண்டி அளவு தினம் 3, 4-முறை கொடுத்துவரக் குணமாகும்.

நத்தை

(Buccinum)

நத்தைக் கறிதனக்கு நாடாது மூலமுத
லொத்தமல ரோகமெலா மோடுங்கா—ணித்தநித்தந்
தின்றற் சரியாது தேடரிய தாதுவிர்த்தி
நன்றது மாதே நவில்.

குணம்:—(இ - ள்.) நத்தைக் கறிக்கு மூலமூளையும், மலாசயப் பிணிகளும் நீங்கும். இதைத் தினமும் புசிக்கில் அஜீரணமும் சுக்கிலப் பெருக்கமும் உண்டாம் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளிற் கூறப்பட்டுள்ள ரோகங்கள் நீங்கும். தாது விருத்தியும் உண்டு. இதனை வேகப்போட்டு மேலோடு நீக்கி எடுத்த 2½-பலம்

சதையுடன் சிறிது வெங்காரம், சிறிது லவங்கப்பட்டை கூட்டி வெண்ணெய்போ லரைத்து இருமடங்கு சர்க்கரை பாகு எடுத்து அதில் போட்டு லேகிய பதமாகக் கிளறி தினம் கழற்சிக் கொட்டைப் பிரமாணம் 3-வேளை சாப்பிட மூலம் போம்.

நாரைக்கறி
(Flamingo Meat)

நாரைக் கறியநந்த நாறுகரப் பான்புண்
ழரைத் தோடர்ந்துதோடர்ந் தோட்டுங்கா ரா—பாரித்த
மேகமோடு வாதம் விளையுமே நீரிழிவுக்
காகுமென் பார்க ளறி.

குணம்:—(இ - ள்.) நாரைக் கறியைத் தின்றால் சீழ்கரப்பான் கிரந்தி, கபமேகம், வாதகோபம் இவை உண்டாம். அதிமூத்திரம் போகும்.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் உண்டாகும்.

நீர்காக்கைக்கறி
(Water crow meat)

பாண்டோடு சோபை பருவயிறும் போங்கரப்பான்
மீண்டுசோறி யும்வீளையு மேய்த்தவரை—நீண்டமத
னூர்க்காக்கு மாதரசே யோங்குபுலா னுற்றழறு
நீர்க்காக்கை தன்னை நினை.

குணம்:—(இ - ள்.) புலால் மணம் உள்ள நீர்க்காக்கைக் கறியால் பாண்டு, வீக்கம், மகோதரம் இவைபோம். கடுவனும் தினவும் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத் துண்ண இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் உண்டாகும்.

நீர்நாய் விதை
(Castoreum)

சன்னி நரம்பிசிவு சாடுஞ் சுரமூர்ச்சை
கன்னி நதுசூலக் காசமெலாம்—மென்னுதலாய்
எவ்வாதங் காக்கைவலி யேகிவிடும் நீர்நாயின்
சவ்வாதின் நற்குணத்தைச் சாற்று.

குணம்:—(இ - ள்.) நீர் நாயின் சவ்வாதினுல் சன்னி, நரம்பி னிசிவு, சுரம், மூர்ச்சை, சூதகவலி, சுவாசகாசம், காக்கைவலி, வாத நோய் முதலியவைகள் குணமாகுமென்க.

செய்கை:—உற்சாககாரி, அங்காகர்ஷ்ணநாசினி, ருதுவர்த்தன காரி.

உபயோகிக்கும் முறை:—இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி மாத்திரை மெழுகு முதலியவைகளாகச் செய்து உபயோகப் படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

ஜீவாமிர்தக் குளிகை

நீர்நாய்ச் சவ்வாது குன்றி எடை-4, உயர்ந்த கஸ்தூரி குன்றி எடை-3, வீரச் செந்தூரம் குன்றி எடை-2, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ வகைக்கு விராகனெடை-½, கோரோசனை, சாம்பிராணிப் பதங்கம், தாளிசப்பத்திரி, திப்பிலி, அக்கரகாரம், இலவங்கப் பட்டை, சடாமாஞ்சி, சாதிக்காய் வகைக்கு விராகனெண்ட-¼, இவற்றுள் முதலில் நீர்நாய்ச் சவ்வாது முதல் சாம்பிராணிப் பதங்கம் ஈறுக உள்ள ஏழு சரக்குகளையும் கல்வத்தில் போட்டுப் பொடித்து அதனுடன் மற்ற 6-சரக்குகளைக் கல்லுரலிலிட்டு நன்றாய் இடித்துச் சூரணஞ் செய்து கூட்டி ஈஸ்வர மூலிக் கியாழத்தினுலாவது அல்லது கருந்துளசி, கம்மாறு வெற்றிலை இவைகளின் சாற்றினுலாவது 2-சாமம் நன்கு அரைத்து மெழுகு பதத்தில் பெருங்கடுகு அல்லது பயறு பிரமாணமுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்துக. பெருங்கடுகு அளவு செய்துள்ள மாத்திரையில் 6, 7-வயதுக்குட்பட்ட குழந்தைகட்கு வயதுக்குத் தக்கபடி 1, 2-மாத்திரையைக் கம்மாறு வெற்றிலைச்சாறு, துளசிச் சாறு, இஞ்சிச் சுரசம் முதலியவற்றில் அநுபானம் செய்து கொடுக்கச் சுரம், சந்நி, இசிவு, மாந்தம், கபக்கட்டு இவைகள் போம். பயறு அளவாகச் செய்துள்ள மாத்திரையில் 10, 16-வயதுள்ள பாலர்களுக்கு வயதுக்கு ஏற்றவாறு 1, 2-மாத்திரையாகத் தகுந்த அநுபானங்களில் கொடுக்கச் சுரம், சயித்தியம், தொண்டைக்கட்டு முதலியவைகள் போம். பெரியவர்களுக்கு 2, 3-மாத்திரை அநுபானங்களில் கொடுக்கச் சீதள சம்பந்தமான பல பிணிகள் போம்.

குறிப்பு:—இம்முறையில் சேர்க்கவேண்டிய வீரச்செந்தூரத்தை முடிக்கும் விதம் இரண்டு விராகனெடை மரவுப்பு என்று சொல்லப்பட்ட (பொட்டாஸ் அயோடிட்) (Iodide of potassium) 4, 5-

அவுன்ஸ் சலத்தில் கரைத்து அதில் 3-விராகனெடை வீரத்தைப் பொடி செய்து போட்டு ஒரு சுப்பலால் கலக்கி ¼-மணி நேரம் தெளிய விட்டுப் பார்க்க அடியில் வீரம் சிவந்து நிற்கும். மேலே தெளிந்துள்ள சலத்தை மெதுவாகச் சாய்த்து விடவும். இப்படி ஏழு முறை சலம் விட்டுக் சுப்பலால் கலக்கிக் கலக்கித் தெளிய வைத்து மேல் சலத்தைச் சாய்த்து விடவும். அதன் பின் ரவியில் உலர்த்திச் சிவந்திருக்கும் வீரச் செந்தூரத்தைப் புட்டியில் பத்திரப் படுத்துக. இதனையே மேற்கூறப்பட்ட மாத்திரையில் சேர்க்கத் தக்கது.

நவரச மெழுகு

நீர்நாய்ச் சவ்வாது, அபினி, பொரித்த பெருங்காயம், குங்கு மப்பூ, வெண்மிளகு, ஜாதிக்காய், அக்காராகாரம், குரோசாணி ஒமம் வகைக்குத் தோலா எடை-½ தோல் நீக்கிய வாதுமைப்பருப்பு தோலா எடை-4 இவற்றுள் முதல் 5-சரக்குகளைக் கல்வத்தில் போட்டு அரைத்து அதனுடன் மற்றச் சரக்குகளை இடித்துச் சூரணம் செய்து போட்டு முலைப்பால் விட்டு ஒரு சாமம் அரைக்க வும். இது மெழுகு பதம் வந்தபின் சிறிது அசல் தேன் கூட்டி ஒரு நாழிகை மெழுகுபதத்திலேயே அரைத்து வாயகன்ற சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது குன்றிப் பிரமாணம் தகுந்த அனுபானங்களில் கொடுக்கச் சீதள சம்பந்தமான தலைவலி, பிடரி வலி, ஜலதோஷம், சயித்தியம், காது குத்தல் முதலியவைகள் குணமாகும். இந்த மருந்தானது சிரசைப்பற்றிய சீதளரோகங்களுக் கெல்லாம் அதிகம் சிறந்தது.

பசுவின் சாணம்

(Cow's Dung)

ஆவினது சாண மடிபடுவீக் கம்முதிரந்
நாவி வருகிருமி சார்ந்தகப—மேவுசுரந்
தங்குந்தா கம்போக்குஞ் சாற்றின்மெய்ச் சுத்தியபால்
தெங்கின்பா லுக்கோக்குந் தேர்.

குணம்:—(இ - ள்.) பசுவின் சாணம்-கல் முதலியவைகளால் அடி பட்ட வீக்கம், ஒழுகின்ற உதிரம், கிருமிரோகம், கபசுரதாகம் இவைகளை நீக்கும். தேகசுத்தி யுண்டாக்கும். இது தெங்கின் பாலை ஒக்கும் என்க.

செய்கை :—சோபாநாசினி, இரத்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—பசுவின் சாணம், பால், தயிர், நெய், நீர் இவைகளைக் கூட்டிப் பஞ்சகௌவியம் சில வேளை உட்கொள்ளும்பொருட்டு ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இதனால் தேகத்திலுள்ள மாசுக்கள் நீங்கிச் சுத்தி பெறுமென்பது கருத்து. அடிபட்ட இடங்களில் பசுவின் சாணத்தைச் சலம்விட்டுக் கரைத்துக் கொதிக்க வைத்துத் தாளக்கூடிய சூட்டில் மேற்பற்றுப் போட விரைவில் வீக்கம் கரையும். நோய் தணியும்.

பசுவின் தயிர்

(Cow's Curd)

பசுவீன் றயிராற் பசிமிகவுண் டாகு
மிசிவுறுமை சீரணநோ யேதும்—பசையகன்ற
தாக மிளைப்பிநமல் தாங்கொணு மெய்யெரிவு
மேகு முலகி லியம்பு.

குணம்:—(இ - ள்.) பசுவின் தயிரால் பசியுண்டாகும். இசிவு, சீரணரோகம், தாகம், ஆயாசம், காசம், சரீர எரிச்சல் இவை நீங்கும்.

செய்கை:—ஜடராக்கினி வர்த்தனி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாகப் பகல்போஜனத்தின் முடிவில் பசுவின் தயிரை விட்டுச் சாப்பிடுவது வழக்கம். இது தேகத்திலுள்ள வெப்பத்தைத் தணித்துத் தாகத்தை யடக்கும். பித்த சம்பந்தமான ரோகிகளுக்கும், மூல ரோகிகளுக்கும், உஷ்ண பேதி யுடையவர்களுக்கும், சீதபேதி யுடையவர்களுக்கும் சாலச் சிறந்தது. சிறிது புளிப்புச் சுவையிருப்பின் ஜீரண சக்தியை விசேஷப்படுத்தும். இதனை இரவு காலத்தில் உபயோகப்படுத்துவது நன்றன்று.

பசுவின் நெய்

(Cow's Ghee)

தாக முழலைசுட்கஞ் சர்த்திபித்தம் வாயுபிர
மேகம் வயிற்றெரிவு விக்கலழல்—மாகாசங்
குன்மம் வறட்சி குடற்புரட்ட லஸ்திசுட்கஞ்
சோன்முலம் போக்குநிரைத்* துப்பு.

* துப்பு - நெய்.

குணம்:—(இ - ள்.) பசுவினது நெய்யானது தாகம், உழலைப் பிணி, அதிசுட்கரோகம், வாந்தி, பித்தாதிக்கம், வாதவிஷமம், விரணப்பிரமேகம், வயிற்றிலெரிவு, பித்தவிக்கல், இருமல், வயிற்றுவலி, சிலேப்பு, குடல் நெளிதல், எலும்புருக்கி, பல மூலரோகம் ஆகிய இவைகளை நீக்கும்.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சாதாரணமாக முதல் அன்னத்தில் கூட்டிச் சாப்பிடுவது வழக்கம். இது தேகத்திலுள்ள கொதிப்பை ஆற்றுவதுடன் உள் ரணங்களையும் குணப்படுத்தும். இன்னும் இது தேக வெப்பத்தினால் வறட்சியடைகின்ற மச்சை தாதுவை விருத்தி செய்து க்ஷயம் முதலிய ரோகங்களுக்கு இடங் கொடுக்காமல் பாதுகாக்கும். இந்த நெய்யைச் சிரசிலிட்டு ஸ்நானம் செய்துவர பால்ய, குமார, விருத்தர்களுக்கும் ரசதாதுவின் கொதிப்பாற் கண்ட எரிச்சல், பயித்தியம், மூர்ச்சை, ரத்தபித்த ரோகம், விதாகம் இவைகளை நீக்கி நன்மையைத் தரும். இதுவுமல்லாமல் இதனை அவிழ்த்த பாகங்களில் தைலம், கிருதம் முதலியவற்றில் கூட்டுவதுண்டு. இதனால் தேகத்திற்கு அதிக நன்மை உண்டு.

பசுவின் பால்

(Cow's Milk)

பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் புண்ணுளி
சூலையர் மேகத்தோர் துற்பலத்தோர்—ஏலுமிவர்
எல்லார்க்கு மாகு மிளைத்தவர்க்குஞ் சாதகமாம்
நல்லாய் பசுவின்பால் நாட்டு.

குணம்:—(இ - ள்.) பசுவின் பாலானது பாலருக்கும், விருத்தருக்கும், புராண சுரம், சூலை பிரமேகம், துர்ப்பலம், அதிசுஷ்க ரோகம் ஆகிய இவைகளை யுடையவர்களுக்கும் ஆகும் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—பசுவின் பாலைக் குழந்தைகளுக்கும் விருத்தருக்கும், விரண ரோகிகளுக்கும், துர்ப்பல முடையவர்களுக்கும், இளைத்தவர்களுக்கும், மிதமிஞ்சிய போகத்தால் நாம்பு தளர்ந்தவர்களுக்கும், நெடுநாள் சுரத்தில் கஷ்டப்படுகிறவர்களுக்கும் மூலசம்பந்தமான வியாதியஸ்தர்களுக்கும், வாதரோகிகளுக்கும், குடல்

சம்பந்தமான வியாதியஸ்தர்களுக்கும், அஜீர்ணபேதி யுடையவர்களுக்கும், நீர்த்தாரை விரணமுடையவர்களுக்கும் உபயோகப்படுத்துவதுண்டு. இதனால் அவர்களுக்குச் சக்தி மிகுந்து பலமிய சுகத்தை அடைவார்கள். தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்குச் சரி எடை சலம் கூட்டிக் காய்ச்சி ஆடையை நீக்கிக் கொடுத்துக் கொண்டுவர நல்ல சுகத்தைக் கொடுத்து தேகத்தைப் போஷிக்கும். சுரரோகிகளுக்கு பசுவின் பாலுடன் சமனெடை சலம் கூட்டி மூன்றிலொருபாகம் சுண்டக் காய்ச்சி ஆடை நீக்கிக் கொடுக்க நல்லுணவாகும். சன்னிபாத சுரத்தில் (Enteric Fever) முற் காய்ச்சிய பாலுடன் பார்லி அரிசியை மலர வேகவைத்து வடித்தெடுத்த கஞ்சியை 2-பங்கு கூட்டிக் கலக்கி கொடுப்பதுண்டு. இது சிறந்த பத்தியமாகும். சில சந்தர்ப்பங்களில் பசுவின் பாலைக் காய்ச்சி எலுமிச்சம் பழச்சாறு விட்டு முறித்து வடிகட்டித் தெளிவு நீரையும் கொடுப்பதுண்டு. தேக மிளைத்தவர்களுக்கும், நரம்பு தளர்ந்தவர்களுக்கும் பசுவின் பாலை ஆடை கட்டாமல் இளறிக் இளறிக் கொடுத்துப் பதமுறக் காய்ச்சிச் சிறிது சீனி கற்கண்டுத் தூளிட்டு இரவு படுக்கைக்குப் போகும்போது தினந்தோறும் உட்கொண்டுவர நல்ல பலம் உண்டாகும். கறந்த பசுவின் பாலில் சிறிது மஞ்சள் தூளிட்டுத் தினந்தோறும் காலையில் அருந்திவர வறட்சியினால் உண்டான இருமல் குணமாகும்.

பசுவின் மூத்திரம்

(Cow's Urine)

விடபாண்டு சோபைபல வீக்கஞ் சகல
விடமுதிரா மாலையென மெத்தப்—புடவிதனிற்
பேசலக்க ணோடுதந்தப் பீடையும் கன்றீடுமே
கோசலத்தா லாரணங்கே கூறு.

குணம்:—(இ-ள்.) கோசலத்தால் விஷபாண்டு, சோபை, பற்பல வீக்கம், சகல விஷம், அசிர்க்கு காமாலை, பன்னெய் முதலிய பிணிகள் போம் என்க.

செய்கை:—மூத்திர வர்த்தனகாரி, விஷ நாசகாரி.

உபயோகிக்கும் முறை:-இதனை மூன்று மடிப்புள்ள சீலையில் வடிகட்டி வேளைக்கு 1-அவுன்ஸ் வீதம் தினம் 2-வேளை கொடுத்துவரப்

பெருவயிறு, காமாலை, நீர்ப்பாண்டு, குன்மம், மகோதரம் முதலிய வைகள் குணமாகும். இன்னும் இதனை அந்தந்த ரோகங்களுக்கு உரித்தான கியாழங்களில் கூட்டிக் கொடுப்பதுண்டு.

இதனை நமட்டுச் சிரங்கு, கரப்பான் முதலியவற்றிற்குச் சிறிது பசுவின் சாணத்துடன் கரைத்து மேற்பூசிச் சிறிது நேரம் சென்ற பின் சுத்தமாக அலம்பிவிட விரைவில் குணமாகும்.

நிர்விஷம், இருவி, நாபி இவைகளைத் தினந்தோறும் புதிய பசுவின் மூத்திரத்தில் 3-நாள் ஊறப்போட்டு எடுக்க உயர்தரமான சுத்தியாகும். மண்டூரத்தைக் கொல்லனுலையில் வைத்தூதிப் பல முறை பசுவின் மூத்திரத்தில் தோய்த்தெடுக்க உயர்தரமான சுத்தி யாகும்.

பசுவின் மோர்

(Cow's Butter milk)

வீக்க மகோதரமுள் வீறுகுன்மம் பாண்டுபித்தந்
தாக்குமருந் திட்டததி சாரமோடு—கூக்குரலே
மாறுத் தீரிதோஷ மந்தமனற் றுகம்போம்
வீறுவின் மோருக்கு மெய்.

குணம்:—(இ - ள்.) பசுவின் மோருக்கு - வீக்கம் மகோதரம், வயிற்றுவலி, பாண்டுரோகம், பித்தகோபம், இடுமருந்தால் வரும் நோய்கள், பேதி, திரிதோஷம், அக்கினிமந்தம், வெப்பம், தாகம், ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—பசுவின் தயிரைவிட மோரே ஆகாரத் தில் அதிகம் சிறந்தது. ஒவ்வொரு குடும்பங்களிலும் ஆகாரமுடிவில் மோர் அன்னம் கொள்வது பழக்கமாக வைத்துக் கொண்டிருக்கின்ற னர். அதன் குணத்தைப் பெரும்பான்மையோர் அறியார். சிறிது புளிப்பேறிய மோரை அன்னத்துடன் உப்பிட்டுக் கூட்டி உண்பதி னல் இரத்த தாரைகளிலுள்ள மாசுக்களை நீர்மூலமாய் வெளியாக்கி இரத்த வோட்டத்தைக் கிரமப்படுத்தும். அதனல் தேகத்தின்கண் கணுக்களில் மாசுக்கள் நிறைந்து உண்டாகுஞ் சந்து வாதத்தை மிக வொட்டாமல் தடுக்கும். சாதாரணமாக மோர் அன்னம் கொள்வ

திரும் மலசலக் கட்டுகள் உண்டாகாமல் அப்போதைக்கப்போது உட்சூட்டை வெளியாக்கி விடும். கணுக்காலில் வீக்கம், வலி முதலியவைகளை யுடையவர்கள் இம்மோரைத் தாராளமாக உபயோகப்படுத்திக் கொண்டுவர நீரிறங்கி வீக்கம் வாடும். இன்னும் இது மகோதரம், வயிற்றுவலி, பாண்டு, பித்தகோபம், பேதி, தாகம் அக்கினிமந்தம் முதலிய ரோகங்களை யுடையவர்களுக்குச் சிறந்த பத்தியமாகும்.

பசுவின் வெண்ணெய்

(Cow's Butter)

கண்ணி லெழுநோயுங் கண்ணெரிவும் பீளையும்போ
மெண்ணும் பசியு மெழும்புங்காண்—நண்ணரிய
ஆவினறும் வெண்ணெய்க் ககலும்வன் மேகமெல்லாம்
பூவினர்க் கெல்லாம் புகல்.

குணம்:—(இ - ள்.) பசுவின் வெண்ணெய்க்குக்-கண்ணெய், கண்ணெரிச்சல், பீளைசாரல், பிரமேகரோகம் இவை போம். தீபாக்கினி யுண்டாம் என்க.

செய்கை:—ஜடாக்கினிவர்த்தனி.

உபயோகிக்கும் முறை—வெண்ணெயுடன் சர்க்கரை கூட்டித் தின் பண்டங்களில் சேர்த்துண்ணச் சூடு தணியும். அன்ன வடித்துச் சூடார்க இருக்கும் சமயம் சிறிது வெண்ணெய் கூட்டிப் பிசரி ஒரு சுத்தமான வஸ்திரத்தில் வைத்து முடிச்சுக் கட்டித் தாளக்கூடிய சூட்டில் கண்களுக்கு ஒற்றடமிடக் கண்வலி நீங்கும். நீரெரிச்சல், நீர்ச்சுறுக்கு, நீரடைப்பு, வெள்ளை முதலிய ரோகங்களுக்குக் கல்நார் பற்பம், சிலாசத்து பற்பம், சினலிங்கச் செந்தூரம், சினகாவிச் செந்தூரம் முதலியவற்றை உள்ளுக்குக் கொடுக்கும்போது பசுவின் வெண்ணெயை அனுபானமாகச் சேர்த்துக் கொடுப்பின் விசேஷ நன்மையைத் தரும். பேயன்வாழைப்பழம் பலம்-3, பசுவின் வெண்ணெய் பலம்-3 நெற்பொரி பலம்-2; சர்க்கரை அல்லது கற்கண்டுத் தூள் பலம்-1, ஏலக்காய்த்தூள் குன்றியெடை-3 கூட்டிப் பிசைந்து நன்கு உறவான சமயம் வேளைக்கு எலுமிச்சம்பழம் அளவு தினம் 2, 3-வேளை சாப்பிட்டு வர தேகக் கொதிப்பு, இரத்தப் பிரமேகம், பெரும்பாடு முதலியவைகள் குணமாகும்.

பச்சைப் புறு

(Green Pigeon)

இச்சைதரும் புன்முறுவ லேந்திழையே மாந்தர்மிகப்
பச்சைப் புறுவூன் பருகினுற்—கோச்சைதரும்
வாதபித்த வையம்போ மாபலமுந் தாதுவுமா
மோதுசீ தங்காக்கு முன்.

குணம்:—(இ - ள்.) பச்சைப்புறுக்கறியை யுண்ணில் திரிதோஷ தொந்தமும் பேதியும் போம். தேகபுஷ்டியும், வீரிய விருத்தியும் உண்டாம் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளிற் : கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும்.

பலகறை

(Cypraea moneta)

மந்தந்தா கங்கிரணி மாவிடச்சு ரங்கண்ணேய்
தோந்தம் பரிநாமச் சூலகய—மிந்த
வுலகறையைக் காலோடிவை யோடு நரைத்த
பலகறையைக் காணினியம் பார்.

குணம்:—(இ - ள்.) வெண்பலகறையினுல்-அலஜம், தாகம், இரகணி, விஷசுரம், விழிநோய், வாததொந்தம், பலவிதக் குத்தல், கூயம், கபவாதம் இவைபோம் என்க.

செய்கை:—கபஹரகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை அதிகப் புளிப்புள்ள திரவத்தில் கரைத்தாவது அல்லது பற்ப சுண்ணங்களாகச் செய்தாவது உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

பலகறை பற்பம்

மூன்று பலம் பலகறையை ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு அவைகள் நன்றாய் மூழ்க எலுமிச்சம் பழச்சாறுவிட்டு 5-நாழிகை ரவியில் வைத்து அப்பால் கலயத்தின் வாய்க்குப் பொருத்தமான் அகல்மூடிச் சீலை ஏழுசெய்து காய்ந்தபின் 30, 40-வறட்டியில் புடமிடவும். புடம் நன்றாய் ஆறினபின் எடுத்துச் சீலையை நீக்கிப்

பார்க்கப் பலகறை வெந்து நீற்றிருக்கும். அவைகளை ஒரு கோப்பையில் போட்டுக் காற்று வாட்டமாக வைக்கப் பூத்துவிடும். இதை அரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்துக. வேண்டும்போது வேளைக்கு 1, 1½-குன்றி எடை எலுமிச்சம்பழச் சாற்றில் கலக்கிக் கொடுக்க வயிற்று நோய், நீர்ச்சுறுக்கு முதலியவை போம். இதைத் தேங்காய் எண்ணெயில் மத்தித்து ரணங்களுக்குப் போட ஆறும். இதைத் தேனில் மத்தித்துச் சாப்பிட, சுரம், பித்த எரிவு, குன்மம், ஈரல்களின் வீக்கம், சூதகவாயு இவைகள் போம். இதை வெண்ணெயில் மத்தித்துச் சாப்பிட்டு வர வெள்ளை, சீதபேதி, கழிச்சல், இரகணி இவைகள் போம்.

வேறு முறை

ஒரு தோலா சங்குபாஷாணம், 6-தோலா நெல்லிக்காய் கெந்தகம் இவையிரண்டையும் கல்வத்தில் போட்டு கொம்புக் கள்ளியை வதக்கிப் பிழிந்தெடுத்த சாறுவிட்டு நன்றாய் அரைத்து இரு பாகமாகப் பங்கிட்டு ஒரு பாகத்தை ஒரு பெரிய பலகறைக்குக் கவசமிட்டு அதன்மீது மண்சீலை 2, 3-செய்து 2, 3-வறட்டியில் புடமிடவும். இது நன்றாய் ஆறினவுடன் கவசத்தை மெதுவாக நீக்கி உள்ளிருக்கப்பட்ட பலகறையை எடுத்து முன் நிறுத்தி வைத்துள்ள மற்றோர் பாதிமருந்தை முன்போல் கவசமிட்டுச் சீலைசெய்து 5, 6-வறட்டியில் புடமிடவும். அப்போது பலகறை நீறிச் சுண்ணமாகும். இதனை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்கு 2, 3-அரிசி எடை தேனில் கொடுக்கச் சுவாசகாசரோகத்தில் கபத்தின் உபரியால் உண்டான சுவாசக் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். இந்த பற்பம் கபத்தை எளிதில் கரைத்து இருமலைக் குணப்படுத்தும்.

பவளம்

(Corallium Rubrum)

நற்பவள நீற்றை நயந்தேயுட் கொண்டார்க்குச்
சொற்பசுர மீளை சுகமாகும்—கற்பரசே
தாக முடனழலை தட்டுநீர்க் கட்டோரிச்சல்
வேகமுட னேடும் விரைந்து.

குணம்:—(இ-ள்.) நற்பவளப் பற்பத்தினால் கபம், சுரதோஷம், தாகம், மேகவழலை முதலியவை சாந்தப்படும் என்க.

இதுவுமது

சுரதோட மையழத் தோடசுரங் காச
மருசிகீ டத்தாலா மாலம்—பெருவிந்து
நட்ட மதிதாக நாவறட்சி போமோளிவுங்
கிட்டும் பவளத்தாற் கேள்.

(இ - ள்.) பவளத்தினுல் ரூட்சையின் விகாரம், கபம், சந்நிபாத சுரம், இருமல், அரோசகம், கீடவிஷம், சுக்கில கூீணம், விதாகம், நாவில் சுறசுறப்பு ஆகிய இவைகள் விலகும். இன்னும் சரீர காந்தியுண்டாகும் என்க.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—தேவையான அளவு பவளத்தை ஒரு பீங்கான் கோப்பையில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஓர் இரவு ஊறப்போட்டு எடுக்கச் சுத்தியாகும். இதனையே அவிழ்த பாகங்களில் கூட்டுவதுண்டு. எங்ஙனமெனில்:—

பவள பற்பம்

ஒரு பழகின குடுவையில் 1-அல்லது 2-பலம் சுத்திசெய்த பவளத்தைப் போட்டு அவைகள் மூழ்க முயலின் இரத்தத்தை விட்டுக் கிளறி ஓடுமூடிச் சீலைசெய்து 20-வறட்டியில் புடமிடப் பற்பமாகும்.

வேறு முறை

குப்பைமேனி யிலையையாவது, இலந்தம் இலையையாவது, தேள் கொடுக்குச் செடியின் இலையையாவது நன்கு அரைத்துச் சுமார் சிறு தேங்காய்ப்பிரமாணம் உருண்டை செய்து அதனிடையில் பள்ளம் செய்து 2, 3-பலம் சுத்தி செய்த நற்பவளத்தை வைத்து வாய் சேர மூடிச் சீலைசெய்து 50, 60-வறட்டியில் வைத்துப் புடம் போடப் பவளம் வெந்து வெளுத்துப் பற்பமாக இருக்கும். அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

வேறு முறை

பவளம் பலம்-1, வீரம் கழஞ்சு-1, சடாமாஞ்சி கழஞ்சி-5, மிளகு கழஞ்சி-4 இவைகளைக் கல்வத்தில் போட்டுக் குமரிச்சாறு விட்டு 2-சாமம் அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து அதனை ஒரு அகலில் வைத்து மேல் அகல்மூடி மண்சீலை எழு செய்து

30, 40-வறட்டியில் புடமிடப் பவளம் பற்பமாகும். இதை அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

இத்தகைய பற்பங்களை வேளைக்கு ½, 1-குன்றி எடை தினம் இருவேளை ஆட்டுநெய் அல்லது பசுவின் நெய்யுடன் கற்கண்டு கூட்டி வெண்ணெய்போ லரைத்தெடுத்த கலவையில் சிறு சுண்டக்காய்ப் பிரமாணம் அனுபானம் செய்து கொடுத்துக்கொண்டுவர இருமல், ஈளை, காசம், கூயம், வெள்ளை முதலிய பல பிணிகள் குணமாகும். இந்த பற்பத்தை நீராகாரத்தில் போட்டுக் கொடுக்க நீர் எரிச்சல், நீர்ச்சுருக்கு, நீரடைப்பு முதலியவைகள் குணமாகும். ஒரு கோழி முட்டையிலுள்ள வெண்கருவை ஒரு வெள்ளைச் சீசாவில் விட்டு 6-அவுன்ஸ் சுத்த சலம் விட்டு அதனில் முன் முடித்து வைத்துள்ள ஏதேனும் ஒரு பவள பற்பத்தில் 3-குன்றி எடை போட்டு வாய்க்குக் கார்க்கிட்டு நன்றுய்க் குலுக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு 2-அவுன்ஸ் வீதம் தினம் 3-வேளை கொடுக்கவும். இப்படி 2, 3-நாள் கொடுக்க ரத்தவாந்தி, இருமல் குணமாகும்.

பள்ளையாட்டு இறைச்சி

(Pallaiyadu - meat)

மந்தமிகுந் தீபனம்போ மாறு வரோசகமார்ந்
தொந்தனோ யெல்லாந் தொடருங்கா—ணிந்துநுதன்
மானே கபமயமும் வன்பள்ளை யாட்டுக்குத்
தானே மிதும்வாயு தான்.

குணம்:—(இ - ள்.) பள்ளையாட்டு இறைச்சிக்கு - அலஜம் மந்தாக்கினி, நீங்காத அருசி, திரிதோஷ மிஸ்ரம், கப தோஷம், வாதாதிக்கம் இவை யுண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளிற் கூறப்பட்ட குணங்களெல்லாம் உண்டாகும்.

பன்றி நெய்

(Adeps Suillus - ghee)

பன்றிநெய் நீர்க்கடுப்பு பாயுழ லத்திரத்தங்
கன்றிய வாதக் கடுப்புமுதல்—துன்னியநோய்
அக்கிதீப் புண்ணுடனே யாறுத கட்டுப்புண்
புக்கிடுமா சாகரத்திற் போய்.

குணம்:—(இ - ள்.) பன்றி நெய்யால் நீர்ச்சுறுக்கு, ரத்தமூலம் வாயுவினு லுண்டான தேகவலி, அக்கி, தீப்பட்ட புண்கள், ஆறாத குழிரணங்கள் குணமாகும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—பன்றிக் கொழுப்பை ஒரு இரும்புக் கடாயிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரிக்க உருகி எண்ணெய் போல் ஆகும். இதை வடித்துப் பத்திரப்படுத்துக. இதற்கே பன்றி நெய் எனக் கூறுவர். இந்த நெய்யைக் கோழி இறகால் தொட்டு அக்கிப்புண், தீப்பட்ட விரணம், குழிப்புண் முதலியவற் றிற்குத் தடவிவர விரைவில் ஆறும். இந்த நெய்யை விரணங்களுக் காகச் சித்தப்படுத்துகின்ற களிம்புகளில் கூட்டி அரைப்பது சாலச் சிறந்தது. இந்த நெய்யை மூலரோகத்திற்காகக் கூறப்பட்டுள்ள லேகியங்களில் நெய்க்குப் பதிலாக கூட்டிக்கொள்வது விசேட நன்மையைத் தரும்.

பன்றி யிறைச்சி
(Adeps Suillus - meat)

தாதுமிகும் மெய்வலுக்குஞ் சாடுங் கிராணியறும்
வாதுசெயும் வெம்முலை வாய்வுடனே—தீதுமிகத்
துன்றிரத்த முலமதுந் தோகைநல்லாய் இப்புவியில்
பன்றிவிடக் காலகலும் பார்.

குணம்:—(இ - ள்.) பன்றி இறைச்சியால் கிராணி, கொடிய மூலநோய், வாய்வு, இரத்த மூலம் முதலியவைகள் குணமாகும். இன் னும் இதனால் தாதுவிர்த்தியும், தேகவன்மையும் உண்டாம் என்க.

செய்கை:—பலகாரி, காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளிற் கூறப்பட்ட குணங்களெல்லாம் உண்டாகும். இது மூலரோகிகளுக்குச் சிறந்தப் பத்திய பதார்த்தமாகும்.

பாலேடு
(Milk Cream)

பாலேட்டாற் பித்தமறும் பாழ்த்தகொடுஞ் சர்த்தியும்போம்
மாலாட்டு மூர்ச்சையும்போம் வன்பலமா—மேலாலே
தாதுமிகுந் தீபனமாந் தானே யிளைத்தவர்க்குக்
கோதுமறு மாமயிலே கூறு.

குணம்:—(இ - ள்.) பாலிலுண்டாகும் ஏட்டினால் பயித்திய நோயும், பித்த வாந்தியும், மூர்ச்சையும் நீங்கும். மிகு பலமும், சுக்கிலமும், ஜடராக்கினியும் விருத்தியாம். இதைத் தூர்ப்பல தேகிகளுண்டாலுங் குற்றமில்லை என்க.

சேய்கை:—ஜடராக்கினி வர்த்தினி, பலகாரி, காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—பாலை நன்றாய்ச் சுண்டக் காய்ச்சி ஆறவிட்டு மேலுறையும் ஆடையுடன் சர்க்கரை சேர்த்து உண்பதுண்டு. இதனால் சரீரத்திற்குப் பலமுண்டு. பித்தம், பசிமந்தம், மூர்ச்சை முதலியவைகள் நீங்கும்.

புழுகுச் சட்டம்

(Viverra Civetta · unctuons Secretion)

ஆசுறுக் காந்தியுண்டா மசீரண வாதம்போகுந்
தேசுதான் வளருமபித்த சிலேஷ்மமும் விடமுமேகு
மாசறு மாயுளுண்டாம் வனசமா தருளுஞ்சேரும்
வாசமார் புழுகுச்சட்ட மகிமையை யுரைக்குங்காலே.

குணம்:—(இ - ள்.) மணமுள்ள புழுகுச் சட்டத்தினால் மந்த வாதமும், பித்த கபமும், விஷமும் போம். ஒளியும், தேஜசும் நிறையாயுளும் திருமகளருளும் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இது வாசனைக்காக உபயோகப் படுத்துகின்ற திரவங்களில் ஒன்று. இது அதிகம் சிறந்ததோடு உஷ்ண வீரியமான சரக்கு. இதன் உபயோகத்தைச் சவ்வாதின் தலையங்கத்தின் கீழ்க் குறிப்பிட்டதைக் கவனிக்கவும். இதை விசேஷமாக ஸ்தானத்திற்குரிய உயர்தரமான தைலங்களில் கூட்டுவதுண்டு. இது சிரசில் உள்ள பல ரோகங்களைக் கண்டிப்பதுடன் மனோற்சாகத்தை உண்டாக்கும்.

புற்ரூஞ்சோறு

(Putranjoru)

புற்றுஞ்சோ றுண்ணப் புகலுங் கிராணியோடு
வற்றுநீர் மேகம் வளர்தாகம்—முற்றுமல்
விட்டகலும் போகமதில் வீரியத்தை யுண்டாக்கும்
நட்டமிதி லேன்ன நவில்.

குணம்:—(இ - ள்.) புற்ருஞ் சோற்றை யுண்ணக் கிராணி, அதிக நீர் போதல், தாகம் இவைகள் போம். தாது பலப்படும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—கறையான் என்று சொல்லப்பட்ட செல்லினுடைய புற்றுக்குள் வெண்மை நிறமாகவும் புரைபுரை யாகவும் உள்ள புற்ருஞ்சோற்றைக் கொண்டுவந்து மண் முதலியவைகள் இல்லாமல் சுத்தமாக எடுத்து உள்ளுக்குப் பிரயோகம் செய்வதுண்டு. எங்ஙனமெனில்:—

வன்மீக மாத்திரை

தேவையான அளவு புற்ருஞ் சோற்றைக் கல்வத்தில் போட்டுச் சுத்த சலம் விட்டு நன்ருய் அரைத்து மெழுகு பதத்தில் சுண்டைக் காய்ப் பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப் படுத்துக. வேண்டும்போது வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் 2-வேளை சாப்பிட்டு வர அதிகமாக நீர்போதல், கிராணி முதலிய ரோகங்கள் தீரும்.

கருவங்க பற்பம்

மூன்று பலம் சுத்திசெய்த கருவங்கத்தை ஒரு இரும்புக் கடாயில் போட்டு அடுப்பிலேற்றி எரித்து உருகின சமயம் 15-பலம் எடையுள்ள காய்ந்த புற்ருஞ் சோற்றைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக் கரண்டி கொண்டு தேய்த்துவர லோகசத்து இல்லாமல் சந்தன நிறமான பற்பமாகும். இந்தப் பாகத்தில் எரிப்புத் திட்டம் சரியாக இருக்கவேண்டும். இன்றேல் வங்கம் மடியாது. இப்படி முடிந்த பற்பத்தில் ½-விராகனெடை ஒரு இரும்புக் கரண்டியில் போட்டுச் சிறிது நல்லெண்ணெய் விட்டு அடுப்பில் வைத்து எண்ணெய் பற்றி எரிந்த பின் விரலால் இளறிப் பார்க்க வங்கம் உருகி மணியாகத் திரளக் கூடாது. அங்ஙனம் இல்லையாயின் உள்ளுக்குக் கொடுக்கலாம். சத்து இருப்பின் மீண்டும் கொஞ்சம் புற்ருஞ்சோறு போட்டு வறுத்து எடுக்க வேண்டும். இப்படிச் சரியாக முடிந்த பற்பத்தில் வேளைக்கு 1-குன்றி எடை தனியாகவாவது அப்பிரகச் செந்தூரம் கூட்டியாவது தினம் இருவேளை 10-நாள் கொடுக்க மதுமேகம் குணமாகும் தாது பலமுண்டாகும்.

பூநாகம்

(Earth Worm)

மாதவறு செய்வறட்சி மாறுமடங் காச்சந்நி
பாதவறு நோயோடொன்றும் பாறுமடல்—வாதவறு
குண்ட பதமீளு மோக்காள மையமும்போங்
* கண்ட பதமென்னுங் கால்.

குணம்:—(இ - ள்.) பூநாகத்தினுல் மிகவும் துன்பத்தை விளைக்கின்ற தாகமும், ஏழுவித அசாத்திய சந்நிபாத சுரங்களும், ஊரு ஸ்தம்பம் என்கிற மகாவாதமாகிய புலியினுல் கவர்ந்து கொள்ளப் பட்ட தொடையும், ஓக்காளமும், சிலேஷ்மரோகமும் ஒழியும், என்க.

புலிவாயில் அகப்பட்ட ஆட்டுத்தொடை மீளாததுபோல இந்த மகா வாதத்திலகப்பட்ட மனிதர்தொடை இவ்வியாதியில் நின்றும் நீங்குவது அருமையா யிருப்பினும் இதை இது நீக்கும் என்னுந் துணிபு தோன்ற அறுகுண்ட பதம் என்றார். (அறுகு-புலி என்று பொருள்.)

உபயோகிக்கும் முறை:—இதனுடன் கற்கண்டு கூட்டி அரைத்து வேளைக்கு 1, 1½-ஹராகனெடை உள்ளுக்குத் தினம் 2-வேளைக் கொடுக்க வலி, புறவீச்சு முதலியவை குணமாகும். இன்னுமிதனைக் கியாழமாகவும், தைலமாகவும் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனின்:—

பூநாகக் கறுக்குக் கியாழம்

பூநாகம் கைப்பிடி-1, நாயுருவி சமூலம் கைப்பிடி-1, வாழைச் சருகு கைப்பிடி-1 இவைகளைப் புதுச்சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து எரித்துக் கரியாக்கி ½-படி சலம் விட்டு ¼-படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3-வேளை கொடுத்துவரச் சந்நி, நாவறட்சிமுதலிய தோஷங்கள் தீரும்.

சந்நித் தைலம்

பூநாகம் பலம்-2, அரைத்து எடுத்த நொச்சியிலை பலம்-1 அரைத்து எடுத்த வெண்மிளகு பலம்-½ இவற்றையெல்லாம் தைல

* கண்டபதம் - பூநாகம்.

பாண்டத்தில் போட்டு ¼-படி பசுவின்பால் விட்டுக் கரைத்து அதனில் 10-பலம் நல்லெண்ணெய் விட்டுக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறிது தீயாக எரித்து ஈரஞ்சுண்டிப் பூநாகம் மிதக்கும்போது வடித்து எடுக்கவும். சூடாறின சமயம் 4-குன்றி எடை அபினியைச் சிறிது எண்ணெய் விட்டு அரைத்துக் குழம்பான பதத்தில் மிகுதி யுள்ள எண்ணெயில் சேர்த்துக் குலுக்கிச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தத் தைலத்தில் வாரம் ஒருமுறை ஸ்நானம் செய்துவரச் சாதாரண தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டைக் குடைச்சல், கழுத்து ஈரப்பு இசிவு, சயித்தியம் முதலியவை போம். நோயுள்ள பாகத்தில் தேய்த்துத் தாளக்கூடிய சூட்டில் வெந்நீர் விட்டுவரக் குணமாகும்.

பெருச்சாளி

(Bandicoot)

ஆது வயிற்றை யறுத்துக் குடனீக்கி
வேகு மளவெண்ணெய் விட்டேரித்துப்—பாகுமொழி
மாதரசே பூசிவர மண்டலத்தில் வெண்படையின்
தீதற்கே யோடுந் திகைத்து.

குணம்:—(இ - ள்.) பெருச்சாளியின் வயிற்றைக் கீறிக் குடலை நீக்கி மூழ்க நல்லெண்ணெய் விட்டுப் பதமுறக் காய்ச்சி வெண்குட் டத்திற்குத் தடவி வர ஒரு மண்டலத்தில் சுபாவநிறமடையும் என்க.

உபயோகிக்கும் முறை:—பெருச்சாளியின் வயிற்றைக் கீறிக் குடல் தோல் முதலியவற்றை நீக்கி, சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பழைய மட்பாண்டத்தில் போட்டு மூழ்க நல்லெண்ணெய் விட்டு இறைச்சி நீர் சுண்டி மிதக்கும் பதத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு, வெண்குட்டத்திற்கு மேற்றடவி வர ஒரு மண்டலத்தில் நிறம் மாறி விடும்.

பேராரால் மீன்

(Thorny Backed Eel)

வாராய் மடமானே வந்த பிணியனைத்தும்
பேராரான் மீனுக்குப் பின்னிடையும்—பேரா
திருந்த பழமலம்போ மெய்துமா ரோக்ய
முருந்தோடே யோக்குமென வை.

குணம்:—(இ - ள்.) மருந்துக்குச் சமமான போராால் மீனுக்குத் தேகத்திலுள்ள பலவித ரோகங்களும், பழ மலக்கட்டும், நீங்கிச் சவுக்கிய முண்டாகும் என்க.

செய்கை:—இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்து உண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்ட குணங்கள் சித்திக்கும்.

பொன்னம்பர்

(Ambur Grise yellow)

விந்துமிகு மைம்புலத்தின் மேதைதரு மேய்நரம்பின்
மைந்து மிகுபட்ச வாதமறும்—சுந்தரஞ்சேர்
அஞ்சநடை யைப்பழிக்கு மாரணங்கே நீகேளாய்
மஞ்சணிறப் பொன்னம்பர் மாண்பு.

குணம்:—(இ - ள்.) மஞ்சள் நிறத்தையுடைய பொன்னம்பரால் தாது பலப்படும். ஐம்புலன் அறிவு விருத்தியடையும், நரம்புகள் வன்மை பெறும். பக்ஷவாதம் குணமாகும் என்க.

செய்கை:—உற்சாககாரி, அங்காகர்ஷ்ணநாசினி, கூரநாசினி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக இதன் உபயோகம் அம்பர் என்னும் சரக்கின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதே யாகும்.

இந்தப் பொன்னம்பரின் விபரத்தை பொதுப்பாயிரத்தில் காரசார லவணம் இருபத்தைந்தின் தலையங்கத்தின்கீழ் இனிது விளக்கப்பட்டுள்ளது.

மடவை மீன்

(Mugil Cethalus)

மடவைமீன் வாதமோடு மந்தழலை முலங்
குடல்வாதஞ் சூலை கோடிய—வடற்கரப்பா
னுண்டாக்கு மாமிசங்க ளூறு முலகத்தில்
வண்டார்க்கும் வார்குழலே வாழ்த்து.

குணம்:—(இ - ள்.) மடவை மீன்-வாதப்பிணி, அக்கினி மந்தம், மூலமூலை, ஆந்திரபித்த வாதம், குத்தல், கடுவன் இவைகளைத் தரும். மாமிசம் விருத்தியாம் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்து உண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் யாவும் சித்திக்கும்.

மடையான்

(Ardea Water Bird)

அன்னநடை பின்னுசடை யங்கண்மட மாதேகேள்
வன்னமடை யான்கறியை மாந்தினர்க்குத்—துன்னு
கரப்பான் சொரிசிரங்குங் காணுமைய வாத
முரப்பாக நீடு முரை.

குணம்:—(இ-ள்.) மடையான் கறியை யுண்டவர்க்குக் கடுவனும், நமைக்கிரந்தியும், வலுத்த சிலேஷ்மமும் வாத தொந்தமும் உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்து உண்பவர்க்கு இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள பிணிகள் உண்டாகும்.

மணிப்புறு

(Dotted Pigeon)

கணிப்புறு வின்பக் களஞ்சியமே கேளாய்
மணிப்புறுப் பத்தியமாம் வாதப்—பிணிப்பறுமுட்
கோண்டாற் கயந்தீநங் குன்மரோ கங்களறுங்
கண்டாலு மையம்போங் காண்.

குணம்:—(இ-ள்.) பத்தியத்திற்குதவியான மணிபுறுக் கறியைத் தின்றால் வாதப்பிடிப்பு, கூயம், வயிற்று நோய்கள், கபாதிக்கம் இவைகள் போம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்து உண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும்.

மயில் கறி

(Peacock Meat)

சூலைப் பிடிப்புகளைச் சோரிவளி யைப்பித்த
வேலைச்சி லேட்டுமத்தை வீட்டுங்கா—ணூலோத்த
வற்பவிடை மாதே யனலா மயிலிறைச்சி
நற்பசியுண் டாக்கு நவில்.

குணம்:—(இ - ள்.) உஷ்ணமுள்ள மயில்கறி - கீல்களிற் குத்து தல், வாத சோணிதம், கப பித்தம், அதிக கபம் இவைகளை நீக்கும்; தீபனத்தைத் தரும் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினி வர்த்தினி, கபஹர காரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண அதிக ருசியாக இருக்கும். இச் சூத்திரத்தில் கூறப்பட்டுள்ள குணங்களு மன்றித் தாது விருத்தி யடையும். இதன் மலத்தை நெருப்பனலில் போட்டுப் புகையுண்டாக்கப் பாம்பு முதலிய விஷ ஜெர்துக்கள் அணுகாது.

மயில் நெய்

(Peacock Fat - oil)

நீலமயி லின்கொழுப்பை நெய்யாக்கி மேற்றேய்க்கச்
சாலப் பிடிப்புவலி தானெழியும்—வாலீழையாய்
கண்டவிரற் சூலையறும் கைகால் முடக்கறும்பூ
மண்டலத்தி லென்றும் மதி.

குணம்:—(இ - ள்.) மயில் நெய்யை மேற்றேய்ப்பதினல் நரம்பு களிற் காணுகின்ற இசிவு, விரற்கணுக்களிற் காணுகின்ற வீக்கம் நோய், கை கால்களிற் காணுகின்ற பிடிப்பு முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—மயிலின் கொழுப்பை ஒரு இரும்புக் கடாயில் போட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து நீர்சுண்டி உருகிய சமயம் வடிகட்டி வைத்துக் கொள்க.

இதனைக் குழந்தைகளுக்குக் காணும் பலவிதமான இசிவு ரோகங்களுக்கு மேல் தேய்த்துவர அதிக நன்மையைத் தரும். இச் செய்யுளில் கூறியவண்ணம் ரோகங்களுக்குத் தேய்த்துவர எத் தகைய கடின நோய்களாக இருப்பினும் குணமாவது திண்ணம்.

மனைப்புறு
(Home Dove)

பத்தியத்திற் காகாது பன்மனைப்பு றுக்கறிதா
னெத்தகரப் பான்சொறியை யுண்டாக்கு—மெத்தவுமே
நாவுநசி யாயிருக்கு நற்சுக்கி லம்பெருக்குந்
தாவு கயல்விழியாய் சாற்று

குணம்:—(இ - ள்.) நாவிற்கு உருசியுள்ள மனைப்புறுக் கறி மருந்தை முறிப்பதுந் தவிரக் கரப்பான், சருமச்சொறி, தாது விருத்தி இவைகளை யுண்டாக்கும் என்க.

செய்கை:—காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும்.

மாடப்புறு
(Dancing pigeon)

உண்டார் பசியா முறைதாது வும்பெருகுங்
கண்டாலும் வாதங் கலங்குங்காண்—வண்டாருங்
காரின்மிகு மைக்கூந்தற் காரிகையே பத்தியமாம்
பாரின்மா டப்புறுவைப் பார்.

குணம்:—(இ - ள்.) மாடப்புறுக் கறியால் தீபாக்கினியும், சுக்கிலமும் பெருகும். வாதப்பிரகோபம் நீங்கும். இது பத்தியக் கறியாம் என்க.

செய்கை:—ஜடராக்கினி வர்த்தனி, காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண மேற்படிச் செய்யுளின்கண் கூறப்பட்டவைகள் யாவும் தவறுது.

மாடு
(Bull)

கோமாங் கிசத்தைக் குறித்துண்ட பேருடம்பி
லாமாவி யாதிக் களவுண்டோ—காமாதி
போகமுடன் மந்திக்கும் புன்வாதஞ் சேதமறும்
தேகமதில் நாற்றமறுந் தேர்.

குணம்:—(இ - ள்.) மாட்டிறைச்சியால் பல வியாதிகள் உண்டாகும். ஆனல் போக சக்தியை அதிகப்படுத்துவதுடன் அற்ப வாத ரோகங்களையும் கண்டிக்கும். எளிதில் ஜீரணமாகாது. தேகத்தில் ஒரு விதமான புலால் நாற்றத்தை யுண்டாக்கும்.

செய்கை :—காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—மாட்டிறைச்சியானது அதிகக் கடின மான வஸ்து. இது எளிதில் ஜீரணமாகாது. இது பித்தத்தையும், கபத்தையும் அதிகப்படுத்தும். ஆனல் அற்ப வாயுவை மாத்திரம் கண்டிக்கும். இது தேகத்தைப் போஷிப்பதற்கு நல்ல வுணவாகும். இது குன்மரோகிகளுக்கு உதவாது என்று தள்ளப்பட்டிருப்பினும் பசி மிகுந்திருப்பின் அவர்களுக்குச் சேர்த்துக் கொள்ளலாம். தொண்டைக்கபம், நாளுக்கு நாள் இளைக்க வைக்கின்ற சுரம் முதலி "வைகளால் பீடிக்கப்பட்டவர்கள் இந்த இறைச்சியை யுண்ண நன் மையைத் தரும். விசேஷமாக அதிக உழைப்பாளிகளுக்கும், சுறு றுப்பு உடையவர்களுக்கும் ஏற்ற வுணவாகும். இந்த உணவைப் பழக்கத்தில் வைத்துக்கொள்ளத் தேகத்தில் ஒரு விதமான புலால் நாற்றம் வீசும்.

மான் இறைச்சி

(Deer meat)

மான்கறியுண் டார்தமக்கு மாதோந்த நோய்கபநோ
யூன்பகந்த ரங்கழலி னூதையோடு—தான்பரவு
வாதநமை யும்விட்டு வாங்குங்கண் ணீர்ப்புகையா
மோதுபித்தம் வீறு மொழி.

குணம்:—(இ - ள்.) மானிறைச்சிக்குத் தொந்தநோய், ஈளை, மாமிச பகந்தரம், கழல்வாயு, வாதப்புடை இவைபோம். கண் புகைச்சலும் பித்தமுமாம் என்க.

செய்கை:—கபஹரகாரி, பித்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளிற் கூறப்பட்ட குணங்கள் யாவும் உண்டாகும்.

முசல்
(Rabbit)

கடுகிய நடையுண்டாகுங் கனத்ததோர் பித்தமேகு
முடுகிய வீளைகாச முதிர்ந்ததோர் சுவாசம்போகுஞ்
சடுதியில் வெநண்டேயோடுந் தனிமுசற் கறியினுலே
கொடுமயிற் கண்ணுய்வாதங் குறைந்திடு மலமிறங்கும்.

குணம்:—(இ - ள்.) முசல் கறியினுல் - விரைவாகிய நடைகள் உண்டாகும். பயித்தியம், கூஷயம், இருமல், மகாசுவாசம், வாயு, மலச் சிக்கல் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள எல்லா நற்குணங்களும் உண்டாகும்.

முசுறுமுட்டை
(Musuru Muttai)

துள்ளு மடல்வாதத் துன்புமந்தம் வல்லிசிவு
தள்ளு வலிக்குஞ் சலக்கபநோ—யுள்ளில்
விசுறுசந்நி பாதம் விலகுமதா கத்தார்
முசுறுமுட் டைக்குணத்தை முன்.

குணம்:—(இ - ள்.) இலுப்பை மரத்து முசுறுமுட்டையினுல்- மகாவாதம், மந்தம், இசிவு, ஐவிதவலி, நீர்க்கபநோய், சந்நி இவை கள் விலகும் என்க.

செய்கை:—அங்காகர்ஷணாசினி.

உபயோகிக்கும் முறை:—இது இலுப்பை மரம், மாமரம் முத லிய வற்றில் சஞ்சரிக்கின்ற ஓர் விதமான சிகப்பு எறும்புகளின் புத்து களிலிருந்து எடுக்கப்படும். இது உஷ்ண வீரியத்தை யுடையது. இதனை நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் காலை மாலை காதில் விட்டுக்கொண்டு வரக் காதுவலி குலமாகும். இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டிச் செய்யும் சில மருந்துகளாவன:—

முசுறுமுட்டை எண்ணெய்

பாலில் போட்டு அலம்பி ஈரம் நீங்கச் சிறிது உலர்த்தி எடுத்த பூநாகம் பலம்-3, அவித்த கோழிமுட்டையின் மஞ்சட் கரு-7, முசுறுமுட்டை படி-½, இவற்றுள் முதலில் முசுறுமுட்டையை ஒரு

இரும்புக் கடாயில் போட்டு அடுப்பிலேற்றி எரித்துச் சிறிது வறுக்க எண்ணெய்ப் பசை காணும். அத்தருணம் கோழிமுட்டையின் மஞ்சட் கருவை மாவுபோல் பிசறிப் பூநாகத்தைக் கூட்டிப் போட்டுக் கரண்டி கொண்டு தேய்த்துவர இவைகள் யாவும் கறுத்து உருகித் தைலப் பசை காணும்போது $\frac{1}{8}$-படி வேப்பெண்ணெயை விட்டுக் கரண்டி கொண்டு தேய்த்து உடனே வடித்து ஆறவிட்டுச் சீசாவில் பத்திரப்படுத்துக. அப்பால் இஞ்சி, இண்டிலை, கையாந்தகரை, தூதுவளை, வேலிப்பருத்தி இவைகளின் சாறு வகைக்குப் படி $\frac{1}{8}$-ஆமணக்கெண்ணெய் படி-$\frac{1}{4}$ ஆக தைல பாண்டத்தில் விட்டு வைத்துக்கொள்க. பின்னர் சுக்கு, சிற்றரத்தை, வால்மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், வகைக்குப் பலம்-$\frac{1}{4}$, சித்திரமூலம் வேர்ப்பட்டை, கண்டங்கத்திரி வேர், வகைக்குப் பலம்-$\frac{1}{8}$, ஆக இவற்றையெல்லாம் இடித்து ஒரு மட் பாண்டத்தில் போட்டு 2-படி சலம் விட்டு $\frac{1}{4}$-படி அளவிற்குச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி முன் சித்தப்படுத்தியுள்ள தைல பாண்டத்தில் விட்டுப் பதமுறக் காய்ச்சி வடிகட்டிச் சீசாவில் பத்திரப்படுத்துக. இங்கு முடித்து வைத்துள்ள இருதைலத்தையும் ஒருமிக்கக் கலந்து வைத்துக்கொண்டு குழந்தைகளின் பருவத்திற்கு ஏற்றவாறு $\frac{1}{2}$, 1-தேக்கரண்டியளவு முலைப்பாலில் கலக்கித் தினம் ஒருவேளை 3, 5-நாள் கொடுக்கவும். கொடுத்த அளவானது ஏறத்தாழ இரண்டொரு முறை மலம் நன்றாய்ப் போகக் கூடியதாக இருக்க வேண்டும். இன்றேல் மறுநாள் சிறிது அளவை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். கொடுத்த அளவில் பேதி அதிகமானால் குறைத்துக் கொள்ள வேண்டும். இதனால் அஷ்டகணம், மாந்தம், இசிவு, சன்னி, ஜ்வரம், கப சம்பந்தமான பல பிணிகள் இசிவு முதலியவை குணமாகும்.

முதலில் முடித்து வைத்துள்ள முசுறு முட்டை எண்ணெயை இசிவு, வலி, முடக்கு, பிடிப்பு முதலியவற்றிற்குத் தேய்க்கக் குணம் ஏற்படும்.

முதலை
(Crocodile)

**கற்றுணர்ந்த வாகடத்தில் கார்க்குழலே மக்கட்கிங்
குற்ற தொருமருந்து ஓதக்கேள்—பெற்ற
மதலைக் குறுகக்கு வானனிலஞ் சீதம்
முதலைத் தசைக்கிருக்கு மோ.**

குணம்:—(இ - ள்.) முதலை யிறைச்சியால் சிசுக்களுக்கு வரும் கக்கிருமலும், வாயுவும், கபமும் விலகும் என்க.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இறைச்சியை வற்றலாகப் போட்டுக் கடைகளில் விற்பதுண்டு. இதனைக் கொண்டுவந்து சுட்டுப் பஞ்சு போல் நறுக்கிக் குழந்தைகளுக்குத் தின்னும்படி கொடுக்கச் சில தினத்தில் கக்குவானென்று சொல்லப்பட்ட இருமல் குணமாகும். பல் முளைக்காத குழந்தைகளுக்குச் சுட்டெடுத்த முதலை யிறைச்சியைக் கல்லின் பேரில் சிறிது மூலிப்பால் விட்டு உரைத்து நாவில் தடவிவரக் கக்குவாய் இருமல் குணமாகும்.

முத்து

(Mytilus margaritiferus)

அத்திசுரஞ் சோபை யநசிதுர்ப்ப லங்கண்ணோய்
பித்துவிடஞ் சீதளநோய் பேசுகபஞ்—சுத்தத்
தயிரியநட் டத்தோடு தாதுநட்ட மும்போ
முயிருறுநன் முத்திநந்தா லோது.

குணம்:—(இ - ள்.) ஜீவரத்தினம் என்கிற முத்திலுல் அஸ்தி சுரம், வீக்கம், அரோசகம், மெலிவு, விழிநோய், அக்கினிகிடவிஷம், சுட்கசிலேஷ்மம், குரல் வளையிற் சத்திக்கின்ற கோழை, அதைரியம், வீரிய நாசம் இவைகள் போம் என்க.

செய்கை:—சுரஹரகாரி, சமனகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—1, 2-விராகனெடை கெட்டி முத்தை ஒரு பழகின சிறு கலயத்தில் போட்டு அகத்திப்பூச்சாறு விட்டு ஒரு மணி நேரம் ஊறவிட்டு எரித்து எடுக்கச் சுத்தியாகும் இதைத் தனி பற்பமாகவும் இதரச் சரக்குகளுடன் கூட்டிப் பற்பமாகவும் செய்து கொடுப்பதுண்டு எங்ஙனமெனில்:—

முத்து பற்பம்

சுத்தி செய்த முத்து விராகனெடை-1 கல்வத்தில் போட்டு மணித்தக்காளிச்சாறு கொஞ்சம் கொஞ்சமாக விட்டு நான்கு சாமம் அரைத்து ஒரே வில்லையாகத் தட்டிக் காயவைத்துச் சிறு அகலில் அடக்கிச் சீலைசெய்து காய்ந்தபின் 30-வறட்டியில் புடம் போட்டு எடுக்கப் பற்பமாகும். வேளைக்கு 2, 3-அரிசி எடை தினம் 2-வேளை

நெய்யில் கொடுத்துக் கொண்டுவரச் சில தினங்களில் சூஷயசுரம் இருமல், அஜீரணபேதி, பித்த எரிவு முதலியவைகள் குணமாகும், தேனில் கொடுக்கக் காசம் குணமாகும்.

சாந்த சத்திரோதய பற்பம்

சுத்தி செய்த கெட்டி முத்து விராகனெடை-1, அப்பிரக பற்பம் தோலா-½, தங்கரேக்குத் தோலா½. சுத்தி செய்த பூரம் தோலா-¼ இவைகளைக் கல்வத்தில் போட்டுச் சித்திரமூலம் இலைச் சாறு விட்டு 4-சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலடக்கிச் சீலைசெய்து 40-வறட்டியில் புடமிடப் பற்பமாகும். இதனை வேளைக்கு 2-அரிசி இடை தினம் 2-வேளை தகுந்த அனுபானங்களில் கொடுத்துவர இருமல், உட்சூடு, பலபீனம், நீர் வியாதி, எலும்புருக்கி, சூஷயம், உஷ்ணத்தினால் ஏற்பட்ட சூதக்கட்டு முதலியவைகள் தீரும்.

முத்துச்சிப்பி

(Mytilus margaritiferus Shell)

ஈளை விலத மிருமல் குடியோடுங்
கோழை விழுங்கயநோய் கூட்டமறு—நீளுடலிற்
கப்பி வருமேகக் கட்டியையம் போம்முத்தின்
சிப்பிதனைக் கண்டவிடத் தே

குணம்:—(இ - ள்) முத்துச் சிப்பியினால் - கபக்கோழை, காசம், சூஷயரோகம், மேகப்பிடகம், சிலேஷ்மாதிக்கம் ஆகிய இவைகள் விலகும் என்க.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—கற்சுண்ணும்பையும் அப்புளக்காரத்தையும் சலம் விட்டுக் கரைத்து ஒரு மட்பாண்டத்தில் விட்டு அதனில் தேவையான அளவு முத்துச்சிப்பிகளைப் போட்டு அடுப்பிலேற்றி ஒரு சாமம் எரித்து ஆறவிட்டுச் சிப்பிகளைத் தேய்த்து அலம்பி எடுக்கச் சுத்தியாகும். இதனையே பற்பமாகச் செய்து கொடுப்பது உண்டு. எங்ஙனமெனில்:—

முத்துச்சிப்பி பற்பம்

இரண்டு பலம் சுத்தி செய்த முத்துச் சிப்பிகளைக் கல்லுரலில் போட்டுக் கடப்பாறையால் இடித்துத் தூள்செய்து கல்வத்தில்

போட்டு மணித்தக்காளிச்சாறு கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு நான்கு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் ஒரே வில்லையாகத் தட்டிக் காயவைத்து அகலில் அடக்கிச் சீலைசெய்து காய்ந்தபின் 30, 40-வறட்டியில் புடமிடப் பற்பமாகும். இந்தப் பற்பத்தில் வேளைக்கு ¼, ½-குன்றியெடை நெய்யில் அனுபானம் செய்து தினம் இருவேளை கொடுத்துவரத் தேக காங்கை, நீர் எரிச்சல், இருமல், அஜீரண பேதி, பித்த எரிவு, நாவறட்சி முதலியவைகள் குணமாகும்.

முத்துச் சுண்ணம்

(Pearl-oxide)

முத்துச்சுண் ணத்தான் முதிர்ந்தவதி சாரமையங்
குத்துக் கிருமியோடு குன்மநோய்—நத்தியதோர்
வாத வரோசகழ மாறி விடுமலர்ந்த
போதிலுறை மாதே புகல்.

குணம்:—(இ - ள்.) முத்துச் சுண்ணத்தினால் நீடித்த பேதி, கபக்கட்டு, மலக்கிருமி, வயிற்று நோய், வாத அரோசகம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—கபஹரகாரி, உதரவாதஹரகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—ஒரு விராகனெடை கெட்டி முத்தை ஒரு பழைய மட்கலயத்தில் போட்டு அகத்திப்பூச்சாறு விட்டு எரித்து எடுத்தலம்பித் தேயாத உயர்ந்த கல்வத்தில் போட்டு மூள்ளிக்கத்திரிப் பழச்சாறு விட்டு 4-சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் அடக்கிச் சீலைசெய்து 30-வறட்டியில் புடமிடச் சுண்ணமாகும். இதன் அளவு அனுபானம் முத்தின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதேயாகும்.

முலைப்பால்

(Mother's Milk)

தன்னியமென் றேதிற் சருவதோ ஷங்களும்போம்
உன்னிய தாப மொழியுங்காண்—சந்நியோடு
வாதசுரம் பித்தசுரம் வன்கபச்சு ரந்தணியுங்
கோதில் வலிமையுண்டாங் கூறு.

இதுவுமது

இருந்தோஷம் போக்கு மிகற்கிரிச்சந் தீர்க்கும்
அருந்து மருந்தினனு பானம்—பொருந்தும்
அஞ்சனத்திற் காகு மறல்வறட்சி நீங்கிவிடும்
பஞ்சினடி மாதர்முலைப் பால்.

குணம்:—(இ - ள்.) முலைப்பால் - ஏழுவகைத் தோஷங்கள், வெப்பம், சந்நிபாதம், வாதபித்தம், கப சுரங்கள், திரிதோஷம், வாத கிரிச்சரம், நாவறட்சி ஆகிய இவைகளை விலக்கி வன்மையைத் தரும். ஔஷத அனுபானத்திற்கும், கலிக்கத்திற்கும் உபயோகப்படுமென்க.

சேய்கை:—பலகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—முலைப்பாலானது தேவாமிர்தத்திற்கு ஒப்பானது. இந்தப் பாலை உஷ்ண தேகிகட்குக் கொடுக்கும்போது உடனே அவ் வுஷ்ணத்தைச் சாந்தப்படுத்தும். சீதள தேகிகட்குக் கொடுக்கும்போது சீதளத்தை நீக்கி உஷ்ணத்தைப் பிறப்பிக்கும்.

முலைப்பாலில் குழந்தைக்குக்கு வேண்டிய உணவின் சத்துகளெல்லாம் இருப்பதால் குழந்தையின் பலவித உணவுகளைப் பார்க்கிலும் இதுவே சிறந்ததாகும். இத்தகைய ஆகாரம் குறைந்தது 6-மாதம் வரையில் கொடுத்து வருவது அவசியமாகும். ஒருக்கால் தாயின் பலவீனத்தினால் சரிவர ஆறுமாதம் வரையில் போஷணைக்கு உரித்தான பாலைக் கொடுக்க முடியாத சந்தர்ப்பத்தில் பலவீனமும் வளர்ச்சிக் குறைவும், தேகப் பூரிப்பும் குறையும். இதனை அனுபவத்தில் கண்டு இருக்கிறது. முலைப்பால் உண்ணும் குழந்தைகளுக்கு விசேஷமாக விஷக்காற்றினால் உண்டான பல பிணிகள் அணுகுவது இல்லை. குழந்தைகள் பாலை உருஞ்சும்போது தாய்க்கு அதன்மேலுள்ள அன்பும், அதைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்ச்சியும், மனத்திருப்தியும், கோளங்களில் உணர்ச்சியை உண்டாக்கிப் பால் பெருகிக் குழந்தைக்கு உணவாகிறது. அவ்வுணவையே குழந்தையின் குடல் சுறு சுறுப்புடன் உறிஞ்சி ஜீரணமாக்கிச் செல்கிறது, மனோவல்லாசத்தையும் குழந்தைக்குக் கொடுக்கிறது, சுபாவம் இப்படியிருக்கக் கன்றுக் குட்டியின் ஆகாரத்துக்காக ஏற்பட்டிருக்கும் பசுவின் பாலைக் குழந்தைகளுக்குக் கொடுப்பது எவ்விதத்திலும் அதிக நன்மையைத் தராதென்பதுக் குறிப்பிடத்தக்கது.

முலைப்பால் உண்ணும் காலத்தில் ஏற்படும் மரணத் தொகையையும் பசுவின் பால் உண்ணும் காலத்தில் ஏற்படும் மரணத் தொகையையும் கவனிக்கும்போது பசுவின் பால் உண்ணும் குழந்தைகளுக்கே அதிகமென்று கணக்கிடப்பெற்றிருக்கிறது. இக் காரணத்தை முன்னிட்டே பெரியார்கள் முலைப்பாலே மருந்துகளுக்குப் பெரும் அநுபானமாகக் கூறியிருக்கின்றனர். ஜன்னி, சுர தோஷங்களின் பிரபலத்தினால் மலச்சிக்கல் உண்டாகி மலம் குடலில் ஆட்டுப் புழுக்கையைப்போல் தீய்ந்து இருக்கும் சமயம் சோகிக்கு வேறு விதமான ஆகாரமின்றி முலைப்பாலையே ஆகாரமாகக் கொடுத்துக் கொண்டுவர ஆச்சரியப்படும்படியாக மலத்தை வெளியாக்கும்.

சன்னி சுரதோஷங்களின் உபரியால் தலையிடி உண்டானபோது இந்த முலைப்பாலைச் சிரசில் தேய்த்து மெல்லிய சீலையில் தோய்த்து நெற்றியின்மேல் போட்டுச் சதா ஈரம் இருக்கும்படியாக முலைப் பாலை விட்டுக் கொண்டுவர விரைவில் சன்னி தோஷம் குணத்திற்கு வரும்.

முலைப்பாலுடன் சிறிது இஞ்சி ரசம் கூட்டி இவை இரண்டும் சேர்ந்த எடைக்கு நல்லெண்ணெய் கூட்டிக் காய்ச்சித் தாளக்கூடிய சூட்டில் சிரசிற்குத் தேய்த்து ஸ்நானம் செய்துவர நீரேற்றத்தினால் உண்டான எவ்விதமான தலை வலிகளும் குணமாகும். இந்த முலைப் பால் தைலத்திற்கு வேறு ஒன்று இணையாகு மென்று கூறுவதற்கு இல்லை.

முள்ளம் பன்றி

(Porcupine)

காட்டுப்பன் றிக்குணமுங் காயமெல் லாமுள்ளே
நீட்டுப்பன் றிக்குணமு நேரோன்றுக்—காட்டுகினு
மீப்பன்றிக் கங்க மிறுதவதா லீப்பன்றிக்
கேப்பன் றியுநிகரோ வேண்.

குணம்:—(இ - ள்.) காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி இவைகளின் இறைச்சிகள் குணத்தினால் ஒன்றுபோலிருந்தாலும், முள்ளம் பன்றியால் வன்மை மிகுதலால், எந்தப் பன்றியும் இதற்கு நிகரில்லை என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்து உண்ண அதிகரித்த வாயு, மூலம், சருமகிலகம், குதப் பிரம்ஸோகம், குடல்

விருத்தி முதலியவைகள் குணமாகும். தேகம் பலப்படும். இதன் பித்தைக் கண்களுக்குத் தீட்டிவர நீர் வடிதலே நீக்கிக் கண்ணொளியை அதிகப்படுத்தும். இதன் பித்துடன் ஊர்க்குருவி ரத்தத்தைக் கலந்து கண்களுக்குத் தீட்ட நீர் வடிதலைக் குணப்படுத்தும். இதன் கோசத்தை நன்றாய் உலர்த்தி, இடித்துச் சூரணம் செய்து வேளைக்குப் பணவெடை வீதம் சாப்பிட்டுவர அளவுகடந்த போக சக்தியை யுண்டாக்கும்.

மெழுகு

(Gera)

அறைபக்க வாத மதைப்பைய ழுதை
குறைவிந் திகழ்நோய்தேள் கூளி—கறையைப்
புழுகெடுக்க வங்கழறு புண்ணீடிப்புண் மப்புண்
மெழுகெடுக்க வாங்ககலு மெய்.

குணம்:—(இ - ள்.) மெழுகினால், பாரிசவாயு, வீக்சம், கபநோய், வாத கோபம், சுக்கில நஷ்டம், சிலேஷ்மோஷ்டரோகம் தேள் விஷம், பைசாசம், குஷ்டம், ஆகந்துகவிரணம், சத்தியோவிரணம் இவைகள் நீங்கும். என்க.

செய்கை:—அந்தர் ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது கிடையாது. இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டிக் களிம்பாகவாவது அல்லது அதிலிருந்து தைலத்தை வாங்கியாவது உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

மேகரண சஞ்சீவிக்களிம்பு

கெந்தகம் பலம்-2, சூதம் பலம்-2 இவையிரண்டையும் முதலில் கல்வத்தில் போட்டு நன்றாய் சூதம் மடிந்து கறுப்பு நிறம் வருகிற வரையில் அரைத்து வைத்துக்கொள்க. அப்பால் ஒரு அகலக் காண்டியில் 3-பலம் தேன் மெழுகைத் துண்டு துண்டாக நறுக்கிப் போட்டுக் அடுப்பில் வைத்து உருக்கி வேப்பெண்ணெய் பலம்-5 விட்டுக் கலக்கி முன் அரைத்து வைத்துள்ள கெந்தக சூதத்துடன் விட்டரைத்து வழித்துப் பத்திரப்படுத்துக. இந்தக் களிம்பை ஆறாத கொடிய ரணங்களுக்குச் சீலையில் தடவி மேற் போட்டுவர ஆறும்.

விரணக்களிம்பு

ஒரு பலம் தேங்காய் எண்ணெயும் ½-பலம் தேன் மெழுகையும் ஒரு அகலக்கரண்டியில் போட்டு நெருப்பனலில் உருக்கிக் கல்வத்தில் சாய்த்து அதனில் வெள்ளைக் குங்கிலியம் விராகனெடை-4, மஞ்சள் பொடி விராகனெடை-1, கூட்டி மெழுகுபோல் அரைத்து முன் போல் உபயோகப்படுத்தச் சாதாரண சிரங்கு, புண் முதலியவைகள் ஆறும்.

மெழுகுத்தைலம்

சிறு துண்டுகளாக நறுக்கிய மஞ்சள் மெழுகு (தேன் மெழுகு) பலம்-10, சிறு துண்டுகளாக நறுக்கிய சக்கி முக்கிக்கல் பலம்-10, வெள்ளைக் குங்கிலியம் பலம்-5, சோற்றுப்பு பலம்-10, ஓமம் பலம்-2½, கப்பு மஞ்சள் பலம்-2½, சடா மாஞ்சில் பலம்-¼, ஆற்றுமணல் பலம்-5 இவற்றுள் ஓமம் சடா மாஞ்சில், கப்பு மஞ்சள் முதலிய வற்றை ஒன்றிரண்டாகப் பொடித்து இதரச் சரக்குகளுடன் பிசரி ஒரு மண்தோண்டியில் போட்டு மண் வாலையைச் செருகி ஏழு மண் சீலை செய்து காயவைத்து அடுப்பிலேற்றிப் பாகப்படி எரித்துத் தைலம் வாங்கவும். இதனை மேற்றேய்க்கச் சர்வாங்க வலி கணுச் சூலை, கீல்களில் காணும் வீக்கம், குழந்தைகட்குக் காணுகின்ற இசிவு, வெட்டுக்காயம், பீஜவீக்கம், நரித்தலைவாதம், ஆண்குறித்தளர்ச்சி, ஸ்தனத்தளர்ச்சி, கீல் - எலும்பு-மாமிசம் - நரம்பு முதலியவற்றைப் பற்றிய வாயு முதலியவைகள் நீங்கும்

குறிப்பு:--இந்தத் தைலத்துடன் மூன்றிலொருபங்கு வேப்பெண் ணெய் அல்லது உருக்கி எடுத்த புலிக்கொழுப்பை கூட்டி உபயோகப் படுத்துவது முண்டு.

யானைப்பால்

(Elephant's Milk)

வாதம்போந் தாதுபுஷ்டி வந்தடரும் வன்பலமோ
யாதுபித்தங் கூடி யழததிக்குந்—தாதுமலர்த்
தேனைப்பா லிற்கலந்த தித்தீப்பைப் போலிருக்கும்
யானைப்பா லுண்ணு மவர்க்கு.

குணம்:—(இ - ள்.) தேனும், பாலுங் கலந்த ருசிபோன்ற யானைப் பாலைக் குடிப்பவர்க்கு வாதகோபம் நீங்கும். சுக்கில விருத்தியும்

மிகுவன்மையும் பித்த சம்பந்தமான தேக அழகும் உண்டாகு என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—யானையின் சரீரமானது அதிக வெப்ப முடையது. சூரியன் அஸ்தமான பின்னர் இரவு காலத்தில் இரத்தத்தின் கொதிப்பு அடங்கிப் பாற்றசைக் கோளங்களில் பூரிப்புண்டாகிச் சேகரப்பட்டுள்ள பாலைக் காலையில் கறந்து கிரமப்படி உட்கொள்ளுகிறவர்களுக்குப் பசியை யாற்றுவதுடன் தேக பலத்தையும் தேகக் கொழுமையையும் சுக்கில விருத்தியும் உண்டாக்கும் சூரியோதயத்திற்குப் பின் சுரப்புண்டாகிய பாலை மாலையில் கறந்து உட்கொள்ளுகிறவர்களுக்கு பல வீனத்தையும் சந்துவாதத்தையும் உண்டாக்கும் ஆனால் கண்களுக்கு அதிக நன்மையைத் தரும்.

யானை மூத்திரம்

(Elephant's Urine)

அதிதூலஞ் சோபை யனிலங் கிருமி
யெதிர்விடங் கார்கரப்பா னேகும்—அதிராத
யானை யெனப்பலழ மங்கபுஷ்டி யுங்கொடுக்கும்
யானை விடுழத்தி ரம்.

குணம்:—(இ-ள்.) யானை மூத்திரத்தால் அதிதூலரோகம் வீக்கம், வாய்வு, கிருமிவிஷம், கருங்கரப்பான் இவைகள் போம் வன்மையும் சரீர புஷ்டியுமாம்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதனை வீட்டில் தெளிக்க ஏலிகள் சேராது. இதனைச் சிறிது காய்ச்சி வடிகட்டிச் சிறிய அளவாக மூன்று தினம் ஸ்திரீகள் உட்கொள்ள மலடியாயிருப்பினும் கர்ப்ப முண்டாகும். வாதப்பிணிகள் அதிதூலரோகம் முதலியவைகள் குணமாகும்.

வரிப்புறு

(Striped Pigeon)

வரிப்புறு வின்றசையோ மாவுருசி தின்றற்
றரிப்புறு வாதபித்தந் தானு—மரிப்பான
சோபாரோ கங்க டோடரா மேவர்களுக்கு
நீபா ரிலையிதற்கு நேர்.

குணம்:—(இ - ள்.) உரிசையுள்ள வரிப்புறுக் கறியைத் தின் றால் வாயுவோடு கூடிய பித்தமும், பலவித வீக்கங்களும் போகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்ட குணங்கள் சித்திக்கும்.

வாத்து

(Duck)

வாத்துக் கறியநந்த வற்றியுலர் புண்சிரங்குங்
கோத்த கபழங் குதிக்குங்காண்—ராத்திரியிற்
போக முறுதியுமாம் போல்லா வரோசகநோ
யாகமதி லூறு மறி.

குணம்:—(இ - ள்.) வாத்துக் கறியை யுண்ணில், கசிவு வறண்டு சிவந்தாறிய விரணம், கிரந்தி, கோழை, அருசி இவை அதிகரிக்கும். சுக்கில ஸ்தம்பனமாம்.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் கறியைப் பாகப்படி சமைத் துண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித் திக்கும்.

வாளைமீன்

(Siluous)

ஆளை வளர்க்குமதி யாண்மைதனை யுண்டாக்கும்
வாளைவென்ற கண்மாதே வாயுவாம்—வேளை
யறியாமலுண்டா லணுகுமே வாதங்
குறியார்கள் வாளைக் குணம்.

குணம்:—(இ - ள்.) வாத குணமுள்ள வாளைமீன், தேகத்தைச் செழுமையாக்கித் தாது விருத்தியைச் செய்யும் அகாலத்தில் புசிக் கில் வாயுவாம்.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும்.

வான்கோழி

(Turkey)

போகமிது மெய்யிற் புளகிதம்வான் கோழிதனக்
காகமதி லேய மதிகழறுந்—தேகமெலாந்
தானே கரப்பானுஞ் சாற்ற வுருசியுமாந்
தேனே யிதணைத் தெரி.

குணம்:—(இ - ள்.) உருசியையுடைய வான்கோழிக்கு - விந்துவும், மகிழ்ச்சியும், சிலேஷ்ம பந்தமும், கரப்பானும் உண்டாகும் என்க.

செய்கை:—காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண இச் செய்யுளிற் கூறப்பட்ட குணங்களெல்லாம் உண்டாகும்.

விலாங்கு மீன்

(Muraena Angnilla)

வீலாங்குமீன் றன்னை விருப்பமிக வுண்டாற்
குலாங்கிஷமா யையங் குலாவு—மீலங்கருசி
போக மோடுசோறீயும் புண்கரப்ப னுங்கதிக்குங்
கோகனக மாதே குறி.

குணம்:—(இ - ள்.)விலாங்கு மீனை அதிகமாகத் தின்றால்-கபாதிக்கம், அரோசகம், தாது விருத்தி, தவளைச் சொறி, விரணம், கடுவன் இவை உண்டாம்.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ணில் இச் செய்யுளின்கண் கூறப்பட்ட குணங்கள் யாவும் சித்திக்கும்.

வெண்புறு

(White Dove)

வெண்புறு வாதபித்தம் வீறுகப மேகமீவை
திண்புவியை விட்டோடச் செய்யுங்காண்—பண்பாவு
வெண்குஷ்ட நீள்கரப்பான் மேய்வறட்சி யும்போக்கும்
பண்புற்ற பத்தியமாம் பார்.

குணம்:—(இ - ள்.) பத்தியத்திற்கான வெண்புறுக்கறி வாதபித்தம், ஜலமேகம், விரண வெண்குஷ்டம், கரப்பான், சொறி இவைகளை நீக்கும்.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ணில் இச் செய்யுளின் கண் கூறப்பட்ட குணங்கள் யாவும் உண்டாகும்.

வெள்ளாடு

(Goat)

உள்ளாடு நோயெல்லா மோடு முடல்பெருக்குந்
தள்ளாடு வாதபித்தஞ் சாந்தமாம்—வெள்ளாட்டி
னற்கறியை யுண்பார்க்கு நாடுகய ரோகமும்போ
மற்குரிய வன்பலனும் வாழ்த்து.

குணம்:—(இ - ள்.) வெள்ளாட்டிறைச்சியை யுண்பவர்க்கு உட்சுரங்களும், வாத பயித்தியமும், கூயமும் போம். சரீர புஷ்டியும், வீரியமும் விளையும்.

செய்கை:—பலகாரி, காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகத்தைப்பற்றி ஷி செய்யுளில் இனிது விளக்கப்பட்டுள்ளது.

இதன் இறைச்சியைத் துண்டுத் துண்டுகளாக அரிந்து உப்பு, மஞ்சள், மிளகாய்த்தூள் முதலியவைகளைக் கூட்டிப் பிசரி வற்றலாக உலர்த்தி ரோகிகளுக்கு நெய்யில் பொரித்துப் பத்திய பதார்த்தமாக கொடுப்பது வழக்கம். இது எவ்வித தோஷத்தையும் செய்யாது.

வெள்ளாட்டு மூத்திரம்

(Goat's Urine)

சோபையோடு பாண்டுவைத்து ரத்தம் பலவீக்க
தாபமகற் றும்மூதிரத் தைப்போக்குங்—கோபமுடன்
உள்ளாட்டுத் தூர்ச்சதையோ டோங்குதர நோயகற்றும்
வெள்ளாட்டு மூத்திரம்வி ரைந்து.

குணம்:—(இ - ள்.) வெள்ளாட்டு மூத்திரம்-வீக்கம், பாண்டு பற்பல வீக்கத்தின் எரிச்சல், ரத்தகபம், தூர்மாமிசம், மகோதரம் இவைகளை நீக்கும்.

உபயோகிக்கும் முறை:—வெள்ளாட்டு மூத்திரத்தைச் சிறிது அனலில் வெதுப்பி வடிகட்டி வேளைக்கு 1, 1½-அவுன்ஸ் வீதம் தனி,

யர்கவாவது அல்லது மலம் போகக்கூடிய மருந்துகளுக்கு அனுபான மாகவாவது கொடுப்பதுண்டு. இது மலக்கட்டையும் சிறு நீர்க் கட்டையும் நீக்கும். இத்தகைய சிகிச்சையால் பெருவயிறு, பாண்டு, வீக்கம் முதலியவைகள் குணமாகும். இந்த நீரை ஜடா மாஞ்சில் கியாழத்துடன் கூட்டிக் கொடுக்க அபஸ்மாக ரோகம் குண்மாகும்.

வெள்ளாட்டுத் தயிர்

(Goat's Curd)

ஓப்பவெள் ளாட்டி னுயர்தயிரை யுண்பார்க்குத்
தப்பிலையாம் மிக்கநலந் தான்பெருகும்—செப்பவதன்
ஆடைக்கு மந்திக்கு மாடியினும் குற்றமில்ல
கோடைக்கா லத்திலுனக் கூறு

குணம்:—(இ - ள்.) வெள்ளாட்டின் தயிரை யுண்பவர்களுக்கு அதிக நன்மையைத் தரும். அதன் ஆடையானது எளிதில் ஜீரணிக் காமல் மந்தத்தை யுண்டாக்கும். ஆயினும் வெய்யிற் காலத்தில் உண்ண நன்மையைத் தரும் என்க.

உபயோகிக்கும் முறை:-இதன் உபயோகம் இச் செய்யுளின்கண் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது.

வெள்ளாட்டு நெய்

(Goat's Ghee)

ஐயைப்போக் கும்வாதத் தாண்மையைக்கே டுத்துவிடும்
மெய்யை வளர்க்கும்விழி யைத்துலக்கும்—வையகத்திற்
பத்தியத்திற் காகும் பயமிலைவெள் ளாட்டின்னெய்
நித்தியங்கொண் டாலுங்கொண் ணீ.

குணம்:—(இ - ள்.) வெள்ளாட்டு நெய்யை யுண்ணில் அதி சிலேஷ்மாதிக்கத்தையும் வாதகோபத்தையும் போக்கும். சரீரத்தை வளர்ப்பது மன்றிக் கண் ணுக்கொளியை யுண்டாக்கும். பத்தியத் திற் குதவுமென்க.

உபயோகிக்கும் முறை:—இந்த நெய்யைச் சாதாரணமாகப் பசு வின் நெய்யைப்போல் அன்னத்திலேனும் அல்லது பலகாரங்களி லேனும் சேர்த்துண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங் கள் உண்டாகும்.

வெள்ளாட்டுப் பால்

(Goat's Milk)

வெள்ளாட்டுப் பாலுக்கு மேவியநற் றீபனமாந்
தள்ளாடு வாதபித்தஞ் சாந்தமாம்—உள்ளிரைப்புச்
சீதமதி சாரஞ் சிலேஷ்மமமறும் புண்ணுறும்
வாதகி லேசமும்போ மாய்ந்து.

குணம்:—(இ - ள்.) வெள்ளாட்டுப் பாலினால் வாதபித்த தொந்தம், சுவாசரோகம், சீதங்கலந்த பேதி, கபதோஷம், விரணம், வாதத்தாலுண்டாகிய வீக்கம் முதலிய தன்பங்கள் நீங்கும். நல்ல பசியும் உண்டாம் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உற்சாககாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:— இந்தப் பாலைச் சலம் சேர்த்துக் காய்ச்சிக் கற்கண்டு சூரணமிட்டுத் தினந்தோறும் அந்திசந்தி சாப்பிட்டுவரக் கபசம்பந்தமான ரோகங்கள் குணமாகும். அயச்செந்தூரம், அயக்காந்தச் செந்தூரம் முதலியவற்றைப் பாண்டுசோபை காமாலை முதலிய ரோகங்களுக்காகச் சாப்பிடும் காலத்தில் காய்ச்சிய வெள்ளாட்டுப்பாலை அன்னத்துடன் கூட்டிப் பத்தியமாகச் சாப்பிட்டுவர விரைவில் நோய்கள் குணமாகும்.

வெள்ளாட்டு மோர்

(Goat's Butter Milk)

பாரோர்க் கிதழட்டும் பாவைநல்லாய் வெள்ளாட்டின்
மோரோநீர்க் கட்டை முறித்துவிடும்—பேரோங்கும்
மேகத்தை யோட்டிவிடும் மேனி யழகாக்கும்
பாகத்தை யுண்டறிந்து பார்.

குணம்:—(இ - ள்.) வெள்ளாட்டின் மோரை உபயோகப்படுத்த நீர்க்கட்டை உடைத்துவிடும், பிரமேகத்தை நீக்கி நல்ல தேஜசையுண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் இச்செய்யுளின் கண் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது.

வெள்ளாட்டு வெண்ணெய்

(Goat's Butter)

வெள்ளாட்டு வெண்ணெயது வீறுசுரந் தான்போக்குந்
தள்ளாடு பித்தந் தணிக்குங்காண்—தெள்ளுமொழி
மானே பசியெழப்பும் வன்கரப்ப ணீக்கடற்குட்
டானே துரத்திவிடுஞ் சாற்று.

குணம்:—(இ - ள்.) வெள்ளாட்டு வெண்ணெய், சுரரோகம், பித்த நோய், கரப்பான் ஆகிய இவைகளை நீக்கும். பசியை உண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக பசுவின் வெண்ணெய்க்குப் பதிலாக வெள்ளாட்டு வெண்ணெயைக் கூட்டி உபயோகித்துக் கொள்ளலாம் இதனால் இச் செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள குணங்கள் உண்டாகும்.

வெள்ளைச் சங்கு

(Gasteropoda)

சுசிவா மிரத்தபித்தங் கண்ணோய்க ளேகும்
பசியாநும் வாதம் பறக்கு—மிசிவுடனே
தங்கு முளைவிரணந் தானகலு மேவெள்ளைச்
சங்கமது வுண்டாயிற் றான்.

குணம்:—(இ - ள்.) வெண் சங்கினால் உதிரபித்தம், விழி நோகம், வாததோஷம், இசிவு, முளைக்கட்டி இவை நீங்கும். தீபனம் உண்டாம் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது கிடையாது. பற்பமாகாவாவது, சுண்ணமாகவாவது செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

சங்கு பற்பம்

3-பலம் வெள்ளைச்சங்கை ஒரு இரும்பு உரலில் போட்டு இடித்துத் தூள்செய்து கல்வத்தில் போட்டுப் பிரண்டைச்சாறு விட்டு 2-சாமம் அரைத்து 4, 5-வில்லையாகச் செய்து காயவைத்து ஒரு

அகலில் பரப்பி மேல் அகல் மூடிச் சீலைசெய்து 20, 25-வறட்டியில் புடமிடவும், இப்படிப் புடமிட்ட பற்பத்தை எடுத்து மீண்டும் கல்வத்தில் போட்டு முன்போல் பிரண்டைச்சாறு விட்டு அரைத்து முன்போல் 3, 5-புடமிட்டு வைத்துக்கொண்டு வேளைக்கு 1 2-குன்றி எடை நெய் வெண்ணெய் முதலிய அநுபானங்களில் தினம் 2-வேளை கொடுத்துவர வாதகுன்மம், நீர்ச்சுறுக்கு, நீர் எரிச்சல் முதலியவைகள் போம்.

வேறு முறை

3-பலம் சங்கைச் சிறுதுண்டுகளாக நறுக்கி, ஒரு பிங்கானில் போட்டுக் கீழா நெல்லிச் சமூலச்சாறு விட்டு 3-நாள் ஊறவைத்து நான்காவது நாள் சுத்தமாகச் சலம் விட்டு அலம்பி ஒரு குடுவையில் போட்டு மூழ்கக் கீழா நெல்லிச்சாறு விட்டு வாய்க்கு ஒரு மூடியிட்டு சீலை செய்து 30-வறட்டியில் புடமிடவும். சரிவர வெளுத்துப் பூரிப்பு இல்லாதிருந்தால் மீண்டும் அதனைக் கல்வத்தில் போட்டு வெடி மூலிகைச்சாற்றை விட்டு 2-சாமம் அரைத்து 4, 5-வில்லையாகத் தட்டிக் காயவைத்து ஓட்டிலடக்கிச் சீலைசெய்து 25-வறட்டியில் புடமிடவும் இதன் உபயோகம் முன் முறையில் கூறப்பட்டதேயாகும்.

பதார்த்த குண விளக்கம்

ஜீவ வர்க்கம்

முற்றியது.

——

முடிவுரை

வைத்திய சகோதரர்களே !

இந்நூலில் கார சார லவணம், உபரசம், உலோகம், ரசகெந்தி பாஷாணம், நவரத்தினம், நிலப்பிராணி, சலப்பிராணி முதலியவற்றின் உபயோகத்தை விளக்கி யுள்ளேன்.

சாதாரணமாக இந்த வைத்தியத் துறையில் கஷ்டப்பட்டு உழைத்தவர்களுக்கே கைபாகம், செய்பாகம் திருத்தமாக அமையும். அவிழ்தங்கள் அரைப்பு, எரிப்பு, புடம் முதலிய பேதங்களால் கெடுவது வழக்கம் இதைச் சரிப்படுத்திக் கொள்வது பண்டிதர்களின் கடமையாகும். இக் காரணத்தை முன்னிட்டே சில விஷயங்களைக் கூற வந்தனன் இவற்றை கவனத்தில் வைக்கக் கடவர்.

கார சார லவணங்களைச் சுண்ணம், பற்பம், செந்தூரம் செய்வதாக இருப்பின் உருகாமலும், ஊட்டம் குறையாமலும் சிறு புடமாகப் போட்டு எடுக்க வேண்டும். காரமும், நிறமும் குறையுமாயின் பின்னும் சில புடம் அதிகமாகப் போட்டுக் கொள்க.

அயம், காந்தம், மண்டூரம், அப்பிரகம் முதலியவற்றிற்கு அரைப்பு நன்றாய்க் கொடுத்து வில்லை தட்டிப் புடம் சிறிது பெரிதாக இடவேண்டும். இன்றேல் மருந்தின் நிறம் சரிவர ஏற்படாது. இத்தகைய மருந்துகள் பக்குவமடைய குறைந்தது பதினைந்து புடத்திற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். இம் மருந்தைச் சலத்தில் போட்டுப் பார்க்கக் கரையவேண்டும் அல்லது மிதக்கவேண்டும். சலத்தில் அழுந்திவிடக் கூடாது.

தாம்பரம், தங்கம், வெள்ளி முதலியவற்றைப் பற்பச் செந்தூரம் செய்யும்போது முறைக்கு உரித்தான மூலிகைச் சாறுவிட்டு அரைத்து அரைத்து வில்லை தட்டிச் சரியான நிறம் காணும் வரையில் புடமிட வேண்டும் இவ்வாறு அரைத்து ரவியில் உலர வைத்த வில்லைகளில் பளபளவென்று மின்னுதல் கூடாது. அப்படி யிருப்பின் பின்னும் சில புடமிடுவது அவசியமாகும்.

மூலிகைச் சாற்றில் பலமுறை அரைத்துப் புடமிடும்போது வில்லைகள் கறுத்துப் போவதுண்டு அத்தருணம் அந்தந்த பாகத்திற்கு ஏற்றபடி மூலிகைச் சாறு விட்டரைத்து சிறு வில்லைகளாகச்

செய்து உலர்த்தி இருபது வறட்டிகளடங்கிய புடத்தின் நடுவில் பரப்பி வைத்துத் தீயிட்டு ஆறினபின் வில்லைகளைப் பார்க்கச் சிவந்திருக்கும். அல்லது வில்லைகளைப் பொடித்து இரும்புக் கடாயிலிட்டுப் பெருந் தீயில் வறுத்து எடுக்கச் சிவப்பதும் உண்டு.

கல்நார், கல்மதம், சிலாசத்து, மான் கொம்பு, ஆமை ஓடு முதலியவற்றை நீற்றத் தூய்ய வெண்மை நிறமாகவும், மிருதுவாகவும் இருக்க வேண்டும். அப்படி இராவிடின் மீண்டும் இரண்டொரு புடம் இட்டு எடுத்துக் கொள்க.

நாகம், வெள்ளீயம், கருவங்கம் முதலியவற்றைப் பற்ப செந்தூரமாக்கும் பொருட்டு மூலிகை கொண்டு கிராசம் கொடுத்துத் தேய்க்கும்போது நான்கு சாமத்திற்குக் குறையக்கூடாது. அரைத்து வில்லை தட்டிப் புடமிட்டாவது அல்லது சட்டியிலிட்டு மேல் மூடி எரித்தாவது எடுக்கும் மருந்து சரியான நிறத்துடனிருக்க வேண்டும். சிறிது கரண்டியில் போட்டு நல்லெண்ணெய் விட்டு அடுப்பில் வைத்து எண்ணெய் தீப்பற்றி எரியவிட்டுச் சோதித்துப் பார்க்க வங்கசத்து கரண்டியில் இருக்கக்கூடாது. அப்படி இருப்பின் முன்போல் திருப்பி சில முறை செய்வது அவசியமாகும்.

இரசகெந்தி பாஷாண வர்க்கங்களைக் குப்பியிலிட்டு மணலில் வைத்து எரித்த சமயம் கறுத்திருந்தால் மீண்டும் அரைத்து முன்போல் எரிக்கச் சிவக்கும். சட்டியில் வைத்து எரிப்பதாக இருப்பின் மேலேறிய பதங்கத்தை அடியில் உள்ள மருந்துடன் கூட்டி அரைத்து முன்போல் எரிக்க வேண்டும், பதங்கம் மேல் ஏறுமளிருக்கும் வரையில் அரைத்து அரைத்து வில்லை தட்டி எரிக்க வேண்டும். இன்றேல் நற்குணம் கொடுக்காது.

நவரத்தினங்களைப் பற்ப செந்தூரம் செய்யும்போது மிருதுவாகவும், சலத்தில் போட்டுப் பார்க்க மிதக்கும்படியாகவும் இருக்க வேண்டும். இன்றேல் பின்னும் சில புடமிடுவது அவசியமாகும்.

இத்தகைய குறைவுகளுக்கு சிறிதும் இடம் கொடுக்காமல் கவனத்துடன் இந் நூலில் கூறப்பட்ட முறைகளைச் செய்து நற் பயனை அடையுமாறு என் குருநாதனைச் சிந்தித்து வணங்குகின்றேன்.

வைத்தியன் :

சி. கண்ணுசாமி.

தாது ஜீவ வர்க்கம்

அனுபந்தம்

கம்முடைய தேகமானது பஞ்சபூதத்தின் கூட்டுறவைப் பெற்றுள்ளது. இதை விபாகப்படுத்திப் பார்க்கும்போது,

அங்கத்தில்:—பிருதிவி - கால், அப்பு - வயிறு, தேயு - மார்பு, வாயு - கழுத்து, ஆகாயம் - சிரசு என்றும்,

கருவில்:—பிருதிவி - மலம், அப்பு - அமுரி, தேயு - இரத்தம், வாயு - உமிழ்நீர், ஆகாயம் - விந்து என்றும் ஏற்படும்.

இவற்றுள் எந்த அம்சங்களாவது குறைவுபடின் தேகம் சுகநிலை பெறுது. இவ்வாறே ஒவ்வொரு சரக்குகளையும் என்னென்ன பூதம் என்று அனுபவத்தின்கீழ் ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இவைகள் கிரமப்படிச் சேருமாயின் விசேஷ நற்குணத்தைக் கொடுக்கும். இன்றேல் அம்மருந்து பயனற்றதாகும். ஆதலால் பண்டிதர்கள் பஞ்சபூதத்தின் இயக்கத்தைத் தெரிந்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

உலோகத்தில்

பிருதிவி	தங்கம்
அப்பு	காரீயம்
தேயு	செம்பு
வாயு	இரும்பு
ஆகாயம்	நாகம்

பாஷாணத்தில்

பிருதிவி	தாளகம்
அப்பு	வீரம்
தேயு	இலிங்கம்
வாயு	வெள்ளைப்பாஷாணம்
ஆகாயம்	கெந்தி

பாஷாணப் பிரிவில்

பிருதிவி	மிருதார்சிங்கி, தொட்டிப்பாஷாணம்.
அப்பு	கார்முகில், பவளபுத்து, தீமுருகல், வெள்ளை, கௌரி, குதிரைப்பல்பாஷாணம், சங்குபாஷாணம்.
தேயு	வீரம், மஞ்சிலை, அரிதாரம்.
வாயு	இலிங்கம், இரத்தபாஷாணம், புத்தொட்டி.
ஆகாயம்	சூதம்.

இலவணத்தில்

பிருதிவி	கல்லுப்பு, இந்துப்பு.
அப்பு	நவச்சாரம், சத்திசாரம்.
தேயு	சவுட்டுப்பு, வெடியுப்பு.
வாயு	திருசு, வெங்காரம்.
ஆகாயம்	சவுக்காரம், பூரம்.

காரசாரத்தில்

பிருதிவி	கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு.
அப்பு	சத்திசாரம், நவச்சாரம், எவச்சாரம்.
தேயு	சவுட்டுப்பு, வெடியுப்பு, கற்பூரம்.
வாயு	படிகாரம், திருசு, வெங்காரம்.
ஆகாயம்	பூரம், சவுக்காரம்.

உபரசத்தில்

பிருதிவி	சிலாசத்து, பூநாகம்.
அப்பு	அண்டஓடு, கிளிஞ்சல், நண்டுஓடு, சங்கு.
தேயு	வெண்காரம், நிமிளை, மயிலிறகு, எலும்பு, இந்திரகோபம்.
வாயு	கல்நார், கல்மதம், சகஸ்திரவேதி, சோமம், அன்னபேதி.
ஆகாயம்	துத்தம், வைக்கிராந்தம், சுக்கரன்கல், மிருதிபாஷாணம்.

பஞ்சபூதச் சரக்குகள்

பிருதிவி சரக்கு

தங்கம், இந்துப்பு, கல்லுப்பு, தொட்டி, மிருதார்சிங்கி, கார் முகில் பாஷாணம், பவழப்புற்று, காந்தம், சிலாசத்து, நாதம்.

அப்பு சரக்கு

காரீயம், சாரம், சத்திசாரம், குதிரைப்பல் பாஷாணம், கெந்தி, வெள்ளை, கோழிதலைப்பாஷாணம், கௌரி, நண்டோடு, முட்டைஓடு, நத்தை ஓடு, கிளிஞ்சல்.

தேயு சரக்கு

செம்பு, வெடியுப்பு, சவுட்டுப்பு, கெந்தி, மனோசிலை, வீரம், அரி தாரம், நிலை, வெண்கலம், இந்திரகோபம், மயூரம், எலும்பு.

வாயு சரக்கு

அயம், வெங்காரம், துருசி, லிங்கம், ரத்தமுகில், சகஸ்திர வேதி, அண்ணபேதி, கல்மதம், கல்நார், ரோமம்.

ஆகாய சரக்கு

சூதம், பூரம், வழலை, துத்தம், காந்தம், ரஜிதபாஷாணம் விந்து, சுக்கான்கல்.

கார சரக்கு

அண்டஓடு, அப்பிரகம், இரும்பு, கடல்நுரை, கல்லுப்பு, காந் தம், கிளிஞ்சல் ஓடு, கௌரி, சங்கு, தாரம், சூதம், கற்பூரம், தங்கம், தொட்டிநாகம், பச்சைகற்பூரம், நாதம், வீரம், வெடியுப்பு வெண் கரு, வெள்ளை பாஷாணம், வைக்கிராந்தம்.

சார சரக்கு

சத்திசாரம், கடல்நுரைச்சுண்ணம், பழம்புளி, காடி, ஊண் சதை, புளிமாங்காய், சங்குசதை, வெங்காரம், துருசி, கெந்தி, மனோ சிலை, புளியவிணை, விந்து, இந்துப்பு, புளியாரை, படிகாரம், மஞ்சள் கரு, பொன்நிலை, பனங்கள்ளு, கொன்னைப்பழம்.

இங்ஙனம் கூறப்பட்ட பஞ்சபூத சரக்குகள் ஒன்றுக்குள் ஒன்று ஒற்றுமைப்படும். எங்ஙனமெனில்:—

பாரப்பா பிரிதிவிதான் அப்புவைக் கொள்ளும்
பாங்கான அப்பதுதான் தேயுவைக் கொள்ளும்
நேரப்பா தேய்வதுதான் வாயுவைக் கொள்ளும்
நிலையான வாயுவுதான் ஆகாயங் கொள்ளும்
வீரப்பா கொண்டதிலே மடிந்து போச்சு
வேதாந்த பஞ்சீகரத்தால் கூத்தி தாச்சு
சாரப்பா தன்னறிவால் சார்ந்து கொண்டு
சகலகுரு வேதைழகம் சார்ந்து பாரே.

இதன் பொருள்:—பிரிதிவி அப்புவில் ஒடுங்கும், அந்த அப்பு தேயுவில் ஒடுங்கும், அந்தத் தேயு வாயுவில் ஒடுங்கும், அந்த வாயு ஆகாயத்தில் ஒடுங்கும். இப்படி ஒடுங்குவதினால் அவ்வவற்றின் பலங் குன்றும். அதுபோலவே, இந்தப் பஞ்சபூத சரக்குகளையும் நன்கு ஆராய்ந்து அப்பூதத்திற்கு எதிரிடையான பூதச்சரக்கைக் கொண்டு வசப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அவிழ்தம் சரிவர முடியும்.

பஞ்சபூத சரக்குகளின்

எடைபாகம்

1.	ஆகாயம்	$\frac{1}{2}$
2.	வாயு	$\frac{3}{4}$
3.	தேயு	1
4.	அப்பு	$1\frac{1}{4}$
5.	பிருதிவி	$1\frac{1}{2}$
		5

மேற் கூறப்பட்டி எடையின் பிரகாரம் ரசகெந்தி பாஷாண லவண வகைகள் கூட்டுறவைப் பெறுமாயின் பெரிய மருந்தாக முடியும்.

கோசபீச சரக்குகளின் விளக்கம்

கோசச் சரக்கு

அப்பிரகம், இரும்பு, காந்தம், செம்பு, திருக்குட ஜலம், நாகம், நிமிளை, பூநாகம், பூநீறு, இலிங்கம், வங்கம்.

பீச சரக்கு

சூதம், எவச்சாரம், கல்மதம், சிலாசத்து, கடல்நுரை, வீரம், வெள்ளைப் பாஷாணம், சூடம், கல்லுப்பு, பூரம், மஞ்சள் கரு.

சத்துரு மித்துரு சரக்குகள்

இரும்பு காந்தம் இவற்றிற்கு சத்துரு

அப்பிரகம், வெங்காரம், அண்ட ஓடு, வெண்கலம், நிமிளை, வங்கம், கிளிஞ்சல், தாரா, கெந்தி, சாரம், வீரம், மனோசிலை. சிங்கி, கவுரி, வெள்ளை, சிலாசத்து, பூநீறு.

இரும்பு காந்தம் இவற்றிற்கு மித்துரு

வெள்ளி, நாகம், காந்தம், செம்பு, பூரம், கெந்தி, பூநாகம், ராஜவர்த்தம், தங்கம், கற்பூரம், வங்கம்.

கல்லுப்புக்கு சத்துரு

வீரம், சவுட்டுப்பு, வில்லைகற்பூரம், படிகாரம், காந்தம், இந்துப்பு, அன்னபேதி, சிங்கி, பவழப்புற்று, சிலை, பழம்புளி.

கல்லுப்புக்கு மித்துரு

பூரம், இரும்பு, செம்பு, காரம், கௌரி, நாகம், கெந்தி, தாளகம், நிமிளை, வெள்ளை, அப்பிரகம், லிங்கம், வங்கம்.

காரீயத்திற்கு சத்துரு

காந்தம், நிமிளை, ராஜவர்த்தம், கிளிஞ்சல், அண்ட ஓடு, நத்தை ஓடு, கற்சுண்ணம், அப்பிரகம், கல்நார், வெடியுப்பு, கௌரி, கல்லுப்பு, சகஸ்திரவேதி, நண்டு, ஓடு, கெந்தி, அயம்.

காரீயத்திற்கு மித்துரு

நாகம், மையூரச் செம்பு, பூநாகச் செம்பு, செம்பு, வெள்ளி, வெள்வங்கம், சூதம்.

சாரத்திற்கு சத்துரு

கல்லுப்பு, இந்துப்பு, படிக்காரம், வலையலுப்பு, இரும்பு, காந்தம், வங்கம், அண்டத்தோல், சுக்காங்கல், சிலை, அப்பிரகம், சவுட்டுப்பு, கிளிஞ்சல்.

சாரத்திற்கு மித்துரு

சூரம், மனோசிலை, கபரி, நிமிளை, பண்ணை, கௌரி, இலிங்கம்.

தங்கத்திற்கு சத்துரு

நாகம், நிமிளை, கண்டர், கௌரி, வெடியுப்பு, வெள்ளை, சவுட்டுப்பு, தாளகம், சிங்கி, அப்பிரகம், கிளிஞ்சல், மனோசிலை, அண்டத்தோல், குதிரைப்பல் பாஷாணம், சூதம், கெந்தி, கோழுகம், பொன்னம்பர், சவ்வீரம், வங்கம், காந்தம்.

தங்கத்திற்கு மித்துரு

மேற் கூறப்பட்டச் சரக்குகள் நீங்கலாக மற்றவை மித்துரு வாகும். இது நவலோகங்களுக்கும் உபரைப்போன்றது.

துருசின் சத்துரு

சவுட்டுப்பு, தொட்டிபாஷாணம், அஞ்சனக்கல், இணங்கன், அப்பிரகம், படிகாரம், வெள்ளை பாஷாணம், கல்லுப்பு, கல்சவிடு, மிருதார்சிங்கி, காந்தம், இந்துப்பு, பூரகம், வங்கம், சவுக்காரம்.

துருசின் மித்துரு

அரிதாரம், சாரம், வெங்காரம், வீரம், கெந்தி, சூதம், துத்தம், தாளகம், தந்தம், நாகம், கடல்நுரை, நிமிளை, வெண்கம்பிளி, பழம், புளி, ரோமம்.

வெடியுப்புக்கு சத்துரு

தாளகம், மனோசிலை, கெந்தி, காரம், வீரம், லிங்கம், காரீயம், கல்நார், கௌரிபாஷாணம், நாகம், நிமிளை, ராஜவர்த்தம், செம்பு.

வெடியுப்புக்கு மித்துரு

காரீயம், சவடு, கற்பூரம், வெள்ளீயம், துருசு, இரும்பு வெள்ளி, காந்தம், மனோசிலை, தொட்டி, கெந்தி, மிருதார்சிங்கி தீமுருகல் பாஷாணம், அண்டஓடு, சுரகெந்தி, பொட்டலை.

நாகத்திற்கு சத்துரு

கிளிஞ்சல், அண்டஓடு, கல்லுப்பு, வெடியுப்பு, படிகாரம், தங்கம், வங்கம், தாரா, வெள்ளி; வெண்கலம், வீரம், நண்டோடு, மிருதார்சிங்கி, அபின், வெள்ளை, வளையலுப்பு, அன்னபேதி, மிளகு.

நாகத்திற்கு மித்துரு

அப்பிரகம், இரும்பு. காந்தம், சிலாசத்து, நிமிளை, செம்பு, கௌரி பாஷாணம், சூதம், கெந்தி, பூநாகம், மயூரச்செம்பு, காரீயம், சாரம்.

வெங்காரத்திற்கு சத்துரு

சிலாசத்து, கம்பிளி, அண்டஓடு, கற்பூரம்.

வெங்காரத்திற்கு மித்துரு

மேற் கூறப்பட்ட சரக்குகள் நீங்கலாக உபரசங்கள், பாஷாணங்கள், லோகங்கள், மித்துருவாகும்.

வெள்வங்கத்திற்கு சத்துரு

காரீயம், சூதம், தித்தம்.

வெள்வங்கத்திற்கு மித்துரு

மேற் கூறப்பட்ட சரக்குகள் நீங்கலாக மற்றவைகள் மித்துருவாகும்.

சூதத்திற்கு சத்துரு

சிங்கி, கௌரி, வெள்ளை, குதிரைப்பல் பாஷாணம், சத்திசாரம், வெடியுப்பு, காந்தம், இரும்பு, சூடன், பொன்னம்பர், பூரம், சவுட்டுப்பு, நிமிளை, பூநீறு.

சூதத்திற்கு மித்துரு

அப்பிரகம், நாகம், காரீயம், மஞ்சிலை, கெந்தகம், வெள்ளீயம், வீரம், தாளகம், தொட்டி, வெள்ளி, செம்பு, துருசு, சாரம், வெங்காரம், அஞ்சனக்கல், தித்தம், தீமுருகல், பவளப்புற்று.

இங்குக் கூறப்பட்ட விதமாக சத்துருமித்துரு சரக்குகளைக் கண்டறிந்து சத்துருவைக்கொண்டு அடக்கி மித்துருவைக்கொண்டு குரு முடித்துக் கொள்ளும்படியாக ஆன்றோர் கூறி இருக்கின்றனர்.

உருக்கினத்தின் சத்துரு

அயம் உருகும்போது. கெந்தி, நிமிளை, கோழித்தலைப் பாஷாணம், மனோசிலை. தாளகம், வீரம், சிங்கி, வெள்ளைப் பாஷாணம், வைக்கிராந்தகம், அஞ்சனக்கல், சுரகெந்தி, குதிரைப்பல் பாஷாணம், வெடியுப்பு, சாரம் சம்பந்தப்பட்ட செந்தூரங்களையாவது அல்லது தனிச் சரக்குகளையாவது கொடுக்கக் கெட்டுப்போகும் அதாவது வெட்டையாகி நொறுங்கும்.

செம்பு உருகும்போது, நாகம், கெந்தி, நிமிளை, மிருதார்சிங்கி வெள்ளைப் பாஷாணம், கௌரிப் பாஷாணம், அஞ்சனக்கல், வங்கம் சம்பந்தப்பட்ட செந்தூரங்களையாவது அல்லது தனிச் சரக்கையாவது கொடுக்கக் கெட்டுப்போகும்.

நாகம் உருகும்போது, நிமிளை, அப்பிரகம், அஞ்சனக்கல், கபரி, வெள்ளைப் பாஷாணம், மனோசிலை, கெந்தி சம்பந்தப்பட்ட மருந்துகளையாவது அல்லது தனிச் சரக்குகளையாவது கொடுக்கக் கெட்டுப்போகும்.

வெண்கலம், பித்தளை இவ்விரண்டு சரக்குகள் உருகும்போது நாகத்திற்குக் கூறப்பட்ட சரக்குகளைக் கொடுக்கக் கெட்டுப்போகும்.

வெள்ளி உருகும்போது, வெள்ளீயம், நாகம், நிமிளை, காந்தம், தீமுருகல், கபரி, கம்பி உப்பு, படிகாரம், குதிரைப்பல் பாஷாணம், பவழப்புத்து சம்பந்தப்பட்ட மருந்துகளைக் கொடுக்க வெள்ளி கெட்டுப்போகும்.

எரிப்பு திட்டம்

தீபாக்கினி

இரண்டு விரற்கடை கனமுள்ள ஒரு விறகைக்கொண்டு தீபத்திற்கு ஓப்பாகச் சுடர் சட்டியின் மையத்தில் தாக்கும்படி எரித்தல் வேண்டும்.

கமலாக்கினி

மேற் குறிப்பிட்ட விதமாக இரண்டு விறகைக்கொண்டு எரித்து அச்சுடர் சட்டியின் அடியில் தாமரை புஷ்பம்போல் பரவும்படி எரித்தல் வேண்டும்.

சுவாலாக்கினி

மேற் குறிப்பிட்ட விதமாக மூன்று விறகைக்கொண்டு எரித்து அச்சுடரானது அடுப்பில் வைத்த சட்டியின் அரை பாகத்திற்கு சூழ்ந்திருக்க எரித்தல் வேண்டும்.

கடாக்கினி

மேற் குறிப்பிட்ட விதமாக நான்கு விறகைக்கொண்டு எரித்து அச்சுடரானது அடுப்பில் வைத்த சட்டியின் மேற் பாகம் வரையில் சூழ்ந்திருக்க எரித்தல் வேண்டும்.

மந்தாக்கினி

வறட்டியைப் பிட்டு புடம்போல் அடுக்கித் தீயிட்டு வெந்து செந்தனலாக இருக்குந் தீயில் கவசம் செய்து வைத்துள்ள அகலை வைத்து ஆறியபின் எடுப்பதாகும் அல்லது அடுப்புக்கரியை நெருப்பாக்கி செந்தனலாக இருக்கும் சமயம் அதனில் கவசம் செய்து வைத்துள்ள அகலை வைத்து ஆறியபின் எடுப்பதாகும்.

புட திட்டம்

மஹா புடம்

பூமியில் ஒன்றரை முழ சதுரமும் இரண்டு முழ ஆழமும் இருக்கும்படி குழித்தெடுத்து எருவு அடுக்கி இடையில் சீலை செய்து வைத்துள்ள அகலை வைத்து தீயிட்டு ஆறினபின் எடுப்பதாகும்.

கஜபுடம்

பூமியில் ஒரு முழச்சதுரமும் ஒன்றரை முழ ஆழமும் உள்ளக் குழித்தெடுத்து பூமி மட்டத்திற்கு எருவடுக்கி இடையில் சீலை செய்து வைத்துள்ள அகலை வைத்து தீயிட்டு ஆறினபின் எடுப்பதாகும்.

வராக புடம்

ஒரு முழச் சதுரமும் முழ ஆழமும் உள்ளக் குழித்தெடுத்து பூமி மட்டத்திற்கு எருவடுக்கி இடையில் சீலை செய்த அகலைவைத்து தீயிட்டு ஆறினபின் எடுப்பதாகும்.

கோழி புடம்

பூமியில் ஒன்றேகால் சாண் சதுரமும் ஆழமும் உள்ளக் குழித் தோண்டி எருவு அடுக்கி நடுவில் சீலை செய்த அகலை வைத்து தீயிட்டு ஆறினபின் எடுப்பதாகும்.

கவுதாரி புடம்

மேற் கூறிய வண்ணம் பூமியில் குழித்தோண்டி பத்து எருவின் நடுவில் சீலைச்செய்த அகலை வைத்து தீயிட்டு ஆறினபின் எடுப்ப தாகும்.

காடைப் புடம்

மேற் கூறிய வண்ணம் பூமியில் குழித்தோண்டி மூன்று எரு வின் நடுவில் சீலைச்செய்த அகலை வைத்து தீயிட்டு ஆறினபின் எடுப்பதாகும்.

ஊது திட்டம்

சுண்ணத்திற்கு முசையில் சரக்கை வைத்துச் சீலை செய்து கன்னுன் உலையில் வைத்து ஒற்றைத் துருத்திக்கொண்டு ஊதி எடுப்பதாகும் ஒரு முறையிட்ட கரி பூத்து முசை வெளியே தெரியு மாயின் மீண்டு முசையை மேற்றாக்கி கரியிட்டு ஊதி எடுக்கவும் இப்படி மூன்று முறை செய்வது அவசியமாகும்.

களங்கு முதலிய உருக்கினங்களுக்கு சரக்கை முசையிலிட்டு வாய் மூடிச் சீலை செய்து கன்னுன் உலையில் வைத்து இரட்டைத் துருத்திக்கொண்டு மாற்றி மாற்றி முசை அழுகிவரும் வரையில் ஊதி எடுப்பதாகும்.

சத்து எடுப்பதற்கு சரக்கை முசையிலிட்டு வாய் மூடிச் சீலை செய்து கன்னுன் உலையில் வைத்து நான்கு புறமும் துருத்தியை யமைத்து சமமாறி ஊதி முசை அழுகும் சமயத்தில் எடுப்பதாகும். இத்தகையக் காரியங்களுக்கு வஜ்ஜிர முசையாக இருக்க வேண்டும். அல்லது தற்காலத்தில் கிடைக்கின்ற சீமை முசையாக இருக்க வேண்டும்.

சரக்குகளைக்கட்டும் மார்க்கம்

எச்சரக்கும் கட்டவொரு சேதி கேள்நீ
இனியவெடி சுண்ணத்தால் சரக்குக் கட்டும்
தற்செயலாய்த் தைலத்தால் சரக்குக் கட்டும்
தடையற்ற திராவகத்தால் சரக்குக் கட்டும்
இச்சையுடன் ஜெயநீரால் சரக்குக் கட்டும்
இதமான மெழுகாலே சரக்குக் கட்டும்
நச்சரவ மூலிகையால் சரக்குச் சாகா
நாகரிக யாகோபு நலஞ்சொன் னேரே.

கட்டு, நீற்றனங்களின் தன்மை

தானென்ற துருசதுவும் நீறிற் ரூலல்
தன்மையுள்ள மஞ்சளிலே சிவக்க வேணும்
தேனென்ற சாரமது உருகும் போது
திறமாக மயிரிழைபோல் புகைய வேணும்
நானென்ற வெங்காரம் உருகும் போது
நலியாதே பொங்கிநின்று ஆட வேணும்
கோனென்ற வெடியுப்பு கட்டிற் ரூலல்
குணமாகத் தந்தம்போல் கட்டி கட்டே.
கட்டப்பா கல்லுப்பு கட்டிற் ரூலல்
கனமாகக் கரியினின்று உருக வேணும்
மட்டாகச் சீனமது கட்டிற் ரூலல்
மார்க்கமுடன் மணிபோல ஆட வேணும்
திட்டமுடன் சூடனது கட்டிற் ரூலல்
திரிகொளுத்த எரியாமல் நிற்க வேணும்
மட்டான துருசியது கட்டிற் ரூலல்
மார்க்கமுடன் இளகாமல் நிற்கும் பாரே.

பாரப்பா இந்துப்பு வெடிக்கொ ணுது
பார்தனிலே வெகுகோடி வித்தை யப்பா
ஆரப்பா அறிவார்கள் இந்த வித்தை
அறிவார்கள் செய்வார்கள் ஆதி தொட்டு
காரப்பா காவியத்தில் நன்ரூய்ச் சொன்னேன்
கபடமற வைத்தியபூ ரணமும் சொன்னேன்
நேரப்பா சவுரியசா கரத்தில் நன்ரூய்
நிறைந்தபொருள் வெளியாகப் பாடி னேனே.

இரச கெந்தி லவணப் பெருமை

கொடியசுண்ணம் பிறந்ததெல்லாம் வெடியுப் பாலே
குணசலமோ ஜெயநீரோ சாரத் தாலே
நெடியதொரு மெழுகெல்லாம் உப்பி னாலே
நேரான செந்தூரம் கெந்தி யாலே
படியான வர்ணமெல்லாம் சூதத் தாலே
பாரிதற்கு உயிர்துதான் ஆதி வித்தை
விடியுமுன்னே பூத்ததொரு புஷ்பத் தாலே
வித்தையெல்லாம் மெய்யாச்சு பொய்யோ இல்லை.
கேளப்பா சவுக்காரம் வங்கம் ரண்டும்
கெதிதப்பில் துருசுக்குக் கணித மில்லை
மாளப்பா கெந்தகமும் சூதம் போனால்
மகத்தான செந்தூர மார்க்கம் போச்சு
தேளப்பா வெடியுப்பு சீனம் போனால்
திராவகத்தின் நேர்மையெல்லாம் சிதறிப்போச்சு
ஆளப்பா அமுரியுட சூர்மை போனால்
அடங்காத ஜெயநீரு மசதி யாச்சே.
ஆச்சப்பா உருக்கினந்தான் கார சாரம்
அப்பனே வீரம்விட்டால் நீறும் போச்சு
போச்சப்பா புடம்விட்டால் சாரணி போச்சு
போதமாய் இனந்தப்பில் வர்ணம் போச்சு
காய்ச்சப்பா தங்கம்விட்டால் கலகா ணுது
கருவான ரசம்போனால் எல்லாம் போச்சு
பாச்சப்பா இனியென்ன பருவம் பாரு
பண்பாகத் தொழில்முறைக்குப் பருவம் பாரே.

பாரப்பா சுண்ணம்விட்டால் ஜெயநீர் போச்சு
பண்பாகச் சாரம்விட்டால் கட்டே போச்சு
வேறப்பா சிங்கிவிட்டால் சூதம் போச்சு
வேகாத வேகுதற்குத் தீனி யாச்சு
காரப்பா திராவகத்தை விட்டா யாஞல்
கசிந்துருகும் வெங்காரம் சுருக்குப் போச்சு
தேரப்பா அரியதோர் இனத்தைச் சொன்னேன்
தெரிந்துமே தொழில்முறையை நாடிப் பாரே.

உலோக மாரண குரு

இன்னமொரு குருசுண்ண மியம்பிடுவேன் வெள்ளையொடு இரதஞ் சாரம்
இயமப்பெண் ணிருகாரம் வெடியுப்பு துருசுகுரு இனிய பூரம்
துன்னியமுப் புப்பத்து மோர்நிறையா யிருசாமம் பெலமா யாட்டித்
துகளாக்கி யெவ்விதலோ கத்தினையும் நெற்கனமாய்ப் பலகை செய்து
முன்னுரைத்த சுண்ணத்தைத் தகட்டினடை தானெடுத்து முறையா யுப்பு
முதனீரா லலதுபழ ரசமாட்டிக் கவசமது முன்னே செய்து
பின்பந்த லோகத்திற் கானமூ லிக்கவசம் பிசகா தேசெய்
பெரியோர்கள் மொழிப்படியே புடமிட்டா லிதன்பெருமை பேச லாமோ.

இதன் பொருள்:—வெள்ளைப் பாஷாணம், இரசம், நவச்சாரம், கௌரி, படிகாரம், வெங்காரம், வெடியுப்பு, துருசு சுண்ணம், பூரம், முப்புச் சுண்ணம் ஆகப் பத்துச் சரக்குகளையும் கல்வத்தில் போட்டு நன்கு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. எந்த லோகத்தைச் சுண்ணம் செய்ய வேண்டுமோ அந்த லோகத்தைச் சன்னமாக தகடு அடித்து அந்தத் தகட்டின் எடைக்கு முன் முடித்து வைத்துள்ள குருமருந்தை நாதவிந்து நீரிலாவது பழச் சாற்றிலாவது அரைத்துச் சம கனமாகத் தகட்டிற்குப் பூசி உலர விட்டு அந்தந்த லோகத்திற்கு ஏற்றவாறு சுண்ணம் செய்யக்கூடிய மூலிகை ஏதேனும் தெரிந்திருப்பின் அரைத்துக் கவசமிட்டு சீலை செய்து பெரும்புடத்திலிட நீறும். இதை மூலிகைக் கவசமின்றியும் புடமிடலாம்.

சீரோங்கும் பூரமுடன் காரசாரம் சவ்வீரந் திகழும் வெள்ளைச்
செப்பரிய் வெடியுப்பு இவ்வெடைக்கு ரசங்கெந்தி திறமா யாட்டிப்
பாரோங்கப் பதனஞ்செய் திதின்பெயர்லோ கச்சுண்ணம் பரம குருவாம்
பகரொணு லோகங்க ளேதெனினும் நெல்லதனிற் பாதி கனமாய்ப்
பேரோங்கத் தகடியற்றி முறைப்படியே சுத்திசெய்து பின்பு சுண்ணம்
பிசகாதே எடைக்கெடையாய் நிறுத்தெடித்துப் பழச்சாற்றுல் பெலக்க
நீரோங்குஞ் ஜெயநீர் லாட்டிடினும் பெலமதிகம் நீட்டு வங்கி [வாட்டி
நீயிடுவாய் யம்முறையே மேற்கவசம் புடமனேத்தும் நீறும் பாரே.

இதன் பொருள்:—பூரம், படிகாரம், சுவச்சாரம், வீரம், வெள்ளைப் பாஷாணம், வெடியுப்பு இவைகள் வகைக்குச் சமனெடை இந்த மொத்த எடைக்கு, ரசமும் கெந்தகமும் சரி பாகமாக அரைத்து எடுத்தத் தூளைக் கூட்டி நன்கு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. உலோகங்களைச் சுண்ணம் செய்வதற்கு இது குருவாகும். எந்த லோகத்தைச் சுண்ணம் செய்ய வேண்டுமோ அந்த லோகத்தை சுத்தி செய்து இலேசாக தகடு அடித்து அதன் எடைக்குச் சரியாக முன் சித்தப்படுத்திய குருமருந்தைக் கல்வத்தில் போட்டு பழச்சாற்றிலாவது அல்லது நாதவிந்து நீரிலாவது அரைத்துத் தகட்டிற்குச் சமகனமாகப் பூசி சீலைசெய்துப் பெரும் புடத்தில் போடச் சுண்ணமாகும். இன்னும் முன்முறையில் குறிப்பிட்டபடி பண்டிதர்கள் அந்தந்த லோகத்திற்கு ஏற்றபடி சுண்ணம் செய்யக்கூடிய ஏதேனும் ஒரு மூலிகையை அரைத்து தகட்டிற்குக் கவசமிட்டு புடமிடுவதுண்டு.

மருந்துகள் செய்யும் காலம்

நோக்கடா ஐப்பசிமுதல் மூன்று மாதம்
நுண்மையுட னுருக்கினத்துக் காலமாகும்
வாக்கடா தைமுதலாய் மூன்று மாதம்
மகத்தான ஜெயநீருக் கால மாகும்
தாக்கடா சித்திரைமுதல் மூன்று மாதஞ்
சங்கையுடன் குருமுடிக்குங் கால மாகும்
தூக்கடா ஆடிமுதல் மூன்று மாதஞ்
சுத்தமுடன் நிருவகஞ்செந் தூரஞ்செய்யே.

கேளப்பா பங்குனிசித் திரையி னுள்ளே
கெணிதமுள்ள முப்பூவுக் குறுதி யாகும்
வாளப்பா தைமாசி ரெண்டுக்குள்ளே
மகத்தான ஜெயரூருக் குறுதி யப்பா
நாளப்பா ஐப்பசிகார்த் திகையி னுள்ளே
நலமாக உருக்கினத்தை நாடிப் பாரு
தாளப்பா ஆடியுட னவ ணிற்குள்
தயவாகத் திராவகத்தை செய்து பாரே.
பாரப்பா வைகாசி ஆனி ரெண்டில்
பதரூமல் சாரணையைத் தீரு தீரு
நேரப்பா புரட்டாசி மார்கழி ரெண்டில்
நிறையாக செந்தூரம் நினவாய் பண்ணு
சேரப்பா பன்னிரண்டும் சரியாய் சொன்னேன்
சகத்திலுள்ள மானிடர்கள் அறிய வேண்டி
தேரப்பா தொழில்முறையில் அறிந்து நீயும்
தெளிவாகச் செய்துமே பார்த்தி டாயே.

நீற்றினத்திற்குக் கரு

செய்யப்பா நீற்றினத்தின் கருவைக் கேளு
சிவசிவா புழுகுரவி வீரம் பூரம்
மெய்யப்பா குருவண்டு சூதந் தாரம்
விதமான கார்முகிலுஞ் சவுக்கா ரந்தான்
செய்யப்பா சற்குருவை யொன்ப தாலே
திருவான நவலோகம் நீறிப் போகும்
கையப்பா கைமுறையா யறிந்த தாலுல்
கசடற்று வேதமுறை காண லாமே.

உருக்கினத்திற்குக் குரு

காணவே வுருக்கினத்துச் சரக்கை கேளு
காரமுஞ்சவ் வாதுவெடி சார வுப்பு
பேணவே கண்டதரி தாரம் வெள்ளே
பிலமான ரங்குடனே ஆமணக்குங் குன்றி
தோணவே தேனுடனே புரூவி னெச்சத்
தொகுத்தறிந்து கருமாணங் கண்டா யாஞல்
ஊணவே கவலோக முருகிப் போகும்
உத்தமனே கண்டறிந்தோ ரனேகங் காணே.

———

அவிழ்தங்களின் வயது

தீட்டியவஞ் சனங்களிடு மைக டானும்
திரிமாத மிருக்குமதன் பின்னு காது
காட்டுமருந் தரைத்ததுவு மனலில் வெந்த
கியாழமுமே யரைச்சாமங் கழிந்தா லாகா
கூட்டியதோர் லேகியஞ்சூ ரணங்கள் சீனிச்
குழம்பாறு மாதமின்றி கொள்ளெ ணுது
ஆட்டியநெய் யெண்ணெய்க்கோர் வருஷங் குளிகைக்
காகுந்திரி மாதமென வறைய லாமே.
பேறுபெறும் பற்பங்க ளிருநூ றுண்டு
பேசிடுமே சுண்ணங்க ளஞ்நூ றுண்டு
சீருபெறுஞ் சிந்தூர மெழுநூ றுண்டு
சிரசுநோய்த் தயிலங்கள் திங்கள் பத்து
பாருலகில் மெழுகதுவும் மூன்றே யாண்டு
பதமதனைத் தானறிந்தால் ரோகி கட்கு
சேருபிணி நில்லாது கணத்தி லோடுஞ்
செய்பாகங் கைபாகந் தெரிந்து கொள்ளே.

முற்றியது.

———

திருமகள் விலாச அச்சியந்திரசாலே, சென்னை—1949.